சட்பலம் கணிப்பது கொஞ்சம் சிரமமானது. இந்தச் சிரமத்தை ஏற்றுக் கொள்ள இஷ்டமில்லாதவர்களும், சட்பல ரீதியாய்க் கணித்துப்பார்க்கச் சந்தர்ப்ப மில்லாதவர்களும், உச்சம், நீசம் முதலியவைகளால் கிரகங்களின் பலத்தைத் தோராயமாய் அறிந்து கொள்ளலாம். கிரக பலத்தையும் பாவ பலத்தையும் (1) பூர்ணபலம் என்றும் (2) சம பலம் என்றும் (3) தாழ்ந்த பலம் என்றும் மூன்று விதமாய்ப் பங்கிடலாம்.

(44) உச்சம் ஆட்சி, நீச்சம் முதலிய பலங்களின் விபரம் அதாவது ஸ்தான பலம்.

(1) தன் உச்சராசியில் இருக்கும் கிரகத்திற்குப் பலம் 1 அல்லது 100 பங்கு*

(2) தன் மூலத்திரிகோணத்திலிருக்கிற கிரகத்திற்குப் பலம் $\frac{3}{4}$ அல்லது 75 பங்கு.

(3) தன் சுவகேஷத்திரத்திலிருக்கிற கிரகத்திற்குப் பலம் $\frac{1}{2}$ அல்லது 50 பங்கு.

(4) தன் அதிமித்துருவாயிருக்கிற கிரகத்தின் இராசியிலிருக்கிற கிரகத்திற்குப் பலம் $\frac{3}{8}$ அல்லது 38 பங்கு.

(5) தன் மித்துருவா யிருக்கிற கிரகத்தின் இராசியி லிருக்கிற கிரகத்திற்குப் பலம் $\frac{1}{4}$ அல்லது 25 பங்கு.

(6) தனக்கு சமமாயிருக்கிற கிரகத்தின் ராசியிலிருக்கிற கிரகத்திற்குப் பலம் $\frac{1}{8}$ அல்லது 13 பங்கு.

(7) தனக்குச் சத்துருவா யிருக்கின்ற கிரகத்தின் ராசியிலிருக்கின்ற கிரகத்திற்குப் பலம் $\frac{1}{16}$ அல்லது 6 பங்கு.

(8) தனக்கு அதி சத்துருவா யிருக்கின்ற கிரகத்தின் ராசியி லிருக்கின்ற கிரகத்திற்குப் பலம் $\frac{1}{32}$ அல்லது 3 பங்கு.

(9) தன் நீச்ச ராசியி லிருக்கும் கிரகத்திற்குப் பலம் 0 அல்லது0பங்கு,

குறிப்பு:—என்னுடைய "ஜாதக கணிதம் என்னும் சோதிட கிரக சட்பலம் ஆயுள் கணிதம்" * என்ற புத்தகத்தின் இரண்டாம் பதிப்பில் 165-வது பக்கத்தையும், என்னுடைய "ஜாதக சிரோன்மணி என்னும் பிருஹத்ஜாதகம்" என்ற புஸ்தகத்தின் 1-வது பதிப்பின் 12-வது பக்கத்தையும் சந்தர்ப்பப்பட்டால் பார்க்கவும். இங்கு 1 பலம் என்பது 1 ரூபம். இந்த ஒரு ரூபமாகிய முழு பலத்தை 100 சமபங்குகளாகப்பங்கிட்டு அதில் 75 பங்கு, 50 பங்கென்று பங்குகளாகவும் கண்டிருகின்றது. ஒவ்வொரு பங்கும் ஒரு சதாம்சம் ஆகும். 9-வது பக்கத்தின் அடியில் விவரம் என்பதில் கொடுத்துள்ளதையும் வாசிக்கவும்.

இங்கு முக்கால் பலத்தையும் அதற்கு மேற்பட்ட பலத்தையும் பூர்ணபலம் என்றும், ½ பலத்தையும் அதற்கு மேற்பட்டு முக்கால் பலம் வரையிலும் சமபலம் என்றும், ½ பலத்திற்குக் குறைந்த பலத்தைத் தாழ்ந்த பலம் என்றும் பாவித்துக் கொள்ள வேண்டியது.

(45) சட்பல கணித ரீதியாய் வரும் பலங்களின் விபரம்:—

கிரகங்கள் பூர்ணபலம், சமபலம், தாழ்ந்தபலம் உடையன என்று அடியிற்கண்டபடி சட்பலத்தை அனுசரித்து தெரிந்து கொள்ள வேண்டும். இங்கு கிரகங்களின் சட்பலம் ரூபம் என்ற அளவால் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஒரு ரூபத்தை 100 சமபங்காக்கி இந்த பங்கு அளவிலும் கொடுக்கப் பட்டிருக்கின்றன. கிரகங்களின் சட்பலத்தை என்னுடைய "ஜாதக கணிதம் என்னும் சோதிட கிரக சட்பலம் ஆயுள் கணிதம்" என்ற புத்தக ரீதியாய்க் கணித்துக் கொள்ளவும்.

(46) கிரக சட்பலம் (ரூபம் அளவில்)

ஒவ்வொரு கிரகத்திற்கும் பரம பலம் $18\frac{1}{2}$ ரூபம்

கிரகம்	தாழ்ந்த பலம்		சமபலம்		பூர்ணபலம்
	முதற் கொண்டு	வரையிலும்	முதற் கொண்டு	வரையிலும்	இதுவும் இதற்கு மேற்பட்டது
	ரூபம்	ரூபம்	ரூபம்	ரூபம்	ரூபம்
சூரியன்	0	$3\frac{1}{4}$	$3\frac{1}{4}$	$6\frac{1}{2}$	$6\frac{1}{2}$
சந்திரன்	0	3	3	6	6
செவ்வாய்	0	$2\frac{1}{2}$	$2\frac{1}{2}$	5	5
புதன்	0	$3\frac{1}{2}$	$3\frac{1}{2}$	7	7
குரு	0	$3\frac{1}{4}$	$3\frac{1}{4}$	$6\frac{1}{2}$	$6\frac{1}{2}$
சுக்கிரன்	0	$2\frac{3}{4}$	$2\frac{3}{4}$	$5\frac{1}{2}$	$5\frac{1}{2}$
சனி	0	$2\frac{1}{2}$	$2\frac{1}{2}$	5	5

ஜாதக கணிதம் என்ற என்னுடைய புஸ்தகத்தில் 1 ரூபத்தை 100 பங்காக்கி இருப்பதால் ஜாதக கணித புஸ்தக சதாம்ச ரூபங்கு

குறிப்பு:—ஜாதக கணிதம் தற்கால விலை ரூபாய் 2-4-0 பிருஹத்ஜாதகம் விலை ரூபாய் 2-0-0. தபாற்செலவு பிரத்தியேகம். கிடைக்குமிடம் .நெ. 7 வெங்கிடேச மேஸ்திரி தெருவு சௌக்கார் பேட்டை போஸ்ட் மதராஸ்.

அளவில் மேற்சொல்லிய ரூபம் அளவு அடியிற் கண்டபடி ஆகும். அதாவது ஒரு ரூபத்திற்கு 100 பங்கு என்று வைத்துக் கொள்ளவும்.

(47) கிரகசட்பலம் (சதாம்ச ரூப பங்கு அளவில்)

ஒவ்வொரு கிரகத்திற்கும் பரம பலம் 1850

கிரகம்	தாழ்ந்த பலம்		சமபலம்		பூர்ணபலம்
	முதற் கொண்டு	வரையிலும்	முதற் கொண்டு	வரையிலும்	இதுவும் இதற்கு மேற்பட்டது
	பங்கு	பங்கு	பங்கு	பங்கு	பங்கு
சூரியன்	0	325	325	650	650
சந்திரன்	0	300	300	600	600
செவ்வாய்	0	250	250	500	500
புதன்	0	350	350	700	700
குரு	0	325	325	650	650
சுக்கிரன்	0	275	275	550	550
சனி	0	250	250	500	500

(48) பாவங்களின் பலத்தை அறியும் விதம்:—

1-வதுவழி:—ஒருபாவம் பலமாய் இருக்கின்றதா இல்லையா என்று அறியவேண்டுமானால் அந்த பாவாதிபதி உச்சத்திலா, மூலத்திரிகோணத்திலா, ஆட்சியிலா, அதிமித்துரு க்ஷேத்திரத்திலா, மித்துரு க்ஷேத்திரத்திலா, சமமான கிரக க்ஷேத்திரத்திலா, சத்துரு க்ஷேத்திரத்திலா, அதிசத்துரு க்ஷேத்திரத்திலா, நீசஸ்தானத்திலா இருக்கிறது என்று பார்க்க வேண்டும். மேலும் லக்கினத்திற்கு எத்தனையாவது பாவத்தில் இருக்கின்றது என்று பார்த்து அதனால் 22வது அயிட்டம் பிரகாரம்வரும் பலத்தை அறிய வேண்டும். இவ்விதமாக பார்க்கும் போது பாவாதிபதியின் பலம் எப்படி இருக்கிறதோ அவ்விதமாகவே அந்த பாவாதிபதியால் ஏற்படும் பாவபலம் நேரிடும். உதாரணமாக பாவாதிபதி உச்சமாக விருந்தால் அந்த பாவம் வலிவுள்ளதாய் இருக்கும். பாவாதிபதி நீச்சமாய் இருந்தால் அந்தபாவம் பலவீனமாய் இருக்கும். இது ஒரு அம்சம். மேலும் அந்தப் பாவத்தில் சுபக்கிரகங்கள் இருந்தாலும், அல்லது அந்தப் பாவத்தைச் சுபக்கிரகங்கள் பார்த்தாலும் பாவம் பலப்படும். இது இரண்டாவது அம்சம். இவ்விதமாகவே

அந்தப் பாவத்தில் பாபக்கிரகங்கள் இருந்தாலும், அல்லது அந்தப் பாவத்தைப் பாபக் கிரகங்கள் பார்த்தாலும் அந்தப்பாவம் பலவீனப் படும். இது மூன்றுவது அம்சம். இவ்விதமான மூன்று விதமான அம் சங்களால் பாவத்தின் பலத்தை அறிய வேண்டியது அவசியம். இது தோராயமான வழி.

(49) 2-வது வழி (துல்லியமான வழி):—

சட்பல கணித ரீதியாய் ஒரு பாவம் பூர்ணபலம் உள்ளதா, சம பல முள்ளதா, தாழ்ந்த பலமுள்ளதா என்று அறிந்து கொள்ளலாம். ஒரு பாவத்தின் பலம் அறிய வேண்டுமானால் அடியிற்கண்ட கட்ட த்தில் அந்த பாவாதிபதிக்குக் கொடுத்துள்ள பூர்ணபல அளவு, சம பல அளவு, தாழ்ந்த பல அளவு இவைகளைக் கொண்டு அறியவேண் டும்.

(50) பாவபலம் ரூபம் அளவில்:—

ஒவ்வொரு பாவத்திற்கும் பரம பலம் $22\frac{1}{2}$ ரூபம்

கிரகம்	தாழ்ந்த பலம்		சமபலம்		பூர்ணபலம்
	முதற் கொண்டு	வரையிலும்	முதற் கொண்டு	வரையிலும்	இதுவும் இதற்கு மேற்பட்டது
	ரூபம்	ரூபம்	ரூபம்	ரூபம்	ரூபம்
சூரியன்	0	$5\frac{1}{4}$	$5\frac{1}{4}$	$10\frac{1}{2}$	$10\frac{1}{2}$
சந்திரன்	0	5	5	10	10
செவ்வாய்	0	$4\frac{1}{2}$	$4\frac{1}{2}$	9	9
புதன்	0	$5\frac{1}{2}$	$5\frac{1}{2}$	11	11
குரு	0	$5\frac{1}{4}$	$5\frac{1}{4}$	$10\frac{1}{2}$	$10\frac{1}{2}$
சுக்கிரன்	0	$4\frac{3}{4}$	$4\frac{3}{4}$	$9\frac{1}{2}$	$9\frac{1}{2}$
சனி	0	$4\frac{1}{2}$	$4\frac{1}{2}$	9	9

"ஜாதக கணிதம்" என்ற என்னுடைய புஸ்தகத்தில் 1 ரூபத் தை 100 பங்காக்கி இருப்பதால் ஜாதக கணித புஸ்தக பங்கு அளவில் மேற்சொல்லிய ரூபம் அளவு அடியிற் கண்டபடி ஆகும். அதாவது 1 ரூபத்திற்கு 100 பங்கு என்று வைத்துக் கொள்ளவும்.

(51) பாவ பலம் (சதாம்ச பங்கு அளவில்)
ஒவ்வொரு பாவத்திற்கும் பரம பலம் 2250

பாவாதி பதியாகிய கிரகம்	தாழ்ந்த பலம்		சமபலம்		பூர்ணபலம்
	முதற் கொண்டு	வரையிலும்	முதற் கொண்டு	வரையிலும்	இதவும் இதற்கு மேற்பட்டது
	பங்கு	பங்கு	பங்கு	பங்கு	பங்கு
சூரியன்	0	525	525	1050	1050
சந்திரன்	0	500	500	1000	1000
செவ்வாய்	0	450	450	900	900
புதன்	0	550	550	1100	1100
குரு	0	525	525	1050	1050
சுக்கிரன்	0	475	475	950	950
சனி	0	450	450	900	900

(52) உதாரணமாகச் சுக்கிரன் லக்கின பாவாதியாக வரும்போது லக்கின பாவபலம் 883 பங்கு என்று வைத்துக் கொள்ளுவோம். இவ்விதமானால் லக்கினபாவம் பூர்ணபலம் உடையதா, சமபலமுடையதா, தாழ்ந்த பலம் உடையதா என்று மேலே கொடுத்துள்ள கட்டத்தால் அறிவோம். இந்தக் கட்டத்தில் சுக்கிரனுக்கு எதிரில் பாவபலம் 475 பங்கு முதல் 950 பங்கு வரையிலும் இருந்தால் சமபலமென்று கண்டிருப்பதாலும், மேலே வந்த லக்கின பாவபலமாகிய 883 பங்கு என்பது 475பங்குக்கும் 950 பங்குக்கும் இடையில் இருப்பதால் லக்கின பாவம் சமபலம் உடையது என்று ஏற்படுகின்றது. உதாரணமாகச் சனி 4-ஆம் பாவாதிபதியாக வரும்போது 4-ஆம் பாவபலம் 999 பங்கு என்று வைத்துக்கொள்ளுவோம். இவ்விதமானால் 4-ஆம் பாவம் பூர்ண பலம் உடையதா, சமபலம் உடையதா, தாழ்ந்த பலம் உடையதா என்று மேலே கொடுத்துள்ள கட்டத்தால் அறிவோம். இந்த சட்டத்தில் சனிக்கு எதிரில் பாவபாலம் 900 பங்குக்கு மேற்பட்டால் பூர்ண பலம் என்று கண்டிருப்பதாலும், மேலே வந்த 4-ஆம் பாவபலமாகிய 999பங்கு என்பது 900பங்குக்கு மேற்பட்டதால் 4-ஆம் பாவம் பூர்ணபலம் உடையது என்று ஏற்படுகிறது.

குறிப்பு:—"ஜாதக கணிதம்" என்ற என்னுடைய இரண்டாம் பதிப்பு புஸ்தகத்தில் 56-வது பக்கத்தில் கொடுத்துள்ள 42-வது கட்டத்தைப் பார்க்கவும்.

ஒருபாவம் ஒரு ராசியிலும், இரண்டு ராசியிலும், மூன்று ராசியிலும், விழக்கூடுமாகையால் அந்தப் பாவத்திற்குப் பாவாதிபதி ஒரு கிரகம், இரண்டு கிரகம், மூன்று கிரகம் முறையே வரக்கூடும். ஒரு கிரகமும், மூன்று கிரகமும் வருவது அருமையாய் இருக்கும். இரண்டு கிரகம் வருவது சகஜமாய் இருக்கும். இரண்டு கிரகங்கள், மூன்று கிரகங்கள் ஒரு பாவத்திற்குப் பாவாதிபதியாகக் கொள்வது பலன் சொல்லுவதற்கு அதிக சிரமத்தை உண்டு பண்ணும். ஆகையால் அந்த ப்பாவஸ்புடம் எந்த ராசியில் விழுகின்றதோ அந்த ராசிக்குடைய கிரகத்தையே பாவாதிபதியாகக் கொள்வது போதுமானது.

குறிப்பு:—"ஜாதக கணிதம்" என்ற என்னுடைய இரண்டாம் பதிப்பு புஸ்தகத்தில் 198-வது பக்கத்தில் 2-வது பாராவில் சொல்லியதை வாசிக்கவும்.

(53) துவாதச பாவ பலம் ஆராய்ச்சி:—

குறிப்பு:—சட்பலம், பாவபலம் இவைகளைக் கணித ரீதியாய்க் கணிக்காமல் பாவங்களின் பலாபலத்தை தோராயமாய் அறியும் விதம்:—

(1) ஒரு பாவத்திற்கு 1, 5, 9, 4, 7, 10 இந்த வீடுகளில் சுபக் கிரகங்களாகிலும், அல்லது அந்த பாவாதிபதியாகிலும், இருந்து அந்தப் பாவத்தில் பாபிகள் இல்லாமல் இருந்தும் அல்லது அந்தப் பாவத்தைப் பாபிகள் பார்க்காமல் இருந்தாலும், அந்த பாவம் வலிவாகவும் விருத்தி யடைவதாகவும் இருக்கும். இதற்கு மாறுபாடாக விரோதமாக இருந்தால் அந்தப்பாவம் வலிவில்லாமலும் விருத்தியடையாமலும் இருக்கும். இவ்விரண்டு விதங்களும் கலந்து இருந்தால் அந்த பாவம் மத்திம பலமாகவும், விருத்தியும் சூன்யமுமில்லாமல் மத்திமமாகவும் இருக்கும். இங்கு அந்த பாவம் விருத்தி யடையும், அல்லது அடையாது என்று சொன்னால் அந்தப் பாவத்தினுடைய பலாபலன்கள் விருத்தி யடையும், அல்லது விருத்தியடையாது என்பதாம்.

(2) ஒருபாவாதிபதி அந்தபாவத்திற்கு 8வது வீட்டிலிருந்தாலும், நீச்சத்திலிருந்தாலும், அஸ்தமனமடைந்திருந்தாலும், பகை ராசியிலிருந்தாலும், அப்போது அந்த பாவத்தைச் சுபக்கிரகங்கள் பார்க்காமலிருந்தாலும், அல்லது அந்த பாவத்தில் சுபக்கிரகங்கள் இல்லாமலிருந்தாலும், அந்தப் பாவம் க்ஷீணித்துப் போய்விடும்; இவ்விதம் இருக்கும்போது அந்தபாவாதிபதி இதர கிரகங்களுடன் அதாவது சுபக் கிரகங்களுடன் சம்மந்தப் பட்டாலும் அந்த பாவபலத்தை விருத்தி செய்விக்க மாட்டார்.

(3) ஒரு பாவத்தின் பாவாதிபதி அந்தப் பாவத்திற்கு 6, 8, 12ம் வீட்டிலாவது, அல்லது பகை வீட்டிலாவது, அல்லது பலவீனமாக வாவது, அல்லது அஸ்தமனம் அடைந்தாவது இருந்தால் அந்தப் பாவத்தில் இருக்கிற கிரகம் அந்தப் பாவத்தை விருத்தி யடையும்படி செய்விக்காது.

(4) ஒரு பாவத்தில் புதன், அல்லது குரு, அல்லது சுக்கிரன், அல்லது அந்தப் பாவாதிபதி இருந்தாலும், அல்லது அந்தப் பாவத்தைப் புதனுவது, குருவாவது, சுக்கிரனுவது, அந்தப் பாவாதிபதியாவது பார்த்தாலும் அப்போது இதர கிரகங்கள் அந்தப் பாவத்தைப் பார்க்காவிட்டாலும், அல்லது அந்தப் பாவத்தில் இல்லாவிட்டாலும், அந்தப் பாவம் விருத்தியடையும்.

(5) ஒரு பாவாதிபதி நீசத்திலாவது, பகை வீட்டிலாவது இருந்தால் அந்தப் பாவம் நசிந்து விடும். அந்தப் பாவாதிபதி தன் உச்சத்திலாவது, மூலத்திரிகோணத்திலாவது, நட்பு வீட்டிலாவது இருந்தால் அந்தப் பாவம் விருத்தி யடையும்.

(6) ஒருபாவாதிபதி லக்கினத்திற்கு 6, 8, 12ம் வீட்டில் இருந்தாலும், அல்லது 6, 8, 12ம் வீட்டுக்கு அதிபதி அந்தப் பாவத்திலிருந்தாலும், அந்தப் பாவம் நாசமடையும். இப்படி யிருக்கும்போது அந்தப் பாவத்தைச் சுபக்கிரகம் பார்த்தால் அந்த பாவத்தின் பலம் நாசம் அடைவதில் கொஞ்சம் குறையும், அதாவது அவ்வளவு நாச மடையாது.

(7) ஒருபாவாதிபதி லக்கின கேந்திரத்திலாவது, திரிகோணத்திலாவது இருந்து வலிவாய் இருந்தாலும், அல்லது தன் உச்சஸ்தானத்திலிருந்தாலும், அல்லது அப்போது சுபக்கிரகங்களால் பார்க்கப்பட்டாலும், அந்தப் பாவம் விருத்தி யடையும்.

(8) ஒரு பாவாதிபதி இருக்கும் ராசிநாதன் பலவீனமாய் இருந்தாலும், கெட்ட ஸ்தானத்திலிருந்தாலும் அந்தப் பாவம் பலவீனமடையும். அந்தப் பாவாதிபதி இருக்கும் ராசி நாதன் தன் உச்சஸ்தானத்திலாகிலும், தன் நட்பு வீட்டிலாகிலும் அல்லது தன் வீட்டிலாகிலும் இருந்தால் அந்தப் பாவம் விருத்தியடையும்.

(9) ஒரு பாவத்தின் பாவாதிபதியும் அந்தப் பாவாதிபதியின் நட்பு கிரகங்களும், அந்தப் பாவாதிபதியின் உச்சஸ்தானத்தின் அதிப

தியும் அந்தப்பாவத்திற்கு 11, 2, 3வது வீட்டில் பகை,நீசம்,அஸ்தங்கதம் இவைகள் இல்லாமல் இருந்தால் அந்தப்பாவம் விருத்தியடையும்.

(10) ஒரு பாவத்தில் இருக்கிற கிரகம் அந்தப் பாவத்தின் நடுவில் அதாவது அந்தப் பாவ ஸ்புடத்தில்*) இருக்கும்போதுதான் அந்தப் பாவத்தின் பூர்ண பலத்தைக் கொடுக்கும். அப்படி நடுவில் (Middle) இராமல் முந்தி பிந்தி இருந்தால் அந்தக் கிரகம் கொடுக்கும் பலத்தைத் திரை ராசிகம் பிரகாரம் கணித்துக் கொள்ளவும்.

*என்னுடைய ஜாதக கணிதம் இரண்டாவது பதிப்பு 25-வது பக்கத்தில் சொல்லி இருப்பதைக் வாசிக்கவும்.

கிரகங்களின் ஸ்தான பலம், திக்குப் பலம், சேஷ்டாபலம் கால பலம், அயன பலம் இவைகளின் பூர்ண பலத்தின் அளவு அடியிற் கண்ட கட்டத்தில் கொடுக்கப் பட்டிருக்கின்றது. இந்த ப்பலத்திற்குக் குறைந்தால் பூர்ண பலத்தைவிடக் குறைந்தது என்றும், மேற்பட்டால் பூர்ண பலமுடையது என்றும் அறிய வேண்டும்.

சதாம்ச ரூபபங்கு அளவில்*

பலத்தின் விபரம்	சூ, பு, குரு	சந், சுக்	செவ், சனி
ஸ்தான பலம்	275	222	160
திக்குப் பலம்	58	85	50
சேஷ்டா பலம்	83	50	67
கால பலம்	187	167	112
அயன பலம்	50	67	33

* 1 ரூபத்தை 100 சமபங்காகப்பங்கிட வரும் பங்கு அளவில் கொடுக்கப் பட்டிருக்கின்றது. 83 என்பது 1 ரூபத்தை 100 சமபங்காகப் பங்கிட 83பங்கு என்பதாம். சதம் என்றால் நூறு ஆனபடியால் இப் பங்குகளுக்குச் சதாம்ச ரூபபங்கு என்று பெயரிட்டிருக்கின்றது. சூரியனுக்கு ஸ்தான பலத்தில் 275க்கு மேல் பலம் வந்தால் சூரியன் ஸ்தானபலத்தில் பூர்ண பலமுடையதாகும். இவ்விதமாகவே பார்த்துக் கொள்ளவும்.

(54) திக்குப் பலம்

திக்குப்பலத்தில் எல்லா கிரகங்களைவிட வலிவாய் இருக்கும் படியான கிரகமானது:—

(1) சூரியன் ஆகில் வியாபாரத்தினால் பணமும், புகழும் வரும்.

(2) சந்திரன் ,, இராஜ சேவையினால் பணமும், கீர்த்தியும் விருத்தி யடையும்.

(3) செவ்வாய் ,, இராஜ சேவையினால் கீர்த்தியுண்டாகும், வேதாப்பியாசம் எப்பொழுதும் உண்டாகி அதனால் கீர்த்தியுண்டாகும்

(4) புதன் ,, கிருஷிமூலம் பணம் வரும், புத்திசாலி தனத்தால் கீர்த்தியும் ஏறபடும்.

(5) குரு ,, இராஜ காரியத்தால் பணம் வரும், வித்தியத்தினால் தன் பணம் பிரகாசிக்கும்.

(6) சுக்கிரன் ,, கொடையாளியாயிருந்து அதனால் கீர்த்தி ஏற்படும்.

(7) சனி ,, வேலையாட்களுக்கு எஜமானனாய் இருத்தல், சத்துருவிடமிருந்து பணம் பெருவான்.

(55) காலபலம்

காலபலம் அல்லது அயனபலத்தில் எல்லா கிரகத்தை விட வலிவாய் இருக்கும் கிரகம்:—

(1) சூரியன் ஆனால் மந்திர உபதேசம் செய்தல்

(2) சந்திரன் ,, (கிருஷ்ணபட்சமானால்) உழைத் தொழிலுண்டு
(சுக்கில பக்ஷமானால்) வித்தையுண்டு

(3) அங்காரகன்,, பாஷாண்டி பதம் வரும்

(4) புதன் ,, வித்தையுண்டு

(5) குரு ,, வித்தையுண்டு

(6) சுக்கிரன் ,, வித்தையுண்டு

(7) சனி ,, ஒருவருக்கு ஏவல் தொழில் செய்தல்.

புதன், குரு, சுக்கிரன் இவர்களுக்கு நிகுபபலத்தைகாட்டிலும் காலபலம், அல்லது அயனபலம் அதிகமாய் இருந்தால் தனம் உண்டு.

(56) சேஷ்டா பலம்

சூரியாதி முதலிய கிரகங்களுக்குச் சேஷ்டா பலம் அதிகமாய் இருந்தால் நானாவிதமான வரும்படிகள வரும்.

ஸ்தான பலம்

சுபக்கிரகங்கள் சத்துரு க்ஷேத்திரத்திலிருந்தால் வியாதியாலும், கலகத்தாலும், சினேகிதர்களாலும் பீடிக்கப் படுகின்றன, பற்ற ராசிகளில் இருந்தால் நல்லது. பாபர்கள் சத்துரு க்ஷேத்திரத்திலிருந்தால் எப்போதும் சோக முடையவன், சினேகிதர்களாலும், பந்துக்களாலும் விட்டுவிடப் பட்டவன். எல்லோராலும் விரோதிக்கத் தக்கவனாயிருப்பான். பாபர்கள். உச்சம், திரிகோணம், மித்துரு, அதிமித்துரு க்ஷேத்திரத்திலும், தன் தசவர்க்கத்திலும் வலுத்திருந்தால், பூமி புத்திர களத்திரம், தனம், தான்யம் ஸமூர்த்தி யாயுண்டு.

(57) இஷ்டபலம்:—

சுபக்கிரகங்கள்:—சுபக்கிரகங்களுக்கு இஷ்டபலம் அதிகமாய் இருந்தால் பணக்காரனாய் இருப்பான், சினேகிதர்களிடத்தில் நன்னடக்கையுடையவனாய் இருப்பான், குணசாலியாயிருப்பான், தர்மிஷ்டியாயும் கொடையாளியாயும் இருப்பான், சுகியாய் இருப்பான், நல்ல பலிஷ்டனாயிருப்பான்.

பாபக்கிரகங்கள்:—பாபக்கிரகங்களுக்கு இஷ்டபலம்அதிகமாய் இருந்தால் சத்துருக்களுக்கு இடைஞ்சல் செய்வதிலேயே நோக்க முடையவனாய் இருப்பான்.

சுபக்கிரகங்கள்:— சுபக்கிரகங்களுக்குக் கஷ்டபலம் அதிகமாயிருந்தால் வியாதிகளாலும், கலகத்தாலும்சினேகிதர்களாலும் பீடிக்கப்படுவான்.
பாபக்கிரகங்கள்:—பாபக் கிரகங்களுக்குக் கஷ்டபலம் அதிகமாயிருந்தால் துஷ்ட நடவடிக்கை யுள்ளவன், மஹாபாபங்களைச் செய்பவன்.

(58) சுப்த தனக்கிரகங்கள் துவாதச ராசிகளில் இருக்கும் பலம்.

குறிப்பு:—மோஷாதி ராசிகளில் சூரியாதி கிரகங்கள் இருக்கும்பலன்கள் அந்த கிரகமும், அந்த கிரகமிருக்கும் ராசியாதிபதியும வலிவாய் இருக்கும் போதுதான் பலிக்கும்.

(1) சூரியன் இருக்கும் ராசி:—

1 மேஷம் ஆனல் கொஞ்சம் தனம் உண்டு, சாஸ்திரவாதி, வியாதியுள்ளவன்.

2 ரிஷபம் ஆனல் சங்கீதப் பிரியன், முகரோகம், நேத்திர ரோகம் உண்டு, சத்துரு உண்டு.

3 மிதுனம் ,, வித்தை, தனம் இவைகளை அடைய சதா கவலை உண்டு, தயாள குணமுண்டு.

4 கடகம் ,, பிதப்பை, காரியத்தில் சபலம் உண்டு.

5 சிம்மம் ,, அநேக வித்தை யறிந்த தந்திரசாலி, சத்துருவை ஜெயித்தல்.

6 கன்னி ,, திரவியம் தேடும் ஆசை அதிக முடையவன், ஸ்திரீ சரீரம் போன்ற சரீர காந்தியுடையவன், வெக்க

7 துலாம் ,, தைரியசாலி [முடையவன்.

8 விருச்சிகம்,, கீர்த்திமான்.

9 தனுசு ,, சிறிய வியாபாரி.

10 மகரம் ,, சாமர்த்திய முடையவன்.

11 கும்பம் ,, புத்திர பௌத்திர சுகமில்லை.

12 மீனம் ,, விவசாய விருத்தியுண்டு.

(2) சந்திரன் இருக்கும் ராசி:—

1 மேஷம் ஆனல் உருண்ட கண்களுடையவன், காமி, தனமில்லாதவன், மூத்தோருள்ளவன், ஜலத்தைப் பார்த்தால் பயங்காளி.

2 ரிஷபம் ,, அழகான தேகி, அதிகாரம், பராக்கிரமம், தயாள குணமுடையவன், காமி, பெண் குழந்தைகளுள்ளவன்.

3 மிதுனம் ,, ஸ்திரீலோலன், வேதசாஸ்திரி, சங்கீதப் பிரியன், ஆடல், பாடல், வேடிக்கைகளில் வல்லவன்.

4 கடகம் ,, ஜோதிட சாஸ்திரி, ஸ்திரீகளுக்கு அடங்கி நடப்பவன்.

5 சிம்மம் ,, கர்வி, வீரன், ஸ்திரீ துவேஷி, அற்ப புத்திரவான், பல் நோயுண்டு, வயிற்று நோயுண்டு.

6 கன்னி ,, நயமாகப் பேசுபவன், வேதசாஸ்திரம், சங்கீதம், ஆடல், பாடல், சிற்ப சாஸ்திரம், இவைகளில் வல்லவன், ஸ்திரீ லோலன், அன்னிய தேசவாசி, பெண்களையும், அற்ப புத்திரர்களையு முடையவன்.

7 துலாம் ,, அங்க ஹீனன், வேதசாஸ்திர மறிந்தவன், வர்த்தகன், தனவந்தன், குடும்பத்தை ரட்சிப்பவன், நோயாளி.

8 விருச்சிகம் ஆனல் கள்ளங் கபட முள்ளவன், வாலிபத்தில் தோகி தாய் தகப்பனை விட்டுப் பிரிந்தவன், தேசசஞ்சாரி.

9 தனுசு ,, சாமர்த்தியமாய்ப்பேசுபவன், கிரந்தகர்த்தன், சங்கீதம், சித்திரம் இவைகளில் வல்லவன், பிதுர் சொத்துள்ளவன், குல சிரேஷ்டன்.

10 மகரம் ,, லோபி, மனைவி மக்களிடத்தில் பிரியன், சதா சஞ்சாரி, புஸ்தகங்களை எழுதுபவன், காமி.

11 கும்பம் ,, செவிடன், பாபகாரியஞ் செய்பவன், சலியாமல் நடப்பவன்.

12 மீனம் ,, தனவான், கல்விமான், ஜலவஸ்துக்களில் வியாபாரி, காமி,

சந்திரன் ஒவ்வொரு ராசியிலுமிருந்து ஒவ்வொரு கிரகத்தாலும், பார்க்கப்பட்டால் அதன் பலன் அடியிற் கொடுக்கப்பட்டிருக்கின்றது. அடியில் சந்திரன் இருக்கும் ராசியும், அதனைப்பார்க்குங் கிரகமும், அதனலுண்டாகும் பலனும் வரிசையாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

சந்திரன் இருக்கும் ராசி	பார்க்குங் கிரகம்	பலன்
மேஷம்	—செவ்வாய்	—அரசன்
	—புதன்	—வித்வான்
	—குரு	—அரசனுக்குச் சமானமானவன்
	—சுக்கிரன்	—நற்குண முடையவன்
	—சனி	—திருடன்
	—சூரியன்	—தரித்திரன்
ரிஷபம்	—செவ்வாய்	—சொத்தில்லாதவன்
	—புதன்	—நியாயாதிபதி
	—குரு	—கௌரவ முள்ளவன்
	—சுக்கிரன்	—அரசன்
	—சனி	—தனவான்
	—சூரியன்	—கூலியாள்
மிதுனம்	—செவ்வாய்	—அங்க ஹீனன்
	—புதன்	—அரசன்

சந்திரன் இருக்கும் ராசி	பார்க்குங் கிரகம்	பலன்
மிதுனம்	—குரு	—புத்திமான்
	—சுக்கிரன்	—வித்வான்
	—சனி	—தன்மார்க்கன்
	—சூரியன்	—தரித்திரன்
கடகம்	—செவ்வாய்	—தைரியசாலி
	—புதன்	—கௌரவ முள்ளவன்
	—குரு	—புலவன்
	—சுக்கிரன்	—அரசனுக்குச் சமானமானவன்
	—சனி	—இருப்பு வேலை செய்தல்
	—சூரியன்	—நேத்திர ரோகம்
சிம்மம்	—செவ்வாய்	—அரசன்
	—புதன்	—சாமர்த்தியமாய்ப் பேசுதல்
	—குரு	—தனவான்
	—சுக்கிரன்	—அரசன்
	—சனி	—தன்மார்கன்
	—சூரியன்	—அதிக வல்லமைசாலி
கன்னி	—செவ்வாய்	—தனவான்
	—புதன்	—அதிக வல்லமைசாலி
	—குரு	—கௌரவ முடையவன், பிரபு
	—சுக்கிரன்	—வித்வான், வேதாந்தி
	—சனி	—சீலமில்லாதவன்
	—சூரியன்	—சுகி
துலாம்	—செவ்வாய்	—நபுஞ்சகன்
	—புதன்	—அரசன்
	—குரு	—தனவான்
	—சுக்கிரன்	—வர்த்தகன்
	—சனி	—நபுஞ்சகன்
	—சூரியன்	—நபுஞ்சகன்
விருச்சிகம்	—செவ்வாய்	—தாயும், மாற்றுந்தாயும் உடையவன்.
	—புதன்	—ராஜப்பிரியன்
	—குரு	—தாழ்ந்த குணமுடையவன்
	—சுக்கிரன்	—நோயாளி

சந்திரன் இருக்கும் ராசி	பார்க்குங் கிரகம்	பலன்
விருச்சிகம்	—சனி	—தரித்திரன்
	—சூரியன்	—மந்திரி
தனுசு	—புதன்	—வித்வான், தனவான், புத்திமான், கீர்த்திமான், பலவான்.
	—குரு	
	—சுக்கிரன்	
	—சனி	—நியாய ஸ்தலத்தில் மத்தியஸ்தஞ் செய்பவன், ஸ்திரீலோலன்
	—சூரியன்	
	—செவ்வாய்	
மகரம்	—செவ்வாய்	—அரசன்
	—புதன்	—சக்கிரவர்த்தி
	—குரு	—வித்வான்
	—சுக்கிரன்	—தனவான்
	—சனி	—தரித்திரன்
	—சூரியன்	—பிரபு
கும்பம்	—புதன்	—மிகவும் கீர்த்திமான்
	—குரு	
	—சுக்கிரன்	
	—சனி	—ஸ்திரீலோலன்
	—சூரியன்	
	—செவ்வாய்	
மீனம்	—புதன்	—வித்வத் தன்மையுடைய அரசன், கேளிக்கையில் ஆசையுடையவன்.
	—குரு	
	—சுக்கிரன்	
	—சனி	—கெட்ட வார்த்தைசொல்லுபவன், கெட்ட எண்ண முடையவன்
	—சூரியன்	
	—செவ்வாய்	

குறிப்பு:—இங்கு ராசிச் சக்கிரத்தில் சந்திரன் இருக்கும் ராசியையும், சந்திரனைப் பார்க்கும் கிரகத்தையுங் கொண்டு பலன் சொல்லி இருக்கிறது. இந்தப் பலனையே அம்சச் சக்கிரத்தில் சந்திரன் இருக்கும் அம்ச ராசியையும், அம்சச்சக்கிரத்தில் சந்திரனைப் பார்க்குங் கிரகத்தையுங் கொண்டு சொல்லலாம்.

(3) செவ்வாய் இருக்கும் ராசி:—

(1) மேஷம் ஆனால் விவசாயத்தினாலும், அரசராலும் பொருள்வரவு.

(2) ரிஷபம் ,, காமாக்கினி யுடையவன்

(3) மிதுனம் ஆனல் மெல்லிய குரலுளவன்
(4) கடகம் ,, இராஜப் பிரியன், அதிக தனவந்தன்
(5) சிம்மம் ,, ஸ்திரமான தனமுடையவன்
(6) கன்னி ,, மெல்லிய குரலுளவன்
(7) தூலாம ,, காமாக்கினி யுடையவன்
(8) விருச்சிகம் ,, விவசாயத்தினலும், அரசாலும் பொருள் வரவு.
(9) தனுசு ,, சுகமும் சந்தோஷமும் உடையவன், எதிரியை
(10) மகரம் ,, கெட்டவர்கள் சகாயம் உடையவன். ஜெயிப்பன்
(11) கும்பம் ,, அரசன் அல்லது அரசனுக்குச் சமானமானவன்.
(12) மீனம் ,, சுகமும், சந்தோஷமும் உடையவன், எதிரியை ஜெயிப்பன்.

(4) புதன் இருக்கும் ராசி:—

(1) மேஷம் ஆனல் தரித்திரன்
(2) ரிஷபம் ,, வித்வான்
(3) மிதுனம் ,, சுகவான்
(4) கடகம் ,, செலவாளி
(5) சிம்மம் ,, மனைவிக்கு அடங்கி நடப்பவன்
(6) கன்னி ,, நற்குணமுடையவன், ஆபத்துக்கள் நேரிடாதவன்.
(7) தூலாம் ,, வித்வான்
(8) விருச்சிகம் ,, தரித்திரன்
(9) தனுசு ,, இராஜப பிரியன்
(10) மகரம் ,, கூலிக்குக் கைத்தொழில் செய்பவன்,
(11) கும்பம் ,, கூலிக்குக் கைத்தொழில் செய்பவன்.
(12) மீனம் ,, சேவகனுய் இருத்தல்

(5) குரு இருக்கும் ராசி:—

(1) மேஷம் ஆனல் நற்குணவான், கொடையாளி, தனமும், புத்திரர் களும் அதிகமாயுடையவன்
(2) ரிஷபம் ,, வல்லமைசாலி
(3) மிதுனம் ,, அதிக சினேகிதருடையவன்

(4) கடகம் ஆனல் வெகு புத்திரருடையவன், புத்திமான்
(5) சிம்மம் ,, கீர்த்திமான்
(6) கன்னி ,, அதிக சினேகிதருடையவன்
(7) துலாம் ,, வல்லமைசாலி
(8) விருச்சிகம் ,, நற்குணவான், கொடையாளி, தனமும் புத்திரர் களும் உடையவன்.
(9) தனுசு ,, அரசன், அரசனுக்குச் சமானமானவன்
(10) மகரம் ,, தேசசஞ்சாரி, கவலையுடையவன்
(11) கும்பம் ,, சுகவான்
(12) மீனம் ,, அரசன், அரசனுக்குச் சமானமானவன்

(6) சுக்கிரன் இருக்கும் ராசி:—

(1) மேஷம் ஆனல் ஸ்ரீகளிடத்தில் பிரீதியுடையவன்
(2) ரிஷபம் ,, மித்ராள், பந்து, தனம், ஞானம், இவைகளில் அதிக சாய்கால் உடையவன்.
(3) மிதுனம் ,, வித்வான், தனவான், ஞானவான்
(4) கடகம் ,, பயங்காளி
(5) சிம்மம் ,, மந்த புத்திரருடையவன்
(6) கன்னி ,, தாழ்ந்த நடவடிக்கை யுள்ளவன்
(7) துலாம் ,, இராஜப் பிரியன்
(8) விருச்சிகம் ,, துஷ்ட ஸ்திரீ சவகாச முடையவன்
(9) தனுசு ,, ஜனபதி
(10) மகரம் ,, போகி
(11) கும்பம் ,, கன்னியாஸ்திரீ லோலன்
(12) மீனம் ,, வித்வான், குணவான், சிலவான், தனவான்

(7) சனி இருக்கும் ராசி:—

(1) மேஷம் ஆனல் மூர்க்கன்
(2) ரிஷபம் ,, அதிக தனமில்லாதவன்
(3) மிதுனம் ,, தனம், புத்திராள், புத்தி இவைகள் இல்லாதவன்.
(4) கடகம் ,, தாய் சுகமில்லாதவன்

(5) சிம்மம் ஆனல் அபகீர்த்தி யுடையவன்
(6) கன்னி ,, அற்பதனவான், அற்ப புத்திரவான்
(7) துலாம் ,, கிராமாதிகாரி, ஒரு ஜாதிக்கு அதிகாரி
(8) விருச்சிகம் ,, கெட்ட மனதுடையவன்
(9) தனுசு ,, தனம், மனைவி, புத்திரர்கள் இவர்கள் சுகமுடையவன்
(10) மகரம் ,, இராஜாப் பிரியன்
(11) கும்பம் ,, தனவான்
(12) மீனம் ,, தேஜசும், மிகவும் நல்ல குணங்களுமுடையவன்

குறிப்பு:— ஒவ்வொரு கிரகத்தினுலுண்டாகும் குணங்களே எல்லாம் முதலில் வெவ்வேறாக எழுதிக்கொண்டு பிறகு இவைகளே எல்லாம் ஒன்றுய்ச் சேர்க்க வருகின்ற மொத்த குணத்தை யுத்தியால் அறியவேண்டியது. உதாரண மாகக் குரு தனுசில் இருந்தால் பலன் அரசன், அரசனுக்குச் சமானமானவன் என்று சொல்லி யிருக்கிறது. குரு சுமார் ஒரு வருஷம் தனுசு இராசியில் இருக்கும் என்று எல்லோருக்கும் தெரிந்த விஷயம். ஆகைய ல் குரு தனுசு ராசியில் ஒரு வருஷம் இருப்பதால் இந்த ஒரு வருஷத்தில் பிறப்பவர் எல்லாம் அரசன் அல்லது அரசனுக்குச்சமான மானவன் என்று எண்ணக்கூடாது. மற்றக் கிரகங்களின் நிலையாலும் லக்கினத்தாலும் உண்டாகும் பலனையும் இத்துடன் சேர்த்து பொருத்தப் பலனை யுத்தியால் அறிந்து சொல்ல வேண்டும். மேலும் ஒரு கிரகத்தின் குணம் அந்தக் கிரகத்தின் தசாபுத்தி காலங்களில் விசேஷமாகத் தோன்றும், மேலும் அதனுடன் சம்மந்தப்பட்டகிரகம், அதைப் பார்த்த கிரகம் இவைகளின் குணத்தாலும் அந்தக் கிரகத்தின் குணம் மாறுதல டையும், இதையும் யுத்தியால் யூகிக்க வேண்டியது.

(59) நவக்கிரகங்கள் துவாதச பாவங்களில் இருக்கும் பலன்

(1) சூரியன்

சூரியன் 1-வது பாவத்தில்:— இருந்தால் ஆரோக்யம் உண் டாகும், பித்த தேகி, புத்திமான், நேத்ர ரோகமுடையவன், சூடான வயிற்றை உடையவன், நல்லொழுக்க முடையவன், மூர்க்கன், பிள்ளை இல்லாதவன், அல்பமாய் பேசுகிறவன், கூர்மையானபுத்தியுடையவன் பிரதேசத்தில் வசிப்பவன், சுகவான். (வேறு)கொஞ்சமாக உண்பவன், குறைந்த பார்வையுடையவன், யுத்தகளத்தில் வீண்டம்பம்செய்பவன், நாடக நடைநொடி பாவத்தில் வல்லவன்.

சூரியன் 1-வது பாவத்தில் மேஷத்தில் உச்சமாய் இருந்தால் கீர்த்திமான், வித்வான், பலசாலியை எதிர்க்கின்றவன். (வேறு) நல்ல பார்வையும், கீர்த்தியும் உடையவன், ஞானம், நற்குணம் இவைகளை அடைய வுக்கமுடையவன்.

சூரியன் 1-வது பாவத்தில் கடகத்தில் இருந்தால் போகி, ஞானி, நீர்க்குமிழிக் கொப்பான கண்ணுடையவன்

சூரியன் 1-வது பாவத்தில் சிம்மத்தில் இருந்தால் அரசனைவி ருப்பான். (வேறு) இரவில் கண் தெரியாது, பலசாலி

சூரியன் 1-வது பாவத்தில் கன்னியில் இருந்தால் பெண் குழந் தைகள் பிறக்கும், நன்றி யில்லாதவன், மனைவி இறப்பாள், நிலமுடை யவன், இந்தச் சூரியன் சுபருடன் கூடினால் ஆரோக்கிய முடையவன், சூரியன் பாபிகளுடன் கூடினால் மூன்றுவது வருஷத்தில் ஜ்வர பீடை, அவன் சுபர்களால் பார்க்கப்பட்டால் தோஷமில்லை

சூரியன் 1-வது பாவத்தில் துலாத்தில் நீச்சனுக விருந்தால் பிரதாப முடையவன், தரித்திரன், குருடன், ஞானத்துவேஷி, சுபர் களால் பார்க்கப்பட்டால் இந்த தோஷங்களில்லை.

சூரியன் 1-வது பாவத்தில் மகரத்தில் இருந்தால் ஹிருதயரோகி.

சூரியன் 1-வது பாவத்தில் மீனத்தில் இருந்தால் ஸ்திரீ ஜனங் களிடத்தில் பழகிக்கொண்டிருப்பான்.

சூரியன் 1-வது பாவத்தில் சத்துரு க்ஷேத்திரத்தில் இருந்தால் மூன்றுவது வருஷத்தில் ஜ்வர பீடை யுண்டாகும்.

குறிப்பு:—ஒரு கிரகம் ஒரு பாவத்தில் இருந்தால் அதன் பலன்பலானவை என்று அதன் கீழ் கொடுத்திருக்கும் எல்லா பலன்களும் அந்தக் கிரகம் அந்தப் பாவத்தில் இருந்தால்தான் பலிக்கும்.

(2) சூரியன் 2-வது பாவத்தில் இருந்தால் முக ரோகம் உண்டு, இருபத்தைந்தாவது வயதில் இராஜ தண்டனையால் பணச் செலவு. இந்த ஸ்தானம் உச்ச ஸ்தானமாகவோ (அதாவது மேஷமாகவோ), சுவ க்ஷேத்திரமாகவோ (அதாவது சிம்மமாகவோ) இருந்தால் இந்த தோஷமில்லை. இந்த ஸ்தானத்தில் பாபியோடு சேர்ந்திருந்தால் நேத்ர ரோக மூண்டு, சுவல்ப வித்வான், ரோகம் உடையவன், இந்த ஸ்தானங்களில் சுபர்களாலே பார்க்கப்பட்டால் தனம் உடை

யவன், தோஷங்களைச் சொல்லக் கூடியவன், நேத்திர சௌக்கியம் உடையவன், சுயாம்சத்திலோ, உச்சாம்சத்திலோ இருந்தால் வெகு தனம் உடையவன். புதன் சேர்ந்திருந்தால் தெத்துவாயன் இரண்டிற் குடையவன் உச்சாம்சம் பெற்றிருந்தால், வாக்மீ சாஸ்திரம் தெரிந்த வன், ஞான முள்ளவன், நேத்திர சௌக்கியம் உண்டு, ராஜயோக மூண்டு. (வேறு) கொடையாளி, தாது திரவியமுடையவன், சாதுர்ய மாய்ப் பேசுவான், சத்துருக்களிடத்தில் அன்புடையவன்.

(3) சூரியன் 3-வது பாவத்தில் இருந்தால் புத்திமான், தம்பி இல்லாதவன், ஜேஷ்டசகோதர நாசன், 4, 5, 8, 12 வது வருஷங்களில் கொஞ்சம் பீடை உள்ளவன். சூரியன் பாபியோடே சேர்ந்திருந்தால் குரூரமான காரியத்தைச் செய்யக்கூடியவன், இரண்டு தாய் உடைய வன், பராக்கிரமம்உடையவன், யுத்தத்தில் சூரன், கீர்த்தியுடையவன், தன் பணத்தை அனுபவிக்கிறவன். சூரியன் சுபக் கிரகங்களோடு சேர்ந்து இருந்தால் தன் சகோதர விருத்தி உடையவன். 3-வது ஸ்தானாதிபதி பலம் உள்ளவனாக இருந்தால் சகோதரர்கள் தீர்க்கா யுளுடையவர்களாக இருப்பார்கள், பாபிகளுடன் சேர்ந்தாலும், பாபி களால் பார்க்கப்பட்டாலும் சகோதர நாசம் உண்டு. சுபர்களால் பார்க் கப்பட்டால் சகோதரர்கள் தனவந்தர்களாயும், போகியாயும் இருப் பார்கள். (வேறு) தைரியசாலி, கொடையாளி, மிகவும் தனவான், துஷ்டர்கள் சகவாசம் உடையவன்.

சூரியன் 4-வது பாவத்தில் இருந்தால் அங்கஹீனன், அஹங்காரி, ஜன விரோதி, உஷ்ண தேகம் உடையவன், மனப்பீடை யுடையவன், 32-வது வயதில் சர்வகார்யானுகூலம் உடையவன், பஹு-பிரதிஷ்டை உடையவன், நல்ல பதவி, ஞானம், சௌர்யம் இவைகளுடையவன், ஜாதியில் குறைந்தவன், தனதான்ய குறைவு உள்ளவன். நான்குக் குடையவன் பலிஷ்டர்களோடே சேர்ந்தோ, சுவ க்ஷேத்திரத்திலோ, கேந்திரத்திலோ, திரிகோணத்திலோ இருந்து நல்ல கிரகங்களுடைய வீக்ஷணம் இருந்தால் பல்லக்கு உடையவன்; பாபக் கிரகங்களோடு கூடியோ, பாபக் கிரகங்களால் பார்க்கப்பட்டோ இருந்தால் துஷ்டஸ் தானத்தில் கெட்ட வாகனங்கள் கிடைக்கும், நிலங்கள் கிடையாது, அயல் வீட்டிலேயே வசிப்பவன். (வேறு) ஹிருதய ரோகி, குரூரன், தன தான்யம் புத்தி இல்லாதவன்.

(5) சூரியன் 5-வது பாவத்தில் இருந்தால் பெருத்த தேகமூடை

யவன், ஏழை, ஏழாவது வயதில் பிதாவுக்கு அரிஷ்டம் உண்டாகும், மேதாவி, அல்ப புத்திரருடையவன், புத்திமான், ஐந்தாவது வீட்டிற் குடையவன் பலவானுடன் கூடினவனுக விருந்தால் புத்திரர் பிறக்கும். ஐந்தாவது வீட்டிற்குடையவனே, அல்லது அந்த வீட்டில் இருக்கும் சூரியனே பாபியுடன் கூடினலும், பாபிகளால் பார்க்கப்பட்டாலும் பெண் குழந்தைப் பிறக்கும். இவர்களில் ஒருவர் இராகு, கேதுக் களுடன் கூடினல் சர்ப தோஷத்தால் புத்திர நாசம். இவர்களில் ஒருவர் செவ்வாயுடன் கூடினல் சத்துரு மூலமாய்ப் புத்திர நாசம், சுபர் பார்வை யிருந்தால் தோஷமில்லை. ஐந்தில் சூரியன் பலிஷ்டர் களுடன் கூடினல் புத்திர ஸ்மிர்த்தி. (வேறு) இராஜப் பிரியன், சபல மனதுடையவன், தேசாந்திரத்தில் திரிபவன்.

(6) சூரியன் 6-வது பாவத்தில் இருந்தால் அல்ப பங்காளி யுடை யவன், சத்துரு விருத்தியுண்டு, தன தான்ய ஸமிர்த்தி, இருபதாவது வயதில் கண் கெட்டு விடும், சுப திருஷ்டி இருந்தால் தோஷமில்லை. பாம்பு, காடு இவைகளை நாசம் செய்யக்கூடிய மந்திரம் தெரிந்தவன், கீர்த்திமான், துக்க ரோகம் உடையவன், அதிக உஷ்ணமானத் தேகம் உடையவன். ஆறும் வீட்டுக்காரன் சுபர்களுடன் கூடினல் தேகம் ஆரோக்கிய முள்ளதாக விருக்கும், பங்காளி, சத்துரு அதிக மாக விருக்கும். ஆறும் வீட்டிற் குடையவன் துர்பலனுக விருந்தால் சத்துரு நாசம் உண்டு, பிதா துர்பலனுக விருப்பார். (வேறு) தைரிய சாலி, காமாக்கினி யுடையவன், இராஜ பூஜிதன், தனவான், கீர்த்தி மான், கௌரவ முடையவன்.

(7) சூரியன் 7-வது பாவத்தில் இருந்தால் விவாக விளம்பம், ஸ்திரீ துவேஷி, அயல் மனைவியிடம் விருப்பமுடையவன், இரண்டு மனை வியுடையவன், 25-வது வயதில் தேசாந்திரம் போவான், சாப்பிடக் கூடாதவஸ்துக்களைச் சாப்பிடுவான், விநோதசீலன், மனைவியைத்துவே ஷிப்பவன். ஏழாவதுஸ்தானம் தன்வீடாகவிருந்து பலிஷ்டர்களுடன் கூடியிருந்தால் ஒருமனைவி. சத்துரு கிரகங்கள், நீசக்கிரகங்கள் பார்த்தா லும், அல்லது பாபிகளுடன் கூடினலும், அல்லது பாபிகளால் பார்க்கப் பட்டாலும் அனேக மனைவிகள் உண்டு. (வேறு) துன்மார்க்கன், கோபி

(8) சூரியன் 8-வது பாவத்தில் இருந்தால் அற்ப புத்திரனுள்ள வன், நேத்திர ரோகம் உண்டு, 10-வது வயதில் தலைகாயமுள்ளவன்,

சூரியன் சுபக் கிரங்களுடன் கூடினலும், அல்லது அவர்களால் பார்க்கப்பட்டாலும் இவைகளுக்கு பரிகாரம் உண்டாகும். அற்ப தனம், பசுமாடு, எருமை மாடு இவைகளுக்கு நாசம், சரீரத்தில் ரோகம் உண்டு, பிரசித்திப்பெற்றவன், பாவாதிபதி பலிஷ்டனுக விருந்தால் இஷ்டமுள்ள கேஷத்திரம் உண்டு, உச்சாம்சமோ சுயாம்சமோ டெற்றி ருந்தால் தீர்க்காயுள் உண்டு. (வேறு) மனதைக் கவறுபவன், கலகப் பிரியன், அதிருப்தியுள்ளவன்.

(9)சூரியன் 9-வது பாவத்தில் இருந்தால் தர்மிஷ்டன், அற்ப டாக்கியன், தபப்டனத்துவேஷிப்பவன்,புத்திரர்,மனைவியுடையவன், தபசு தியானம் உள்ளவன், குரு தேவதா பக்தியுண்டு. நீச்சஸ் ஸ்தானத்திலும் பாபகேஷத்திரத்திலும் இருந்தாலும் அல்லது பாபக் கிரகங்களால் பார்க்கப்பட்டாலும் பிதுரு நாசம் உண்டு. சூரியன் சுபக்கி ரகங்களுடன் கூடினலும், அல்லது சுபர்களால் பார்க்கப்பட்டாலும் பிதாவுக்குத் தீர்க்காயுள். (வேறு) பிதுரு, குரு துவேஷி, வேறு மதத் தைஅனுசரிப்பவன்.

(10) சூரியன் 10-வது பாவத்தில் இருந்தால் 18வது வயதில் வித்யாதிகாரம் பெற்று பிரசித்தனுவன், தனம் தேடுவதில் சமர்த்தன், ராஜப்பிரியன், நல்ல கர்மங்களில் ஆசையுடையவன், ராஜசூான், பிர சித்தியுடையவன். சூரியன் உச்சாம்சமோ, சுயாம்சமோ பெற்று இருந் தால் பலிஷ்டன், பிரசித்தமான கீர்த்தியுடையவன், குளம், கேஷத்தி ரம், கோபுரம் இவைகளைச்செய்வதால் ஏற்படுகிற கியாதியுள்ளவன். சூரியன் பாபிகளின் கேஷத்திரத்தில் இருந்தாலும் பாவிகளுடனிருந் தாலும், பாபிகளால் பார்க்கப்பட்டாலும் காரிய விக்கினம் உண்டு, கெட்ட காரியம் செய்பவன், அநாசாரம் உடையவன், பாபி. (வேறு) பிதுரார்ஜிதம் உள்ளவன், வித்வான், கீர்த்திமான், நற்குணவான், அரசனுக்குச் சமானமானவன்.

(11) சூரியன் 11-வது பாவத்தில் இருந்தால் அதிக தான்ய முடையவன், 25-வது வயதில் வாகனம் கிடைக்கும், தனம் சம்பாதிப் பதில் சமர்த்தன், வாக்குச்சமர்த்தன், பிரபுக்களுக்கு பயத்தையுண்டு பண்ணக் கூடியவன், வேலைக்காரிடத்தில் நேசம் உடையவன். சூரியன் பாபர்களுடன் கூடினல் வெகு தான்ய விரையம் உண்டு, வாகனம் இல் லாதவன். சூரியன் உச்ச ஸ்தானத்திலோ, சுவகேஷத்திரத்திலோ இரு

தால் இங்கு மேலே சொல்லிய நல்ல பலன்கள் எல்லாம் அதிக மாகஉண்டு. சூரியன் வாகனஸ்தானாதிபதியுடன் கூடினால் வெகு சேஷத்திரங்களில் பணம் சம்பாதிப்பான், வாகன யோகம் உண்டு. வெகு பாக்கியம் உண்டு. (வேறு) அதிக தனம் உடையவன், மானவி, புத்திரர், வேலையாட்கள் உடையவன், சுகவான்.

(12) சூரியன் 12-வது பாவத்தில் இருந்தால் 36-வது வயதில் குல்ம வியாதியுண்டு, கெட்ட விஷயத்தில் விரையஞ்செய்வான், தன ஹானி உண்டு, கோஹத்திபண்ணுவான், பரதேசவாசி. 12-வது வீட் டிற்குடையவன் வலிவாய் இருந்தாலும், அல்லது 12-வது பாவாதிபதியு டன் சூரியன் சேர்ந்திருந்தாலும் தேவாசித்தியுடையவன், படுக்கை, கட்டில் முதலிய சயன சுகங்கள் உண்டு. சூரியன் பாபக்கிரகங்களுடன் சேர்ந்திருந்தால் கெட்ட வழியில் செலவு செய்வான், சுகமான படுக்கை இல்லாதவன், சூரியன் ஆறுக்குடையவனோடு கூடினால் குஷ்டரோகம் உடையவன், சுபதிருஷ்டியிருந்தால் அதற்குப்பரிகார முண்டு. பாபி, ரோகவிருத்தியுடையவன். (வேறு) புத்திரருடையவன், அங்கவீனன் தேசசஞ்சாரி.

(2) சந்திரன்

(1) சந்திரன் 1-வது பாவத்தில் இருந்தால் ரூபலாவண்யம் உடையவன், சபலன், 15வது வயதில் அதிகமாக யாத்திரை பண்ணு பவன், மேஷமோ, ரிஷபமோ, அல்லது கடகமோ இதில் சந்திரன் இருந்தால் சாஸ்த்திரம் தெரிந்தவன், தனமுடையவன், சுகமுடைய வன், அரசனுடைய மிருதுவான வாக்கு உடையவன், மிருதுவான தேகத்தை யுடையவன். சந்திரன் சுபக்கிரகங்களால் பார்க்கப்பட்டால் புத்திமான், ஆரோக்கியவான், வாக்மீ, தனம் உடையவன். லக்கினாதி பதி பலவீனனுப் இருந்தால் வியாதி உடையவன். (வேறு) சந்திரன் தேய்பிறை சந்திரனால் செவிடன், அங்கவீனன். சேவகனுயிருப் பான். சந்திரன் தேய்பிறையாய் இருந்து பாபியுடன் சேர்ந்திருந்தால், பலவீனன், பாலாரிஷ்டம் உடையவன். சந்திரன் உச்சமாகவோ அல்லது சுவசேஷத்திரத்திலோ இருந்தால் அதிக அழகு, வெகு தனம், அதிக கீர்த்தி உடையவன். சந்திரன் பூர்ண சந்திரனுப் இருந்தால் வித் வான், நீண்ட ஆயுள் உடையவன்.

(2) சந்திரன் 2-வது பாவத்தில் இருந்தால் நல்ல வாக்குடைய வன், பராபரத்தை யுடையவன், தனவான், அல்ப சந்தோஷி, 18-வது

அநுக்கிரகத்தில் சமர்த்தன், சந்திரன் பாபக் கிரகத்துடன் கூடினாலும் அல்லது பாபக்கிரகத்தால் பார்க்கப்பட்டாலும் தண்டிப்பதில் சமர்த்தன். சந்திரன் பூர்ணச்சந்திரனாய் இருந்தால் பலவான், அன்னதானத்தில் பிரீதி யுடையவன், அநேக பண்டிதர்களுடைய அனுக்கிரகமும், ஐஸ்வரியமும் பொருந்தினவன், நல்ல கர்மங்களைப் பண்ணக் கூடியவன், பாக்கிய ஸ்மர்த்தி, ராஜயோக முடையவன், தியானவான். (வேறு) பெருந்தன்மை யுடையவன் தனவான், பட்சுபாதம் உடையவன் தீர்க்கமாய் ஆலோசிப்பவன்.

(6) சந்திரன் 6-வது பாவத்தில் இருந்தால் அதிகதரித்திரத்தால் கஷ்டப்படுபவன், 36-வது வயதில் விதவை சங்கமம் உண்டு. சந்திரன் பாபக் கிரகத்துடன் கூடி இருந்தால் ஹீனமாகவும், பாவமாகவும் இருக்கக் கூடிய தொழில் செய்பவன். சந்திரனுடன் ராகு, அல்லது கேது கூடியிருந்தால் பணம் இல்லாதவன், குதிரையை உடையவன், சத்துரு கலகம் உடையவன், சகோதர ஹீனன், அக்கினி மாந்தத்திலே உண்டான ரோகமுடையவன், குளம், குட்டைகளில் ஜலகண்டம் உடையவன்; சந்திரன் பாபியுடன் சேர்ந்திருந்தால் ரோகவான், க்ஷீணசந்திரனாய் இருந்தால் இது பூர்ணபலன். சந்திரன் சுபக்கிரகத்துடன் கூடினால் பலிஷ்டனாய் இருப்பான், ரோகமில்லாதவன். (வேறு) சந்திரன் தேய்பிறையானால் அற்பாயுள், சந்திரன் பூர்ண சந்திரனானால் தீர்க்க ஜீவி, போகி

(7) சந்திரன் 7-வது பாவத்தில் இருந்தால் மிருதுபாஷி, வக்கிர கண்ணன், 32-வது வயதில் ஸ்திரீசங்கமம், ஸ்திரீலோலன், ஸ்திரீ மூலமாய் கிரந்த சாஸ்திராதி பீடை, ராஜப்பிரசாத லாபம் உண்டு. சந்திரன் இருக்கும் ஸ்தானாதிபதி பலிஷ்டனாய் இருந்தால் இரண்டு தாரம் உடையவன். சந்திரன் க்ஷீணசந்திரனாய் இருந்தால் களத்திர நாசம் உண்டு. சந்திரன் பூர்ண சந்திரனாய், பலிஷ்டனாய், அல்லது உச்சனாய் இருந்தால் அல்லது சுவக்ஷேத்திரத்தில் இருந்தால் ஏகதாரத்திரவான், போகத்தில் விருப்பமுடையவன். (வேறு) ஸ்திரீ வசியமாகுபவன் போகவான், காமமுடையவன், தயைவுள்ளவன், சதாகிரிந்துக் கொண்டிருப்பவன்.

(8) சந்திரன் 8-வது பாவத்தில் இருந்தால் அற்ப வாகனம் உடையவன், நதி, குளம் இவைகளில் கெண்டத்தையுடையவன், ஸ்திரீயின் காரணமாகப் பந்து ஜனத்தை விட்டவன். உச்சத்தில் அல்லது சுவ

க்ஷேத்திரத்தில் சந்திரன் இருந்தால் தீர்க்காயுள். க்ஷீண சந்திரனுய் இருந்து பலிஷ்டனுக சந்திரன் இருந்தால் தீர்க்காயுள். (வேறு) வித்தைப்பிரியன், கேளிக்கைப் பிரியன், தயாள குணமுடையவன் போர் செய்யப் பிரிய முள்ளவன்.

(9) சந்திரன் 9–வது பாவத்தில் இருந்தால், மிகவும் படித்தவன், புண்ணியவான், குளம், கோயில் கட்டுகிறவன், புத்திரப் பாக்கியமுடையவன். பூர்ண சந்திரனுய் இருந்து பலிஷ்டனுக விருந்தால் வெகு பாக்கியம் உடையவன் தீர்க்காயுள் உடைய பிதாவை உடையவன். சந்திரன் பாபியின் ஸ்தானத்தில் பாபியுடன் சேர்ந்தால் மாதுரு, பிதுரு நாசம் உடையவன். (வேறு) பிதுர் தேவதைகள், கடவுள் இவர்கள் இடத்தில் பக்தியுடையவன், தியாகியாய் இருப்பான்.

(10) சந்திரன் 10–வது பாவத்தில் இருந்தால் வித்வான் சந்திரனுடன் பாபக்கிரகம் சேர்ந்தால் 27-வது வயதில் விதவாசங்கமத்தால் ஜனவிரோதி. அதிமேதாவி, நல்ல கர்மங்களில் ஆசையுடையவன், கீர்த்திமான், தயாதாட்சண்யன். அந்த பாவாதிபதி பலிஷ்டனுய் இருந்தால் விசேஷ சத்கர்ம சித்தியுண்டு, சந்திரன் பாபியால் பார்க்கப் பட்டாலும, அல்லது பாபியுடன் சம்மந்தப்பட்டாலும் கெட்ட காரியத்தைச் செய்பவன், கர்ம நாசத்தை யுடையவன். (வேறு) தனதான்ய வஸ்திர பூஷணம் உடையவன், ஸ்திரிகளிடத்தில் விளையாடக்கூடியவன்.

(11) சந்திரன்11–வது பாவத்தில் இருந்தால் மிகவும்படித்தவன் புத்திரருடையவன், உபகாரி, 25-வது வயதில் புத்திர நாசத்தையுடையவன், வெகு பிரபலயோகம் உடையவன். அந்த பாவாதி பதி பலவீனனுய் இருந்தால் வெகுதன விரையம் உண்டு. அந்த பாவதிபதி பலிஷ்டனுய் சந்திரனுடன் சேர்ந்திருந்தால் லாபத்தை யுடையவன், நிசேஷ்ப லாபத்தையுடையவன், சுக்கிரன் இருந்தால் நரவாகன யோகத்தையுடையவன், பகுவித்வான், க்ஷேத்திரவான், அனேக ஜனங்களாட்சிக்கும் பாக்கியவான் (வேறு) தனவான்,

(12) சந்திரன் 12-வது பாவத்தில் இருந்தால் கெட்ட வஸ்துவை சாப்பிடக் கூடியவன், கெட்ட விஷயத்தில் செலவு செய்பவன், கோபத்தால் கெடுதிஉடையவன், விசனம் உடையவன், ஸ்திரீ ரோகம்உடையவன், சாப்பாடு இல்லாதவன். சந்திரன் சுபக்கிரகத்துடன் கூடி இருந்தால் வித்வான், தயையுடையவன். சந்திரன் பாபக்கிரகத்துடனுவது சத்துரு கிரகத்துடனுவது இருந்தால் பாபலோகம் உண்டு, சுபகிரகத்

கூட னுவது, மித்துரு கிரகத்துடனுவது இருந்தால் புண்ய லோகம் உண்டு. (வேறு) அந்தியதேச வாசி.

(3) செவ்வாய்

(1) செவ்வாய் 1-வது பாவத்தில் இருந்தால தேகத்தில் விரணம் உண்டு, அநேக திருடர்களை அலங்கரிக்கின்றவன், பெரிய தோப்பு களை உடையவன், சிவந்த கைகளை உடையவன், சூரன், பலவான், மூர்க்கன், கோபி, சமானமான பராக்கிரமத்தை யுடையவன், பணக் காரன், சபலன், விசித்திரமான ரோக முடையவன். கோபமுடைய வன், கெட்டவன். செவ்வாய் உச்ச ஸ்தானத்தில் அல்லது சுவச்சேத் திரத்தில் இருந்தால் ஆரோக்கியம் உண்டு, திடகாத்திரன் இராஜ சன்மானத்தால் கீர்த்தியுடையவன், தீர்க்காயுளுடையவன். செவ்வாய் பாபிகளுடன் அல்லது சத்துருக்களுடன் கூடினால் அல்பாயுசுண்டு, சுவல்ப பிள்ளை யுடையவன், வாதசூல ரோகமுண்டு, துர்முகன். செவ்வாய் உச்சத்தில் அல்லது சுவகேஷத்திரத்தில் இருந்தால் தன வான், வித்தையுடையவன், விலாசமானகண்ணை யுடையவன். இந்தஸ் தானங்களில் செவ்வாய் பாபியுடன் கூனலும், அல்லது பாபியால் பார்க் கப்பட்டாலும் அல்லது இந்த கேஷத்திரங்கள் பாபகேஷத்திரமானாலும் நேத்திர ரோகமுண்டு. (வேறு) துன்மார்க்கன், தைரியவான், சதா சஞ் சாரி, நேயாளி, சபலபுத்தியுடையவன்.

(2) செவ்வாய் 2-வது பாவத்தில் இருந்தால் வித்தை இல்லாத வன், லாபாதிபதி 6வது ஸ்தானத்திற்கு மேலே இருந்தால் கண்போய் விடும், சுபர்கள் செவ்வாயைப் பார்த்தால் இதற்கு பரிகாரமுண்டு. செவ்வாய் உச்சத்திலும் அல்லது சுவகேஷத்திரத்திலும் இருந்தால் வித்தையுண்டு, விலாஸமான நேத்திரமுண்டு, அவ்விடத்தில் பாபர்கள் இருந்தாலும், அல்லது அவ்விடத்தைப் பாபர்கள் பார்த்தாலும், அல் லது அந்தவிடம் பாபகேஷத்திரமானாலும் கண் ரோக முண்டு. (வேறு) கிருஷி, உலோகம் இவைகள் விஷயமாய்ச் தேசசஞ்சாரஞ் செய்பவன், கோபி.

(3) செவ்வாய் 3-வது பாவத்தில் இருந்தால் தன் மனைவி விப சாரி, செவ்வாயைச் சுபர் பார்த்தால் தோஷமில்லை. தம்பி இல்லை, பண மில்லை. செவ்வாய் ராகு, அல்லது கேதுவுடன் சேர்ந்தால் வேசி சங்க மமுண்டு, பிராதுரு துவேஷி, துக்கப்படுகிறவன், அல்ப சகோதர

மூண்டு. செவ்வாய் பாபியுடன் சேர்ந்தாலும், பாபியால் பார்க்கப்பட்டாலும் பிராதுரு நாசம். செவ்வாய் உச்சத்தில், அல்லது சுவகேஷத்திரத்தில் சுபக்கிரகத்துடன் சேர்ந்திருந்தால் பிராதா தீர்க்காயுளாக இருப்பான், ஜாதகன் தீரன், பராக்கிரமன், யுத்தத்தில் சூரன். செவ்வாய் மித்திர கேஷத்திரத்தில் பாபியுடன் சேர்ந்திருந்தால் தைரியவான். (வேறு) கீர்த்திமான், பராக்கிரம முடையவன், சத்தியவான்.

(4) செவ்வாய் 4-வது பாவத்தில் இருந்தால் கிருகத்தில் மனஸ்தாபமுடையவன், 8-வது வயதில் பிதாவுக்கு அரிஷ்டம், ரோகமுள்ள மாதாவையுடையவன். செவ்வாய் சுபக்கிரகத்துடன் சேர்ந்திருந்தால் பரக்கிருகவாசி, ரோகமில்லாத சரீரத்தையுடையவன், நிலமில்லாதவன், தன தான்ய மில்லாதவன், கெட்டுப்போன பழைய வீட்டில் வசிப்பவன். செவ்வாய் உச்சத்திலோ அல்லது மித்திர கேஷத்திரத்திலோ, சுவ கேஷத்திரத்திலோ இருந்து, சுபக்கிரகம் சேர்ந்திருந்தால் வாகனம் உடையவன், நில முடையவன், தீர்க்காளுடைய தாயாரையுடையவன். செவ்வாய் நீச்சத்தில் பாபியுடன் இருந்தால் மாதுரு நாசம்; சுபக் கிரகத்துடன் இருந்தால் வாகனம் உடையவன், பந்து ஜனத்துவேஷி, சுவதேசத்தை விட்டவன், வஸ்திரம் இல்லாதவன். (வேறு) பந்துக்களில்லாதவன், தீரன், மனவிக்கு அடங்கி நடப்பவன்.

(5) செவ்வாய் 5-வதுபாவத்தில் இருந்தால் புத்திகளில்லாதவன், துஷ்ட நடத்தை யுள்ளவன், இராஜ கோபத்தை யுடையவன், 6-வது வருஷத்தில் ஆயுதத்தாலே தண்டனைஉண்டு, கெட்ட ஞானத்தையுடையவன், பொய் சொல்பவன், தீக்ஷண்ய புத்தியுடையவன். செவ்வாய் உச்சத்திலாவது, சுவகேஷத்திரத்திலாவது இருந்தால் புத்திர ஸமூர்த்தியுண்டு, அன்ன தானத்தில் பிரீதி யுடையவன், இராஜாதிகாரம் கிடைக்கும், சத்துருவினால் பீடை. செவ்வாய்ப் பாபக்கிரகத்துடன் கூடினாலும், அல்லது பாபியின் வீட்டில் இருந்தாலும் புத்திரநாசம், சித்தப்பிரம்மை முதலான ரோகத்தை யுடையவன். ஆறுவது வீட்டிற் குடையவன் பாபக்கிரகத்துடன் சேர்ந்திருந்தால் பாபியாயும், வீரனுயும், தத்து புத்திரனை யுடையவனுயும் இருப்பான். (வேறு) குரூரன், சதா திரிபவன், தைரியவான், கெட்டவன், தனவான், போகி.

(6) செவ்வாய் 6-வது பாவத்தில் இருந்தால் பிரசித்தன், காரியத்தில் சமர்த்தன், சத்துருக்களைக் கொல்லக் கூடியவன், பிள்ளையுடையவன், 27-வது வயதில் கன்னிகாவிவாகம் உடையவன், சத்துருக்ஷயம்;

செவ்வாய் பாபியால் பார்க்கப்பட்டாலும் பூர்ணபலன் உண்டு, வாத சூலரோகமுண்டு, புதனுடைய வீட்டில் இவ்விதமாய் இருந்தால் குஷ்ட ரோகமுண்டு, சுபக்கிரகத்தால் பார்க்கப்பட்டால் பரிகாரமுண்டு. (வேறு) சொத்துடையவன், சத்துருக்களைச் சம்மாரம் செய்பவன், தீர்க்க பசி யுடையவன், தனவான், பலிஷ்டன், கீர்த்திமான்.

(7) செவ்வாய் 7-வது பாவத்தில் இருந்தால் தன் மனைவிக்குப் பீடையுண்டு. செவ்வாய் பாபியுடைய வீட்டில் பாபியுடன் சேர்ந்திருந் தாலும், அல்லது சுவ க்ஷேத்திரத்தில் இருந்தாலும் களத்திர நாசம் உண்டு, சுபரால் பார்க்கப்பட்டால் பர்த்தாவானவன் உயிருடன் இருக் குங் காலத்திலேயே களத்திர நாசமுண்டு, தேசாந்திரத்தில் சஞ்சரிப்ப வன். செவ்வாய் உச்சஸ்தானத்திலாகிலும், மித்துரு க்ஷேத்திரத்திலாகி லும், சுவச்க்ஷேத்திரத்திலாகிலும் சுபக்கிரகத்துடன் சேர்ந்தாலும், பாப க்ஷேத்திரத்திலிருந்து பாபிகளால் பார்க்கப் பட்டாலும் களத்திர நாசமுண்டு, இல்லாவிடில் திருட்டுத் தனமாகவோ விபசாரமாகவோ வேறு ஒரு ஸ்திரீயின் லாபமுண்டு, துஷ்ட ஸ்திரீகளுடன் சேர்க்கை யுண்டு, பக சும்பனம் பண்ணக் கூடியவன், நான்குகால் ஜந்துவுடன் சேர்க்கையுடையவன், கள் குடிப்பவன். சனியுடன் சேர்ந்திருந்தாலும், அல்லது சனியால் பார்க்கப்பட்டாலும் சிசுன சும்பனம் பண்ணுபவன். கேதுவுடன் கூடியிருந்தால் ஸ்திரீ ருதுவாயிருக்கும்போது சம்போகம் செய்பவன். கேதுவுடன் கூடின செவ்வாயுடன் சத்துரு கிரகம் கூடினால் அநேக களத்திர நாசமுண்டு, சூரனு யில்லாதவன், அகங்காரி, ஆனால் செவ்வாய் சுபர்களால் பார்க்கப்பட்டால் இவ்விதமான தோஷங்கள் கிடையாது. (வேறு) யுத்தப் பிரியன், காம முடையவன்.

(8) செவ்வாய் 8-வது பாவத்தில் இருந்தால் நேத்திரரோகமுண்டு, அர்த்தாயுசு அதாவது பாதி ஆயுள், பிதாவுக்கு அரிஷ்டம், மூத்திர ரோகி, அல்பபுத்திரனுடையவன், வாதசூல ரோகமுடையவன், பத்தினி சுகமுடையவன். செவ்வாய் சுபக்கிரகத்துடன் சேர்ந்திருந்தால் தேகா ரோக்கியமுடையவன், தீர்க்காயுளுடையவன், பிரஜா விருத்தியுண்டு. செவ்வாய் பாப க்ஷேத்திரத்திலிருந்து பாபருடன் சேர்ந்திருந்தாலோ, அல்லது பாபரால் பார்க்கப்பட்டாலோ வாத, சூல ரோகம், அதிக மூத்திரரோகம், மத்திமாயுள், பாவாதிபதி பலிஷ்டனாயிருந்தால் பூர்ண யுளுண்டு. (வேறு) தனவான், அநேகரிடத்தில் அதிகாரமுடையவன், சாதாரணமான ஆடை தரிப்பவன்.

(9) செவ்வாய் 9-வது பாவத்தில் இருந்தால் பிதுருக்கு அரிஷ்டம், பாக்கிய மில்லாதவன். செவ்வாய் உச்ச ஸ்தானத்திலாகிலும், சுவ சேஷத்திரத்திலாகிலும் இருந்தால் குருபத்தினி கமனம் பண்ணுவான். (வேறு) கீர்த்திமான்.

(10) செவ்வாய் 10-வது பாவதில் இருந்தால் ஜலக்கட்டுடையவன். பாவாதிபதி பலிஷ்டனுயிருந்தால் தீர்காயுளுள்ள சகோதர முடையவன், விசேஷ பாக்கிய முடையவன், தியான சீலவான், குரு பக்தியுடையவன், இவ்விடத்தில் செவ்வாய் பாபியுடன் சேர்ந்திருந்தால் தான் செய்யும் காரியத்திற்கு இடையூறுகள் உள்ளவன். செவ்வாய் பாப சேஷத்திரத்தில் இருந்து சுபர்களுடன் சேர்ந்திருந்தால் தன் காரியசித்தி உடையவன், கீர்த்தி உடையவன், 18-வது வயதில் பணம் சம்பாதிக்கும் திறமை வாய்ந்தவன், சர்வ சமர்த்தன், திடகாத்திரன், திருட்டுப் புத்தியுடையவன். செவ்வாய் பாபசேஷத்திரத்தில் பாபர்களுடன் சேர்ந்திருந்தால் கெட்ட காரியம் செய்கிறவன். பாக்கியாதிபதியோடும், கர்மாதிபதியோடும் சேர்ந்திருந்தால் மஹா ராஜ்ஜியத்தில் மஹாபட்டாபிஷேக முடையவன். செவ்வாய் குருவுடன் சேர்ந்திருந்தால் யாகை கட்டி வாழும் ஐஸ்வரிய முடையவன், பூ சபுர்த்தியுடையவன். (வேறு) தனவான், வீரன், கீர்த்திமான்.

(11) செவ்வாய் 11-வது பாவத்தில் இருந்தால் அநேக வேலையை உடையவன், தனவான், குணங்களால் சிக்கிரத்தில் லாபமுடையவன். லாபாதிபதியுடன் சேர்ந்திருந்தால் இராஜ்யாதிபத்தியம் உண்டு. செவ்வாய் இரண்டு சுபர்களுடன் சேர்ந்திருந்தால் மஹா ராஜ்யாதிபத்திய யோகமுண்டு, பிராணருவின் பணத்தையுடையவன். (வேறு) வாக்கு சாதுர்யன், காம முடையவன், தனவான், வீரன்.

(12) செவ்வாய் 12-வது பாவத்தில் இருந்தால் பணம் கிடையாது, வாதபித்த தேகி. செவ்வாய் பாபியுடன் சேர்ந்திருந்தால் டம்பம் உடையவன். (வேறு) பணமில்லாதவன், விரோதிக்கப் பட்டவன்.

(4) புதன்

(1) புதன் 1-வது பாவத்தில் இருந்தால் வித்தை யுடையவன், விவாகம் முதலான நல்லொழுக்க முடையவன், அநேக தேசத்திற்கு அரசன், மந்திரவாதி, பிசாசு ஓட்டுவதில் சமர்த்தன், மிருதுபாஷி, வித்வான், பெருமையை யுடையவன், தயவுடையவன், 27-வது வயதில்

தீர்த்தயாத்திரை செய்பவன், அதிகலாபம் உடையவன், அதிகவித்தை யுடையவன். புதன் பாப சேஷத்திரத்தில் பாபியுடன் சேர்ந்திருந்தால் தேகத்தில் ரோகமுண்டு, பித்தப்பாண்டு ரோகமுண்டு. சுப சேஷத்திரத் தில் சுபருடன் கூடியிருந்தால் தேகத்தில் ஆரோக்கியம், தங்கக் காந்தி உடைய சரீரம், ஜோதிஷ சாஸ்திரம் படித்தவன், அங்க ஹீனன், நல்ல ஜனங்களைத் துவேஷிப்பவன், நேத்திர ரோகி, 17-வயதில் பிராதாக்க ளுக்குள் ஒருவருக்கொருவர் கலகம் உண்டு, வஞ்சகன். புதன் இருப் பது உச்ச சேஷத்திரம், அல்லது சுவசேஷத்திரமானால் பிராதாவுக்குச் சௌக்கியம், நல்லலோகம் செல்வான். புதன் நீச்சசேஷத்திரத்தில் பாபி யுடன் சேர்ந்தாலும், பாபியால் பார்க்கப்பட்டாலும் கெட்ட லோகம் போவான், படுக்கை சுகம்கிடையாது, துஷ்டதேவதையை உபவாசஞ் செய்கிறவன். புதன் பாபி, சனி இவர்களுடன் இருந்தால் இடது கண்ணுக்கு ஊனம், 6-வது வீட்டுக்குடையவனேடோ அல்லது, நீச் சாதிபதியுடனேடோ கூடினால் தோஷமில்லை, கெட்ட வழியில் செலவு செய்பவன், பாபங்களைப் போக்கடிக்கக்கூடியவன். புதன் சுபக்கிரகத் துடன் கூடினால் நிச்சயமாய்த் தன தான்யம் கிடைக்கும், தர்ம சிந்தை யுடையவன், அஸ்திர வித்தை தெரிந்தவன், கணிதசாஸ்திரம் தெரிந் தவன், சௌக்கிய முடையவன், தர்க்க சாஸ்திரந் தெரிந்தவன, திட காத்திரவான், (வேறு) வித்தை, தனம், நற்குணம், சுய தர்மம் இவைகளை அடைய ஆசையுடையவன்.

(2) புதன் 2-வது பாவத்தில் இருந்தால் புத்திர ஸம்பூர்த்தியுண்டு. வாச்சாலகன், வேத சாஸ்திரம் இவைகளில் கெட்டிக்காரன், நினைத்த காரியம் ஜெயம் பெருவன், தனவான், குணசாலி, 15-வது வயதில் வெகு வித்தை தெரிந்தவன், அதிக லாபம் உடையவன். புதன் பாப சேஷத்திரத்திலோ, சத்துருசேஷத்திரத்திலோ, நீச்சசேஷத்திரத்திலோ பாபியுடன் சேர்ந்திருந்தால் வித்தை இல்லை, குரூரத்தன்மை வாய்ந்த வன், தெத்துவாயன். புதன் சுபர்களுடன் கூடினாலும், அல்லது சுபர் களால் பார்க்கப்பட்டாலும் தனவான், வித்வான். புதன் குருவுடன் சேர்ந்தாலும், அல்லது குருவால் பார்க்கப்பட்டாலும் கணித சாஸ் திரம் தெரிந்தவன், ஆபத்தை விலக்கக் கூடிய புத்தியுடையவன். (வேறு) நற்குணவான், அதிக தனவான்.

(3) புதன் 3-வது பாவத்தில் இருந்தால் சகோதரமுடையவன், அதிக சௌக்கியவான், 15-வது வயதில் தன் பத்தினியால் பிள்ளை

யுடையவன், தனவான், குணவான். இந்தப் பாவாதிபதி பலிஷ்டனாக விருந்தால் பிராதா தீர்காயுளாக விருப்பான், ஜாதகன் தைரியவான். இந்த பாவாதிபதி துர்பலமாக விருந்தால் பிராதுருக்குப் பீடையுண்டு, ஜாதகன் பயங்காளி. புதன் பலிஷ்டர்களைக் கூடினால் பிராதுரு தீர்க்காயுளுடையவன். (வேறு) மாயாகர்மன், சதா திரிபவன், அதி சபலன், துக்கவான்.

(4) புதன் 4-வது பாவத்தில் இருந்தால் அஸ்த்த சாபல்யவான், தைரியவான், விசாலமான கண்களுடையவன், தாய் தந்தை சௌக்கியம், ஞானவான், சுக முடையவன், 16-வயதில் திரவிய மூலமாக அதிக லாபமுண்டு. புதன், குரு, அல்லது சுக்கிரன் இவர்களுடன் கூடினால் அனேக வாகன முடையவன். இந்த பாவாதிபதி பலிஷ்டனாக விருந்தால் பல்லக்கு உண்டு. புதனுடன் ராகு, கேது, அல்லது சனி கூடினால் வாகன அரிஷ்டம் உண்டு, க்ஷேத்திர சுகமில்லாதவன், பந்து குலதுவேஷி, கபடன். (வேறு) தனவான், வித்வான், பந்து மித்திரர் இல்லாதவன்.

(5) புதன் 5-வது பாவத்தில் இருந்தால் மாமனுக்குக் கெண்டம், மாதுரு சௌக்கியமுண்டு, புத்திரனுக்கு இடையூறு, புத்திமான், இனிமையாகப் பேசுகிறவன். அந்த பாவாதிபதி பாபியுடன் சேர்ந்தாலும், பலவீனனாக விருந்தாலும் புத்திர நாசமுண்டு, புத்திரனில்லாதவன, தத்து புத்திரப் பிராப்த்தி யுடையவன், பாப கர்மம் செய்பவன், மந்திரவாதி. (வேறு) வித்தை, தனம், கீர்த்தி, வல்லமை, மனவி, மக்கள் உடையவன், வேதம் படித்தவன்.

(6) புதன் 6-வது பாவத்தில் இருந்தால் இராஜ பூஜ்ஜியன், வித்தைக்கு இடையூறு உடையவன், டம்ப முடையவன், விவாதத்தில் சூரன், 30-வது வயதில் அநேக ராஜாக்களுடன் சிநேகித முண்டு, பத்திரம் முதலானது எழுதக்கூடியவன். புதன் செவ்வாய் வீட்டில் இருந்தால் நீலகுஷ்டமுண்டு. புதன், சனி, இராகு, அல்லதுகேதுவுடன் கூடினால் வாதசூல ரோகமுண்டு, ஞாதி, சத்துரு கலகமுண்டு. இந்த பாவாதிபதி பலிஷ்டனாக விருந்தால் ஞாதி பிரபலனாய் இருப்பான், சத்துரு, நீச்ச க்ஷேத்திரத்திலிருந்தால் ஞாதி விருத்தி யடையமாட்டான் (வேறு) பந்துக்களுக்கு உபகாரஞ்செய்யான், கலகப் பிரியன், கோரிக்கை யுடையவன்.

(7) புதன் 7-வது பாவத்தில் இருந்தால் தாயாருக்குச்சௌக்யமுண்டு, ஜாதகன் குதிரை ஏறுவான், தர்மஞ்செய்பவன். உதாரபுத்தி

உடையவன், பிரசித்தமான கீர்த்தி யுடையவன், இராஜ பூஜ்ஜியன். இந்த பாவத்தில் புதன் சுபக் கிரகத்துடன் சம்மந்தப் பட்டிருந்தால் 24-வது வயதில் பல்லக்கு ஏறுபவன், நல்ல புத்தி யுள்ள களத்திர முடையவன். கெட்ட வஸ்துவைச் சாப்பிடாதவன். புதன் இருக்கும் பாவாதிபதி பலிஷ்டனுகயிருந்தால் ஒரே பத்தினியுடையவன், இந்த பாவாதிபதி தூர்பலனுகவோ, அல்லது பாபியாகவோ, அல்லது பாபியுடன் சேர்ந்தோ, அல்லது பாபருடைய கேஷத்திரத்திலோ இருந்தால் களத்திர நாசமுண்டு, குஷ்ட ரோகமுள்ள களத்திர முடையவன், ரூபமில்லாத களத்திர முடையவன். (வேறு) சில்ப கலாவினேதன், அங்கவீனன்,

(8) புதன் 8– பாவத்தில் இருந்தால் ஆயுளுடையவன், பகு கேஷத்திர முடையவன், ஏழு பிள்ளை யுடையவன், 25-வது வயதில் அநேக பிரதிஷ்டை சித்தியுண்டு, கீர்த்திமான். பாவாதிபதி பலிஷ்டனுக விருந்தால் பூர்ணுயு ளுடையவன்; பாவாதிபதி சத்துரு கிரகம், அல்லது நீச்ச கிரகம், அல்லது பாபக்கிரகத்துடன் கூடினுல் அல்பாயு ளுடையவன். பாவாதிபதி உச்ச சுவ கேஷத்திரங்களில் சுபர்களுடன் கூடியிருந்தால் பூர்ணுயு ளுடையவன். (வேறு) தனவான், நல்ல குண முடையவன்.

(9) புதன் 9-வது பாவத்தில் இருந்தால் அதிகப் பிரஜை யுடையவன், வேத சாஸ்திர பண்டிதன், சங்கீதப் பாடகன், தாகூஷ்ய வான், தர்ம முடையவன், பிரதாபவான், பதுலாபவான், தீர்க்காயு ளுடைய பிதாவை யுடையவன், இந்தப் பாவம் பாப கேஷத்திரமாயிருந்தாலும், புதன் பாபருடன் இருந்தாலும், பாபரால் பார்க்கப்பட்டாலும், பிதுரு நாசமுண்டு, பிதாவுக்குத் துக்கத்தைத் தரக்கூடியவன், குரு துவேஷி. பாவாதிபதி பலிஷ்டனுக விருந்தால் பிதாவுக்குத் தீர்க்காயுளுண்டு, தபஸ், தியானம் உடையவன். (வேறு) நல்ல வழியில் சம்பாதிக்கப்பட்ட தன முடையவன், சாஸ்திரவான், நல்ல ஆச்சார முடையவன்.

(10) புதன் 10-வது பாவத்தில் இருந்தால் நல்ல கர்ம சித்தி யுடையவன், தைரியவான், அநேக கீர்த்திமான், பணக்காரன், 28-வது வயதில் நேத்திர ரோக முடையவன், புதன் உச்ச சுவகேஷத்திரத்திலிருந்து குருவுடன் கூடியிருந்தால் அக்கினிஷ்டோமம் முதலிய அநேக நல்ல கர்மங்களைச் செய்பவன். புதன் சத்துரு கிரகத்துடன்

சம்மந்தப் பட்டிருந்தாலும், மூடமாய் இருந்தாலும், பாபக் கிரகத்துடன் சம்மந்தப் பட்டிருந்தாலும் கெட்ட காரியம் செய்பவன், அஞ்சார முடையவன். (வேறு) தனவான், கீர்த்திவான், எல்லா விதமான வித்தையிலும் சமர்த்தன்.

(11) புதன் 11-வது பாவத்தில் இருந்தால் அநேக மங்களம் உண்டு, அநேக விதமான வழியில் தனம் வரும். 19-வது வயதுக்கு மேல் மனைவி, பிள்ளை, தனம் உடையவன், தயவுடையவன். புதன் பாப க்ஷேத்திரத்தில் பாபியுடன் கூடினால் ஹீனன் மூலமாகத் தனத்திற்கு கெடுதி வரும். புதன் உச்ச, சுவ க்ஷேத்திரங்களில் சுபருடன் கூடினால் நல்ல மார்க்கத்தில் பணம் வரும். (வேறு) நிபுணன், தனவான், அதிக வித்தை யுடையவன்.

(12) புதன் 12-வது பாவத்தில் இருந்தால் ஞானவான், கொடையாளி. புதன் பாபியுடன் கூடினால் சஞ்சல மனதுடையவன், இராஜ துவேஷி. புதன் சுபருடன் கூடினால் தர்ம வழியில் தன விரைய முண்டு, வித்தை இல்லை. (வேறு) பந்து துவேஷி, புத்தியீனன் தரித்திரன்.

(5) குரு

(1) குரு 1-வது பாவத்தில் இருந்தால் அந்த க்ஷேத்திரம் சுவ க்ஷேத்திரமானால் வியாகரண பண்டிதன், மூன்று வேதம் தெரிந்தவன், பகு புத்திரவான், பூர்ணயுளுடையவன், சுகி, ஞானவான். அந்த க்ஷேத்திரம் உச்ச க்ஷேத்திரமானால் பூர்ணபல முடையவன், 16-வது வயதில் மஹாராஜ யோகமுண்டு. அந்த க்ஷேத்திரம் சத்துரு வீடு, நீச்ச வீடு, பாபக்கிரக வீடாய் இருந்து குரு பாபக் கிரகத்துடன் கூடியிருந்தால் நீச்ச வேலை அதாவது தாழ்ந்த வேலை செய்பவன், சஞ்சல மனதுடையவன், மத்திம ஆயுளுடையவன், புத்திரர்களில்லாதவன், தன் ஜனத்தை விட்டு விட்டவன், கர்வி, கிருதக்னன், பகுஜனத் துவேஷி, சஞ்சாரவான், பாபமூலமாய்க் கஷ்டப்படுபவன், போகானுபவம் செய்பவன். (வேறு) பூர்ணயுளுடையவன், தனவான், ரூபவான், ஞானி.

(2) குரு 2-வது பாவத்தில் இருந்தால் தனவான், புத்திமான், இஷ்டமாய்ப் பேசக்கூடியவன், 16-வது வயதில் தன தான்யங்கள் உண்டு, அதிக பிரபல்யம் வாய்ந்தவன். குரு இந்த பாவத்தில் உச்ச சுவ க்ஷேத்திரங்களிலிருந்தால் திரவிய முண்டு. அவ்விடத்தில் பாபக்

கிரகம் கூடினால் வித்தைக்கு விக்கின முண்டு, திருடனல் வஞ்சிக்கப் படுவன், கெட்ட வார்த்தை சொல்பவன், பொய் பேசுவதில் பிரிய முள்ளவன். குரு இந்த பாவத்தில் நீச்சஸ்தானத்தில் பாபியுடன் கூடி இருந்தால் கள் குடிப்பவன், பிரஷ்டன், குல நாசகன், வேறு மனைவியு டையவன், புத்திர ஹீனன். (வேறு) வாக்குச் சாதுர்யமாயும் வேக மாயும் பேசக் கூடியவன், போஜன சௌக்கிய முடையவன், கொடை யாளி, தனவான்.

(3) குரு 3-வது பாவத்தில் இருந்தால் அதிகலோபி, பிராத்துரு விருத்தியுண்டு தாக்ஷண்யவான், நினைத்தது கைகூடும், பந்துகளுக் குத் தோஷத்தைச் செய்பவன், 38-வது வயதில் யாத்திரை செய்ப வன், இந்த பாவாதிபதி பலிஷ்டனு யிருந்தால் பிராத்துரு தீர்க்காயுளு டையவன், இந்த பாவாதிபதி பாபருடன் கூடினல் ஜாதகன் பிராத் துரு நாசமுடையவன், தைரிய மில்லாதவன், புத்தி ஜாட்டிய முடைய வன், தரித்திரன். (வேறு) தரித்திரன், மனைவிக்கு அடங்கி நடப்பவன், பாபக் காரியங்கள் செய்பவன்.

(4) குரு 4- -வது பாவத்தில் இருந்தால் சுகி, க்ஷேத்திரவான், புத்திமான், பால் சமுர்த்தியாக விருக்கும், சத்துருக்களால் கொண் டாடத் தகுந்தவன், மேதாவி. இந்த பாவாதிபதி பலிஷ்டனு யிருந்து சுக்கிரன், சந்திரன் கூடி சுப வர்க்கம் அடைந்திருந்தால், நர வாகன யோக முடையவன், அதிக பூமியுடையவன், குதிரை வாகன முடை யவன், விஸ்தாரமாயுள்ள வீடு உடையவன். பாபியுடன் கூடினு லும், பாபியால் பார்க்கப் பட்டாலும் ஜாதகன் பாபி, க்ஷேத்திர ஹீனன், வாகன ஹீனன், இதராள் வீட்டில் வசிப்பவன், தாயாருக்கு நாச முண்டி, பந்து துவேஷி, (வேறு) வாக்குச் சாதுர்யமாயும், வேக மாயும் பேசுபவன், தனவான், சுகி, கீர்த்திமான், பலவான், ரூபவான், தந்திரசாலி.

(5) குரு 5- வது பாவத்தில் இருந்து 5-வது பாவாதிபதி பலி ஷ்டனு யிருந்தால், புத்தி சாதுர்யவான், விசாலமான கண்களுடைய வன், வாக்கு சாதுர்ய முள்ளவன், பிரதாப முடையவன், அன்னதா ப்னபிரியன், குலப்பிரியன், 18-வது வயதில் இராஜாங்கத்தில் சேனதி பத்திய யோகமுள்ளவன், அதிக புத்திரருடையவன். சத்துரு, நீச்ச, பாப க்ஷேத்திரத்தில் இருந்தால் புத்திர நாச முடையவன், ஏகபுத்திர வான், தர்மவான், இராஜ துவாரத்தில் இராஜ மூலமாய் பணச்செலவு,

ராகு, கேது உடன் கூடினால் சர்ப சாபத்தால் புத்திர நாச முண்டு, சுபர் பார்த்தால் இதற்குப் பரிகாரமாகும். (வேறு) மந்திரி, நற்குணவான், தனவான், அற்ப புத்திரவான்.

(6) குரு 6-வது பாவத்தில் இருந்தால் சத்துரு க்ஷயம், ஞாதி விருத்தி, ரண சரீரம் உண்டு. குருவுடன் சுபர் கூடினால் ரோகமில்லை, குரு பாப க்ஷேத்திரத்தில் இருந்து பாபருடன் கூடினால் வாத சைத்ய ரோகமுண்டு, குரு, சனி வீட்டில் ராகுவுடன் கூடினால் மகா ரோக முண்டு. (வேறு) காம முடையவன், சத்துருக்களை ஜெயிப்பவன்.

(7) குரு 7-வது பாவத்தில் இருந்தால் விக்தைக்கும் தனத்திற்கும் ஈசன், வெகு லாப முடையவன், அதிக சிந்தை யுடையவன், பதிவிதையாயும் பக்தியுடையதாயுமுள்ள பத்தினி யுடையவன், இந்தப் பாவாதிபதி பலவீனனாகி ராகு, கேது, சனி அல்லது செவ்வாயுடன் கூடினாலும், அல்லது பாபரால் பார்க்கப் பட்டாலும் களத்திரம் மரண மடையும். இந்தப் பாவாதிபதி சுபருடன் சேர்ந்து உச்ச சுவக்ஷேத்திரத்திலிருந்தால் ஏகதாரவான், களத்திரத்தின் வீட்டிலிருந்து அதிக பணலாபமுண்டு, சுகி, 34-வது வயதில் பிரதிஷ்டை உண்டு. (வேறு) தீரவான், நேசமுள்ள களத்திர முடையவன், பிதுரு துவேஷி, குரு துவேஷி.

(8) குரு 8-வது பாவத்தில் இருந்தால் அற்பாயு சுடையவன், ஈனத் தொழிலைச் செய்பவன். குரு பாபியுடன் கூடினால் ஜாதிப் பிரஷ்டன். இந்தப் பாவாதிபதி சுபருடன்கூடி எட்டில் இருந்தால் தீர்க்காயுளுடையவன், பாவாதிபதி பலவீனனானால் அற்பாயுளுடையவன், பாவாதியுடன் பாபக் கிரகம் கூடினால் 17-வது வயதுக்குமேல் விதவை சங்கம முண்டு. பாவாதிபதி உச்ச, சுவ க்ஷேத்திரத்தில் இருந்தால் தீர்க்காயுளுடையவன், பலவீனன், ரோகமில்லாதவன், யோகவான், வித்வான், வேத சாஸ்திரங்களில் கெட்டிக்காரன் (வேறு) மேதாவி, நீச்ச கர்மி, தீர்க்காயுளுடையவன்.

(9) குரு 9-வது பாவத்தில் இருந்தால் தர்மிஷ்டன், தபசி. சாது, தனவான், 35 யாகம் செய்பவன், தீர்க்காயுளுடைய பிதுரையுடையவன், நல்ல கர்மங்கள் சித்தியாகும், அநேக பிரதிஷ்டை யுடையவன், அநேக ஜனங்களைக் காப்பாற்றுபவன். (வேறு) ஞானி, தர்மவான், அரசர்களிடத்தில் மந்திரியாயிருப்பான்.

(10) குரு 10-வது பாவத்தில் இருந்தால் தர்மவான், நல்ல காரியங்களைச் செய்பவன், கீதாபாடகன், யோக்கியதையுடையவன், வெகு கீர்த்திமான். அநேக ஜனப்பூஜ்யன். இந்தப் பாவாதிபதி வலுத்திருந்தால் அநேக யாகங்களைச் செய்பவன். பாவாதிபதி பாபியுடன் சேர்ந்தும் அல்லது பாப க்ஷேத்திரத்திலிருந்தாலும் கர்ம விக்னமுண்டு, கெட்டகாரியஞ் செய்பவன், யாத்திரையில் லாபமில்லாதவன். (வேறு) காரிய சித்தியுடையவன், சாது, சுயதர்மி, தனவான், ஞானவான்.

(11) குரு 11-வது பாவத்தில் இருந்தால் வித்வான், தனவான், வெகு லாபவான், 32-வது வயதில் குதிரை வாகன முடையவன், பிரதிஷ்டையுண்டு. குரு சுபருடனும் பாபருடனும் கூடினால் யானை லாபமுண்டு, பாக்கிய விருத்தியுண்டு. குரு சந்திரனுடன் கூடினால் புதையல் கிடைக்கும். (வேறு) புத்திமான், கீர்த்திமான், தனவான்.

(12) குரு 12-வது பாவத்தில் இருந்தால் தனமில்லாதவன், அற்ப புத்திரனுடையவன், கணிதசாஸ்திரம் தெரிந்தவன், சம்போகி, கிரந்தி மேகம் உடையவன், அயோக்கியன். குரு உச்ச, சுவக்ஷேத்திரங்களில் சுபக்கிரகத்துடன் கூடினால் சுவர்கலோகப் பிராப்தியுண்டு. குரு பாபக்கிரகத்துடன் கூடினால் பாப லோகப் பிராப்த்தியுண்டு. தர்மம் மூலமாய்ப் பணம் விரையமுண்டு, பிராம்மண ஸ்திரீ சம்போகி, கர்பிணி சங்கமம் செய்பவன். (வேறு) கெட்ட எண்ண முடையவன், மதத் துவேஷி, சபலன், சஞ்சாரஞ் செய்பவன்.

(6) சுக்கிரன்

(1) சுக்கிரன் 1-வது பாவத்தில் இருந்தால் கணித சாஸ்திரந் தெரிந்தவன், தீர்க்காயுளுடையவன், மனைவியிடத்தில் ஆசையுள்ளவன் வஸ்திராலங்காரப் பிரியன், ரூபலாவண்யங்களில் பிரீதியுடையவன். குணவான், ஸ்திரீகளிடத்தில் பிரீதியுடையவன், தனவான், வித்வான். சுக்கிரன் சுபருடன் கூடினால் அநேகபூஷண முடையவன், சுவர்ண காந்தியுடைய சரீரவான். சுக்கிரனைப் பாபர்கள் கூடினாலும், பார்த்தாலும், அல்லது சுக்கிரன் நீச்சமாயிருந்தாலும், அஸ்தங்கத மடைந்திருந்தாலும் திருடன் வஞ்ச முள்ளவன், வாத சிலேஷ்ம ரோகமுடையவன். இந்தப் பாவாதிபதி ராகுவுடன் கூடினால் பிருஹத் பீஜம் (அதாவது புட்டை யுடையவன்). வாகனாதி சுபனுயிருந்து சுகிபனுடன் கூடினால் யானை கட்டி வாழக்கூடிய ஐஸ்வரியன். சுக்கிரன் சுவக்ஷேத்திரத்தில்

இருந்தால் மஹாராஜ யோகவான். எட்டுக்குடையவனுகிலும், பன்னிரண்டிற்குடையவனுகிலும் எட்டிலிருந்து சுக்கிரன் தூர்பலனுல் இரண்டு மனைவியுடையவன். (வேறு) காமமுடையவன், சரீரகாந்தியுடையவன், மனைவி மக்களுடையவன், வித்வான்.

(2) சுக்கிரன் 2-வது பாவத்தில் இருந்தால் தனவான், குடும்பி, நல்லபோஜன முடையவன், வினயமுடையவன், நேத்திரவிலாஸி, சுமுகன், தயாளவான், பரோபகாரி, 32-வயதில் உத்தமஸ்திரீ லாபமுடையவன். இந்தப் பாவாதிபதி தூர்பலனுப்க் கெட்ட ஸ்தானத்தில் இருந்தால் கண்கள் கெட்டுவிடும். இந்தப்பாவாதிபன் சந்திரனுடன் கூடினுல் இரவில் கண் தெரியாது, பத்தினி ஹீனன் ,நேத்திர ரோகி, தனநாச முண்டு. (வேறு) வித்தையுடையவன், காமகலாவிலாசன், தனவான்.

(3) சுக்கிரன் 3-வது பாவத்தில் இருந்தால் அதிக லோபி, தாக்ஷண்யமுடையவன், முதலில் சகோதர விருத்தியுண்டு, நினைத்தது கூடிவரும், கடைசியில் சகோதரமில்லாதவன், பிராதாவிடத்தில் ஆசக்தியுடையவன், பணத்தையும், சுகத்தையும் அனுபவிக்குந் தன்மையுடைவன். இந்தப் பாவாதிபதி பலிஷ்டனுலும், அல்லது உச்சமானுலும் அல்லது சுவக்ஷேத்திரத்திலிருந்தாலும் சகோதரவிருத்தியுண்டு. இந்தப் பாவாதிபதி கெட்டஸ்தானததில் இருந்தாலும், பாபியுடன் கூடினுலும் பிராதுரு நாசமுண்டு. (வேறு) சோகமுடையவன், ரோகமுடையவன், பயங்காளி, துன்மார்க்கன், மனைவிக்கு அடங்கி நடப்பவன். இந்தச்சுக்கிரன் சூரியனுக்கு மூந்திசெல்லுமானல் (அதாவது சூரியனுடைய ஸ்புடத்தைவிட சுக்கிரனுடைய ஸ்புடம் அதிகமாய் இருந்தால்) நன்மையைத்தரும்.

(4) சுக்கிரன் 4-வது பாவத்தில் இருந்தால் மங்களமுடையவன் புத்திமான், பிராதுரு சௌக்கியமுண்டு, சுகி, பொருமையுடையவன், 30-வது வயதில் அஸ்வ வாகன பிராப்தியுடையவன், பால்ஸமூர்த்தியாய் உண்டு. இந்தப் பாவாதிபதி பலிஷ்டனுல் குதிரை, பல்லக்கு, தங்கம், சதுரங்க சைன்யம் இவைகள் கிடைக்கும். இந்தப் பாவாதிபதி பாபியுடன் கூடினுலும், பாபர் வீட்டிலிருந்தாலும், சத்துரு வீட்டிலிருந்தாலும், நீச்ச ஸ்தானத்திலிருந்தாலும், பலவீனனுயிருந்தாலும் வாகனமில்லை, க்ஷேத்திரங்களில்லை, மாதுரு கிலேசவான், களத்திரம் மரணமடையும். (வேறு) மனைவிக்கு அடங்கி நடப்பவன், சுகவான், தனவான், புத்திமான், வித்வான், வாச்சாலகன்.

(5) சுக்கிரன் 5-வது பாவத்தில் இருந்தால் புத்திமான், மந்திரி, சேனாதிபதி, மாதுருவால் அதிக அதிர்ஷ்ட முடையவன், யௌவனகாலத்தில் மனைவி, குழந்தைகள் உடையவன், இராஜ சன்மான முடையவன். நல்லஞானமுடையவன், பிரசன்னமான ஸ்திரீயுடையவன். சுக்கிரன் பாபியுடன் கூடினாலும், பாபர் வீட்டிலாகிலும், சத்துரு வீட்டிலாகிலும், நீச்ச சுக்ஷேத்திரத்திலாகிலும் இருந்தாலும், அல்லது பலஹீனமாயிருந்தாலும் புத்தி ஜாட்டிய முடையவன், புத்திரநாசமுடையவன். சுக்கிரன் சுபருடன் கூடிபிருந்தால் புத்திமான், தனவான், புத்திரருடையவன், வாகனயோகவான். (வேறு) சத்புத்ரவான், நல்ல மித்திரருடையவன், தனவான், அதி ரூபசாலி, சேனாதிபதி, அஸ்வாதிபதி.

(6) சுக்கிரன் 6-வது பாவத்தில் இருந்தால் ஞாதிகளும், பிரஜைகளுமுடையவன், சத்துரு நாசமுண்டு. புத்திரபௌத்திரவான், அபாத்திர விசையஞ் செய்பவன், மாயாவாதி, ரோகவான். இந்த பாவாதிபதி பலிஷ்டனுக விருந்தால் சத்துரு விருத்தி, ஞாதி விருத்தி. இந்த பாவாதிபதி சத்துரு, பாபர் இவர்களுடன் கூடினாலும், நீச்சஸ்தானத்திலிருந்தாலும், கெட்ட விடத்திலிருந்தாலும் சத்துரு நாசம், ஞாதி நாசம்உண்டு. (வேறு) சோகமுடையவன், அபவாதமுடையவன்.

(7) சுக்கிரன் 7-வது பாவத்தில் இருந்தால் அதிக காமமுடையவன், முகசும்பனஞ் செய்பவன், பணக்காரன், அயல் மனைவியை விரும்புபவன், வாகனவான், சகலகாரிய நிபுணன், ஸ்திரீலுவேஷி, பிரதான ஜன பந்துடையவன், நல்ல களத்திரமுடையவன். சுக்கிரன் பாபியுடன் சேர்ந்தாலும், சத்துரு சுக்ஷேத்திரத்திலாகிலும், நீச்சசுக்ஷேத்திரத்திலாகிலும் இருந்தால் களத்திர நாசமுண்டு, இரண்டு விவாகமுண்டு. அதிக பாபியுடன் சேர்ந்தால் அநேக களத்திர ஹீனன், புத்திரஹீனன், சுக்கிரன் சுபருடன் கூடினாலும், உச்ச ஸ்தானத்திலிருந்தாலும், சுபஸ்தானத்திலிருந்தாலும் களத்திர மூலமாய் அதிக தனம் கிடைக்கும், வித்வான், களத்திர மூலமாய் வெகு யோகவான், ஸ்திரீ கோஷ்டியுடையவன். (வேறு) வேசி கமனன், ஸ்திரீ ஜன வல்லபன், அங்கஹீனமுடையவன்.

(8) சுக்கிரன் 8-வது பாவத்தில் இருந்தால் சுகி, நாலாவது வயதில் தாயாருக்குக் கெண்டமுண்டு. அர்தாயுளுடையவன், ரோகி, ஹித முடைய தாரத்தை யுடையவன், அசந்துஷ்டன். சுக்கிரன் அவ்விடத்

தில் சுபனுடன் கூடினலும், சுபஸ்தானத்திலிருந்தாலும் பூர்ணயுஷுடையவன். சுக்கிரன் அவ்விடத்தில் பாபியுடன் கூடினல் அற்பாயுசுடையவன். (வேறு) தீர்க்காயுளுடையவன், சர்வ சௌக்கியமுடையவன், பலவான், தனவான்.

(9) சுக்கிரன் 9-வது பாவத்தில் இருந்தால் தர்மிஷ்டன், தபஸி, அநுஷ்டானஞ் செய்பவன், பாதத்தில் அதிக லக்ஷணமுடையவன், போகி, பிள்ளை, பெண்டாட்டி உடையவன், தீர்க்காயுசான பிதாவை உடையவன். இவ்விடத்தில் சுக்கிரன் பாபியுடன் கூடினல் பிதாவுக்கு அரிஷ்டமுண்டு. இவ்விடத்தில் சுக்கிரன் பாபியுடன் கூடினலும், பாப க்ஷேத்திரத்திலிருந்தாலும், சத்துரு வீட்டிலிருந்தாலும், நீச்ச வீட்டிலிருந்தாலும் தனஹானியுண்டு, குருதார கமனஞ் செய்பவன். இவ்விடத்தில் சுக்கிரன் சுபனுடன் கூடினல் பாக்கிய விருத்தியுடையவன், மஹாராஜ யோகமுடையவன், நான்கு, ஏழுக்குடையவருடன் கூடினல் மஹா பாக்கியவான், குதிரை வாகனம், பல்லக்கு வாகனம் உடையவன், வஸ்திராலங்காரப் பிரியன். (வேறு) வித்வான், தனவான், களத்திர புத்திரவான்.

(10) சுக்கிரன் 10-வது பாவத்தில் இருந்தால் வெகுபிரதாபவான், நினைத்தகாரியம் கைகூடும், சுபகர்மம்செய்பவன், அநேகவாகனமுடையவன். இவ்விடத்தில் சுக்கிரன் பாபருடன் கூடினல் கர்மவிக்கினமுடையவன். இவ்விடத்தில் சுக்கிரன், குரு, அல்லது புதன், அல்லது சந்திரனுடன் கூடினல் அநேக வாகனம் ஏறுகிறவன், அநேக யாகம் சித்தியாகும், லோகம் பரவின கீர்த்தியுடையவன், அநேக ராஜயோகமுடையவன், வெகு பாக்கியவான், வாச்சாலகன். (வேறு) தன் நிலத்தை பயிரிடும் விவசாயி மூலமாகிலும், அல்லது ஸ்திரீ மூலமாகிலும் வரும், பலசாலி.

(11) சுக்கிரன் 11-வது பாவத்தில் இருந்தால் வித்வான், பகு தனவான், பூமி லாப முடையவன், தயவுடையவன். இவ்விடத்தில் சுக்கிரன் சுபருடன் கூடினல் அநேக வாகன யோகமுண்டு, சுக்கிரன் இவ்விடத்தில் பாபியுடன் கூடினல் பாப மூலமாய்த்தனம் சேரும், சுபனுடன் கூடினல் சுப மூலமாய்த் தனம் சேரும். நீச்ச ஸ்தானத்திலிருந்தாலும், பாப ஸ்தானத்திலிருந்தாலும், எட்டுக்குடையவனுடன் கூடினலும் யோகஹீனன், லாபஹீனன். (வேறு) சுகி, பரதாரகமனன், தனவான், சதாதிரிபவன்.

(12) சுக்கிரன் 12-வது பாவத்தில் இருந்தால் அதிக தரித்திரன். சுக்கிரன் பாபியுடன் கூடினால் லோபி. சுக்கிரன் சுபருடன் கூடினால், வெகு தனமுண்டு, படுக்கை கட்டில் சௌக்கியமுண்டு, சுபலோகப் பிராத்தியுண்டு. சுக்கிரன் பாபருடன் கூடினால் நரகப்பிராப்தியுண்டு. (வேறு) பந்துஹீனன், ஸ்திரீலோலன், தரித்திரன்.

(7) சனி

(1) சனி 1-வது பாவத்தில் இருந்தால் வாதபித்த தேகி. சனி உச்சனால் பட்டணத்திற்கும் கிராமத்திற்கும் அதிகாரி, தனதான்ய ஸமூர்த்தியுண்டு. சனி சுவக்ஷேத்திரத்தில் இருந்தால் பிதுரு தனவான். நாலு, ஒன்பது, பத்துக்குடையவன் கூடியிருந்தால் வெகு பாக்கியமுண்டு, மஹாராஜ யோகமுண்டு. சனி சந்திரனால் பார்க்கப்பட்டால் பிச்சைக்காரன், சந்தியாளி, ஆனால் சுபரால் பார்க்கப்பட்டால் இதற்கு நிவர்த்தியுண்டு. (வேறு) தூர்நாகி யுடையவன், தீர்க்கமூலரோகி, அங்க ஹீனன். சனி உச்சனால் அரசனுக்குச் சமானமானவன், நல்ல குண முடையவன், பூர்ணயுசுடையவன்.

(2) சனி 2-வது பாவத்தில் இருந்தால் திரவிய மில்லாதவன், இரண்டு தாரமுடையவன். சனி பாபியுடன் சேர்ந்தால் பெண் பிச்சைக் காரர்களுக்கு அதிபதி. அற்ப பூமியுடையவன், ரோகி. (வேறு) பொய் யன், ஜன அபராதி, தரித்திரன், கபடன்.

(3) சனி 3-வது பாவத்தில் இருந்தால் பிராதருக்கு ஹானி, சந் தோஷமில்லாதவன், கெட்ட நடத்தையுடையவன். இந்தப் பாவத்தில் சனி உச்சஸ்தானத்தில் அல்லது சுவக்ஷேத்திரத்தில் இருந்தால் பிரா தருவிருத்தியுண்டு, சனியுடன் இவ்விடத்தில் பாபிசேர்ந்தால் பிராதரு துவேஷி. (வேறு) மிதமாகத்தின்பவன், தனவான், சீலவான், நல்ல வம்ச குணவான்.

(4) சனி 4-வது பாவத்தில் இருந்தால் மாதருஹீனன், இரண்டு தாயுடையவன், சௌக்கிய மில்லாதவன், பண மில்லாதவன், சனி இருக்கும் வீடு உச்ச, சுவக்ஷேத்திரமானால் இந்த தோஷமில்லை, குதிரை பல்லக்கு உண்டு. இச்சனி லக்கினாதிபதியானால் மாதருக்குத் தீர்க்காயு ளுண்டு, சௌக்கியமுடையவன். இச்சனி எட்டுக்குடையவனானால் மாதரு ஹரிஷ்டமுண்டு, சுகத்திற்கு ஹானியுண்டு. (வேறு) ஆச்சார ஹீனன், கபடன், மாதருக்குத் துன்பம் விளைவிப்பவன்.

(5) சனி 5-வது பாவத்தில் இருந்தால் புத்திர ஹீனன், அதிக தரித்திரன், கெட்ட நடத்தை யுடையவன், தத்து பிள்ளையுடையவன். சனி சுவக்ஷேத்திரத்திலிருந்தால் ஸ்திரீபிரஜையுண்டு. சனி குருவால் பார்க்கப்பட்டால் இரண்டு மனைவியுடையவன், முதல் தாரத்திற்குப் பிள்ளை யில்லை, இரண்டாந் தாரத்திற்குப் பிள்ளையுண்டு. சனி பலிஷ்டனுனல் அநேக ஸ்திரீகளுடையவன். (வேறு) சபலன், தர்மி, சத்துருக்களைஜெயிப்பவன், தீர்க்காயுளுடையவன், சுகமில்லாதவன்.

(6) சனி 6-வது பாவத்தில் அற்பஞாதியுடையவன், சத்துருக்ஷயமுண்டு, தனதான்ய ஸமூர்த்தியுண்டு. சனி செவ்வாயுடன் கூடினால் தேசாந்திர சஞ்சாரி, அல்ப ராஜ யோகமுடையவன், பங்கயோகத்தால் சில விடத்தில் சௌக்கியமுண்டு, சில விடத்தில் யோகபங்கமுண்டு. சனி எட்டுக்குடையவனுனல் அரிஷ்டமுண்டு, வாத ரோகமுண்டு, சூர, விரண தேகி. (வேறு) அதிகமாய்ச் சாப்பிடுபவன், எதிரிக்குப் பயந்தவன், காமமுடையவன், தனவான்.

(7) சனி 7-வது பாவத்தில் இருந்தால் அசுத்த சரீரமுடையவன், மெலிந்த களத்திரமுண்டு வேசிசம்போகவான், அதிகதுக்கி. சனி இந்த பாவத்தில் உச்ச சுவக்ஷேத்திரத்திலிருந்தால் அநேகஸ்திரீ சம்போக முடையவன், கேதுவுடன் கூடினால் ராஜஸ்வலா ஸ்திரீ சம்போகமுடையவன், செவ்வாயுடன் கூடினால் சிசுனசும்பி, சுக்கிரனுடன் கூடினால் பகசும்பி, ஜாதிப் பிரஷ்டமான பிராமண பரஸ்திரீ சம்போகி. (வேறு) தரித்திரன், பாரமான சுமையைத்தூக்குபவன்.

(8) சனி 8-வது பாவத்தில் இருந்தால முக்காலாயுசுடையவன், தரித்திரன், சூத்திர ஸ்திரீலோலன், சேகவன். சனி உச்ச சுவக்ஷேத்திரத்திலிருந்தால் தீர்க்காயுளுடையவன். இந்தப் பாவாதிபதி சத்துரு நீச்ச ஸ்தானத்திலிருந்தால் அற்பாயுசுடையவன், கஷ்டபபட்டு அன்னத்தைப் புசிப்பவன். (வேறு) சூரன், பராக்கிரமன், கடைசியில் பணவீனனுவன், தரித்திரனுவான்.

(9) சனி 9-வது பாவத்தில் இருந்தால் ஜாதிப்பிரஷ்டன், ஜீர்ணோத்தரம் பண்ணுகிறவன், 39-வது வயதில் கோயில், குளம் கட்டுகிறவன். சனி உச்ச ஸ்சுவக்ஷேத்திரத்திலிருந்தால் தீர்க்காயுளான பிதாவுடையவன், சனியுடன் பாபிகூடி சனி தூர்பலனுயிருந்தால் பிதாவுக்கு அரிஷ்டமுண்டு. (வேறு) ரணகளத்தில் கியாதியுடையவன், தாரமில்லாதவன், தனவான்.

(10) சனி 10-வது பாவத்தில் இருந்தால் இருபத்தைந்தாவது வயதில் கங்கா ஸ்நானம் செய்பவன், அதிக லோபி, பித்த சரீரன். சனியுடன் பாபி சம்மந்தப்பட்டால் காரிய இடைஞ்சலுண்டு, சுபன் கூடினால் காரிய சித்தி யுண்டு. (வேறு) தண்டனை கர்த்தா, மானி, தனவான், குலசிரேஷ்டன், சூரன்.

(11) சனி 11-வது பாவத்தில் இருந்தால் அதிக தனவான், பூமி லாபமுடையவன், இராஜ பூஜ்யன். சனி உச்ச சுவக்ஷேத்திரத்திலிருந் தால் வித்வான், மஹாபாக்கிய யோகவான், வெகுதனவான், வாகன யோகவான். (வேறு) போகி, பூபதி, இராஜாங்க உத்தியோகத்தில் அதிக தனம் சம்பாதிப்பவன்.

(12) சனி 12-வது பாவத்தில் இருந்தால் ஜாதிப்பிரஷ்டன், உடைந்த அங்கமுடையவன். பாபி சேர்ந்தால் கண்ணுக்கு ஹானி, சுபன் சேர்ந்தால் சுகி, நல்ல கண்ணுடையவன், புண்ணியலோகம் கிடைக்கும், பாபியுடன் சேர்ந்தால் நரகலோக பிராப்தியுண்டு, கெட்ட வழியில் விரையஞ் செய்பவன், தனமில்லாதவன். (வேறு) மந்த புத்தி யுடையவன், தரித்திரன், கபடன்.

(8) இராகு

(1) இராகு 1-வது பாவத்தில் இருந்தால் கெற்பத்தில் இறந்த பிள்ளை பிறக்கும். இந்த இராகு இருக்கும் ராசி மேஷம் ரிஷபம் கடக மானால் வெகு போகி, இராகு பாபர் வீட்டிலிருந்து சுபரால் பார்க்கப் பட்டால் முகத்தில் அடையாள முள்ளவன். (வேறு) குரூரன், தயா தர்ம மில்லாதவன், சீல மில்லாதவன். ரோக முடையவன், சுபர் பார்த் தால் ராஜ சமான போகி. இராகு சிம்மத்திலிருந்தால் இராஜ போக வான், சம்பத்துடையவன்.

(2) இராகு 2-வது பாவத்தில் இருந்தால் பணமில்லாதவன், தேகத்தில் வியாதி யுடையவன், புத்திர சோகமுடையவன், கறுத்த தேகி. இராகுவுடன் பாபி சேர்ந்தால் இரண்டு களத்திர முடையவன், சுபருடன் சேர்ந்தால் முகவாய்க் கட்டையில் அடையாள முடை யவன். (வேறு) சண்டை சச்சரவு செய்பவன்.

(3) இராகு 3-வது பாவத்தில் இருந்தால் எள்ளு, கொள்ளு முதலான தான்யம் ஸமூர்த்தியாயுண்டு, சுபனுடன் கூடினால் கழுத்தில் மச்சமுண்டு. (வேறு) தைரியமுடையவன், தனவான்.

(4) இராகு 4-வது பாவத்தில் இருந்தால் அதிக பூஷண முடையவன், இரண்டு பாரியாளுடையவன், சேவகன், மாதருக்கு கிலேச முண்டு, சுபர் கூடினாலும், பார்த்தாலும் மாதருக்கு தோஷமில்லை. (வேறு) மஹிஷிகளையும், வேசிகளையும் அந்தப் புரத்தில் வைத்திருப்பவன்.

(5) இராகு 5-வது பாவத்தில் இருந்தால் சர்ப சாபத்தால் புத்திர நாசமுண்டு, நாகப்பிரதிஷ்டையால் புத்திரனுண்டு, தெத்துவாயன், துர்மார்க்கன். இராஜாக்களுடைய கோபம அடையக் கூடியவன், துஷ்டகிராமத்தில் வசிப்பவன். (வேறு)பயங்காளி, தயவு உடையவன், தரித்திரன்.

(6) இராகு 6-வது பாவத்தில் இருந்தால் தீரன், அதிக சுகி. இராகுவுடன் சந்திரன் கூடினால் இராஜ ஸ்திரீ சம்போகி, தனமில்லாதவன், திருடன். (வேறு) நல்ல குலத்திலுதித்தவன், எதிரியை ஜெயிப்பவன், தீர்க்காயுளுடையவன், சுகி.

(7) இராகு 7-வது பவத்தில் இருந்தால் இரண்டு தாரமுடையவன், முதல் தாரம் நாசமுண்டு, இரண்டாந்தாரத்திற்குக் குன்ம வியாதி உண்டு, பாபியுடன் கூடினால் இது நிஜமாகவுண்டு, இராகு சுபருடன் கூடினால் இந்த தோஷம் நிவர்த்தி, ஒரு தாரந்தான். (வேறு) கர்வி, சாமார்த்தியமான சோர புருஷன், நோயாளி.

(8) இராகு 8-வது பாவத்தில் இருந்தால் அதி ரோகி, முப்பத்திரண்டு வயதுடையவன், சுபர்களுடன் கூடினால் நாற்பத்தைந்து வயது ஜீவித்திருப்பவன். இந்த பாவாதிபதி பலிஷ்டனாகவும், அல்லது சுவக்ஷேத்திரத்திலும். அல்லது உச்ச க்ஷேத்திரத்திலுமிருந்தால் அறுபதுவயதுடையவன். (வேறு) கிலேச முடைபவன், காரியத்தில் தாமச முடையவன், ரோகி.

(9) இராகு 9-வது பாவத்தில் இருந்தால் புத்திரஹீனன், சூத்திரஸ்திரீ சம்போகி, சேவகன், தர்மஹீனன். (வேறு) பிதுர் துவேஷி, தனவான், கீர்த்திமான்.

(10) இராகு 10-வது பாவத்தில் இருந்தால் விதவை சம்போக முடையவன், கெட்ட கிராமத்தில் வசிப்பவன், சுபனுடன் சேர்ந்தால் இந்த தோஷமில்லை, காவ்ய வாசனையுடையவன், தாசி சம்பிரதாயத்தில் சேர்ந்தவன். (வேறு) திருடன், துன்மார்க்கன்.

(11) இராகு 11-வது பாவத்தில் இருந்தால் புத்திர ஸ்மூர்த்தியுண்டு, தனதான்ய ஸ்மூர்த்தியுண்டு. (வேறு) செவிடன், ரணகளத்தில் கீர்த்தியுடையவன், தனவான், பண்டிதன்.

(12) இராகு 12-வது பாவத்தில் இருந்தால் அற்ப புத்திரனுடையவன், நேத்திர ரோகி, பாபி. (வேறு) சிலமில்லாதவன், சம்பத்துடையவன், அங்கஹீனன், உபகாரி.

(9) கேது

(1) கேது 1-வது பாவத்தில் இருந்தால் கெற்பத்தில் இறந்த பிள்ளைபிறக்கும். இந்த கேது இருக்கும் இராசி மேஷம், ரிஷபம், கடக மானால் பகு போகி. கேது பாபர் வீட்டிலிருந்து சுபரால் பார்க்கப் பட்டால் முகத்தில் அடையாளமுள்ளவன் (வேறு) நோயாளி, லோபி, லுப்தன், சுபர் பார்த்தால் இராஜசமான போகி. கேது மகர, கும்பத்திலிருந்தால் நிலையான தனமுடையவன், புத்திரருடையவன்.

(2) கேது 2-வது பாவத்தில் இருந்தால் பண மில்லாதவன், தேகத்தில் வியாதியுடையவன், புத்திரசோகமுடையவன், கறுத்தநேத்திர கேதுவுடன் பாபி சேர்ந்தால் இரண்டு களத்திரமுடையவன், சுபருடன் சேர்ந்தால் முகவாய்க்கட்டையில் அடையாளமுடையவன். (வேறு) ஜன விரோதி.

(3) கேது 3-வது பாவத்தில் இருந்தால் எள்ளு, கொள்ளு முதலான தான்யம் ஸ்மூர்த்தியாயுண்டு, சுபனுடன் கூடினால் கழுத்தில் மச்ச முண்டு. (வேறு) நல்ல குணமுடையவன், தனவான்.

(4) கேது 4-வது பாவத்தில் இருந்தால் அதிக பூஷணமுடையவன், இரண்டு பாரியாளுடையவன், சேகவன், மாதுருக்குக்கி லேச முண்டு. சுபர் கூடினாலும், பார்த்தாலும் மாதுருக்குத் தோஷமில்லை. (வேறு) ஜனங்களைத் துவேஷிப்பவன்.

(5) கேது 5-வது பாவத்தில் இருந்தால் சர்ப சாபத்தால் புத்திரநாசமுண்டு, நாகப்பிரதிஷ்டையால் புத்திரனுண்டு, தெத்துவாயன், துஷ்மார்க்கன் இராஜாக்களுடைய கோபம் அடையக்கூடியவன், துஷ்டகிராமத்தில் வசிப்பவன், (வேறு) கபடன், ஜலத்தைக்கண்டால் பயங்காளி, ரோகி.

(6) கேது 6-வது பாவத்தில் இருந்தால் தீரன், அதிகை, கேது வுடன் சந்திரன் கூடினால் இராஜ ஸ்திரீ சம்போகி, தனமில்லாதவன், திருடன். (வேறு) பந்துப் பிரியன், நல்ல குணபிரசித்தி யுடையவன், வித்தியா பிரசித்தியுடையவன்.

(7) கேது 7-வது பாவத்தில் இருந்தால் இரண்டு தாரமுடைய வன், முதல் தாரம் நாசமுண்டு, இரண்டாந் தாரத்திற்குக் குன்ம வியாதியுண்டு, பாபியுடன் கூடினால் இது நிஜமாகவுண்டு, கேது சுபரு டன் கூடினால் இந்த தோஷம் நிவர்த்தி, ஒரு தாரந்தான். (வேறு) கெட்ட மனவியுடையவன் அல்லது களத்திர போகமில்லாதவன் நித்திரையுடையவன், சிலபில்லாதவன், காட்டி யாய்ப் பேச முடி யாத வன், சதாதிரிபவன், மூர்க்கன்.

(8) கேது 8-வது பாவத்தில் இருந்தால் அதி ரோகி, முப்பத்தி ரண்டு வயதுடையவன், சுபர்களுடன் கூடினால் நாற்பத்தைந்து வரு ஷம் ஜீவித்திருப்பவன். இந்த பாவாதிபதி பலிஷ்டனாகவும், அல்லது, சுவ கேஷத்திரத்திலும், அல்லது உச்ச கேஷத்திரத்திலுமிருந்தால் அறுபது வயதுடையவன். (வேறு) பிரருடைய தனத்தையும், மனை வியையும் அனுபவிக்க இச்சையுடையவன், ஸ்திரீ விஷயத்தால் ரோகி, அதிகலோபி, கேதுவை சுபர்பார்த்தால் அதிகதனவான், தீர்க்காயுள் டையவன்.

(9) கேது 9-வது பாவத்தில் இருந்தால் புத்திர ஹீனன், சூத்திர ஸ்திரீ சம்போகி, சேவகன், தர்ம ஹீனன். (வேறு) கோபி, வாக்கு சாதுர்ய முடையவன், நல்ல குணமில்லாதவன், பிறரை நிந்திப்பவன், சூரன், பிதுர் த்வேஷி, அதிக டாம்பன், கர்வியாயிருக் கப் பட்டவரிடத்தில் அபிமான முடையவன்.

(10) கேது 10-வது பாவத்தில் இருந்தால் விதவை சம்போக முடையவன், கெட்ட கிராமத்தில் வசிப்பவன், சுபனுடன் சேர்ந்தால் இந்த தோஷமில்லை, காவ்ய வாசனையுடையவன், தாசி சம்பிரதாயத்தில் சேர்ந்தவன். (வேறு) புத்திசாலி, பலசாலி, சில்ப வித்தையில் கெட்டிக் காரன், ஜனங்களிடத்தில் ஆசை யுள்ளவன், ஆனால் அவர்களிடத்தில் விரோதமாக நடந்து கொள்பவன், பராக்கிரமசாலி, சதாதிரிபவன்.

(11) கேது 11-வது பாவத்தில் இருந்தால் புத்திர ஸ்மரணத்தி யுண்டு, தனதான்ய ஸ்மரணத்தியுண்டு. (வேறு) வீரன், ஜனங்

களிடத்தில் பிரியமுடையவன், ஜனபிமானி, பிரபு, அற்ப போகி, சுப கர்மங்களில் ஆசையுடையவன், நல்ல குணமுடையவன்.

(12) கேது 12-வது பாவத்தில் இருந்தால் அற்ப புத்திரனுடையவன், நேத்திர ரோகி, பாபி, (வேறு) சபலன், சிலமில்லாதவன், பிதுரார்ஜித சொத்தும், கௌரவமும் நாசமடையும்.

குறிப்பு:—இராகு கேதுக்களின் பலன்கள் (வேறு) என்று கண்டிருப்பதற்கு முன்னே யுள்ளவைகள் ஒன்றுகவே இருப்பதைக் கவனிக்கவும்.

(60) மாந்தி என்ற குளிகன் விபரம்

(1) குளிகன் 1-வது பாவத்தில் இருந்தால் மந்த புத்தியுடையவன், ரோகி, பாபியுடன் சம்பந்தப் பட்டால் வஞ்சகன், காமி, துராசாரமுடையவன்.

(2) குளிகன் 2-வது பாவத்தில் இருந்தால் சுகபோகங்களை அனுபவிக்க இச்சையுடையவன், சதா சஞ்சாரி, குரோதி, லாபமில்லாதவன், பாபியுடன் சம்மந்தப் பட்டால் தனமில்லாதவன், வித்தையில்லாதவன்.

(3) குளிகன் 3-வது பாவத்தில் இருந்தால் கர்வி, மதுபானஞ் செய்பவன், பணந் தேடுவதில் கோபத்தையும், படபடப்பையு முடையவன், ஆபத்தில்லாதவன், சகோதரர், சகோதரி இல்லாதவன்.

(4) குளிகன் 4-வது பாவத்தில் இருந்தால் தனம், வித்தை வீடு, சுகம், பந்து, க்ஷேத்திரம், வாகனம் இவைகளில்லாதவன், சதா திரிபவன்.

(5) குளிகன் 5-வது பாவத்தில் இருந்தால் சிலமில்லாதவன் சபலன், கெட்ட எண்ணமுடையவன் சுவல்ப புத்திருடையவன், அற்பாயுசுடையவன்.

(6) குளிகன் 6-வது பாவத்தில் இருந்தால் அநேக சத்துருக்களை நசிப்பவன் பூதவித்யா விற்ஞதி, சூரன்.

(7) குளிகன் 7-வது பாவத்தில் இருந்தால் கலக முண்டாக்குபவன், கெட்ட மனஸி யுடையவன், ஸ்திரீ சம்போக சுகமில்லாதவன சகல ஜனவிரோதி, மந்தபுத்தியுடையவன், நன்றியில்லாதவன்.

(8) குளிகன் 8-வது பாவத்தில் இருந்தால் பலஹீனமான கண்

களையும் விகாரமான முகத்தையு முடையவன், சுவல்ப தேகமுடை யவன்.

(9) குளிகன் 9-வது பாவத்தில் இருந்தால் கெட்ட காரியங் களைச் செய்து கொண்டே வந்து கடைசியில் குருவையும், தாய், தகப் பன்மார்களையுங் கொன்று விடுவான்.

(10) குளிகன் 10-வது பாவத்தில் இருந்தால் குலதர்ம காரியங் களை விட்டு விட்டு அசுப காரியங்களைச் செய்து கொண்டு குல ஒழி னமான காரியங்களைச் செய்பவன்.

(11) குளிகன் 11-வது பாவத்தில் இருந்தால் அதிசுகவான், தனவான், தேஜஸ் உடையவன், ரூபவான், மூத்த சகோதர ஹானி யுண்டு.

(12) குளிகன் 12-வது பாவதத்தில் இருந்தால சன்னியாசி வேஷ முடையவன், நயபாகப் பேசி பணம் சம்பாதிப்பவன்.

(61) குளிகனுடன் சூரியாதி கிரக சேர்க்கைப் பலன்.

(1) குளிகனும் சூரியனும சம்மந்தப் பட்டால் பிதுர் நாவேஷி.

(2) குளிகனும் சந்திரனும் சம்மந்தப் பட்டால் மாதுருக் குக் கிலேசமுண்டு.

(3) குளிகனும் செவ்வாயும் சம்மந்தப்பட்டால் இளைய சகோ தரமில்லாதவன்.

(4) குளிகனும் புதனும் சம்மந்தப்பட்டால் பைத்தியமுண்டு.

(5) குளிகனும் குருவும் சம்பந்தப்பட்டால மத நாவேஷி.

(6) குளிகனும் சுக்கிரனும் சம்மந்தப்பட்டால் ஸ்திரீரோகமுடை யவன், நீச்ச ஸ்திரீ லோலன்.

(7) குளிகனும் சனியும் சம்மந்தப்பட்டால் சுகபோகங்களை அனு பவிப்பவன்.

(8) குளிகனும் ராகுவும் சம்மந்தப்பட்டால விஷமிடுபவன்.

(9) குளிகனும் கேதுவும் சம்பந்தப்பட்டால் அக்கினியால் கொளுத்துபவன்.

(2) அத்தியாயம்.

(62) ஒரு ஜாதகத்தின் சில முக்கியமான பலாபலன்களை நிர்ணயிக்கும் மார்க்கம்.

(1) ஏதாவது ஒரு பலன் சொல்லவேணுமானால் அந்த பலனுக்கு உரிய காரக கிரகத்தையும் காரக பாவத்தையும் கிரககாரகத்துவம், பாவ காரகத்துவம் என்பதில் இருந்து தெரிந்து கொள்ளவேண்டியது. (உதாரணமாக ஆயுள் பலன் பார்க்க வேண்டுமானால் ஆயுளுக்கு உரிய காரக கிரகம் சனி ஆதம், (ஆயுளுக்குரிய பாவம் 1-வது பாவம், 8-வதுபாவம், 10-வது பாவம் ஆக இந்த மூன்று பாவங்களாகும்). இந்த பாவங்கள் சுபருடைய பாவங்களா, பாபருடைய பாவங்களா, இந்தபாவதிபதிகளும் காரக கிரகமாகிய கிரகமும் (இங்கு உதாரணத்தில் சனி) சுபர் இராசியில் இருக்கின்றார்களா, அல்லது பாப ராசியில் இருக்கின்றார்களா, சுபரால் பார்க்கப்பட்டிருக்கின்றார்களா அல்லது பாபரால் பார்க்கப்பட்டிருக்கின்றார்களா சுபருடன் சேர்ந்திருக்கின்றார்களா பாபர்களுடன் சேர்ந்திருக்கின்றார்களா என்று பார்க்க வேண்டும். மேலும் இந்த கிரகங்கள் உச்சராசி, மூலத்திரிகோணராசி, சுவகேஷத்திரம், அதிமித்துருராசி, மித்துருராசி, சமராசி, சத்துருராசி, அதிசத்துருராசி, நீச்சராசி இவ்விதமான ராசிகளில் எந்த ராசியிலிருக்கின்றார்களோ அதனால் அக்கிரகத்திற்கு உண்டாகும் பலத்தையும் அறிய வேண்டியது. பிறகு மேற்சொல்லிய பாவங்களின் சுபர்கள் இருக்கின்றார்களா பாபர்கள் இருக்கின்றார்களா வென்றும், மேல் சொல்லிய பாவங்களை சுபர்கள் பார்க்கின்றார்களா பாபர்கள் பார்க்கின்றார்களா என்றும் கவனிக்க வேண்டும். மேலும் மேற்சொல்லிய கிரகங்கள் லக்கின பாவத்திற்குக் கேந்திரம், திரிகோணம், ஆபோலீக்கம், பணபரம் என்று சொல்லப்பட்டவைகளில் எதில் இருக்கின்றார்களோ அதனால் அக்கிரகத்திற்கு உண்டாகும் பலத்தையும் அறிய வேண்டியது. மேலும் " துவாதச பாவபலம் ஆராய்ச்சி " என்ற 53-வது அயிட்டத்தில் இதற்கு முன்னே சொல்லி இருப்பதையும் வாசித்து அதனாலுண்டாகும் பலத்தையும் அறியவேண்டும். இவ்விதமாக அநேக அம்சங்களையும் கவனித்து ஒன்றுகச் சேர்த்து யோசித்து, யூகித்துப் பார்க்குமளவில் சுபமாகயிருந்தால் அந்தப் பலன் சுபகரமாக இருக்கும். அசுபமாக இருந்தால் அசுகரமாக இருக்கும், சுபமும், அசுபமும் கலந்திருந்தால் கலப்புக்குத்

தகுந்தவாறு சுபகரமும் அசுபகரமும் தகுந்தபடி கலந்து இருக்கும். இவ்விதமாக அனேக அம்சங்களைக் கவனித்து யுக்தியை உபயோகித்து பலாபலன் சொல்ல வேண்டி யிருப்பதால் ஜோதிடப்பலன்கள் அலைகளைச் சொல்லும் ஜோதிடரின் சாமர்த்தியத்திற்குத் தகுந்தாற் போல் பலிக்கும் என்று அறியவேண்டியது. கிரக சட்பலம், பாவபலம் இவைகளைச் சட்பல கணித ரீதியாய்க் கணிக்காமல் தோராயமாய்க் கிரகங்களின் நிலையை மனதிலேயே ஆராய்ச்சி செய்து பலாபலன் சொல்லத் துணிபவர்கள் இங்கு மேலே சொல்லியபடி ஆராய்ச்சி செய்தும் கீழே 3-வது நெப்பரில் சொல்லியபடியும் நிர்ணயித்தும், யோசித்தும், யூகித்தும் பாலாபலன் சொல்ல வேண்டும். சட்பல பாவபல கணித ரீதியாய் பலாபலன் சொல்லுபவர்கள் அடியிற் கண்டபடி சொல்ல வேண்டும்.

(1) ஆயுள்:—ஆயுளை நிர்ணயஞ்செய்ய வேண்டுமானால் பாவச்சக்கர ரீதியாய் 1-வது பாவம், 8-வது பாவம், 10-வது பாவம், சனி இவைகளின் பலத்தை முதலில் அறிய வேண்டும். பிறகு இந்த பாவங்களில் ஒவ்வொரு பாவத்தினுடைய அதிபதியாகிய பாவாதிபதியை அறிய வேண்டும். பாவாதிபதியை அறியவேண்டுமானால் பாவ ஸ்புடம் எந்த ராசியில் இருக்கின்றதோ அந்த ராசியாதிபதியையே அந்த பாவாதிபதியாக எடுத்துக்கொள்ள வேண்டும். (கவனிப்பு:—ஒருபாவத்தின் ஆரம்ப ஸ்புடத்தையாவது, முடிவஸ்புடத்தையாவது பாவஸ்புடமாக எடுத்துக் கொள்ளக்கூடாது. பாவஸ்புடம் என்பது ஜாதக கணிதத்தில் 9-வது வாக்கியத்தில் கணித்துக் காட்டியதாகும்). இங்கு சொல்லிய மூன்று பாவங்களின் பாவ பலத்தையும், சனியின் சட்பலத்தையும் ஒன்றுய்ச் சேர்த்துக் கூட்ட வேண்டும். இப்படிக் கூட்ட வரும் எண்ணிற்கு "ஆயுள் எண்" என்று பெயரிடுவோம். மேற்சொல்லிய மூன்று பாவாதிபதிகளின் பாவ பூர்ணபலம் எண்ணை (அதாவது 51-வது அயிட்டத்தில் இந்த மூன்று பாவாதிபதியாகிய கிரகங்களுக்கு எதிரில் பாவ பூர்ணபலத்திற்குக் கொடுத்துள்ள பூர்ணபல எண்ணை) யும் சனியின் சட்பல பூர்ணபலம் எண்ணை (அதாவது 47-வது அயிட்டத்தில் சனிக்குக்கொடுத்துள்ள சட்பல பூர்ணபல எண்ணை) யும் ஒன்றுய்ச் சேர்த்துக் கூட்டுவோம். இப்படிக் கூட்ட வரும் எண்ணிற்கு "பூர்ணயுள் எண்" என்று சொல்லுவோம். இந்த மூன்று பாவாதிபதிகளின் பாவ பரம எண்களையும், சனியின் சட்பல பரம எண்ணையும் ஒன்றுய்ச் சேர்த்துக்கூட்ட வருகின்ற எண்ணிற்கு "பரமஆயுள்எண்"

என்று சொல்லுவோம். ஒவ்வொரு பாவாதிபதியின் பரம எண் 2250 ஆவதாலும் சனியின் சட்பல பரம எண் 1850 ஆவதாலும் "பரம ஆயுள் எண்" எப்போதும் எந்த ஜாதகத்திற்கும் 8600 ஆகும். ஆயுள் எண் பூர்ணயுள் எண்ணைவிட சிறியதாயிருந்தால் ஆயுள் பூர்ணயுசாகிய அறுபத்தாறு வயதாக்குக் குறைந்திருக்கும். ஆயுள் எண் பூர்ணயுள் எண்ணைவிட பெரியதானால் ஆயுள் பூர்ணயசாகிய அறுபத்தாறு வயதுக்கு மேல்பட்டிருக்கும்.

(1) ஆயுள் எண் பூர்ணயுள் எண்ணைவிட குறைந்திருந்தால் ஆயுள் எண்ணை 66 ஆல் (அறுபத்தாறால்) பெருக்கி பூர்ணயுள் எண்ணால் வகுக்க வருகின்ற ஈவு வருஷமாகும். மிச்சத்தை 12-ஆல் பெருக்கி பூர்ணயுள் எண்ணால் வகுக்க வரும் ஈவு மாதமாகும். மிச்சத்தை 30 ஆல் பெருக்கி பூர்ணயுள் எண்ணால் வகுக்க வரும் ஈவு நாளாகும். மிச்சம் பூர்ணயுள் எண்ணின் பாதியும் பாதிக்கு மேற்பட்டும் இருந்தால் வந்த நாளுடன் ஒருநாள் சேர்த்துக் கொள்ளவும், இல்லாவிட்டால் மிச்சத்தைத்தள்ளிவிடவும். இப்படிவந்த வருஷம், மாதம், நாள் தான் ஜாதகனுடைய ஆயுளாகும். (2) ஆயுள் எண் பூர்ணயுள் எண்ணைவிட அதிகமாக இருந்தால் ஆயுள் எண்ணிலிருந்து பூர்ணயுள் எண்ணைக்கழிக்கவும், இப்படிக்கழிக்கவரும் எண்ணிற்கு "ஆயுள்தொகுதி எண்" என்று சொல்லுவோம். பரம ஆயுள் எண்ணாகிய 8600ல் இருந்து பூர்ணயுள் எண்ணைக் கழிக்கவருகின்ற எண்ணிற்கு ஆயுள் பகுதி எண் என்று சொல்லுவோம். ஆயுள் தொகுதி எண்ணை 54 (ஐம்பத்து நான்கால்) பெருக்கி ஆயுள் பகுதி எண்ணால் வகுக்க வருகின்ற ஈவு வருஷமாகும். மிச்சத்தை 12ஆல் பெருக்கி ஆயுள் பகுதி எண்ணால் வகுக்க வருகின்ற ஈவு மாதமாகும். மிச்சத்தை 30ஆல் பெருக்கி ஆயுள்பகுதி எண்ணால் வகுக்க வரும் ஈவு நாளாகும். இவ்விதமாக வருகின்ற வருஷம், மாதம், நாளுடன், அறுபத்தாறு வருஷத்தைக் கூட்ட வருகின்ற மொத்த வருஷம், மாதம், நாள் ஜாதகனுடைய ஆயுளாகும்.

குறிப்பு:— இது ஒரு வழியாகும், ஜாதக கணிதத்தில் கொடுத்துள்ள ஆயுர்தாய வழியும், ஒரு வழிபாகும். இவ்விரண்டு வழிகளில் ஜாதக கணிதத்தில் ஆயுர்தாய வழியில் கொடுத்துள்ளது விசேஷமாகும்

உதாரணம்:— இந்த வழியை உதாரணத்தால் விளக்கிக் காட்டுகிறேன்:— வர்த்தமான சாலிவாகன சகாப்தம் 1792-வது வருஷம், கலியுகாதி 4971-வது வருஷமாகிய சுக்கிலஷ அக்டோபர்மீ 2ந்

தேதி சனிக்கிழமை போர்பந்தர் என்ற ஊரில் காலை சூரிய உதையாதி நாழிகை 3-விநாடி 12½க்குக் கெடியாரை நீதியாய் காலை மணி 7, நிமிஷம் 13க்கு ஜனித்த ஒருவருடைய ஜாதகத்திற்கு கிரகநிலை, பாவச்சக்கிரம், கிரக சட்பலம், பாவபலம் அடியில் குறித்த பிரகாரம் இருப்பதாகப் பாவித்துக் கொண்டு கணிதம் செய்வோம்.

(1) ஜனன காலத்தில் கிரகநிலை

கிரகத்தின் பெயர்	ஸ்புடம் பாகை--கலை	கிரகத்தின் பெயர்	ஸ்புடம் பாகை—கலை
சூரியன்	167--02	சுக்கிரன்	204—32
சந்திரன்	118—10	சனி	230—27
செவ்வாய்	206—30	இராகு	102—17
புதன்	191—52	கேது	282—17
குரு	28—17	இலக்கினம்	184—48

(2)

	குரு		
	இராசிச்சக்கிரகம்		ரா சந்
கே			
	சனி	அ. சு. பு. ல.	சூ

(4)

(6)	(7)	(8) குரு	(9)
(5)	பாவச்சக்கிரம்		(10) ரா
(4) கே			(11) சந்
(3) சனி	(2) அ. சு.	(1) பு. ல.	(12) சூ

(3) பாவத்தின் பெயர்	பாவஸ்புடம் பா—கலை	பாவத்தின் பெயர்	பாவஸ்புடம் பா—கலை
1-வது பாவம்	184—48	7-வது பாவம்	4—48
2- ,,	214—58	8- ,,	34—58
3- ,,	245 - 8	9- ,,	65—8
4- ,,	275 18	10- ,,	95—18
5- ,,	305—8	11- ,,	125— 8
6- ,,	334—58	12- ,,	154—58

குறிப்பு:— இங்கு ஒரு பாவத்தின் ஸ்புடம் எந்த ராசியில் இருக்கிறதோ அந்த ராசியில் அந்த பாவத்தில் நெம்பரைப் போடவும். உதாரணமாக 9வது பாவத்தின்ஸ்புடமாகிய பாகை 65-8கலைஎன்பது மிதுனராசியில் இருப்பதால் 9-வது பாவத்தின் நெம்பராகிய 9-யை மிதுனத்தில் போடவும். பாவச் சக்கரத்தில் எந்த நெம்பருள்ள பாவத்தில் கிரகம் இருக்கிறதோ அந்த நெம்பருள்ள பாவத்திலேயே அந்த கிரகத்தைப்போடவும்.

(5) சட்பலம்

கிரகத்தின் பெயர்	சட்பலத்தின் அளவு	கிரகத்தின் பூர்ணபலம் 47-வது அயிட்டம்
சூரியன்	615	650
சந்திரன்	701	600
செவ்வாய்	620	500
புதன்	933	700
குரு	951	650
சுக்கிரன்	649	550
சனி	787	500

(6) துவாதச பாவ பலம், பாவாதிபதி

பாவத்தின் பெயர்	பாவத்தின் அளவு	பாவாதிபதி	பாவத்தின் பூர்ணபலம் 51-வது அயிட்டம்.
1-வது பாவம்	883	சுக்கிரன்	950
2- ,, ,,	781	செவ்வாய்	900
3- ,, ,,	1035	குரு	1050
4- ,, ,,	999	சனி	900
5- ,, ,,	902	சனி	900
6- ,, ,,	959	குரு	1050
7- ,, ,,	863	செவ்வாய்	900
8- ,, ,,	786	சுக்கிரன்	950
9- ,, ,,	919	புதன்	1100
10- ,, ,,	843	சந்திரன்	1000
11- ,, ,,	814	சூரியன்	1050
12- ,, ,,	989	புதன்	1100

குறிப்பு:— இங்கு பலத்தின் அளவை ஜாதக கணிதத்தில் கொடுத்திருப்பதைப் போலவே ஒரு ரூபத்தை நூறு சமபாகமாகப் பங்கிட்டு வரும் கணக்கில் கொடுக்கப் பட்டிருக்கிறது. இனிமேல் கீழே கணித்துகாட்டப் போகின்ற ஒவ்வொரு பலனின் பலத்தின் அளவு அந்த பலனின் பூர்ண பலத்தைவிட அதிகமானால் அந்தப் பலன் பூர்ணமான தெனறும், பூர்ண பலத்தின் பாதிக்கு மேற்பட்டு இருந்தால் சமமானது என்றும், பாதிக்குக் குறைந்திருந்தால் அதமமானது என்றும் அறியவும்.

ஆயுளைக் கணிக்க:- – நாம் எடுத்துக் கொண்ட உதாரண ஜாதகத்தில் 1-வது பாவத்தின் ஸ்புடமாகிய 184 பாகை-48கலை துலாராசியில் இருப்பதால் துலாராசியாதிபதியாகிய சுக்கிரன் 1-வது பாவாதிபதியாகிறார். 8-வது பாவத்தின் ஸ்புடமாகிய 34 பாகை-58-கலை ரிஷப ராசியிலிருப்பதால் ரிஷப ராசியாதிபதியாகிய சுக்கிரன் 8-வது பாவாதிபதியாகின்றார். 10-வது பாவத்தின் ஸ்புடமாகிய 95-பாகை-18கலை கடகராசியிலிருப்பதால் கடக ராசியாதிபதியாகிய சந்திரன் 10-வது பாவாதிபதி யாகின்றார்.

(1) வது வழி					(2) வது வழி
பாவத்தின் பெயர்	பாவ பலம்	பாவாதிபதி	பாவாதிபதியின் பாவ பூர்ண பலம்		பலத்தின் பரிமானம்
1-வது பாவம்	883	சுக்கிரன்	950	(1)	$\frac{883}{950}$ 0·93
8-வது பாவம்	786	சுக்கிரன்	950	(2)	$\frac{786}{950}$ 0·83
10-வது பாவம்	843	சந்திரன்	1000	(3)	$\frac{843}{1000}$ 0·84
சனியின் சட்பலம்	787	சனியின் பூர்ண சட்பலம்	500	(4)	$\frac{787}{500}$ 1.5
கூட்ட ஆயுள் எண்	3299	பூர்ணாயுள் எண்	3400	(5)	கூட்ட 4. 17

இங்கு பூர்ணாயுள் எண்ணாகிய 3400-யை விட ஆயுள் எண்ணாகிய 3299 குறைந்திருப்பதால் இந்த ஜாதகருக்கு ஆயுள் பூர்ணாயுளாகிய 66 வருஷத்திற் குள்பட்ட வயது. ஆயுள் எண்ணாகிய 3299-யை 66-ஆல் பெருக்கி பூர்ணாயுள் எண்ணாகிய 3400-ஆல் வகுக்க வரு

கின்ற 64-ஐ 0-மீ 14 $\frac{640}{3400}$ நாள் தான் ஆயுளாகும். இவ்வழி பிரகாரம் இந்த ஜாதகருக்கு ஆயுள் 64-வருஷம், 0-மீ 14 $\frac{640}{3400}$ நாள் ஆகிறது. இது தோராயமானது.

இரண்டாவது வழியில் வந்த பரிமானங்களாகிய 0·93, 0·83, 0·84, 1·57 இவைகளைக் கூட்ட 4·17 வரும். இந்த 4·17-யை 14ஆல் வகுக்க வருகின்ற ஆவரேஜ் (average) ஆகிய 1·04 தான் ஆயுளின் பரிமாணம். இங்கு வந்த பரிமாணம் ஒன்றுக்கு மேற்பட்டிருப்பதால் பூர்ணயுளாகிய 66 வயதுக்கு மேற்பட்ட வயது என்று சொல்ல வேண்டும். இங்கு வந்த 1.04-க்குரிய ஆயுளைக் கணிப்போம். 8600-ல் இருந்து பூர்ணயுள் எண்ணைக்கழிக்கவும். இப்படிக் கழிக்க அதாவது 8600-ல் இருந்து 3400-யைக் கழிக்க 5200 வரும். இந்த 5200 ஆயுள் பகுதி எண் ஆகும். 1.04-ல் 1க்கு மேற்பட்டருக்கிற 0.04 யை பூர்ணயுள் எண்ணாகிய 3400 ஆல் பெருக்க வருகின்ற 136 இங்கு ஆயுள் தொகுதி எண் ஆகும். ஆயுள் தொகுதி எண்ணாகிய 136-யை 54-ஆல் பெருக்கி ஆயுள் பகுதி எண்ணால் வகுக்க வருகின்ற ஈவு வருஷமாகும். மிச்சத்தை 12-ஆல் பெருக்கி ஆயுள் பகுதி எண்ணால் வகுக்க வருகின்றாவு மாதமாகும். மிசசத்தை 30-ஆல் பெருக்கி ஆயுள் பகுதி எண்ணால் வகுக்க வருகின்ற ஈவு நாளாகும். இவ்விதமாக செய்ய 1-ஐ 2-மீ 19 $\frac{1040}{5200}$ நாள வரும். இதை பூர்ணயுளாகிய 66 வருஷத்துடன் கூட்ட வருகின்ற மொத்தமாகிய 67ஐ 2மீ 19 $\frac{1140}{5200}$ நாள் தான் ஜாதகருடைய வயதாகும். இங்கு ஒரு வருஷம் என்பது 360 நாள் கொண்டது. இரண்டாவது வழி 1-வது வழியை விட கொஞ்சம் துல்லிபமானது. இந்த இரண்டாவது வழியில் 4-ஆல் வகுக்க வருகின்ற ஆவரேஜ் (average) ஒன்றுக்குக் குறைந்திருந்தால் வயது 66-க்குட்பட்டது ஆகும். ஒன்றுக்கு உள்பட்டு வருகின்ற தொகையை 66 வருஷத்தால் பெருக்க வருகின்ற வருஷம் மாதம் நாள் தான் அப்போது ஆயுளாகும். உதாரணமாக ஒன்றுக்கு உள்பட்டுவரும் தொகை 0.9ஆனால் இந்த 0·9-யை 66 வருஷத்தால் பெருக்க 59.4ஐ வரும். இதில் சொச்ச வருஷமாகிய 4 வருஷத்தை 12-ஆல் பெருக்க

4·8-மீ வரும். இதில் சொச்ச மாதமாகிய ·8 மாதத்தை 30 ஆல் பெருக்க 24.0 நாள் வரும். ஆகையால் ஆவரேஜ் (average) தொகையாகிய ·09க்கு 59-ஐ 4-மீ 24-நாள் வரும். இவ்விதமாகக் கணிதஞ் செய்யவும். இரண்டாவது வழி பிரகாரம் கணிதஞ் செய்ய முடியாதவர்கள் 1-வது வழி பிரகாரம் கணிதஞ்செய்துகொள்ளுவது போதுமானது, எனென்றால் இவ்விரண்டு வழியாலும் வயதைக் கொஞ்சம் தோராயமாகவே தெரிந்து கொள்ள முடியுமே தவிர ஆயுர்தாய வழியைப் போல துல்லியமாய்த் தெரிந்து கொள்ள முடியாது.

(2) தேகம்:— தேகத்தின் நிலமை அறியவேண்டுமானால் 1-வது பாவம், 6-வது பாவம், சூரியன் இவைகளின் பலத்தைக் கொண்டு அறியவேண்டும். இவைகள் பூர்ணபலமாய் இருந்தால் பூர்ணபலமான தேகம். இவைகளின் பலத்திற்குத் தகுந்தாற்போல் தேக பலம் இருக்கும். உதாரண ஜாதகத்தில்

பாவம்	பலத்தின் அளவு	பூர்ணபலம்	இங்கு கணிதத்தில்
1-வது பாவம்	883	950	வந்த பலமாகிய 2457
6-வது ,,	959	1050	என்பது பூர்ண பலமாகிய 2650-க்குக் குறைந்
சூரியன்	615	650	திருப்பதால் தேகம் பூர்
கூட்ட	2457	2650	ணபலத்திற்குத் தாழ்ந்த பலம் உடையது என்று

அறியவும். அதாவது பூர்ண பலத்தின் பாதிக்கு மேற்பட்டிருப்பதால் தேகம் சமபலமுடையது.

(3) நேத்திரங்கள்:— நேத்திரத்தின் நிலைமையை அறிய வேண்டுமானால் 2-வது பாவம், 12-வது பாவம், சூரியன், சந்திரன் இவர்களின் நிலைமையைக் கொண்டு அறிய வேண்டும். 2-வது பாவம், சூரியன் இவைகள் வலிவாய் இருந்தால் வலது கண் வலிவாய் இருக்கும். 12-வது பாவம், சந்திரன் இவர்கள் வலிவாய் இருந்தால் இடது கண் வலிவாய் இருக்கும்.

வலது கண்	பலத்தின் அளவு	பூர்ணபலம்	அதாவது பலத்
2-வது பாவம்	781	900	தின் அளவு பூர்ணபலத்
சூரியன்	615	650	தைவிட தாழ்ந்திருப்ப
கூட்ட	1396	1550	தால்வலதுகண்மத்திம பலமுடையது. பலத்தி

ன் பரிமானம் $\frac{1396}{1550}$ 0.90

இடது கண்	பலத்தின் அளவு	பூர்ண பலம்	அதாவது பலத்
12-வது பாவம்	989	1100	தின் அளவு பூர்ணபல
சந்திரன்	701	600	த்தை விடதாழ்ந்திருப்
			பதால் இடது கண் மத்
கூட்ட	1690	1700	திம பல முடையது.
			பலத்தின் பரிமாணம்

$\frac{1690}{1700}$ 0·99. ஆனல் இடது கண் வலது கண்ணைவிட பலமானது.

(4) காதுகள்:— காதுகளின் நிலைமையை அறிய வேண்டுமானல் 3-வது பாவம், 11-வது பாவம், செவ்வாய், குரு இவைகளின் நிலைமையைக் கொண்டு அறியவேண்டும். 3-வது பாவம், செவ்வாய் இவைகள் வலிவாய் இருந்தால் வலது காது வலிவாய் இருக்கும். 11-வது பாவம், குரு இவைகள் வலிவாய் இருந்தால் இடதுகாது வலிவாய் இருக்கும்.

வலது காது	பலத்தின் அளவு	பூர்ண பலம்	அதாவது பலத்
3-வது பாவம்	1035	1050	தின் அளவு பூர்ணபலத்
செவ்வாய்	620	500	தைவிட அதிகமாய் இரு
			ப்பதால் வலது காது
கூட்ட	1655	1550	பூர்ண பல முடையது.
			பலத்தின் பரிமாணம்

$\frac{1655}{1550}$ 1·07

இடது காது	பலத்தின் அளவு	பூர்ணபலம்	அதாவது பலத்
11-வது பாவம்	814	1050	தின் அளவு பூர்ணபலத்
குரு	951	650	தை விட அதிகமாய்இரு
			ப்பதால் இடது காது
கூட்ட	1765	1700	பூர்ண பல முடையது.
			பலத்தின் பரிமாணம்

$\frac{1765}{1700}$ 1·04, ஆகையால் இடது காதைவிட வலது காது பலமுடையது.

(5) வித்தை:— வித்தையை அறிய வேண்டுமானல் 2-வது 4-வது, 5-வது, 11-வது பாவங்களின் பலத்தையும், புதன், குரு இவைகளுடைய பலத்தையுங் கொண்டு அறிய வேண்டும்.

	பலத்தின் அளவு	பூர்ணபலம்	
2-வது பாவம்	781	900	அதாவது பலத்
4- ,, ,,	999	900	தின் அளவு பூர்ணபலத்
5- ,, ,,	902	900	தை விட அதிகமாய்
11- ,, ,.	814	1050	இருப்பதால் இந்த ஜா
புதன்	933	700	தாகருக்கு வித்தை பூர்
குரு	951	650	ணவித்தை யுண்டு.
கூட்ட	5308	5100	

(6) வாகனம்:— வாகன யோகம் அறிய வேண்டுமானால் 4-வது பாவம், 11-வதுபாவம், சுக்கிரன் இவைகளைக் கொண்டு அறிய வேண்டும்.

	பலத்தின் அளவு	பூர்ணபலம்	
4-வது பாவம்	999	900	அதாவது வாகன
11-வது பாவம்	814	1050	யோகம் பூர்ணபலத்தை
சுக்கிரன்	649	550	விட கொஞ்சம் குறைந்
கூட்ட	2462	2500	திருப்பதால் மத்திம

வாகன யோக முண்டு. அது பூர்ண யோகத்திற்குக் கொஞ்சம் குறைந்தது.

(7) பூமி, வீடு:— 2-வது, 4-வது 10-வது, 11-வது பாவங்களையும், செவ்வாயையும் கொண்டு பூமி பலம் அறியவேண்டும். 4-வது, 10-வது பாவங்களையும், சுக்கிரனையுங் கொண்டு வீடு, கட்டடம் முதலியவை களின் பலம் அறிய வேண்டும்.

பூமி	பலத்தின் அளவு	பூர்ணபலம்	
2-வது பாவம்	781	900	அதாவது பலத்
4-வது ,,	999	900	தின் அளவு பூர்ணபலத்
10-வது ,,	843	1000	தை விடகுறைந்திருப்
11-வது ,,	814	1050	பதால் பூமிபலம் மத்திம
செவ்வாய்	620	500	மானது என்றறியவும்
கூட்ட	4057	4350	

வீடு, கட்டடம்.	பலத்தின் அளவு	பூர்ணபலம்	
4-வது பாவம்	999	900	அதாவது பலத்
10- ,, ,,	843	1000	தின் அளவு பூர்ண
சுக்கிரன்	649	550	பலத்தை விட அதிக
	———	———	மாக விருப்பதால் வீடு,
கூட்ட	2491	2450	கட்டட பலம் பூர்ண
	———	———	மானது என்றறியவும்.

(8) மாதுரு:— 2-வது பாவம், 4-வது பாவம், 7-வது பாவம் இவைகளையும் பகலில் பிறந்தவர்களுக்குச் சுக்கிரனையும், இரவில்பிறந்த வர்களுக்கு சந்திரனையுங் கொண்டு மாதுரு பலம் அறிய வேண்டும். உதாரணமாக எடுத்துக் கொண்ட ஜாதகம் பகலில் பிறந்த ஜாதகம்.

மாதுரு	பலத்தின் அளவு	பூர்ணபலம்	
2-வது பாவம்	781	900	அதாவது பலத்
4-வது ,,	999	900	தின் அளவு பூர்ணபலத்
7-வது ,,	863	900	தை விட அதிக மாக
சுக்கிரன் (பகல்)	649	550	யிருப்பதால் மாதுரு
	———	———	பலன் பூர்ணபலமுடை
கூட்ட	3292	3250	யது.
	———	———	

(9) அம்மான் (மாதுலன்):— மாதுலன் பலம் அறிய வேண்டுமானால் 5-வது, 6-வது பாவம், புதன் இவைகளைக் கொண்டு அறிய வேண் டியது.

	பலத்தின் அளவு	பூர்ணபலம்	
5-வது பாவம்	902	900	அதாவது பலத்
6- ,, ,,	959	1050	தின் அளவு பூர்ணபல
புதன்	933	700	த்தை விட அதிகமாய்
	———	———	இருப்பதால் அம்மான்
கூட்ட	2794	2650	பலன் பூர்ணபலமுடை
	———	———	யது, அம்மான் பிரபல
			னாயிருப்பான்.

(10) சத்துரு:— சத்துருவின் நிலைமையை அறிய வேண்டு மானால் 6-வது பாவம், லக்கினாதிபதி இவைகளின் பலத்தால் அறிய

வேண்டும். இவைகள் பலமாயிருந்தால் சத்துருக்கள நசிந்துப் போய் விடுவார்கள். தோல்வி அடைநது விடுவார்கள். இவர்கள் பலவீனமாய் விட்டால் சத்துரு பீடை உண்டு. சத்துருக்கள் ஜெயித்து விடுவார்கள்.

	பலத்தின் அளவு	பூர்ணபலம்	
6-வது பாவம்	959	1050	அதாவது பலத்
லக்கினாதிபதி (சுக்கிரன்)	649	550	தின் அளவு பூர்ண பலத்
கூட்ட	1608	1600	தை விட கொஞ்சம் அதி கமாய் இருப்பதால் சத்துருக்கள் தோல்வி

யடைவார்கள், நசிந்து விடுவார்கள். 6-வது பாவபலம் தன் பூர்ண பலத்தைவிட தாழ்ந்து இருப்பதால் சத்துருக்கள் ஏற்பட்டு சத்துருக்கள் கெலிப்பதுபோல இருந்து லக்கினாதி பலம் தன் பூர்ண பலத்திற்கு மேற்பட்டு இருப்பதாலும் மொத்த பலம் மொத்த பூர்ணபலத்திற்கு அதிகப் பட்டிருப்பதாலும் கடைசியில் சத்துருக்கள் தோல்வியடைந்து விடுவார்கள், நசிந்து விடுவார்கள்.

(11) ருணம்:— ருணத்தின் நிலைமையை அறிய வேண்டுமானால் 3-வது, 6-வது, 8-வது பாவம், செவ்வாய், சனி இவைகளின் பலத்தினால் அறிய வேண்டும். இவைகள் பலமாக விருந்தால் ருணம் கிடையாது, இவைகள் பலவீனமாக விருந்தால் ருணமுண்டு.

	பலத்தின் அளவு	பூர்ணபலம்	
3-வது பாவம்	1035	1050	அதாவது பலத்
6- ,, ,,	959	1050	தின் அளவு பூர்ண
8- ,, ,,	786	950	பலத்தை விட அதிக
செவ்வாய் ,,	620	500	மாக விருப்பதால் இந்த
சனி	787	500	ஜாதகருக்கு ருணசல்வி
கூட்ட	4187	4050	யபாதை கிடையாது.

(12) களத்திரம்:— களத்திரத்தின் நிலைமையை அறியவேண்டுமானால் 2-வது, 7-வது, 11-வது பாவங்களையும், சுக்கிரனையுங் கொண்டு அறியவேண்டும். இவைகள் பலமாயிருந்தால் ஏகதாரம். பலவீனமாய் இருந்தால் பலதாரம் என்று அறிய வேண்டும்.

	பலத்தின் அளவு	பூர்ணபலம்	
2-வது பாவம்	781	900	அதாவது பலத்
7-வது ,,	863	900	தின் அளவு பூர்ணபலத்
11-வது ,,	814	1050	தை விட குறைந்திருப்
சுக்கிரன்	649	550	பதால் களத்திர பலன்
			பூர்ண பலனுடையத
கூட்ட	3107	3400	ல்ல. பலத்தின் அளவு
			பூர்ண. பலத்தின்

அரை பாகத்திற்கு மேற்பட்டிருப்பதால் களத்திர பலன் சமமாய் உள்ளது. தாரம் ஒன்று என்றே சொல்லவேண்டும். களத்திர பலன் சமபலனுயிருப்பதால் களத்திரம் ஜாதகருக்கு முன்னே இறந்து விடும் என்று அறிய வேண்டும்.

(13) புத்திரர்:– புத்திரர்களைப்பற்றி அறிய வேண்டுமானால் 5-வது 7-வது, 9-வது பாவங்களையும், குருவையுங் கொண்டு அறியவேண்டும். இவைகளின் பலம் பூர்ண பலமாயிருந்தால் புத்திரர் (அதாவது புத்ரர் புத்திரிகள்) உண்டு. இவைகளின் பலத்திற்குத் தகுந்தாற்போல் புத்திர பலன் இருக்கும்.

	பலத்தின் அளவு	பூர்ணபலம்	
5-வது பாவம்	902	900	அதாவது பலத்
7-வது ,,	863	900	தின் அளவு பூர்ணபலத்
9-வது ,,	919	1100	தை விட அதிகமாய்
குரு	951	650	யிருப்பதால் இந்த ஜாத
			கருக்கு புத்திரர்பலன்
கூட்ட	3635	3550	பூர்ணமாய்உண்டு. அதா
			வது புத்திரர்களும் புத்
			திரிகளும் உண்டு.

(14) பிதுர்:— பிதுரின்பலத்தை அறியவேண்டுமானால் 5-வது, 9-வது பாவங்களைக் கொண்டும் பகலில் பிறந்தவர்களுக்கு சூரியனைக்கொண்டும், இரவில் பிறந்தவர்களுக்குச் சனியைக்கொண்டும் அறியவேண்டும். இவைகளின் பலம் பூர்ணபலமாய் இருந்தால் பிதுர் பலன் பூர்ண பலமுடையது. இவைகளின் பலத்திற்குத் தகுந்தபடி பிதுர் பலன் அறியவும். உதாரண ஜாதகம் பகலில் பிறந்தது.

	பலத்தின் அளவு	பூர்ணபலம்	
5-வது பாவம்	902	900	அதாவது பலத்
9 ,,	919	1100	தின் அளவு பூர்ணபலத்
சூரியன் (பகல்)	615	650	திற்குக் குறைந்திருப்ப
கூட்ட	2436	2650	தால் பிதுர் பலன் பூர்ண பலன் அல்ல. பலத்தின் அளவு பூர்ண பலத்தின்

பாதிக்கு மேற்பட்டிருப்பதால் பிதுர் பலன் சமபலனுடையது என்று அறியவும்.

(15) யாத்திரை:— யாத்திரையின் பலத்தை அறிய வேண்டு மானால் 2-வது, 5-வது, 7-வது, 9-வது, 10-வது பாவங்களின் பலத் தைக் கொண்டு அறிய வேண்டும். இவைகளின் பலம் பூர்ண பலமாயி ருந்தால் யாத்திரையின் பலன் பூர்ணபலனுபிருக்கும். அதிக யாத் திரை உண்டு. இவைகளின் பலத்திற்குத் தகுந்தாற்போல் யாத்திரை யில் பலனுண்டு என்று அறியவும்.

	பாவத்தின் அளவு	பூர்ணபலம்	
2-வது பாவம்	781	900	அதாவது பலத்தின்
5வது ,,	902	900	அளவு பூர்ணபலத்தை
7-வது ,,	863	900	விட குறைந்து இருப்ப
9-வது ,,	919	1100	தால் யாத்திரை பலன்
10-வது ,,	843	1000	பூர்ண பலத்திற்குங்
	4308	4800	குறைந்தது, பலத்தின் அளவு பூர்ணபலன் பாதி

க்கு மேற்பட்டிருப்பதால் யாத்திரை பலன் சமமானது என்று அறியவும்.

(16) ஜீவனம்:— ஜீவனபாகம் சொல்லுவது மிகவும் கஷ்டமானது. பிருஹத்ஜாதகத்திலும், ஜாதகபாரிஜாதகத்திலும், சர்வார்த்த சிந்தா மணியிலும் சொல்லிய பிரகாரம் பார்த்து ஜீவனம் என்ன விதமானது என்றுஅறிய வேண்டும். உலகத்தில் எத்தனையோ கோடி ஜீவனங்கள் இருப்பதால் ஜீவனபாகத்தில் என்ன விதமான ஜீவனம் என்று நிஷ்கரமாகச் சொல்லுவது மிகவும் கஷ்டமானது. (1) இராஜாங்க ஜீவனம், சேவகாவிருத்தி ஜீவனம். (2) வர்த்தக ஜீவனம், சுய ஜீவனம் என்று ஒருவாராகப் பொதுவாகச் சொல்ல முடியுமே

தவிற விபரமாகச் சொல்லுவது மிகவும் கஷ்டமானது. ஜீவன விஷயத்தை அறிய வேண்டுமானல் 3-வது, 4-வது, 7-வது, 10-வது 11-வது, 12-வது பாவங்களைக் கொண்டும், சூரியன், சந்திரன், புதன் குரு, சனி இவர்களையுங் கொண்டும் அறிய வேண்டியது. (1) இவைகளில் 3-வது, 10-வது, 12-வது பாவங்களும், சூரியனும், சந்திரனும் குருவும் வலுத்து இருந்தால் இராஜாங்கத்தில் உத்தியோகமும், சேவகாவிருத்தியும் உண்டு. (2) 4-வது, 7-வது, 10-வது, 11-வது பாவங்களும் புதனும், சனியும் வலுத்திருந்தால் வர்த்தக ஜீவனமும், சுய ஜீவனமும் உண்டு என்று சொல்ல வேண்டும். இரண்டும் வலுத்திருந்தால் இவ்விரண்டுவித ஜீவனம் என்றும் சொல்ல வேண்டும். 4-வது பாவம், 11-வது பாவம், சனி இவைகளைக் கொண்டு கிருஷியின் பலன் அறிய வேண்டும்.

பலத்தின் அளவு		பூர்ணபலம்
3-வதுபாவம்	1035	1050
4- ,, ,,	999	900
7- ,, ,,	863	900
10- ,, ,,	843	1000
11- ,, ,,	814	1050
12- ,, ,,	989	1100
சூரியன்	615	650
சந்திரன்	701	600
புதன்	933	700
குரு	951	650
சனி	787	500
கூட்ட	9530	9100

(1)

பலத்தின் அளவு		பூர்ணபலம்
3-வதுபாவம்	1035	1050
10- ,, ,,	843	1000
12- ,, ,,	989	1100
சூரியன்	615	650
சந்திரன்	701	600
குரு	951	650
கூட்ட	5134	5050 (2)

5134
5050
1.02 (4)

பலத்தின் அளவு		பூர்ணபலம்
4-வது பாவம்	999	900
7-வது ,,	863	900
10-வது ,,	843	1000
11-வது ,,	814	1050
புதன்	933	700
சனி	787	500
கூட்ட	5239	5050 (3)

4239			கிருஷி	பலத்தின் அளவு	பூர்ணபலம்
3050	1.04	(5)	4-வதுபாவம்	999	900
			11- ,, ,,	814	1050
			சனி	787	500
2600					
2450	1.06	(6)		2600	2450

மேலே கணித்து வந்தவைகளில் 1-வது அயிட்டத்தில் பலத்தின் அளவாகிய 9530 என்பது பூர்ணபலத்தின் அளவாகிய 9100 யைவிட அதிகமாக இருப்பதால் ஜீவனபலன் பூர்ணபலம் உடையது என்று அறியவும். அதாவது இந்த ஜாதகருக்கு ஜீவனவிஷயத்தில் கஷ்டம் கிடையாது. மேலும் இராஜாங்க உத்தியோகம் சேவகாவிருத்தி என்றதற்கு வந்த (4) வது அயிட்டமாகிய 1·02 என்பது வர்த்தக ஜீவனம் சுய ஜீவனம் என்றதற்கு வந்த (5)-வது அயிட்டமாகிய 1·04 யைவிட குறைந்திருப்பதால் இந்த ஜாதகருக்கு வர்த்தக ஜீவனம் சுயஜீவனமே வலுத்திருக்கிறது. ஆகையால் இந்த ஜாதகருக்கு வர்த்தக ஜீவனம் சுயஜீவனம் என்றே சொல்லவேண்டும். கிருஷியின் பலத்தின் அளவு பூர்ண பலத்தைவிட அதிகமாய் இருப்பதால் கிருஷியாலும் அதிக பலிதம் உண்டு.

(17) சஹோதரம், சஹோதரி:—சகோதரம், சகோதரி இவர்களின் விஷயத்தை அறிய வேண்டுமானால் 3-வது பாவம், 11-வது பாவம். செவ்வாய் இவர்களைக் கொண்டு அறியவேண்டும்.

இளையசகோதரம், சகோதரி இவைகளை 3-வதுபாவம், செவ்வாய் இவைகளைக்கொண்டும், மூத்தசகோதரம், சகோதரிஇவைகளை 11-வது பாவம், செவ்வாய் இவர்களைக கொண்டும் அறிய வேண்டியது. இவைகளின் பலம் பூர்ண பலமாயிருந்தால் பூர்ணபலன் என்று அறியவும். இவைகளின் பலத்திற்குத் தகுந்தாற்போல் பலன் விஸ்தியாசப்படும்.

மூத்தவர்	பலத்தின் அளவு	பூர்ண பலம்	இளையவர்	பலத்தின் அளவு	பூர்ண பலம்
11-வது பாவம்	814	1050	3-வது பாவம்	1035	1050
செவ்வாய்	620	500	செவ்வாய்	620	500
கூட்ட	1434	1550(1)	கூட்ட	1655	1550(2)

அதாவது மூத்தவர்களின் பலத்தின் அளவாகிய 1434 மூத்தவர்களின் பூர்ணபலமாகிய 1550-யை விட குறைந்திருப்பதால் மூத்தவர்களின் பலன் சமபலனுடையது. இளையவர்களின் பலத்தின் அளவாகிய 1655-என்பது இளையவர்களின் பூர்ண பலமாகிய 1550-பை விட அதிகமாயிருப்பதால் இளையவர்களின் பலன் பூர்ணபலமுடையது. மேலும் மூத்தவர்களின் பலத்தைவிட இளையவர்களின் பலம் அதிகமாய் இருப்பதால் மூத்தவர்களைவிட இளையவர்கள் அதிகமாகவும் நல்ல நிலைமையிலும் இருப்பார்கள்.

(18) யோகபாவம்:— 2-வது, 5-வது, 9-வது, 11-வது பாவங்களையும், குரு, சுக்கிரன் இவர்களையுங் கொண்டு பலன் அறியவேண்டும். இவர்களின் பலம் பூர்ண பலமானால் பூர்ண பலன் என்று மத்திமமானால் மத்திம பலன் என்றும், அதமமானால் அதம பலன் என்றும் அறியவும்.

யோகம்	பலத்தின் அளவு	பூர்ணபலம்	
2-வது பாவம்	781	900	அதாவது பலத்
5- ,, ,,	902	900	தின் அளவு பூர்ணபலத்
9- ,, ,,	919	1100	தைவிட குறைவாய்
11-,, ,,	814	1050	இருப்பதால் யோகபல
குரு	951	560	ன் பூர்ணபலத்தை விட
சுக்கிரன்	649	550	குறைந்தது அதாவது
கூட்ட	5016	5150	சம பல னுடையது. இங்கு குருவின் பலத்

தின் அளவும் சுக்கிரனின் பலத்தின் அளவும் 5-வது பாவத்தின் அளவும் தங்கள் தங்கள் பூர்ண பலத்தை விட அதிகமாய் இருப்பதால் குரு, சுக்கிரன், 5-வது பாவாதிபதியாகிய சனி இவர்களின் தசை புக்தி காலங்களில் அதிக யோகமுண்டு.

(19) சுகம்:— 2-வது, 4-வது, 7-வது, 12-வது பாவங்களைக் கொண்டு அறியவேண்டியது. இவைகளின் பலத்தின் அளவு பூர்ண பலமாயிருந்தால் பூர்ண சுகமென்று அறியவும். இவைகளின் பலத்திற்குத் தகுந்தாற்போல் சுகம் உண்டு.

சுகம்	பலத்தின் அளவு	பூர்ண பலம்	
2-வது பாவம்	781	900	அதாவது பலத
4- ,, ,,	999	900	தின் அளவு பூர்ண பல
7- ,, ,,	863	900	த்தை விடதாழ்ந்து இரு
12-,, ,,	989	1100	ப்பதால் சுகம்சமமானது.
	———	———	2-வது பாவத்தின் அள
கூட்ட	3632	3800	வும் 12 பாவத்தின் அள
	———	———	வும்குறைந்துஇருப்பதால்

இந்த பாவாதிபதிகளாகிய செவ்வாய், புதன் இவர்களுடைய தசா புக்தி காலங்களில் சுகக்குறைவுண்டு. 4-வது பாவத்தின் அளவு பூர்ண பலத்தைவிட அதிகமாய் இருப்பதால் 4-வது பாவாதிபதியாகிய சனியின் தசை, புக்தி காலங்களில் சுகம் அதிகமாக வுண்டு. இந்த ஜாதகருக்கு சனி தசை வரப்போகிறதில்லை).

(20) பங்காளி:— பங்காளியின் வலிமை 6-வது பாவத்தைக் கொண்டு அறியவேண்டும். 6-வது பாவத்தின் பலத்தின் அளவு பூர்ண பலத்தைவிட அதிகமாயிருந்தால் பங்காளி நல்ல நிலைமையில் இருப்பான், ஜாதகனைவிட உயர்ந்த நிலையில் இருப்பான்.

பங்காளி	பலத்தின் அளவு	பூர்ணபலம்	
6-வது பாவம்	959	1050	அதாவது பலத்

தின் அளவு பூர்ணபலத்தைவிட குறைந்திருப்பதால் பங்காளிசமமான நிலையில் இருப்பான், ஜாதகனுக்குத்தாழ்ந்த நிலையில் இருப்பான்.

(21) விரையம்:— 12-வது பாவம் சனி இவர்களைக் கொண்டு விரைய பலனைச் சொல்ல வேண்டும். இவைகளின் பலத்தின் அளவு பூர்ணபலத்தைவிட அதிகமானால் விரையம் இல்லை என்றும் அதாவது தனம் சேரும் என்றும் அறியவேண்டும். இவைகளின் பலத்தின் அளவு சமமாயிருந்தால் வரும் படிக்குத் தகுந்தசெலவு ஏற்படும். இவைகளின் பலத்தின்அளவு அதமமாய் அதாவது சமபலத்திற்கும் தாழ்ந்ததாய் இருந்தால் விரையம் அதிகமாக விருக்கும். இந்த பாவத்தையும், பாவாதிபதியையும், சனியையும் சுபர்கள் பார்த்தாலும், கூடினாலும் சுப விரையம், பாபிகள் பார்த்தாலும், கூடினாலும் அசுப விரையம், சுபரும் பாபரும் கலந்து பார்த்தாலும், கூடினாலும் சுபா அசுப விரையம் நேரிடும்.

விரையம்	பலத்தின் அளவு	பூர்ணபலம்	
12-வது பாவம்	989	1100	அதாவது பலத்
சனி	787	500	தின் அளவு பூர்ணபல
	———	———	த்தை விட அதிகமாய்
கூட்ட	1776	1600	இருப்பதால் விரையம்
	———	———	கிடையாது, தனம்சேர்
			தலுண்டு.

(22) மாதுர் பாட்டன்:— மாதுர் பாட்டன் வலிவை 5-வது பாவத்தைக் கொண்டு சொல்லவேண்டும். இந்த பாவத்தின் பலத்தின் அளவு பூர்ணபலத்தைவிட அதிகமாயிருந்தால் மாதுர் பாட்டன் நல்ல நிலைமையில் பூர்ணயுசுடன் இருப்பான்.

மாதுர் பாட்டன்	பலத்தின் அளவு	பூர்ணபலம்	
5-வது பாவம்	902	900	அதாவது பலத்

தின் அளவு பூர்ண பலத்தைவிட அதிகமாயிருப்பதால் மாதுர் பாட்டனுக்குப் பூர்ணயுளுண்டு, நல்ல நிலைமையுண்டு.

(23) பசுமாடுகள்:— இவைகளின் பலத்தை 4-வது பாவம், சுக்கிரன் இவர்களைக் கொண்டு சொல்ல வேண்டும். இவை களின்பலம் பூர்ணபலமாய் இருந்தால் பசு மாடுகள் விசேஷமாய் இருக்கும், பால் பாக்கியமுண்டு.

பசுமாடுகள்	பலத்தின் அளவு	பூர்ணபலம்	
4-வது பாவம்	999	900	அதாவது பலத்
சுக்கிரன்	649	550	தின் அளவு பூர்ணபல
	———	———	த்தை விட அதிகமாயி
கூட்ட	1648	1450	ருப்பதால் பசுமாடுகள்
	———	———	விசேஷமாயுண்டு, பால்

பாக்கியமுண்டு.

(24) சுதேச பரதேச வாசம்:— இதனை 7-வது, 12-வது பாவத்தைக் கொண்டு அறிய வேண்டும். இவைகளின் பலத்தின் அளவு பூர்ணபலமாய் இருந்தால் பரதேச வாசம்; சமபலமாயிருந்தால் சுதேச பரதேச வாசம்; அதமபலனுயிருந்தால் சுதேச வாசம்.

வாசம்	பலத்தின் அளவு	பூர்ணபலம்	
7-வது பாவம்	863	900	அதாவது பலத்
12-வது பாவம்	989	1100	தின் அளவு பூர்ணபலத்
	———	———	தை விட குறைந்திருப்
கூட்ட	1852	2000	பதால் அதாவது சமமா
	———	———	யிருப்பதால் இந்த ஜாத

கர் சுதேச பரதேச வாசம் செய்வார்.

(25) பற்கள்:— பற்களின் நிலைமையை 2-வது பாவத்தின் வலி வைக் கொண்டு சொல்ல வேண்டும். இந்த பாவத்தின் பலத்தின் அளவு பூர்ண பலமாயிருந்தால் பற்கள் பூர்ண பலமுடையனவாய் விருத்தாப் பியம் வரையிலும் இருக்கும்.

பற்கள்	பலத்தின் அளவு	பூர்ணபலம்	
2-வதுபாவம்	781	900	அதாவது பலத்

தின் அளவு சமமாய் இருப்பதால் பற்கள் சமபல முடையன, விருத் தாப்பிய காலத்தில் பற்கள் விழுந்து விடும்.


இதுவரையிலும் ஒரு ஜாதகத்தின் முக்கியமான அம்சங்களின் பலாபலனைச் சொல்லும் வழியைக் காட்டி யிருக்கிறேன். இவ்விதமா கவே எவ்வித அம்சங்களின் பலாபலனை அந்த அம்சத்திற்குரிய பாவத் தின் பலத்தையும் காரககிரகத்தின் பலத்தையுங் கொண்டு பலாபலன் சொல்ல வேண்டும். ஒவ்வொரு அம்சத்திற்குரிய பாவம், காரக கிரகம் இவைகளைப் பார்க்குங் கிரகம் அல்லது இவைகளுடன் இருக்கும் கிர கம் சுபக் கிரகமானால் அந்த கிரகத்தின் தசா புக்தி காலங்களில் அந்த அம்சம் விருத்தியடைந்து நல்ல ஸ்திதியில் இருக்கும். இப்படியன்றி பார்க்குங் கிரகம் அல்லது இருக்கும் கிரகம் பாபகிரகமாகில் அந்த கிர கத்தின் தசா புக்தி காலங்களில் அந்த பாவம் நாசமடையும், நல்ல ஸ்திதியி லிராது. இங்கு சொன்ன பாவ கிரகம் அந்த பாவத்திற் குரிய பாவாதிபதி யாகினாலும் அல்லது அந்த அம்சத்திற்குரிய கார காதிபதி யாகினாலும் அந்த அம்சத்தை விருத்தி செய்விக்குமே தவிற நாசப் படுத்தாது என்று அறியவும்.

நெம்பர் 3:—சட்பல கணித ரீதி பாவபல கணித ரீதி இவைகள் அல்லாமல் சாதாரண வழியில் ஆயுள் முதலிய முக்கிய அம்சங்களை கணிக்கும் விதம்:—கிரகங்கள் லக்கினத்திலிருந்து தூவாதச ராசி

களில் இருக்கும் பலத்தை (அதாவது கேந்திர பலத்தை 22-வது அயிட்டத்திலும் கிரகங்கள் இருக்கும் இராசி உச்சம், ஆட்சி, நீச்சம் முதலியவைகளால் உண்டாகும் பலத்தை) (அதாவது ஸ்தான பலத்தை) 44-வது அயிட்டத்திலும், கிரகங்களின் சுபா அசுப பரிமாணத்தை 20-வது அயிட்டத்திலும், கிரகங்களின் பார்வையின் அளவை 21-வது அயிட்டத்திலுங் கொடுத்திருக்கிறது. ஒரு கிரகத்தின் பலத்தை 22-வது 44-வது இவ்விரண்டு அயிட்டங்களில் இருந்து கணிக்கவேண்டும். ஒரு கிரகம் ஒரு ஸ்தானத்தை அல்லது மற்றொரு கிரகத்தைப்பார்க்கும் சுபா அசுபத்தின் பரிமாணத்தை22-வது, 44-வது, 20-வது, 21வது ஆகிய இந்த நான்கு அயிட்டங்களிலிருந்து கணிக்கவேண்டும். உதாரணமாக முக்கால் சுபக்கிரகமாகிய சுக்கிரன் லக்கினத்திற்கு 6-வது இராசியில் 6-வது பாவத்தில் தன் அதிமித்துருவாயிருக்கின்ற கிரகத்தின் இராசியில் இருந்தால் தான் இருக்கும் பாவத்திலிருந்து ஐந்தாவதுபாவத்தை (அதாவது லக்கினத்திலிருந்து பத்தாவது பாவத்தை) எவ்வளவு சுபபார்வையுடன் பார்க்கின்றது என்பதையும் சுக்கிரனுடைய பலத்தையுங் கணிப்போம். சுக்கிரன் லக்கினத்திற்கு 6-வது இராசியில் இருப்பதால் 22-வது அயிட்டம் பிரகாரம் பலத்தின் அளவு 25-ஆகும். சுக்கிரன் தன் அதிமித்துரு ராசியிலிருப்பதால் 44-வது அயிட்டம் பிரகாரம் பலத்தின் அளவு 38. இவ்விரண்டையும் இப்போது ஒன்றுபோல் சேர்க்க வருகின்ற 63- சுக்கிரனுடைய பலமாகும்.

சுக்கிரன் தான் இருக்கும் பாவத்திலிருந்து 5-வது பாவத்தைப் பார்க்கின்ற அளவு 50. இந்த பார்வையின் அளவாகிய 50-யை முந்தி வந்த சுக்கிரனுடைய பலமாகிய 63 உடன் கூட்ட வருகின்ற 113-யை எப்போதும் மூன்றால் வகுக்க வேண்டும். இப்படி வகுக்க $37\frac{2}{3}$ அல்லது முழு தொகையில் 38 ஆகும். இந்த 38-தான் சுக்கிரன் தான் இருக்கும் ஸ்தான நிலை பலத்தை அனுசரித்துப் பார்க்கும் பார்வையின் நிகர அளவாகும். இந்த 38-யை சுக்கிரனுடைய சுபபரிமாணமாகிய $\frac{3}{4}$-ஆல் பெருக்க வருகின்ற $28\frac{1}{2}$-தான் சுக்கிரன் தன் பாவத்தில் இருந்து ஐந்தாவது பாவத்தைப் பார்க்கும் சுபத்தின் பரிமாணம் ஆகும். (இங்கு $28\frac{1}{2}$ என்பது 38-ல் முக்கால்பாகம்) ஆகையால் லக்கினத்திற்கு 6-வது பாவத்தில் அதிமித்துரு வீட்டிலிருக்கின்ற சுக்கிரன் சுக்கிரனிலிருந்து 5-வது பாவத்தை அதாவது லக்கினத்திலிருந்து 10-வது பாவத்தைப் பார்க்கும் சுபபலத்தின் அளவு $28\frac{1}{2}$ஆகும்.

இவ்விதமாகவே ஒவ்வொரு கிரகத்தினுடைய பலத்தையும், பாவத்தை அல்லதுகிரகத்தைப்பார்க்கும் சுபபரிமாணம் அல்லது அசுபபரிமாணம் அறியவேண்டும். கிரகசேர்க்கை விஷயத்தில் ஒரு கிரகத்துடன் சம்மந்தப்பட்டிருக்கிற கிரகத்தின் பார்வையின் அளவை முழு பார்வை என்றுவைத்துக் கொள்ளவும். ஒருபாவத்தில் இருக்கின்ற கிரகம் அந்தப பாவத்தை முழுபார்வையுடன் பார்ப்பதாக வைத்துக் கொள்ளவும். நாம் உதாரணமாக எடுத்துக் கொண்ட ஜாதகத்திற்கு இராசி சக்கிரம், பாவச்சக்கிரம், பாவாதிபதி அடியிற் கண்டபடி ஆகும்.



பாவத்தின் பெயர்	பாவாதிபதி	பாவத்தின் பெயர்	பாவாதிபதி
1-வது பாவம்	சுக்கிரன்	7-வது பாவம்	செவ்வாய்
2- ,,	செவ்வாய்	8- ,,	சுக்கிரன்
3- ,,	குரு	9- ,,	புதன்
4- ,,	சனி	10- ,,	சந்திரன்
5- ,,	சனி	11- ,,	சூரியன்
6- ,,	குரு	12- ,,	புதன்

குறிப்பு:— ஒரு பாவத்தின் ஸ்புடம் எந்த ராசியிலிருக்கின்றதோ அந்த ராசி அதிபதியே அந்த பாவாதிபதியாவர்.

பிறகு ஒவ்வொரு ஜாதகத்திற்கும் சந்திரனும் புதனும் சுபனு அசுபனு என்று தெரிந்து கொள்ள வேண்டியதால் இந்த ஜாதகத்திற்குச் சந்திரன் புதன் சுபனு அசுபனு என்று 20-வது அயிட்டத்தில் கொடுத்துள்ள விதி பிரகாரம் பார்ப்போம. இந்த ஜாதகமு ஜெனித்த திதி தேப்

பிறை ஏகாதசி திதி. 20-வது அயிட்டம் பிரகாரம் சந்திரன் முழுபாபி. புதன் பாவச்சக்கிரத்தில் தனியாய் இருப்பதால் புதன் அரை சுபனாகின்றார்.

பிறகு எல்லா கிரகங்களினுடைய கிரக பலத்தைக் கணித்துக் கொள்ளவேண்டும்.

	சூரி	சந்	செவ்	புத	குரு	சுக்	சனி	இரா	கேது	விவரம்
துவாதச ராசியிலிருக்கும் பலம் (கேந்திர பலம்)	25	100	100	100	100	100	50	100	100	†
உச்சம், ஆட்சி நீச்சம் முதலிய பலம் (ஸ்கா நபலம்)	25	50	6	13	13	50	13	3	38	‡
கூட்ட வருகின்ற கிரகபலம	50	150	106	113	113	150	63	103	138	

† 22-வது அயிட்டம் பிரகாரமும், பாவச்சக்கிரம் பிரகாரமும்போட...(1)

‡ 44-வது அயிட்டம் பிரகாரமும் ... ...(2)

விவரம்.— இராசி சக்கிரத்தில் சூரியன் 12-வது இராசியிலிருப்பதால் 22-வது அயிட்டம் பிரகாரம் பலம் 25-ஆகும். சந்திரன் இராசிச் சக்கிரத்தில் 10-வது இராசியிலிருப்பதால் 22-வது அயிட்டம் பிரகாரம் பலம் 100-ஆகும். இவ்விதமாகவே மற்ற கிரகங்களுக்கும் துவாதச ராசியிலிருக்கும் பலம் (அதாவது) கேந்திரபலத்தை அறியவும்.

சூரியன் இராசி சக்கிரத்தில் புதன் வீட்டில் இருக்கின்றார். ஜாதக கணிதத்தின் (2-வது பதிப்பில்) 15-வது கட்டத்தில் சூரியனுக்குப் புதன் மித்திரன் என்று கண்டிருக்கின்றது. ஆகையால் சூரியனிருக்கின்ற ராசியாதிபதியாகிய புதன் மித்திரன். 44-வது அயிட்டம் பிரகாரம் சூரியன் மித்துரு கிரகத்தின் இராசியில் இருப்பதால் பலம் 25 ஆகும். இவ்விதமாகவே சந்திரன் முதல் சனிவரையிலுமுள்ள கிரகங்களுக்குக் கணிக்கவும். இராகு ராசிச்சக்கிரத்தில் சந்திரனுடைய இராசியில் இருக்கின்றார். இந்த சந்திரன் ராசிச் சக்கிரத்தில் இராகு இருக்கும்

வீட்டிலேயே இருப்பதால் 32-வது அயிட்டத்தில் சொல்லியுள்ள தற்கால மித்துரு, சத்துரு அறியும் விதி பிரகாரம் இராகுக்குச் சந்திரன் தற்காலச் சத்துரு ஆகும். இராகுக்குச் சந்திரன் 31-வது அயிட்டம் பிரகாரம் நைசர்க்கிக சத்துரு. ஆகையால் 33-வது அயிட்டம் பிரகாரம் இராகுக்குச் சந்திரன் அதிசத்துருவாகும். அதிசத்துரு வீட்டிலிருக்கின்ற இராகுக்கு 44-வது அயிட்டம் பிரகாரம் ஸ்தான பலம் 3-ஆகும். இவ்விதமாகவே கேது இருக்கும் இராசியாதிபதியாகிய சனி, கேதுக்கு 32-வது அயிட்டம் பிரகாரம் தற்கால மித்துரு ஆகும். 31-வது அயிட்டம் பிரகாரம் நைசர்க்கிக மித்துரு ஆகும். ஆகையால் கேதுக்குச் சனி 33-வது அயிட்டம் பிரகாரம் அதிமித்துருவாகும். ஆகையால் 44 வது அயிட்டம் பிரகாரம் கேதுக்கு ஸ்தான பலம் 38 ஆகும். இவ்விதமாக ஒவ்வொரு கிரகத்திற்கும் ஸ்தான பலம், கேந்திர பலம் இவைகளைச் சேர்க்க வருகின்ற பலமாகிய "கிரக பலம்" என்பதைக் கணித்து வைத்துக் கொள்ள வேண்டும். சட்பல கணிதத்திலும், பாவ பல கணிதத்திலும், இராகு கேதுக்களை விட்டுவிட்டு இருப்பதால் இராகு கேதுகளைப் பற்றி கவனிக்க வேண்டியதில்லை. இராகு கேதுக்களையும் எடுத்துக் கொண்டு பலாபலன் சொல்ல வேண்டும் என்ற அபிப்பிராய முள்ளவர்கள் இராகு கேதுக்கள் இருக்கும் பாவத்தை அல்லது தங்களுடன் சேர்ந்திருக்கும் கிரகத்தை மாத்திரம் முழுபார்வையாகப் பார்ப்பது போல் எடுத்துக் கொள்ளவும். மீதி வீடுகளைப் பார்ப்பதாகப் பாவிக்க வேண்டாம். உதாரணமாக ஆயுளை அறிய வேண்டுமானால் 1-வது, 3-வது, 8-வது, 10-வது பாவங்கள் சனி இவைகளின் வலிவைக் கொண்டு அறியவேண்டும். இவைகளின்வலிவை அறியவேண்டுமானால் இவைகளைப் பார்க்கும் அல்லது இவைகளுடன் இருக்கும் கிரகத்தாலுண்டாகின்ற சுபாசுப பலத்தின் பரிமாணத்தை அறிய வேண்டும். இந்த பாவங்களின்பாவாதிபதிகளைப் பார்க்கும் அல்லது இந்த பாவாதிபதிகளுடன் இருக்கும் கிரகத்தாலுண்டாகும் சுபா அசுபபலத்தில் பரிமாணத்தைக் கணிக்கவேண்டும்.

1-வது பாவம்:— 1-வது பாவத்தை 21-வது அயிட்டம் பிரகாரம் பார்க்கும் கிரகங்கள் என்ன என்று பாவச் சக்கிரத்தைப் பார்த்து அறிய வேண்டும். இவ்விதம் பாவச் சக்கிரத்தை பார்க்க 1-வது பாவத்தைச் சந்திரன் 3-வது பார்வையாக $\frac{1}{4}$ பார்வையுடன் பார்க்கின்றது. புதன் பாவச்சக்கிரத்தில் லக்கினத்திலேயே இருப்பதால் புதன் 1-வது

பாவத்தைப் பூர்ணபலத்துடன் பார்க்கின்றனர். மீதி கிரகங்கள் 1–வது பாவத்தைப் பார்க்கவில்லை.

சந்திரனுடைய பார்வையின் சுபா அசுப பலம்.— சந்திரனுடைய கிரகபலம் 150 என்று முன்னமே கணித்து வைத்திருக்கின்றோம். சந்திரனுடைய பார்வையின் அளவு $\frac{1}{4}$ ரூபம் அல்லது நமது கணிதப்படி 25. இந்த 150யையும் 25-யையும் கூட்ட 175 வரும். இதை 3-ஆல் வகுக்க $58\frac{1}{3}$ அல்லது முழு எண் கணக்கில் 58 வரும். இந்த ஜாதகத்திற்குச் சந்திரன் முழு பாவியானபடியால் இந்த 58ல் முழுபாகமே சந்திரனுடைய பாப பலம் ஆகும். அதாவது சந்திரன் 1-வது பாவத்தைப் பார்க்கும் அளவு அசுப பலமாகிய 58.

புதன் பார்வையின் சுபா அசுப பலன்:— புதனின் கிரகபலம் 113 என்று முன்னமே கணித்து வைத்திருக்கின்றோம். புதனின் பார்வையின் அளவு 1 ரூபம் அல்லது 100. இந்த 113-யையும் 100-யையும் கூட்ட 213-வரும். இதை 3-ஆல் வகுக்க 71 வரும். இந்த ஜாதகத்திற்குப் புதன் அரை சுபன். ஆகையால் 71ல் அரை பாகமாகிய $35\frac{1}{2}$ அல்லது 36 தான் புதனின் சுபபலம் ஆகும். ஆகையால் புதன் 1-வது பாவத்தைப் பார்க்கும் சுப பலம் 36 ஆகும்.

பிறகு சந்திரன், புதன் இவர்களுடைய சுபா அசுப பலத்தின் நிகரம் அறியவும்.

கிரகம்	சுப பலம்	அசுப பலம்	சுப பலத்தை எல்லாம் ஒன்றாக
சந்திரன்	...	58	வும் அசுப பலத்தை எல்லாம் ஒன்
புதன்	36	...	றாகவும் கூட்ட சுப பலம் 36-ம்
	———	———	அசுப பலம் 58ம் வரும். பெரியவன்
கூட்ட	36	58	னிலிருந்து சிறியதைக் கழிக்க 22
நிகர அசுப பலம்	58—36 = 22 அசுபம்		வரும். பெரியது அசுப பலமாகையால் நிகரமாக வருகின்ற 22 அசுப

பலமாகும். ஆகையால் 1-வது பாவத்தின் நிகர பலம் 22, அசுப பலமாகும்

3-வது பாவம்:— 3-வது பாவத்தை 21-வது அயிட்டம் பிரகாரம் சூரியன் $\frac{3}{4}$ பார்வையுடனும், சந்திரன் $\frac{1}{2}$ பார்வையுடனும், புதன் $\frac{1}{4}$ பார்வையுடனும், குரு $\frac{3}{4}$ பார்வையுடனும், சனி முழுபார்வையுடனும் பார்க்கின்றார்கள், மற்ற கிரகங்கள் 3-வது பாவத்தைப் பார்க்கவில்லை.

கிரகம்	பலம்	(2)ம் (3)ம் பார்வை கூட்டவரும்		(4)ஐ (3) ஆல்வகுக்க வருவது	சுபாசுப பலவகை	(4)ஐ 6 ஆல்பெ ருக்க வரும் நிகர	
		அளவு	மொத்தம்			சுபம்	அசுபம்
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)
சூரியன்	50	75	125	42	½-பாபி	...	21
சந்திரன்	150	50	200	67	1-பாபி	...	67
புதன்	113	25	138	46	½-சுபன்	23	...
குரு	113	75	188	63	1-சுபன்	63	...
சனி	63	100	163	54	1-பாபி	...	54
					கூட்ட	86	142

நிகரம் 56 அசுபம்

ஆகையால் 3-வது பாவத்தின் நிகரபலம் 56 அசுப பலமாகும்.

8-வது பாவம்:— 8-வது பாவத்தை 21-வது அயிட்டம் பிரகாரம் சூரியன் ½ பார்வையுடனும், சந்திரன் ¼ பார்வையுடனும், செவ்வாய் முழு பார்வையுடனும், புதன் ¾ பார்வையுடனும், குரு முழு பார்வையுடனும் சுக்கிரன் முழு பார்வையுடனும் பார்க்கின்றார்கள் மற்ற கிரகங்கள் 8-வது பாவத்தைப் பார்க்கவில்லை.

(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)
சூ	50	50	100	33	½ பாபி		17
சந்	150	25	175	58	1 பாபி		58
செ	106	100	206	69	¾ பாபி		52
பு	113	75	188	63	½ சுபன்	32	
குரு	113	100	213	71	1 சுபன்	71	
சு	150	100	250	83	¾ சுபன்	62	
					கூட்ட	165	— 127

நிகரம் 38 சுபம்.

10-வது பாவம்:— 10-வது பாவத்தை 21-வது அயிட்டம் பிரகாரம் செவ்வாய் ½ பார்வை யுடனும் புதன் ¼ பார்வையுடனும், குரு ¼ பார்வையுடனும், சுக்கிரன் ½ பார்வையுடனும், சனி ¾ பார்வையுடனும், பார்க்கின்றார்கள் மற்ற கிரகங்கள் 10-வது பாவத்தைப் பார்க்கவில்லை.

(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)
செ	106	50	156	52	$\frac{3}{4}$ பாபி		39
புத	113	25	138	46	$\frac{1}{2}$ சுபன்	23	
குரு	113	25	138	46	1 சுபன்	46	
சுக்	150	50	200	67	$\frac{3}{4}$ சுபன்	50	
சனி	63	75	138	46	1 பாபி		46
					கூட்ட	119	— 85
					நிகரம்	34 சுபம்.	

1–வது பாவாதிபதி சுக்கிரனுடைய சுபா அசுப பலமும் நிரக கிரக பலமும்:— பாவாதிபதி காரகாதிபதி இவர்களின் சுபா அசுப பலத்தை எம்போதும் இராசிச்சக்கிரத்தைக் கொண்டு கணிக்கவும். சுக்கிரனைச் சந்திரன் $\frac{3}{4}$ பார்வையுடனும், செவ்வாய் முழுபார்வையுடனும், புதன் முழுபார்வையுடனும், குரு முழுபார்வையுடனும், பார்க்கின்றார்கள். மற்றக் கிரகங்கள் சுக்கிரனைப் பார்க்கவில்லை.

(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)
சந்	150	75	225	75	1 பாபி	,,	75
செ	106	100	206	69	$\frac{3}{4}$ பாபி	,,	52
புத	113	100	213	71	$\frac{1}{2}$ சுபன்	36	
குரு	113	100	213	71	1 சுபன்	71	
					கூட்ட	107	—127
					நிகரம்	20	அசுபம்

சுக்கிரனுடைய கிரக பலம் 150

ஆகையால் சுக்கிரனுடைய நிகர கிரகபலம் 130சுப பலம்

குறிப்பு:— ஒருகிரகத்திற்கு வரும் நிகர சுபா அசுப பலம் சுபமானால் அதை அந்த கிரகத்தின் கிரகபலத்துடன் சேர்க்க அந்த கிரகத்தின் நிகரகிரக பலம் வரும். நிகர சுபா அசுபபலம் அசுபமானால் அதை அந்த கிரகத்தின் கிரக பலத்திலிருந்து கழிக்க அந்த கிரகத்தின் நிகர கிரகபலம் வரும். இந்த நிகர கிரக பலத்தைச் சுபபலமாக வைத்துக் கொள்ளவும்.

3-வது பாவாதிபதி குருவினுடைய சுபா அசுப பலமும், நிகர கிரக பலமும்:—குருவைச் சூரியன் $\frac{3}{4}$ பார்வையுடனும், சந்திரன் $\frac{1}{4}$ பார்வையுடனும், செவ்வாய் முழுபார்வையுடனும், புதன் முழுபார்

வையுடனும், சுக்கிரன் முழு பார்வையுடனும், இராகு $\frac{1}{4}$ பார்வையுடனும், கேது $\frac{3}{4}$ பார்வையுடனும் பார்க்கின்றார்கள். மற்றக் கிரகம் குருவைப் பார்க்கவில்லை.

(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)
சூரி	50	75	125	42	$\frac{1}{2}$ பாபி	,,	21
சந்	150	25	175	58	1 பாபி	,,	58
செ	106	100	206	69	$\frac{3}{4}$ பாபி	,,	52
பு.த	113	100	213	71	$\frac{1}{2}$ சுபன்	36	,,
சுக்	150	100	250	83	$\frac{3}{4}$ சுபன்	62	,,
					கூட்ட	98	131
					நிகரம்	33 அசுபம்	

குருவினுடைய நிகர பலம் 113
குருவினுடைய நிகர சுபா அசுபபலம் 33 அசுபம்
ஆகையால் குருவினுடைய நிகர கிரக பலம் 80 சுபபலம்

8-வது பாவாதிபதி சுக்கிரனுடைய சுபாஅசுப பலமும், நிகர கிரக பலமும்:— 1-வது பாவாதிபதியாகக் கணித்து வந்த சுப பலமாகிய 130 யையே 8-வது பாவாதிபதியாகிய சுக்கிரனுடைய சுப பலமாக வைத்துக்கொள்ளவும்.

10-வது பாவாதிபதி சந்திரனுடைய சுபா அசுப பலமும், நிகர கிரக பலமும்:— சந்திரனைச் செவ்வாய் $\frac{1}{4}$ பார்வையுடனும், புதன் $\frac{1}{4}$ பார்வையுடனும், குரு $\frac{3}{4}$ பார்வையுடனும் சுக்கிரன் $\frac{1}{4}$ பார்வையுடனும் சனி $\frac{1}{2}$ பார்வையுடனும் பார்க்கின்றார்கள். மற்றக் கிரகம் சந்திரனைப் பார்க்கவில்லை.

(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)
செ	106	25	131	44	$\frac{3}{4}$ பாபி	,,	33
பு.த	113	25	138	46	$\frac{1}{2}$ சுபன்	23	
குரு	113	75	188	63	1 சுபன்	63	
சுக்	150	25	175	58	$\frac{3}{4}$ சுபன்	44	
சனி	63	50	113	38	1 பாபி		38
					கூட்ட	130	71
					நிகரம்	59 சுபம்	

சந்திரனுடைய கிரகபலம் 150
ஆகையால் சந்திரனுடைய நிகர கிரகபலம் 209 சுபபலம்.

ஆயுள்காரகனாகிய சனியினுடைய சுபா அசுப பலம்:— சனியைச் சூரியன் $\frac{1}{4}$ பார்வையுடனும், சந்திரன் $\frac{1}{2}$ பார்வையுடனும், குரு $\frac{3}{4}$ பார்வையுடனும், பார்க்கின்றார்கள். மற்றக் கிரகங்கள் சனியைப் பார்க்கவில்லை.

(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)
சூ	50	25	75	25	$\frac{1}{2}$ பாபி	...	13
சந்	150	50	200	67	1 பாபி	...	67
குரு	113	75	188	63	1 சுபன்	63	
					கூட்ட	63	80
					நிகரம்	17	அசுபம்.

சனியினுடைய கிரகபலம். 63
ஆகையால் சனியினுடைய நிகர கிரகபலம் 46 சுபபலம்.

பிறகு பாவங்களினுடைய நிகரசுபா அசுப பலத்தையும் பாவாதிபதி, காரகாதிபதி இவர்களின் நிகர கிரகபலத்தையும் கூட்ட வருகின்ற பலமே ஆயுள் பலம் ஆகும்.

அம்சம்	சுபபலம்	அசுபபலம்
1-வது பாவம்	,,	22
8 ,,	38	...
10 ,,	34	...
1-வது பாவாதிபதி	130	...
8 ,,	130	...
10 ,,	209	...
காரகாதிபதி-சனி	46	...
கூட்ட	587	22

நிகரம் 587 — 22 = 565 சுப பலம் அல்லது அம்சபலம்

ஆகையால் நாம் எடுத்துக்கொண்ட அம்சமாகிய ஆயுளின் அம்சபலம் 565 ஆகும். இதிலிருந்து ஆயுள் எவ்வளவு என்று கணிக்கவேண்டும். அதற்கு இங்குவந்த 565 பூர்ணபலமா, மத்திமபலமா, அதமபலமா என்று நிர்ணயஞ் செய்ய வேண்டும். இதை நிர்ணயிப்பதற்காக ஒரு அம்சத்திற்காக எத்தனை பாவங்களை எடுத்துக் கொள்ளுகிறோமோ அத்தனை பாவத்திற்கும் பாவம் ஒன்றுக்கு ஒன்று ரூபம் முழு பலமாக எடுத்துக் கொள்ளவும். எத்தனைக் கிரகங்களை எடுத்துக் கொள்ளுகிறோமோ அத்தனை

கிரகத்திற்கும் கிரகம் ஒன்றுக்கு மூன்று ரூபம் முழு பலமாக எடுத்துக் கொள்ளவும். இப்படி எடுத்துக் கொண்டு மொத்தத்தையும் கூட்ட வருகின்ற ரூபமே அந்த அம்சத்தின் பலத்தின் பூர்ண பரிமாணம் அல்லது அம்ச பூர்ண பரிமாணம் என்று வைத்துக் கொள்ளவும். பிறகு நாம் கணித்துவந்த அம்சபலம் அம்சபூர்ண பரிமாணத்தின் மூன்றில் ஒரு பங்கிற்கு மேற்பட்டால் அந்த அம்சம் பூர்ண பலமுடையது என்று பாவிக்கவும், அம்ச பூர்ண பரிமாணத்தின் மூன்றில் ஒருபங்கிற்குக் குறைந்து ஆறில் ஒரு பங்கிற்கு மேற்பட்ட அம்சபலம் இருந்தால் அந்த அம்சம் மத்திம பலமுடையது என்றும் பாவிக்கவும், அம்ச பலம் இந்த ஆறில் ஒரு பங்கிற்குக் குறைந்திருந்தால் அந்த அம்சம் அதம பலமுடையது என்று பாவிக்கவும். மூன்றில் ஒரு பங்கிற்கு திரிபாகம் என்றும் ஆறில் ஒரு பங்கிற்கு சட்பாகம் என்றும் பெயரி வோம். இந்த விதி எல்லா அம்சங்களுக்கும் பொதுவான விதி. இவ் விதமாகக் கூடிய மட்டும் சரியாய் அப்சங்களின் பலாபலத்தின் பல த்தை அறியலாம்.

நமது உதாரணத்தில் ஆயுளாகிய அம்சத்தை நிர்ணயிக்க 1-வது 8-வது, 10-வது ஆகிய மூன்று பாவங்களை எடுத்துக் கொண்டதால் பாவம் ஒன்றுக்கு ஒரு ரூபமாக மூன்று பாவங்களுக்கு மூன்று ரூபம் ஆகும். இந்த மூன்று பாவாதிபதிகளையும் ஒரு காரகாதிபதியையும் அதாவது மொத்தம் நான்கு கிரகங்களையும் (அதாவது சுக்கிரன், மறு படியும் சுக்கிரன், சந்திரன், சனி ஆக நான்கு) எடுத்துக் கொண்டதால் கிரகம் ஒன்றுக்கு மூன்று ரூபமாக நான்கு கிரகங்களுக்குக் கணக்கிட பன்னிரண்டு ரூபம் வரும். இந்த பன்னிரண்டு ரூபத்தையும் மேலே வந்த மூன்று ரூபத்தையுங் கூட்ட மொத்தம் பதினேந்து ரூபம் வரும். இந்த பதினேந்து ரூபம்தான் ஆயுளாகிய அம்சத்தின் அம்ச பூர்ண பரி மாணம் ஆகும். இந்த 15-ரூபத்தில் மூன்றில் ஒரு பங்கு 5 ரூபம் ஆகும். இந்த 5 ரூபம் நமது கணக்கில் 500 ஆகும். ஆகையால் அம்ச பலம் 500 ம் 500-க்கு மேற்பட்டும் இருந்தால் ஆயுள் பூர்ணாயுள். நம குக் வந்த அம்சபலம் 565 என்பது 500-க்கு மேற்பட்டு இருப்பதால் ஆயுள பூர்ணாயுள் ஆகும்.

அம்சபலம் திரி பாகத்தைவிடக் குறைந்திருக்கும் போது அம்சபல த்தை 66 வருஷத்தால் பெருக்கி திரி பாகத்தால் வகுக்க வரும் ஈவு வருஷமாகும், மிச்சத்தை 12-ஆல் பெருக்கி திரிபாகத்தால் வகுக்க வரும் ஈவு மாதமாகும், மிச்சத்தை 30-ஆல் பெருக்கி திரிபாகத்தால்

வருக்க வரும் ஈவு நாளாகும். இவ்விதமாக வருகின்ற வருஷம், மாதம், நாள், கணித்து வந்த ஆயுளாகும். நமது உதாரணத்தில் அம்ச பலமாகிய 565 என்பது முப்பாகமாகிய 500-க்கு மேற்பட்டிருப்பதால் ஜாதகருக்கு பூர்ணயுள் அதாவது 66 வரு க்கு மேற்பட்ட ஆயுள் உண்டு. 66 வருஷத்திற்கு மேற்பட்ட வயதைக் கணிப்போம். அம்ச பலத்திலிருந்து திரிபாகத்தைக் கழிக்கவும். இப்படிக் கழிக்க வரும் தொகையை அம்ச உபரிபலம் என்று பெயரிடுவோம் பிறகு அம்ச பூர்ண பரிமாணத்திலிருந்து திரி பாகத்தைக் கழிக்கவும், இப்படிக் கழிக்க வரும் தொகையைத் துஷி பாகம் என்று சொல்லுவோம். பிறகு அம்ச உபரி பலத்தை 54 வருஷத்தால் பெருக்கி துஷி பாகத்தால் வகுக்க வரும் ஈவு வருஷமாகும், மிச்சத்தை 12-ஆல் பெருக்கி துஷி பாகத்தால் வகுக்க வரும் ஈவு மாதமாகும், மிச்சத்தை 30-ஆல் பெருக்கி துஷி பாகத்தால் வகுக்க வரும் ஈவு நாளாகும். இப்படிச் செய்ய வந்த வருஷம், மாதம், நாளுடன் 66 வருஷத்தைக் கூட்ட வருகின்ற வருஷம் மாதம் நாள்தான் ஜாதகருடைய ஆயுளாகும். நமது உதாரணத்தில் அம்ச பலமாகிய 565-ல் இருந்து திரி பாகமாகிய 500 யைக் கழிக்க 65 வரும். இந்த 65-நாள் அம்ச உபரிபலம் ஆகும். பிறகு அம்ச பூர்ண பரிமாணமாகிய 15 ரூபம் அல்லது 1500-ல் இருந்து திரி பாகமாகிய 500-யைக் கழிக்க 1000 வரும். இந்த 1000தான் துஷி பாகமாகும். அம்ச உபரி பலமாகிய 65-யை 54 வருஷத்தால் பெருக்கி துஷி பாகமாகிய 1000த்தால் வகுக்க வருகின்ற ஈவு வாகிய 3, வருஷமாகும், மிச்சத்தை 12-ஆல் பெருக்கி 1000த்தால் வகுக்க வருகின்ற ஈவாகிய 6, மாதமாகும், மிச்சத்தை 30-ஆல் பெருக்கி 1000த்தால் வகுக்க வருகின்ற ஈவுவாகிய 3, நாளாகும். ஆகையால் இவ்விதம் வகுக்க 3-வருஷம் 6-மாதம் $3\frac{600}{1000}$ நாள் அதாவது 4நாள் வரும்: இதை பூர்ணயுளாகிய 66-வருஷத்துடன் கூட்ட வருகின்ற 69-வருஷம், 6-மாதம் 4-நாள் ஜாதகருடைய ஆயுளாகும். இவ்விதமாக ஆயுளைக் கூடிய மட்டும் சரியாகக் கணித்துக் கொண்டு அவ்வாயுளுக்கு அருகாமையாக வரும்படியாக மாரக தசா நாதனையும் புக்தி நாதனை யும் மாரக தசை, புக்தி நிர்ணயஞ் செய்யும் மார்க்கத்தில் நிர்ணயஞ் செய்து வயதைத் துல்லியமாக நிர்ணயஞ் செய்ய வேண்டும். ஒரு ஜாதகர் பிறந்தது முதல் மரணமடையும் பரியந்தம் மாரக தசைகள் அநேகம் வந்து கொண்டே இருக்கும். இந்த அநேக மாரக

தசைகளில் எந்த தசை மாரகஞ் செய்யும் என்று தீர்மானிப்பது மிகவும் கஷ்டமானது. ஆகையால் மேலே கணித முறையாய்க் கணித்து வந்த தோராயமான ஆயுளுக்கு (அதாவது 69 வரு-6மீ-4 நாளுக்கு) அருகாமையாக வருகிற மாரக தசையே மாரகஞ் செய்யுந் தசை என்று தீர்மானிக்க வேண்டியது. பிறகு மாரகஞ் செய்யும் புக்தி நாதனைச் சுலபமாக நிர்ணயஞ் செய்து கொள்ளலாம்.

குறிப்பு:—ஒவ்வொரு அம்சத்திற்கும் அம்சபலம், அம்சபூர்ண பரிமாணம் திரிபாகம், துவிபாகம் இவைகள் வித்தியாசப்படும்.

அம்ச பூரண பரிமாணத்தைக் கணிப்பதை இன்னொரு உதாரணத்தால்விளக்கிக் காட்டுவோம்:—தேகத்தின் நிலைமை அறிய வேண்டுமானால் 1-வது பாவம், 6-வது பாவம், சூரியன் இவைகளால் அறிய வேண்டும். இங்கு இரண்டு பாவங்களும் இரண்டு பாவத்திற்குரிய இரண்டு பாவாதிபதிகளும் ஒரு காரக கிரகமாகிய சூரியனும் இருக்கின்றார்கள். அதாவது இரண்டு பாவங்களும், இரண்டு பாவாதிபதியாகிய இரண்டு கிரகங்களும், சூரியனும் ஆக மொத்தம் மூன்று கிரகங்களும் இருக்கின்றன. இரண்டு பாவத்திற்குப் பாவம் 1-க்கு ஒரு ரூபமாக 2 ரூபமும், மூன்று கிரகங்களுக்கு கிரகம் ஒன்றுக்கு மூன்று ரூபமாக 9 ரூபம் வரும். பாவத்திற்காக வந்த 2 ரூபத்தையும், கிரகங்களுக்காக வந்த 9 ரூபத்தையும் கூட்ட 11 ரூபம் வரும். இந்த 11 ரூபம்தான் தேக நிலையாகிய அம்சத்தின் அம்சபூர்ணபரிமாணம் ஆகும். இந்த 11 ரூபத்தில் மூன்றில் ஒரு பங்காகிய $3\frac{2}{3}$ ரூபம் அல்லது 367 திரிபாகமாகும். 11 ரூபம் அல்லது 1100-ல் இருந்து 367-யைக் கழிக்க வருகின்ற 733 துவிபாகமாகும். அம்ச பலத்தை ஆயுளுக்குக் கணித்தது போல கணிக்க வேண்டும்.

நாம் எடுத்துக் கொண்ட 25 அம்சங்களுக்கும் அம்ச பூர்ண பரிமாணம், திரிபாகம், துவிபாகம், சட்பாகம் அடியிற் கண்டபடி ஆகும். இவைகளை அடிக்கடிக் கணிக்கும் சிரமத்தை நீக்கும் பொருட்டு இவைகள் அடியிற் கண்ட கட்டத்தில் கொடுக்கப் பட்டிருக்கின்றன. இவைகளை உபயோகப் படுத்திக் கொள்ளவும்.

நெ. (1)	அம்சங்கள் (2)	அம்சபூர்ணபரிமாணம் (3)	திரிபாகம் (4)	சட்பாகம் (5)	துரிபாகம் (6)
1	ஆயுள்	1500	500	250	1000
2	தேகம்	1100	367	183	733
3	நேத்திரம் வலது கண்	700	233	117	467
	இடது கண்	700	233	117	467
4	காதுகள் வலது காது	700	233	117	467
	இடது காது	700	233	117	467
5	வித்தை	2200	733	367	1467
6	வாகனம்	1100	367	183	733
7	பூமி	1900	633	317	1267
	வீடு	1100	367	183	733
8	மாதுரு	1500	500	250	1000
9	அம்மான்	1100	367	183	733
10	சத்துரு	700	233	117	467
11	ருணம்	1800	600	300	1200
12	களத்திரம்	1500	500	250	1000
13	புத்திரர்	1500	500	250	1000
14	பிதுர்	1100	367	183	733
15	யாத்திரை	2000	667	333	1333
16	ஜீவனம்	3900	1300	650	2600
	இராஜாங்க உத்தியோகம் சேவகாவிருத்தி	2100	700	350	1400
	வர்த்தகஜீவனமும் சுயஜீவனமும்	2200	733	367	1467
	கிருஷி ஜீவனம்	1100	367	183	833
17	சகோதரம்				
	சகோதரி மூத்தவர்	700	233	117	467
	,, இளையவர்	700	233	117	467
18	யோகபாவம்	2200	733	367	1467
19	சுகம்	1600	533	267	1067
20	பங்காளி	400	133	67	267
21	விரையம்	700	233	117	467
22	மாதுர் பாட்டன்	400	133	67	267
23	பசு மாடுகள்	700	233	117	467
24	சுதேச பரதேச வாசம்	800	267	133	533
25	பற்கள்	400	133	67	267

குறிப்பு:— ஒரு அம்ச பலம் 5-வது கலத்தில் கண்ட தொகைக்குக் குறைந்திருந்தால் அந்த அம்சம் அதம பலமுடையது, 4-வது, 5-வது கலங்களில் கண்ட தொகைக்கு இடையில் இருந்தால் அந்த அம்சம் மத்திம பலமுடையது, 4-வது கலத்தில் கண்ட தொகையும் அதற்கு மேற்பட்ட தொகையாயும் இருந்தால் அந்த அம்சம் பூர்ண பல முடையதாகும். 3-வது கலத்தில் கண்ட தொகைக்கு சரியாக இருந்தால் அந்த அம்சம் பரம பலமுடையதாகும். ஆயுள் ஒன்று மாத்திரம்தான் வருஷம்: மாதம், நாள் கணக்கில் கணிக்கப்படும். மீதி அம்சங்களின் பலத்தை மேலே கொடுத்த கட்டத்தால் பரிமானமாக அறிய வேண்டும்.

3-வது அத்தியாயம்.

துவாதச பாவஸ்தித நவக்கிரக பலாத்தியாயம்.

துவாதச பாவங்களில் நவக்கிரகங்கள் இருக்கும் பலன்கள்

குறிப்பு:— இங்கு சொல்லப்படுவது முந்தி அயிட்டம் 59 (1)-வது முதல் 59 (9)-வது அயிட்டம் வரையிலும் சொல்லப் பட்டதைவிட மிகவும் விசேஷமானது. வேறு கிரந்தத்தில் இருந்து தொடுக்கப் பட்டிருக்கின்றது.

1 வது பாவபலன்

(63) 1-வது பாவத்தில் இருக்கப்பட்ட கிரகம்:—

சூரியனுகில்:—ஜாதகன் சிவந்த கண்களுடையவன், அதிக கோப முடையவன், வாத பித்த சம்மந்தமான நோயுடையவன், வெளி தேசத்தில் பொருள் சேகரிப்பான்.

சந்திரனுகில்:—அந்த 1-வது பாவம் மேஷம், ரிஷபம், கடகமானுல் ஜாதகனுக்குச் சுபம் உண்டாகும், மற்ற இராசிகளாகில் ஜாதகனுக்கு செவிடு, குருடு, மந்த புத்தி முதலியன நேரும்.

செவ்வாயாகில்:— ஜாதகன் அதிகக் கோப முடையவன், கண் நோய், தலைநோய் உடையவன், தடியாலும், ஓட்டாங்குச்சியாலும், நெருப்பாலும் பயமுண்டு. தசை புக்திகளில் காயமும், நோயுமுண்டாகும்.

புதனுகில்:—ஜாதகன் வைத்திய வித்தையில் வல்லவன், எல்லா சபைகளிலும் புகழுடையவன். நோயற்றவன்.

குருவாகில்:—ஜாதகன் அழகிய தேகமுடையவன், நல்ல அலங்காரமுடையவன், வெகு மதிப்புடையவன், புத்திமான், குணமும், பொருளும் நிறைந்தவன்.

சுக்கிரனுகில்:— ஜாதகன் அழகிய ரூப முடையவன், நல்ல தோழர், நல்ல உடுப்பு, நல்ல தொழில், இவைகளுடன் கூடியவன், திவ்யாபரண பூஷண முடையவன்.

சனியாகில்:—ஜாதகன் தனவான், தனத்தில் நிறைந்த ஆசையுடையவன், பருத்த சரீர முடையவன், விஷப் பார்வையுடையவன், பார்வையாலேயே சத்துருக்களை அழிப்பவன்.

இராகுவாகில்:—ஜாதகன் தன் சொல்லைக் காப்பவன், அநேக மனுஷிகளிடம் ஆசையுடையவன், மிகு காம முடைய சரீர முடையவன்.

கேதுவாகில்:—ஜாதகன் வாத நோயுடையவன், எப்பொழுதும் ஸ்திரீ சிந்தை யுடையவன், பந்துக்களுக்குப் பிடையுண்டு பண்ணுபவன்.

(64) 1 வது பாவத்தில் இருக்கப்பட்ட கிரகம்:—

1-வது பாவாதிபதியாகில்:—ஜாதகன் நோயற்றவன், வெகு காலம் ஜீவித்திருப்பவன், பிரபு, மிக அழகிய சரீர முடையவன், வீடு, பூமி, தனம் இவைகளுடையவன்.

2-வது பாவாதிபதியாகில்:— ஜாதகன் லோபி யாயிருப்பான், உலகில் தனமுடையோன் என்று வழங்கப் படுபவன், தன் பிரயோஜனத்தையே கருதுபவன்,

3-வது பாவாதிபதியாகில்:— ஜாதகன் சபல புத்தி யுடையவன், எப்போதும் தன் ஜனங்களுக்குப் பேதஞ் செய்வதில் விருப்பமுடையவன், அல்ப விசுவாசமுடைய மனுஷி, புத்திரர், புத்திரிகளுடையவன்.

4-வது பாவாதிபதிகில்:— ஜாதகன் தாயிடம் அன்புடையவன், பிதாவிடம் உபாய அன்படையவன். நிலைத்த தன முடையவன்.

5-வது பாவாதிபதியாகில்:—ஜாதகன் சாஸ்திர மறிந்தவன், நற் செய்கை யுள்ளவன், நல்ல புத்தி யுள்ளவன், சாந்த குண முள்ளவன், இனிமையாய்ப் பேசுபவன்.

6-வது பாவாதிபதியாகில்:—ஜாதகன் தன் ஜனங்கள் சத்து ருவாவார்கள். அந்த தெசையில் வெகு கஷ்டமும், தன விரையமும் நேரிடும்.

7-வது பாவாதிபதியாகில்:—ஜாதகனுடைய மனைவி சுகபோகா திகளுற்ற, ரூப யௌவனமும் உடையவள், பர்த்தாவின் எண்ணத்தை அறிந்து நடப்பவள்.

8-வது பாவாதிபதியாகில்:— ஜாதகன் பல நோயுடையவன், வாதித்தல், எதிர்வாதஞ் செய்தல் இவைகளில் சமர்த்தன், அரசாங்கத்தால் தன வரவுண்டு.

9-வது பாவாதிபதியாகில்:—ஜாதகன் பெரியோர்களையும், தேவர் களையும் பூசிப்பவன், லோபி, அதிக தன முடையவன், எப்போதும் அரசாங்க காரியத்தில் பற்றுடையவன்.

10-வது பாவாதிபதியாகில்:— ஜாதகன் தாய் விரோதி, சுபக் கிரகமாகில் பிதாவை உபசரிப்பவன், பாபக் கிரகமாகில் பிதாவுக்கு விரோதி. ஜாதகனுடைய தாய் புருஷ ரூப முடையவள்.

11-வது பாவாதிபதியாகில்:—ஜாதகன் தன தான்யம் நிறைந்த வன். சுபக்கிரகமாகில் வாகனம் முதலிய எல்லா சுகங்களு முண்டு.

12-வது பாவாதிபதியாகில்:— ஜாதகன் உதார சிந்தையுடைய வன், விலை யுயர்ந்த வஸ்திரங்கள் தரிப்பவன், அழகிய சரீர முடையவன், நல்ல இருப்பிட முள்ளவன்.

குறிப்பு:—1-வது பாவத்தில் பல கிரகங்கள் பல ஆதிபத்தியங்கள் பெற்று இருந்தால் அந்தந்த கிரகத்தின் பலன்களையும் அந்தந்த ஆதிபத்தியத்தால் உண் டாகும் பலன்களையும் கூட்டி யோசித்து ஒழுங்குபடுத்தி பொதுப்பட பலன்க ளைச் சொல்லவும். இவ்விதமாகவே பின் வரப்போகின்ற மீதி பதினொன்று பாவங்களுக்கும் பலன்களைச் சொல்ல வேண்டும்.

2 வது பாவபலன்

(65) 2-வது பாவத்தில் இருக்கப்பட்ட கிரகம்:—

சூரியனுகில்:— ஜாதகன் அதிருஷ்ட முடையவன், தனவான், பொருள், சந்ததி, வாகனம், முதலியவை பெருக்குடைய வன், குடும்ப விருத்தி யுடையவன்.

சந்திரனுகில்.—ஜாதகன் ஸ்திரீகளுக்குப் பிரீதி செய்பவன்' எல்லாப் பொருள்களும் நிறைந்தவன், குடும்பத்தில் அற்ப பிரிய முடையவன், குடும்பி.

செவ்வாயாகில்:—ஜாதகனிடம் யாரும் நெறுங்காததால் அவனு டைய பணம் பலனற்றதாகும்.

புதனுகில்:— ஜாதகன் எல்லா சம்பத்தும் நிறைந்தவன், வித் வான், சூரன், வியாசங்கள் எழுதி ஜீவிப்பவன், உலகில் புகழுடையவன்.

குருவாகில்: —மிகு வருத்தத்தால் ஜாதகனுக்குப் பொருள் வர வுண்டு, கவி பாடுவதில் புத்தியைச் செலுத்துபவன், வீட்டில் தனம் நிற்காது.

சுக்கிரனுகில்:— ஜாதகன் அழகன், பிரியமாய்ப் பேசுபவன், நல்ல அறிவாளி, பசுக்க ளுடையவன், புண்ணியசாலி, தானஞ் செய்வதில் புத்தியைச் செலுத்துபவன்.

சனியாகில்:—ஜாதகன் குடும்பத்தை விலக்குவான், எல்லா யோகங்களுடன் கூடியவன், கடுமையாய்ப் பேசுபவன்.

இராகுவாகில்;—ஜாதகன் குடும்பப் பீடை யுடையவன், பய மற்றவன், உண்மை பேசுபவன், ஜெயிலில் வசிப்பவன்.

கேதுவாகில்:—ஜாதகனுக்கு தன நாசமுண்டு, சுகத்தாழ்வுண்டு, குடும்ப விரோதமுண்டு, தன் தசையில் மனவிக்குக் கொஞ்சஞ் சுகமுண்டு.

(66) 2-வது பாவத்தில் இருக்கப்பட்ட கிரகம்:—

1-வது பாவாதிபதியாகில்: —ஜாதகன் தனவான், நல்ல தேகமு டையோன், தினந்தோறும் சத்கருமஞ் செய்பவன், குலத் தில் முக்கியமானவன்.

2-வது பாவாதிபதியாகில்:—ஜாதகன் அதிக தனவான், தன் ஜனத்துடன் சுகமாய்ப் புஜிப்பவன், நவரத்தின மணிகள் சேர்ப்பவன்.

3-வது பாவாதிபதியாகில்:—ஜாதகன் தனமில்லாதவன், உபாய ஜீவனம் செய்பவன், அந்தக் கிரகம் குரூர கிரகமாகில் ஜாதகன் பந்துக்கள் விரோதமுடையவன், அந்தக் கிரகம் சுபக் கிரகமாகில் ஜாதகனுக்குச் சுப பலனுண்டு.

4வது பாவாதிபதியாகில்:—அந்தக் கிரகம் குரூரக் கிரகமாகில் ஜாதகன் தன் தகப்பனுக்கு விரோதஞ் செய்பவன், சுபக் கிரகமாகில் ஜாதகன் தகப்பனிடம் பக்தி யுடையவன், பிதுரு வாக்கிய பரிபாலனஞ் செய்பவன்.

5-வது பாவாதிபதியாகில்—அந்தக் கிரகம் குரூரக் கிரகமாகில் ஜாதகன் நாட்டிய சங்கீதப் பிரியன், கஷ்டத்தினல் பொருள் சம்பாதிப்பவன்.

6-வது பாவாதிபதியாகில்:— ஜாதகனுடைய குடும்பத்திற்கு ரோகம் நேரிடும், சத்துரு விருத்தியுண்டு, வைத்தியத்தில் பொருள் செலவுண்டு.

7-வது பாவாதிபதியாகில்:—ஜாதகனுடைய மனைவி தன முடையவள், தன் தனத்தைத் தன் பர்த்தாவுடன் அனுபவிக்கப் பட்ட மனைவியை யுடையவன்.

8-வது பாவாதிபதியாகில்:—ஜாதகன் அல்பமாய் ஜீவிப்பவன், அந்தக் கிரகம் குரூரக் கிரகமாகில் ஜாதகன் கெட்ட செய்கையுடையவன், அந்தக் கிரகம் சுபனாகில் ஜாதகன் நல்ல செய்கை யுடையவன்.

9-வது டாவாதிபதியாகில்:— ஜாதகன் ஆசார முடையவன், உண்மை பேசுபவன், புண்ணிய முடையவன், நாற்கால் ஜந்துவால் உண்டாக்கப்பட்ட காயத்தின் வடிவுடைய முகம் உடையவன்.

10-வது பாவாதிபதியாகில்:— ஜாதகனுக்கு அரசாங்கத்தால் தனவரவுண்டு, ஜாதகன் பலவித ஆசையுடன் கூடியவன், தன் மகன் கொஞ்சஞ் சம்பாதிப்பவன்.

11-வது டாவாதிபதியாகில்:-- ஜாதகன் தனவான், லோபி, குடும்பத்தில் சந்தோஷத்தை உண்டாக்குகிறவன், வாகனம் முதலிய சுகமுடையவன்.

12-வது டாவாதிபதியாகில்:— ஜாதகன் புருஷப் பிரயத்தனத்தால் பணஞ் சம்பாதிப்பவன், கொஞ்ச காலம் வீட்டில் வசிப்பவன், பிறகு தேசாந்திரம் போக நேரும்.

3-வது பாவபலன்

(67) 3-வது பாவத்தில் இருக்கப்பட்ட கிரகம்:—

சூரியனுகில்:—ஜாதகனுடைய மூத்த சகோதரனுக்குப் பீடை, ஜாதகன் தன் பிரயத்தனத்தால் தன மடைவான், சத்துரு அழிவர், ஜாதகனுக்கு அரசனிடமிருந்து சுகமுண்டு.

சந்திரனுகில்:—ஜாதகன் பலமும், பராக்கிரமமுடையவன், தன் பிரயத்தனத்தால் தனப் பிராப்தியுண்டு, பெண்களை மயக்குந் தன்மையுடையவன்.

செவ்வாயாகில்:—ஜாதகனுக்குப் பலமும், வீர்யமும் நாசமாகும். தனமும் பந்துவும் நாசமாகும், உலகத்தில் பரிகாசிக்கத் தக்கவன், செவ்வாய் அஸ்தங்கதனுய் இருந்தால் இந்த பலன்கள் இல்லை.

புதனுகில்:—ஜாதகன் வியாபார விஷயமான ஆலோசனையில் வல்லவன், வணக்க முடையவன், பொறுமையுடையவன், எல்லாத் தொழிலும் சாதிப்பதில் சமர்த்தன்.

குருவாகில்:—ஜாதகனுக்கு ஒரு பொழுதும் பாக்கிய விருத்தியில்லை, தோழர்களுஞ் நன்றி கெட்டவராவர், பந்துக்களுக்கும் அல்ப சுகமுண்டு.

சுக்கிரனுகில்:—ஜாதகன் பெண்களுக்குப் பிரியஞ் செய்பவன், பூர்ண சுக முடையவன், மகன், வேலையாட்கள் உடையவன், ஜாதகன் சண்டையில் பயந்தவன்.

சனியாகில்:— ஜாதகன் தடையில்லாதவன், பொறுமையற்றவன், திருப்தி செய்விக்க முடியாதவன், கொடியவன்,

யுக்தமாகப் பேசினாலுங்கூட யானைப் போல் மதிக்காதவன்,

இராகுவாகில்:—ஜாதகன் பல முடையவன், ஆனால் பராக்கிரம மற்றவன், சகோதரமும், பந்துக்களும் உடையவன், அல்ப பாக்கிய முடையவன்.

கேதுவாகில்:—ஜாதகனுடைய சத்துரு நாசமுண்டு, ஜாதகன் தன முடையவன், அனேக பீடையும், மனோ வியாதியுமுடையவன், பந்துவர்க்க நாசமுண்டு.

(68) 3-வது பாவத்திலிருக்கப்பட்ட கிரகம்:—

1-வது பாவாதிபதியாகில்:—ஜாதகன் பந்து மித்திரருடன் கூடியவன், தாதா, சூரன், தர்மஞ் செய்பவன், பல வீர்யங்களுடன் கூடியவன்.

2-வது பாவாதிபதியாகில்:—ஜாதகன் பந்துக்களுக்குப் பிரியன், பலவித சுகத்துடன் கூடியவன், அதிக பல பராக்கிரமமுடையவன.

3-வது பாவாதிபதியாகில்:—ஜாதகனுடைய பந்துக்களுக்குச் சுகமுண்டு பண்ணுபவன். தேவப் பிராமணப் பெரியோர்களிடத்தில் பக்தியுள்ளவன், ஜாதகனுக்குச் சந்தேகமில்லாமல் அரசனிடமிருந்து லாபமுண்டாகும்.

4-வது பாவாதிபதியாகில்:—ஜாதகன் எப்போதும் பந்து பரிபாலனஞ் செய்வான், காய, தகப்பன், சுகத்தை விரும்புவான், தனமும், சந்ததியும் பெறுக்குடையவன்.

5-வது பாவாதிபதியாகில்:—ஜாதகன் இனிமையான வாக்குடையவன், பண்டிதன், பந்து புத்திரர்களைக் காப்பவன், பல வீர்யத்துடன் கூடியவன்.

6-வது பாவாதிபதியாகில்:—ஜாதகனுடைய பந்துக்களுக்கு உபத்திரவமுண்டு, தகப்பனுக்கு மரண பயமுண்டு, இந்தக் கிரகத்தின் தசா புக்தியில் பலவிதமான நாசமுண்டு.

7-வது பாவாதிபதியாகில்.— ஜாதகனுடைய மனைவி அழகியவளும், பந்துக்களிடத்தில் பிரீதியுடையவளுமாவாள், இந்தக்

கிரகம் குரூரக் கிரகமாகில் மனைவி பர்த்தாவிடம் பிரீதி குறைந்தவள்.

8-வது டாவாதிபதியாகில்:—ஜாதகனுக்குத் தன் தோழர், பந்துக்கள் இவர்கள் விரோதியாவர், இல்லாவிடில் ஜாதகன் பந்துக்களற்றவன். கடுமையாய்ப் பேசுபவன்.

9-வது டாவாதிபதியாகில்:—ஜாதகன் பராக்கிரம முடையவன், பந்துக்களிடம் பிரீதி யுடையவன், எப்பொழுதும் பந்துக்களை ஆதரிப்பவன், ஸ்திரீகளுக்குச் சந்தோஷத்தை விருத்தி செய்பவன்.

10-வது டாவாதிபதியாகில்:—ஜாதகன் தாய்வழி பந்து விரோத முடையவன், அரச சேவையில் பற்றுடையவன். இந்தக் கிரகம் சுபக் கிரகமானால் ஜாதகன் பந்துக்களைக் காப்பவன்.

11-வது பாவாதிபதியாகில்:—ஜாதகன் பந்துக்களுக்குத் தனமளிப்பவன், பல வீர்யமுள்ளவன், ஆண், பெண் வேலையாட்களுடையவன்.

12-வது டாவாதிபதியாகில்:— ஜாதகன் சகோதர சுகத்தைக் கெடுப்பவன், இந்தக் கிரக தசையில் ஜாதகனுடைய தேக தூர்பலம் நேரும்.

4-வது பாவ பலன்.

(69) 4-வது டாவத்தில் இருக்கப்பட்ட கிரகம்:—

சூரியனாகில்:—இந்தச் சூரியன் ஸ்தான பலத்தில் வலுத்திருந்தால் ஜாதகன் சண்டை செய்பவன், சுகமற்றவன், மாதா, பிதா, சுகம் குறைவாயுடையவன், பொருள் காரணமாய் எப்போதும் தக்க முடையவன்.

சந்திரனாகில்:—ஜாதகனுக்கு அரசாங்கத்தால் தனவரவு உண்டு. மக்கள், மனைவி, சகோதரன் இவர்களுக்குச் சந்தோஷம் உண்டு பண்ணுபவன்.

செவ்வாயாகில்:—ஜாதகனுக்கு தாதனமான கொஞ்சம் பூதனமும், சுகமும் உண்டு.

புதனாகில்;- ஜாதகன் எல்லா சுகமும் நிரம்பியவன், இந்தக்

கிரகத்தின் தசையில் மாளிகை, கூட கோபுர வாகன முடையோன், இந்தக் கிரகத்தின் தசா, புக்திகளில் பொருள் விருத்தி யுண்டு.

குருவாகில்:—ஜாதகன் வாகனம் முதலிய சுக முடையவன், தேவப் பிராமணரிடம் மிக அன்புடையவன், சத்ருக்களும் அடி பணிவார்.

சுக்கிரனாகில்:—ஜாதகனுக்கு அதிக மகிமை உண்டாகும், சுகம் சம்பத்து இவைகள் நிறைந்திருக்கும், சத்துருக்களிடத்திலும் பிரியமாய்ப் பேசுபவன்.

சனியாகில்:—ஜாதகன் மாதா, பிதாக்களுக்குக் கஷ்டத்தைத் தருபவன், பந்து வர்க்கத்தால் விலக்கப் பட்டவன், தனியாக வீடும், வாகனமும் உடையவன்.

இராகுவாகில்:—ஜாதகன் மாதாவுக்குத் துக்கத்தை உண்டுபண்ணுபவன், வெளித் தோற்றத்தில் பொறுமையும் உள்ளில் தாபமும் உடையவன், இந்த ராகு இருக்கும் இடம் மேஷம், ரிஷபம், மிதுனம், கடகம், கன்னியாகில் ஜாதகனுக்கு உத்தம பலனைத் தரும், ஜாதகன் அரசாங்கத்தாரால் மதிக்கத் தக்கவனாகும்.

கேதுவாகில்:—ஜாதகனுடைய மாதாவுக்குப் பிடையுண்டு, பிதுர் நாசமுண்டு. இந்தக் கிரகம் இருக்கும் வீடு கேதுக்கு சுவ கேஷத்திரம், அல்லது உச்ச கேஷத்திரமானால் பலன் மாறுபட்டிருக்கும், அதாவது மாதா, பிதாவுக்குச் சுகமுண்டு.

(70) 4-வது பாவத்தில் இருக்கப்பட்ட கிரகம்:—

1-வது பாவாதிபதியாகில்:— ஜாதகன் அரசனிடதில் வேலை செய்பவன், தீர்க்காயுளுடையவன், அதிக பசியுடையவன், மாதா பிதாக்களை உபசரிப்பவன்.

2-வது பாவாதிபதியாகில்:—ஜாதகனுடைய பிதாவுக்கு எப்போதும் லாபமுண்டு, ஜாதகன் தீர்க்காயுளுடையவன், இந்தக் கிரகம் குரூரக் கிரகமாகில் ஜாதகன் நிச்சயமாய் தேசாந்திரத்தில் மறிப்பான்.

3-வது டாவாதிபதியாகில்:— இந்தக் கிரகம் சுபனாகில் ஜாதகன் பிதூர் தனமுடையவன். இந்தக் கிரகம் குரூரனாகில் ஜாதகன் பிதூர் தனத்தை அழிப்பவன், தரித்திரன், தன மில்லாத வனாக ஆவான்.

4-வது டாவாதிபதியாகில்:— ஜாதகன் எப்போதும் பிதாவுக்கு லாபத்தை யுண்டு பண்ணுபவன், ஜாதகன் அரசாங்கத்தில் அதிக மதிப்புடையவன்.

5-வது டாவாதிபதியாகில்:— ஜாதகன் தகப்பனுடைய தர்மத் தைக் காப்பவன், தாயிடம் பக்தியுடையவன், எப்போதும் ஆசார முடையவன், அளவாய்ப் பேசுபவன், தயையை யுடையவன்.

6-வது டாவாதிபதியாகில்:—ஜாதகனுக்குப் பிதாவும், புத்திரனும் விரோதியா யிருப்பார்கள். ஜாதகனுக்கு ஒரு சமயம் கஷ்ட மில்லாமல் பிதூர் தனப் பிராப்தியுண்டு.

7-வது டாவாதிபதியாகில்:— ஜாதகனுடைய மனைவி ஜாதகனு டைய பிதாவுக்கு விரோதமா யிருப்பவள். நிஷ்டூரமாய்ப் பேசுபவள்.

8-வது டாவாதிபதியாகில்:—ஜாதகன் தன் மாதா, பிதாவுக்கு வருத்தம் உண்டு பண்ணுபவன், தன் தகப்பன் தனத்தை அடைபவன்.

9-வது டாவாதிபதியாகில்:—ஜாதகன் தகப்பனுக்கு அநுகூல மானவன், உலகில் நல்ல புகழும், பெயரும் அடைந்தவன், எப்போதும் தகப்பனுடைய காரியத்தைச் செய்வதில் ஆசையும், பற்றும் உடையவன்.

10-வது டாவாதிபதியாகில்:—ஜாதகன் தன் தாய், தகப்பனைச் சந்தோஷிப்பவன், உலகில் புகழும், பெருமையும் கூடியவன், அரசாங்கத்தாரால் லாப மடைவான்.

11-வது டாவாதிபதியாகில்:— ஜாதகன் பிதா, மாதாக்களுக்கு கீழ் படிந்து நடப்பவன், பிதா தனம் அனுபவிப்பவன்.

12-வது டாவாதிபதியாகில்:—ஜாதகன் கஷ்டத்தினால் சுகமடை வான். இந்தக் கிரகத்தின் தசையில் சகோதரனுக்குக் கஷ்டம் நேரும்.

5-வது பாவபலன்.

(71) 5-வது பாவத்திலிருக்கப்பட்ட கிரகம்:—

சூரியனுகில்:—ஜாதகன் அற்ப சந்ததி யுடையவன், மந்திரம், மூலிகை, மருந்து இவைகளுடன் கூடியவன், சாஸ்திரங்கள் அறிந்தவன்.

சந்திரனுகில்:—ஜாதகன் புத்தியிலுயர்ந்தவன், அதிக சுசியா யிருப்பவன், பொன், பொருள், பூமி இவைகள் நிறைந் தவன், உதாரத் தன்மையுடையவன்.

செவ்வாயாகில்:—ஜாதகனுக்குச் சந்ததி கஷ்டம் உண்டு. மந்தி ரம், யந்திரம் அறியத்தக்க அநேக சாஸ்திரம் அறிந்தவன், தர்ம ஆச்சாரத்தில் தேர்ந்தவன்.

புதனுகில்:—ஜாதகனுக்கு முதல் கர்ப்பம் நாசமடையும், மார ணம், உச்சாடனம், மந்திரம், யந்திரங்கள் இவைகளில் சமர்த்தன்.

குருவாகில்:—ஜாதகன் கூர்மையான புத்தியுடையவன், கொஞ்ச மாகப்பேசுபவன், நன்றாய் எழுதுபவன், தனம், சந்ததி இவைகளுடன் கூடியவன்.

சுக்கிரனுகில்:—ஜாதகன் மந்திர சாஸ்திரத்தில் வல்லவன், கவி செய்வதில் கெட்டிக்காரன். பாபத்தன்மை யடைந்தவன், இஷ்டமான போஜனங்களில் பிரியமும், சுகமும் உடைய வன்.

சனியாகில்:—ஜாதகன் சந்ததியற்றவன், மந்தபுத்தியுடையவன், நல்ல செய்கைகளிலும் சாஸ்திர வாக்கியங்களிலும் நம் பிக்கையில்லாதவன்.

இராகுவாகில்:—ஜாதகனுக்கு மனைவியைப் பற்றியும், புத்திரர் களைப்பற்றியும் சிந்தையுண்டு. ஜாதகன் வயிற்று வலி யுள்ளவன், ஜாதகனுடைய மனைவி நோயுடையவள்.

கேதுவாகில்:—ஜாதகனுக்கு அற்ப சந்ததியுண்டு, ஜாதகன் நோயுடையவன், ஜாதகன் புத்தி குறைந்தவன்.

(72) 5-வது பாவத்தில் இருக்கப்பட்ட கிரகம்:—

1-வது பாவாதிபதியாகில்:—ஜாதகனுக்குச் சத்கர்மமுள்ள சந்ததி யுண்டாகும். நல்ல புத்தியுடையவன், நாட்டியம், காஞ்சிப் பிரியம்.

2-வது பாவாதிபதியாகில்:—ஜாதகன் லோபி, தக்க முடையவன், அதிக கஷ்டத்துடன் செய்யும் செய்கையால் உலகில் அல்பன் என்று பெயரெடுப்பவன்.

3-வது பாவாதிபதியாகில்:—ஜாதகன் புத்திரன், சகோதரர் இவர்களைக் காப்பாற்றுதவன், ஜாதகன் தீர்க்காயுளுடையவன், சுக மனுபவிப்பவன், பரோபகாரி.

4-வது பாவாதிபதியாகில்:—ஜாதகன் யானை, குதிரைகளுடன் கூடியவனாய்ப் பிள்ளைகளைக் காப்பவன், தீர்க்காயுளுடையவன், தன தான்யங்கள் நிரம்பியவன்.

5-வது பாவாதிபதியாகில்:—ஜாதகன் நல்ல புத்தியுடையவன், உண்மை பேசுபவன், எல்லாவற்றிலும் சமர்த்தன், புத்திரர்களின் மானத்தை வளர்க்கின்றவன்.

6-வது பாவாதிபதியாகில்:—குரூர கிரகமாகில் ஜாதகனுக்குத் தகப்பனும், புத்திரர்களும் விரோதியாவர். சுபக் கிரகமாகில் ஜாதகனுடைய தகப்பனும் புத்திரரும் மரண மடைவர்.

7-வது பாவாதிபதியாகில்:—ஜாதகனுடைய மனைவி எப்போதும் அதிர்ஷ்ட முள்ளவள், புத்திரனைக் காப்பவள். தன் பர்த்தாவுக்குப் பிரீதி செய்யாதவள்.

8-வது பாவாதிபதியாகில்:—குரூர கிரகமாகில் ஜாதகனுக்குப் புத்திரனேசமுண்டு. ஒரு சமயம் புத்திரனுண்டாகில் அந்தப் புத்திரன் எப்போதும் நோயும், துக்கமு முடையவன்.

9-வது பாவாதிபதியாகில்:—ஜாதகன் எப்போதும் பெரியோரிடத்தில் பக்தியுள்ளவன், அழகிய சரீர முடையவன், உயர்ந்த ரத்தின பூஷணங்களுடன் கூடியவன்.

10-வது பாவாதிபதியாகில்:—ஜாதகன் எப்போதும் நல்ல கர்மங்களில் ஆசையுள்ளவன், சங்கீதம் நாட்டியம் இவைகளில் பிரியன், அரசாங்க மூலம் தனம் வரவு உண்டு.

11-வது பாவாதிபதியாகில்:—ஜாதகன் புத்திர லாப முடைய வன், வித்தை யுடையவன், நல்ற் யுடையவன், மந்திர யந்திரங்களில் சமர்த்தன்.

12-வது பாவாதிபதியாகில்:— ஜாதகனுக்குச் சந்ததி கஷ்ட முண்டாகும், ஏதாவதொரு சுபக் கிரகம் நோக்கில் சந்ததி உண்டாகும்.

6-வது பாவபலன்

(73) 6-வது பாவத்தில் இருக்கப்பட்ட கிரகம்:—

சூரியனுகில்:—ஜாதகன் சத்துருக்கள், நோய்கள் இல்லாதவன், இராஜாங்கத்தில் வெகுமதிப்புள்ளவன், ஜாதகனுடைய அம்மானுக்குக் கஷ்டமுண்டு.

சந்திரனுகில்:—ஜாதகனுக்கு அரசரிடமிருந்து பயமுண்டு, சத்து ருக்கள் அதிகமாகவுண்டு, சிந்தை அதிகரிக்கும்.

செவ்வாயாகில்:—ஜாதகன் சத்துருக்களை வெல்லுவான், அர சருக்கு வேண்டியவன், அம்மானுக்குத் துக்கந்தருவான், தன தான்யம் நிறைந்தவன், எல்லா சுகமு முடையவன்.

புதனுகில்:—ஜாதகன் விரோதமுடையவன், தோழனும் விரோதி யாவான், ஜாதகன் கோப முடையவன். சாதுக்களையும் சண்டைக்கு இழுப்பவன்.

குருவாகில்:—ஜாதகன் மெலிந்த சரீர முடையவன், நோயுடைய வன், தாயும், தாய் பாமனும் நோயுடையவர்கள். ஜாதக னுடைய சத்துருக்கள் எப்போதும் தவிப்பார்கள்.

சுக்கிரனுகில்:—ஜாதகனுக்கு வழியில் திருடு பயமுண்டாகும், கெட்ட மந்திரங்களில் ஜபம் செய்வதால் பின்னல் தாப முடையவன்.

சனியாகில்:—ஜாதகனுடைய அம்மான் சுகமற்றவன், ஜாதகன் சத்துருக்கள், நோய்கள் அற்றவன், அரசாங்கத்தால் தன வரவு உடையவன்.

இராகுவாகில்:—ஜாதகன் பலம், புத்தி, தனம் இவைகளுடைய வன், சத்துருக்கள் அழிவர், அப்பான் ஸ்திர புத்தியுடைய வன்.

கேதுவாகில்:—ஜாதகனுக்கு நோயும், சத்துருவும் நாசமாகும். ஜாதகன் அரசாங்கத்தில் அதிக வெகுமதிப்புடையவன், வீட்டில் எருமை கறவை யுடையவன்.

(74) 6-வது பாவத்திலிருக்கப்பட்ட கிரகம்.

1-வது பாவாதிபதியாகில்:—ஜாதகன் எப்போதும் பூமி லாப முடையவன், லோபி, தனப்பெருக் குடையவன், தன் பக்கத்தைச் சேர்ந்தவர்களைப் பாழ் செய்பவன்.

2-வது பாவாதிபதியாகில்:—ஜாதகன் பொருள் சேர்ப்பதில் ஆசையுடையவன், பூலாபமுண்டு, சத்துரு நாசமுண்டு, அம்மானுக்குச் சுகமுண்டு.

3-வது பாவாதிபதியாகில்: —ஜாதகன் பந்துக்கள் விரோதமுடை யவன், கண் நோயுடையவன், சத்துரு பயமுண்டு, ஒரு சமயம் சித்தப் பிரம்மை கொள்பவன்.

4-வது பாவாதிபதியாகில்:—குரூர கிரகமாகில் ஜாதகன் தகப்பன் பொருளை அழிப்பவன், சுபக் கிரகமாகில் ஜாதகன் தனம் சேர்ப்பவன்.

5-வது பாவாதிபதியாகில்:—ஜாதகன் தினந்தோறும் கலகஞ் செய்பவன், நோயுடன் கூடியவன், தனத்தை அழிப்பவன், துஷ்டனென்று பெயரெடுப்பவன்.

6-வது பாவாதிபதியாகில் —ஜாதகனுடைய சத்துருக்கள் சுக மடைவர், துக்க மில்லாதவன், அம்மானுக்குச் சுகமுண்டு.

7-வது பாவாதிபதியாகில்:—ஜாதகனுடைய மனைவி நோயுடைய வள், கொஞ்சம் பிரியமற்றவள், கிரகம் குரூர கிரக மாகில் மனைவி மரணம்.

8-வது பாவாதிபதியாகில்:—சூரியனாகில் ஜாதகனுக்கு அரச விரோதமுண்டு, உச்ச குருவாகில் ஜாதகன் நல்ல பார்வை யுடையவன், சுக்கிரனாகில் ஜாதகன் அழகிய தேகமுடைய வன், நல்ல சோக்கையுடையவன்.

9-வது பாவாதிபதியாகில்:— ஜாதகனுக்கு லாபத்தை உண்டு பண்ணக்கூடிய சத்துருக்களுண்டு, ஜாதகன் நல்ல பார்வை யுடையவன், சத்துருவை தூஷிப்பவன், எப்போதாகிலும், தேகத்திற்குக் கஷ்டம் நேரிடும்.

10-வது பாவாதிபதியாகில்:—ஜாதகன் எப்போதும் சத்துருக்களுடையவன், லோபி, கஷ்டத்தை உண்டு பண்ணுகிறவன், தொழிலற்றவன், சுகமில்லாதவன்.

11-வது பாவாதிபதியாகில்:—ஜாதகனுக்குத் திருடர், நெருப்பு இவைகளால் பயம், அம்மானுக்குச் சுகத்தைத் தருபவன், எருமை பாக்கிய முடையவன்.

12-வது பாவாதிபதியாகில்:—ஜாதகனுடைய அம்மான், சத்துரு, இவர்கள் நாசமடைவார்கள், ஜாதகன் அரசாங்கத்தில் பணம் சம்பாதித்து தனவானுவான், சமர்த்தன்.

7-வது பாவபலன்

(75) 7-வது பாவத்தில் இருக்கப்பட்ட கிரகம்

சூரியனாகில்:—ஜாதகன் அற்ப லாப முடையவன், தேக பீடையும், சிந்தை பீடையும் உடையவன், மனைவியால் துக்க முடையவன்.

சந்திரனாகில்:—ஜாதகன் தர்மம், ஆசாரம் இவைகளுடையவன், ஜாதகனுடைய மனைவி அதிக ரூபவதியாயும், சாமர்த்திய முள்ளவளாயும், பர்த்தாவுக்குத் தகுந்தபடி நடந்து கொள்ளுபவளாயும் இருப்பாள்.

செவ்வாயாகில்:—ஜாதகன் மனைவி சுகமற்றவள், ஜாதகனுடைய மனைவி மரிப்பாள். இது ஸ்திரீ ஜாதகமாகில் ஜாதகி விதவையாவள்.

புதனாகில்:—ஜாதகன் அழகுடையவன், சபலன், நோயற்றவன், ஸ்திரீகளுக்கு விருப்பமற்றவன், அற்பயோக முடையவன்.

குருவாகில்:—ஜாதகன் இஷ்டப்படி நடக்கும் அழகியமனைவியுடையவன், புத்தியையும் மானத்தையும் பொருளாயுடையவன், புருஷனும் விரும்பத்தக்க ரூபமுடையவன்.

சுக்கிரனாகில்:—ஜாதகன் வெளிதேசம் செல்வான், ஜாதகனுடைய மனைவி வெகு அழகும் குணமும் உள்ளவள், ஒரு புத்திரனை இந்த கிரக திசையில் பெறுவாள்.

சனியாகில்:—ஜாதகன் ஸ்திரீசோக முடையவன், வெகுகாலம் தனம், மித்திரர், மனைவி இவர்கள் சுகம் குறைந்தவன்.

இராகுவாகில்:—ஜாதகன் எப்போதும் ஸ்திரீசோக முடையவன், மனோசிந்தை யுடையவன், உலக நிந்தையடைபவன்.

கேதுவாகில்:—ஜாதகன் மனைவி முதலிய சுகமற்றவன், பிரயாண காலத்தில் வழியில் சிந்தையுடையவன், ஜலத்தில் பயம் உடையவன், தன் தசா காலத்தில் லாப முண்டு.

(76) 7-வது பாவத்தில் இருக்கப்பட்ட கிரகம்.

1-வது பாவாதிபதியாகில்:—ஜாதகன் தேக காந்தி (தேஜஸ்) உடையவன், நல்ல குணமுள்ளவன், அவன் மனைவி நற்குண முடையவள், நல்ல அழகுடையவள், இஷ்டப்படி பேசுகிறவள்.

2-வது பாவாதிபதியாகில்.—ஜாதகன் நன்றாய் அனுபவிப்பவன், நல்லதை நினைப்பவன், சுப கிரகமாகில் மனைவி பொருளுடையவள், பாபக்கிரகமாகில் மனைவி மலடாவாள், வழுவியவளாவாள்.

3.வது பாவாதிபதியாகில்:—ஜாதகன் அதிக ரூபவதியான மனைவியுடையவன், அழகிய வஸ்திரம் ஆபரணம், தேவாலயாதிகளில் விருப்ப முடையவள்.

4-வது பாவாதிபதியாகில்:—ஜாதகன் சகோதரியைச் சுகமாய்க் காப்பவன், சுபக்கிரகமாகில் ஜாதகன் மனைவிக்குப் பிரீதி செய்பவன், செவ்வாயுடன் கூடிஞல் ஜாதகன் நபுஞ்சகன்.

5-வது பாவாதிபதியாகில்:—ஜாதகனுடைய மனைவி நல்லநடக்கை யுடையவள், அழகியவள், அளவாய்ப்பேசுபவள், எப்போதும் பர்த்தாவுக்கு விருப்பமாயுள்ளதைச் செய்பவள்.

6-வது பாவாதிபதியாகில்:—ஜாதகனுடைய மனைவி அழகற்றவள், கோபமுடையவள், கஷ்டத்தைத் தருபவள், விரோத முடையவள், மலடியாயிருப்பாள்.

7-வது பாவாதிபதியாகில்:—ஜாதகனுடைய மனைவி அழகுள்ளவள், நல்ல நடவடிக்கை யுள்ளவள், மாசற்ற குணமுள்ளவள், பூர்ண சுகமுடையவள், புத்திரனைப் பெறுபவள்.

8-வது பாவாதிபதியாகில்:—சந்திரனுகில் ஜாதகன் சர்ப்ப (விஷ) பயத்துடன் கூடியவன், புதனுகில் பாம்பு பயமுடையவன், ராகுவாகில் எப்போதும் கஷ்டமுடையவன், சனியாகில் சத்துரு நாசமுண்டு.....மீதி கிருகங்களுக்குக் கிரந்தத்தில் சொல்லி இருக்கவில்லை.

9-வது பாவாதிபதியாகில்:—ஜாதகனுடைய மனைவி நல்ல அழகுள்ளவள், உண்மை பேசபவள், இஷ்டமானவள், தனமுடையவள், எப்போதும் பர்த்தாவைத் துதிப்பதிலேயே கருத்துடையவள்.

10-வது பாவாதிபதியாகில்:— ஜாதகனுடைய மனைவி அழகுடையவள், பதிவிரதையானவள், நல்ல குணம், நல்ல ஆசாரம் உடையவள்.

11-வது பாவாதிபதியாகில்:—ஜாதகன் ஸ்திரீ தனத்துடன் கூடியவன், நல்லஆசாரமுடையவன், ஜாதகனுடைய மனைவி அழகாயும் பர்த்தவுடன் எப்போதும் பற்றுள்ளவளாயும் இருப்பாள்.

12-வது பாவாதிபதியாகில்:—ஜாதகன் பலவீனமான சரீரமுடையவன், மனைவி கஷ்டம் நேரும்.

8-வது பாவபலன்.

(77) 8-வது பாவத்தில் இருக்கப்பட்ட கிரகம்:—

சூரியனுகில்:—ஜாதகன் வியாபாரத்தில் பற்றுள்ளவன். அயலார் மனைவி, திருடர், தாசிகள் இவர்கள் விஷயமாய் எப்போதும் பொருள் அழிவு உண்டு.

சந்திரனுகில்:—ஜாதகன் வைத்தியம், ஔஷதம் இவைகளில் பற்றுள்ளவன், ஜோதிடத்தில் விருப்பமுள்ளவன், பல ரசவாதத்தில் சிரமப்பட்டவன்

செவ்வாயாகில்:—ஜாதகனுடைய தோழனும் விரோதியாவான், நல்ல செய்கையும் கெட்ட செய்கையாகும், நல்ல பலனில்லை.

புதனுகில்:—ஜாதகன் நூறுவயதுடையவன், வேறு தேசத்தில் தனப்பிராப்தியுண்டு, எப்போதும் அரசரிடமிருந்து செல் வாக்கும் புகழு முடையவன்,

குருவாகில்:- ஜாதகன் நோயற்றவன், வெகு காலம் பிழைத் திருப்பவன், ஓரிடத்திலும் நிலைத்திரான், முடிவில் சுவர்க்க லோகம் செல்வான்.

சுக்ரனுகில்:—ஜாதகன் வெகு காலம் ஜீவித்திருப்பவன், கட்டை யால் அதிக பொருள் அடைந்து பசு முதலியவைகளுடன் அதிக சுகமாய் வாழ்பவன்.

சனியாகில்.—ஜாதகன் எல்லா ரோகங்களுடனும் கூடியவன், பந்துக்களிடமிருந்து பிரிபவன், துஷ்டர் பிரியன், கெட்ட வழியில் பொருள் அழிவுண்டு.

இராகுவாகில்:—ஜாதகன் அரசர் மதிக்கத்தக்க பண்டிதன், பராக்கிரமத்தால் தனப் பிராப்தியுண்டு, சத்துருக்கள் அழிவர்.

கேதுவாகில்:—ஜாதகன் ஆசன ரோக முடையவன். கேது இருக்கும் இராசி, ரிஷபம், மிதுனம், கன்னி விருச்சிக மாகில் லாப முண்டு.

(78) 8-வது பாவத்தில் இருக்கப்பட்ட கிரகம்:—

1-வது பாவாதிபதியாகில்:—ஜாதகன் லோபி, தனம் சேகரிப்ப வன், சுபக் கிரகமாகில் தீர்க்காயுள், பாபக்கிரகமாகில் அற் பாயுள்.

2-வது பாவாதிபதியாகில்:— ஜாதகன் கபால மேந்து பவன், தன்னையே பாழாக்குபவன்.

3-வது பாவாதிபதியாகில்:—ஜாதகன் நோயுடைய சகோதரனு டையவன். இந்தக் கிரகம் குரூர கிரகமாகில் சகோதர னுக்கு ஆயுள் எட்டு வருஷம், சுபக் கிரகமாகில் சகோதர னுக்கு ரோகநாசமுண்டு.

4-வது பாவாதிபதியாகில்:—குரூரக் கிரகமாகில் ஜாதகன் எப் போதும் நோயாளி, தினந்தோறும் நீச்சத் தொழில் செய்பவன்.

5-வது பாவாதிபதியாகில்:—ஜாதகனுடைய பரனெளி இவன் பேச்சைக் கேளாதவன். ஜாதகனுக்கு நோயுள்ள பெண் பிறக்கும்.

6-வது டாவாதிபதியாகில்:—சனியாகில் ஜாதகனுடைய மனவிக்கு நோயுண்டு, குஜனுகில் சண்டை யுண்டு, சூரியனுகில் சிங்கத்தால் சாவு. மீதி கிரகங்களுக்கு கிரந்தத்தில் சொல்லி இருக்கவில்லை.

7-வது டாவாதிபதியாகில்:—ஜாதகன் தாசிகளிடத்தில் பற்றுள்ளவன், கிரகம் குரு கிரகமாகில் ஜாதகன் ஸ்ரீ களத்திரமுள்ளவன், சுபக்கிரகமாகில் தன்னிடத்தில் பிரியமுள்ள களத்திரமுடையவன்.

8-வது டாவாதிபதியாகில்:—ஜாதகன் நோயற்றவன், எப்போதாவது கெட்ட வியாதி தோன்றி மறையும்.

9-வது டாவாதிபதியாகில்:—ஜாதகன் பந்துக்கள், மித்தை இவைகள் இல்லாதவன். உலகில் நல்ல செய்கை யற்றவன், பூமியில் துஷ்டனுய்ச் சஞ்சரிப்பவன்.

10-வது பாவாதிபதியாகில்:—ஜாதகன் எப்போதும் நோயுடையவன், வாத பித்த ரோக முடையவன், வலது பக்கத்தில் பிடை யுடையவன்.

11-வது பாவாதிபதியாகில்:—ஜாதகன் அற்ப லாப முடையவன், கஷ்டத்தால் தனப் பிராப்தி யுண்டு. இந்தக் கிரக தசையில் நோயுண்டாகும்.

12-வது டாவாதிபதியாகில்:—ஜாதகனுக்குச் சுகமும், அதிர்ஷ்டமும் உண்டு, கொஞ்சம் சீர கஷ்டம் நேரும், பிறகு நிவர்த்தியாகும்.

9-வது பாவபலன்

(79) 9-வது டாவத்தில் இருக்கப்பட்ட கிரகம்:—

சூரியனுகில்:—ஜாதகன் தர்மம், குலாச்சாரம் இவைகளில் பற்றுள்ளவன், விவகாரத்தில் சமர்த்தன், கொண்டாடத்தக்கவன், எப்போதும் சகோதரனுக்குக் கஷ்டத்தை உண்டு பண்ணுபவன்.

சந்திரனுகில்:—ஜாதகன் அழகிய முக முடையவன், பாக்கிய விருத்தியும் சரீரசுகமு முடையவன், தேவப் பிராமணரிடம் ஆதரவுடை யவன்.

செவ்வாயாகில்:—ஜாதகன் துஷ்ட புத்தி யுடையவன், தூர் விஷயத்தில் பொருள் லாபமுண்டு, தன் பராக்கிரமத்தால் அற்ப தன லாபமுண்டு, சகோதரரும் ஜாதகனிடம் நெறுங்க மாட்டார்கள்.

புதனுகில்:—ஜாதகன் தர்ம குண முடையவன், அரசரிடம் பராக்கிரமத்தால் தன் வம்சத்திற்குச் சூரியன் போல் விளங்குபவன், நல்ல சங்கற்ப முடையவன்.

குருவாகில்:—ஜாதகன் தன் வம்ச தர்மத்தைக் காப்பவன், வணக்க முடையவன், சமர்த்தன், சகோதரன் ஆலஷ்யத் தால் மதம் பிடித்த சரீர முடையவன், தாய் அன்புடைய வன்.

சுக்கிரனுகில்:—ஜாதகனுக்குச் சரீர சுக விருத்தி யுண்டு, ஜாத கன் சகோதரர், புத்திரர், நல்ல தோழர் இவர்களுடன் வீடு, மாளிகை கட்டி வாழ்பவன்.

சனியாகில்:—ஜாதகன் யோக சாதனம் செய்வதில் பற்றுடை யவன், ரஜஸ் குண முடையவன், சகோதரர்களுக்கு அற்ப திருப்தி செய்கிறவன்.

இராகுவாகில்:—ஜாதகன் பந்து வர்க்கப் பிரயோஜன முடைய வன், அரசாங்கத்தால் பொருள் வரவுண்டு. தீர்த்த, தேவாலயத்தில் பற்றுடையவன்.

கேதுவாகில்:—ஜாதகனுக்குத் துக்க நாசமுண்டு, புத்திரன், தனம் உடையவன், மிலேச்சரிடத்திலிருந்து பாக்கிய விருத்தி யுண்டு, கை நோய் விருத்தி யுண்டு.

(80) 9-வது பாவத்தில் இருக்கப்பட்ட கிரகம்:—

1-வது பாவாதிபதியாகில்:—ஜாதகன் புண்ணியவான், பந்துக் களுடன் கூடியவன், சமர்த்தன், நல்ல நடவடிக்கை யுள்ள வன்.

2-வது பாவாதிபதியாகில்:—குரூர கிரகமாகிலும் ஜாதகன் பாக்கிய விருத்தி யுடையவன். குரூர கிரகம் இவன் சகோதரனைப் பிச்சை எடுக்கச் செய்யும்.

3-வது பாவாதிபதியாகில்:—குரூர கிரகமாகில் ஜாதகன் பந்துக்களுக்குப் பயத்தை உண்டு பண்ணுபவன், சுபக்கிரகமாகில் பந்துக்களுக்குச் சுகமுண்டு, சகோதர பக்தி யுடையவன்.

4-வது பாவாதிபதியாகில்:—ஜாதகன் தர்மமான செய்கை யுடையவன், பிதா தர்மத்தைக் கொள்ளுபவன், ஆசையற்றவன்.

5-வது பாவாதிபதியாகில்.—ஜாதகன் நல்ல வித்தை, வினயம் இவைகளுடையவன், கவி, சங்கீதம் முதலிய கலைகளில் வல்லவன், அரசனால் வெகுமதிக்கத் தக்கவன்.

6-வது பாவாதிபதியாகில்:—குரூர கிரகமாகில் ஜாதகனும் ஸ்திரீயும், பந்துக்களும் விரோதியாவர், வேத சாஸ்திரங்களில் பற்றில்லாதவன்.

7-வது பாவாதிபதியாகில்.—சுபக் கிரகமாகில் ஜாதகனுடைய ஸ்திரீ அழகுள்ளவள், நல்ல சீல முடையவள், புருஷனுக்கு இஷ்டமானவள். பாபக கிரகமாகில் ஜாதகனுடைய ஸ்திரீ விகார ரூப முடையவள், தினம் சண்டையிடுபவள்.

8-வது பாவாதிபதியாகில்:—ஜாதகன் துஷ்ட சகவாச புரியவன், பிராணிகளை வதைப்பவன், பந்துக்கள் இல்லாதவன், உலகப்பற்றை விலக்குபவன்.

9-வது பாவாதிபதியாகில்.—ஜாதகன் தர்ம மூர்த்தி, அகன்ற கண்களுடையவன், பந்துக்களிடம் வெகு பிரீதி யுடையவன், தானம் செய்பவன், தேவர்களைத் தொழுபவன்.

10-வது பாவாதிபதியாகில்:—ஜாதகன் சத்தியவான், மாதாபிதாருபக்தி யுடையவன், தன தான்யங்களுடன் கூடியவன்.

11-வது பாவாதிபதியாகில்:—ஜாதகன் பலவித லாபத்துடன் கூடியவன், தர்ம சீலன், புகழுடையவன், சகோதரருக்குச் சுகமளிப்பவன்.

12-வது பாவாதிபதியாகில்:—ஜாதகன் கஷ்டத்தால் தர்ம காரியஞ் செய்பவன், இந்தக் கிரக தசையில் பாக்கியம் அழியும்.

10 வது பாவ பலன்.

(81) 10-வது பாவத்தில் இருக்கப்பட்ட கிரகம்:—

சூரியனாகில்:—ஜாதகன் அரசனுக்கு நிகரான மதிப்புடையவன். ஒரு சமயம் தாய்க்குக் கஷ்டம் கொடுப்பவன், எல்லா காரிய சித்தியு முடையவன்.

சந்திரனாகில்.—ஜாதகன் நூதன ஸ்திரீ அனுபோக முடையவன், யானை முதலிய வாகனங்களும், சுகம், சம்பத்து, ஆக்ஞை முதலியவைகளும் உடையவன்.

செவ்வாயாகில்:—ஜாதகன் அதேக பணியாளுடையவன், ஹீன கிருகத்தில் பிறந்தாலும் ஜாதகன் சிம்மம் போன்ற பராக்கிரம முடையவன்.

புதனாகில்:—ஜாதகன் அரசன் போல் விளங்குவான், தாய் தகப்பன், பெரியோரிடம் பக்தி யுடையவன், பிதுர் தனத்தால் திர்த்த யாத்திரை செப்பவன்.

குருவாகில்:—ஜாதகன் ஒரு கௌரவப் பட்டம் உடையவன், தனம் முதலியன சேகரிப்பவன், வீடும், சித்திரங்களு முடையவன்.

சுக்கிரனாகில்:—ஜாதகன் ஆசான் போல் ஜீவிப்பதில் சமர்த்தன், மனக்கலக்க முடையவன், பணத்திற்கு ஆசைப்படுபவன்.

சனியாகில்:—ஜாதகன் தாய் சுகமற்றவன், தன் கையால் தனமடைவான், தகப்பனுக்குக் கஷ்டமுண்டு.

இராகுவாகில்;—ஜாதகன் மிலேச்சர்களுக்குப் பிரீதி செய்பவன், உயர்ந்த ஜாதி பெண்ணைச் சேர்ந்து கெட்டவழியில் பொருளை அழிப்பவன்.

கேதுவாகில்:—ஜாதகனுடைய பிதாவுக்குச் சுகமில்லை. கேது மேஷம், கன்னி, விருச்சிகம் இவைகளில் இருந்தால் சத்துருபய முண்டு, தனவிருத்தியுண்டு.

(82) 10-வது பாவத்தில் இருக்கபபட்ட கிரகம்:—

1-வது டாவாதிபதியாகில்:—ஜாதகன் நல்ல சிலமுடையவன், பண்டிதன், அரசனிடம் வெகுமதிப்பு, தனம் பெற்று எங்கும் புகழ்பெறுவான், பெரியோர்களோப பூஜிப்பவன்.

2-வது டாவாதிபதியாகில்:—ஜாதகனுக்கு அரசாங்கத்தால் தனம் பிராப்தியுண்டு, இந்தக் கிரகம் சுபக்கிரகமாகில் தன் வர்க்கத்தாரையும் தாய், தகப்பனையும் காப்பவன்.

3-வது டாவாதிபதியாகில்:—ஜாதகன் அரசனுகிலும் சகோதரன் போலிருப்பான், தினந்தோறும் அழகிய வஸ்திரந் தரிப்பவன், தன் ஜாதி மானத்தைப் பெருக்கச் செய்பவன்.

4-வது டாவாதிபதியாகில்:—இந்தக்கிரகம் குரூரக்கிரகமானால் ஜாதகன் மாதா, பிதாவைக் கைவிடுபவன், இந்தக் கிரகம் சுபக் கிரகமாகில் ஜாதகன் மாதா, பிதாவுக்குப் பணிசெய்பவன், அரசரிடமிருந்து ஜாதகனுக்குத் தனவரவு உண்டு.

5-வது பாவாதிபதியாகில்—ஜாதகன் அரசரிடமிருந்து லாபமடைவான், தாயாருக்கு நிறைந்த சுகமுண்டு, ஒரு சமயம் அரசமந்திரி யாவான்.

6-வது பாவாதிபதியாகில்:—ஜாதகன் மாதா தோஷ முடையவன், கெட்ட புத்தியுடையவன், எப்போதும் துஷ்ட காரியங்களேச்செய்பவன்.

7-வது டாவாதிபதியாகில்:—ஜாதகன் அரசனல் வெருக்கப்பட்டவன். இந்தக் கிரகம் குரூரக்கிரகமாகில் ஜாதகன் சகோதரிக்குக்கெடுதல் செய்வான், கடுமையாய்ப் பேசுபவன், சண்டையிடுபவன்.

8-வது டாவாதிபதியாகில்—ஜாதகன் நீசசெய்கைசெய்பவன், இந்தக் கிரகம் குரூரக் கிரகமாகில் ஜாதகன் மந்தனுவான், தாயார் கஷ்டமுடையவன்.

9-வது டாவாதிபதியாகில்:—ஜாதகன் மாதா பிதாக்களே நன்முய் உபசரிப்பவன், வெகுமதிப்புடையவன், அரசாங்கத்தால் தனவரவுண்டு.

10-வது பாவாதிபதியாகில்:—சுபக்கிரகமாகில் ஜாதகன் நல்ல பார்வையுடையவன், அரசாங்கத்தில் வெகுமதிப்புண்டு, அரசனிடமிருந்து தனவரவு உண்டு.

11-வது பாவாதிபதியாகில்:—ஜாதகனுடைய தகப்பனுக்கு லாபமுண்டு, ஜாதகன் அரசாங்கத்தில் வெகுமதிப்புடையவன், பலவித பொருள் நிறைந்தவன்.

12-வது பாவாதிபதியாகில்:—ஜாதகன் தகப்பன் பொருளை அழிப்பான், ராஜமூலமாய் பொருள் அழியும்.

11-வது பாவபலன்

(83) 11-வது பாவத்தில் இருக்கப்பட்ட கிரகம்:—

சூரியனாகில்:—ஜாதகன் வாகனம் முதலியவை உடையவன், அரசாங்கத்தில் தனவரவு உண்டு, சத்துருக்கள் அழிவர்.

சந்திரனாகில்:—ஜாதகனுக்கு அரசன் மூலமாய்ப் பணம் வரும், புது வஸ்திர பூஷணங்கள் வெளி தேசத்தில் உண்டு, ஸ்திரீலோலன்.

செவ்வாயாகில்:—ஜாதகன் வாகனமுடையவன், பசுக்களுடையவன், எப்போதும் சத்துருக்கள் எதிர் நிற்கில் தோல்வியடைவர்.

புதனாகில்:—ஜாதகனுக்கு எப்போதும் லாபம் இருந்துகொண்டே இருக்கும், தேவப் பிராமணர்களைச் சந்தோஷிக்கச் செய்பவன, நல்ல வழியில் பொருள் செலவு செய்பவன்.

குருவாகில்:—ஜாதகன் பிதா, சகோதரன், பணியாள்கள் இவர்களுடன் கூடியவனாய் யானை சேனைகளுடையவனாய் உலகில் தனவந்தனாய் இருப்பான்.

சுக்கிரனாகில்:—ஜாதகன் நற்குணமுடையவன், சமர்த்தன், பூமி தனமுடையவன், கீர்த்தியுள்ளவன்.

சனியாகில்:—ஜாதகனுக்கு தனம், பெருமை அந்தஸ்து இவை வெகுகாலம் நீடித்திருக்கும், நோய் முதலியன இல்லாதவன், தீர்க்காயுளுடையவன்.

இராகுவாகில்:—ஜாதகன் நீச்சர்களுடைய பொருளை அடைவான், நீச்ச சேர்க்கை யுள்ளவன், நீச்சர்களுக்குப் பணி செய்தல், நீச்சர்களிடம் தன் பந்துக்களைச்சேர்த்தல், தானும் அவர்களிடம் பந்துவாதல்.

கேதுவாகில்:—ஜாதகன் நல்ல அதிர்ஷ்டமுடையவன், நல்ல வித்தை யுடையவன், அழகிய சரீரமுடையவன், விரும்பியர்ந்த வஸ்திரம் தரிப்பவன், சந்ததி கஷ்டமுடையவன்

(84) 11-வது பாவத்தில் இருக்கப்பட்ட கிரகம்:—

1-வது பாவாதிபதியாகில்:—ஜாதகன் சுகம், சந்ததி இவைகளுடையவன், இருதக்கிரக தசையில் லாபமுடையவன், தேஜஸ் உடையவன், தீர்க்காயுளுடையவன்.

2-வது பாவாதிபதியாகில்:—ஜாதகன் விவகாரத்தில் புத்தியைச் செலுத்துவதில் பிரியமுள்ளவன், சூரன், எழுபாய் இருப்பவன், இந்தக் கிரகம் சுபக்கிரகமாகில் தன வரவு உண்டு

3-வது பாவாதிபதியாகில்:—ஜாதகன் வித்தையை விரும்புகிறவன், இஷ்டபோஜனம் புசிப்பவன், இஷ்டவஸ்திரம் தரிப்பவன், இவன் சகோதரன் புத்திமான்.

4-வது பாவாதிபதியாகில்:—சுபக் கிரகமாகில் தன் ஊரில் ஜனனம், பாபராகில் அயலூரில் ஜெனித்தவன்.

5-வது பாவாதிபதியாகில்:—ஜாதகன் சங்கீதம், நாட்டியம் முதலியவைகளில் பிரிய முடையவன், உலகில் அரசனைப்போல விளங்குபவன்.

6-வது பாவாதிபதியாகில்:—குருராக் கிரகமாகில் ஜாதகன் விரோதிகளை அழிப்பவன், திருடர், நாற்கால்ஜந்து முதலியவைத் திருடி தனநாசம் உண்டுபண்ணுவன்.

7-வது பாவாதிபதியாகில்:—ஜாதகனுடைய மனைவி பக்தியும், நல்ல குணங்களுமுடையவள், நல்ல ஆச்சாரமுடையவள், அழகிய சிறிபபுடையவள், எப்போதும் பர்த்தாவிடம் பிரியமுடையவள்.

8-வது பாவாதிபதியாகில்:—ஜாதகன் பாலியத்தில் துக்க மனுபவிப்பவன், பின்னால் சுகமடைபவன்.

9-வது பாவாதிபதியாகில்:—ஜாதகன் யானை முதலிய வாகன சுகமுடைவன், அரசனுக்குச் சமானமானவன், இல்லாவிட்டால் அரசனுக்கு மந்திரியாகவாவது இருப்பான்.

10-வது பாவாதிபதியாகில்:—ஜாதகன் பலவிதமான தனமுடையவன், அரசாங்கத்தால் தனம் அடைவான், சௌக்கிய முடையவன்.

11-வது பாவாதிபதியாகில்:—ஜாதகன் அதிக திரவிய முடையவன், பல விதமான வாகன முடையவன், ஆண், பெண் ஆள்கள் உடையவன்.

12-வது பாவாதிபதியாகில்:—ஜாதகனுக்குச் சந்ததி கஷ்ட முண்டாகும், எவ்வளவு லாபமோ அவ்வளவு செலவுண்டு, தனம் வீட்டில் தங்காது.

12-வது பாவ பலன்

(85) (83) 12-வது பாவத்தில் இருக்கட்டட்ட கிரகம்:—

சூரியனுகில்:—ஜாதகனுக்குக் கண் பீடை யுண்டு, இல்லாவிடில் அற்ப பார்வை யுண்டு, தேசாந்தர வாசம், தன நாசத்தால் தவிப்பான், பந்துக்கள் விரோத முடையவன்.

சந்திரனுகில்:—ஜாதகனுக்கு நேத்திர ரோக முண்டு, சத்துரு சிந்தை யுண்டு, பிதுரு தேக பீடை, ஸ்திரீகளிடம் அற்ப பிரீதி யுண்டு.

செவ்வாயாகில்:—ஜாதகனுடைய பொன், பொருள், தனம் நாசமாகும், சாஸ்திரம் அறியாதவன், கர்ம சிந்தையால் பூமியில் மான மழிவான்.

புதனுகில்:—ஜாதகன் தேவ பூஜை முதலிய சுப விஷயத்தில் பொருள் செலவழிப்பான். சண்டையில் சத்துருக்கள் அழிவர், பொக்குஷத்தில் விசேஷ பொருள் சேரும்.

குருவாகில்:—ஜாதகன் அபிமானத்துடன் கூடியவன், உலகில் தன தான்யத்தைச் செலவழித்தும் பேரற்றவன்.

சுக்கிரனுகில்:—ஜாதகனுடைய தர்மம், புகழ், குணம் இவைகள் பாழடையும், எல்லாத் தோழர்களும் சத்துரு வாவார்கள்.

சனியாகில்:—ஜாதகன் மங்கலான கண்களுடையவன், தன் வீடுடையவன், சத்துருக்களை அழிப்பவன், வெளிதேசம் செல்லுவதில் விருப்பமுள்ளவன், லஜ்ஜையற்றவன், பெண்களை அழிப்பவன்.

இராகுவாகில்:—ஜாதகன் வாதரோக முடையவன், சாதுக்கள் விரோத முடையவன், துஷ்டர்களுக்குப் பிரீதி செய்பவன்.

கேதுவாகில்:—ஜாதகன் அம்பு எய்பவன், அரசனுக்கு நிகரானவன், ஆனைம் குற்யம், கால்கள், கண்கள் இவைகளில் பீடை யுடையவன், அம்மானுக்குச் சுகமுண்டு.

(86) 12-வது பாவத்தில் இருக்கப்பட்ட கிரகம்:—

1-வது பாவாதிபதியாகில்:—ஜாதகன் நிஷ்டுர முடையவன், கடுமையாய்ப் பேசுபவன், பாபம் செய்பவன், வேறு தேசம் சென்று திரிபவன்.

2-வது பாவாதிபதியாகில்:—ஜாதகன் தினந்தோறும் கெட்ட காரியங்கள் செய்பவன், குரூர கிரகமாகில் ஜாதகன் ஏழையாயிருப்பான், சுபக் கிரகமாகில் கொஞ்சம் தன முண்டு.

3-வது பாவாதிபதியாகில்:—ஜாதகனுடைய பந்துக்கள் வெகு தூரத்தில் வசிப்பவர், இல்லாவிடில் அற்ப விசுவாச முடையவராவர்.

4-வது பாவாதிபதியாகில்:—ஜாதகன் எப்போதும் நோயுடன் கூடியவன். கொஞ்சங்கூட சுகமடையமாட்டான்.

5-வது பாவாதிபதியாகில்:—குரூரனாகில் ஜாதகன் சந்ததியற்றவன், சுபராகில் புத்திரனுண்டு, தேசாந்திர கமனம் நேரும்.

6-வது பாவாதிபதியாகில்:—ஜாதகனுக்கு நாற்கால் பிராணிகளால் பொருள் அழிவுண்டு, வழிநடைப்போய் வருகையில் மரணம்.

7-வது பாவாதிபதியாகில்:—ஜாதகனுடைய மனைவி வீடு தங்க மாட்டாள், துர்நடத்தையுடையவள், தினந்தோறும் கலகஞ்செய்வதில் பிரியமுள்ளவள்.

8-வது பாவாதிபதியாகில்:—குரூர கிரகமாகில் ஜாதகன் வெட்க மற்றவன், துஷ்டன், களர்ந்த சரீரமுடையவன், பரிணவி சுகம் குறைந்தவன், புசிக்கத்தக்கது புசிக்கத்தகாதது என்று கருதாமல் எல்லாவற்றையும் புசிப்பவன்.

9-வது டாவாதிபதியாகில்:—சுபக்கிரகமாகில் ஜாதகன் வித்தை யுடையவன், குரூரக் கிரகமாகில் ஜாதகன் மூடன், அல்பன்.

10-வது பாவாதிபதியாகில்: - பிதுர் கார்யத்தால் ஜாதகனுக்குத் தனம் அழிவுண்டு, ஒரு சமயத்தில் பரஸ்திரீ பிரீதியை விருத்தி செய்பவன்,

11-வது பாவாதிபதியாகில்:—ஜாதகன் மந்தமான லாபமுடைய வன், கஷ்டத்தால் பொருள் சேர்ப்பவன், பொருள் வெகு காலம் நீடித்திராது.

12-வது பாவாதிபதியாகில்:—ஜாதகனுடைய சத்துரு நாச முண்டு, அரசாங்கத்தில் ஜாதகன் ஜெயமடைவான், தன தான்யங்களுடன் வாழ்வான்.

குறிப்பு:—எந்த எந்த அர்சங்கள் பூராச்சொல்லாமல் விட்டு விடப்பட்டிருக்கிறதோ அந்தந்த அர்சங்கள் நமக்குக்கிடைத்த கிரந்தத்தில் கொடுத்திருக்கவில்லை என்று பாவித்துக்கொள்ளவும்.

4-வது அத்தியாயம்.

சட்வர்க்க சட்பல பலாத்தியாயம்.

---

(87) சப்தவர்க்கங்களால் அறியப்படும் விபரங்கள்:—

(1) லக்கினத்திலிருந்து தேகத்தைப்பற்றி அறியலாம்.

(2) ஹோரையிலிருந்து பொருள், பிரயோஜனம், சம்பத்து இவைகளைப் பற்றி அறியலாம்.

(3) திரேக்காணத்திலிருந்து கர்ம பலனை அறியலாம்.

(4) சப்தமாம்சத்திலிருந்து சகோதரப் பலனை அறியலாம்.

(5) நவாம்சத்திலிருந்து சந்ததி பலனை அறியலாம்.

(6) தூவாதசாம்சத்திலிருந்து களத்திரப்பலனை அறியலாம்.

(7) திரிம்சாம்சத்திலிருந்து மரணத்தைப்பற்றி அறியலாம்.

(88) லக்கினத்தில் சட்வர்க்கப் பலன்கள்:—

(1) லக்கின பலன்:—இது விஷயமாய் லக்கின பாவத்தில் விசேஷமாய்ச் சொல்லி இருப்பதை வாசிக்கவும்.

(2) லக்கின ஹோரையின் பலன்:—ஹோராதிபன் பூர்ண பலமுடையவனாயிருந்தால் ஹோராதிபனுக்குள்ள குணத்தை ஜாதகன் அடைவான், ஹோரா லக்கினத்தில் அந்த ஹோரா லக்கினாதிபதி இருந்தாலும், அல்லது பார்த்தாலும் அந்த ஹோரைக்குப் பலம் அதிக முண்டு. ஜாதகன் சிரேஷ்டமான மன முடையவன், ஹோராதிபதி வேறு விதமாயிருந்தால் பலன் வேறு விதமாய் இருக்கும்.

லக்கினம் சூரிய ஹோரையாகில்:—ஜாதகன் கெட்ட மார்க்கத்தில் பிரவேசிப்பவன், துஷ்டன், அழகில்லாதவன், பாபம் செய்பவன், சகம், பொருளற்றவன், குணமில்லாதவன், வேலை செய்பவன், தூரிதமாய் நடப்பவன், பயந்த சுபாவ முடையவன், ஆழ்ந்த சிந்தையுடையவன், காமி, பரஸ்த்ரீகளிடம் ஆசை யுடையவன், தேவப்பிராமணர்களை நிந்திப்பவன்.

லக்கினம் சந்திரஹோரையாகில்:—ஜாதகன் பொறுமையுடையவன், எல்லா குணமும் நிறம்பியவன், எப்போதும் தோழர்களிடம் பிரியன், நிலைத்த செல்வ முடையவன், பலவித ரத்தினங்கள், உயர்ந்த குணமுடைய ஸ்த்ரீ, புத்திரர், தனங்களுடன் கூடியவன், நல்ல ரூப முடையவன், சுசியானவன், தியாகஞ் செய்பவன், பெருந்தன்மையில் ஆசையுடையவன், தன் காரியத்தில் கருத்துடையவன், அரசனுக்கு பாத்திரமானவன், வேலையாளரிடம் பிரியமுள்ளவன்.

சூரியன் சுபரால் டார்க்கப்பட்டால்:—தன் தேசத்திலிருப்பான். சந்திரனும் இவ்விதமே வேறு தேசத்தில் லாபம். வேறு விதமாகில் விரோத பலன். ஹோராதிபன் கேந்திரத்திலிருந்து சுபரால் பார்க்கப்பட்டாலும், சுபருடன் கூடினாலும் ஜாதகன் பொன், முத்து முதலியதும் பெறுவான், பாபருடன் கூடியாவது, பாபரால் பார்க்கப் பட்டாவதிருந்தால் ஜாதகன் இரும்பு முதலியது அல்லது கழுதை, எருமை முதலியது அடைவான்.

(3) லக்கினத்தின் திரேக்காணப் பலன்.

லக்கினத்தின் திரேக்காணாதிபதி:—

சூரியனுகில்:—ஜாதகன் தோஷ முடையவன், சூரன், ஸ்த்ரீ களுக்குத் தலைவன், துஷ்டன், தைரிய முடையவன், கெட்ட காரியத்தில் சமர்த்தன், மூர்க்கன், அருவருக்கத் தக்க பக்ஷத்தைச் சார்ந்தவன், அதிகம் புசிப்பவன், ஆசாரி யின் மனைவியை பெண்டாளுபவன், அற்ப சந்தான முடை யவன், சூதாட்டத்தில் தயாரானவன், பாவச் செய்கை யுடையவன், லோபி, அயோக்கியன், அதிக தூர் செய்கை யுடையவன்.

வளர்பிறை சந்திரனுகில்:—ஜாதகன் அழகிய தேகமும், சந்தி ரன் போன்ற முகமும் உடையவன், சில்ப சாஸ்திர மறிந்தவன், அதிகம் பேசுபவன்.

தேய் பிறை சந்திரனுகில்:—ஜாதகன் ஒரு சமயம் க்ஷய ரோக முடையவன், சாஸ்திரத்தில் மந்த புத்தியும், நல்ல நட வடிக்கையில் புத்தியுடையோன், பந்துக்களால் வெகுமதிக் கப்பட்டவன், சஞ்சல புத்தி யுடையவன், கர்மா தர்மங் களில் பற்றுடையவன், வெளி தேசத்தில் சமர்த்தன்.

குஜனுகில்:—ஜாதகன் தோஷ முடையவன், துஷ்டன், தன மில்லாதவன், பாப புத்தி யுடையவன், லோபி தனமும், புத்திரரும் இல்லாதவன், தைய யில்லாதவன், கல் மன முடையவன், துஷ்ட சுபாவ முடையவன், அதிகம் பேசு பவன், காய வடுவுள்ள தேக முடையவன், தன்னைப் போஷிப்பதிலேயே பற்றுடையவன், கோப முடையவன், நோய் பீடை யுடையவன், அயலாரை அண்டி ஜீவிப்பவன், நற்குண நற்செய்கை யில்லாதவன்.

புதனுகில்:—ஜாதகன் புத்தியில்லவல்லவன், அரசனால் வெகுமதிக் கப்பட்டவன், தீர்க்காயுளுடையவன், பல முடையவன், அதிக சந்தான முடையவன், சாந்த குண முடையவன், புகழுடையவன், சுசியானவன், கர்ம ஞானத்தில் பற்று டையவன், கெட்ட வழியில் பிரவேசியாதவன், எப்போ தும் சாதுக்களுக்குத் தலைவன், சாஸ்திரங்களறிந்தவன்,

குலத்திற்கு அலங்காரமானவன், அதிக தனம் தியாகம் செய்பவன், சந்தோஷ முடையவன்.

குருவாகில்:—ஜாதகன் தீர்க்காயுளுடையவன், நோயற்றவன், புத்தியிலுயர்ந்தவன், இனிமையான பார்வை யுடையவன், நற்குணங்களுக்கு இருப்பிட மானவன், கபட மற்றவன், தர்மவான், மோக்ஷ ஞானத்தில் சருத்துடையவன், தயைக்கு இருப்பிடமானவன், பொறுமை யுடையவன், நல்ல நடவடிக்கை யுள்ளவன், ஆசார முள்ளவன், நல்ல ஸ்திரீகள் சினேகத்தில் பிரியன், அயல் பெண்டுகளை விரும்புகிறவன், அழகன், செல்வவான்.

சுக்கிரனுகில்:—ஜாதகன் அழகிய தேக முடையவன், அரசனுக்குப் பாத்திர மானவன், எல்லா மறிந்தவனுயினும் ஜனங்களை ஆசைப்பட செய்வதில் சமர்த்தன், தானஞ் செய்பவன், நல்லோரைக் காப்பவன், முத்துக்கள், ரத்தினங்கள், உயர்ந்த ஜாதிப் பெண்கள், புத்திரர், பந்துக்கள் நிறைந்தவன், தயை யுடையவன், ஆசார முடையவன், பொறுமை யுடையவன், உண்மையில் ஆசை யுடையவன், கபட மற்றவன், தர்ம சிந்தை யுடையவன்.

சனியாகில்:—ஜாதகன் தோஷ முடையவன், துஷ்டன், மந்த மானவன், திருடன், கெட்ட செய்கை யுடையவன், லோபி, புத்திரரும் தனமுமற்றவன், ஏவத்தக்க குண மில்லாதவன், பாபி, ஆசான் மனவியைப் பெண்டாளுபவன், கோபமுடையவன், தயையற்றவன் துக்கத்தால் வருந்தி அழுபவன், குண மற்றவன், கர்ம பீடை யுடையவன்.

லக்கினத் திரேக்காணுதிபதி:—சுபனுகி லக்கினத்திலிருந்து சுபக்கிரகங்களுடன் கூடியாவது, சுபர்களால் பார்க்கப்பட்டாவதிருந்தால் ஜாதகன் நற்செய்கை செய்பவன், வெகு புகழுடையவன், இதற்கு மாறுபட்டிருந்தால் அசுபபலன் உண்டாகும்.

லக்கினத் திரேக்காணுதிபதி:—மித்திர, உச்ச கேஷத்திரத்திலிருந்தால் ஜாதகனுக்குச் சுப பலன் உண்டு, மித்தியாசமாகில் எல்லா வியாபாரத்திலும் லாபம் சந்தேக மில்லை.

(4) லக்கினத்தின் சப்தமாம்சத்தின் பலன்.

லக்கினம் சுபக் கிரக சப்தமாம்சத்தில்:—இருக்கப் பிறந்தவன் நல்ல சுபாவ முடையவன், லக்கினம் பாபக் கிரக சப்தமாம்சத்தில் இருக்கப் பிறந்தவன் மூர்க்கச் சுபாவ முடையவன். லக்கினத்தின் சப்தமாம்ச ஸ்தானத்தைச் சூரியன், குஜன், அல்லது குரு இவர்கள் அடைந்தாலும், பார்த்தாலும் ஜாதகன் தன் தகப்பனுக்குப் பிந்திய காலத்தில் பிறந்தவன். சுக்கிரன் புதன் இவர்கள் லக்கினத்தின் தசாம்ச ஸ்தானத்தை அடைந்தாலும், பார்த்தாலும் பிறவி பெண்ணாகும். இந்தப் பெண் தன் தகப்பனுக்குப் பிந்திய காலத்தில் பிறந்தவன்.

(5) (a) லக்கினத்தின் நவாம்சத்தின் பலன்.

லக்கினத்தின் நவாம்சாதிபதி:—

சூரியனாகில்:—ஜாதகன் நீண்டும் சுருண்டுமிருக்கும் மயிருடையவன், சமமான தேகமுடையவன், வெருத்தவன், கம்பீர மன முடையவன், காந்தி யுடையவன், போகிப்பதில் சமர்த்தன், எப்போதும் துஷ்ட சகவாச முடையவன், பேசாமலிருப்பவன், தைரிய முடையவன், அதிக சபலன், தன ஆசை யுடையவன், அதர்மம் செய்பவன், சுக முடையவன், துஷ்டன், சத்ருக்களை அழிப்பவன், அல்ப புத்திர ருடையவன்.

சந்திரனாகில்:—ஜாதகன் தங்க நிற முடையவன், உயரமும், குள்ளமு மில்லாதவன், விலத்தியான சரீர மயிருடையவன் வஸ்திராலங்கார முடையவன், நல்ல பார்வை யுடையவன், அதிக செல்வம் நிறம்பியவன், தர்ம சுபாவ முடையவன், குண மறிந்தவன், நல்ல ரூப முடையவன்.

குஜனாகில்:—ஜாதகன் மயிர் நுணியில் கபில நிற முடையவன், விசாலமான கண்களுடையவன், பின் சரீரம் கொஞ்சம் வெளுத்தவன், விகாரமான நகமுடையவன், காயவடுவுள்ள தலையுடையவன், காம முடையவன், துஷ்டன், துவேஷ முடையவன், காமாதுலன், பொன், பொருள் சேர்ப்பதில் சமர்த்தன், அனேகமாக அல்ப தர்ம முடையவன், சுக முடையவன், குரூரன், சத்ருக்களை அழிப்பவன், அதிக லோபி.

புதனுகில்:—ஜாதகன் கறுத்த நிறம், மிரண்ட கண்கள், சம தேகம், விசாலமான மார்பு, நீண்டு சுறுண்ட தலை மயிர், அழகிய பல்வரிசை இவைகள் உடையவன், அற்பாயுளு டையவன், கிரய விக்கிரயங்களில் சமர்த்தன், தைரியவான், செல்வவான், சுகவான், திவ்விய வஸ்திர புஷ்ப அலங்காரப் பிரியன்.

குருவாகில்:—ஜாதகன் கறுத்த நிறம், தாமரைபோன்ற முகம், கருநீசல் புஷ்பம்போன்ற கண்கள், உயர்ந்த தேகம், அழ கிய தலைமயிர் அதிக சுத்தமான நல்ல ரேகைகளை உடைய கைகள் இவைகள் உடையவன், புத்தியிலுயர்ந்தவன், அதி திகளிடம் பிரியமானவன், அதிக குணமுடையவன், சூரன், ஸ்த்ரீகளுக்கு நாதன், தனவான், இனிமையான குரலுடையவன்.

சுக்கிரனுகில்:—ஜாதகன் சிவந்த கடைக்கண் பார்வையுடைய வன், அழகிய தலைமயிர், அழகியதேகம், சங்குக்கு நிகரான கழுத்து, அழகிய நாபி, தளர்ந்த தேகம் இவைகளை உடை யவன், சூரன், சீமான், நல்நடவடிக்கை யுடையவன், கவி, அதிக தனவான், தான குணமுடையவன், குணமறிந்த வன், வஸ்திர அலங்காரங்களால் சந்தோஷமடைந்தவன், புஷ்பங்களில் பிரியன்.

சனியாகில்.—ஜாதகன் விலத்தியான தலைமயிர், பொன்னிற மயிர், மெலிந்த தேகம், அழகிய கண்கள், கறுத்த மேனி இவைகளை உடையவன், சுதந்திரமுடையவன், அதிக குணங்கள் நிறம்பியவன். பாப சுபாவமுடையவன், தர்ம மில்லாதவன், அளவுடைய தனபாக்கி யுடையவன்.

நவாம்ச லக்கினத்திலிருந்து ஐந்தாவது பாவாதிபனும், புதனும் சுபர்களுடன் கூடியாவது, அல்லது சுபரால் பார்க்கப்பட் டாவதிருந்தால் ஜாதகனுக்கு அதிக புத்திரர்கள் பிறப்பார் கள். பாபர்களுடன் கூடியாவது, பாபரால் பார்க்கப்பட்டா வதிருந்தால் ஜாதகனுக்குப் புத்திர சுகமில்லை.

(5) (b) லக்கினத்தின் நவாம்சம்.

1-வது நவாம்சமாகில்:—ஜாதகன் லோபி, சபலன், தைரிய வான், பாவச் செய்கை யுடையவன், மற்றவருக்குத் துன்பந்தருப வன், திருடுந்தன்மை வாய்ந்தவன்.

2-வது நவாம்சமாகில்:—ஜாதகன் தர்மவான், சத்தியவாதி, பல சாஸ்திரத்தில் சமர்த்தன், நிலையான விரத முடையவன், அதிக சந்தோஷ முடையவன்.

3-வது நவாம்சமாகில்:—ஜாதகன் தானே சம்பாதித்த மகிமை யுடையவன், போகி, சண்டையில் ஆசையற்ற மன முடையவன், கந்தர்வ ஸ்த்ரீ சங்கம முடையவன்.

4-வது நவாம்சமாகில்.—ஜாதகன் எல்லா லக்ஷணங்களும் நிறம்பியவன், எவ்விதத்திலும் தனவான்.

5-வது நவாம்சமாகில்:—ஜாதகன் தீர்க்காயுளுடையவன், அதிக புத்திரருடையவன்.

6-வது நவாம்சமாகில்:—ஜாதகன் பெண்டுகளால் ஜெயிக்கப் பட்டவன், சந்தானமற்றவன், அதிக மாயையுடையவன், அலித்தன முடையவன், ஆழ்ந்த விரோத முடையவன், அதிக சந்தோஷ முடை யவன்.

7-வது நவாம்சமாகில்:—ஜாதகன் பராக்கிரம முடையவன், புத்திமான், சூரன், சண்டையில் தோல்வியடையான், ஆழ்ந்த புத்தி யுடையவன், அதிக சந்தோஷ முடையவன்.

8-வது நவாம்சமாகில்:—ஜாதகன் தன்தர்மத்தில் சமர்த்தன், சாமர்த்திய முடையவன், மனதை ஜெயித்தவன், இந்திரியங்களை வென் றவன், பணியாளரைக் காப்பவன், சமர்த்தன்.

9-வது நவாம்சமாகில்:—ஜாதகன் 8-வது நவாம்சத்திற்குச் சொல்லியபடியே இருப்பான்.

(6) லக்கினத்தின் துவாதசாம்சப் பலன்.

லக்கினம் இருக்கும் துவாதசாம்சாதிபதி:—

(1) சூரியனாகில்:—ஜாதகன் தோஷமுடையவன், சபலன், குரூரன், அல்பாயுளுடையவன், தனமில்லாதவன், சோம் பேரி, காமமுடையவன், அல்ப தர்மமுடையவன்.

(2) சந்திரனுகில்:—ஜாதகன் பந்துக்களுக்கு இருப்பிடமான வன், பண்டிதன், தனவான், விருப்பத்தக்கவன், சில்ப சாஸ்திரமறிந்தவன், அதிக தர்மம் செய்பவன்.

(3) குஜனுகில்:—ஜாதகன் லோபி, தோஷமுடையவன், மூர்க்கன், பாபாத்மா, யோசிப்பதில் பிரியன், அல்ப தர்மம் செய்பவன்.

(4) புதனுகில்:—ஜாதகன் அழகனும், நல்ல நடவடிக்கையுடைய வன், வித்தையில் ஆசையுடையவன், பெரியோர், தேவரிடம் பக்தியுடையவன், மற்றவரால் தூஷிக்கப்படாதவன், ரஸங்களறிந்தவன்.

(5) குருவாகில்:—ஜாதகன் ஆசார முடையவன், சாஸ்திரார்த்தமறிந்தவன், நல்லுரப்பேசுபவன், சுகமுடையவன், தீர்க்காயுளுடையவன், பிரபு, தோழர்களால் அடையத்தக்கவன்.

(6) சுக்கிரனுகில்:—ஜாதகன் சூரன், அதிக தனமுடையவன், போகமனுபவிப்பவன், எப்போதும் நாட்டியம், சங்கீதம் இவைகளில் பிரியன், சுசியானவன், தானஞ்செய்பவன், பொறுமையுடையவன், நன்முய்ப் பேசுபவன்.

(7) சனியாகில்:—ஜாதகன் லோபி, சபலன், துஷ்டன், காமமுடையவன், அயலான் பொருளுக்கு ஆசைப்படுபவன், தோஷமுடையவன், குறைந்த தர்மமுடையவன்.

லக்கின துவாதசாம்சம்:—பலத்துடன் கூடி இருக்கில் ஜாதகனுக்கு அனேக தாரங்கள் உண்டு. லக்கின துவாதசாம்சாதிபதி பலமற்றிருக்கில் வித்தியாசமான பலன். லக்கின துவாதசாம்சாதிபன் சுபனுகில் மனைவி நல்லவள், பாபராகில் விகாரரூபமுடையவள்.

துவாதசாம்ச பலன் முற்றிற்று.

(7) லக்கினத்தின் திரிம்சாம்ச பலன்.

லக்கினத்தின் திரிம்சாம்சாதிபதி :—

(1) குஜனுகில்.—ஜாதகன் மூர்க்கன், அருவருக்கத்தக்க தேகன், கெட்டிக்காரன், அழகற்றவன், குரூரன், துஷ்டன், பொருளில்லாதவன், அயல் பெண்டுகளை அனுபவிப்பவன்,

பாபி, சத்துரு தனங்களை விரும்புபவன், அல்ப புத்தி யுடையவன்.

(2) சனியாகில்:—ஜாதகன் விக்தை, சுகம், பொருள் இவை களில்லாதவன், லோபி, அழகில்லாதவன், பெண்களுக்கு அடங்கியவன், எல்லாவற்றையும் அழிப்பவன், லோபிகள் நிறம்பப்பெற்றவன், ஏவல் செய்பவன், கெட்டவழியைக் கொண்டவன், தோஷமுடையவன், நன்றியறிவில்லாதவன்.

(3) குருவாகில்:—ஜாதகன் ஆசாரம், நயம் பராக்கிரமம் இவை களுடைய செய்கையுடையவன், ஒளி யுடையவன், நன்றியுள்ளவன், சுதந்திர முடையவன் தனவான், தீர்க்காயுளுடையவன், அதிக சந்ததியுடையவன், நிரைந்த பொருளுடையவன்.

(4) புதனாகில்:—ஜாதகன் தர்மம், காமம், புத்திரர், புகழ்க இவைகளுடன் கூடியவன், பண்டிதன், அறிவதில் சமர்த்தன், நல்ல குணமுடையவன், மதம் பிடித்தவன், அழகிய ஸ்திரீ, ஆபரணம், புஷ்பம், வாசனை இவைகளில் பற்றுடையவன்.

(5) சுக்கிரனாகில்:—ஜாதகன் அதிக குணங்கள் நிறைந்தவன், அழகன், அழகிய பார்வை யுடையவன், யௌவன ஸ்திரீ விஸ்வாசமுடையவன், எல்லா சாஸ்திரங்களு மறிந்தவன், தேவப்பிராமண பக்தன், தானஞ்செய்யுங் குணமுடையவன், தழையுடையவன்.

லக்கினம் நிற்கும் திரிம்சாம்சத்திலிருந்து:—8-ம் பாவாதிபன் சுபனாகி சுபரால் பார்க்கப்பட்டால் சுப திரிம்சாம்சத்தில் மரணம், சுபரில்லாவிடில் கெட்ட திரிம்சாம்சத்தில் மரணம்.

(89) சூரியனுடைய சட்வர்க்கம் முதலிய பலன்கள்.

(1) சூரியன் ஜனன காலத்தில் மேஷம் முதலிய ராசிகளில் இருக்கும் பலன்:—

(1) மேஷமாகில்:—ஜாதகன் சண்டையில் பராக்கிரம முடையவன், தனம், பலம் இவைகளுடன் கூடியவன், சாஸ்திரங்

களின் பொருளறிந்தவன், சொல், செய்கை இவைகளால் பிரசித்தியடைந்தவன், ஜெயத்தில் விருப்பமுடையவன், சத்துருக்களை அடக்குபவன், சிரேஷ்டமான காரியங்களைச் சாதிப்பவன்.

(2) ரிஷபமாகில்:—ஜாதகன் விரும்பியவாறு புஷ்பம், வாசனை முதலியன அடைபவன், வேண்டியவாறு, அன்ன வஸ்திரங்களால் அடையப்பட்ட சுகமுடையவன், சங்கீத வித்தையில் விருப்பமுள்ளவன், காம சாஸ்திரமறிந்தவன், நல்ல தோழர், வாகனங்களுடையவன், பந்துக்களிடம் பிரியமுடையவன், தைரியமான செய்கை செய்யுங் குணமுடையவன், தோஷமுடையவன் நோயால் அடிபட்ட சுகமுடையவன்.

(3) மிதுனமாகில்:—ஜாதகன் நல்ல ஆசாரம், குணங்களில்லாதவன், புத்திமான இனிமையாய் பேசுபவன், சாமர்த்தியமுள்ள சொல்லுடையவன், வணக்கமுடையவன்.

(4) கடகமாகில்:—ஜாதகன் பலவித சுகங்களனுபவிப்பவன், நற்குணங்களமைந்தவன்.

(5) சிம்மமாகில்:—ஜாதகன் சத்துருக்களை அழிப்பவன், அதிக கோபமுடையவன், பெருந்தன்மையான செய்கையுடையவன், சத்தியவான்களுள் உயர்ந்தவன், தன் சௌரியத்தால் புகழடைந்தவன், சந்தோஷமுடையவன், எப்போதும் பலவான்.

(6) கன்னியாகில்:—ஜாதகன் பலமற்றவன், அல்ப பனமுடையவன், மெதுவானதும், கெஞ்சத் தக்கதுமான சொல்லுடையவன், பெண்களுக்குச் சமமான பலமுடையவன், உலோப குணமுடையவன், எப்போதும் பெரியோரை நிந்திப்பவன்.

(7) துலாமாகில்:—ஜாதகன் நாசம், அழிவு, பிடை, செலவு இவைகளாலுண்டான துக்கத்தால் வருந்துபவன், விருப்பமற்ற நீசர்களால் கட்டளையிடப்படுபவன், அல்பன், விசனங்களால் வருந்துபவன்,

(8) விருச்சிகமாகில்:—ஜாதகன், விதிப்படியுள்ள தர்மகுண முடையவன், வணங்கியவர்களைத் திருபதி செய்விப்பவன், பலவித பொருள்களுடையவன், நற்குண முடையவன், அரசன் தயவால் சுகமுடையவன், சத்ருக்களை ஜெயிப்பவன்.

(9) தனுசாகில்:—அரசனுக்கு விருப்பமானவன், மகான், சாஸ்திரங்களின் பொருள் விளக்குபவன், எல்லா கலைகளிலும் வல்லவன், உயர்ந்தவன், எல்லா விவகாரங்களிலும் சமர்த்தன்.

(10) மகரமாகில்:—ஜாதகன் ஆசாரமழிந்தவன், எப்போதும் விரும்பத்தகாத செய்கைகளில் பற்றுடையவன், நல்லோர்களை வெருப்பவன், அல்ப மனதுடையவன்.

(11) கும்பமாகில்:—ஜாதகன் ஆழ்ந்த துவேஷத்தாலுண்டான தோஷமுடையவன், நிலையற்ற தொழிலுடையவன், தீர்மானிக்கப்படாத செய்கையுடையவன், கெட்ட வார்த்தை பேசுபவன், செலவுடன் கூடியவன், பாவச்செய்கையுடையவன், நன்றிகெட்டவன்.

(12) மீனமாகில்:—புண்யவான், சத்ருக்களை அழிப்பவன், தோழர், பெரியோர்களுக்குப் பிரீதிசெய்பவன், நல்ல சொல்லுடையவன், தெளிந்த மனமுடையவன், அதிக தர்ம குணமுடையவன்.

(2) சூரியனுடைய ஹோரா டலன்.

(1) சூரியன்:—தன் ஹோரையிலிருந்தால் ஜாதகன் கடுமையான சுபாவமும், பித்த நோயையும், தன் பந்து ஜன அவமானமும் உடையவன். பார்வைக்கு கெடுதலையும், கலகத்தையும், துக்கத்தையும், சத்துருபலத்தால் தன நாசத்தையும் உண்டு பண்ணுவான்.

(2) சூரியன்:—சந்திர ஹோரையிலிருந்தால் ஜாதகன் எப்போதும் நல் நடவடிக்கையையும், நோயற்ற தன்மையையும், சத்துரு இல்லாமையையும், விரும்பத்தக்க அதிதிகளைப் பெற்றிருக்குந்தன்மையையும், உடையவன். பந்து ஜனங்களுக்குப் பிரதானமானவன்.

(3) சூரியனுடைய திரேக்காண பலன்.

சூரியன் இருக்கும் திரேக்காணாதிபதி:—

சூரியனுகில்:—ஜாதகன் அதிக நோயுடையவனும், கொந்த மன முடையவனும், அயல் தேசத்தை அடைந்தவனும், ஜெயப் பிரதாபம் குறைந்தவனும் இருப்பான்.

சந்திரனுகில்:—ஜாதகன் தர்மவானுக்குப் பிறந்தவனுகவும், பந்து ஜனங்களுடையவனும், பாவமற்றவனும், சங்கீதப்பிரிய னும், அளவுடன் பேசுபவனும், தாரவிருத்தி யுடையவ னும், அதிக கோசமுடையவனும், மனிதர்களுக்குப் பிரியனும் இருப்பான்.

குஜனுகில்:—ஜாதகன் விரோதிகளுடையவன். ஜாதகனுக்கு ரத்த காஷ உபத்திரவ முண்டாகும், நீச்சர் சேர்க்கை யுண் டாகும், சர்வ காலமும் புத்திரர், பொருள் நாசம் உண்டா கும்.

புதனுகில்:—ஜாதகன், தன் தர்ம ஆசாரமுடையவன், போக மாதரிடம் விருப்ப முற்றிருப்பான், விசித்திர சொல்லு டையவன், தேவப் பிராமண பக்தியுடையவன்.

குருவாகில்:—ஜாதகன் வணக்க முடையவன் திருப்தியுடைய வன், விரும்பத்தக்க அதிதிகளுடையவன், எல்லா நற் குணங்களும் நிறம்பியவன், புத்திமான், வாக்கு சாதுரிய முடையவன்.

சுக்கிரனுகில்:—ஜாதகன் சுகமுடையவன், ஸ்திரீகளுக்கு நாய கன், தேவர், பெரியோர்களிடம் அன்புடையவன், நோயற்ற தேகமுடையவன், உண்மையுடையவன்.

சனியாகில்:—ஜாதகன் பாவமுடையவன், ரோகமுடையவன், நன்றிகெட்டவன், புத்திரர், நேசர் இவர்கள் விசனத்தால் தவிப்பவன், நல்ல சுபாவமுடையவன், பந்துக்களால் கைவிடப்பட்டவன்.

(4) சூரியனுடைய நவாம்சப் பலன்:—

சூரியன் இருக்கும் நவாம்சாதிபதி:—

(1) சூரியனுகில்:—ஜாதகன் அவமானமடைந்தவன், அதிக சுக முடையவன்; பாவத்தில் பிரியன், வக்கிர புத்தியுடையவன்

அல்ப சுபாவமுடையவன், பெருந்தன்மையற்றவன், அதிக நோயுடையவன்.

(2) சந்திரலகில்:—ஜாதகன் இருக்குமிடத்திலேயே சமர்த்தன், புத்திரருடையவன், ஞானம், புகழ், தனம், பொருள் இவைகளுடையவன், அரசனுக்குப்பிரியன், தன் பக்கத்தைசார்ந்தவர்களுக்குத் தலைவன்.

(3) குஜலகில்:—ஜாதகன் தரித்திர முடையவன், நோயால் வருந்துபவன், எல்லோராலும் நிராகரிக்கப் பட்டவன், தீனன், வாயு பீடை யுடையவன். பாபிகளுடன் கூடுபவன், தன்னால் செய்யப்பட்ட பீடை யுடையவன்.

(4) புதலகில்:—ஜாதகன் காற்று பயமுடையவன், சத்துருக்களை ஜெயித்தவன், பெண்களிடம் அன்புள்ளவன், எப்போதும் யோகாதி சுகங்களுடன் கூடியவன்.

(5) குருவாகில்:—ஜாதகன் சத்தியவான், தனவான், தவத்தில் பிரியன், நல்லோர்களால் விரும்பத் தக்கவன், இந்திரியங்களை ஜெயித்தவன், எல்லா சுகங்களுக்கும் இருப்பிடமானவன், பூஜை முதலிய அனுஷ்டான முடையவன், பந்து ஜனங்களுக்குத் தலைவன், அறிவாளி, தர்மத்திலேயே இருப்பவன், சத்துருக்களை ஜெயித்தவன்.

(6) சுக்கிரலகில்:—ஜாதகன் பெறுமை யுடையவன், தோல்வி யுடையவன், தனமற்றவன், அல்ப வீர்ய முடையவன், காம முடையவன், பந்து ஜனங்களால் ஒதுக்கப் பட்டவன்.

(7) சனியாகில்:—ஜாதகன் துஷ்டன், துர்கதி, நோயை யடைந்தவன்.

(5) சூரியனுடைய துவாதசாம்ச பலன்.

சூரியன் இருக்கும் துவாதசாம்சாதிபதி:—

(1) சூரியலகில்:—ஜாதகன் கடுமையானவன், சத்துருக்களிடம் பயந்த மனமுடையவன், அதிக கோப முடையவன், பொருள், பலம், இவை இல்லாதவன், தன் காரியத்தில் சமர்த்தன், ஞானம், அறிவு குறைந்தவன்.

(2) சந்திரனுகில்.—ஜாதகன் நல்லவன், நற்செய்கை யுடையவன், வித்தை, வணக்கம் உடையவன், எப்போதும் சுகம் நிறைந்தவன், தெளிந்த மனம், பெருந்தன்மை யுடையவன்.

(3) குஜனுகில்:—ஜாதகன் இஷ்டர்களால் விடப்பட்டவன், கட்டுப்படுதல் உடையவன். பாவச் செய்கையில் ஊக்க முடையவன், பூமி குறைதலை யுடையவன். அயலாருடன் வாதம் செய்பவன்.

(4) புதனுகில்:—ஜாதகன் அதிக சத்தியவானும், எல்லா சுகத் துடன் கூடியவனும், பிரியர்களாகிய அதிதிகளை உடையவனும், பிராமணர்களுக்குச் சம்மதனும் இருப்பான்.

(5) குருவாகில்:—ஜாதகன் ஸ்திரீகளுக்கு நாயகன், சங்கீத சாஸ்திரத்தில் சமர்த்தன், யோகாதிகளுடன் கூடியவன், வஸ்திரம், புஷ்பங்களுடன் கூடியவன், வினயத்தை முக்கிய மாயுடையவன்.

(6) சுக்கிரனுகில்:—ஜாதகன் நல்ல சில்ப சாஸ்திர மறிந்தவனும், தர்மத்தில் ஊக்கமுடையவனும், நல்ல தானம் செய்பவனும், பொறுமை யுடையவனும், பிரியர்களான அதிதிகளுடையவனும், எல்லாம் பொருப்பவனும், சூரனுகவும், அரசரால் கௌரவிக்கப் பட்டவனும் இருப்பான்.

(7) சனியாகில்:—ஜாதகன் ஆண்மை யற்றவனும், மெலிந்தவனும், பாவத்துடன் கூடியவனும், நன்றி கெட்டவனும், சம்பத்தில்லாதவனும், எப்போதும், அருவருக்கத் தக்க செய்கை யுடையவனும், வெகு துக்கத்துடன் கூடியவனும் இருப்பான்.

(6) சூரியனுடைய திரிம்சாம்ச பலன்.

சூரியன் இருக்கும் திரிம்சாம்சாதிபதி:—

(1) குஜனுகில்:—ஜாதகன் தனத்தையும், அல்ப புண்ணியத்தை யும், தனத்தில நாசமும், போஷிப்பவனும், நல்ல ஆசார முடையவனும், அதிக நோயுடையவனும், பொறுக்கத் தக்க ஜனங்களுடன் கூடியவனும் இருப்பான்.

(2) சனியாகில்:—ஜாதகன் பரதேசிகளுடன் பற்றுடையவனும், தனமற்றவனும், நன்றி கெட்டவனும், துவேஷ சுபாவ முடையவனும், தோழரற்றவனும் இருப்பான்.

(3) குருவாகில்:—ஜாதகன் பிரீதியை முக்கியமா யுடையவனும், புகழ் உடையவனும், சௌரிய குணத்துடன் கூடியவனும், வெகு தனமுடையவனும், சாஸ்திரக் கூட்டங்களுடன் கூடியவனும் இருப்பான்.

(4) புதனாகில்:—ஜாதகன் பொன், முத்து, ரத்தினம் வஸ்திரங்களடைந்தவனும், பெண் கூட்டம் உடையவனும், இஷ்டம் பூர்த்தியானவனும், தேவ பக்தியுடையவனும், சத்துருக்களில்லாதவனும் இருப்பான்.

(5) சுக்கிரனாகில்:—ஜாதகன், அழகனும், பல பொருள்கள் நிறைந்தவனும், உயர்ந்த குதிரை உடையவனும், நோயற்ற தேக முடையவனும், விரத முடையவர்களுக்கு விரும்பத் தக்கவனும், இருப்பான்.

(7) சூரியன் சுவகேஷத்திர பலம் உள்ளவராகில்:—ஜாதகன் தன் பலத்தால் நல்ல மனதுடையவனும், அதிக தோழருடையவனும், ஜெயிக்கப்பட்ட சத்துருக் கூட்டங்களை உடையவனும், தன் பந்துக்களால் பூஜிக்கப்பட்டவனும், தன தான்யங்களுடன் கூடியவனும், புத்திரருடையவனும், பிராமணர்களுக்குச சம்மதனும், தைரிய முடையவனும், பெரிதோனும், சாதுக்களால் அடையப் பட்டவனும், அதிக ரோஷமுடையவனும், யானை குதிரை நிறைந்தவனும், சத்ய குணங்களுள் கூடியவனும் இருப்பான்.

(8) சூரியன் உச்ச பலமுள்ளவராகில்:—ஜாதகன் பிரசித்தனும், சத்துருக்களை ஜெயித்தவனும், பிரியமான அதிதிகளை உடையவனும், அரசர் வெகுமதிப்பை யுடையவனும், அதிக தன முடையவனும், நியாயத்தை முக்கியமாய் உடையவனும், பிரதானமானவனும் இருப்பான்.

(9) சூரியன் நவாம்ச பலமுள்ளவராகில்;—ஜாதகன் எப்போதும் இனிமையானவனும், விசித்திர மாலை, ஆபரணங்களுடையவனும், சுகம் நிறம்பியவனும், வெகு பொருமையுள்ள மனமுடையவனும், நோயற்றவனும், நல்ல ஆசார முடையவனும் இருப்பான்.

(10) சூரியன் சுபக்கிரகப் பார்வை பலம் பெற்றால்:—ஜாதகன் நோயற்றவனும், அழகு, சூக்ஷமத்துடன் கூடியவனும், புத்திர லாப மடைந்தவனும், அரசரால் பூசிக்க (கௌரவிக்க) தக்கவனும், தேவப் பிராமணபக்தி யுடையவனும் இருப்பான்.

(11) சூரியன் புருஷராசி பலத்தால் பிரபலனாகில்:—ஜாதகன் பெரியோர், ஆசான், சாதுக்கள், பிராமணர் இவர்களிடம் பக்தி யுடையவனும், வணக்க முடையவனும், நல்ல ஆசார சுபாவ முடை யவனும், அழகனும், தர்மத்துடன் கூடியவனும், மனிதருக்கு பிரீதி செய்பவனும் இருப்பான்.

(12) சூரியன் திக்குப் பலமுடையவராகில்:—ஜாதகன் பலவித பொருள்களுடன் கூடியவனும், யானை, குதிரை, ரத்தினம், வஸ்திரம், மாலை இவைகளுடன் கூடியவனும், உல்லாச முடையவனும், அரசர் சன்மானத்துடன் கூடியவனும் இருப்பான்.

(13) சூரியன் ஜேஷ்டா பலமுள்ளவராகில்:—ஜாதகன் பிள் செல்லப்பட்ட சத்துருக் கூட்டத்தை யுடையவனும், அதிக தோழரு டையவனும், எல்லா துக்கங்களும் அற்றவனும், சுகத்துடன் கூடி யவனும், பந்துக்களால் கௌரவிக்கப் பட்டவனும் இருப்பான்.

(14) சூரியன் இராத்திரி பலமுள்ளவராகில்:—ஜாதகன் பிரசித்தனும், வினயத்துடன் கூடியவனும், தர்மத்தில் ஆசையுடை யவனும், பிரியமாயும், அழகிய சொல்லுடையவனும், எப்போதும் அனுகூலனும், ஜனங்களுக்கு வேண்டியவனும் இருப்பான்.

(15) சூரியன் தின பலத்துடன் இருக்கில்:—ஜாதகன் பிரசித்த னும், அழகனும், விரும்பத் தக்கவனும், அதிக ஆச்சரியம் செய்ப வனும், கலக்க முடியாதவனும், சத்துருக்களுடைய புகழை அழிப் பவனும் இருப்பான்.

(16) சூரியன் ஹோரை பலமுடையவராகில்:—ஜாதகன் பிர சித்தனும், அதிக ஆச்சரியப்படத்தக்க வீர்ய முடையவனும், மனிதருக்கு மிகவும் வேண்டியவனும், நற் சொல்லுடையவனும், வந்தி ஜனங்களால் துதிக்கப் பட்டவனும் இருப்பான்.

(17) சூரியன் பக்ஷ பலமுடையவராகில்:—ஜாதகன் புஷ்டி யு டையனும், அதிக பக்ஷமுடையவனும், அழகும் இனிமையுமான

சொல்லுடையவனும், வெகு சோக முடையவனும், வித்தை, வினய முடையவனும், அழகனும் இருப்பான்.

18) சூரியன் மாத பலமுடையவராகில்:—ஜாதகன் சமர்த்தனும், தன தான்ய முடையவனும், குதிரை யுடையவனும், அதிக தோழருடையவனும், சண்டையில் அடையப்பட்ட சபதத்தை யுடையவனும், அதிக வினய முடையவனும், ராஜ சேவையில் ஆசை யுடையவனும் இருப்பான்.

(19) சூரியன் வருஷ பல முடையவராகில்:—ஜாதகன் சுப செய்கை யுடையவனும், மணிகர் ஸ்திரீ, சத்துரு, இவர்களால் அடையப்பட்ட சோக முடையவனும், அதிக புஷ்டி யுடையவனும், தேவ பிராமண பக்தி யுடையவனும், வெட்க மற்றவனும், லோப சுபாவ முடையவனும், அயலார் அன்னத்தில் ஆசை யுடைய வனும், கடினமானவனும், தரித்திரனும் இருப்பான்.

(20) சூரியனுக்கு மித்ர பலமில்லாவிடில்:—ஜாதகன் தான் விரும்புவதை அடையமாட்டார்.

(21) சூரியனுக்கு சுவக்ஷேத்திர பலமில்லாவிடில்:—ஜாதகன் தன் வாஸஸ்தல மில்லாதவனும், பந்து ஜனம் குறைந்தவனும், அபல் தேசத்தில் ஆசை யுடையவனும், விசன முடையவனும் இருப்பான்.

(22) சூரியன் அதி நீச்சத்திலிருந்தால்:—ஜாதகன் எப்போதும் சரீர பலமில்லாதவனும், முகம், (வாய்), கண் நோயுடையவனும், துஷ்டனுவும், சந்தான ஈனனும், அதிக ஏவல் செய்பவனும் இருப்பான்.

(23) சூரியன் நவாம்ச பலமற்றிருந்தால்:—இஷ்டத்திற்கு தடங் கலும், விஷம், நெருப்பு, ஆயுதம், ஜ்வரம், பித்தம் முதலிய பாதை யுடையவனும், தாய் தகப்பனுக்கு உபசாரம் செய்யாதவனும், இருப் பான் சுபக்ரக பார்வை பலமற்றிருந்தால் ஜாதகன், ரூப மற்றவனும், மார் நோயுடையவனும், அதிகமாய் திரிபவனும், மூடனும், தப்பு கள் செய்பவனும், எப்போதும் பயமுடையவனும் இருப்பான்.

(24) சூரியன் நர வீர்ய (மனித பல) மற்றவராகில்:—சௌரி யமற்றவனும், அனேகருடன் கூடியவனும், தோல்வி யுடையவனு

யும், புத்திர், பொருள், வாகனம், தன தான்ய வஸ்திர பற்றவனும் இருப்பான்.

(25) சூரியனுக்கு திக்கு பலமில்லாவிடில்:—ஜாதகன் எல்லா திசைகளிலும் ஹானியையும், பொய் பிதற்றலையும் உடையவன். புத்தியற்றவனும், தேவர், பிராமணருக்கு விரோதியாயும் இருப்பான்.

(26) சூரியனுக்கு ஜேஷ்டா பல மில்லாவிடில்:—ஜாதகன் நிந்திக்கத்தக்க செய்கை யுடையவனும், புத்தி வித்யாச முடைய வனும், சாது ஜன விரோதியாயும் இருப்பான்.

(27) சூரியன் பகல் பல மற்றவராகில்:—ஜாதகன் கடனாளி யாயும், பிரதாபமற்றவனும், பந்துஜன மற்றவனும், அயல் பெண்டு களுக்குப் பணிவிடை செய்பவனும் இருப்பான்.

(28) சூரியன் வார பலமற்றிடில்:—அருவருக்கத்தக்க செய்கை யுடையவனும், அதர்மம் செய்பவனும், அனேக துஷ்டத்தனமுடை யவனும், பெரியோர் தோழர்களுக்கு ஆபத்து விளைவிப்பவனும் இருப்பான்.

(29) சூரியனுக்கு ஹோரை பலமில்லாவிடில்:—ஜாதகன் மூர்க்கனும், அன்பில்லாதவனும், துவேஷத்துடன் கூடியவனும், அயலாருடன் வாதிப்பவனும் சந்தானமில்லாதவனும் இருப்பான்.

(30) சூரியனுக்குப் பக்ஷபல மில்லாவிடில்:—ஜாதகன் எப் போதும் துக்கமடைந்தவனும், தன் பக்கபல மில்லாதவனும், மாயாவியாயும், கடுஞ் சொல்லுடையவனும் இருப்பான்.

(31) சூரியனுக்கு வருஷ பல மில்லாவிடில்:—ஜாதகன் தரித்திரனும், சூதாட்டத்தில் அழிக்கப்பட்ட அநேக பொருளுடைய வனும், தாசிகளிடம் பற்றுள்ளவனும், தன் பந்துக்களை பிறிந்தவ னும் இருப்பான்.

(32) சூரியன் மாச பலமற்றிருந்தால்:—ஜாதகன் பலமற்றவ னும், விகாரமுடையவனும், அதிகம் புசிப்பவனும், நோயால் வருந்துபவனும், திருடர் அரசால் அவமான மடைந்தவனும் இருப்பன்.

(90) சந்திரனுடைய சட்வர்க்கம் முதலிய பலன்கள்.

சந்திரன் ஜெனனகாலத்தில் மேஷம் முதலிய ராசிகளில் இருக்கும் பலன்.

சந்திரன் இருக்கின்ற ராசி:—

மேஷமாகில்:—ஜாதகன் சூரன், சந்தோஷம், தைரியம், பலம் இவைகளுடன் கூடியவனும், பிரசித்தியடைந்தவனும், வெகு மங்கையர், புத்திரர் இவர்களையுடையவனும், பணியாளர் நிரம்பியவனும், உயர்ந்த வஸ்து புசிப்பவனும், தியாகம் செய்பவனும், நிலை பெற்றவனும் இருப்பான்.

ரிஷபமாகில்:—ஜாதகன் கர்வமுடையவனும், இஷ்டமான மனைவியுடையவனும், அளவுள்ள அல்ப பாக்யமுடையவனும், அழகனும், தேஜஸ்ஸுடையவனும், அதிகம் புசிப்பவனும், நல்ல வேஷப்பிரியனும், அதிக ஜனமுடையவனும், பெருள் சேர்ப்பவனும் இருப்பான்.

மிதுனமாகில்:—இனிமையான பெயருடையவனும், காரியம் செய்வதில் நிபுணனும் ஆகும்.

கடகமாகில்:—ஜாதகன் கார்யங்களில் தைரியவானும், நல்ல அறிவாளியாயும், வாக்கு சாமர்த்திய முடையவனும், பிரியமானதைப் புசிப்பவனும், விரும்பத்தக்க பார்வையுடையவனும், பண்டிதனும், அதிக ஞானத்தால் சிதறிய புத்தியுடையவனும் இருப்பான்.

சிம்மமாகில்:—ஜாதகன் தைரியம், பலம் இவைகளுடன் கூடியவனும், மனிதரால் வெகுமதிக்கப் பட்டவனும், சிங்க முகம்போல் பரந்த முகமும், அதிக பருத்த தேகமும் உடையவனும், மாம்சத்தில் பிரியனும், பொருக்க முடியாதவனும், பசியுடையவனும் இருப்பான்.

கன்னியாகில்:—ஜாதகன் நல்ல சொல்லுடையவனும், இனிமையானவனும், வணக்க முள்ளவனும், பெண்கள் விருப்ப முடையவனும், அழகிய தேக முடையனும், நல்ல அறிவுடையவனும், சாஸ்திரங்கள் விரும்பத் தக்கவனும் இருப்பான்

துலாமாகில்:—ஜாதகன் உதார குணமுடையவனும், வாக்கு, புத்திரபலம் இவைகளுடையவனும், நல்ல மனமுடை யவனும், சாத்வீக ஆலோசனையை குணமாயுடையவனு யும், ஆசாரம், வணக்கம், அழகு, நல்ல ரூபம் இவைகள் உடையவனுகவும் இருப்பான்.

விருச்சிகமாகில்.—ஜாதகன் தனவானும், சூரனும், தைரியவா னும், பிரசித்தி யுடையவனும், நல்லோருக்குத் தலைவனுக வும், கௌரவமுடையவனும், குரூரனும், அபலாரை அழிப்பதில் விருப்பமுடையவனும், கோபமுடையவனு யும் இருப்பான்.

தனுசாகில்-—ஜாதகன் அரசனிடமிருந்து அடையப்பட்ட வெகு மதிப்புடையவனும், புகியதும் உயர்ந்ததுமான செய்கை யுடையவனும், சூரனும், ஆசாரமுடையவனும், உண்மை யைக்கடை பிடிப்பவனும், தனவான்களில் முக்கியமான வனும், பெரியோர், தேவர் இவர்களிடம் பக்தி யுடையவ னும் இருப்பான்.

மகரமாகில்:—ஜாதகன் தோட்டம், காடு, ஜலம், இவைகளில் ஆசை யுடையவனும், சங்கீதம், ஹாஸ்யம் இவைகளில் பிரியமுடையவனும், நல்ல வேஷ முடையவனும், பிரசித்தி யுடையவனும், அயல் பெண்டிர்களிடம் சுற்றுபவனும் இருப்பான்.

கும்பமாகில்: —ஜாதகன் ரோஷமுடையவனும், அல்ப சௌக் கிய முடையவனும், மெலிந்தவனும், பொறுக்கமுடியாத அல்ப மனதை யுடையவனும், அதிக செய்கைகளை ஆரம்பிப்பவனும், இஷ்டம் பூர்த்தியாகாதவனும், குறிக்க (காட்ட) ப்பட்ட பந்துக்களை உடையவனும், குரு (ஆசான், தகப்பன், பெரியோர்) வை வஞ்சிப்பவனும், இருப்பவன்.

மீனமாகில்:—ஜாதகன் நம்பக முடையவனும், சாமர்த்தியவா னும், பண்டித தன்மை வாய்ந்தவனும், அதிக செல்வத் துடன் கூடியவனும், வெட்கம், தானம், தாக்ஷண்யம் இவைகளை பிரதானமாக உடையவனும், வணக்கமுடைய வனும் இருப்பான்.

(2) சந்திரனுடைய ஹோரா பலன்.

சந்திரன் தன் ஹோரையில் இருந்தால் ஜாதகன் எப்போதும் அதிக ஆசாரமுடையவனும், தன் தர்மத்தைக் கடைபிடித்தொழுகுகிறவனும், அரசர் வெகுமதிப்புடையவனும், நன்றியுடையவனும், சந்தோஷமுடையவனும், மதமில்லாதவனும் இருப்பான்.

சந்திரன் சூரியனுடைய ஹோரையில் இருந்தால்:—நமக்குக் கிடைத்த சாஸ்திரத்தில் பலன் கொடுத்திருக்கவில்லை.

(3) சந்திரனுடைய திரேக்காண பலன்.

சந்திரன் இருக்கும் திரேக்காணாதிபதி:—

சூரியனாகில்:—ஜாதகன் எப்போதும் பாபியாகவும், அதிக சத்துருக்களுடையவனும், அல்ப பொருள் பலமுள்ளவனும், குணமற்றவனும், போக்கப்பட்ட பொருளுடையவனாகவும், துரதிர்ஷ்டமுள்ள தேகமுடையவனும், சத்துருக்களால் ஏமாற்றப்பட்ட மனமுடையவனாகவும் இருப்பான்.

சந்திரனாகில்:—ஜாதகன் பண்டிதனும், வெகுதனம், தேஜர், புத்திரருடன் கூடியவனும், பந்து ஜனங்களுடன் கூடியவனும், சுகமுடையவனும், அழகுடையவனும் கட்டழகைக் கடவாதவனும் இருப்பான்.

செவ்வாயாகில்:—ஜாதகன் சஞ்சாரஞ் செய்பவனும், பிரதாபமில்லாதவனும், குறைந்த செய்கையுடையவனும், அதேக துக்கங்களுடன் கூடியவனும், அயலார் பொருளுக்கு ஆசையுடையவனும், நேசமில்லாதவனும், இருப்பான்.

புதனாகில்:—ஜாதகன் அழகியவனும், விரும்பத் தக்கவனும், புத்திமானும், எல்லா குணங்களும் நிறைந்தவனும், வித்தையுடையவனும், எல்லா வித்தையிலும் தேர்ந்தவனுமாக இருப்பான்.

குருவாகில்:—ஜாதகன் சாஸ்திரங்களில் விருப்பமுடையவனும், நல்ல ஆசாரமுடையவனும், நீசர்களுடன் சேராதவனும், திருந்தியவனும், அல்ப கோபமுடையவனும், பிரியமான

அதிதிகளுடையவனும், தேவர் பெரியோரிடம் பக்தியுடையவனுமாக இருப்பான்.

சுக்கிரனுகில்:—ஜாதகன் உயர்ந்த வாகன முடையவனும், பெண்கள் தலைவனும், உண்மை யுடையவனும், கம்பீர செய்கை யுடையவனும், கலைகளுக்கு அதிகாரியும், அரசர் களுக்கு விருப்பத் தக்கவனுமாக இருப்பான்.

சனியாகில்:—ஜாதகன் நோயாளியாவும், தீனனும், தரித்திரனும், விகாரமானவனும், பாவமுடையவனும், அதிக ஆபத்துடையவனும் பொல்லாங் குடையவனும். இருப்பான்

(4) சந்திரனுடைய நவாம்ச பலன்.

சந்திரன் இருக்கும் நவாம்சாதிபதி:—

சூரியனுகில்:—ஜாதகன் துஷ்டன், ஸ்திரீகளிடம் சபலபுத்தியுடையவன், பாபத்தில் மனமுடையவன், புத்தியில்லாதவனும், சத்துருக்களால் ஜயிக்கப்பட்டவனும் ஆவான்.

சந்திரனுகில்:—ஜாதகன் நல்ல அழகுடையவனும், ரூபமுடையவனும், ஆசாரமுடையவனும், பெண்களுக்கு இஷ்டமானவனும், எல்லா குணங்கள் நிறைந்தவனும், வித்தையால் திரிந்தியவனும், ஜன நாயகனுமாக விருப்பான்.

செவ்வாயாகில்:—ஜாதகன் ரத்த காய பீடை யுடையவனும், ஆண்மையற்றவனும், மெலிந்தவனும், அல்ப பலமுடையவனும், பெண்களால் வெருக்கத்தக்கவனும், காமத்திலேயே விருப்ப முள்ளவனுமாக இருப்பான்.

புதனுகில்:—ஜாதகன் அழகியவனும், எப்போதும் சுகமுடையவனும், எப்போதும் பெரியோர், தோழர், தேவர்களிடம் பற்றுடையவனும், வெகு தனவானும், பண்டிதனும், நிகரில்லாதவனுமாக இருப்பான்.

குருவாகில்:—ஜாதகன் நீதி, உண்மை இவைகளின் சார மறிந்தவனும், வித்தையால் திருந்தியவனும், தோழர்களுள் உயர்ந்தவனும், பிராமணர்களுக்குப் பிரியனும், நோய் பயமில்லாதவனுமாக இருப்பான்.

சுக்கிரனுகில்:—ஜாதகன் அதிக தனமுள்ளவனும், புத்திரருடன் கூடியவனும், புண்யமாகிய தனமுடையவனும், விரும்பத் தக்க அதிதிகளுடைவனும் எல்லா ஜனங்களும் விரும்பத் தக்கவனுமாக இருப்பான்.

சனியாகில்:—ஜாதகன் சஞ்சரித்த லுடையவன், துஷ்டனும், வெகு கெட்ட சொற்களே பேசுபவனும், விகாரசுபாவமுடையவனும், அயலார் பொருளில் ஆசையுடையவனும், விசனத்துடன் கூடியவனுமாக இருப்பான்.

(5) சந்திரனுடைய துவாதசாம்ச பலன்.

சந்திரன் இருக்கும் துவாதசாம்சாதிபதி:—

சூரியனுகில்:—ஜாதகன் அதிக பயம், துக்கம் உடையவன், பரிதாபப்படத் தக்கவன், தோழர், பந்து இல்லாதவன், நீண்ட ரோகம் உடையவன். நன்றி கெட்ட தன்மை உடையவன்.

சந்திரனுகில்:—ஜாதகன் தனமுடையவனும், வாசாலகனும், அல்பமான சத்துருவுடையவனும், அழகிய புத்திரருடையவன், தனவான், சத்துரு கூட்டமில்லாதவனுக இருப்பான்.

செவ்வாயாகில்:—ஜாதகன் எப்போதும் அதிக சௌக்ய முடையவன், சமர்த்தன், போகங்களுடன் கூடியவன், நற் செய்கை, நல்ல தர்ம சுபாவம், ஆகாரம் இவைகள் உடையவனுக இருப்பான்.

புதனுகில்:—ஜாதகன் அழகானவன், சுக முடையவன், சில்ப சாஸ்திர மறிந்தவன், அதிக ஆச்சரிய செய்கை செய்பவன், பிரியமான அதிதி, எப்போதும் பிரசித்தி இவைகளுடையவனுக இருப்பான்.

குருவாகில்:—ஜாதகன் நல்ல அலங்காரம், அரசன் தயவு, விசித்திர வாகனம், அதிக தோழர் உடையவனுக இருப்பான்.

சுக்கிரனுகில்:—ஜாதகன் அதிக அரசன் தயவு, தனம், யானை, குதிரை பெறல், அதிக அன்னபானதிகள் உடையவனுக இருப்பான்.

சனியாகில்:—ஜாதகன் உண்மை யுடையவன், அல்பன், மிகவும் ஆலஸ்ய முடையவன், தன் பந்துவர்க்கங்களால் விடப் பட்டவன்.

(6) சந்திரனுடைய திரிம்சாம்ச பலன்.

சந்திரன் இருக்கும் திரிம்சாம்சாதிபதி:—

செவ்வாயாகில்:—ஜாதகன் அக்கரையில்லாதவனும், குலாச்சார மற்றவனும், தோஷ முடையவனும், நீச ஜனங்கள் சேர்க்கை யுடையவனும், ரத்த பீடை யுடையவனும், கோப முடையவனும், அருவருக்கத்தக்கவனுமாக இருப்பான்.

சனியாகில்:—ஜாதகன் அழகற்ற தேகம், பிதற்றல், சாந்தியற்ற தன்மை, பருத்த தலை மயிர், அருவருக்கத் தக்க தன்மை, அயலார் அபவாதமே எண்ணம், இவைகளுடையவனாக இருப்பான்.

குருவாகில்:—ஜாதகன் புத்திமான், பூமியில் புகழுடைய வன், அதிக செல்வமுடையவன், அரசனே நாயகமாக உடையவன்.

புதனாகில்:—ஜாதகன் ஆசார முடையவன், தெளிவற்றவன், பெண்களுக்குத் தலைவன், சங்கீத சாஸ்திரத்தில் சமர்த்தன், விரும்பத்தக்க அதிதிகள், எப்போதும் உதார செய்கை இவைகள் உடையவனாக இருப்பான்.

சுக்கிரனாகில்:—ஜாதகன் அதிக வீர்யமுடையவன், நல்ல புண்யசீலன், குதிரை வாகனம் உடையவன், தயை யுடை யவன், எப்போதும் சாதுக்களிடம் ஆசை யுடையவனாக இருப்பான்.

(7) சந்திரனுக்கு மித்திர பலமிருந்தால்:—ஜாதகன் அதிக தோழருடையவனாகவும், தோழர்களிடம் பிரியமாயிருக்குந் தன்மை யுடையவனாகவும், அரசர் வெகுமதியால் போஷிக்கப்படுபவனாகவும், அதிக வித்தை யுடையவனாகவும், சாதுக்களிடம் பற்றுடையவனாயும், வெட்கமுடையவனாயும் இருப்பான்.

(8) சந்திரன் ஸ்தான டலத்துடனிருந்தால்:—ஜாதகன் ஸ்திரீகள் நிறைந்தவன் (ஸ்திரீகள் தன மூடையவன்), தன்னிடத்தில் பூஜிக்க (கௌரவிக்க) தக்கவனும், யதிகளின் சேர்கையில் ஆசை யுடையவனும், எப்போதும் பொருமை யுடையவனும், அரசனைப் போல் மதிக்கத்தக்கவனாகவும், இருப்பான்.

(9) சந்திரன் உச்ச பலத்துடனிருந்தால் ஜாதகன் உயர்ந்த செய்கை யுடையவனும், நிறைந்த பலமுள்ளவனும், தேவப் பிராமண பக்தி யுடையவனும், வெகு குதிரைகளுடையவனும், செல்வவானுமாகவும் இருப்பான்.

(10) சந்திரன் நவாம்ச பலத்திலிருக்கில்:—ஜாதகன் புத்திரர், வாகனங்களுடையவனாகவும், நோயற்றவனாகவும், அழகிய தேகமுடை யவனாகவும், போகங்களுடன் கூடியவனாகவும், எல்லா சாஸ்திரங்க ளிலும் வல்லவனாகவும் இருப்பான்.

(11) சந்திரன் சுபக்கிரக பார்வை பலத்துடனிருக்கில்:—ஜாத கன் பயமற்றவனாகவும், உயர்ந்தவனாகவும், யானை, குதிரைகளுடை யவனாகவும், அதிக சந்தோஷமும், விருத்தியும் உடையவனாகவும் இருப்பான்,

(12) சந்திரன் ஸ்வக்ஷேத்திர டலத்திலிருந்தால்: —ஜாதகன் ஜெயிக்கப்பட்ட சத்துருக்களை உடையவனாகவும், குணங்கள் நிறம்பி யவனாகவும், அதிக தனம், போஜனம் உடையவனாகவும், பெண்களி டம் விருப்பமுள்ளவனாகவும், கம்பீரமான பார்வை உடைவனாகவும் இருப்பான்.

(13) சந்திரன் திக்குப்பலத்துடன் இருந்தால்:—ஜாதகன் சத்துருக்களை ஜெயிப்பவனும், தன் புத்திரர், பந்துக்களால் போஷிக் கப்பட்டவனும், வெட்க மூடையவனும், அதிக தன மூடையவனும், எல்லா குணங்களும் நிறம்பியவனும், பெண்களுக்கு நாயகனும், கௌரவத்தை தனமாக உடையவனாகவும் இருப்பான்.

(14) சந்திரன் சேஷ்டா பலத்துடன் இருந்தால்:—ஜாதகன் அதிக தோழர், கோசம் உடையவனாகவும், நோயற்றவனாகவும், அதிக பெண்களுடையனாகவும், சத்தியத்தை கைக்கொண்டவனாகவும், விநயமுடையனாகவும், எப்போதும் தேவர்களைப் பூசிப்பதில் பற்று டையனாகவும் இருப்பான்.

(15) சந்திரன் இராத்திரி பலத்துடன் இருக்கில்.—ஜாதகன் பிரபலனும், காந்தியும், பலமு முடையவனும், பலவித வஸ்திரங்கள் அன்ன பானங்களுடன் கூடியவனும், சௌபாக்ய முடையவனும், அதிக தானம் செய்யும் சுபாவ முடையவனுகவும் இருப்பான்.

(16) சந்திரன் தினபலத்துடன் இருக்கில்:—ஜாதகன் நற்குண முடையவனும், அதிக தோழருடையவனும், அழகிய தேகமுடை யவனும், பிரசித்தியுடையவனும், பலவித பொருள், வித்தை, தனம் இவை புஷ்டியாயுடையவனும் இருப்பான்.

(17) சந்திரன் ஹோரை பலத்துடன் இருக்கில்:—ஜாதகன் மன்மத லீலையில் சமர்த்தனுகவும், பெரியோரிடம் பிரியமுடையனுக வும், சங்கீதத்தில் ஆசையுடையவனுகவும், அழகியவனுகவும், வெகு பொறுமையுடையவனுகவும், பயிர்த் தொழிலுடையனுகவும், புத்திசர் பெண்களுடன் கூடியவனுகவும் இருப்பான்.

(18) சந்திரன் மாசபலத்துடன் இருந்தால்:—ஜாதகன் நற் செய்கை யுடையவனும், கற்பக தருபோன்றவனும், செல்வ முடைய வனும், சில்ப சாஸ்திர மறிந்தவனும், புகழுடையவனும், நல்ல தார முடையவனும், பிரியமான அதிதிகளுடையவனும், சந்தோஷ முடை யவனும், நீதியறிந்தவனுமாக இருப்பான்.

(19) சந்திரன் வருஷ பலத்துடன் இருந்தால்:—ஜாதகன் வந்திகளால் துதிக்கப்பட்டவனும், சுபகாரியங்களில் ஆசையுடைய வனும், அழகிய பெண்களின் போக ரசத்தில் ஆசையுடையவனும், ஸத்யத்தால் அதிகமானவனும், துஷ்ட ஜனத்தால் விடப்பட்டவனு மாக இருப்பான்.

(20) சந்திரனுக்கு மித்ரபல மில்லாவிடில்:—ஜாதகன் தீனனு கவும், அயலாருடன் வாதிப்பனுகவும், விசனத்துடன் கூடியவனுக வும், தனம் பொருளற்றவனுகவும் இருப்பான்.

(21) சந்திரனுக்கு ஸ்தானபல மில்லாவிடில்:—ஜாதகன் அதிகம் பச்சாத்தாப படத்தக்கவனும், அவமான மடைபவனு கவும், அரசர் கௌரவ மில்லாதவனுகவும், மெலிந்து அழகற்றவனுக வும், கெட்ட தோழருடையவனுகவும் இருப்பான்.

(22) சந்திரனுக்கு உச்சபல மில்லாவிடில்:—ஜாதகன் லோபி யாயும், நீச்சர்களுடன் பற்றுடையவனும், பலமற்லவனும், காம மற்றவனும், அதிக துக்க மடைந்தவனும் இருப்பான்.

(23) சந்திரனுக்கு நவாம்ச பலமில்லாவிடில்:—ஜாதகன் புத்திரனற்றவனுகவும், துஷ்டனுகவும், நன்றி கெட்டவனுகவும், பயந்தவனுகவும், நோய் பீடை உடையவனுகவும், அரசர் பீடை உடையவனுகவும் இருப்பான்.

(24) சந்திரனுக்குச் சுப கிரக பார்வை யில்லாவிடில்:—ஜாதகன் எப்போதும் விகாரரூப முடையவனுகவும், விகார வஸ்திரந் தரிப்பவனுகவும், லோபியாகவும், பாவச் செய்கையில் ஆசையுடைய வனுகவும் இருப்பான்.

(25) சந்திரனுக்குச் சுவக்ஷேத்ர டலமில்லாவிடில்:—ஜாதகன் பாவமுடையவனும், தரித்ரிஷ்ட முடையவனும், பிராமண பக்தி யில்லாதவனும், பலமற்றவனும், சத்துரு பீடை உடையவனுகவும் இருப்பான்.

(26) சந்திரனுக்குச் திக்கு டல மில்லாவிடில்:—ஜாதகன் வெளிதேசத்தில் ஆசையுடையவனும், வீணுக திரிபவனும், துஷ்டனும், அற்ப சுகமுடையவனும், தயை யற்றவனும், புத்திரர், பெண்களில் லாதவனுமாக விருப்பான்.

(27) சந்திரனுக்குச் சேஷ்டா பலமில்லாவிடில்:—ஜாதகன் அருவருக்கத்தக்க செய்கை உடையவனும், சத்துருக்களுடையவ னும் அயல் மஹாவிகளின் மேல் ஆசைப்படுபவனும், எப்போதும் துஷ்டனும், அரசன் வெகுமதி யற்றவனுமாக இருப்பான்.

(28) சந்திரனுக்கு ராத்திரி பலமில்லாவிடில்:—ஜாதகன் கண் களில் நோயுடையவனும், திருடர்களால் போக்கப்பட்ட பொன், பொருள், பசு முதலியன உடையவனும், பெண்டுகளால் நிந்திக்கத் தக்கவனும், சூன்யமானவனும், துஷ்டனுமாக விருப்பான்.

(29) சந்திரனுக்கு வார பலமில்லாவிடில்:—ஜாதகன் அதிக கெடுதல்களுடன் கூடியவனும், பணி செய்பவனும், தர்மம், சுகம் இல்லாதவனும், அயலார் அன்னம் புசிப்பவனும், அதிக தோஷ முடையவனுமாக இருப்பான்.

(30) சந்திரனுக்கு ஹோரை டலமில்லாவிடில்:—ஜாதகன் வெகு மூர்க்கனுகவும், அதிக கஷ்டமனுபவிப்பவனும், ரோசமில்லாத வனும், நேசரால் விடப்பட்டவனும், சத்துருக்களே பிரதானமாக உடையவனுமாக இருப்பான்.

(31) சந்திரனுக்கு மாசடல மில்லாவிடில்:—ஜாதகன் தனதான்ய மற்றவனும், பயந்தவனும், தோல்வி யுடையவனும், பொருளற்றவனும், எப்போதும் அவமானத்திற்கு இருப்பிடமானவனுமாக இருப்பான்.

(91) செவ்வாயினுடைய சட்வர்க்கம் முதலிய பலன்கள்.

(1) செவ்வாய் ஜனன காலத்தில் மேஷம் முதலிய ராசிகளில் இருக்கும் பலன்.

செவ்வாய் இருக்கும் ராசி:—

மேஷமாகில்:—ஜாதகன் வெகுகடுமையான கோபமுடையவன், சூரன், தைரியமான செய்கைகள் செய்யும் சுபாவமுடையவன், பராக்ரமமுடையவன், சத்வ குணமுள்ளவன், கலக்கமுடியாதவன், புசிக்கத் தகாததைப் புசிப்பவன், தானம் செய்யும் கருத்துடையவன்.

ரிஷபமாகில்:—ஜாதகன் தன்பந்துக்களிடம் விரோதமுடையவன், குலத்திற்குச் சந்தோஷ மளிப்பவன், வெகு கெட்ட சொற்கள் உபயோகிப்பவன், அல்பமான தனம், புத்திரருடையவன்.

மிதுனமாகில்:—ஜாதகன் சந்தோஷ மடைந்தவன், அதிக வெளிவாஸ முடையவன், பலவித சில்ப சாஸ்திரங்களில் தேர்ச்சிபெற்றவன், வெகு நல்ல கேழ்வியுடையவன், வாக்குச் சாதுரியமுள்ளவன்.

கடகமாகில்:—அற்ப பொருளுடையவன், வெட்டு காயமடைந்த தேகமுடையவன், அடிக்கடி இழக்கப்பட்டபொருளுடையவன், அயலார் அன்னம் புசிப்பதில் பிரசித்தன்.

சிம்மமாகில்:—ஜாதகன் அதிக பலமுள்ள தேகமுடையவன், பொறுமையற்றவன், சூரன் வெகு கோபமுடையவன், சந்தேக மில்லாதவன்.

கன்னியாகில்:—ஜாதகன் செல்வமற்றவன், நல்லோர்கள் புகழத்தக்கவன், நேர்மை வாய்ந்தவன், அல்ப பலமுள்ளவன்,

இன்பமாய் பேசுபவன், அயலாரால் புகழப்படுகிறவன், சாமர்த்தியவான், பலவித செலவுகளுடையவன்.

துலாமாகில்:—ஜாதகன் வழிநடக்கும் சுபாவமுடையவன், ஆபத்துடையவன், பிதற்றுகிறவன், அதிக பொய் உடையவன், கத்தி வெட்டுகாயமுள்ள தேகமுடையவன், முன்னூல் புகழப்பட்ட தோழருடையவன்.

(7) சனியாகில்:—ஜாதகன் நல்ல ஆசாரமுடையவன். அதிக சௌக்கிய முடையவன், அரசகுமாரர்களுடன் சினேகம் செய்பவன், உதார குண முடையவன், நோயற்றவன் அதிக தோழருடையவன்.

(4) சனியினுடைய நவாம்ச பலன்.

சனி இருக்கும் நவாம்சாதிபதி:—

(1) சூரியனுகில்:—ஜாதகன் அதிக கடுமையான கோபமுடைய வன், உபத்திரவிப்பவன், நாசமடைந்த பந்துக்களால் விடப்பட்டவன், துவேஷ முண்டுபண்ணும் குண முடைய வன், மற்றவரால் அவமான மடைந்தவன்.

(2) சந்திரனுகில்:—ஜாதகன் மனிஷியுடன் கூடியவன், சாஸ் திரங்களில் ஆசை யுடையவன், யாகம், தானம் முதலியன செய்யும் குண முடையவன், இந்திரியங்களை ஜெயித்தவன், மந்திரங்களறிந்தவருள் உயர்ந்தவன்.

(3) செவ்வாயாகில்:—ஜாதகன் பேசத்தக்க சுபாவ முடைய வன், அயல் பெண்டிர் சேர்க்கையில் பிரிய முடையவன், தர்ம செய்கையில்லாதவன், எப்போதும் துஷ்ட காரியஞ் செய்பவன்.

(4) புதனுகில்:—ஜாதகன் சுக போகங்களால் சந்தோஷ மடைந்தவன், இனியன், அழகியவன், லாபத்தையே முக்கியமாய் கருதுபவன், தர்ம முணர்ந்தவன், பிரியமான அதிதிகளுடையவன், யாகத்தில் ஆசை யுடையவன், முக் கியமாய் விரும்பத் தக்கவன்.

(5) குருவாகில்:—ஜாதகன் தேவப்பிராமண பக்தன், அறிவு, வித்தை, ஆகமம், சத்தியம் இவைகளுடன் கூடியவன்,

தெளிவுள்ள முக முடையவன், அதிக அன்னபான முடையவன்.

(6) சுக்கிரனுகில்:—ஜாதகன் புண்ணிய தீர்த்த ஸ்நானஞ் செய்தவன், விரும்பியவாறு தர்மம் செய்பவன், பண்டிதன், நன்றியுள்ளவன், படித்த ஜனங்களால் அடையத்தக்கவன், இந்திரியங்களை ஜெயித்தவன், மாசற்ற புத்தி யுடையவன், இனியன்.

(7) சனியாகில்:—ஜாதகன் நல்ல தாதா, பிரிவுடையவன், நல்ல பெண்டீர் போகத்தால் பெருகிய சுக முடையவன், ஜெயிக்கப்பட்ட சத்துருக் கூட்டங்களை உடையவன், நிலையுள்ளவன், கடுமையான பல முடையவன்.

(5) சனியினுடைய துவாதசாம்ச பலன்.

சனி இருக்கும் துவாதசாம்சாதிபதி:—

(1) சூரியனுகில்:—ஜாதகன் நல்ல புத்திமான், அதிக கடுமையாய்ப் பேசுபவன், துஷ்டன், நீச்ச சகவாச முடையவன், புகழ் இல்லாதவன்.

(2) சந்திரனுகில்:—ஜாதகன் நல்ல புத்திமான், லாபத்துடன் கூடியவன், அரச வெகுமானத்தால் போஷிக்கப்படுபவன், சங்கீதம், சில்பம் முதலிய வித்தைகளில் பற்றுள்ள மன முடையவன்.

(3) செவ்வாயாகில்:—ஜாதகன் நிகரற்றவன், தனத்துடன் கூடியவன், தர்மத்தில் கருத்துள்ளவன், மான முடையவன், அரசனுக்கு வேண்டியவன்.

(4) புதனுகில்:—ஜாதகன் பொருள் தோஷத்தால் பீடையடைந்தவன், பயந்தவன், எப்போதும் மனிதரால் நிந்திக்கப்பட்டவன்.

(5) குருவாகில்:—ஜாதகன் புகழுடையவன், சாஸ்திரங்களில் வல்லவன், பொருளை பிரதானமாக உடையவன், புத்திரருடன் கூடியவன், பந்துவென்னும் பெயருடன் கூடியவன், மான முடையவன், பிராமணர்களுக்கு விருப்பமானவன்.

(6) சுக்கிரனுகில்:—ஜாதகன் அதிக அன்னபான முடையவன், உயர்ந்த குணமுள்ள மனைவி யுடையவன், இரத்னங்களுடை யவன், பாக்கியவான், மனிதர்களுள் உயர்ந்தவன்.

(7) சனியாகில்:—ஜாதகன் நிலையான புத்தியுடையவன், விரதம், உபவாசம் முதலியன செய்பவன், இஷ்டமான தோழரு டையவன், குலத்திற்கு முக்கியமானவன், எப்போதும் கெட்ட ஆசாரமுள்ளவன்.

(6) சனியினுடைய திரிம்சாம்ச பலன்.

சனி இருக்கும் திரிம்சாம்சாதிபதி:—

(1) செவ்வாயாகில்:—ஜாதகன் பாவஞ் செய்யுஞ் சுபாவ முடையவன், பயங்கரமான செய்கை யுடையவன், அர சரால் அவமான மடைந்த தேக முடையவன், நோயால் தபிப்பவன், துஷ்ட சுபாவ முடையவன்.

(2) சனியாகில்:—ஜாதகன் வணக்க முடையவன், ஜெயிக்கப் பட்ட சத்துருக்களை உடையவன், பொருள் சம்பாதிப் பதில் ஊக்க முடையவன், வேண்டிய நேசருடையவன், அதிக பலம் வாய்ந்தவன், சத்தியத்தில் நிற்பவன், நீதி யறிந்தவன்.

(3) குருவாகில்:—ஜாதகன் நல்லவன், விரதம், உபவாசம் இவைகளால் சம்பாதிக்கப்பட்ட தர்ம முடையவன், பிரியமாய்ப் பேசுபவன், சத்தியத்துடன் கூடியவன், பிர சித்தன்.

(4) புதனுகில்:—ஜாதகன் குலத்திற்கு முக்கியன், அழகிய உருவம், பண்டிதன், இஷ்டமான தர்மம் செய்பவன், பொறுமை யில்லாதவன், எப்போதும் சாஸ்திரங்களி லேயே கருத்துடையவன்.

(5) சுக்கிரனுகில்:—ஜாதகன் புத்திர சுக முடையவன், பிரிய மான அதிதி யுடையவன், புத்திமான், நன்றி யுள்ளவன், பெண்களுக்குப் பிரியன், மனிதரால் பூசிக்கத் தக்கவன்.

(7) சனி மித்திர பலத்துடனிருக்கில்:—ஜாதகன் அதிக தோழர், பந்துக்களுடையவன், நிலையுள்ள குண முடையவன், வெகு புகழு டையவன், வித்தையால் திருந்தியவன், எப்போதும் இனியன்.

(8) சனி ஸ்தான பலத்துடனிருக்கில்:—ஜாதகன் ஆசார முடையவன், கர்வ மில்லாதவன், அதிக போக மாதரும், தனமு முடையவன், நல்ல தாரமுடையவன், நாற்கால் ஜீவன்கள் நிறைந்த வன், அரசரால் வெகு மதிக்கப்பட்டவன்.

(9) சனி உச்ச பலத்துடனிருக்கில்:—ஜாதகன் ஸ்தான பலத் திற்குச் சொன்ன பலனை அனுபவிப்பான். மேலும் தனவான், அதிக இரத்தினம் முதலியன நிறைந்த தன முடையவன், சத்துருக் களை அழிப்பவன்.

(10) சனி நவாம்ச பலத்துடனிருந்தால்:—ஜாதகன் அதிக யாகஞ் செய்யும் சுபாவமுடையவன், புத்தியிலுயர்ந்தவன், புண்ணிய காரியம் செய்பவன், சத்துருக்க ளில்லாதவன், சபைத் தலைவன், பிராமணர்களால் விரும்பத்தக்கவன்.

(11) சனி சுபக் கிரக பார்வை பெற்றிருக்கில்:—ஜாதகன் பார்க் கப் பயங்கரமானவன், பயிர்த் தொழிலால் அடையப்பட்ட பொன் முதலிய பொருளுடையவன், உயர்ந்த குதிரையுடையவன், சுக முடையவன், ஆசார முடையவன்.

(12) சனி புருஷ க்ஷேத்திர பலத்துடனிருந்தால்:—ஜாதகன் சரீர பல முடையவன், மற்றவரால் கலைக்க முடியாதவன், ஸ்திரீ களுக்குப் பிரியம் செய்பவன், பிரியமாய் பேசுபவன், எல்லா கலைகளி லும் வல்லவன்.

(13) சனி திக்குப் பலத்துடனிருந்தால்:—ஜாதகன் அதிக அன்னபான முடையவன், தாக்ஷிண்ய சுபாவ முள்ளவன், வெகு போகங்களுடையவன், பாடுங்குண முடையவன், தேவப் பிராமண பக்தி யுடையவன்.

(14) சனி சேஷ்டா பல முள்ளவராகில்:—ஜாதகன் எப்போ தும் நற்செய்கை செய்பவன், சத்தியத்துடனிருப்பவன், தேவர், பெரியோர்கள் போன்ற பிரபாவ முடையவன், நல்ல தீர்த்த ஸ்நானம் செய்பவன், பிதா, மாதா பக்தி யில்லாதவன்.

(15) சனி ராத்திரி பலத்துடனிருந்தால்:—ஜாதகன் சௌக் கிய முடையவன், அதிக போக முடையவன், அழகிய தேக முடை

யவன், நல்ல அலங்கார முடையவன், தயை யுடையவன், தானஞ் செய்பவன், மானி.

(16) சனி வருஷ பலத்துடனிருந்தால் :—ஜாதகன் அதிக புகழ் வாய்ந்தவன், எப்போதும் பொறுமை யுடையவன், விசன மற்றவன், இந்திரியங்களை ஜெயித்தவன், தேவர், பெரியோரிடம் பக்தி யுடையவன்.

(17) சனி மாச பலத்துடனிருக்கில்:—ஜாதகன் கண்களுக்குப் பார்க்கத்தக்க அழகுடையவன், புகழுடையவன், தர்மம் செய்பவன், பொறுமை யுடையவன், எப்போதும் எல்லா ஜனங்களுக்கும் நன்மை செய்பவன்.

(18) சனி வார பலத்துடனிருந்தால்:—ஜாதகன் வெகு சாஸ்திரங்க ளறிந்தவன், உபத்திரவம் செய்யாதவன், மானம், நற்குண முடையவன், அதிக பொக்கிஷ முடையவன் ஜனங்களுக்குத் தலைவன்.

(19) சனி ஹோரா பல முடையவராகில்:—ஜாதகன் வெகு மதி அடைபவன், தாயைப் பிரிந்தவன், தர்மத்தில் ஆசையுடையவன், அரசரால் வெகு மதிக்கப்பட்டவன், எப்போதும் உயர்ந்த குணமுள்ள ஜனங்களை பின் பற்றுபவன்.

(20) சனி திரேக்காண பலத்துட னிருக்கில்:—ஜாதகன் சத்துருக்களில்லாதவன், தன் பக்கத்தவரால் கௌரவிக்கப் பட்டவன், தன் குலத்திற்கு முக்கியமானவன், நோய், பாபம், முதலியன இல்லாதவன்.

(21) சனிக்கு மித்திர பல மில்லாதிருந்தால்:—ஜாதகன் அதிக துஷ்டன், நேசரில்லாதவன், அழிந்த புத்திரருடையவன், செல்வமில்லாதவன், ரூப மற்றவன், எப்போதும் அரசரால் பீடை யடைந்தவன்.

(22) சனிக்கு ஸ்தான பலம் இல்லாவிடில்:—ஜாதகன் தனமும் ஆசார மில்லாதவன், சத்ரு பீடை யுடையவன், பாவத்தில் ஆசை யுடையவன், நன்றி கெட்டவன், நோய் பாதை யுடையவன், பந்துக்களால் விடப்பட்டவன்.

(23) சனிக்கு உச்ச பலம் இல்லாவிடில்:—ஜாதகன் ஆசாரம், தன மில்லாதவன், சத்துருக்களால் ஜெயிக்கப்பட்டவன், குறைந்த

தன முடையவன், பணி செய்பவன், எப்போதும் சூது முதலிய பாவத் தொழில் செய்பவன்.

(24) சனிக்கு நவாம்ச டலம் இல்லாவிடில்:—ஜாதகன் எப் போதும் அனேக சாஸ்திரங்களுடன் கூடியவன், முன்னல் அதிக உபத்திரவம் செய்தவன், தன தான்ய மற்றவன், தப்பு வழியில் சென்றவன், அரசனல் பீடை யடைந்தவன்.

(25) சனிக்குப் புருஷ க்ஷேத்ர பல மில்லாவிடில்:—ஜாதகன் சத்துருக்கள், நோய்கள், இவையுடன் கூடியவன், துரதிர்ஷ்ட முடை யவன், விகாரமானவன், கடுமையானவன், கர்ம மற்றவன், தன் தர்மத்தை விட்டவன்.

(26) சனிக்குத் திக்குப் டலம் இல்லாவிடில்:—ஜாதகன் அயல் பெண்டிரிடம் ஆசை யுடையவன், ஆசை யற்றவன், பயங்கரன், குருத்துரோகம் செய்பவன், வெட்க மற்றவன், எப்போதும் துன் மார்க்கன்.

(27) சனிக்குச் சேஷ்டா பலம் இல்லாவிடில் :—ஜாதகன் துஷ்ட காரியங்களை நன்கறிந்தவன், துவேஷ குண முடையவன், கெட்ட வழியில் நடப்பவன், துர் நடவடிக்கையுடைய தார முடை யவன், மதி யில்லாதவன், தன மற்றவன்.

(28) சனிக்கு ராத்திரி பல மில்லாவிடில்:—ஜாதகன் போக சுக மில்லாதவன், வஞ்சனை யுடையவன், நோய் பீடை யுடைய தேக முடையவன், கெட்ட மன துடையவன், எல்லா ஜனங்களாலும் வெறுக்கப்பட்டவன்.

(29) சனிக்கு வார பலம் இல்லாவிடில்:—ஜாதகன் தன மில் லாதவன், அனேக விதத்தால் நோய் பீடை யடைந்தவன், துக்க முடையவன், நிந்திக்கப்பட்டவன், கெட்ட வேஷ முடையவன், அதிக சாகஸம் செய்பவன்.

(30) சனிக்கு வருஷ பலம் இல்லாவிடில்:—ஜாதகன் பித்த சுர முடையவன், கலை நோய், இடக்கண் நோய் முதலிய பீடைக ளுடையவன், சத்திய மில்லாதவன்.

(31) சனிக்கு மாச பலம் இல்லாவிடில்:—ஜாதகன் அயலா ருடன் வாதாடுபவன், அழிந்த பொருளுடையவன், கெடுதி செய்

பவன், கடுமையானவன், பராக்கிரம முடையவன், மனைவியைப் பிரிந்தவன்,

(32) சனிக்கு ஹோரா பலம் இல்லாவிடில் :—ஜாதகன் மனை மக்களில்லாதவன், தர்மத்தில் ஆசை யில்லாதவன், எப்போதும் நல்ல அலங்கார முடையவன், பந்துக்களால் பீடை யுடையவன்.

(33) சனிக்குப் பக்ஷ பலம் இல்லாவிடில்:—ஜாதகன் தன் பக்க பல மற்றவன், பாவ குண முடையவன், பந்துக்களால் பீடை யடைந்தவன், வெளிவாசஞ் செய்யுங் குண முடையவன், அயலாருடன் வாதிப்பவன்.

5-வது அத்தியாயம்.

துவாதச சமுதாய பாவ பலாத்தியாயம்.

(96) துவாதச பாவங்களின் கிரக யோகப் பலன்.

கிரகங்கள் பாவச் சக்கிரத்தில் இருக்கும் அமைப்புக்குக் கிரக யோகம் என்று சொல்லுவதுண்டு. இந்த கிரக யோகத்தைக் கொண்டு துவாதச பாவங்களின் ஒவ்வொரு பாவத்தினுடைய பலன் இனிமேல் சொல்லப்படும். கிரக யோகங்களினு லுண்டாகும் பலன்கள் அநேக ஜோதிட சாஸ்திர புத்தகங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன. அவைகளில் முக்கியமானவைகள் இங்கு கொடுக்கப்படும். அவைகள் எல்லாவற்றையும் இங்கு சொல்லுவோமானால் ஒவ்வொரு பாவத்திற்கும் ஒரு புத்தகமாகப் பன்னிரண்டு பாவங்களுக்கும் பன்னிரண்டு புத்தகம் எழுத நேரிடும். இனிச் சொல்லப்போகும் கிரக யோகங்கள் பிரகாரம் கிரகங்கள் ஒரு ஜாதகத்தில் பாவச்சக்கிரத்தில் இருந்தால் தான் அந்த கிரகயோகத்திற்குரிய பலன் சரியாய் வரும், அப்படியில்லாமல் கொஞ்சங்கூட வித்தியாசமிருந்தால் பலன் வித்தியாசமாகிவிடும், இதை நன்றாய்க் கவனிக்க வேண்டியது. ஒரு பாவத்தின் பலனைச் சொல்லவேண்டுமானால் அந்த பாவத்தின் வலிவு, அந்த பாவாதிபதியின் வலிவு, அந்தப் பாவத்தைப் பார்க்குங் கிரகங்களின் சுபாவமும் வலிவும், அந்த பாவத்திலிருக்குங் கிரகங்களின் சுபாவமும் வலிவும், அந்த பாவாதிபதியின் வலிவும், அந்த பாவாதிபதியுடன் சம்மந்தப்பட்ட கிரகங்களின் சுபாவமும், வலி

வும், அந்த பாவாதிபதியைப் பார்க்கும் கிரகங்களின் சுபாவமும் வலிவும், இக் கிரகங்களின் காரகத்துவமும் ஆதிபத்திய பலமும், பாவகாரகத்துவம் ஆகிய இந்த பல அம்சங்களை நன்முய் ஆராய்ச்சி செய்து யோசனை செய்து யுக்தித்து சாமர்த்தியமாய்ப் பலன் சொல்ல வேண்டும். உச்சம், மூலத் திரிகோணம், ஆட்சி, மித்துரு, சத்துரு, சமராசி, நீச்சம் இவைகளை ராசிச்சக்கர ரீதியாய்ப் பார்க்கவேண்டும். 1-ல், 2-ல், 3-ல், 4-ல், 5-ல், 6-ல், 7-ல், 8-ல், 9-ல், 10-ல், 11-ல், 12-ல் இருந்தால் என்று சொல்லும்போது பாவச் சக்கரத்தில் லக்கின பாவத்திலிருந்து கணக்கிடவேண்டும். 2-வது, 3-வது, 4-வது, 5-வது, 6-வது, 7-வது, 8-வது, 9-வது, 10-வது, 11-வது, 12-வது பாவங்கள் என்றும், கேந்திர திரிகோண பாவங்கள் என்றும் சொல் லும்போது அவைகளைக் கணக்கிடுவதற்கு ஆரம்பஇடம் விவரமாய்ச் சொல்லாமலிருந்தால், எண்ணுவதற்கு அந்த ஆரம்பஇடம் லக்கினம் பாவம் என்று பாவித்துக் கொள்ளவேண்டியது. ஒரு கிரகத்தை அல்லது பாவத்தைச் சுபர் அல்லது பாபர் பார்த்தால் என்று சொல்லி இருந்தால் (என் ஜாதக கணிதத்தில் 8-வது, 38-வது கட் டத்தில் கணித்துவந்தப் பிரகாரம் கிரக திருக்பலமும் பாவ திருக் பலமும் கணிக்கச் சாத்திய முள்ளவர்கள் அந்த கட்டங்களில் வந் ததுபோல கணித்து வரும் திருக் பலங்களை உபயோகிக்கவும், அவ் விதம் திருக்பலம் கணிக்கச் சாத்தியப் படாதவர்கள் சாதாரணமாய் செவ்வாய் 4, 8 யையும் குரு 5, 9 யையும், சனி 3, 10 யையும், எல்லாக் கிரகங்களும் 7 யையும் பார்க்கும் என்ற பார்வை விதி பிரகாரம் வரும் முழு பார்வை, முக்கால் பார்வை, அரை பார்வை, கால் பார்வை என்ற கணிதத்தால் வரும் பார்வையின் அளவை உபயோகிக்கவும்.

(97) லக்கின பாவம்.

(1) லக்கின பாவம் எவ்வளவு சுபகரமாக இருக்கின்றதோ அவ் வளவு நீண்டகாலம் ஆயுளும், சுகமும் உண்டு. இராஜாக்களிடத்தில் பிரிய மாயிருப்பான். இப்படி யிருக்கும்போது லக்கினத்தை லக்கி னாதிபதி பார்த்தால், ஜாதகன் தனபதியாவன், வெகு புத்திமான், குலக்கீர்த்திமான்.

(2) ஒரு ஜாதகனுடைய சொரூபம், சுபாவம், லக்ஷணம் இவை களை லக்கினம் எந்த நவாம்சையில் இருக்கின்றதோ அந்த நவாம்சை

ராசியாதிபதியைக் கொண்டும், அல்லது லக்கினத்திலிருக்கும் கிரகங்களில் எந்த கிரகம் மிகவும் வலிவாய் இருக்கின்றதோ அந்தக் கிரகத்தைக் கொண்டும் அறியவேண்டும். ஜாதகனுடைய தேகத்தின் நிறத்தைச் சந்திரன் எந்த நவாம்சையிலிருக்கின்றானோ அந்த நவாம்சாதிபதியைக்கொண்டு அறியவேண்டும்.

(3) ஜனன காலத்தில் லக்கினாதிபதி வலிவுடன் சுபருடைய ராசியிலிருந்து, லக்கினத்திற்குக் கேந்திரகோணங்களிலிருந்து சுபருடன் சம்பந்தப்பட்டாலும் அல்லது சுபரால் பார்க்கப்பட்டாலும் ஜாதகனுடைய கீர்த்தியும் புகழும் நான்கு சமுத்திரங்கள் வரையிலும் பரவும்.

(4) ஜனன காலத்தில் லக்கினாதிபதி பாபருடைய ராசியிலிருந்து லக்கினத்திற்கு 6, 8, 12-ம் பாவங்களில் பாபருடன் சம்மந்தப்பட்டாலும் அல்லது பாபரால் பார்க்கப்பட்டாலும் ஜாதகன் புகழும் கீர்த்தியுமின்றி யாருக்குந் தெரியாதவனாக விருப்பான்.

(5) லக்கினாதிபதி லக்கின பாவத்திலும் ஒன்பதாவது பாவாதிபதி ஒன்பதாவது பாவத்திலும் இருந்தாலும் அல்லது இவர்கள் பரிவர்த்தனையாக (அதாவது லக்கினாதிபதி 9-லும், 9 ஆம் பாவாதிபதி லக்கின பாவத்திலும்) இருந்தாலும் அப்போது இப் பாவாதிபதிகளுடன் குரு சம்மந்தப்பட்டாலும் அல்லது அப்போது இப்பாவாதிபதிகளைக் குரு பார்த்தாலும் ஜாதகன் நெடுங்காலம் சுகவானாகவும், பாக்கியவானாகவும், அதிர்ஷ்டவானாகவுமிருப்பான்.

(6) லக்கினாதிபதி யிருக்கும் பாவத்திற்குப் பன்னிரண்டாவது பாவாதிபதி லக்கினாதிபதிக்கு சத்துருவானாலும் அல்லது நீச்சமானாலும் அல்லது பலவீனமானாலும், ஜாதகன் அந்நிய தேசத்திற்குப் போய்விடுவான். இங்கு சொல்லப்பட்ட பன்னிரண்டாவது பாவாதிபதி சுக்கிரனுக்கு மித்துருவாகில் சுக்கிரனால் பார்க்கப்பட்டால் ஜாதகன் அந்த அந்நிய தேசத்திலேயே நிலையாகத் தங்கிவிடுவான். இந்த பன்னிரண்டாவது பாவாதிபதி அஸ்தங்கத மடைந்திருந்தால் ஜாதகன் அந்த அந்நிய தேசத்தில் ஒரு குக்கிராமத்தில் இருப்பான். இந்த பன்னிரண்டாவது பாவாதிபதி பல மூடையவனாக விருந்தால் ஜாதகன் அந்நிய தேசத்தில் பெரிய பட்டணத்திலிருப்பான். இந்த பன்னிரண்டாவது பாவாதிபதி லக்கின பாவத்திற்குக் கேந்திர திரிகோணத்தில் தன்னுடைய சுவ, உச்ச, மித்துரு க்ஷேத்திரத்திலிருந்து

தனக்கு இரண்டு பக்கங்களிலும் சுபக்கிரகங்களிருந்தால் ஜாதகன் தன் மனதிற்கிஷ்டமான தேசங்களுக்குப் போய்க்கொண்டே யிருப்பான். இந்த பன்னிரண்டாவது பாவாதிபதியைக் குரு அல்லது சந்திரன் அல்லது சுக்கிரன் பார்த்தால் திவ்விய கேஷத்திரங்களுக்கு ஜாதகன் போவான். இந்த பன்னிரண்டாவது பாவாதிபதி லக்கின பாவாதிபதி யிருக்கும் பாவத்திற்கு இரண்டாவது பாவத்திலிருந்து லக்கின பாவாதிபதிக்குச் சத்துருவானால் ஜாதகன் தான் பிறந்த ஊரிலேயே வசிப்பான்.

(7) லக்கினம் ஜலராசியாகி லக்கின பாவத்தில் சுபர்களிருந்தால் ஜாதகன் தாட்டியாயிருப்பான். லக்கினாதிபதி ஜலராசியில் சுபக்கிரகங்களுடன் சம்மந்தப்பட்டிருந்தால் ஜாதகன் வலிவான தேகமுடையவன்.

(8) லக்கினாதிபதி எட்டாவது பாவத்தில் ஜல ராசியாயில்லாத ராசியிலிருந்தால் ஜாதகனுக்கு அதிகதேக பாதையுண்டு. லக்கினாதிபதியிருக்கின்ற நவாம்சாதிபதி எந்த ராசியிலிருக்கின்றாரோ அந்த ராசியாதிபதி ஜலமில்லாத ராசிக்கு அதிபதியானால் ஜாதகனுடைய தேகம் இளைத்து மெலிந்திருக்கும்.

(9) லக்கினாதிபதி இரண்டு பாபக்கிரகங்களுக்கு மத்தியிலிருந்தால் ஜாதகன் எதிரிகளுக்குப் பயந்திருப்பான். கேது அல்லது ராகு லக்கின பாவத்திலிருந்து லக்கினாதிபதி துஸ்தானங்களாகிய 6, 8, அல்லது 12-வது பாவத்திலிருந்தால் லக்கினாதிபதியின் தசையில் லக்கினாதிபதி யிருக்கும் பாவத்திற்கு ஆறுவது பாவாதிபதியின் புத்தியில் ஜாதகன் அங்க வீனனுவான். லக்கின பாவத்திற்கு 6-வது பாவாதிபதி லக்கின பாவத்திலிருந்து அதனுடன் ராகு அல்லது கேது இருந்தால் தேகத்தில் ரணமுண்டாகும்.

(10) லக்கினாதிபதி கேந்திர திரிகோண பாவத்தில் பல வீனனுயிருந்தால் ஜாதகன் ரோகியாயிருப்பான். லக்கினாதிபதி இருக்கும் ராசியாதிபதி துஸ்தானங்களாகிய 6, 8, அல்லது 12-வது பாவங்களிலிருந்தால் ஜாதகன் மெலிந்த தேக முடையவன், துர்பல தேக முடையவன்.

(11) லக்கினாதிபதி லக்கின பாவத்திலிருந்து 6, 8, அல்லது 12-வது பாவத்தில் பாபக்கிரகத்துடனிருந்தால் ஜாதகன் ரோகியா

வன். லக்கினாதிபதி லக்கின பாவத்திலிருந்து 6-வது பாவாதிபதி யுடன் சம்மந்தப்பட்டு 6, 8, அல்லது 12-வது பாவத்திலிருந்தாலும் அல்லது லக்கின பாவத்திலிருந்தாலும் ஜாதகன் ரோகியாவன்.

(12) லக்கினாதிபதி பலவீனனாகி லக்கின பாவத்தில் பாபக்கிரக மிருந்தால் ஜாதகன் ரோகியாவன். லக்கினாதிபதி பலவீனனாகவிருந் தால் ஜாதகன் கோபியா யிருப்பான். லக்கினாதிபதி லக்கின பாவத் திற்குக் கேந்திரகோண பாவத்திலிருந்தால் ஜாதகன் ரோகமில்லாம லிருப்பான்.

(13) லக்கினாதிபதி இருக்கும் ராசியாதிபதி லக்கின பாவத்திற்கு எட்டாவது பாவத்திலிருந்தால் ஜாதகனுடைய தேகம் துர்பலமாயிருக் கும். எந்த பாவாதிபதியும் இருக்கும் ராசியாதிபதி லக்கின பாவத்தி லிருந்து 6, 8, அல்லது 12-வது பாவத்திலிருந்தால் அந்த பாவம் பல வீன மடையும்.

(14) இராகுவும் செவ்வாயும் அல்லது இராகுவும் சனியும் கூடி ஒரு பாவத்திலிருந்தால் ஜாதகனுக்கு பீஜம் பெரியதாயிருக்கும். லக்கின பாவத்தில் செவ்வாயிருந்தால் ஜாதகனுடைய தொப்புள், மனுக்கால்கள் விரைகள் இவைகளில் வீக்க முண்டாகும்.

(15) லக்கின பாவம் சுபகரமாயிருந்து, சுபக்கிரகங்களால் பார்க் கப்பட்டு, அதில் பாபக் கிரகங்களில்லாம லிருந்தால் ஜாதகன் பால்யத் திலிருந்து சுகவானு யிருப்பான். லக்கின பாவத்தில் பல பாபக் கிரகங்களிருந்தால் ஜாதகன் பிறந்தது முதல் மரணமடையும் வரையில் துக்க முடையவனுயிருப்பான்.

(16) லக்கினாதிபதி சுபராசியிலிருந்து சுபரால் பார்க்கப்பட்டால் அல்லது கோபுராம்சம் அடைந்திருந்தால் ஜாதகன் பதினாறு வயதுக்கு மேற்பட்டு சுகவானு யிருப்பான்.

(17) லக்கினாதிபதி இருக்கின்ற நவாம்ச ராசியாதிபதி லக்கின பாவத்திற்குக் கேந்திர திரிகோண பாவத்திலிருந்தாலும், உச்சத்தி லிருந்தாலும் அல்லது பலத்துடன் லக்கின பாவத்திற்குப் பதினோரா வது பாவத்திலிருந்தாலும் ஜாதகன் முப்பது வயதுக்கு மேற்பட்டு சுகவானு யிருப்பான்.

(18) லக்கின பாவத்தைச் சூரியன் பார்த்தால் ஜாதகன் இராஜாங்கத்தில் வேலை செய்பவன், பிதுர்தன முடையவன், சந்திரன்

பார்த்தால் ஜல வஸ்துக்களில் வியாபாரஞ் செய்வான், மஹா தனவான்; செவ்வாய் பார்த்தால் தர்ம குண முடையவன், ஸ்தூல சிசன முடையவன்; புதன் பார்த்தால் வித்வான், சிற்ப சாஸ்திரத்தில் வல்லவன், கீர்த்திமான்; குரு பார்த்தால் இராஜ பூஜ்யன், விரதமனுசரிப்பவன்; சுக்கிரன் பார்த்தால் வேசிகள் பிரியன், தனவான், சுகவான்; சனி பார்த்தால் விருத்தாப்பிய மனைவியுடையவன், அசுத்த மூள்ளவன், கலகப்பிரியன்.

(19) லக்கின பாவத்தை லக்கினாதிபதி பார்த்தால் ஜாதகன் அரசனுவன் அல்லது அரசனுடைய விஸ்வாச முடையவன், தனவான், சுகவான், லக்கின பாவத்தைச் சுபக்கிரகம் பார்த்தால் எல்லாம் சுபமாயிருக்கும். லக்கின பாவத்தைப் பாபக்கிரகம் பார்த்தால் எல்லாம் அசுபமாயிருக்கும்.

(20) லக்கின பாவத்தை இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட சுபக் கிரகங்கள் பார்த்தால் ஜாதகன் சுகவான். எல்லா சுபக் கிரகங்களும் லக்கின பாவத்தைப் பார்த்தால் ஜாதகன் அரசனுவன். லக்கின பாவத்தில் மூன்று சுபக்கிரகங்கள் இருந்தால் ஜாதகன் நல்ல அரசனுவன். லக்கினத்தில் மூன்று பாபக்கிரகங்களிருந்தால் ஜாதகன் தூக்க முடையவனுவான்.

(21) லக்கினாதிபதி அதி பலவந்தனுகி சுபர்களால் பார்க்கப்பட்டு, பாபிகளால் பார்க்கப்படாமலிருந்து லக்கின பாவத்திற்குக் கேந்திர பாவத்திலிருந்தால் அவர் அகால மரணத்தைப் போக்கடித்து ஜாதகனுக்கு நீண்ட ஆயுளைக் கொடுத்து நல்ல குணங்களையும் இராஜ லக்ஷணத்தையும் உண்டுபண்ணுகின்றார்.

(98) இரண்டாவது பாவம்.

தனம்:—

(1) 1-வது, 2-வது, 11-வது பாவாதிபதிகள் தங்கள் தங்கள் சொந்த பாவங்களிலேயே இருந்தால் ஜாதகன் வெகு தனவான். 2-வது, 11-வது பாவாதிபதிகள் 11-வது பாவத்தில் சுய க்ஷேத்திரம் அல்லது மித்துரு க்ஷேத்திரம், அல்லது உச்ச க்ஷேத்திரம் இவைகளிலிருந்தால் ஜாதகன் வெகு தனவான், 2-வது, 11-வது பாவாதிபதிகள் ஒருவருக்கொருவர் மித்துருவாயிருந்து லக்கின பாவத்திலிருந்தால் ஜாதகன் வெகு தனவான். லக்கின பாவாதிபதி 2-வது,

11-வது பாவாதிபதிகளுடன் சம்பந்தப்பட்டு லக்கின பாவத்திலிருந்தால் ஜாதகன் வெகு தனவானுவான்.

(2) முதலில் 2-வது பாவத்திலிருக்கின்ற கிரகமும், அதன் பிறகு 2-வது பாவத்தைப் பார்க்கின்ற கிரகமும், அதன் பிறகு 2-வது பாவாதிபதியாகிய கிரகமும், தன காரகன் எந்த வர்க்கத்திலிருக்கின்றானே அந்த வர்க்க மூலமாகத் தங்கள் தங்கள் தசைகளில் திரவியத்தைக் கொடுப்பார்கள். இங்கு தன காரகன் என்றது குரு.

(3) லக்கின பாவாதிபதி பலவந்தனாகி 2-வது பாவத்திலிருந்தால் ஜாதகன் நிதியுள்ளவன். லக்கின பாவாதிபதி பலவீனனாகி, பாபியுடன் சம்மந்தப்பட்டால் வஞ்சனையினால் ஜாதகன் தன்னுடைய திரவியத்தை இழந்துவிடுவான்.

(3) 2-வது பாவத்திலிருக்கின்ற கிரகம் பாபக் கிரகத்தால் பார்வையிடப்பட்டு, 2-வது பாவாதிபதிக்குச் சத்துருவாயிருந்தாலும் அல்லது நீச்சத்திலிருந்தாலும், அல்லது அஸ்தங்கதமாயிருந்தாலும் அந்த கிரக தசையில் ஜாதகனுக்குத் தனநாச முண்டாகும். இந்த கிரகம் கோட்சார காலத்தில் தனக்குக் கெடுதியைச் செய்ய அதிகாரம் வரும்போது தனநாச முண்டாகும்.

(4) 2-வது பாவத்தில் அநேக சுபக்கிரகங்களிருந்து, தன காரகன் வலிவாயிருந்தாலும் அல்லது தன் உச்ச கேஷத்திரம், மித்துரு கேஷத்திரம், சுவ கேஷத்திரம் இவைகளிலிருந்தால் ஜாதகன் தன மரணகாலம் வரையிலும் தனத்தைச் சம்பாதித்துக்கொண்டிருப்பான்.

(5) 2-வது பாவாதிபதி லக்கின பாவத்திலிருந்து 3-வது பாவாதியுடனிருந்தால் சகோதரரால் தேடப்பட்ட தனத்தை ஜாதகன் அடைவான். 2-வது பாவாதிபதி லக்கின பாவத்தில் 4-வது பாவாதியுடனிருந்தால் ஜாதகன் மாதாவின் சொத்தை அடைவான். 2-வது பாவாதிபதியுடன் எந்த பாவாதிபதி சேர்ந்து லக்கினத்திலிருக்கின்றானே அந்த பாவம் மூலமாய் ஜாதகனுக்குத் தனஞ் சேரும்.

(6) 2-வது பாவாதிபதி லக்கினபாவத்திலிருந்து, லக்கின பாவாதிபதி 2-வது பாவத்திலிருந்தால் அதிகப் பிரயாசையில்லாமல் ஜாதகனுக்குத் தனம் வந்து சேரும். லக்கின பாவாதிபதியும் 2-வது பாவாதிபதியும் கூடி எந்த பாவத்திலிருக்கின்றார்களோ அந்த பாவ மூலமாய் ஜாதகனுக்குப் பெரும்பாலும் தனம் வந்து சேரும்.

(7) 2-வது பாவத்தில் சந்திரனிருந்து சுக்கிரனுல் பார்க்கப்பட்டால் ஜாதகன் தாதாவா யிருப்பான். 2-வது பாவத்தில் புதன் இருந்து சுபரால் பார்க்கப்பட்டால் ஜாதகன் சதாகாலம் தன்னிடத்தில் தனம் வைத்துக்கொண்டே யிருப்பான். தாதா என்றுல் கொடையாளி.

(8) 2-வது பாவாதிபதி எந்த திக்கில் இருக்கின்றுரோ அந்த திக்கில் 2-வது பாவாதிபதியின் தசை காலத்தில் ஜாதகன் விசேஷ விருத்தி யடைவான். இந்த பிரகம் சாதாரணமாய்ப் போவதுபோல நேர் கதியில் போனுல் மேற்சொல்லிய திக்கில் தனஞ் சம்பாதிப்பான். இந்த பிரகம் ஜனன காலத்தில் வக்கிர கதியிலிருந்தால் எல்லாத் திக்குகளிலும் ஜாதகனுக்குச் சர்வ சித்தியு முண்டு.

(9) 2-வது பாவாதிபதி 11-வது பாவத்திலும் 11-வது பாவாதிபதி 2-வது பாவத்திலும் அல்லது 11-வது பாவத்திலும் இருந்தாலும் அல்லது 2-வது 11-வது பாவாதிபதிகள் லக்கின பாவத்திற்குக் கேந்திர பாவத்திலிருந்தாலும் ஜாதகன் தனவான், கியாதிமான்.

(10) 2-வது பாவாதிபதி லக்கின பாவத்திற்கு 6-வது அல்லது 12-வது பாவத்திலிருந்தாலும், அல்லது 12-வது பாவாதிபதி 2-வது பாவத்திலிருந்து 11-வது பாவாதிபதி 6-வது, 8-வது அல்லது 12-வது பாவத்திலிருந்தாலும், ஜாதகனுக்குத் தனம் நாசமாகும்.

(11) குரு 12-வது பாவத்திலிருந்து, 2-வது பாவாதிபதி பலவீனமாகவிருந்து, லக்கின பாவத்தைச் சுபர் பாராமலிருக்க ஜாதகனுடைய தனம் நாசமாகும்.

(12) லக்கின பாவாதிபதி 2-வது பாவத்திலிருக்கும்போது 2-வது பாவாதிபதி 11-வது பாவத்திலும் அல்லது 11-வது பாவாதிபதி லக்கின பாவத்திலும் இருந்தால் ஜாதகனுக்குத் தனமாவது அல்லது விலையுயர்ந்த சொத்தாவது வந்து சேரும்.

(13) 1-வது, 2-வது, 9-வது, 11-வது பாவாதிபதிகள் தங்களுடைய பரம உச்சத்திலும் அல்லது வைஸேஷிகாம்சங்களிலும் இருந்தால் ஜாதகன் கோட்டீஸ்வரனுவான். வைஸேஷிகாம்சம் என்பதைப் பற்றி அயிட்டம் 14 (a) பார்க்கவும்.

(14) 2-வது பாவாதிபதி அஸ்தங்கத மடைந்து நீச்சத்திலிருந்து கெட்ட சஷ்டியாம்சத்திலிருந்தால் ஜாதகன் கடன்காரனாக இருப்பான்.

(15) சூரியனும் சனியும் 2-வது பாவத்திலிருந்தால் ஜாதகன் தரித்திரனுவான்.

நேத்திரம்:—

(1) 2-வது பாவாதிபதியும் சந்திரனும், சுக்கிரனும் கூடி லக்கின பாவத்திலிருந்தால் இரவில் கண் தெரியாது. சூரியன், சுக்கிரன், லக்கின பாவாதிபதி இவர்கள் ஜெனன காலத்தில் ஆகாயத்தில் பூமிக்குக் கீழ் பாகத்தில் இருந்தால் ஜாதகன் மத்திய திருஷ்டியுள்ளவன். அதாவது கண்கள் மத்திம பார்வை யுடையவனவாயிருக்கும். ஆகாயத்தில் பூமிக்குக் கீழ்பாகம் என்பது லக்கின பாவத்தில் உதையமாக வேண்டிய பாகமும், 2-வது, 3-வது, 4-வது, 5-வது, 6-வது பாவமும் 7-வது பாவத்தில் உதையமாகவேண்டிய பாகமும் ஆகும்.

(2) 1-வது, 2-வது, 5-வது, 7-வது, 9-வது பாவாதிபதிகள் லக்கின பாவத்திலிருந்து 6-வது 8-வது, 12-வது பாவங்களிலிருந்தால் அப்போது சுக்கிரன் லக்கின பாவத்திலிருந்தால் ஜாதகன் குருடனுவான்.

(3) 2-வது பாவத்தில் சனியும் செவ்வாயும் மாந்தியும் 2-வது பாவாதிபதியுமிருந்தால் நேத்திர ரோகமுண்டு. 2-வது பாவத்தில் அநேக பாபக்கிரகங்களிருந்து சனி 2-வது பாவத்தைப் பார்த்தால் கண் விக்கின மடைந்ததாயிருக்கும் பார்வை மங்கலாயிருக்கும்.

(4) 2-வது பாவாதிபதியைச் சுபர் பார்த்தாலுங் கூடினாலும், அல்லது 2-வது பாவாதிபதி சுபருடைய நவாம்சையிலிருந்தாலும் ஜாதகனுக்குக் கண்கள் நன்றுயிருக்கும்.

பற்கள்:—

(1) 2-வது பாவாதிபதி இராகுடன் கூடி 6, 8, 12-வது பாவத்திருந்தால் இவர்களுடன் இவர்கள் இருக்கும் பாவாதிபதியுங் கூடினால் 2-வது பாவாதிபதியின் தெசாபுக்தியில் பல் நோயுண்டாகும். 2-வது பாவாதிபதியின் தெசையில் புதன் புக்தியில் நாக்கை பற்றிய நோயுண்டாகும்.

(2) 2-வது பாவாதிபதியும் இராகுவும் 3-வது பாவாதிபதியும் கூடினால் கழுத்து ரோகமுண்டாகும். செவ்வாயும் சனியும் 2-வது பாவத்திலிருந்தால் ஜாதகனுக்குச் சகல ரோகமுண்டு.

வாக்கு, வித்தை:—

(1) 2-வது பாவாதிபதியும் குருவும் 8-வது பாவத்திலிருந்தால் ஜாதகன் ஊமையாவன், ஆனல், 2-வது பாவாதிபதி உச்சஸ்தானத்திலிருந்தால் இந்த தோஷங் கிடையாது.

(2) 2-வது பாவாதிபதியும் புதனும், குருவும் 8-வது பாவத்திலிருந்தால் வித்தையில்லை, ஆனல் இவர்கள் கேந்திரம், திரிகோணம், சுவ க்ஷேத்திரம் இவைகளிலிருந்தால் வித்தையுண்டு.

(3) 2-வது பாவாதிபதி சுபனுடன் கேந்திர பாவத்திலாகினும், திரிகோண பாவத்திலாகிலும் சுபருடன் இருந்தால் ஜாதகன் வாக்மியாயிருப்பான், அதாவது வாக்குச் சாதுர்யமாயும் வேகமாய்ப் பேசுவான்.

(4) 2 வது பாவாதிபதி இருக்கும் நவாம்சை ராசியாதிபதி சுபனுடன் தன் உச்சராசியிலிருந்தாலும் அல்லது சுபரால் பார்க்கப்பட்டாலும், அல்லது பாராவதாம்சத்திலிருந்தாலும், ஜாதகன் வாக்குச் சாதுர்யமாயும், வேகமாயும் பேசுவான், புத்திசாலியாயுமிருப்பான்.

(5) குரு கேந்திர பாவத்திலாகிலும், அல்லது திரிகோண பாவத்திலாகிலும் இருந்து, புதன் 2-வது பாவாதிபதியாகி உச்சஸ்தானத்திலிருந்தாலும் அல்லது சுக்கிரன் உச்சஸ்தானத்திலிருந்தாலும் ஜாதகன் கணித வித்தை தெரிந்தவன்.

(6) 2-வது பாவத்தில் செவ்வாய் சுபருடன் கூடியிருந்து, புதன் இவர்களைப் பார்த்தாலும் அல்லது கேந்திர பாவத்திலிருந்தாலும் ஜாதகன் கணித வித்தை தெரிந்தவன்.

(7) 2-வது பாவாதிபதி சூரியன் அல்லது செவ்வாயாகி, குரு சுக்கிரன் இவர்களால் பார்க்கப்பட்டாலும் அல்லது பாராவதாம்சத்திலிருந்தாலும் ஜாதகன் தர்க்க சாஸ்திர மறிந்தவன்.

(8) 2-வது பாவாதிபதி பூர்ண பலமுள்ள குருவாகி சூரியன், சுக்கிரன் இவர்களால் பார்க்கப்பட்டால் ஜாதகன் இலக்கண வித்வானவான்.

(9) குரு கேந்திரகோண பாவத்திலிருந்து புதன், சுக்கிரன் இவர்களால் பார்க்கப்பட்டு, சனி பாராவதாம்சத்திலிருந்தால் ஜாதகன் வேதாந்த பரீசிலகன்.

(10) குரு கேந்திர பாவத்திலிருந்து, சுக்கிரன் சிம்மாசனம் சத்திலிருந்து, புதன் 2-வது பாவத்திலிருக்கின்ற கிரக மிருக்கின்ற நவாம்சாதிபதி பாகி கோபுராம்சத்திலிருந்தால் ஜாதகன் சஷ்ட சாஸ்திர வல்லபனுவான்.

(11) 2-வது பாவாதிபதி கோபுராம்சத்திலிருந்து, சுக்கிரன் பாராவதாம்சத்திலிருந்தால் ஜாதகன் தன் ஜனங்களை எல்லாம் தன் சவரட்சணையில் வைத்து ரக்ஷித்துக்கொண்டு சுகவானுகவிருப்பான்.

(1) 2-வது பாவாதிபதி சந்திரன் சுக்கிரன் இவர்களுடன் சம்மந்தப்பட்டு லக்கின பாவத்திலாகிலும் கேந்திர பாவத்திலாகிலு மிருந்தால் ஜாதகன் வெள்ளி பாத்திரத்தி லுண்பான். 2-வது பாவாதிபதி சந்திரன், குரு, சுக்கிரன் இவர்களுடன் சம்மந்தப்பட்டு லக்கின பாவத்திலாகிலும் கேந்திர பாவத்திலாகிலு மிருந்தால் ஜாதகன் பொன் பாத்திரத்திலுண்பான். 2-வது பாவாதிபதியும் லகினுதிபதியும் சனியுடன் சம்மந்தப்பட்டிருந்தால் இரும்பு முதலிய தாழ்ந்த உலோகங்களால் செய்யப்பட்ட பாத்திரத்திலுண்பான். 2-வது பாவத்தில் செவ்வாயிருந்து பாபரால் பார்க்கப்பட்டால் ஜாதகன் கெட்ட உணவை உண்பவன்.

(2) 2-வது பாவத்தில் சுபர் இருந்து, 2-வது பாவாதிபதி சுபருடன் கூடியிருந்து, 2-வது பாவம் அல்லது 2-வது பாவாதிபதி அல்லது இவைகள இரண்டும், சுபரால் பார்க்கப்பட்டால் ஜாதகன் நல்ல உணவை உண்பான்.

(3) 2-வது பாவாதிபதி நீச்சத்திலிருந்தாலும் அல்லது பாபருடனிருந்தாலும், அப்போது நீச்ச கிரகத்தால் 2-வது பாவாதிபதி பார்க்கப்பட்டால் ஜாதகன் பிறரால் இடப்பட்ட அன்னத்தைத் தூஷணஞ் செய்துகொண்டே உண்பான்.

(4) 2-வது பாவாதிபதி லக்கின பாவாதிபதியால் பார்க்கப்பட்டால் ஜாதகன் காலந்தவருமல் போஜனஞ் செய்வான், ஆனல் 2-வது பாவாதிபதி நீச்ச அம்சையிலிருந்து பாபியால் பார்க்கப்பட்டால் அகால போஜனஞ் செய்வான்.

(5) குரு சிம்மாசனாம்சத்திலும், சுக்கிரன் கோபுராம்சத்திலும், 2-வது பாவாதிபதி பலவானகி ஸ்ராவதாம்சத்திலும் இருந்தால் ஜாதகன் கணக்கிடக்கூடாத அதிக பேரை ரக்ஷிப்பவனுவான்.

(99) மூன்றுவது பாவம்.

(1) லக்கின பாவத்திலிருந்து 3-வது, 7-வது, 9-வது 11-வது பாவங்களைக் கொண்டு சகோதரர்களின் விஷயம் அறியவேண்டியது. இந்த நான்கு பாவாதிபதிகளின் தசா காலங்களில் ஜாதகனுக்குச் சகோதரம் பிறப்பான்.

(2) 3-வது பாவாதிபதி, 3-வது பாவாதிபதி இருக்கும் ராசியாதிபதி 3-வது பாவத்திலிருக்கின்ற கிரகம் ஆகிய இந்த மூன்று கிரகங்களில் எந்த கிரகம் வலிவுயிருக்கின்றதோ அந்த கிரக தசாகாலத்தில் ஜாதகனுக்குச் சகோதர விருத்தியுண்டு.

(3) 3-வது பாவத்தில் செவ்வாய் பல்வீனமுயிருந்தால் ஜாதகனுக்குத் தீர்க்காயுளுண்டு. 3-வது பாவ காரகன் அதாவது செவ்வாய் லக்கின பாவத்திலிருந்தால் ஜாதகன் வலிவுள்ளவனு யிருப்பான்.

(4) 3-வது பாவாதிபதியும் செவ்வாயும் 8-வது பாவத்திலிருந்தால் சகோதர நாசமுண்டாகும்; இவ்விரண்டு கிரகங்களும் பாபர் வீட்டிலிருந்தாலும் அல்லது பாபருடன் சம்மந்தப்பட்டிருந்தாலும் சகோதரர் பிறந்து இறந்துவிடுவார்கள்.

(5) 3-வது பாவாதிபதியும், 3-வது பாவகாரகனுகிய செவ்வாயும் நீச்சராசியிலும் அல்லது நீச்ச நவாம்சையிலும் அல்லது பாபருடனும், அல்லது குரூர சஷ்டியாம்சம் முதலிய பாப சஷ்டி அம்சத்திலும் இருந்தால் சகோதரர்கள் பிறந்து சீக்கிரத்தில் இறந்து விடுவார்கள்.

(6) 3-வது பாவாத்தில் பாபர் இருந்தாலும் அல்லது 3-வது காரகனுகிய செவ்வாய், 3-வது பாவாதிபதி இவர்களுடன் பாபி சேர்ந்திருந்தாலும் ஜாதகனுக்குப் பால்யத்திலேயே தன் சகோதர நாசமுண்டாகும்.

(7) 3-வது பாவத்தில் சுபரிருந்தால் ஜாதகனுடைய சகோதரர்கள் தீர்க்காயுளுடையவர்கள். 3-வது பாவத்தில் பாபர் இருந்தாலும் அல்லது 3-வது பாவத்தைப் பாபர் பார்த்தாலும் சகோதரர்கள் சீக்கிரம் இறந்துவிடுவார்கள். 3-வது பாவத்தில் சூரியனிருந்து பாபரால் பார்க்கப்பட்டால் மூத்த சகோதரன் இறந்துவிடுவான். 3-வது பாவத்தில் சனியிருந்து பாபரால் பார்க்கப்பட்டால் அடுத்த இளைய சகோதரன் இறந்துவிடுவான். 3-வது பாவத்தில் செவ்வாயிருந்து

பாபரால் பார்க்கப்பட்டால் எல்லா இளைய சகோதரர்களும் நாசமடைவார்கள்.

(8) 3-வது பாவத்திற்குக் கேந்திர திரிகோண பாவங்களில் பாபக்கிரக மிருந்தால் அடுத்த இளைய சகோதரன் நாசமடைவான். 3-வது பாவத்திற்குக் கேந்திர திரிகோண பாவங்களில் சுபக்கிரக மிருந்தால் இளைய சகோதரன் விருத்தியடைவான். 3-வது பாவத்திற்குக் கேந்திர திரிகோண பாவங்களில் சுபரும் பாபரும் கலந்திருந்தால் இங்கு சொல்லப்பட்ட சுப பலனும் அசுப பலனும் கலந்து நடக்கும்.

(9) 3-வது பாவாதிபதியும் சந்திரனுங் கூடி துஸ்தானமாகிய 6, 8 அல்லது 12-வது பாவத்திலிருந்தால் ஜாதகன் தன் தாயல்லாத அந்நிய ஸ்திரீயின் பாலை உண்பான், 3-வது பாவாதிபதியும் 4-வது பாவாதிபதியுங் கூடி 4-வது பாவத்திலிருந்தால் பிராதுரு பாவம் (அதாவது சகோதர பாவம்) விருத்தியடையாமல் நாசமடையும்.

(10) 3–வது 4-வது பாவாதிபதிகள் ஒன்றாய்க்கூடி செவ்வாயுடன் சம்மந்தப்பட்டிருந்தால் இளைய சகோதரன் பிறப்பான், 3-வது 4-வது பாவாதிபதிகள் கூடி செவ்வாய்த் தவிற இதர கிரகங்களுடன் சம்மந்தப்பட்டால் இளைய சகோதரன் இராது. 3-வது பாவத்தில் சனி இருந்தால் அடுத்த இளைய சகோதரம் நாசமடையும், ஆனால் 3-வது பாவத்தில் இராகு இருந்தால் இளைய சகோதரர்கள் பிறந்து விருத்தியடைவார்கள்,

(11) 3-வது பாவாதிபதி அதிருஷ்ய ராசிகளாகிய பூமிக்குக் கீழே யிருக்கின்ற இராசிகளிலாகிலும் அல்லது 7-வது பாவத்திலாகிலும் பாபருடனிருந்தால் ஜாதகனுக்கு ஒரே இளைய சகோதரனிருப்பான். 3-வது பாவாதிபதி திருஷ்ய ராசிகளாகிய பூமிக்கு மேலே இருக்கின்ற ராசிகளில் ஆண் வர்க்கத்திலிருந்து பாபருடன் சம்மந்தப்பட்டால் ஜாதகனுக்கு ஒரே இளைய சகோதர னிருப்பான். இங்கு அதிருஷ்ய ராசிகள் என்பது லக்கின ராசியில் உதபமாகவேண்டிய பாகமும், 2, 3, 4, 5, 6-வது இராசியும், 7-வது இராசியில் உதயமாக வேண்டிய பாகமும் ஆகும், மீதி திருஷ்ய ராசிகளாகும்.

(12) 3-வது பாவாதிபதி ஆண் ராசியிலிருந்தால் ஜாதகனுக்கு இளைய சகோதரனுண்டு. 3-வது பாவாதிபதி இரட்டை ராசியி

லிருந்து அவரைச் சந்திரனும் சுக்கிரனுங் கூடினாலும் பார்த்தாலும் அல்லது 3-வது பாவாதிபதி கேந்திரபாவத்திலாகிலும் அல்லது திரி கோண பாவத்திலாகிலும் இருந்து அவர் இருக்கும் ராசி சுபராசியாகி அவரைச் சுபர் கூடினாலும் பார்த்தாலும், இளைய சகோதரர்கள் தீர்க் காயுளும் சுகமும் ஆரோக்கியமு முடையவர்களா யிருப்பார்கள்.

(13) 3-வது பாவாதி லக்கின பாவத்திலாகிலும் அல்லது லக்கி னாதிபதியுடனாகிலு மிருந்தால் இளைய சகோதரனுக்குக் கெடுதி கிடை யாது, 3-வது பாவாதிபதி 3-வது பாவத்திலேயே இருந்தாலுங் கூட இளைய சகோதரனுக்குக் கெடுதி கிடையாது.

(14) மூத்த சகோதர எண்:—லக்கின பாவத்திற்குப் 11-வது 12-வது பாவங்களில் எத்தனை கிரகங்கள் இருக்கின்றார்களோ அத் தனை கிரகங்களுடைய மொத்த கூட்டுத் தொகைப்படி ஜாதகனுக்கு முன்னே பிறந்தவர்கள் ஆணும் பெண்ணும் சேர்த்து இருப்பார்கள்.

இளைய சகோதர எண்:—லக்கின பாவத்திற்கு 2-வது, 3-வது பாவங்களில் எத்தனை கிரகங்கள் இருக்கின்றார்களோ அத்தனை கிரகங் களுடைய மொத்தக் கூட்டுத்தொகைப்படி ஜாதகனுக்கு பின்னே பிறந்தவர்கள் ஆணும் பெண்ணும் சேர்த்து இருப்பார்கள்.

குறிப்பு:—இந்த மூத்த, இளைய சகோதர கணக்குகள் அனுஷ்டானத் திற்குச்சரியாய் வருவதாகத் தோற்றவில்லை.

(15) 3-வது பாவாதிபதியுடன் எத்தனை கிரகங்கள் இருக்கின் றார்களோ அத்தனை எண்ணையும் 3-வது பாவகாரகனாகிய செவ்வாயுடன் எத்தனை கிரகங்கள் இருக்கின்றார்களோ அத்தனை எண்ணையும், 3-வது பாவத்தில் எத்தனை கிரகங்கள் இருக்கின்றார்களோ அத்தனை எண்ணை யும் 3-வது பாவத்தை எத்தனை கிரகங்களா பார்க்கின்றார்களோ அத் தனை எண்ணையும் ஆக இந்த நான்கு எண்களையும் மொத்தமாய்க் கூட்ட வருகின்ற எண் எவ்வளவோ அவ்வளவு பேர் ஆணும் பெண ணுமாக ஜாதகனுக்குப் பின் சகோதரம் இருக்கும். இங்கு சொல்லப் பட்ட கிரகங்களில் பூர்ண பலமாயிருக்கின்ற கிரகங்களை மாத்திரம் கணக்கில் எடுத்துக்கொள்ளவேண்டும். (1) 3-வது பாவாதிபதி (2) செவ்வாய் (3) 3-வது பாவத்திலிருக்கும் கிரகங்கள் (4) 3-வது பாவத் தைப் பார்க்குங் கிரகங்கள் ஆகிய இந்த நான்குவித கிரகங்கள் நீச்சமாக வும் அல்லது அஸ்தங்கதமாகவும், அல்லது சத்துரு சேஷத்திரத்திலும் இருந்தால் இளைய சகோதர சகோதரிகள் பிறகு இறப்பார்கள்.

இந்த நான்குவித கிரகங்கள் பலவந்தர்களாகவும் ஒருவருக்கொருவர் மித்துருக்களாகவும் இருந்தால் இளைய சகோதர சகோதரிகள் தீர்க்காயுளுடையவர்களா யிருப்பார்கள்.

(16) செவ்வாயினுடைய அஷ்டக வர்க்கத்தில் செவ்வாயிருக்கும் பாவத்திற்கு 3-வது பாவத்தில் எத்தனை பரல் இருக்கின்றதோ அதிலிருந்து சத்துரு நீச்ச கிரகங்களால் கொடுக்கப்பட்ட பரல்கள் எத்தனையோ அத்தனையுங் கழிக்க வருகின்ற நிகர எண் பிரகாரம் இளைய சகோதரர்களும் சகோதரிகளும் மொத்தமாகவுண்டு.

(17) 3-வது பாவம் பெண் ஓரையாகிய சந்திர ஓரையிலிருந்தாலும் அல்லது 3-வது பாவத்தில் பெண் கிரகமிருந்தாலும், ஜாதகனுக்கு அடுத்த இளைய சகோதரம் பெண் சகோதரமாகும். 3-வது பாவம் ஆண் ஓரையாகிய சூரிய ஓரையிலிருந்தாலும், 3-வது பாவத்தில் ஆண் கிரகமிருந்தாலும் ஜாதகனுக்கு அடுத்த இளைய சகோதரம் ஆண் சகோதரமாகும். 3-வது பாவஸ்புடம எந்த ஓரையில் வருகின்றதோ அதுதான் 3-வது பாவத்தின் ஓரையாகும்.

(18) 3-வது பாவாதிபதி, 3-வது பாவகாரகனாகிய செவ்வாய், 3-வது பாவத்தைப் பார்க்குங் கிரகம், 3-வது பாவத்திலிருக்கின்ற கிரகம் ஆகிய இவைகள் நான்கும் எத்தனை நவாம்சை சென்றிருக்கின்றனவோ அதில் நீச்சம், மூடம், சத்துரு நவாம்சைகளைத் தள்ளிவிட்டு சுவகேஷத்திர உச்ச நவாம்சைகளை இரட்டிக்க வருகின்ற நிகரம் தொகை ஜாதகனுக்குப் பின்னால் பிறக்கும் ஆண் பெண் சகோதரங்களின் மொத்த தொகையாகும்.

உதாரணமாக 3-வது பாவஸ்புடம், 245 பாகை. 8 கலை என்று வைத்துக்கொள்ளுவோம். அப்போது 3-வது பாவம் 245 பாகை 8 கலைக்குரிய தனுசு ராசி யாகின்றது. ஆகையால் தனுசு ராசிக்குரிய குரு 3-வது பாவாதிபதியாகின்றார். இந்த குருவின் ஸ்புடம் 28" பாகை 17 கலை ஆகும். (என்னுடைய ஜாதக கணிதம் 2-ம் பதிப்பு 27, 19-வது பக்கங்களைப் பார்க்கவும்). குரு தான் இருக்கின்ற மேஷ ராசியில் 23 பாகை, 17 கலை சென்றிருக்கின்றார். குருவினுடைய ஸ்புடமாகிய 28 பாகை, 17 கலைக்கு உரிய அம்சம் தனுசு ஆகும். குரு இருக்கின்ற ராசியாகிய மேஷ ராசிக்கு முதல் அம்சம் மேஷமேயாகும். ஆகையால் மேஷம முதல் தனுசு வரை

யிலும் எண்ண மொத்தம் ஒன்பது அம்சம் ஆகும். ஆகையால் குரு 9-வது அம்சத்தில் இருக்கின்றார். அவர் சென்ற 9 அம்சங்கள் மேஷம், ரிஷபம், மிதுனம், கடகம், சிம்மம், கன்னி, துலாம், விருச்சிகம், தனுசு ஆகும். இந்த 9 அம்சங்களில் குருவுக்கு நீச்சராசியாகிய மகரம் வராததால் நீசசாம்சம் வரவில்லை. ரிஷபம், மிதுனம், கன்னி, துலாம் இவைகள் குருவுக்கு பகைராசியானதால் இந்த அம்சங்கள் சத்துரு அம்சங்கள். இவைகளைத் தள்ளிவிடவும், இப்படித் தள்ளிவிட நின்றது மேஷம், கடகம், சிம்மம், விருச்சிகம், தனுசு, ஆக 5 நிற்கின்றது. இவைகளில் கடகம் குருவுக்கு உச்சமானதால் இதை இரட்டிக்கவும். தனுசு சுவக்ஷேத்திரமாகையால் இதை இரட்டிக்கவும். இப்படிச் செய்ய மேஷம் 1, சிம்மம் 1, விருச்சிகம் 1, கடகம் 2, தனுசு 2 ஆகும். இவைகளைக் கூட்ட மொத்தம் 7 ஆகும். ஆகையால் குரு கொடுக்கின்ற தொகை 7 ஆகும். இவ்விதமாக மேற் சொல்லிய இதர மூன்றுவித கிரகங்களின் ஸ்புடத்தைக்கொண்டு அவர்களால் உண்டாகும் எண்களைக் கணித்து மொத்த எண்களைக் கூட்ட வருகின்ற தொகை இன்ன சகோதர சகோதரி தொகையாகும். மூடம் நவாம்சை என்பது ஒரு கிரகம் அஸ்தமனத்திலிருந்தால் எத்தனை நவாம்சை அஸ்தமனத்தைச் சேர்ந்ததோ அத்தனை நவாம்சையைத் தள்ளிவிடவும். இங்கு கொடுக்கப்பட்ட விதி அனுபோகத்தில் சரியாய் வராது என்பது தோற்றுகிறது. 3-வது பாவாதிபதியும் செவ்வாயும் கொடுக்கும் எண்களைக் கூட்டவேண்டும் என்றும், மற்ற இரண்டுவித கிரகங்கள் (அதாவது 3-வது பாவத்திலிருக்குங் கிரகமும், 3-வது பாவத்தைப் பார்க்குங் கிரகமும் சுபக்கிரகங்களாயிருந்தால் இவர்கள் கொடுக்கும் எண்களை மேற்கண்ட தொகையுடன் (அதாவது 3-வது பாவாதிபதி செவ்வாய் இவர்கள் கொடுத்த கூட்டுத் தொகையுடன்) கூட்டவேண்டும் என்றும், பாபக் கிரகங்களாயிருந்தால் மேற்கண்ட தொகையிலிருந்து கழிக்கவேண்டும் என்றும் தோற்றுகிறது. கழிக்க முடியாமலிருந்தால் பின் சகோதரமில்லை என்று பாவிக்கவும்.

(18) 3-வது பாவாதிபதியும் லக்கின பாவாதிபதியும் கூடியிருந்தால் ஜாதகனும் அவன் சகோதரர்களும் அந்நியோன்ய சினேகிதர்களாக விருப்பார்கள். இந்த இரண்டு கிரகங்களும் ஒருவருக்கொருவர் மித்துருக்களாயிருந்து பலவான்களாகி லக்கின பாவத்திலாகிலும் அல்லது 3-வது பாவத்திலாகிலும் இருந்தார்களானால் ஜாதகனுக்கும்

அவன் சகோதரர்களுக்கும் அவர்களுடைய வாழ்நாள்களுக்குள் பாகப்பிரிவினை யில்லாமல் ஏக குடும்பமாய் வசிப்பார்கள்.

(19) 3-வது பாவாதிபதியும் லக்கின பாவாதிபதியும் பலவீனர்களாகி சத்துருக்களாலும், அல்லது 3-வது பாவத்திலிருக்கின்ற கிரகம் பலவீனமாகி 3-வது பாவ காரகனுகிய செவ்வாய் பலவீனமாகி கெட்ட ஸ்தானங்களாகிய 6, 8 அல்லது 12-வது பாவத்திலிருந்தாலும், பலவீனமான அல்லது கெட்ட ஸ்தானத்திலிருக்கின்ற அல்லது சத்துருவா யிருக்கின்ற கிரகத்தின் தசை நடக்கின்ற காலத்தில் குடும்பத்தில் ஜாதகனுக்கும் அவனுடைய சகோதரர்களுக்கும் பிரமாதமான கலகம், சண்டை யுண்டாகும்.

(20) 3-வது பாவத்தில் சுக்கிரன் இருந்து குருவால் பார்க்கப் பட்டால் ஜாதகன் தன் சகோதர சகோதரிகளை ஆசையுடன் ரட்சிப்பான். புதன் 3-வது பாவத்திலிருந்து சூரியனால் பார்க்கப்பட்டால் ஜாதகனுக்கும் அவன் சகோதரர்களுக்கும் விசுவாசமிராது.

(21) 3-வது பாவத்திலிருக்கின்ற கிரகம் அல்லது 3-வது பாவாதிபதி அல்லது 3-வது பாவ காரகாதிபதியாகிய செவ்வாய் நீச சத்திலும் அல்லது சத்துரு சேஷத்திரத்திலும் அல்லது தூஸ்தானமாகிய 6, 8, 12-வது பாவத்திலும் இருந்தால் இந்த கிரகங்களின் தசாபுக்தி காலங்களில் தனநாசம், சக்திநாசம், அபஜெயம், சகோதர சகோதரி மரணம் இவைகள் உண்டாகும்.

(22) லக்கின பாவாதிபதியினுடைய ஸ்புடத்திலிருந்து 3-வது பாவாதிபதியினுடைய ஸ்புடத்தைக் கழிக்க வருகின்ற ஸ்புடத்திற் குரிய நட்சத்திரத்தில் கோட்சாரத்தில் சனி வரும்போது ஜாதகனுடைய ஆண் சகோதரம் அல்லது பெண் சகோதரம் மரணமடையும். லக்கின பாவாதிபதி, 3-வது பாவாதிபதி, 10-வது பாவாதிபதி, செவ்வாய் ஆகிய இந்நான்கு கிரகங்களினுடைய ஸ்புடங்களை ஒன்றுப்க் கூட்ட வருகின்ற ஸ்புடத்திற்குரிய அம்சம் எதுவோ அந்த அம்சராசியில் சனி கோட்சாரத்தில் வரும்போது ஜாதகனுடைய ஆண் சகோதரம் அல்லது பெண் சகோதரம் மரணமடையும்.

உதாரணம்:—நாம் முந்தி எடுத்துக்கொண்ட ஜாதகத்தில் (1) லக்கின பாவாதிபதியின் ஸ்புடம் 204 பாகை. 32 கலை. (2) 3-வது பாவாதிபதி ஸ்புடம் 28 பாகை. 17 கலை. (3) 10-வது பாவாதிபதி

ஸ்புடம் 118 பாகை-10 கலை. (4) செவ்வாயின் ஸ்புடம் 206 பாகை-30 கலை, ஆனல் சகோதர சகோதரி மரணகாலம் நிர்ணயிப்போம்.

	பாகை.	கலை.	
லக்கின பாவாதிபதி ஸ்புடம்	204	32 (5)	ஆகையால் சனி
3-வது பாவாதிபதி ஸ்புடம்	28	17 (6)	கோட்சாரத்தில்
			176பாகை–15 கலை
(5)ல் இருந்து (6)யைக் கழிக்க	176	15 (7)	யில் வரும்போது
			சகோதர சகோதரி

மரணம் நேரிடும். 176 பாகை-15 கலை என்பது சித்திரை 1-ம் பாதமாகையால், சனி சித்திரை 1-ம் பாதத்தில் வரும்போது மரணம் நேரிடும். சனி சாதாரண கதியாகிய நேர்கதியில் ஒருகாலும், வக்கிரகதி நேரிட்டு வக்கிரகதியில் இரண்டாவதுதரமும், வக்கிரம் நிவர்த்தியாகி ருச்சுகதியில் மூன்றாவதுதரமும் சித்திரை 1-ல் (அதாவது 176 பாகை-15 கலையில்) வந்தால் கடைசிதரமாகச் சித்திரை 1-ல் (அதாவது 176 பாகை–15 கலையில்) வரும்போது மரணம் நேரிடும். இரண்டுதரம் மாத்திரம் சனி சித்திரை 1-ல் வருமானல் கடைசிதரமாகிய இரண்டாந்தரம் சனி வரும்போது மாரகம் நேரிடும். லக்கின பாவாதிபதி ஸ்புடம், 3-வது பாவாதிபதியின் ஸ்புடத்தைவிட சிறியதானல் லக்கின பாவாதி ஸ்புடத்துடன் ஒரு மண்டலமாகிய 360 பாகை–0 கலையைக் கூட்டி வருகின்ற தொகையிலிருந்து 3-வது பாவாதிபதி ஸ்புடத்தைக் கழிக்கவும்.

	பாகை.	கலை.		இங்கு வந்த நிகர
லக்கினபாவாதிபதி ஸ்புடம்	204	32	(8)	ஸ்புடமாகிய 197
3-வது பாவாதிபதி ஸ்புடம்	28	17	(9)	பாகை. 29 கலைக்கு
10-வது பாவாதிபதி ஸ்புடம்	118	10	(10)	அம்சம் (என் ஜாதக
செவ்வாயின் ஸ்புடம்	206	30	(11)	கணிதம் 13-வது
				வாக்கியம் பிரகாரம்)
கூட்ட	557	29	(12)	மீனம் ஆகும்.
ஒரு மண்டலம்	360	00	(13)	ஆகையால் சனி
				கோட்சாரத்தில்
(12)ல் இருந்து 13யைக்கழிக்க	197	29	(14)	இந்த மீனராசியில்
				சஞ்சாரஞ் செய்யும்

போது ஜாதகனுடைய சகோதர சகோதரி மரணம் நேரிடும். மீன

ராசியில் சனி எங்கே வரும்போது மரணம் நேரிடும் என்பதை அடியிற்கண்டபடி தூல்லிபமாகக் கணிக்கலாம். 13-வது வாக்கியம் பிரகாரம் மீனம் அம்சம் ஆரம்பம் 196 பாகை-40 கலை. இதை 197 பாகை-29 கலையிலிருந்து கழிக்க 0 பாகை-49 கலை மீன அம்சத்தில் செல்லு. இந்த அம்சத்தில் செல்லான மொத்த பாகை கலையைக் கலையாக்க 49 கலையாகும். இந்த 49யை ஒரு ராசிக்குரிய 30 பாகையால் பெருக்கி ஒரு அம்சத்திற்குரிய கலையாகிய 200 ஆல் வகுக்க வருகின்ற பாகை கலையே மீனராசியில் செல்லான பாகை கலையாகும். 49யை 30 ஆல் பெருக்கி 200 ஆல் வகுக்க 7 பாகை-21 கலை வரும். ஆகையால் மீனராசியில் 7 பாகை, 21 கலையில் சனி வரவேண்டும். அதாவது கோட்சாரத்தில் சனியின் ஸ்புடம் 337 பாகை. 21 கலையாய் வரும்போது மரணம் நேரிடும்.

(23) 3-வது பாவாதிபதி, லக்கின பாவாதிபதி, 10-வது பாவாதிபதி, செவ்வாய் இவர்களுடைய ஸ்புடங்களை ஒன்றுக்கு கூட்ட வருகின்ற மொத்த ஸ்புடத்திற்குரிய திரேக்காண ராசியில் கோட்சாரத்தில் குரு சஞ்சாரஞ் செய்யும்போது ஜாதகனுடைய ஆண் சகோதரம் அல்லது பெண் சகோதரம் மரணமாகும். இந்த நான்கு கிரகங்களினுடைய ஸ்புடங்களைக் கூட்ட வருகின்ற மொத்த ஸ்புடத்திற்குரிய நட்சத்திரத்திற்குரிய தசாகாலத்தில் ஜாதகனுடைய இளைய சகோதரர் சகோதரிகளுக்குச் சம்பத்தும் சுகமும் உண்டாகும்.

உதாரணம்:—நாம் முந்தி எடுத்துக்கொண்ட ஜாதகத்தை எடுத்துக் கொள்ளுவோம்.

	பாகை.	கலை.	
லக்கின பாவாதிபதி ஸ்புடம்	204	32 (1)	இங்கு வந்த 197
3-வது பாவாதிபதி ஸ்புடம்	28	17 (2)	பாகை-29 கலைக்
10-வது பாவாதிபதி ஸ்புடம்	118	10 (3)	குத் திரேக்காணம்
செவ்வாயின் ஸ்புடம்	206	30 (4)	(என் ஜாதக கணிதம் 14-வது வாக்
கூட்ட	557	29 (5)	கியம் பிரகாரம்) கும்
ஒரு மண்டலம்	360	00 (6)	பம் ஆகும். ஆகை
(5)ல் இருந்து (6)யைக் கழிக்க	197	29 (7)	யால் இந்த கும்ப ராசியில் குரு கோட்

சாரத்தில் சஞ்சாரஞ் செய்யும்போது ஜாதகனுடைய சகோதரன் அல்லது சகோதரி

மரண மடையும். கும்பத் திரேக்காணத்தில் எவ்வளவு சென்றிருக்கின் றதோ அவ்வளவு பாகம் கும்பராசியில் குரு சென்றபோது மரணம் நேரிடும். இதை மேலே 22-வது நெம்பருக்குச் சொல்லிய வழி போல 200 கலைக்குப்பதிலாக திரேக்காணத்தின் பூர்ண அளவு ஆகிய 600 கலையை உபயோகித்துக் கணிக்கவும். மேலும் 197 பாகை-29க் குரிய நட்சத்திரம் (என் ஜாதகணிதம் 11-வது வாக்கியம் பிரகாரம்) சுவாதி ஆகின்றது. இந்த சுவாதி நட்சத்திரத்திற்குரிய தெசை யாகிய ராகு தெசையில் ஜாதகனுடைய இளைய சகோதரர் சகோதரி களுக்குச் சம்பத்தும் சுகமுண்டாகும்.

(24) (1) செவ்வாயினுடைய ஸ்புடத்திலிருந்து இராகுவினு டைய ஸ்புடத்தைக் கழிக்க வருகின்ற ஸ்புடத்திற்குரிய ராசியிலும் இந்த ராசிக்குத்திரிகோண ராசியிலும் குரு கோட்சாரத்தில் சஞ்சாரஞ் செய்யும்போது ஜாதகனுடைய இளைய சகோதரன் அல்லது சகோதரி மரணம் நேரிடும். (2) இராகுவினுடைய ஸ்புடத்திலிருந்து செவ்வாயி னுடைய ஸ்புடத்தைக் கழிக்க வருகின்ற ஸ்புடத்திற்குரிய ராசி, அம்சத்தில் குரு கோட்சாரத்தில் சஞ்சாரஞ் செய்யும்போது ஜாதக னுடைய மூத்த சகோதரன் அல்லது மூத்த சகோதரி மரணம் நேரிடும். (3) ஜனன காலத்தில் அல்லது கெற்பாதான காலத்தில் லக்கின பாவாதிபதியின் ஸ்புடத்தையும் 10-வது பாவாதிபதியின் ஸ்புடத்தையுங் கூட்டவருகின்ற ராசியில் குரு கோட்சாரத்தில் சஞ் சரிக்கும்போது ஜாதகனுக்கு ஒரு ஆண் அல்லது பெண் இளைய சகோதரம் பிறக்கும்.

உதாரணம்:—நாம் முந்தி எடுத்துக்கொண்ட ஜாதகத்தை உதாரணமாக எடுத்துக்கொள்ளுவோம்.

	பாகை.	கலை.	
(1) செவ்வாய் ஸ்புடம்	206	30	(2) பாகை-13 க லை க்
இராகு ஸ்புடம்	102	17	(3) குரிய ராசி (என்
(2) ல் இருந்து (3)யைக் கழிக்க	104	13	(4) ஜாதக கணிதம் 12-வது வாக்கியம் பிரகாரம்) கடகராசி

யாகும். ஆகையால் குரு கோட்சாரத்தில் கடகராசி அல்லது கடகத் திற்குரிய திரிகோண ராசிகளாகிய விருச்சிகம் அல்லது மீனராசியில் சஞ்சாரஞ் செய்யும்போது ஜாதகனுடைய இளைய சகோதரன் அல்லது

இளைய சகோதரி மரணம் சம்பவிக்கும். மொத்தத்தில் கோட்சாரத்தில் குருவினுடைய ஸ்புடம் இங்கு வந்த 104 பாகை–13 கலை (அல்லது கடகம்) 224 பாகை–13 கலை (அல்லது விருச்சிகம்), 344 பாகை–13 கலை (அல்லது மீனத்தில்) ஆகும்போது மரணம் நேரிடும். ஒரு ஸ்புடத்தின் திரிகோண ஸ்புடத்தைக்கணிக்க வேண்டுமானால் 120 பாகை கூட்டவேண்டியதால் இங்கு 104 பாகை–13 கலையுடன் 120 பாகையும், 224 பாகை–13 கலையுடன் 120 பாகையும் கூட்டியிருக்கின்றது.

	பாகை.	கலை.		
(2) இராகு ஸ்புடம்	102	17	(5)	இங்கு வந்த 255 பாகை–47 கலைக் குரியராசி (என் ஜாதக கணிதம் 12-வது வாக்கியம் பிரகாரம்) தனுசு ராசியாகும். இதற்குரிய அம்சம் (என் ஜாதகணிதம் 13-வது வாக்கியம் பிரகாரம்) சிம்மம் ஆகும். ஆகையால் குரு கோட்சாரத்தில் 255 பாகை–47 கலையில் அதாவது தனுசு ராசியில் சிம்ம அம்சையில் சஞ்சரிக்கும்போது ஜாதகனுடைய மூத்த சகோதரன் அல்லது மூத்த சகோதரி மரணம் நேரிடும்.
செவ்வாய் ஸ்புடம்	206	30	(6)	
(5)ல் இருந்து (6)யைக் கழிக்க	255	47	(7)	

	பாகை.	கலை.		
(3) 1-வது பாவாதிபதி ஸ்புடம்	204	32	(8)	ஆகையால் குரு கோட்சாரத்தில் 322 பாகை–42 கலையில் அதாவது கும்ப ராசியில் சஞ்சாரஞ் செய்யும்போது ஜாதகனுக்கு இளைய சகோதரன் அல்லது இளைய சகோதரி ஜெனனம் நேரிடும்.
10-வது பாவாதிபதி ஸ்புடம்	118	10	(9)	
(8) யையும் (9) யையும் கூட்ட	322	42	(10)	

(26) (1) 3-வது பாவாதிபதியின் ஸ்புடத்திலிருந்து 10-வது பாவாதிபதியின் ஸ்புடத்தைக் கழிக்க வருகின்ற ஸ்புடத்திற்குரிய ராசியில் சனி கோட்சாரத்தில் சஞ்சாரஞ் செய்யும்போது ஜாதகனுடைய சகோதரன் அல்லது சகோதரி மரணம் நேரிடும்.

(2) லக்கின பாவாதிபதியின் ஸ்புடத்திலிருந்து செவ்வாயின் ஸ்புடத்தைக் கழிக்க வருகின்ற ஸ்புடத்திற்குரிய ராசியில் சனி

கோட்சாரத்தில் சஞ்சாரஞ் செய்யும்போது ஜாதகனுடைய சகோதரன் அல்லது சகோதரி மரணம் நேரிடும்.

உதாரணம்:—நாம் முந்தி எடுத்துக்கொண்ட ஜாதகத்தை உதாரணமாக எடுத்துக்கொள்ளுவோம்.

	பாகை.	கலை.	
(1) 3-வது பாவாதிபதி ஸ்புடம்	28	17 (2)	ஆகையால் சனி கோட்சாரத்
10-வது பாவாதிபதி ஸ்புடம்	118	10 (3)	தில் 270 பாகை-7
			கலை அதாவது மகர
(2)ல் இருந்து (3)யைக் கழிக்க	270	7 (4)	ராசியில் சஞ்சாரஞ்
			செய்யும்போது

ஜாதகனுடைய சகோதரன் அல்லது சகோதரி மரணம் நேரிடும்.

	பாகை.	கலை.	
(2) லக்கின பாவாதிபதி ஸ்புடம்	204	32 (5)	ஆகையால் சனி கோட்சா
செவ்வாய் ஸ்புடம்	206	30 (6)	ரத்தில் 358
			பாகை — 2கலை
(5)ல் இருந்து (6)யைக் கழிக்க	358	2 (7)	யில் அதாவது

மீனராசியில் சஞ்சாரஞ் செய்யும்போது, ஜாதகனுடைய சகோதரன் அல்லது சகோதரி மரணம் நேரிடும்.

குறிப்பு:—இது வரையிலும் ஸ்புடீதியாய் நிர்ணயிக்கப்பட்ட மரண காலத்தில் அல்லது ஜனன காலத்தில் ஜாதகனுக்கு நடக்குந் தசா புத்தி காலங்களில் சகோதர மரணம் அல்லது ஜனனம் நேரிட ஏதாகிலும் ஏது இருக்கின்றதா என்று கிரக யோகத்தை அனுசரித்து யோசித்துப் பார்க்குங் காலையில் அப்படி ஏது இருந்தால் மாத்திரந்தான் ஸ்புடீதியாய் வரப்பட்ட காலத்தில் சகோதர மரணம் அல்லது ஜனனம் நேரிடுமே ஒழிய எப்போதும் ஒவ்வொரு ஸ்புடீதியாய் வரப்பட்ட காலத்தில் மரணம், ஜனனம் நேரிடாது எனறு அறியவும்.

(27) 3-வது பாவாதிபுடன் சூரியன் கூடினால் ஜாதகன் வீரனாகவிருப்பான், சந்திரன் கூடினால் மனதைரியமுடையவன், செவ்வாய் கூடினால் துஷ்டன், மூடன், கோபி, புதன் கூடினால் சாத்வீக புத்திசாலி, குரு கூடினால் நல்ல குணங்களால் வசியஞ் செய்பவன், சகல சஸ்திரங்களையும் விசாரணை செய்பவன், சுக்கிரன் கூடினால் காமமுடையவன், காபத்தால் கலகமும் சண்டையும் விளைவிப்பவன்,

சனி கூடினால் புத்தியில்லாதவன், இராகு கூடினால் அதிக பயங்காளி, கேது அல்லது குளிகன் கூடினால் ஹிருதய வியாதியால் பீடிக்கப் படுவான்.

(28) 3-வது பாவாதிபதியும் குருவும் லக்கினபாவத்திலிருந்தால் நாற்கால் பிராணியாலும் பசுவாலும் அபாயம் நேரிடும். லக்கின ராசி ஜலராசியானால், ஜலகெண்டம் நேரிடும்.

(29) 3-வது பாவாதிபதியும், இராகுவும், லக்கினாதிபதியும், லக்கின பாவத்திலிருந்தால் சற்பத்தால் ஆபத்து நேரிடும், புதன் 3-வது பாவாதிபதியுடனிருந்தால் கழுத்துரோகம் வரும். 3-வது பாவத்தில் ஒரு பாபக்கிரகம் குளிகனுடனிருந்தால் கழுத்துரோகம் வரும். சனி வலிவுடையவனாகி செவ்வாயுடன் 3-வது பாவத்திலிருந்தால் கண்ட ரோகம் வரும்.

(30) ஒரு பாபக்கிரகம் 3-வது பாவத்திலிருந்து அந்த பாவராசி அக்கிரகத்திற்குச் சத்துரு ராசி அல்லது நீச்சராசிபானால் விஷம் முதலிய காரணங்களால் சகோதரர்கள் மரண மடைவார்கள்.

(31) 3-வது பாவம் வலிவாகவிருந்து, குருவும் புதனும் அதி விருந்தாலும் அல்லது அதைப் பார்த்தாலும் அல்லது 3-வது பாவத் திற்குக் கேந்திரபாவத்தில் குருவும் புதனும் இருந்தாலும் ஜாதக னுடைய தொனி அதாவது கண்டஸ்வரம் மிகவும் இனிமையாக விருக்கும்.

(32) 3-வது பாவத்தில் ஒரு சுபக்கிரகமிருந்தும் அல்லது அதைப் பார்த்தும், 3-வது பாவாதிபதி ஒரு சுபக்கிரகமுடன் சம்மந் தப்பட்டிருந்தால் ஜாதகனுக்குக் கர்ணபூஷணமுண்டு.

(33) 3-வது பாவாதிபதி 10-வது அல்லது 4-வது பாவத்தில் சுபருடனிருந்து அந்த பாவராசி சுபராசியாகினால் ஜாதகனுடைய உடைகள் அதாவது வஸ்திரங்கள் மிகவும் அழகாயிருக்கும். ஒரு சுபக் கிரகம் 3-வது பாவத்திலிருந்தால் ஜாதகனுடைய உடைகள் மிகவும் உயர்ந்தனவா யிருக்கும். 3-வது பாவாதிபதியும் சுக்கிரனும் வலிவுள்ளவர்களா யிருந்தால் ஜாதகனுக்கு அநேகவித அழகான உடைகளுண்டு.

(34) 3-வது பாவாதிபதி சுயகவாம்சையிலிருந்தாலும் அல்லது சுபரால் பார்க்கப்பட்டாலும் அல்லது சுபருடன் கூடினாலும் அல்லது வைசேஷிகாம்சத்திலிருந்தாலும் ஜாதகன் வைரியவானாவான்.

(35) 3-வது பாவாதிபதி 6, 8, 12-வது பாவங்களிலிருந்து பாப ரால் பார்க்கப்பட்டாலும் அல்லது பாபருடன் கூடினாலும் ஜாதகன் தைரியமில்லாதவன். 3-வது பாவாதிபதி கேந்திர திரிகோண பாவத்தி லிருந்து சுபரால் பார்க்கப்பட்டாலும் அல்லது சுபருடன் கூடினாலும் ஜாதகன் தைரியவானாவான்.

(36) 3-வது பாவாதிபதியும் செவ்வாயும்கூடி பாப ராசியிலிருந் தால் ஜாதகன் பயங்காளி. 3-வது பாவாதிபதி பலவானாகிச் சுக்கிர னுடன் கூடி கேந்திர திரிகோண பாவங்களிலிருந்தால் தைரியவான், போகவான்.

(37) 3-வது பாவத்தில் சுபநவாம்சையில் சுக்கிரன், சந்திரன் இவர்கள் தவிற மற்ற சுபக்கிரகங்களில் ஒன்று இருந்தால் ஜாதகனுக் குச் சுகபோஜனமுண்டு.

(38) 3-வது பாவத்தில் அல்லது 6-வது பாவத்தில் சுக்கிரன் இருந்தால் சோகம், ரோகம், பயம் இவைகளுண்டாகும். சுக்கிரன் சூரியனுக்கு முன்னே சென்றால் அதாவது சுக்கிரனுடைய ஸ்புடம் சூரியனுடைய ஸ்புடத்தைவிட அதிகமாகவிருந்தால் சுக்கிரன் நல்ல பலனைக்கொடுக்கும்.

(100) நான்காவது பாவம்.

(1) 4-வது பாவாதிபதி 4-வது பாவத்திலேயே இருந்தாலும் அல்லது 4-வது பாவத்தைச் சுபக்கிரகம் பார்த்தாலும் அல்லது அதில் சுபகிரகம் இருந்தாலும் ஜாதகன் வித்தையும் விநயமு முடையவன். புதன் எல்லாக் கிரகங்களைவிட வலிவுடையவனாயிருந்தால் ஜாதகன் வித்தையுடையவன், விநயமுடையவன். 4-வது பாவாதிபதி 6, 8 அல்லது 12 பாவத்திலிருந்தாலும் அல்லது பாபரால் பார்க்கப்பட் டாலும் அல்லது கூடப்பட்டாலும் ஜாதகனுக்கு வித்தை கிடையாது. 4-வது பாவாதிபதி பாபராசியிலிருந்தால் ஜாதகனுக்கு வித்தை கிடையாது.

(2) 4-வது பாவாதிபதி, குரு, புதன் இவர்கள் 3-வது, 6-வது, 8-வது அல்லது 12-வது பாவத்திலிருந்தால் அல்லது நீச்சத்திலாகி லும் சத்துரு ராசியிலாகிலும் இருந்தால் ஜாதகன் வித்தை, புத்தி, விவேகம் இல்லாதவன். இந்த மூன்று கிரகங்களும் உச்சம்

சுவகேஷத்திரம், கேந்திர திரிகோணபாவம் இவைகளிலிருந்தால் ஜாதகன் அதிர்ஷ்டம், வித்தை விநயம், யுக்தி இவைகள் அதிகமாயுடையவனுகி ராஜாதி ராஜாக்களுடைய பிரியமுள்ளவனுவான்.

(3) 4-வது பாவாதிபதி பலவந்தனுகி, சுக்கிரன் அதிக பல முடையவனுக விருந்தாலும், அல்லது சந்திரன் கேந்திரபாவத்தில் சுபராசியிலிருந்து சுபரால் பார்க்கப்பட்டாலும், ஜாதகனுடைய மாதா தீர்க்காயுளுடையவள்.

(4) 4-வது பாவாதிபதி 6-வது அல்லது 12-வது பாவத்தில் பல வீனனுகவிருந்து பாபர் லக்கினபாவத்தைப் பார்த்தாலும் அல்லது அடைந்தாலும் ஜாதகனுடைய தாயாருக்கு நாசம் நேரிடும்.

(5) 4-வது பாவத்தில் ஒரு பாபக்கிரகமிருந்து க்ஷீண சந்திரன் 6-வது, 8-வது அல்லது 12-வது பாவத்தில் பாபக்கிரகத்துடன் இருந்தால் ஜாதகனுடைய தாயாருக்குச் சந்தேகமில்லாமல் நாசம் நேரிடும்.

(6) 4-வது பாவத்தில் சனியிருந்து பாபரால் பார்க்கப்பட்டு, 8-வது பாவாதிபதி நீச்சஸ்தானத்தில் அல்லது சத்துரு ஸ்தானத்தில் இருந்தால் ஜாதகனுடைய மாதுருக்கு நாசமுண்டு.

(7) 4-வது பாவாதிபதி சத்துரு, நீச்ச கேஷத்திரத்திலிருந்து சந்திரன் பாபியுடன் சம்மந்தப்பட்டு, பாபி 3-வது அல்லது 5-வது பாவத்திலிருந்தால் ஜாதகனுக்கு மாதுருக்கு சோகமுண்டு.

(8) சந்திரன் 3-வது பாவாதிபதியுடன் சம்மந்தப்பட்டுக் கெட்ட ஸ்தானத்திலிருந்தால் ஜாதகன் அந்திய ஸ்திரீயின் மூலப்பாலுக் குடிப்பான்.

(9) 4-வது பாவாதிபதியும் 9-வது பாவாதிபதியும் 6, 8 அல்லது 12-வது பாவத்திலிருந்து லக்கின பாவாதிபதி வலிவாயிருந்தால் தாய் தகப்பனருக்கு மரணம் சம்பவிக்கும்.

(10) 4-வது பாவாதிபதி 4-வது பாவத்திற்குத் திரிகோண பாவத்திலும், லக்கின பாவாதிபதி லக்கின பாவத்திற்குத் திரிகோண பாவத்திலும் இருந்து லக்கின பாவத்தில் ஒரு திரிகோண பாவாதிபதியிருந்தால் ஜாதகனுடைய தாயும் தகப்பனரும் ஏககாலத்தில் மரணமடைவார்கள்.

(11) 4-வது, 1-வது, 9-வது பாவாதிபதிகள் கேந்திர கோண பாவங்களிலிருந்தால் அவர்களுடைய தசாபுக்தி காலங்களில் ஜாதகனுடைய தகப்பனிறந்து தகப்பனுடன் தாயும் இறப்பாள்.

(12) 4-வது பாவத்தில் சந்திரனும் 9-வது பாவத்தில் சூரியனும் இருந்தால் ஜாதகனுடைய தகப்பன் இறந்து தகப்பனுடன் தாயும் இறப்பாள்.

(13) 4-வது பாவாதிபதி, 4-வது பாவக்காரகன், இவர்களுடன் சம்மந்தப்பட்ட கிரகம், 4-வது பாவத்திலிருக்கின்ற கிரகம், 4-வது பாவத்தைப் பார்த்தக் கிரகம் ஆகிய இவ் வைந்திலித கிரகங்களில் எந்த கிரகம் பாபியா யிருக்கின்றதோ அந்த கிரகத்தின் தசாபுக்தி காலங்களில் ஜாதகனுடைய தாய் மரணமாவள். 4-வது பாவக்காரன் என்பது சந்திரன்.

(14) (1) சூரியனுடைய ஸ்புடத்திலிருந்து சந்திரனுடைய ஸ்புடத்தைக் கழிக்க வருகின்ற ஸ்புடத்திற்குரிய இராசி நவாம்சையில் அல்லது இந்த இராசியின் திரிகோண ராசியில் சனி, குரு கோட் சாரத்தில் சஞ்சாரஞ் செய்யும்போது ஜாதகனுடைய தாய் மரண மாவள்.

(2) சந்திரனுக்கு 8-வது பாவாதிபதியினுடைய ஸ்புடத்திலிருந்து யமகண்டனுடைய ஸ்புடத்தைக் கழிக்க வருகின்ற ஸ்புடத்திற்குரிய இராசி, அம்சை, ராசியாகிய இவ்விரண்டில், இராசியில் சனியும், அம்சை ராசியில் சூரியனும், கோட்சாரத்தில் சஞ்சாரஞ் செய்யும் போது ஜாதகனுடைய தாய் மரணமடைவாள்.

குறிப்பு.—இவ்விரண்டு வழிகளிலும் லக்கினத்தைப்பற்றிச் சொல்லாமலிருப்பதால் இவ்வழிகள் பொதுவான வழிகளாகும். எப்போதும் சரியாய் வரும் என்று கோற்றவில்லை.

(15) குரு கோபுராப்ச முதலிய வைஸேஷிகாம்சங்களிலிருந்து அல்லது 4-வது பாவத்திலிருந்து, மீதி கிரகங்கள் 2-வது, 4-வது, 11-வது பாவத்திலிருந்தால் ஜாதகன் சுகவானாவான்.

(16) 4-வது பாவம் புதனால் பார்க்கப்பட்டாலும் அல்லது சுபக் கிரகங்களுக்கு இடைய இருந்தாலும் அல்லது குருவினுடைய நவாம்சையிலிருந்தாலும் ஜாதகன் சதா புண்ணிய கர்மங்களையே செய்து கொண்டிருப்பான்.

(17) 4-வது பாவாதிபதி, 4-வது பாவத்தைப் பார்க்குங் கிரகம், 4–வது பாவக்காரகன், ஆகிய இவர்கள் வலிவாய் இருந்தால் ஜாதக னுக்கு அதிக சௌக்கியமுண்டு. இந்த கிரகங்கள் நீச்ச, சத்துரு ஸ்தானத்திலிருந்தாலும், அஸ்தங்கதமாய் இருந்தாலும் ஜாதக னுடைய சுகத்திற்கு நாசமுண்டு; நல்ல கிரகங்கள் சுகத்தையும் கெட்ட கிரகங்கள் அசுகத்தையுங் கொடுக்கின்றன. இங்கு 4–வது பாவ காரககிரகம் சந்திரனும் புதனும் ஆகும்.

(18) 4–வது பாவத்தில் 9–வது பாவாதிபதியும் சுக்கிரனும் கூடி யிருந்து வலிவாயிருந்தால் ஜாதகன் நெடுங்காலம்போகியா யிருப்பான். ஆனல் 9–வது பாவாதிபதி 6, 8, அல்லது 12-வது பாவங்களி லிருந்து சுபருடன் சம்மந்தப்பட்டால் ஜாதகனுக்கு அல்பகாலம் சௌக்கியமுண்டு.

(19) 4-வது பாவத்தையும் குருவையுங்கொண்டு ஜாதகனுடைய சுகத்தையும், 4-வது பாவத்தையும் சந்திரனையுங் கொண்டு ஜாதக னுடைய தாயைப்பற்றியும் 4-வது பாவத்தையும் சுக்கிரனையுங் கொண்டு ஜாதகனுடைய சுகந்தம், வஸ்திரம், வாகனம், பூஷணம் இவைகளையும் அறியவேண்டும்.

(20) 4–வது பாவாதிபதி சுக்கிரனுடைய அல்லது சந்திர னுடைய வர்க்கத்திலிருந்தாலும் அல்லது சந்திரன் சுக்கிரன் இவர் களால் பார்க்கப்பட்டாலும் சம்மந்தப்பட்டாலும், அப்போது 4–வது பாவாதிபதி நீச்ச சத்துரு கிரகத்தால் பார்க்கப்படாமலிருந்தால் ஜாதகன் கால் நடைகளை உடையவன்.

(21) 4–வது பாவாதிபதி சுபக்கிரகமாயிருந்து 4-வது பாவகா ராதிபதி பூர்ண பல முடையவனுயிருந்தால் ஜாதகன் பந்துக்களால் பூஜிக்கப்பட்டவன். 4–வது பாவகாரகன் சந்திரன், புதன்.

(22) 4-வது பாவாதிபதி கேந்திரகோண பாவத்திலிருந்து அல்லது 11–வது பாவத்திலிருந்து, வைகேகஷிகாம்சம் பெற்று பராக்கிரக சம்மந்தம் அல்லது பார்வை இல்லாமலிருந்தால் ஜாதகன் பந்துக்களிடத்தில் சினேகிதமாயிருபபான்.

(23) 4–வது பாவத்தில் பாபக்கிரகம், நீச்ச கிரகம், அஸ்தங்கத கிரகம் இருந்து சுபதிருஷ்டி இல்லாமலிருந்தால் ஜாதகன் பந்து துவேஷியாயிருப்பான்.

(24) 4–வது பாவத்தில் பாபக்கிரகமிருந்து 8-வது பாவாதிபதி பாபருடன் சம்மந்தப்பட்டிருந்தால் ஜாதகன் கபடனுவான். ஆனல் 8-வது பாவாதிபதி உச்ச கேஷத்திரம் அல்லது மித்துரு கேஷத்திரம் அல்லது தன்னுடைய வர்க்கம், மித்துருவர்க்கம் இவைகளிலிருந்தால் ஜாதகன் கபடமில்லாதவன்.

(25) 4–வது பாவாதிபதி பலமுடையவனுயிருந்தாலும் அல்லது கோபுராம்ச முதலிய வைஷேஷிகாபசங்களிருந்தாலும் அல்லது மிருது முதலிய சுப சஷ்டி-யாம்சங்களிருந்தாலும் ஜாதகன் சுத்தமான ஹிருதயம், மனுசு உடையவன், சாந்தமானவன்.

(26) 4-வது பாவமும் 4-வது பாவாதிபதியும் பலமுடைய னவாகி சுபரால் பார்க்கப்பட்டால் ஜாதகனுக்கு வாகனுதி பிராப்த்தி உண்டு.

(27) 4-வது பாவாதிபதி சுப நவாம்சையிலிருந்து புதனுடன் சேர்ந்து 4-வது பாவத்திலேயே இருந்து சுபரால் பார்க்கப்பட்டால் ஜாதகனுக்கு வாகனுதி பிராப்தி உண்டு.

(28) 4-வது பாவாதிபதியும் சந்திரனும் கூடி லக்கின பாவத்தி லிருந்தால் ஜாதகனுக்கு துரங்க வாகனம் அதாவது குதிரைவாகனப் பிராப்தி உண்டு.

(29) 4–வது பாவம் அல்லது 2-வது பாவம் சுபராசியாகி அதில் சந்திரன் சுபருடன் கூடி இருந்தால் ஜாதகனுக்குக் குதிரைவாகனப் பிராப்தி உண்டு.

(30) 4-வது பாவாதிபதியும் லக்கின பாவாதிபதியும் சந்திரனும் லக்கின பாவத்திலிருந்தால் ஜாதகனுக்குக் குதிரையுண்டு. 4-வது பாவாதிபதி சுக்கிரனுடன் கூடி லக்கின பாவத்திலிருந்தால் ஜாதக னுக்கு யானை வாகனமுண்டு.

(31) பூர்ணச்சந்திரனும் சுக்கிரனும் பல முடையவர்களாகி கேந்திர திரிகோண பாவங்களிருந்தால் ஜாதகனுக்கு ஆந்தோளிகா வாகனம் அதாவது பல்லக்கு வாகனமுண்டு. சந்திரன் குருவி னுடைய ராசியிலிருந்து குருவால் பார்க்கப்பட்டாலும் சம்மந்தப்படப் பட்டாலும் ரக்த வர்ணமுடைய வஸ்திரம் அல்லது ஆபரணம் ஜாதக னுக்கு உண்டு.

(32) 4–வது பாவாதிபதியும் லக்கினாதிபதியும் கூடி சுக்கிரனுடன் கூடினால் ஜாதகனுக்குப் பல்லக்கு வாகனமும், சந்திரனுடன் கூடினால் குதிரை வாகனமுமுண்டு. 4-வது பாவாதிபதி, சந்திரன், குரு, சுக்கிரன் இவர்கள் எல்லோரும் கூடி கேந்திர திரிகோண பாவத்திலிருந்தால் ஜாதகன் நாலா பக்கமும் அலங்கரிக்கிப்பட்ட வாகனமு முடையவன்.

(33) 4–வது பாவாதிபதி குருவுடன் சம்பந்தப்பட்டிருந்தால் ஜாதகன் நாலா பக்கமும் அலங்கரிக்கப்பட்ட வாகன முடையவன். 4–வது பாவாதிபதி சுபருடன் கூடி 10–வது பாவத்திலிருந்தால் ஜாதகனுக்குச் சாமரமும் குடையும் பிராப்தியுண்டு. .

(34) 4–வது பாவாதிபதி ஒரு கேந்திர பாவத்திலிருந்து, அந்த கேந்திர பாவாதிபதி லக்கின பாவத்திலிருந்தால் ஜாதகன் வாகன போகமுடையவன், 10-வது பாவாதிபதி 11-வது பாவத்திலும், 11–வது பாவாதிபதி 10–வது பாவத்திலும் இருந்தால் ஜாதகன் பூஷண முடையவன், வாகன முடையவன்.

(35) 4-வது பாவாதிபதி 11-வது பாவத்திலும் அல்லது 4-வது பாவத்திலும் இருந்து, செவ்வாய் சுவகேஷத்திரத்திலும் அல்லது 11–வது பாவத்திலும் இருந்தால் ஜாதகனும் இராஜ்ஜியப் பிராப்தி உண்டு. அதாவது இராஜ்ஜியங் கிடைக்கும்.

(36) 4–வது பாவாதிபதி, 4-வது பாவத்திலிருக்கின்ற கிரகம், 4-வது பாவத்தைப் பார்க்கின்ற கிரகம் கேந்திரகோண பாவத்திலாகிலும் அல்லது அவர்களுக்கு உச்ச கேஷத்திரம் அல்லது மித்துரு கேஷத்திரமாயிருக்கின்ற 11-வது பாவத்திலிருந்து அவர்கள் பலவந்தர்களானால் ஜாதகனுக்குத் தீர்க்காயுள், நல்ல சயனங், நல்ல ஆசனம், நல்ல ஆடை, அதிக பூமி, நல்ல மாடமாளிகைகள், சிநேகிதமான பந்துக்கள், மனதுக்கிஷ்டமான வாகனம், கீர்த்தி, சௌக்கியம் ஆகிய இவைகள் எல்லாம் உண்டு.

(37) புதன லக்கினபாவத்திற்குக் கேந்திர திரிகோண பாவத்தில் உச்சத்திலாகிலும் அல்லது தன் சுவகேஷத்திரத்திலாகிலு மிருந்தால் ஜாதகன் அதிக வித்தையும் அதிக தனமு முடையவனுவான்.

(38) லக்கின பாவாதிபதிக்கு 4–வது, 9-வது பாவாதிபதிகளும் இந்த இரண்டு பாவங்களிலும் இருக்கின்ற கிரகங்களும் ஆக மொத்

தம் நான்குவகை கிரகங்களும் பலவந்தர்களாகி சுபவர்க்கம் ஏறி லக்கினாதிபதி சம்மந்தம் அடைந்து, ஒருவரை ஒருவர் பார்த்தாலும் கூடினாலும் ஜாதகன் அரசனுவன், பூர்ணாயுசுடையவன், சுகமுடையவன், தேஜஸ்டையவன், நான்கு மூலைகளுடைய வாகன முடையவன், அதிக தனமுடையவன், இராஜ சின்னங்களுடையவன்.

(39) லக்கின பாவாதிபதிக்கு 4-வது, 9-வது பாவாதிபதிகளும், இந்த இரண்டு பாவங்களிலும் இருக்கின்ற கிரகங்களும் ஆகிய இந்த 4 கிரகங்களில் மூன்று கிரகங்கள் ஸ்தானபலத்தில் வலிவுள்ளவர்களானால் ஜாதகன் நானுவித ரத்தினங்களும் ஆபரணங்களும், சௌக்கியமுமுடையவனுவான். இந்த 4 கிரகங்களில் இரண்டு கிரகங்கள் லக்கின பாவத்தில் வலிவுள்ளவர்களாயிருந்தால் அவரவர் தசாகாலத்தில் ஜாதகன் சௌக்கியமுடையனுயிருப்பான்.

(40) 4-வது பாவாதிபதி பலவந்தனுகி 1-வது, 4-வது, 9-வது பாவங்களில் தனியாய் இருந்து லக்கின பாவம் அல்லது லக்கின பாவாதிபதி சம்மந்தமடைந்திருந்தால் 4-வது பாவாதிபதி தசாகாலத்தில் ஜாதகனுக்கு வாகன பிராப்தியுண்டு.

(41) 4-வது, 9-வது, 11-வது, 2-வது பாவாதிபதிகள் லக்கின சம்மந்தமடைந்து பலவந்தர்களானுல். அவர்கள் தங்களுடைய தசாகாலங்களில் ஜாதகனுக்கு இராஜ்யம், பாக்கியம், தனலாபம் இவைகளை உண்டுபண்ணுவார்கள். இந்த நான்கு கிரகங்களும் பலவீனர்களானுல் துன்பத்தை உண்டுபண்ணுவார்கள. இந்த நான்கு கிரகங்களில் சிலர் பலவந்தர்களாயும் சிலர் பலவீனர்களாயும் இருந்தால் மேற்சொல்லிய நல்ல பலனும், கெட்ட பலனும் கலந்த பலனை ஜாதகனுக்குக் கொடுப்பார்கள். இந்த நான்கு பாவங்களில் எந்த பாவத்தினுடைய காரக கிரகமும், பாவாதிபதியும் அந்த பாவத்திலுள்ள கிரகமும் பலவீனமாகி லக்கின பாவாதிபதிக்கு சத்துருவானுல் ஜாதகனுக்கு அதிக துன்பமுண்டாகும்.

(42) 4-வது, 10-வது பாவாதிபதிகள் பலவந்தர்களாகி 11-வது பாவத்திலிருந்தாலும் அல்லது 11-வது பாவத்தைப் பார்த்தாலும் ஜாதகனுக்கு சர்வ பாக்கியங்களுமுண்டு.

(43) 4-வது, 9-வது பாவாதிபதிகள் 11-வது பாவத்திலிருந்தாலும் அல்லது 4-வது பாவத்தைப் பார்த்தாலும் ஜாதகனுக்கு அநேக

வாகனங்கள் சர்வ பாக்கியங்கள் இராஜப் பிரீதி இவைகள் உண்டா குரும்.

(44) 4-வது, 9-வது பாவாதிபதிகள் லக்கின சம்பந்தமுண்டாகி குருவால் பார்க்கப்பட்டால் ஜாதகனுக்கு இராஜ்ஜிய வசிபமும் ஆப ரணங்களும் சித்திக்கும்.

(45) 4-வது, 9-வது பாவாதிபதிகள் பலவந்தர்களாகி சுபக்கிர கங்களுடன் கூடினால் ஜாதகன் பகு சேனைக்குச் சேனாதிபதியாவன், தனவானுவன்.

(46) 4-வது பாவாதிபதி 9-வது பாவத்தில் சுபருடைய ராசியி லிருந்து குருவுடனும், சுக்கிரனுடனும் கூடியிருந்து, 9-வது பாவாதி பதி கேந்திரகோண பாவத்திலிருந்தால் ஜாதகன் அநேக தேசங்களி லிருந்து தனமும், பூஷணமும், வாகனமும் பெருவான்.

(47) 4-வது பாவாதிபதி குரு அல்லது சுக்கிரனுகி அதிக பலத் துடன் லக்கின பாவத்திற்கு 9-வது பாவத்திலிருந்து, இந்த 9-வது பாவாதிபதி கேந்திர திரிகோண பாவத்திலிருந்தால் ஜாதகனுக்கு அநேக வாகனங்களுண்டு.

(48) 4-வது பாவாதிபதி குரு சுக்கிரனுடன் கூடி 9-வது பாவத்திலிருந்து, 9-வது பாவாதிபதி கேந்திர திரிகோண பாவங்களி லிருந்தால் ஜாதகனுக்கு அநேக வாகனங்களும், பூமிகளும் உண்டு.

(49) லக்கின பாவத்தில் ஒரு சுபக்கிரகமிருந்து 9-வது பாவத் தில் ஒரு கிரகம் உச்சமாகவிருந்து, 2-வது பாவாதிபதி கேந்திர பாவத்திலிருந்தால் ஜாதகனுக்குச் சிம்மாசனப் பிராப்திபுண்டு.

(50) 9-வது பாவத்தை ஒரு சுபக்கிரகம் பார்க்க, 2-வது பாவாதிபதி சுபருடன் சம்மந்தப்பட்டு கேந்திர பாவத்திலிருக்க, 2-வதுபாவத்தில் ஒரு கிரகம் உச்சபாயிருக்க ஜாதகனுக்குச் சிம்மா பிராப்திபுண்டு.

(31) 4-வது, 1-வது, 9-வது பாவாதிபதிகள் 10-வது பாவத்தி லிருந்து 10-வது பாவாதிபதி லக்கின பாவத்திலிருந்தாலும் அல்லது லக்கின பாவத்தைப் பார்த்தாலும் ஜாதகனுக்குச் சிம்மாசனப் பிராப்தியுண்டு.

(52) 4-வது, 1-வது, 10-வது பாவாதிபதிகள் 10-வது பாவத்திலிருந்து, 10-வது பாவாதிபதி லக்கின சம்மந்தமிருந்தால் ஜாதகனுக்குச் சிம்மாசன பிராப்தியுண்டு.

(53) குருவும், சுக்கிரனும், 9-வது பாவாதிபதியும், கேந்திர கோண பாவங்களில் அல்லது 11-வது பாவத்தில் இருந்தால் ஜாதகன் அநேக வாகனங்களுடையவனாகி மண்டலாதிபதி யாவன்.

(54) 4-வது பாவாதிபதியும் 10-வது பாவத்திலிருக்கின்ற கிரகமும் மிகவும் பலவந்தர்களாகி 9-வது பாவாதிபதியுடன் சம்மந்தப்பட்டாலும். அல்லது 9-வது பாவாதிபதியால் பார்க்கப்பட்டாலும் அல்லது இவர்கள் ஒருவர் வீட்டில் மற்றொருவர் இருந்தாலும் ஜாதகனுக்குச் சிம்மாசன பிராப்தியுண்டு. 4-வது பாவாதிபதியின் தசையில் 4-வது பாவாதிபதியின் புக்தியில் 10-வது பாவாதிபதி அந்தரத்தில் 10-வது பாவாதிபதியின் சூட்சுமத்தில் ஜாதகனுக்கு மேற்சொல்லிய சிம்மாசன பிராப்தி கேரிடும்.

(55) 4-வது பாவத்தில் 1-வது, 9-வது பாவாதிபதிகளிருந்து, 4-வது பாவாதிபதி லக்கின பாவத்தில் சுபராசியிலிருந்தால் ஜாதகன் எப்போதும் சௌக்கிய முடையவனாயிருப்பான்; ஆனால் 4-வது பாவாதிபதி 6-வது பாவத்திலிருந்தால் ஜாதகனுக்குக் கஷ்டங்கள் சம்பவிக்கும்.

(56) 4-வது பாவாதிபதி 9-வது பாவத்திலிருந்து சுபரால் பார்க்கப்படாமலிருந்தாலும் அல்லது மிகவும் பலவந்தனாயிருந்தாலும் 4-வது பாவாதிபதி தசாகாலத்தில் ஜாதகன் தன்னுடைய சத்துருக்குத் தன பாக்கியத்தை எல்லாம் சிலகாலம் இழந்துவிடுவான். இவ்விதமாக விருக்கும்போது 4-வது பாவாதிபதியுடன் ஒரு சுபக்கிரக மிருந்தால் 4-வது பாவாதிபதியின் தசாகாலம் ஆரம்பித்து பூர்த்தியாகும் வரையிலும் ஜாதகனுடைய பாக்கியமெல்லாம் தன் சத்துருவினிடத்திலிருக்கும், ஆனால் 4-வது பாவாதிபதியுடன் சேர்ந்த கிரகம் பாபக்கிரகமானால் 4-வது பாவாதிபதியின் தசை அந்தியத்தில் ஜாதகனுடைய பாக்கியமெல்லாம் மறுபடியும் தனக்குத் திரும்பி வரும்.

(57) 4-வது பாவம் சுபராசியாகி, 4-வது பாவாதிபதி சுபருடன் கூடி, 4-வது பாவ காரகன் சுபருடன் கூடினால் ஜாதகனுக்கு அதிக பூமியும் தனமும் உண்டு.

(58) 4–வது பாவாதிபதி நீச்சசத்திலாகிலும் அல்லது சத்துரு வர்க்கத்திலாகிலும் இருந்து காலாக்கினி, சூலம், அந்தகம் முதலிய கெட்ட சஷ்டியாம்சம் அடைந்து, பாபக்கிரகத்துடன் சம்மந்தப்பட்டாலும் அல்லது பாபக்கிரகத்தால் பார்க்கப்பட்டாலும், ஜாதகனும் பூமி எல்லாம் நாசமடைந்து ஜீவன மார்க்கமும் கெட்டுப்போய்விடும்.

(59) லக்கின பாவாதிபதி இருக்கும் ராசி அதிபதி லக்கினத்திற்குச் சத்துரு கிரகமானால் (அதாவது அசுபரானால்) அந்தக் கிரக தசாபுக்தி காலங்களில் ஜாதகனுடைய பூமியும், வீடும் நாசமடையும் இந்தக் கிரகத்தின் தசையில் 4-வது பாவாதிபதியின் புக்தியில் ஜாதகனுடைய பந்துவுக்கு ஹானி உண்டாகும். இந்தக் கிரகத்தின் தசையின் செவ்வாய், சனி, மாந்தி இவர்களுடன் சம்மந்தப்பட்ட கிரகத்தின் புக்தியில் ஜாதகனுக்கு விபத்துகள் சம்பவிக்கும்.

(60) 4–வது, 2–வது பாவாதிபதிகள் சுபராகியாகிய 9-வது பாவத்தில் சுபருடன் கூடியிருந்தால் ஜாதகனுக்கு நிக்ஷேபம் (அதாவது புதையல்) கிடைக்கும், 4-வது பாவத்தில் 2–வது, 11-வது பாவாதிபதிகளிருந்து, 4-வது பாவாதிபதி சுபராசியில் சுபருடனிருந்தால் ஜாதகனுக்கு நிக்ஷேபம் கிடைக்கும். 4–வது பாவத்தில் 11-வது பாவாதிபதி சுபருடன் சேர்ந்து இருந்தால் ஜாதகனுக்கு நிக்ஷேபங் கிடைக்கும்.

(61) 4-வது பாவத்தில் ராகு அல்லது வேறே ஒரு பாபி யிருந்து பாபியால் பார்க்கப்பட்டால் ஜாதகனுக்குக் குடும்ப சுகம் கிடையாது. 4-வது பாவத்தின் ராசி சூரியன் அல்லது செவ்வாய்க்கு நீச்ச சத்துரு ராசியாகி சூரியன் அல்லது செவ்வாய் 4-வது பாவத்திலிருந்தால் ஜாதகனுக்கு வீடு கிடையாது.

(62) 4-வது பாவத்திலிருக்கின்ற கிரகம் நீச்சம் அல்லது அஸ்தங்கத்திலிருந்தால் ஜாதகன் கிணறு முதலிய ஜல ஸ்தானங்களில் தவறி விழுந்துவிடுவான். 4-வது பாவத்தில் பாபக்கிரக மிருந்தால் ஜாதகனுக்குக் கெடுதிகள் சம்பவிக்கும். 4-வது பாவத்தில் சனி இருந்தால் ஜாதகனுக்குச் சுகம் கிடையாது.

(62) 4-வது பாவாதிபதி 12–வது பாவத்திலிருந்தால் ஜாதகன் அந்திய தேசத்தில் அந்தியருடைய வீட்டிலிருப்பான். 4-வது பாவாதிபதி 8-வது பாவத்திலிருந்தால் ஜாதகனுக்கு வீடு கிடையாது.

4-வது பாவாதிபதி 6-வது பாவத்திலிருந்தால் ஜாதகன் ஞாதிகள் முதலியவர்களுடைய வீட்டிலிருப்பான்.

(64) 4-வது பாவத்தில் 4-வது பாவாதிபதியாகிலும் அல்லது ஒரு வலிவுள்ள கிரகமாகிலு மிருந்தால் ஜாதகனுக்கு வீடு கிடைக்கும். 4-வது பாவாதிபதி 6, 8 அல்லது 12-வது பாவத்திலிருந்தாலும் அல்லது 4-வது பாவத்தில் ஒரு வலிவுள்ள பாபக்கிரக மிருந்தாலும் ஜாதகனுடைய வீடு பிடை பிடித்த வீடாயிருக்கும்.

(65) 4-வது, 2-வது, 12-வது பாவாதிபதிகள் 3-வது, 6-வது, 8-வது, 12-வது பாவத்தில் எத்தனைப் பாபக் கிரகங்களுடனிருக்கின்றார்களோ அத்தனை வீடு நாசமாகும்.

(66) லக்கினத்திற்குக் கேந்திர திரிகோண பாவங்களில் எத்தனை கிரகங்க ளிருக்கின்றனவோ அத்தனை நல்ல வீடுகள் ஜாதகனுக்கு உண்டு.

(67) 4-வது பாவாதிபதி 12-வது பாவத்திலிருந்தால் ஜாதகனுக்கு ஜீர்ணமாயுள்ள (அதாவது பாழடைந்த) வீடு உண்டு. 4-வது பாவாதிபதி கேந்திர கோண பாவத்திலிருந்தால் ஜாதகனுக்கு பல வர்ணமுள்ள விசித்திரமான அழகிய வீடு உண்டு.

(68) 4-வது பாவாதிபதி வலிவாயிருந்து, 3-வது பாவத்தில் ஒரு சுபக்கிரக மிருந்தாலும், 4-வது பாவாதிபதி கோபுராம்சம் முதலிய சுபவர்கத்திலிருந்தாலும் ஜாதகனுக்கு நல்ல வீடு உண்டு.

(69) 4-வது பாவத்தில் 10-வது பாவாதிபதி பாபக் கிரகத்துடன் கூடியிருந்தால் ஜாதகனுக்குப் பூமியும் வேலையாட்களும் கிடையாது, 10-வது பாவாதிபதி 4-வது பாவத்தில் பாப நவாம்சையிலிருந்து மிருத்தியுகர முதலிய பாப சஷ்டியாம்சத்திலிருந்து 8-வது பாவாதிபதியுடன் சம்மந்தப்பட்டிருந்தால் ஜாதகனுக்கு பூமியும் வேலையாட்களுங் கிடையாது.

(70) 4-வது பாவாதிபதியும் லக்கின பாவாதிபதியும் வலிவாயிருந்து 3-வது பாவத்தில் ஒரு சுபக்கிரக மிருந்தால் ஜாதகனுக்கு நான்கு பக்கமும் பிரகாரமுள்ள மாளிகையுண்டு.

(71) 4-வது பாவாதிபதி பாராவதாம்சத்திலிருந்தாலும், அல்லது கோபுராம்சத்திலிருந்து குரு சந்திரனால் பார்க்கப்பட்டாலும் ஜாதகனுக்கு தெய்வீகமான மாளிகையுண்டு.

(72) 5-வது பாவாதிபதி வலிவாய் இருந்து, லக்கின பாவாதிபதி, 4-வது பாவாதிபதி, சந்திரன் இவர்கள் பலவீனமாயிருந்தால் ஜாதகனுடைய மாதா அடுத்த கர்ப காலத்தில் மரணமாவாள்.

(73) சந்திரனிருக்கும் ராசி, நவாம்சராசி இவ்விரண்டு ராசிகளில் எந்த ராசி வலிவாயிருக்கின்றதோ அந்த ராசிக்குத் திரிகோண ராசியில் கோட்சாரத்தில் சூரியன் சஞ்சாரஞ் செய்யும்போது ஜாதகனுடைய மாதா மரணமடைவள்.

(74) சூரியன் இருக்கும் நவாம்சைராசியாதிபதி இருக்கும் நவாம்சைராசியில் சந்திரன் கோட்சாரத்தில் சஞ்சாரஞ் செய்யும் போது ஜாதனுடைய மாதா மரணமடைவள்.

(75) சந்திரன் சராசியில் கேந்திர பாவத்திலிருந்தால் ஜாதகன் தன் மாதாவின் தேகத்தைத் தானே தகனஞ் செய்யமாட்டான்.

(76) 4-வது பாவாதிபதி பூமிக்குக் கீழே இருந்தால் ஜாதகன் தன் தாயினுடைய முகத்தைத் தன் தாயினுடைய மரணகாலத்தில் தரிசனஞ் செய்யமாட்டான்.

(101) ஐந்தாவது பாவம்.

லக்கினத்திற்கு:—

(1) 5-வது பாவாதிபன் 6, 8, 12-வது பாவத்திலிருந்தால் ஜாதகனுக்குப் புத்திரனில்லை, 1, 4, 5, 7, 9, 10-வது பாவத்திலிருந்தால் சந்தியுண்டு.

(2) 5-வது பாவாதிபன் குருவாயிருந்து, சுபர் வீட்டில் சூரியன் இருந்தால் ஜாதகனுக்குச் சத் புத்திரன் உதிப்பான். 1, 4, 5, 7, 9, 10-வது பாவத்தில் ஒரு சுபர் இருந்தால் ஒரே புத்திரனுதிப்பான்.

(3) 5-வது பாவாதிபன் பாபருடன் கூடி பலவீனனுய் 7-வது பாவத்தில் இருந்தால் ஜாதகன் மலடன்.

(4) 5-வது பாவாதிபன் 6-வது பாவத்தில் நீச்சமாயிருந்தால் ஜாதகன் மலடன்.

(5) 5-வது பாவாதிபன் 6-வது பாவத்திலும் லக்கின பாவாதிபன் செவ்வாய் வீட்டிலுமிருந்தால் ஜாதகனுக்கு முதல் குழந்தை இறக்கும்.

லக்கினத்திற்கு:—

(6) 5-வது பாவாதிபதி நீச்சனைப் 6, 8, 12-வது பாவத்தில் இருந்தால் ஜாதகனுடைய மனைவி மலடியாவாள்,

(7) 5-வது பாவத்தில் கேதுவும் புதனும் இருந்தால் ஜாதகனுடைய மனைவி மலடியாவாள்.

(8) 5-வது பாவாதிபதி நீச்சத்திலிருந்து 5-வது பாவத்தைப் பார்க்காமலிருந்து, 5-வது பாவத்தில் புதனும் சனியும் இருந்தால் ஜாதகனுடைய மனைவி மலடியாவாள்.

(9) 5-வது பாவாதிபதி நீச்சத்திலிருந்து 9-வது பாவாதிபதி லக்கின பாவத்திலிருந்தால் புத்திர தோஷமுண்டு. சாந்தி செய்யக் கஷ்டத்தால் புத்திரனுண்டாகும்.

(10) 5-வது பாவத்தில் புதனும் கேதும் இருந்து 9-வது பாவாதிபன் லக்கின பாவத்திலிருந்தால் ஜாதகனுக்குப் புத்திர தோஷமுண்டு, சாந்தி செய்யக் கஷ்டத்துடன் பிள்ளை பிறக்கும்.

(11) 5-வது பாவாதிபன் 6, 8, 12 வது பாவத்திலிருந்தாலும், நீச்சனைனுலும், சத்துரு வீட்டிலிருந்தாலும், ஜாதகனுக்குக் கஷ்டத்தால் சந்ததி உண்டு.

(12) 5-வது பாவம் புதன் வீடு, அல்லது சனி வீடாகி, 5-வது பாவத்தில் சனி அல்லது குளிகன் இருந்தாலும் அல்லது 5-வது பாவத்தைச் சனி பார்த்தாலும் ஜாதகனுக்குத் தத்து புத்திர யோகமுண்டு.

(13) 5-வது பாவத்தில் புதன், குரு, சுக்கிரன், 5-வது பாவாதிபன் இவர்கள் பலவந்தர்களாயிருந்து, சூரியனுடன் கூடியாவது அல்லது சூரியனால் பார்க்கப்பட்டாவதிருந்தால் ஜாதகனுக்கு அநேகச் சத் புத்திரர்களுண்டு.

(14) 5-வது பாவாதிபதி சந்திரனுடன் கூடியிருந்தாலும், 3-வது பாவத்தில் இருந்தாலும் ஜாதகனுக்குப் பெண் சந்ததி உண்டாகும்.

(15) 5-வது பாவாதிபன் உச்சமாயிருந்தால் புத்திர பாக்கியமுண்டு.

(16) 5-வது பாவாதிபன், லக்கினத்திலிருந்து 2, 5, 9-வது பாவத்திலிருந்து குருவுடன் கூடியிருந்தாலும் அல்லது குருவால் பார்க்கப்பட்டாலும் புத்திர பாக்கியமுண்டு.

லக்கினத்திற்கு:—

(17) 5-வது பாவத்தில் குரு இருந்து 5-வது பாவாதிபன் சுக்கிரனுடன் கூடி இருந்தால் ஜாதகனுக்கு 32 அல்லது 33-வது வயதில் புத்திரனுண்டாகும்.

(18) 5-வது பாவாதிபன் கேந்திர பாவத்திலிருந்து 5—வது காரகனுடன் கூடியிருந்தால் 30 அல்லது 36 வயதில் புத்திரனுண்டாகும்.

(19) லக்கின பாவத்திலிருந்து 9-வது பாவத்தில் குரு இருந்து குருவுக்கு 9-வது பாவத்தில் சுக்கிரனிருந்து, லக்கின பாவாதிபன் சுக்கிரனுடன் கூடி இருக்கில் ஜாதகனுக்கு 40 வயதில் புத்திரனுண்டாகும்.

(20) 5-வது பாவத்தில் ராகு இருந்து, 5-வது பாவாதிபன் பாபருடன் கூடியிருந்து, குரு நீச்சராசி யிருந்தால் ஜாதகனுக்கு 32—வது வயதில் ஜாதகனுடைய புத்திரன் மரண மடைவான்.

(21) 5-வது பாவத்தில் பாபரிருந்தாலும், குருவிற்கு 5-வது பாவத்தில் பாபரிருந்தாலும் ஜாதகனுக்கு 26, 33, 40-வது வயதில் தன்னுடைய புத்திர நாசம் நேரிடும்.

(22) லக்கின பாவத்தில் குளிகனிருந்தாலும், லக்கின பாவாதிபன் நீச்ச வீட்டிலிருந்தாலும் ஜாதகனுக்கு 56-வது வயதில் புத்திர சோகமுண்டு.

(23) 5-வது பாவாதிபன் பரம உச்சத்தில் லக்கின பாவாதிபதியுடன் கூடியும், குரு சுபருடன் கூடியும் இருந்து 4-வது, 6-வது பாவங்களில் பாபரிருந்தால் நிரதகனுக்குப் பத்து புத்திரர்களுண்டு.

(24) குரு பரம உச்சத்திலிருந்து, 2-வது பாவாதிபதி ராகுவுடன் கூடியிருந்து பாக்கியாதிபன் பாக்கியத்திலிருந்தால் ஜாதகனுக்கு ஒன்பது புத்திரர்களுண்டு.

(25) 5-வது பாவத்திற்குப் பாக்கியத்தில் குரு இருந்து, 5-வது பாவாதிபன் பலவானுயிருந்து, 2-வது பாவாதிபன் 10-வது பாவத்திலிருந்தால் ஜாதகனுக்கு எட்டு புத்திரர்களுண்டு.

(26) 5-வது பாவத்திற்கு 5—வது பாவத்தில் அதாவது லக்கினத்திற்கு 9-வது பாவத்தில் சனி இருந்து அந்த 9-வது பாவாதிபதி

லக்கினத்திற்கு:—

5-வது பாவத்திலிருந்தால் ஜாதகனுக்கு எழு புத்திரர்களுண்டு. இரண்டு கர்ப்பம் இரட்டைப் பிறவியாய்ப் பிறக்கும்.

(27) 5-வது பாவாதிபதி 5-வது பாவத்தில் 2-வது பாவாதிபதியுடனிருந்தால் ஜாதகனுக்கு ஆறு புத்திரர்கள் பிறக்கும், அவைகளில் மூன்று புத்திரர்கள் இறப்பார்கள்.

(28) 5-வது பாவத்தில் குரு இருந்து குருவுக்கு ஐந்தாவது பாவத்தில் சனி இருந்து சனிக்கு 5-வது பாவத்தில் ராகு இருந்தால் ஜாதகனுக்கு ஒரே புத்திரனுண்டு.

(29) 5-வது பாவத்தில் பாபர்களிருந்து குருவுக்கு ஐந்தாவது பாவத்தில் சனி இருந்தால் ஜாதகனுக்கு வேறு ஸ்திரீயுடன் புத்திரப் பேறுண்டு. ஜாதகனுக்கு மூன்று மனைவிகளுண்டு.

(30) 5-வது பாவத்தில் பாபர் இருந்து குருவுக்கு ஐந்தாவது பாவத்தில் சனி இருந்து 5-வது பாவத்தில் செவ்வாய் இருந்து லக்கின பாவாதிபதி இரண்டாவது பாவத்திலிருந்தால் ஜாதகனுக்குப் பிள்ளைகள் பிறந்து பிறந்து மறிக்கும். ஜாதகன் தீர்க்காயுளுடையவன்.

(31) 5-வது பாவாதிபதி ஐந்தாவது பாவத்திலிருந்தால் ஜாதகனுக்குப் புத்திரன் ஜீவித்திருக்கமாட்டான். ஜாதகன கூடின நேரம் கோபமுடையவன், கடுமையாய்ப் பேசுபவன், தர்மவான், புத்திசாலி.

(32) 5-வது பாவாதிபதி, 6-வது, 12-வது பாவத்திலிருக்கில் ஜாதகனுக்குத் தன்னுடைய புத்திரன் சத்துருவாவான்.

(33) 5-வது பாவாதிபதியாவது அல்லது 9-வது பாவாதிபதியாவது லக்கின பாவத்திலிருந்து 7-வது பாவத்திலாவது அல்லது இரட்டை ராசியிலாவது இருந்து சந்திரன் சுக்கிரனுடன் கூடியாவது அல்லது சுக்கிரனால் பார்க்கப்பட்டாவது இருந்தால் ஜாதகனுக்கு அநேக பெண்கள பிறக்கும். இவர்கள் புருஷ வர்க்கத்தில் புருஷ கிரகத்தால் பார்க்கப்பட்டாவது அல்லது ஆண் கிரகத்தால் பார்க்கப்பட்டாவது இருந்தால் ஜாதகனுக்கு அதிக புத்திரர்கள் பிறக்கும். லக்கின பாவத்திற்கு 5-வது பாவத்தைக்கொண்டும் குருவைக்கொண்டும் புத்திரப்பாக்கியம அறியவேண்டும.

லக்கினத்திற்கு:—

(34) லக்கினத்திற்கு 5-வது பாவம் சந்திரன் அல்லது சுக்கிரனுடைய வர்க்கமாகி, சந்திரனுவது அல்லது சுக்கிரனுவது 5-வது பாவத்தில் இருந்தாலும் அல்லது 5-வது பாவத்தைப் பார்த்தாலும் அப்போது 5-வது பாவத்தில் பாபக்கிரக மில்லாமலிருந்தால் ஜாதகனுக்கு அநேக குழந்தைகளுண்டு.

(35) 5—வது பாவத்தைச் சனி, செவ்வாய் பார்த்தால் ஜாதகன் புத்திர ஈனனுவான்.

(36) 5-வது பாவத்திலிருந்து 7-வது பாவம் சுபருடைய ராசி அல்லது அம்சமானல் ஜாதகனுக்குப் பெளத்திரன் (பேரன்) பிறப்பான்.

(37) 5-வது பாவத்திற்கு 7-வது பாவாதிபதி சுபக்கிரகத்துடன் சேர்ந்தாவது அல்லது சுபக்கிரகத்தால் பார்க்கப்பட்டாவது இருந்து திரிகோணத்திலாவது கேந்திரத்திலாவது இருந்தால் ஜாதகனுக்குப் பெளத்திரன் (பேரன்) பிறப்பான்.

(38) 5—வது பாவாதிபதி சுவ கேஷத்திரத்திலிருந்தால் ஜாதகனுக்கு அநேக குழந்தைகள் இருக்காது.

(39) 5—வது பாவாதிபதி இருக்கும் அம்சாதிபதி தன் நவாம்சையிலேயே இருந்தால் ஜாதகனுக்கு ஒரே புத்திரனுண்டு.

(40) 5-வது பாவத்தில் 7-வது பாவாதிபதி இருந்தால் ஜாதகனுக்குக் குழந்தைகளாவது அல்லது மனைவியாவது இல்லை.

(41) 5-வது பாவத்திலிருந்து 6-வது, 8-வது, 12-வது பாவங்களில் பாபக்கிரகங்கள் இருந்தால் ஜாதகனுடைய குடும்பம் க்ஷீணித்துப் போய்விடும்.

(42) 5-வது பாவத்தில் இராகு இருந்து அந்தப் பாவாதிபதி துஸ்தானங்களாகிய 6—வது, 8-வது, 12—வது பாவங்களில் இருந்தால் ஜாதகனுடைய புத்திரர்கள் இறப்பார்கள்.

(43) 5-வது பாவாதிபதி லக்கின பாவத்திலிருந்து லக்கின பாவாதிபதி 5-வது பாவத்திலிருந்தால் ஜாதகனுக்குத் தத்து புத்திரனுண்டு.

லக்கினத்திற்கு:—

(44) 5-வது பாவாதிபதியும், லக்கின பாவாதிபதியும் துஸ்தா னத்தில் (அதாவது 6, 8, 12-வது பாவத்தில்) இருந்து சுபக்கிரகத் தால் பார்க்கப்பட்டால் ஜாதகனுக்கு ஒரு தத்து புத்திரன் உண்டு.

(45) 5-வது பாவாதிபதி சுபருடன் கூடி சுபராசியிலுள்ள கேந்திர திரிகோண பாவத்திலிருந்தால் ஜாதகனுக்குப் பால்யத்தி லேயே புத்திரன் பிறப்பான்.

(46) 5-வது பாவாதிபதி இராகுடன் சேர்ந்திருந்தால் 5-வது பாவாதிபதியின் புக்தியில் பிறக்கும் பிள்ளை அற்பாயுளுடையவனாக வும், இராகுவின் புக்தியில் பிறக்கும் பிள்ளை தீர்க்காயுளுடையவனாக வும் இருப்பார்கள்.

(47) 5-வது பாவாதிபதியும் 2-வது பாவாதிபதியும் பலவீனர் களாயிருந்து 5-வது பாவத்தைப் பாபிகள் பார்த்தால் ஜாதகன் அநேக களத்திரங்களை விவாகஞ்செய்தாலுங்கூட அவனுக்குச் சந்ததி கிடையாது. ஆனால் அவனுடைய மனைவி புத்திரயோக முடைய வளாய்ப் பிறந்திருந்தால் (அதாவது அவள் ஜாதகம் பிரகாரம் அவளுக்குப் புத்திர பாக்கியமிருந்தால்) ஜாதகனுடைய ஜாதகத்தில் 5—வது பாவத்தைப் புகுலவது அல்லது 5-வது பாவத்திற்கு 6-வது பாவாதிபதியாவதுப் பார்த்தால் அவன் மனைவி கள்ள புருஷனால் புத்திரனைப்பெறுவள்.

(48) 5—வது பாவம், அல்லது 5—வது பாவாதிபதி அல்லது குரு இவைகளுடன் சுபர் கூடினாலும் அல்லது இவைகளைச் சுபர் பார்த்தா லும் ஜாதகனுக்குச் சந்தேகமில்லாமல் புத்திரனுண்டு.

(49) 5-வது பாவத்தில் லக்கின பாவாதிபதி இருந்து 5-வது பாவாதிபதி வலிவாயிருந்து குருவும் வலிவாயிருந்தால ஜாதகனுக்குச் சந்தேகமில்லாமல் புத்திரனுண்டு.

(50) 5—வது பாவத்தில் குரு பூர்ண பலத்துடனிருந்து, குரு லக்கின பாவாதிபதியினால் பார்க்கப்பட்டால் ஜாதகனுக்குச் சந்தேக மில்லாமல் புத்திரனுண்டு.

(51) 5—வது பாவாதிபதியும் குருவும் வைசேஷிகாம்சத்தி லிருந்து 5-வது பாவத்தை 9-வது பாவாதிபதி பார்த்தால் ஜாதக னுக்குப் புத்திரனுண்டு.

லக்கினத்திற்கு:—

(52) 10-வது பாவத்தில் சந்திரனும், 7-வது பாவத்தில் சுக்கிரனும், 4-வது பாவத்தில் பாபிகளும் இருந்தால் ஜாதகனுடைய வம்சம் சந்தேகமில்லாமல் தன்னுடன் அற்றுப்போகும்.

(53) 5-வது பாவாதிபதி பாபிகளுடன் கூடியாகிலும் அல்லது பாபிகளாலும் அல்லது அஸ்தங்கத மடைந்த கிரகங்களாலும் பார்க்கப்பட்டு, லக்கின பாவாதிபதி 6-வது அல்லது 8-வது பாவத்திலிருந்தால் ஜாதகனுக்குப் புத்திர நாசமுண்டு.

(54) 1-வது, 7-வது, 9-வது, 12-வது பாவத்தில் பாபிகளிருந்து, இவர்கள் பாபவர்க்கத்தில் இருந்தால் ஜாதகனுடைய வம்சம் நாசமடையும்.

(55) 5-வது 1-வது, 7-வது பாவாதிபதிகள் குரு இவர்கள் எல்லோரும் பலவீனமாயிருந்தால் ஜாதகனுக்குச் சந்ததி கிடையாது.

(56) 5-வது பாவத்தில் பாபக்கிரகமிருந்து, 5-வது பாவாதிபதி நீச்சமடைந்து சுபரால் பார்க்கப் படாமலிருந்தால் ஜாதகனுக்குச் சந்ததி கிடையாது.

(57) லக்கினத்திலிருந்து, சந்திரனிலிருந்து, குருவிலிருந்து, 5-வது பாவங்களில் பாபிகள் இருந்து, இந்தப் பாவங்களில் சுபர் இல்லாமல் இருந்தாலும் அல்லது இந்தப் பாவங்களைச் சுபர் பார்க்காமலிருந்தாலும் ஜாதகனுக்குச் சந்ததி கிடையாது.

(58) லக்கினத்திலிருந்து 5-வது பாவத்தில் ஒரு பாபி இருந்து 5-வது பாவாதிபதி இரண்டு பாபிகளின் மத்தியிலிருந்து சுபரால் பார்க்கப்படாமலும், அல்லது சம்மந்தப்படாமலிருந்தால் ஜாதகனுக்குச் சந்ததி கிடையாது.

(59) லக்கினத்திலிருந்து 5-வது பாவாதிபதி பலவீனமாயிருந்து குரு இரண்டு பாபிகளின் மத்தியிலிருந்து 5-வது பாவாதிபதி சுபரால் பார்க்கப்படாமலும் அல்லது சம்மந்தப்படாமலுமிருந்தால் ஜாதகனுக்குச் சந்ததி கிடையாது.

(60) லக்கினத்திலிருந்து 5-வது பாவத்தின் இராசியாதிபதி புதன் அல்லது சனி ஆகி, 5-வது பாவத்தில் குளிகள் அல்லது சனி இருந்தாலும் அல்லது 5-வது பாவத்தைக் குளிகன் அல்லது சனி

பார்த்தாலும் ஜாதகனுக்குத் தத்து புத்திரன் அல்லது இதர வழியால் புத்திரனுண்டு.

(61) லக்கினத்திலிருந்து 5–வது பாவத்தின் ராசி மீனமா யிருந்து 5–வது பாவத்தில் குரு இருந்தால் ஜாதகன் அற்ப சந்ததி யுடையவன்.

(62) லக்கினத்திலிருந்து 5–வது பாவத்தின் ராசி தனுசாக விருந்து 5-வது பாவத்தில் குரு இருந்தால் ஜாதகனுக்குக் கஷ்டத்தால் சந்ததியுண்டாகும்.

(63) லக்கினத்திலிருந்து 5–வது பாவத்தின் ராசி கடகம் அல் லது கும்பமாகில் 5–வது பாவத்தில் குரு இருந்தால் ஜாதகனுக்குச் சந்ததி கிடையாது.

(64) லக்கினத்திலிருந்து 5–வது பாவாதிபதி 9-வது பாவத்தி லிருந்து சந்திரன் பாபராசியிலிருந்து, லக்கின பாவாதிபதி திரி கோணத்திலிருந்தால் ஜாதகனுக்குத் தத்து புத்திரனுண்டு.

(65) லக்கினத்திலிருந்து 5–வது பாவாதிபதி 4-வது பாவத்தி லிருந்தாலும் அல்லது சனியினுடைய நவாம்சையிலிருந்தாலும் அப் போது லக்கின ராசி இரட்டை ராசியாகில் ஜாதகனுக்குத் தத்து புத் திரனுண்டு.

(66) லக்கினத்திலிருந்து 5-வது பாவாதிபதி சூரியனுடன் கூடி- புதன் நவாம்சையில் இரட்டை ராசியிலாகிலும் அல்லது சனி நவாம் சையிலாகிலும் இருந்தால் ஜாதகனுக்குத் தத்து புத்திரனுண்டு.

(67) லக்கினத்திலிருந்து 5–வது பாவாதிபதி சனியினுடைய நவாம்சையிலிருந்து குருவும், சுக்கிரனும் சுவக்ஷேத்திரத்திலிருந்தால் ஜாதகனுக்கு முதலில் தத்து புத்திரனும் அதன் பிறகு தன் மனை வியின் மூலமாய்ப் புத்திரனுமுண்டு.

(68) லக்கின பாவத்தில் செவ்வாய் இருந்து 4-வது, 8-வது பாவத்தில் சூரியன் இருந்து சுபரால் பார்க்கப்பட்டால் ஜாதகனுக்குக் காலாந்தரத்தில் (அதாவது விருத்தாப்பிய வயதில்) புத்திரனுண்டு.

(69) லக்கினத்திலிருந்து 5-வது பாவம் பலவீனமாயிருந்து லக் கின பாவத்தில் சனி இருந்து குரு 8-வது பாவத்திலும், செவ்வாய்

12-வது பாவத்திலு மிருந்தால் ஜாதகனுக்குக் காலாந்தரத்தில் (அதாவது வயது சென்று) புத்திரனுண்டு.

(70) லக்கினத்திலிருந்து 5-வது பாவத்தின் ஸ்புடம் இருக்கும் படியான இராசியில் 5-வது பாவத்திய ஸ்புடம் வரையிலும் செல்லான நவாம்சத் தொகையை அந்த 5-வது பாவத்தின் சுபதிருஷ்டி பலம் எத்தனை ரூபமோ அத்தனை ரூபதொகையால் பெருக்க வருகின்ற தொகையில் மூழு தொகை எவ்வளவோ அத்தனை சந்ததி ஜாதகனுக்கு உண்டு.

உதாரணமாக நாம் எடுத்துக்கொண்ட ஜாதகத்திற்கு லக்கினத்திலிருந்து 5-வது பாவத்தின் ஸ்புடம் 305 பாகை-8 கலை ஆகும். இந்த 305 பாகை-8 கலை என்பது கும்பராசியில் இருக்கிறது. கும்பராசி என்பது 300 பாகை-0 கலை முதல் 330 பாகை-0 கலை வரையிலும் வியாபித்திருக்கின்றது. ஆகையால் கும்பத்தில் செல்லான பாகை-கலை 305 பாகை-8 கலையிலிருந்து 300 பாகை-0 கலையைக் கழிக்க வருகின்ற 5 பாகை-8 கலையே ஆகும். இந்த 5 பாகை-8 கலையைக் கலையாக்க 308 கலையாகும். ஒரு நவாம்சத்திற்கு 3 பாகை-20 கலை அதாவது 200 கலை ஆகும். கும்பத்தில் சென்ற 308 கலையை ஒரு நாவாம்சத்திற்குரிய 200 கலையால் வகுக்க வருகின்றதே கும்பத்தில் செல்லான நவாம்சம் ஆகும். இப்படிச்செய்ய $\frac{308}{200}$ நவாம்சம் ஆகும்.

நாம் உதாரணமாக எடுத்துக்கொண்ட ஜாதகத்திற்கு (என்னுடைய ஜாதககணிதம் இரண்டாம்பாகம் 51-வது பக்கத்திலுள்ள 38-வது கட்டத்தைப் பார்க்க) 5-வது பாவத்திற்குரிய சுபபலம் 235 ஆகும். இங்கு 235 என்பது ஒரு ரூபத்தை 100 சமபாகமாக அதாவது சதாம்சமாகப் பங்கிடுவோமானால் அப்படிப்பட்ட சதாம்சபாகம் 235 என்று அர்த்தம். ஆகையால் 235 சதாம்ச பாகத்தை ரூபமாக ஆக்க வேண்டுமானால் 235யை 100 ஆல் வகுக்கவேணும். அப்படிச் செய்ய $\frac{235}{100}$ ரூபம் வரும். மேலே கணித்து வந்த செல்லான நவாம்சதொசையாகிய $\frac{308}{200}$யை 5-வது பாவத்தின் சுப திருஷ்டி பலத்தொகையாகிய $\frac{235}{100}$ ரூபத்தால் பெருக்கவும், அப்படிப் பெருக்க

$\frac{308}{200} \times \frac{235}{100}$ வரும். அதாவது $\frac{308 \times 235}{200 \times 100} = \frac{72,380}{20,000} = 3\frac{12,380}{20,000}$ வரும். இங்கு வந்த $3\frac{12,380}{20,000}$ என்ற தொகையில் முழு தொகை 3 ஆகும். ஆகையால் ஜாதகருக்கு மூன்று சந்ததி உண்டு என்று ஏற்படுகிறது.

(71) லக்கினத்திலிருந்து 5-வது பாவத்தின் ஸ்புடம் இருக்கும் படியான இராசியில் 5–வது பாவத்திய ஸ்புடம் வரையிலும் செல்லான நவாம்ச தொகையை அந்த 5–வது பாவத்தின் பாபதிருஷ்டி பலம் (அசுப திருஷ்டி பலம்) எத்தனை ரூபமோ அத்தனை ரூப தொகையால் பெருக்க வருகின்ற தொகையில் முழு தொகை எவ்வளவோ அத்தனை சந்ததி ஜாதகனுக்கு நாசமாகும்.

உதாரணமாக நாம் எடுத்துக்கொண்ட ஜாதகத்திற்கு லக்கினத்திலிருந்து 5-வது பாவத்தின் ஸ்புடம் 305 பாகை–8 கலை ஆகும். மேலே 71-வது அயிட்டத்தில் கண்டபடி கும்பத்தில் செல்லான நவாம்ச தொகை $\frac{308}{200}$ வரும். நாம் உதாரணமாக எடுத்துக்கொண்ட ஜாதகத்திற்கு (என்னுடைய ஜாதக கணிதம் இரண்டாம்பாகம் 51-வது பக்கத்திலுள்ள 38-வது கட்டத்தைப் பார்க்க) 5-வது பாவத்திற்குரிய பாப பலம் (அசுப பலம்) 192 ஆகும். இங்கு 192 என்பது முன்போலவே ஒரு ரூபத்தை 100 சமபாகமாக அதாவது சதாம்ச மாகப் பங்கிடுவோமானால் அப்படிப்பட்ட சதாம்ச பாகம் 192 என்று அர்த்தம். ஆகையால் 192 சதாம்ச பாகத்தை ரூபமாக ஆக்கவேண்டுமானால் 192யை 100 ஆல் வகுக்கவேணும். அப்படிச் செய்ய $\frac{192}{100}$ ரூபம் வரும். மேலே கணித்துவந்த செல்லான நவாம்ச தசையாகிய $\frac{308}{200}$ யை 5–வது பாவத்தின் பாப திருஷ்டிபலத் தொகையாகிய $\frac{192}{100}$ ரூபத்தால் பெருக்கவும். அப்படிப் பெருக்க $\frac{308}{200} \times \frac{192}{100}$ வரும். அதாவது $\frac{308}{200} \times \frac{192}{100} = \frac{59,136}{20,000} = 2\frac{19,136}{20,000}$ வரும். இங்கு வந்த

$2\frac{19,136}{20,000}$ என்ற தொகையில் முழுத்தொகை 2 ஆகும் ஆகையால் ஜாதகருக்கு 2 சந்ததி நாசம் என்று ஏற்படுகின்றது.

குறிப்பு.—அயிட்டம் 70, 71 பிரகாரம் ஜாதகருக்கு மூன்று சந்ததி இருக்கும் என்றும் இரண்டு சந்ததி நாசமடையும் என்று ஏற்படுகிறது. அதாவது மொத்தம் ஐந்து சந்ததி ஏற்பட்டு இரண்டு சந்ததி நாசமடைந்து மீதி மூன்று சந்ததி இருக்கும் என்று அறியவும்.

(72) லக்கினத்திலிருந்தும் சந்திரனிலிருந்தும் குருவிலிருந்தும் கணக்கிடவருகின்ற 5-வது, 9-வது பாவங்களின் அதிபதிகளின் தசாபுக்தி காலங்களில் ஜாதகனுக்குச் சந்ததி உண்டாகும். லக்கினத்திலிருந்து 5-வது பாவாதிபதி, 7-வது பாவாதிபதி இவர்களுடன் கூடியும் அல்லது இவைகளைப பார்த்தும் இருக்கின்ற கிரகங்களின் தசாபுக்தி காலங்களில் ஜாதகனுக்குச் சந்ததி உண்டாகும். லக்கினத்திலிருந்து 5-வது பாவாதிபதியினுடைய ஸ்புடத்தையும் 7-வது பாவாதிபதியினுடைய ஸ்புடத்தையுங் கூட்டவருகின்ற ஸ்புடத்திற் குரிய நட்சத்திற்குரிய தசையில் ஜாதகனுக்குச் சந்ததி உண்டு.

[உதாரணமாக நாம் எடுத்துக்கொண்ட உதாரண ஜாதகத்திற்கு 5-வது பாவாதிபதியாகிய சனியினுடைய ஸ்புடமாகிய பாகை–230 27 கலையை 7-வது பாவாதிபதியாகிய செவ்வாயினுடைய ஸ்புடமாகிய 206 பாகை–30 கலையுடன் கூட்ட பாகை 436–57 கலை ஆகும். அதாவது ஒரு மண்டலமாகிய 360 பாகையைக் கழிக்கப் பாகை 76–57 கலையாகும். இந்தப் பாகை 76–57 கலைக்கு உரிய நட்சத்திரம் (என் ஜாதக கணிதத்தின் 11–வது வாக்கியம் பிரகாரம்) திருவாதிரை நட்சத்திரமாகும். இந்தத்திருவாதிரை நட்சத்திற்குரிய தசை இராகு தசையாகும். ஆகையால் ஜாதகனுக்கு இராகு தசையில் சந்ததி உண்டாகும் என்று அறியவும்.]

(73) லக்கினத்திலிருந்து 5-வது பாவாதிபதியின் ஸ்புடத்தையும் லக்கின பாவாதிபதியின் ஸ்புடத்தையுங் கூட்ட வருகின்ற ராசி அம்சம் இவைகளிலும் இவைகளுக்குத் திரிகோண ராசி அம்சங்களிலும் குரு கோட்சாரீதியாய் சஞ்சாரஞ் செய்யும்போது ஜாதகனுக்குப் புத்திரன் பிறப்பான்.

உதாரணம்:—நாம் எடுத்துக்கொண்ட உதாரண ஜாதகத்திற்கு

	பாகை	கலை.
5-வது பாவாதிபதி	230	27
லக்கின பாவாதிபதி	204	32
கூட்ட	434	59
ஒரு மண்டலம்	360	00
கழிக்க	74	59

5-வது பாவாதிபதி சனி; சனியின் ஸ்புடம் பாகை 230 27 கலை. லக்கின பாவாதிபதி சுக்கிரன். சுக்கிரனின் ஸ்புடம் பாகை 204-32 கலை. இந்த இரண்டு ஸ்புடங்களையும், கூட்டப் பாகை 434 – 59 கலை. அதாவது பாகை 74–59 கலை வரும். பாகை 74–59 கலைக்கு மிதுனராசியும், கும்ப நவாம்சமும் ஆகும். (என் ஜாதகணிதத்தில் 11–வது வாக்கியத்தைப் பார்க்கவும்). ஆகையால் கோட்சாரத்தில் குரு மிதுனராசியும் அதற்குத் திரிகோண ராசிகளாகிய துலாம் கும்பம். இந்த மூன்று ராசிகளிலும் சஞ்சரிக்கும்போது ஜாதகனுக்குப் புத்திர ஜனனமுண்டு. மேலும் நவாம்சையில் குரு கோட்சாரத்தில் கும்பத்திலும் அதற்குத் திரிகோண நவாம்சங்களாகிய மிதுனம், துலாம் இவைகளாகிய இந்த மூன்று நவாம்சைகளிலும் சஞ்சாரஞ் செய்யும்போது ஜாதகனுக்குப் புத்திர ஜனனமுண்டு.

குறிப்பு:—புத்திரயோகம் இருக்கின்ற ஜாதகத்திற்கு மாத்திரம் இந்த கணிதம் பலிக்கும். புத்திரயோக மல்லாமல் புத்திர பாக்கியம் அற்பமாய் இருக்கின்ற ஜாதகத்திற்கு இந்தக்கணிதம் சரியாய் வராமல் தவறிப்போய்விடும். எனென்றால் ஐந்து வருஷத்திற்கு மேற்படாமலுள்ள காலத்திற்கு ஒரு தரம் குரு மேற்சொல்லிய இராசி, நவாம்சங்களில் வரக்கூடும், ஆகையால் ஐந்து வருஷத்திற்கு மேற்படாத காலத்திற்கு ஒரு தரம் புத்திரானுதிக்குங்காலம் மேற்கண்ட கணிதப்படி வந்து சம்பவிக்கக்கூடும். புத்திர தோஷமுள்ள ஜாதகனுக்குப் புத்திரன் பிறக்காமலேயே இருப்பதையும், அநேக பல வருஷங்கள் பொறுத்து பிறப்பதையும் நாம் அறிந்திருக்கிறோம். ஆகையால் புத்திர தோஷம் அதிகமாய் உள்ள ஜாதகங்களுக்கு மேற்கண்ட கணிதம் சரியாய் வராது. ஆகையால் அப்படிப்பட்ட புத்திர தோஷமுள்ள ஜாதகங்களுக்கு ஜாதகத்தில் கிரகங்களில் நிலையை அனுசரித்து 72-வது அயிட்டத்தில் சொல்லிய பிரகாரம் புத்திரன் ஜெனிக்கக்கூடிய தசா புக்திகளைத் தோராயமாய் நிர்ணயித்து அக்காலத்தில் மேற்சொல்லிய கணித நீதியாய் இராசி அம்சங்களில் கோட்சாரத்தில் குரு வருகின்றதா என்று பார்த்து இரண்டுவிதத்திலும் சரிதட்டி வருகின்ற காலத்தில் புத்திரன் பிறப்பான் என்று யூகித்துச் சொல்லவேண்டியது. அதாவது புத்திரன் பிறக்கின்ற காலம் தசாபுக்தி

நீதிபாப்ப் பார்க்கும்போது புத்திரன் பிறக்குந் தருணமுள்ளகாலம யும் இருக்க வேணும்; மேற் சொல்லிய கணிதநீதியாயும் பார்க்கப் புத்திரன் பிறகுந்தருண முள்ள காலமாயும் இருக்கவேண்டும். இவ்விதமாக இரண்டு விதத்திலும் ஒற்றுவருகின்ற காலத்தில் தான் புத்திரன் பிறக்கும் என்று நிர்ணயிக்க வேண் டும். இவ்விதமாகவே சகோதர உற்பத்தியாகுங் காலமும், சகோதரப் நாச மடையுங் காலமும், மனைவி வந்து சேரிடும் காலமும், மனைவி நாசமடையுங் காலமும் அந்தந்த பாவகணிதத்தில் சொல்லிய கணிதம் பிகாரம் அறிந்து கொள்ளவேண்டியது.

(74) சூரியன், சந்திரன், குரு இவர்களுடைய ஸ்புடங்களைக் கூட்ட வருகின்ற ஸ்புடத்திற்குரிய ராசியில் செல்வான நவாம்சம் எத்தனையோ அத்தனை சந்ததிகள் ஜாதகனுக்கு உண்டு. இது ஒரு வழி என்று அறியவும்.

உதாரணம்:—நாம் எடுத்துக்கொண்ட ஜாதகத்திற்கு சூரியனு டைய ஸ்புடம் பாகை-167 2 கலையும், சந்திரனுடைய ஸ்புடம் பாகை 118-10 கலையும், குருவினுடைய ஸ்புடம் பாகை 28–17 கலை யும் ஆகும். இந்த மூன்று ஸ்புடங்களையுங் கூட்ட பாகை 313–29 ஆகும். இந்த பாகை 313-29 கலைக்கு (என் ஜாதக கணிதத்தில் 11–வது வாக்கியம் பிரகாரம்) கும்பராசியில் கும்ப நவாம்சம் ஆகும். கும்பராசியில் கும்ப நவாம்சம் என்பது (மேற் சொல்லிய 11-வது வாக்கியம் பிரகாரம்) கும்பராசியில் ஐந்தாவது நவாம்சமாகும். ஆகை யால் ஜாதகனுக்கு ஐந்து சந்ததி உண்டு.

குறிப்பு:—இந்தக்கணிதம் பிகாரம் ஒரு ராசியில் நவாம்சம்தான் இருப் பதால் 9–க்கு மேற்பட்ட சந்ததி உண்டாகாது என்று ஏற்படுகின்றது. ஆனால் நமது அனுபோகத்தில் சிலருக்கு 9க்கு மேற்பட்ட சந்ததி இருப்பதால் இந்த வழி புத்திரயோகம் அதிகமாயுள்ள ஜாதகருக்குப் பொருந்தாது.

(75) லக்கினத்திலிருந்து 5–வது, 9–வது, 4–வது பாவாதிபதி களின் ஸ்புடங்களைக் கூட்ட வருகின்ற ஸ்புடத்திற்குரிய ராசியில் செல்லான நவாம்சை எத்தனையோ அத்தனை சந்ததிகள் ஜாதகனுக்கு உண்டு, இது ஒரு வழி என்று அறியவும்,

(76) லக்கினத்திலிருந்து 5–வது, 9–வது, 4–வது பாவங்களில் இருக்கின்ற கிரகங்களின் ஸ்புடங்களை எல்லாம் சேர்த்துக் கூட்ட வருகின்ற ஸ்புடத்திற்குரிய ராசியில் செல்லான நவாம்சம் எத்தனை யோ அத்தனை சந்ததிகள் ஜாதகனுக்கு உண்டு. இது ஒரு வழி

என்று அறியவும். 5-வது அல்லது 9-வது அல்லது 4-வது பாவத்தில் ஒரு கிரகம்கூட இல்லாமல் இருந்தால் இந்த வழியைக் கவனிக்க வேண்டாம்.

குறிப்பு:—அயிட்டம் 74, 75, 76 இவைகளில் சொல்லிய பிரகாரம் சந்ததியின், தொகையைக் குறிக்கும் எண்கள் வெவ்வேறாக வந்தால் மூன்று எண்களையும் கூட்டி மூன்றால் வகுக்க வருகின்ற முழு எண்ணை சந்ததியைக் குறிக்கும் எண் என்று அறியவும்.

(77) லக்கினத்திலிருந்து 5-வது பாவாதிபதி, குரு, 5-வது பாவத்தைப் பார்க்கும் கிரகம், 5-வது பாவத்தில் இருக்கும் கிரகம், இவைகள் ஸ்தானங்களாகிய 6, 8, 12-வது பாவங்களில் இருந்தால் அல்லது 6, 8, 12-வது பாவாதிபதிகளானால், அல்லது பலவீனர்களாய் இருந்தால் அவர்களுடைய தசாபுக்தி காலங்களில் ஜாதகனுக்குச் சந்ததி நஷ்டமடையும். இந்த கிரங்கள் சுபர்களாகி வலிவாயிருந்தால் அவர்களுடைய தசாபுக்தி அந்தரங்களில் ஜாதகனுக்குப் புத்திர பிராப்தியும், பிரபுக்கள் பிராப்தியும் சம்பத்தும் உண்டாகும்.

(78) லக்கினத்திலிருந்து 5-வது பாவாதிபதி, குரு, 5-வது பாவத்தைப் பார்க்கும் கிரகம், 5-வது பாவத்தில் இருக்கும் கிரகம் இவைகளின் ஸ்புடங்களை எல்லாம் ஒன்றாய்ச் சேர்த்து கூட்ட வருகின்ற ஸ்புடத்திற்குரிய இராசி நவாம்சைகளில், கோட்சாரரீதியாய் (1) குரு சஞ்சாரஞ் செய்யும்போது ஜாதகனுக்குச் சந்ததி உண்டாகும், (2) சனி சஞ்சாரஞ் செய்யும்போது ஜாதகனுடைய சந்ததி நாசமடையும்.

குறிப்பு:—ராசியும் நவாம்சையும் ஸ்புட ரீதியாய் நிர்ணயிக்கும் வழி 73-வது அயிட்டத்தில் சொல்லிய வழியைப்போன்றது என்று அறியவும்.

(79) லக்கினத்திலிருந்து 5-வது, 10-வது பாவத்தில் செவ்வாய் இருந்தால் ஜாதகனுடைய அம்மான் நாசமடைவான், சூரியனிருந்தால் ஜாதகனுடைய பிதுர் நாசமடைவான். சனி இருந்தால் ஜாதகன் நாசமடைவான். சந்திரனிருந்தால் ஜாதகனுடைய மாதுர் நாசமடைவான்.

(80) லக்கினத்திலிருந்து 5-வது பாவாதிபதி ஜெனன காலத்தில் பாதாளத்தில் இருந்தால் அதாவது ஆகாயத்தில் தெரியாமல் பூமிக்குக் கீழே இருந்தால் ஜாதகன் தான் இறக்குந்தருணத்தில் புத்திர

ஊப் பார்க்கமாட்டான். அதாவது மரண காலத்தில் புத்திரன் அருகில் இருக்கமாட்டான். ஒரு கிரகத்தின் (இங்கு 5-வது பாவாதிபதியின்) ஸ்புடத்திலிருந்து லக்கின ஸ்புடத்தைக் கழிக்க வருவது 180 பாகைக் குள்ளிருந்தால் அந்த கிரகம் பூமிக்குக் கீழே இருக்கின்றதென்றும். 180 பாகைக்கு மேற்பட்டிருந்தால் பூமிக்கு மேலே அதாவது ஆகாயத்தில் இருக்கின்றதென்றும் கூடிய வரையிலும் சரியாய் அறிந்து கொள்ளலாம்.

(81) லக்கினத்திலிருந்து 5–வது பாவாதிபதி தஸ்தானங்களாகிய 6, 8, 12–வது பாவத்திலிருந்தாலும் அல்லது பூமிக்குக் கீழே இருந்தாலும் ஜாதகன் மந்தமான புத்தியுடையவன். இந்த 5–வது பாவாதிபதி கேந்திர திரிகோண பாவங்களில் புதன் அல்லது குருவுடன் சம்மந்தப்பட்டிருந்தால் ஜாதகன் புத்திமான், கியானமும், யுக முடையவன்.

(82) குரு தன் நவாம்சையிலிருந்து மிருது என்ற சுப சஷ்டியாம்சத்திலிருந்தாலும் அல்லது குரு கோபுராம்சம் முதலிய உயர்ந்த வைஸேஷி காம்சங்களிலிருந்தாலும் அல்லது குரு சுப நவாம்சையிலிருந்து சுபரால் பார்க்கப்பட்டாலும் ஜாதகன் திரிகால ஞானியாவன்.

(83) லக்கினத்திலிருந்து 5-வது பாவத்திலும் 4-வது பாவத்திலும் பாபக்கிரகம் இருந்து 5-வது பாவம் பாப சஷ்டியாம்சத்திலிருந்து சுபரால் பார்ககப்படாமலும் அதில் சுபர் இல்லாமலுமிருந்தால் ஜாதகனுக்கு ஹிருதய ரோகமுண்டு.

(84) லக்கினத்திலிருந்து 5-வது பாவாதிபதி சுப நவாம்சத்திலிருந்து செவ்வாய் கேந்திர பாவத்தில் சுபருடன் கூடி இருந்தால் ஜாதகன் எப்போதும் அன்னதானஞ் செய்யும் பரோபகாரியாவன்.

(102) ஆறுவது பாவம்.

லக்கினத்திலிருந்து:—

(1) 6-வது பாவாதிபதி சத்துரு கேஷத்திரத்திலிருந்தால் ஜாதகனுடைய பங்காளி சத்துருவைப் போலிருப்பான்.

(2) 6-வது பாவாதிபதி 7-வது அல்லது, 11-வது பாவத்திலிருந்தால் ஜாதகன் புகழுடையவன், தனவான் நற்குணவான், மானி, தைரியமுடையவன், புத்திரனற்றவன்.

லக்கினத்திலிருந்து:—

(3) 6-வது பாவாதிபதி 8-வது, 12-வது பாவத்திலிருக்கில் ஜாதகன் நோயாளி, அறிவாளருக்குச் சத்துரு, அயலார் ஸ்திரீகளை இசிசிப்பவன், ஜீவஹிம்சை செய்பவன்.

(4) 6—வது பாவாதிபதி 9-வது பாவத்திலிருக்கால் ஜாதகன் கட்டை, சல் இலைகளை விற்பவன், ஓரிடத்தில் நிலைகாக்கில் நிலைத்து பல இடத்தில் விருத்தியுமுண்டு.

(5) 6-வது பாவாதிபதி 10-வது, 2-வது பாவத்திலிருக்கில் ஜாதகன் தைரியவான், குலத்தில் பெயரெடுத்தவன், அன்னிய தேசத்தில் சுகமுடையவன், தன் காரியத்தில் முயற்சியுடையவன்.

(6) 6-வது பாவாதிபதி 3-வது, 4-வது பாவத்திலிருந்தால் ஜாதகன் கோபத்தால் கண் சிவந்தவன். நல்ல மனமுடையவன், வஞ்சகன், சபல சிந்தனையுடையவன், தனவான்.

(7) 6-வது பாவாதிபதி 5-வது பாவத்திலிருக்கில் ஜாதகன் நிலையில்லாத தோழர், பணம் முதலியவை உடையவன், தைய முடையவன், சுகவான், அழகன், தன் காரியத்தில் வல்லவன், மதவான்.

(8) 6-வது பாவாதிபதி பாபியாயிருந்து 1-வது அல்லது 8-வது பாவத்திலிருந்தால் ஜாதகனுக்குச் சரீரத்தில் காயம். ரணம் முதலியவை உண்டாகும்.

(9) 6—வது பாவத்தில் பாபரிருந்து 6-வது பாவாதிபதி பாபருடன்கூடி, ராகுவுடன் சனி கூடியதால் ஜாதகன் எப்போதும் நோயாளி.

(10) 6-வது பாவத்தில் செவ்வாயிருந்து 6-வது பாவாதிபதி 8—வது பாவத்தில் இருந்தால் ஜாதகனுக்கு 6-வது, 12-வது வயதில் ஜ்வர ரோகமுண்டு.

(11) 6-வது பாவத்தில் குரு இருந்து 6-வது பாவாதிபதி சந்திரனுடன் கூடியதால் ஜாதகனுக்கு 19-வது, 23-வது வயதில் குஷ்டரோகமுண்டு.

(12) 6-வது பாவத்தில் ராகு இருந்து 6-வது பாவாதிபதி சுகநிர பாவத்தில் சனியுடன் கூடியதாலும், லக்கின பாவாதிபதி 6-வது பாவத்திலிருந்தாலும் ஜாதகனுக்கு 26-வது வயதில் க்ஷய ரோகமுண்டு.

லக்கினத்திலிருந்து:—

(13) 6—வது பாவத்தில் 12-வது பாவாதிபதி இருந்து 6—வது பாவாதிபதி 12-வது பாவத்திலிருந்தால் ஜாதகனுக்கு 29-வது 30-வது வயதில் குன்ம நோயுண்டு.

(14) 6-வது பாவத்தில் சந்திரனும் சனியுமிருந்தால் ஜாதகனுக்கு 55-வது வயதில் ரத்தகுஷ்ட நோயுண்டு.

(15) 6-வது பாவத்தில் 8-வது பாவாதிபதி இருந்து, 12-வது பாவாதிபதி லக்கின பாவத்திலிருந்து சந்திரன் 6-வது பாவாதிபதியுடன் கூடி இருந்தால் ஜாதகனுக்கு 8-வது வயதில் மிருகங்களால் ஆபத்துண்டு.

(16) 6-வது, 8—வது பாவத்தில் ராகு இருந்து 1-வது, 3—வது பாவத்தில் சனி இருந்தால் ஜாதகனுக்கு 1-வது வயதில் அக்கினி பயமுண்டு; 3-வது வயதில் பக்ஷி தோஷமுண்டு.

(17) 6-வது, 8-வது பாவத்தில் சூரியனிருந்து 5-வது, 7-வது பாவத்தில் சந்திரனிருந்தால் ஜாதகனுக்கு 5-வது, 9—வது வயதில் ஜல கெண்டமுண்டு.

(18) 8-வது (எட்டாவது) பாவத்தில் சனி இருந்து 9-வது, 7-வது பாவத்தில் குஜனிருந்தால் ஜாதகனுக்கு 8-வது, 10-வது, 30-வது வயதில் வைசூரி நோயுண்டு.

(19) 8-வது பாவாதிபன் இருக்கும் நவாம்ச ராசியில் இராகு இருந்து அந்த நவாம்ச ராசி 8-வது பாவத்திற்குத் திரிகோண ராசியாகில் ஜாதகனுக்கு 18-வது, 22—வது வயதில் சுரம், மேக நோயுண்டு,

(20) 6-வது பாவத்தில் 11-வது பாவாதிபதி இருந்து 6-வது பாவாதிபதி 11-வது பாவத்திலிருந்தால் ஜாதகனுக்கு 31-வது, 41—வது வயதில் சத்துருமூலம் தன விரையமுண்டு.

(21) 6-வது பாவத்தில் 5—வது பாவாதிபதியும், 6-வது பாவாதிபதி குருவுடன் கூடி, 12—வது பாவாதிபதி லக்கின பாவத்திலிருந்தால் ஜாதகனுக்குத் தன் புத்திரன் சத்துரு ஆவான்.

லகினத்திலிருந்து:—

(22) 6-வது பாவத்தில் லக்கின பாவாதிபதி இருந்து, 6-வது பாவத்தின் நவாம்சாதிபதி 6-வது பாவத்திலிருந்தால் ஜாதகனுக்கு 10-வது, 19-வது வயதில் நாயால் ஆபத்து நேரிடும்.

(23) 6-வது பாவத்தில் குரு இருந்தால் ஜாதகன் தன் சத்துருக்களை ஜெயிப்பவன்.

(24) 6—வது பாவாதிபதியும் புதனும் கூடி இராகுவுடன் கூடி லக்கின பாவாதிபதியுடன் கூடினாலும் அல்லது அவரால் பார்க்கப்படடாலும் ஜாதகன் நபுஞ்சகனுவான்.

(25) 6-வது பாவத்தில் செவ்வாய் லக்கின பாவாதிபதியுடன் இருந்தால் ஜாதகனுடைய சிசுனத்தில் புண் உண்டாகி அதற்கு நோய் உண்டாகும்.

(26) 6-வது பாவத்தில் 7-வது பாவாதிபதி சுக்கிரனுடன் கூடி இருந்தால் ஜாதகன் தன் மனைவியிடத்தில் நபுஞ்சகனுவான்.

(27) 6-வது பாவத்தில் செவ்வாய் இருந்து சனியால் பார்க்கப் பட்டால் ஜாதகன் தன் சத்துருவினுடைய மனைவிபுடன் சம்போகஞ் செய்வான்.

(28) 6-வது பாவத்தில் சுபர் இருந்தாலும் அல்லது 6-வது பாவத்தைச் சுபர் பார்த்தாலும் ஜாதகனுக்குச் சத்துரு பயமே கிடையாது.

(29) 6—வது பாவத்தில் பாபர் இருந்தாலும் அல்லது 6—வது பாவத்தைப் பாபர் பார்த்தாலும் சத்துருக்களால் பயமும், காயமும் உண்டாகும். புண் அடையாளம் உண்டாகும். அவமானமும் உண்டாகும்.

(30) 6—வது பாவத்தில் சூரியன் நீசச ஸ்தானத்திலும் அல்லது சத்துரு ஸ்தானத்திலும் இருந்து பலவீனமாகி லக்கின பாவாதிபதிக்கு விரோதியாகி இருந்தால் ஜாதகன் தன் பிதுரு வர்க்கத்திற்கு விரோதியாகி இருப்பவருடன் சேர்ந்திருப்பான்.

(31) 6—வது பாவத்தில் சூரியன் தன் உச்ச ஸ்தானத்தில் அல்லது தன் மித்துரு ஸ்தானத்தில் இருந்து, தன்னுடைய மித்துரு வர்க

லக்கினத்திலிருந்து:—

கத்திலிருந்து, லக்கின பாவாதிபதிக்கு மித்துருவாயிருந்தால் ஜாதகன் அநேக தாயாதிகளுடையவனும், சத்துரு, மரணம் முதலியவை இல்லாதவனும் இருப்பான்.

(32) 6–வது பாவாதிபதி அல்லது 6-வது பாவத்திலிருக்கும் கிரகம் சத்துரு ஸ்தானத்திலும் அல்லது நீச்ச ஸ்தானத்திலும இருந்தாலும், அல்லது அஸ்தங்கத மடைந்திருந்தாலும் அல்லது வக்கிரகதி அடைந்திருந்தாலும் ஜாதகன் அநேக ஞாதி (தாயாதி)க ளுடையவனும் அநேக காயமுள்ள சரீர முடையவனுகவும் இருப்பான்.

(33) 6-வது பாவத்தில் சூரியன் முதலிய நவக்கிரங்களில் எந்த கிரகம் இருக்கின்றதோ அந்த கிரக காரகவர்க்க சத்துருக்களால் ஜாதகனுக்கு எப்போதும் பீடையுண்டாகும். உதாரணமாக, சூரியனில் பிதுர் வர்க்கத்தாராலும், சந்திரனில் மாதுர் வர்க்கத்தாராலும், செவ்வாயாகில் சகோதரச், சகோதரி வர்க்கத்தாராலும், புதனில் அப்மான வர்க்கத்தாராலும், குருவாகில புத்ர வர்க்கத்தாராலும், சுக்கிரனில களத்திரவர்க்கத்தாராலும், சனியாகில் வேலையாட்களாலும், இராது வாகில் பிதாமகி வர்க்கத்தாராலும், கேதுவாகில் மாதாமகி வர்க்கத்தாராலும் ஜாதகனுக்குப் பீடையுண்டாகும்.

(34) (1) 6–வது பாவாதிபதி, (2) 6-வது பாவத்திலிருக்கும் கிரகம் (3) 6-வது பாவத்தைப் பார்க்கும் கிரகம் ஆகிய இம் மூன்று வித கிரகங்களும் பாபிகளாயிருந்து பலவீனமாயிருந்தால் ஜாதகனுக்குச சத்துருக்களால் பீடையும், நோய்களால் பீடையும், பசு முதலிய கால்நடைகள் நாசமும், தனநாசமும் உண்டாகும். ஆனல் இந்த மூன்றுவித கிரகங்களும் சுபர்களாகி பலமாகவிருந்தால் ஜாதகனுக்குக் குதிரை, பசு முதலிய கால் நடைகளையும், தனத்தையும், இராஜயோகத்தையும், பலவித பதார்த்தங்களுடன் கூடிய ராஜபோஜனத்தையும் நோயற்ற வாழ்வையும் சருவர்; சத்துருக்களையும் நாசஞ் செய்வர்.

(35) (1) 6-வது பாவாதிபதி (2) 6-வது பாவத்திலிருக்கும் கிரகம் (3) 6-வது பாவத்தைப் பார்க்கும் கிரகம் ஆகிய இம் மூன்று வித கிரகங்களுக்குள இரண்டுவித கிரகங்கள மிகவும் சுபர்களாகி மிகவும் பலவானகளாகி மேற்கு திரிகோண பாலங்களில் அல்லது

லக்கினத்திலிருந்து: --

11-வது பாவத்தில் இருந்தால் ஜாதகனுக்கு வியாதி முதலிய பீடை கிடையாது. இம மூன்று விதமான கிரகங்களில் ஒரு விதமான கிரகம் மிகவும் வலிவாயிருந்தால் ஜாதகனுக்குக் காயம், சத்துரு பீடை துக்கம் இவைகள் கொஞ்சமாக நேரிடும். கிரகத்திற்குத் தகுந்தபடி அந்தந்த காரக வர்க்க சத்துருக்களால் (அதாவது 33-வது அபிட்டத்தில் சொல்லிய காரகவர்க்கச் சத்துருக்களால்) ஜாதகனுக்குத் துக்கமும் அல்லது சுகமும் நேரிடும்.

(36) 6-வது பாவாதிபதி ஒரு பாபக் கிரகத்துடன் கூடி (1) லக்கின பாவத்திலிருந்தால் ஜாதகனுக்குத் தேக ரிணம், புண் காயம் முதலியன உண்டாகும், (2) 5-வது பாவத்திலிருந்தால் ஜாதகனுடைய பிதாவுக்கும் அல்லது ஜாதகனுடைய புத்திரனுக்கும் அல்லது இருவருக்கும் (3) 4-வது பாவத்திலிருந்தால் ஜாதகனுடைய தாயாருக்கும் (4) 7-வது பாவத்திலிருந்தால் ஜாதகனுடைய மனைவிக்கும் (5) 9-வது பாவத்திலிருந்தால் ஜாதகனுடைய அம்மானுக்கும் (6) 3-வது பாவத்திலிருந்தால் ஜாதகனுடைய இளைய சகோதரனுக்கும (7) 11-வது பாவத்திலிருந்தால் ஜாதகனுடைய மூத்த சகோதரனுக்கும் தேகரிணம், புண், காயம் முதலியன உண்டாகும்.

(37) 6-வது பாவாதிபதி ஒரு பாபக்கிரகத்துடன் கூடி 8-வது பாவத்திலிருந்தால் ஜாதகனுக்கு ஆசனத்தில் மூலம், பௌத்திரம் முதலிய ரோகம் நேரிடும்.

(38) ரிணத்தை உண்டுபண்ணக் கூடிய கிரகம் சூரியனுகில் ஜாதகனுடைய தலையிலும், சந்திரனுகில் முகத்திலும், செவ்வாயாகில் கழுத்திலும், புதனுகில் நாபியின் கிழும், ரிணத்தை உண்டுபண்ணும். குருவாகில் நோயற்ற தண்மையை உண்டுபண்ணும். சுக்கிரனுகில் கண்மோயையும், சனியும் இராகுவுமாகில் வாதரோகத்தையும், கேதுவாகில் வயிற்று நோயையும் உண்டுபண்ணுவார்கள்.

(39) 6-வது பாவம் புதன் வீடாகி லக்கின பாவாதிபதி 6-வது பாவத்திலிருந்து புதனால் சம்மந்தப்படப்பட்டாலும் அல்லது பார்க்கப் பட்டாலும் ஜாதகனுக்கு மர்மஸ்தானத்தில் ரிணம் உண்டாகும்.

(40) இராகு சுக்கிரனால் பார்க்கப்பட்டு இருக்கும் ராசி லக்கினத்திலிருந்து எத்தனையாவது ராசியோ அத்தனை எண் பேஷத்திலிருந்து

லக்கினத்திலிருந்து:—

எண்ணை வருகின்ற ராசி எதுவோ அந்த ராசிக்குரிய அவயவத்தில் ஜாதகனுக்கு மச்சம், மருவு, வடிவு முதலியன இருக்கும். 1-வது அத்தியாயம் 7-வது அபிட்டம் பார்க்கவும்.

(41) 6—வது பாவாதிபதி சனியுடனும் ராகுவுடனும் கூடியிருந்தால் ஜாதகனுக்கு குதிரை, பசு முதலியவைகளால் ஆபத்து நேரிடும்.

(42) 6-வது பாவாதிபதி பலவீனமாகி பாபக்கிரகத்தால் பார்க்கப்பட்டாலும் அல்லது இரண்டு பாபக் கிரகங்களுக் கிடையிலிருந்தாலும் ஜாதகனுக்குச் சத்துரு பீடை உண்டாகும்.

(43) 6—வது பாவாதிபதி தூஸ் ஸ்தானங்களாகிய 8-வது 12-வது பாவங்களில் இருந்து நீச்சத்திலாகிலும் அல்லது அஸ்தங்கத படைந்தாகிலும் அல்லது சத்துரு வீட்டிலாகிலும் இருந்து லக்கின பாவாதிபதி வலிவாயிருந்தால் ஜாதகனுடைய சத்துருக்கள் நாசமடைவார்கள்.

(44) 6-வது பாவாதிபதி கோபுராம்சம் முதலிய உயர்ந்த வைசேஷிகாம்சங்களிலிருந்து சூரியனால் பார்க்கப்பட்டு லக்கின பாவாதிபதி பூர்ண பலத்துடன் இருந்தால் ஜாதகன் கன்னுடைய ஞாதி (பங்காளி)களுக்கு உபகாரம் செய்பவனாகவிருப்பான்.

(103) ஏழாவது பாவம்.

லக்கினத்திலிருந்து:—

(1) 7-வது பாவாதிபதி லக்கின பாவத்திலாவது அல்லது 7-வது பாவத்திலாவது இருந்தால் ஜாதகன் அயலார் மனைவிகளிடம் பற்றுடையவன், தந்திரன், சாமர்த்தியவான், தைரிய முடையவன், ஹிருதயத்தில் (மார்பில்) வாதரோக முடையவன்.

(2) 7-வது பாவாதிபதி 6-வது, 8-வது பாவத்திலிருந்தால் ஜாதகனுடைய மனைவி நோயாளியாய் இருப்பாள். ஜாதகன் கோபியாயிருப்பான். எந்த இடத்திலும் சுகமற்றவனாயிருப்பான்.

(3) 7-வது பாவாதிபதி 9-வது, 2-வது பாவத்திலிருந்தால் ஜாதகன் பல ஸ்திரீகள் சேர்க்கையுள்ளவன், நற்காரியம் செய்பவன், தீர்க்காயுஸுடையவன் முக்கியமாய் ஸ்திரீகளிடத்தில் பணத்தைச் செலுத்துபவன்.

லக்கினத்திலிருந்து:—

(4) 7-வது பாவாதிபதி 10-வது, 4-வது பாவத்திலிருந்தால் ஜாதகனுடைய மனைவி பதிவிரதையாயிருக்கமாட்டாள். ஜாதகன் தர்மம் நிறைந்த மனதுடையவன்; சத்தியத்துடன் கூடியவன், முக்கியமாய்ப் பல் நோயுடையவன்.

(5) 7-வது பாவாதிபதி 3-வது, 11-வது பாவத்திலிருந்தால் ஜாதகனுடைய புத்திரனிறப்பான். ஒரு சமயம் பெண்ஜாதி இறந்திருப்பாள். ஜாதகனுடைய கடைசி காலத்தில் கஷ்டத்தால் புத்திரனுண்டு.

(6) 7-வது பாவாதிபதி 12-வது பாவத்திலிருந்தால் ஜாதகன் தரித்திரன், வெகு லோபி, மனைவி அழகிய மகளைப் பெறுபவன். மனைவி தனமற்றவளும் துணியால் ஜீவிப்பவளுமாயிருப்பாள்.

(7) 7-வது பாவாதிபதி 5-வது பாவத்திலிருந்தால் ஜாதகன் எல்லா நற்குணங்களும் நிறைந்தவனுகவும், மான முடையவனுகவும், தனவானுகவும், எல்லா பொருளும் நிறைந்தவனுகவும் எப்போதும் சந்தோஷமுடையவனுகவும் இருப்பான்.

(8) 7-வது பாவாதிபதி சுவ கேஷத்திரமாயுள்ள பாவம் அல்லாத 6-வது, 8-வது, 12-வது பாவத்தில் உச்சமாயில்லாமல் இருந்தால் ஜாதகனுடைய மனைவி நோயாளியாயிருப்பாள்.

(9) 7-வது பாவத்தில் சுக்கிரனிருந்தால் ஜாதகன் அதிக காமியாவன்.

(10) 7-வது பாவாதிபதி சுபக்கிரகத்துடன் கூடியாவது அல்லது சுபரால் பார்க்கப்பட்டாவது இருந்தாலும் அல்லது பூர்ண பலத்துடனிருந்தாலும் ஜாதகன் நல்ல குணங்களுடையவன். தனதான்ய முடையவன், போகமுள்ளவன்.

(11) 7-வது பாவாதிபதி சனி விட்டில் பரம உசத்திலிருந்து சுபக்கிரகங்களால் பார்க்கப்பட்டிருந்தால் ஜாதகன் அநேக மனைவிகளுடையவன். இது ரிஷப, துலா லக்கின ஜாதகங்களுக்குப் பொருந்தும் என்றறியவும்.

(12) 7-வது பாவத்தில் சூரியனிருந்தால் ஜாதகன் மலடியையும் கூனைச்சந்திரன் இருந்தால் விபசார முடையவளையும், செவ்வாயிருந்

லக்கினத்திலிருந்து:—

தால் தீட்டுள்ள ஸ்திரீயையும், மலடியையும், புதன் இருந்தால் தாலி யையும், தாழ்ந்த ஜாதி ஸ்திரீயையும், வணிகஜாதி ஸ்திரீயையும், குரு வாவது, சுக்கிரனாவது இருந்தால் பிராமண ஸ்திரீயையும், கர்ப்ப ஸ்திரீ யையும், சனி, இராகு, கேது இருந்தால் தாழ்ந்தஜாதி ஸ்திரீயையும், தீட்டுள்ள ஸ்திரீயையும் சேருவான்.

(13) 7-வது பாவாதிபதி உச்சத்திலிருந்து, 7-வது பாவத்தில் சுபர் இருந்தும், லக்கின பாவாதிபதி பலவானில் ஜாதகன் மனைவி யுடன் கூடியிருப்பான்.

(14) 7-வது பாவாதிபதி சத்துரு நீச்சவீட்டிலிருந்தாலும், அஸ் தங்கதமா யிருந்தாலும், பாபரால் பார்க்கப்பட்டாலும், 7-வது பாவத் தில் பாபர் இருந்தாலும் ஜாதகனுடைய மனைவிக்கு நாசமுண்டு.

(15) 7-வது பாவாதிபதி 6-வது, 8-வது, 12-வது பாவத்தில் பலவீனனாயிருந்தாலும், அல்லது நீச்சத்திலிருந்தாலும் அல்லது நீச்ச கிரகத்துடன் கூடியிருந்தாலும் ஜாதகனுடைய மனைவிக்கு நாச முண்டு.

(16) 7-வது பாவத்தில் சந்திரனிருந்து, 7-வது பாவாதிபதி 12-வது பாவத்திலிருந்தாலும், சுக்கிரன் பலவீனமாகிலும். ஜாதக னுக்கு மனைவி சுகம் கிடையாது.

(17) 7-வது பாவாதிபதி நீச்சமாகிலும் அல்லது பாப கிரக மாகிலும், அல்லது பாபர்வீட்டிலிருந்தாலும், அல்லது பாபியுடன் கூடினாலும், 7-வது பாவத்தில் அதி கிரக மிருந்தாலும் ஜாதகனுக்கு இரண்டு மனைவி உண்டு.

(18) 7-வது பாவத்தில் செவ்வாய், சுக்கிரன் இருந்தாலும், சனி இருந்தாலும், லக்கின பாவாதிபதி 8-வது பாவத்திலிருந்தாலும், ஜாதகனுக்கு மூன்று மனைவி உண்டு.

(19) 7-வது பாவாதிபதி பலமாகவிருந்து, சுக்கிரன் உபய ராசியி லிருந்து, சுக்கிரன் இருக்கும் உபய ராசியாதிபதி தன் உச்ச சுவ க்ஷேத்திரத்திலிருந்தால் ஜாதகனுக்கு அநேக மனைவிகளுண்டு.

(20) 7-வது பாவாதிபதி 9-வது பாவத்திலிருந்து சுக்கிரன் தன் உச்ச சுவக்ஷேத்திரத்திலிருந்தால் ஜாதகனுக்கு பெருப்பாலும் 5-வது, 9-வது வயதில் விவாகமுண்டாகும்.

லக்கினத்திலிருந்து:—

(21) 7-வது பாவத்தில் சூரியன் இருந்தாலும் அல்லது 7-வது பாவாதிபதி சுக்கிரனுடன் கூடியாவது அல்லது சுக்கிரனால் பார்க்கப் பட்டாவது இருந்தால் ஜாதகனுக்கு 7-வது, 11-வது வயதில் விவாகம் நேரிடும்.

(22) 7-வது பாவாதிபதி 11-வது பாவத்திலிருந்து சுக்கிரன் 2-வது பாவத்திலிருந்தால் ஜாதகனுக்குப் பெரும்பாலும் 10–வது, 16-வது வயதில் விவாகம் சம்பவிக்கும்.

(23) சுக்கிரன் லக்கின பாவத்திலிருந்து லக்கின பாவாதிபதி சனிவீட்டிலிருந்தால் ஜாதகனுக்கு 11-வது வயதில் விவாகம் உண்டு.

(24) சுக்கிரன் லக்கின பாவத்திற்குக் கேந்திர பாவத்திலிருந்து சுக்கிரனுக்கு 7-வது பாவத்தில் சனி இருந்தால் பெரும்பாலும் ஜாதகனுக்கு 12–வது, 19-வது வயதில் விவாகமுண்டு.

(25) சந்திரனுக்கு 7-வது பாவத்தில் சுக்கிரன் இருந்தாலும், சுக்கிரனுக்கு 7-வது பாவத்தில் சனி இருந்தாலும் ஜாதகனுக்கு 18-வது வயதில் விவாகமுண்டு.

(26) இலக்கினத்திலிருந்து 2-வது பாவாதிபதி 11-வது பாவத்திலிருந்து லக்கின பாவாதிபதி 10-வது பாவத்திலிருந்தால் ஜாதகனுக்கு 15–வது வயதில் விவாகம் நேரிடும்.

(27) இலக்கினத்திலிருந்து 2-வது பாவாதிபதி 11-வது பாவத்திலிருந்து, 11-வது பாவாதிபதி 2–வது பாவத்திலிருந்தால் ஜாதகனுக்கு 13-வது வயதில் விவாகம் உண்டு.

(28) லக்கினத்திலிருந்து 2-வது பாவத்தில் சுக்கிரனிருந்து சுக்கிரனிருக்கும் ராசியாதிபதி செவ்வாயுடன் கூடினால் ஜாதகனுக்கு 22-வது, 27-வது வயதில் விவாகமுண்டு.

(29) லக்கின பாவாதிபதி, 7-வது பாவம் எந்த ராசியிலிருக்கின்றதோ அந்த ராசியில் நவாம்சைச் சக்கரத்திலிருந்து 7-வது பாவாதிபதி 12–வது பாவத்திலிருந்தால் ஜாதகனுக்கு 23–வது அல்லது 26-வது வயதில் விவாகமுண்டு.

(30) லக்கினத்திலிருந்து 7–வது பாவாதிபதி, 8-வது பாவராசி எதுவோ அந்த ராசியில் நவாம்சைசக்கரத்திலிருந்து, சுக்கிரன் லக்

லக்கினத்திலிருந்து:—

கின ராசி எதுவோ அந்த ராசியில் நவாம்சை சக்கிரத்தில் இருந்தால் ஜாதகனுக்கு 25-வது அல்லது 33-வது வயதில் விவாகம் நேரிடும்.

(31) சுக்கிரன் 9-வது பாவத்திலிருந்து, சுக்கிரனுக்கு 12-வது பாவத்தில் இராகு இருந்தால் ஜாதகனுக்கு 31-வது, 33—வது வயதில் விவாகம் நேரிடும்.

(32) 9-வது பாவத்திற்கு 7—வது பாவத்தில் சுக்கிரனிருந்து அந்தச் சுக்கிரனுக்கு 7-வது பாவத்தில் லக்கினத்திற்கு 7-வது பாவாதிபதி இருந்தால் ஜாதகனுக்கு 27-வது அல்லது 30—வது வயதில் விவாகமுண்டு.

(33) லக்கினத்திற்கு 7-வது பாவத்தில் நீச்சக் கிரகமிருந்து சுக்கிரன் 6-வது, 8-வது பாவத்திலிருந்தால் ஜாதகனுக்கு 18—வது, 33-வது வயதில் களத்திர நாசமுண்டாகும்.

(34) 7-வது பாவாதிபதி 6-வது பாவத்திலிருந்து, 12—வது பாவாதிபதி 7-வது பாவத்திலிருந்தால் ஜாதகனுக்கு 19-வது வயதில் களத்திர நாசமுண்டாகும்.

(35) 7-வது பாவத்தில் செவ்வாயிருந்து, 2-வது பாவத்தில் ராகு இருந்தால் ஜாதகனுக்கு விவாகமான மூன்று தினத்திற்குள் பாம்பு கடித்து மனைவி மரணமடைவாள்.

(36) சுக்கிரன் 8-வது பாவத்திலிருந்து சுக்கிரனிருக்கும் வீட்டிற்குடையோன் சனிவீட்டிலிருந்தால ஜாதகனுக்கு 12-வது, 21-வது வயதில் களத்திர நாசமுண்டு.

(37) லக்கின பாவாதிபதி நீச்ச ஸ்தானத்திலிருந்து, 2-வது பாவாதிபதி 8-வது பாவத்திலிருந்தால் ஜாதகனுக்கு 13-வது வயதில் களத்திரம் மரணமாவாள்.

(38) சுக்கிரனுக்கு 7—வது பாவத்தில் சந்திரனிருந்து, சந்திரனுக்கு 7-வது பாவத்தில் புதனிருந்து, 8-வது பாவாதிபதி 5-வது பாவத்திலிருந்தால் ஜாதகனுக்கு முதல் விவாகம் 10-வது வயதிலும், இரண்டாவது விவாகம் 22-வது வயதிலும், மூன்றாவது விவாகம் 33-வது வயதிலும் நடக்கும்.

லக்கினத்திலிருந்து:—

(39) லக்கினத்திலிருந்து 7-வது பாவத்தில் சுக்கிரனிருந்தாலும் அல்லது 7-வது பாவாதிபதி இராகு, கேது சம்மந்தப்பட்டாலும் ஜாதகன் ஸ்திரீலோலன். ஆனால் 7-வது பாவம் சுபராசியானாலும் அல்லது 7-வது பாவத்தில் குரு இருந்தாலும் அல்லது 7-வது பாவத்தைக் குரு பார்த்தாலும் இந்தப் பலன் நடக்காது. அதாவது ஜாதகன் ஸ்திரீலோலனாக விருக்கமாட்டான்.

(40) 7-வது பாவாதிபதி 6, 8, 12-வது பாவத்திலிருந்து பாபர் வீட்டிலிருந்து, பாபக்கிரகத்தால் பார்க்கப்பட்டாலும் அல்லது சம்மந்தப்பட்டாலும், 7-வது பாவத்தின் பலன்கள் மத்திமமானவையாயிருக்கும். இதற்கு மாறுபாடாக விருந்தால் பலன்களும் மாறுபாடாக விருக்கும்.

(41) 7-வது பாவாதிபதி பாபராசியில் சுக்கிரனுடன்கூடி இருந்தால் ஜாதகன் அதிக காம முடையவன். 7-வது பாவாதிபதி சுபராசியில் சுபருடன் கூடியிருந்தால் ஜாதகன் வெள்ளாக்குடை தரித்த அரசனுவான்.

(42) 7-வது பாவத்தில் ஒரு பாபக்கிரகம் 1-வது, 2-வது, 6-வது பாவாதிபதிகளுடன் இருந்தால் ஜாதகன் அன்னியருடைய மனைவிகளிடத்தில் சகவாச முள்ளவன்.

(43) 7-வது பாவாதிபதி, 6-வது பாவாதிபதி, ஒரு பாபர் இவர்கள் 9-வது பாவத்திலிருந்தால் ஜாதகனுக்குக் காமாக்கினி மீறி இருக்கும்.

(44) 7-வது, 2-வது, 10 வது பாவாதிபதிகள் 10-வது பாவத்திலிருந்தால் ஜாதகன் ஸ்திரீலோலன்.

(45) 7-வது, 5-வது, 9-வது பாவாதிபதிகள் 6, 8, 12-வது பாவத்திலிருந்து, 5-வது பாவத்தைப் பாபர் பார்த்தால் ஜாதகனுக்குப் புத்திரனில்லை.

(46) 7-வது பாவத்தில் குருவும், புதனுமாவது அல்லது சந்திரனும், சுக்கிரனுமாவது இருந்தால் ஜாதகன் அநேக ஸ்திரீகளை அனுபவிப்பான்.

லக்கினத்திலிருந்து:--

(47) 7–வது பாவத்தில் சுக்கிரன் மிகவும் வலிவாயிருந்தால் ஜாதகன் அநேக ஸ்திரீகளுக்கு நாயகனுவான்.

(48) 7-வது பாவத்தில் சுக்கிரனும், செவ்வாயும் இருந்தால் ஜாதகனுக்குக் களத்திரமில்லை.

(49) 5-வது, 9-வது பாவத்தில் சுக்கிரனும் செவ்வாயுமிருந்தால் ஜாதகனுக்குக் களத்திரமில்லை.

(50) 6-வது பாவத்தில் சந்திரனும் சுக்கிரனு மிருந்தால் ஜாதகனுக்கு ஒரே புத்திரனுண்டு

(51) 7-வது, 12-வது, 1-வது பாவத்தில் பாபர் இருந்து சந்திரன் 5-வது பாவகதிலிருந்தால் ஜாதகன் மலடிக்குக் கணவனுகவாவது அல்லது மனைவியற்றவனுகவாவது இருப்பான்.

(52) 7-வது, 1-வது பாவங்களில் சுக்கிரனும, சூரியனும் கூடி இருந்தால் ஜாதகனுடைய மனைவி மலடியாவாள்.

(53) 7-வது பாவத்தில் லக்கின பாவாதிபதி சுபருடன் கூடி இருந்தால் ஜாதகன் நல்ல வம்சத்திற் பிறந்த நல்ல மனைவியை உடையவன்.

(54) 7-வது பாவம் பாப ராசியாகி அந்த 7-வது பாவத்தில் லக்கின பாவாதிபதி யிருந்தால் ஜாதகன் கெட்ட வம்சத்திற் பிறந்த மனைவியை உடையவன்.

(55) 7–வது பாவத்தில் பாபிகள் அல்லது உப கிரகங்கள் இருந்தால் ஜாதகனுடைய மனைவி கெட்டவளாயிருப்பாள். கெட்ட நடவடிக்கை யுள்ளவளா யிருப்பாள்.

(56) 7-வது பாவத்தில் புதனிருந்தால் ஜாதகனுடைய மனைவி நல்லப் புதிரன்களைப் பெறுவள்.

(57) 7-வது பாவத்தில் குருவிருந்தால் ஜாதகனுடைய மனைவி நற்குண முடையவள், நல்ல புத்திரர்களைப் பெறுவள்.

(58) 7-வது பாவத்தில் சுக்கிரன் வலிவடனிருந்தால் ஜாதகனுடைய மனைவி சுகமும் சமபத்தும் பாக்கியமு முடையவள்.

லக்கினத்திலிருந்து:—

(59) 7-வது பாவாதிபதி அல்லது 5-வது பாவாதிபதி வலிவா யிருந்து சுபரால் பார்க்கப்பட்டு 6-வது பாவாதிபதியால் பார்க்கப்பட் டாலும் அல்லது சம்மந்தப்பட்டாலும் ஜாதகனுடைய மனைவிக்குச் சோர புருஷனால் புத்திரனுண்டு; ஜாதகனுக்கு எத்தனை மனைவிகள் இருந்தபோதிலும் புத்திரன் தன்னால் உண்டாகமாட்டான்.

(60) 7-வது பாவத்தில் குரு நீச்சமாக விருந்தால் ஜாதகனுக்குக் களத்திர நாசமுண்டு.

(61) 7-வது பாவம் மீனமாகி அதில் சனி இருந்தால் ஜாதகனுக் களத்திர நாசமுண்டு.

(62) 7-வது அல்லது 8-வது பாவத்தில் பாவக்கிரக மிருந்து, 12-வது பாவத்தில் செவ்வாயிருந்து, 12-வது பாவாதிபதி கண்ணுக் குத் தெரியாவல் (அதாவது அஸ்தங்கத மடைந்து) இருந்தால் ஜாதக னுக்கு இரண்டாவது களத்திரமுண்டு,

(63) 7-வது பாவாதிபதியுடன் லக்கின பாவாதிபதி கூடியால் ஜாதகனுடைய முதல் களத்திரம் நல்ல அழகு, நல்ல குணமுடையவ ளாவள்.

(64) 7-வது பாவாதிபதியுடன் லக்கின பாவாதிபதி கூடி, லக் கின பாவாதிபதி அஸ்தங்கத மடைந்திருந்தால் ஜாதகனுடைய மனைவி அழகற்றவளாயும், சொரூப குணமுள்ளவளாயும் இருப்பாள்.

(65) 7-வது பாவாதிபதியைப் பாபர் பார்த்திருந்து 2-வது பாவத்தில் பல பாபிகளிருந்தால் ஜாதகனுக்கு மூன்று களத்திர முண்டு.

(66) 7-வது பாவாதிபதி கேந்திர கோண பாவத்தில் இருந்து தன் உச்ச, சுவ க்ஷேத்திரத்திலாவது மித்துரு ராசியிலாவது இருந் தாலும் அல்லது 10-வது பாவாதிபதியாலாவது பார்க்கப்பட்டாலும் ஜாதகனுக்கு அநேக களத்திரமுண்டு.

(67) 7-வது பாவாதிபதி கேந்தி பாவத்திலிருந்து சுபக் கிரகத் தால் பார்க்கப்பட்டாவது அல்லது சுப நவாம்சையிலாவது அல்லது சுப ராசியிலாவது இருந்தால் ஜாதகனுடைய மனைவி பதிவிரதையாயும் விசித முடையவளாயும் இருப்பாள்.

லக்கினத்திலிருந்து:—

(68) 7-வது பாவாதிபதி புதனுகி அந்தப் புதன் நீச்சத்திலாகி லும் அல்லது பாபவர்க்கத்திலாகிலும் இருந்து பாபக்கிரகம் சம்மந்த மடைந்து 6-வது, 8-வது பாவத்திலிருந்து பாபர் மத்தியிலாவது இருந்து அல்லது பாபரால் பார்க்கப்பட்டால் ஜாதகனுடைய மனைவி தன புருஷனைக் கொல்பவள், குலத்தை நாசஞ் செய்பவள்.

(69) 7-வது பாவாதிபதி சுப நவாம்சையிலிருந்து சுபரால் பார்க் கப்பட்டால் ஜாதகனுடைய மனைவி நல்ல வம்சத்தி லுதித்தவள்.

(70) 7-வது பாவாதிபதி பாப வர்க்கத்திலிருந்து பாபருடன் சம்மந்தப்பட்டிருந்தால் ஜாதகனுடைய மனைவி துஷ்ட வம்சத்தி லுதித்தவள்.

(71) 7-வது பாவத்தி லொரு கிரக மிருக்கும்பட்சத்தில், சுக்கிரனு டன் எத்தனை கிரகங்கள் கூடி இருக்கின்றனவோ அத்தனை மனைவி கள் ஜாதகனுக்கு உண்டு. இங்கு சுக்கிரனுடன் கூடி இருக்குங் கிர கங்களில் எந்தக் கிரகம் தன் உச்ச சுவகேஷத்திரத்திலிருக்கின்றதோ அந்தக் கிரகத்தைக் கணக்கிடாமல் விட்டுவிடவேண்டும்.

(72) 7-வது பாவாதிபதி 2-வது பாவத்தில் சுக்கிரனுடைய இராசியி லிருக்கும் பட்சத்தில், சுகிரனுடன் எத்தனை கிரகம் இருக் கின்றதோ அத்தனை களத்திரங்கள் ஜாதகனுக்கு உண்டு.

(73) 7-வது பாவாதிபதியுடனும், சுக்கிரனுடனும் எத்தனை கிர கங்கள் இருக்கின்றனவோ அத்தனை மனைவிகள் ஜாதனுக்கு உண்டு.

(74) 7-வது, 2-வது பாவாதிபதிகளுடன், 6-வது அல்லது 8-வது அல்லது 12-வது பாவாதிபதியாகி எத்தனை பலவீனமான கிரகங்கள் கூடி இருக்கின்றனவோ அத்தனை மனைவிகள் ஜாதகனுக்கு நாசமாவார்.

(75) 7-வது, 2-வது பாவாதிபதிகளுடன் எத்தனை சுபக்கிரகங்க ளிருக்கின்றனவோ அத்தனை களத்திரங்களுடன் ஜாதகன் சுகமாய் ஜீவிப்பான்.

(76) 7-வது அல்லது 2-வது பாவாதிபதியுடன் ஒரு கிரகம் பூர்ண பலத்துடன் இருந்தால் ஜாதகனுக்கு ஒரே தாரமுண்டு.

(77) லக்கின பாவாதிபதியினுடைய ஸ்புடத்தையும், லக்கினத்திலிருந்து 7–வது பாவாதிபதியினுடைய ஸ்புடத்தையுங் கூட்ட வருகின்ற ஸ்புடத்தில் கோட்சார காலத்தில் குரு சஞ்சாரஞ் செய்யும் போது ஜாதகனுக்கு விவாகம் நேரிடும்.

உதாரணமாக நமது உதாரண ஜாதகத்திற்கு லக்கின பாவாதிபதியாகிய சுக்கிரனுடைய ஸ்புடமாகிய பாகை 204-32 கலையையும், லக்கினத்திலிருந்து 7–வது பாவாதிபதியாகிய செவ்வாயினுடைய ஸ்புடமாகிய பாகை 206-30 கலையையும் கூட்ட வருகின்ற பாகை 411-02 கலை அதாவது (360 பாகையைக் கழிக்க வருகின்ற) 51 பாகை–02 கலையில் கோட்சாரத்தில் குரு சஞ்சாரஞ் செய்யும் போது ஜாதகனுக்கு விவாகம் நேரிடும். பாகை 51-02 கலை என்பது ரிஷப ராசியில் 21 பாகை–02 கலை யானபடியால் கோட்சாரத்தில் குரு ரிஷப ராசியில் 21 பாகை–02 கலையில் வரும்போது ஜாதகனுக்கு விவாகம் நேரிடும்.

(78) சந்திரன் இருக்கின்ற ராசி அதிபதியினுடைய ஸ்புடத்தையும், சந்திரனுக்கு 7-வது பாவாதிபதியினுடைய ஸ்புடத்தையுங் கூட்ட வருகின்ற ஸ்புடத்தில் கோட்சாரகாலத்தில் குரு சஞ்சாரஞ் செய்யும்போது ஜாதகனுக்கு விவாகம் நேரிடும்.

உதாரணமாக நமது உதாரண ஜாதகத்திற்கு சந்திரன் இருக்கின்ற ராசி அதிபதியாகிய சந்திரன் ஸ்புடமாகிய பாகை 118-10 கலையுடன், பாவச் சக்கரத்தில் சந்திரனுக்கு 7-வது பாவத்தின் அதிபதியாகிய சனியினுடைய ஸ்புடமாகிய பாகை 230-27 கலையையுங் கூட்ட வருகின்ற பாகை 348–37 கலையில் கோட்சாரத்தில் குரு சஞ்சாரஞ் செய்யும்போது ஜாதகனுக்கு விவாகம் நேரிடும்.

குறிப்பு:—76-வது, 78–வது அயிட்டங்களில் சொல்லிய இரண்டு வழிகளில் 77–வது அயிட்டத்தில் சொல்லிய வழி விசேஷமானது. இவ்விரண்டு வழிகள் பிரகாரம் கணித்து வரும் ராசியில் அல்லது அந்த ராசிக்குத் திரிகோண ராசியில் குரு கோட்சாரத்தில் சஞ்சாரஞ் செய்யும்போது விவாகம் நேரிடும்.

(79) லக்கினத்திலிருந்து 7-வது பாவாதிபதி இருக்கின்ற ராசியின் அதிபதி. அம்சத்தின் அதிபதி இந்த இரண்டு கிரகத்தில் எந்தக் கிரகம் அதிக வலிவுள்ளதோ அந்தக் கிரகத்தில் தசாபுக்தி காலங்களில் கோட்சாரத்தில் 7-வது பாவாதிபதி இருக்கின்ற ராசி, அம்சம்

இவைகளின் திரிகோண இராசியில் குரு சஞ்சாரஞ் செய்யுப்போது ஜாதகனுக்கு விவாகம் நேரிடும்.

(80) சுக்கிரன், சந்திரன் இவ்விரண்டு கிரகங்களில் எந்தக் கிரகம் அதிக வலிவா யிருக்கின்றதோ அந்தக் கிரகத்தின் தெசாகாலத்தில் கோட்சாரத்தில் குரு 7–வது பாவாதிபதி இருக்கும் ராசி அம்சம் இவைகளுக்குத் திரிகோணத்தில் சஞ்சாரஞ் செய்யும்போது ஜாதகனுக்கு விவாகம் நேரிடும்-

(81) லக்கினத்திலிருந்து 7-வது பாவாதிபதி சுக்கிரனுடன் சம்மந்தப்பட்டிருந்தால், 7-வது பாவாதிபதியின் தெசாபுக்தி காலங்களில் ஜாதகனுக்கு விவாகம் நேரிடும். இது சந்தற்பப்படாவிட்டால்,

(82) லக்கினத்திலிருந்து 2-வது பாவாதிபதி இருக்கின்ற ராசி யாதிபதியின் தெசாபுக்தி காலங்களில் ஜாதகனுக்கு விவாகம் நேரிடும். இதுவும் சந்தற்பப் படாவிட்டால்,

(83) லக்கினத்திலிருந்து 10–வது பாவாதிபதியின் தெசாபுக்தி காலங்களில் ஜாதகனுக்கு விவாகம் நேரிடும். இதுவும் சந்தற்பப்படாவிட்டால்

(84) லக்கினத்திலிருந்து 9-வது பாவாதிபதியின் தெசாபுக்தி காலங்களில் ஜாதகனுக்கு விவாகம் நேரிடும். இதுவும் சந்தற்பப் படாவிட்டால்

(85) லக்கினத்திலிருந்து 7-வது பாவாதிபதியின்கூட சம்மந்தப்பட்ட கிரகத்தினுடைய தெசாபுக்தி காலத்திலாவது அல்லது 7-வது பாவத்திலிருக்கின்ற கிரகத்தினுடைய தெசாபுக்தி காலத்திலாவது ஜாதகனுக்கு விவாகம் நேரிடும்.

(86) விவாகத்தைச் செய்விக்கக்கூடிய கிரகம் சுபக்கிரகமாகி சுப ராசியிலிருந்தால், அந்தக் கிரகத்தின் தெசையின் ஆரம்பத்திலேயே ஜாதகனுக்கு விவாகம் நேரிடும்.

(87) விவாகத்தைச் செய்விக்கக்கூடிய கிரகம் சுபக்கிரகமாகி பாபராசியிலிருந்தால், அந்தக் கிரகத்தின் தெசையின் மத்திய பாகத்தில் ஜாதகனுக்கு விவாகம் நேரிடும்.

(88) விவாகத்தைச் செய்விக்கக்கூடிய கிரகம் பாபக் கிரகமாகி பாபராசியில் இருந்தால் அந்தக் கிரகத்தின் தெசையின் முடிவில் ஜாதகனுக்கு விவாகம் நேரிடும்.

(89) விவாகத்தைச் செய்விக்கக்கூடிய கிரகம் சுபக்கிரகத்துடன் கூடி சுப ராசியிலிருந்தால் அந்தக் கிரகத்தின் தசை பூராகவும் ஜாதகனுடைய விவாகத்திற்கு அதுகூலமான தசை.

(90) லக்கின பாவாதிபதி இருக்கும் நவாம்சையின் அதிபதி இருக்கின்ற ராசிக்கு இரண்டாவது ராசியில் கோட்சாரத்தில் குருவும், சந்திரனும் சஞ்சாரஞ் செய்யும்போது ஜாதகனுக்கு விவாகம் நேரிடும்.

(91) லக்கினத்திலிருந்து 7–வது பாவாதிபதி அல்லது சுக்கிரன் இருக்கின்ற ராசியில் கோட்சாரத்தில் குரு சஞ்சாரஞ் செய்யும்போது ஜாதகனுக்கு விவாகம் நேரிடும்.

(92) லக்கினத்திலிருந்து 7–வது பாவாதிபதி அல்லது சுக்கிரன் இருக்கின்ற ராசிக்குக் கேந்திரத்தில் கோட்சாரத்தில் குருவும், சந்திரனும் ஒன்றுக்கூடி சஞ்சாரஞ் செய்யும்போது ஜாதகனுக்கு விவாகம் நேரிடும்.

(93) சுக்கிரனிலிருந்து 7–வது பாவத்திற்குரிய கிரகத்தின் திக்கிலிருந்து ஜாதகனுக்கு மனைவி நேரிடும்.

(94) லக்கினத்திலிருந்து 7-வது பாவத்தில் சூரியனிருந்தால் ஜாதகனுடைய மனைவி மிகவும் கடினபாகவும் வலிவாகவும் உள்ள ஸ்தனங்களுடையவள்.

(95) லக்கினத்திலிருந்து 7–வது பாவாதிபதி கேந்திரத்தில் சந்திரன், அல்லது புதன் அல்லது குரு அல்லது சுக்கிரனுடன் கூடி இருந்தால் ஜாதகனுடைய மனைவி பருத்த விசாலமான ஸ்தனங்களுடையவள்.

(96) லக்கினத்திலிருந்து 7-வது பாவத்தில் செவ்வாயிருந்தால் ஜாதகனுடைய மனைவி வரண்ட சுருங்கிய ஸ்தனங்களுடையவள்.

(97) லக்கினத்திலிருந்து 7–வது பாவத்தில் சனி, ராகு, கேது அல்லது குளிகன் இருந்தால் ஜாதகனுடைய மனைவி பருத்து தொங்குகின்ற ஸ்தனங்களுடையவள்.

(98) லக்கினத்திலிருந்து 7-வது பாவத்தில் தூமாதி பஞ்ச கிரகங்களில் ஒருவர் இருந்தாலும் அல்லது 7-வது பாவாதிபதி 6, 8, 12-வது பாவங்களிலிருந்தாலும் ஜாதகனுடைய மனைவிக்கு ஸ்தனங்கள் அகோரமாய் இருக்கும்.

(99) லக்கினத்திலிருந்து 2–வது, 7-வது பாவாதிபதிகள் சுக்கிரனுடன் கூடி 3, 6, 8, 12-வது பாவத்திலிருந்தால் ஜாதகனுக்கு அநேக களத்திரங்கள் மரணமாகும். ஆனால் 2-வது, 7-வது பாவாதிபதிகள் வலிவாய் இருந்தால் ஜாதகனுடைய மனைவி ஜீவித்திருப்பாள்.

(100) லக்கினத்திலிருந்து 7-வது பாவாதிபதி சுக்கிரனுடன் கூடினாலும் அல்லது சுக்கிரனுடைய வீட்டில் இருந்தாலும் ஜாதகன் தன் மனைவியிடத்தில் அதிகப் பிரியமுள்ளவனாய் இருப்பான்.

(101) லக்கினத்திலிருந்து 2-வது பாவாதிபதி சுக்கிரனுடன் கூடினாலும் அல்லது சுக்கிரனுடைய வீட்டில் இருந்தாலும் ஜாதகன் தன் மனைவியிடத்தில் அதிகப் பிரியமுள்ளவனாய் இருப்பான்.

(102) லக்கினத்திலிருந்து 7-வது பாவத்தில் சுக்கிரனும் 10-வது பாவாதிபதியுமிருந்தால் ஜாதகன் தன் மனைவியிடத்தில் அதிகப் பிரியமுள்ளவனாய் இருப்பான்.

(103) லக்கினத்திலிருந்து 7-வது பாவாதிபதி குரு அல்லது சுக்கிரனாகில் ஜாதகனுடைய மனைவியின் யோனி விசாலமாகவும் அழகாயும் இருக்கும். 7–வது பாவாதிபதி சனி, சந்திரன், புதன் இவர்களுள் மத்தியிலிருந்தால் ஜாதகனுடைய மனைவியின் யோனி குறுகி இருக்கும்.

(104) லக்கின பாவாதிபதி இருக்கும் அம்சையின் அதிபதியின் ராசியில் கோட்சாரத்தில் குரு சஞ்சாரஞ் செய்யும்போது ஜாதகனுக்கும் அவன் மனைவிக்கும் நிஷேக முகூர்த்தம் நடக்கும்.

(105) லக்கின பாவத்தின் ஸ்புடத்தை, லக்கினத்திலிருந்து 7-வது பாவாதிபதியினுடைய ஸ்புடத்திலிருந்து கழிக்க வருகின்ற ராசியில் அல்லது அந்த ராசியின் திரிகோண ராசியில் குரு கோட்சாரத்தில் சஞ்சாரஞ் செய்யும்போது ஜாதகனுடைய மனைவி மரண மடைவாள்.

(106) லக்கினத்திலிருந்து 7–வது பாவாதிபதியினுடைய ஸ்புடத்தை லக்கின பாவ ஸ்புடத்திலிருந்து கழிக்க வருகின்ற ராசியில் குரு கோட்சாரத்தில் சஞ்சாரஞ் செய்யும்போது ஜாதகனுடைய மனைவி மரண மடைவாள்.

(104) எட்டாவது பாவம்.

(1) லக்கினத்திலிருந்து 8–வது பாவாதிபதி லக்கின பாவத்தி லும் 7–வது பாவத்திலுமிருந்தால் ஜாதகன் இரு மனைவியுடையவன், விஷ்ணு துரோகம் செய்பவன், ரிணரோக முடையவன், சுவல்ப தனமுடையவன், இழந்த பொருளை அடையாதவன்.

(2) லக்கினத்திலிருந்து 8–வது பாவாதிபதி 2–வது பாவத்தி லிருந்தால் ஜாதகன் கைபலம் குறைந்தவன்.

(3) லக்கினத்திலிருந்து 8–வது பாவாதிபதி 3–வது பாவத்தி லிருந்தால் ஜாதகன் பந்துக்கள் விரோத முடையவன் அல்லது பந்துக் கள் அற்றவன்.

(4) லக்கினத்திலிருந்து 8–வது பாவாதிபதி 4–வது பாவத்தி லிருந்தால் ஜாதகன் பந்துக்களற்றவன், தொழில் முறையில் லோபி, மாதா பிதா மரணமாவர். சுவல்ப காலத்தில் பயம் நேரிடும்.

(5) லக்கினத்திலிருந்து 8–வது பாவாதிபதி 5–வது, 11–வது பாவத்திலிருந்தால் ஜாதகன் விருத்தியடையாதவன். வீட்டில் தனம் நிலைக்காது. ஜாதகன் ஸ்திர புத்தியுள்ளவன்.

(6) லக்கினத்திலிருந்து 8–வது பாவாதிபதி 6–வது, 12–வது பாவத்திலிருந்தால் ஜாதகன் எப்போதும் ரோக முடையவன், வாலி பத்தில் ஜலம், சர்ப்பம் இவைகளால் பயம்.

(7) லக்கினத்திலிருந்து 8–வது பாவாதிபதி 8–வது பாவத்தி லிருந்தால் ஜாதகனுடைய மனைவி அயலானை அடைவாள், ஜாதகன் சூதாடுபவன், திருடன், விரோதமாய்ப் பேசுபவன், பெரியோர்களை நிந்திப்பவன்.

(8) லக்கினத்திலிருந்து 8–வது பாவாதிபதி 9–வது பாவத்தி லிருந்தால் ஜாதகன் மஹா பாபி, நாஸ்திகன், புத்திரசோக முடைய வன், அல்லது மனைவி மலடியாயிருப்பாள். ஜாதகன் அயலான் பொருள், மனைவி இவைகளின்பேரில் ஆசையுள்ளவன்.

(9) லக்கினத்திலிருந்து 8–வது பாவாதிபதி 10–வது பாவத்தி லிருந்தால் ஜாதகன் இளவயதில் கஷ்டமும் முதுவயதில் சௌக்கிய மும் உடையவன்.

(10) லக்கின பாவாதிபதி, 8–வது பாவாதிபதி, 10–வது பாவாதி பதி, சனி இவர்களைக்கொண்டு ஜாதகனுடைய ஆயுள் நிர்ணயஞ்

செய்யவேண்டியது. இவர்கள் பாபக்கிரகத்துடன் கூடி இருக்கில் ஜாதகன் அற்பாயுளுடையவன்.

(11) லக்கின பாவாதிபதி 8–வது பாவத்திலிருந்து, 6–வது பாவாதிபதி 6–வது, 12–வது பாவத்திலுமிருந்து, 12-வது பாவாதிபதி 6-வது, 12-வது பாவத்திலுமிருந்தால் ஜாதகனுக்குத் தீர்க்காயுளுண்டு.

(12) லக்கின பாவாதிபதியும், 8-வது பாவாதிபதியும், சுவ கேஷத்திரத்திலாகிலும், தன் அம்சத்திலாகிலும். மித்துரு வீட்டிலாகிலும், இருந்தால் ஜாதகனுக்குத் தீர்க்காயுளுண்டு.

(13) லக்கின பாவாதிபதி 8-வது பாவாதிபதி, 10-வது பாவாதிபதி, சனி இவர்கள் கேந்திர திரிகோண பாவங்களில் அல்லது 11-வது பாவத்திலாவது இருந்தால் ஜாதகனுக்குத் தீர்க்காயுளுண்டு.

(14) லக்கினத்திலிருந்து 8-வது பாவாதிபதி கேந்திர பாவத்திலிருந்து, லக்கின பாவாதிபதி பலமற்றிருந்தால் ஜாதகனுக்கு வயது 20. இவனுக்குப் பரமாயுள் 32 வருஷந்தான்.

(15) லக்கினத்திலிருந்து 8–வது பாவாதிபதி நீச்சஸ்தானத்திலிருந்து 8-வது பாவத்தில் பாபக்கிரகமிருந்து, லக்கின பாவாதிபதி பலமற்றவனுயிருந்தால் ஜாதகனுக்கு அற்பாயுளுண்டு.

(16) லக்கினத்திலிருந்து 8-வது பாவாதிபதி பாபருடன் கூடியிருந்து, 8-வது பாவத்தில் பாபக்கிரகமிருந்து, 12-வது பாவத்தில் பாபக்கிரகம் இருந்தால் ஜாதகன் பிறந்தவுடன் மரணமாவான்.

(17) லக்கினத்திலிருந்து 8-வது பாவாதிபதி லக்கின பாவத்தில் நீச்சமாய் இருந்து, கேந்திர திரிகோண பாவங்களில் பாபரிருந்து 6-வது, 8-வது பாவங்களில் சுபரும் இருந்தால், ஜாதகன் பிறந்தவுடன் மரணமாவான்.

(18) லக்கினத்திலிருந்து 8-வது பாவாதிபதி பாபருடன் கூடியிருந்து, 8–வது பாவத்தில் பாபர் இருந்து, 9-வது பாவத்தில் பாபர் இருந்தால் ஜாதகனுக்கு அற்பாயுள்.

(19) லக்கினத்திலிருந்து 8–வது பாவாதிபதி 8–வது பாவத்திலிருந்து, சந்திரன் பாபருடன் கூடியிருந்து சுபரால் பார்க்கப்படாமலிருந்தால் ஜாதகன் பிறந்த ஒரு மாதத்திற்குள் மரணமாவான்.

(20) லக்கின பாவாதிபதி உச்சத்திலிருந்து, சந்திரன் 11-வது பாவத்திலிருந்து, லக்கினத்திற்கு 8-வது பாவத்தில் குரு இருந்தால் ஜாதகனுக்குத் தீர்க்காயுள்.

(21) லக்கினத்திற்கு 8-வது பாவாதிபதி பாபருடன் கூடி 12-வது அல்லது 6-வது பாவத்திலிருந்தால் ஜாதகனுக்கு அற்பாயுள்.

(22) லக்கினத்திற்கு 8-வது பாவாதிபதி பலவீனமாகி லக்கின பாவாதிபதியுடன் கூடி 6-வது, அல்லது 12-வது பாவத்தில் இருந்தால் ஜாதகனுக்கு அற்பாயுள்.

(23) லக்கினத்திலிருந்து 8-வது பாவாதிபதி சுவகேஷத்திரத்திலிருந்தால் ஜாதகன் தீர்க்காயுளுடையவன்.

(24) லக்கின பாவாதிபதியும் 8-வது பாவாதிபதியும் 6-வது அல்லது 8-வது பாவத்தில் இருந்தால் ஜாதகன் தீர்க்காயுளும் பலமுமுடையவன்.

(25) லக்கின பாவாதிபதி, 8-வது பாவாதிபதி, 10-வது பாவாதிபதி கேந்திர திரிகோண பாவங்களிலாவது, 11-வது பாவத்திலாவது இருந்தால் ஜாதகனுக்குத் தீர்க்காயுள் உண்டு.

(26) லக்கின பாவாதிபதி, 8-வது பாவாதிபதி, 10-வது பாவாதிபதி இவர்கள் பலவீனமாகிச் சனியுடன் சேர்ந்திருந்தால் ஜாதகனுக்கு அற்பாயுள்.

(27) லக்கின பாவாதிபதி, 8-வது பாவாதிபதி, 10-வது பாவாதிபதி இவர்கள் எல்லாம் பலவந்தர்களாகிச் சனி சம்மந்தமில்லாமல் இருந்தால் ஜாதகனுக்குத் தீர்க்காயுள். இம் மூன்று பாவாதிபதிகளில் இருவர் பலமுடையவர்களானால் ஜாதகனுக்கு மத்திமாயுள். இம்மூன்று பாவாதிபதிகளில் ஒருவர் பலமுடையவரானால் ஜாதகனுக்கு அற்பாயுள், இம்மூன்று பாவாதிபதிகளில் ஒருவர்கூட பலமில்லாமலிருந்தால் ஜாதகன் ஆயுளற்றவன்.

(28) லக்கினத்திலிருந்து 8-வது பாவாதிபதியுடன் சம்மந்தப்பட்டுப் பாப கேஷத்திரத்தில் அல்லது 6-வது, 8-வது, 12-வது பாவத்திலிருந்தால் ஜாதகனுக்கு அற்பாயுள்.

(29) லக்கினத்திலிருந்து 8-வது பாவாதிபதி சுபருடன் கூடினாலும், அல்லது சுபரால் பார்க்கப்பட்டாலும், அல்லது சுபருடைய

ராசியிலிருந்தாலும, அல்லது 8-வது பாவத்திலிருந்தாலும் ஜாதகனுக்குத் தீர்க்காயுள்.

(30) லக்கின பாவாதிபதி 8-வது பாவத்திலிருந்தாலும், அல்லது 8-வது பாவாதிபதி பாபருடன் கூடி அல்லது பாபரால் பார்க்கப் பட்டு அஸ்தங்கத தோஷ மடைந்திருந்தாலும், அல்லது 6-வது பாவத்திலிருந்தாலும் ஜாதகன் ஆயுளும், பலமும் அற்றவன்.

(31) லக்கின பாவத்திலிருந்து 8-வது பாவாதிபதி உச்சத்திலிருந்தாலும் அல்லது சுபருடன் சம்மந்தப்பட்டிருந்தாலும், அல்லது கேந்திர திரிகோண பாவத்திலிருந்தாலும், அல்லது 8-வது பாவத்திலிருந்தாலும் ஜாதகனுக்குத் தீர்க்காயுள்.

(32) லக்கின பாவாதிபதி லக்கின பாவத்திலிருந்தால் ஜாதகனுக்குத் தீர்க்காயுள்.

(33) லக்கினத்திலிருந்து 12-வது பாவாதிபதி சுவகேஷத்திரத்தில் பலமாயிருந்தால் ஜாதகன் தீர்க்காயுளும் சுகமு முடையவன்.

(34) லக்கின பாவாதிபதியும் 8-வது பாவாதிபதியும் பலமாகி கேந்திரத்திலிருந்தால் ஜாதகன் தீர்க்காயுளும் சுகமு முடையவன்.

(35) புதன் அல்லது குரு, அல்லது சுக்கிரன் சந்திரனுடன்கூடியாவது அல்லது சந்திரனைப் பார்த்தாவது இருந்தாலும், அல்லது லக்கின பாவத்தையாவது, 8-வது பாவத்தையாவது, அல்லது 10-வது பாவத்தையாவது பார்த்தாலும் அல்லது அடைந்தாலும் ஜாதகன் தீர்ககாயுளும் ஆரோக்கியமு முடையவன்.

(36) லக்கினத்திலிருந்து 8-வது பாவாதிபதி 6-வது, 8-வது, அல்லது 12-வது பாவதத்திலிருந்தால், (1) 8-வது பாவாதிபதியின் தெசாபுக்தி காலங்களிலாவது, (2) சனி இருக்கும் ராசியாதிபன் தெசையில் 8-வது பாவாதிபதியின் புந்தியிலாவது அல்லது (3) 8-வது பாவாதிபதியின் தெசையில் 8-வது பாவத்தில் இருக்கும் கிரகத்தின் புக்தியிலாவது ஜாதகனுக்கு மரணம் நேரிடும். இந்த மூன்றுவித விதிகளில் எந்த விதியை அனுசரிக்கவேண்டும் என்பதை இங்கு சொல்லப்பட்ட கிரகங்களின் பலத்தையும், தூர்பலத்தையும் ஆராய்ச்சி செய்து யோசித்து அறியவேண்டும்.

(37) லக்கின பாவாதிபதி 6-வது, 8-வது, அல்லது 12-வது பாவத்தில் ராகு அல்லது கேதுவுடன் கூடியிருந்தால், லக்கினாதிபதி

யுடனுவது அல்லது 8-வது பாவாதிபதியுடனுவது கூடியிருக்கிற கிரகத்தின் தசையில் ராகு புக்தி, ராகு அந்தரத்தில் ஜாதகனுக்கு மாரகம் நேரிடும்.

(38) லக்கின பாவாதிபதி 6-வது, 8-வது, அல்லது 12-வது பாவத்தில் ராகு அல்லது கேதுவுடன் கூடியிருந்தால் அப்போது லக்கினாதிபதியுடனுவது அல்லது 8-வது பாவாதிபதியுடனுவது கிரகம் கூடியிராமலிருந்தால், லக்கினாதிபதி, 8-வது பாவாதிபதி இருக்கின்ற ராசியின் அதிபதியின் தசையில் ராகு புக்தி, ராகு அந்தரத்தில் ஜாதகனுக்கு மாரகம் நேரிடும்.

(39) லக்கின பாவாதிபதி, 8-வது பாவாதிபதி, 10-வது பாவாதிபதி, சனி இவர்களில் பலவீனமான கிரகம் இராகுவுடன் கூடியிருந்தால், இந்தப் பலவீனமான கிரகத்தின் தசை புக்தி காலங்களில் அல்லது இந்தப் பலவீனமான கிரகத்தைப் பார்க்கும் கிரகத்தின் தசா புக்தி காலங்களில் அல்லது இந்தப் பலவீனமான கிரகத்துடன் சம்மந்தப்பட்ட கிரகத்தின் தசா, புக்தி காலங்களில் ஜாதகனுக்கு மரணம் நேரிடும்.

(40) லக்கினத்திலிருந்து 8-வது பாவாதிபதி 8-வது பாவத்திலிருந்தால் அந்த பாவாதிபதியின் தசா புக்தி காலங்களில் ஜாதகனுக்கு வியாதி சம்பவிக்கும். லக்கின பாவத்தில் லக்கின பாவாதிபதி இருந்தால் லக்கின பாவாதிபதியின் தசா புக்தி காலங்களில் ஜாதகனுக்கு வியாதி சம்பவிக்கும் இங்கு சொல்லிய 8-வது பாவாதிபதி லக்கின பாவாதிபதி தசா, புக்திகளில் ஜாதகன் வியாதியால் பீடிக்கப்பட்டுக் கடையில் வியாதி நிவர்த்தியாகி தேக ஆரோக்கியமும் சந்தோஷமும் அடைவான். 8-வது பாவாதிபதி வலிவாய் இருந்தால் லக்கின பாவாதிபதியின் தசையில் ஜாதகனுக்கு மாரகம் நேரிடும்.

(41) ஜாதகனுடைய ஜெனன காலத்தில் லக்கின பாவம் பல மற்றதாகவிருந்தால் லக்கினாதிபதி 8-வது பாவாதிபதி இவர்களின் தசைகளில் ஜாதகனுக்கு அதிக கஷ்டமுண்டாகும். இதற்குப் பின்னல் ஜாதகனுக்கு வெகு சுகமுண்டு. லக்கின பாவாதிபதி வலிவாய் இருந்தால் 8-வது பாவாதிபதியின் தசா காலத்தில் ஜாதகனுக்கு மாரகம் நேரிடும்.

(42) லக்கின பாவத்திற்கும் 8-வது பாவத்திற்கும் அதிபதிகள் பலவானுகி கேந்திர திரிகோணபாவங்களிலிருந்தால் அவர்களுடன் சம்

மந்தமான கிரகத்தின் தசாகாலங்களில் ஜாதகனுக்கு ரோகம், அப வாதம், நிந்தை முதலியன நேரும்.

(43) லக்கின பாவாதிபதியும் 8-வது பாவாதிபதியும் இதர கிர கத்துடன் கூடி கேந்திர திரிகோண பாவங்களிலிருந்தால் 8-வது பாவத்திலிருக்கின்ற கிரகத்தின் தசாகாலத்தில் ஜாதகனுக்கு மாரகம் நேரிடும்.

(44) லக்கின பாவாதிபதியும் 8-வது பாவாதிபதியும் இதர கிர கத்துடன் கூடி கேந்திர திரிகோண பாவங்களிலிருந்து, 8-வது பாவத்தில் கிரகம் இல்லாமல் இருக்கும்போது லக்கினபாவத்தில் இருக்கின்ற கிரகத்தின் தசையில் ஜாதகனுக்கு மாரகம் நேரிடும். இந்த மாரகம் நேரிடுங்காலத்தில் லக்கின பாவத்திலாவது அல்லது 8-வது பாவத்திலாவது கோட்சாரத்தில் சனி வரவேண்டும். அதாவது இவ்விதமாக தசையும் சம்பவித்து, சனியும் கோட்சாரத்தில் அடைந்து இருக்கும் காலத்தில் ஜாதகனுக்கு மாரகம் நேரிடும்.

(45) லக்கின பாவாதிபதி 8-வது பாவாதிபதி இவர்களுடன் கூடி இருக்கும் கிரகங்களில் எந்தக் கிரகம் பலமற்றதோ அந்தக் கிர கத்தின் தசாபுக்தி காலங்களில் ஜாதகனுக்கு மாரகம் நேரிடும்.

(46) ஐந்தாவது பாவாதிபதியுடன் சம்மந்தப்பட்ட கிரகங் களினுடைய உடு தசா எண்களைக்கூட்ட வருகின்ற தொகையை 12-ஆல் வகுக்க வருகின்ற மிச்சம் எத்தனையோ அத்தனை ராசி மேஷத்திலிருந்து எண்ண வருகின்ற ராசியில் சூரியன் வரும் மாதத்தில் ஜாதகனுக்கு மரணம் நேரிடும். இதனால் ஜாதகனுக்கு மரணம் நேரி டும் மாதத்தை அறியலாம். ஐந்தாவது பாவாதிபதியுடன் எந்தக் கிரகமும் சம்மந்தப்படாமல் இருந்தால் 5-வது பாவாதிபதியின் உடு தசா எண்ணை 12-ஆல் வகுக்க முடியுமானால் வகுத்து வரும் மிச்சம் எத்தனையோ அத்தனை ராசி மேஷத்திலிருந்து எண்ண வருகின்ற ராசியில் சூரியன் சஞ்சரிக்கும் மாதத்தில் ஜாதகன் மரணமாவான். 12-ஆல் வகுக்க முடியாவிட்டால் வகுக்க முடியாத எண்ணையே மிச்ச எண்ணாகப் பாவித்து மாதத்தை முன்போல நிர்ணயிக்கவும்.

(47) ஜென்ம லக்கின பாவராசி சுரோதய ராசியாய் இருக்கும் போது அந்த லக்கின பாவராசி சர ராசியானால் 2-வது பாவாதிபதி யின் தசாபுக்தி காலங்களிலும், ஸ்திர ராசியானால் லக்கின பாவாதி பதியின் தசாபுக்தி காலங்களிலும், உபயராசியானால் ராகு தசா

புக்தி காலங்களிலும் ஜாதகனுக்கு மாரகம் நேரிடும். சிரோதய ராசிகள் என்பது சிம்மம், கன்னி, துலாம், விருச்சிகம், கும்பம் ஆகும்.

(48) ஜென்ம லக்கின பாவராசி பிருஷ்டோதய ராசியாய் இருக்கும்போது அந்த லக்கின ராசி சர ராசியானால் திரேக்காண லக்கினாதிபதியின் (அதாவது திரேக்காண லக்கினம் எந்த ராசியில் இருக்கின்றதோ அந்த ராசியாதிபதியின்) தசாபுக்தி காலங்களிலும், ஸ்திர ராசியானால் திரேகாண லக்கினாதிபதியால் பார்க்கப்பட்ட கிரகத்தின் தசா, புக்தி காலங்களிலும், உபய ராசியானால் திரேக்காண லக்கினாதிபதியுடன் சம்மந்தப்பட்ட கிரகத்தின் தசாபுக்தி காலங்களில் ஜாதகனுக்கு மாரகம் நேரிடும். பிருஷ்டோதய ராசிகள் என்பது மேஷம், ரிஷபம், கடகம், தனுசு, மகரம் ஆகும். மீனம் சிர பிருஷ்டோதய ராசியாகும்.

(105) ஒன்பதாவது பாவம்.

(1) 9-ம் பாவாதிபதியும், குருவும் சுபவர்க்கத்திலிருந்து, 9-வது பாவத்தில் சுபரிருந்தால் ஜாதகன் நல்ல பாக்கியமுடையவன்.

(2) 9-வது பாவத்தில் இருக்கிற கிரகம் பாபி, அல்லது சத்துரு, அல்லது நீச்ச கிரகம் அல்லது அஸ்தங்கத கிரகமாய் இருந்தால் ஜாதகன் கீர்த்தி, பாக்கியம், தர்மம் இவைகள் இல்லாதவனாயிருப்பான்.

(3) 9-வது பாவத்திலிருக்கிற பாப கிரகம் உச்சம், சுவகேஷத்திரம், மித்துருகேஷத்திரம் இவைகளில் இருந்தால் ஜாதகனுக்கு எப்போதும் நன்மையைத் தருகின்றது.

(4) 9-வது பாவத்தில் அந்த பாவாதிபதி அல்லது சுபர் இருந்தாலும் அல்லது அதை அந்த பாவாதிபதி அல்லது சுபர் பார்த்தாலும் ஜாதகனுக்குச் சுகமுண்டு, பாக்கியமுண்டு.

(5) 9-வது பாவத்தில் சந்திரன் அல்லது சுக்கிரன் பாபியுடன் சம்மந்தப்பட்டு இருந்தால் ஜாதகன் ஆசாரியன் முதலிய பெரியோர்களுடைய பகைவிமார்களிடத்தில் பற்றுடையவனாயிருப்பான்.

(6) 9-டாவத்திலிருக்கின்ற குரு:—

சூரியனால் பார்க்கப்பட்டால் ஜாதகன் பிரபுவாவான்.
சந்திரனால் பார்க்கப்பட்டால் ஜாதகன் சுகவானுவான்.
செவ்வாயால் பார்க்கப்பட்டால் ஜாதகன் மந்திரியாவான்.

புதனுல் பார்க்கப்பட்டால் ஜாதகன் தனவானுவான்.

சுக்கிரனுல் பார்க்கப்பட்டால் ஜாதகன் அஸ்வங்களுக் கதிபதி யாவன்.

சனியால் பார்க்கப்பட்டால் ஜாதகன் ஒட்டகம் முதலிய வாக னங்களுக் கதிபதியாவான்.

(7) 9–வது பாவத்திலிருக்கின்ற குநவை:—

சூரியனும், சந்திரனும் இருவருமாகப் பார்த்தால் ஜாதகன் புத்தி மான், தனவான், யானை, குதிரை, பசு முதலிய ஐஸ்வரிய முடையவன். தனதான்யாதி சமூர்த்தியாயுடையவன், தாய் தகப்பனுக்குப் பிரியமுள்ளவன். இராஜ தல்லிபன், அநேகவிதமான பாக்கியமுடையவன்.

சூரியனும், செவ்வாயும் இருவருமாய்ப் பார்த்தால் ஜாதகன் சேனை, வாகனங்கள், ரத்தினங்களுடையவன், ஐஸ்வரிய முடையவன்.

சூரியனும், புதனும் இருவருமாய்ப் பார்த்தால் ஜாதகன் வித் தியா விவாதத்தில் பிரியமுள்ளவன், அதிக தனவந்தன், சௌந்தர்ய முடையவன், சிரேஷ்டமான பாரியாளும் ஆப ரணமும் உடையவன், பண்டிதன்.

சூரியனும், சுக்கிரனும் இருவருமாகப் பார்த்தால் விநயமாகப் பேசுபவன், பசு, ஆடு, யானை முதலியவை யுடையவன் அதிக நீதியை யுடையவன்.

சூரியனும், சனியும் இருவருமாகப் பார்த்தால் ஜாதகன் நல்ல குணமுடையவன், புத்திமான், அநேக கிராமமுடையவன், கியாதியை யுடையவன், தனவந்தன்.

சந்திரனும், செவ்வாயும் இருவருமாகப் பார்த்தால் கீர்த்தி, சேனை, தனம், சுகம் இவைகளுடையவன்.

சந்திரனும், புதனும் இருவருமாகப் பார்த்தால் ஜாதகன் குடும்ப சுகம், சிரேஷ்டமான சய்யாசனுதிகளாகிய படுக்கை முத லியவைகளும் உடையவன், உத்தமமான கிருகம் உடைய வன், போகவான், தேஜஸ்டையவன், உத்தமமான புத்தி யுடையவன்.

சந்திரனும், சுக்கிரனும் இருவருமாகப் பார்த்தால் ஜாதகன் சந்ததி யில்லாதவன், சூரன், தனவான், கர்மங்களைச் சுறுசுறுப்பாய்ச் செய்பவன், பரதார இச்சையுடையவன்.

சந்திரனும், சனியும் இருவருமாகப் பார்த்தால் ஜாதகன் நல்ல குணவான், அந்திய தேசத்தில் விவாகஞ் செய்பவன், பூர்ணாயுசுடையவன்.

செவ்வாயுப், புதனும் இருவருமாகப் பார்த்தால் ஜாதகன் நல்ல சுபாவமுடையவன், நல்ல குணமுடையவன்.

செவ்வாயும், சுக்கிரனும் இருவருமாகப் பார்த்தால் ஜாதகன் வித்தை, தனம் முதலியவை யுடையவன்.

செவ்வாயும், சனியும் இருவருமாகப் பார்த்தால் ஜாதகன் கெட்ட குணமுடையவன், அன்னிய தேசத்திலிருப்பவன், துன்மார்க்க சகவாசமுடையவன்.

புதனும், சுக்கிரனும் இருவருமாகப் பார்த்தால் ஜாதகன் வித்வான், நல்ல குணமுடையவன், சிற்ப சாஸ்திரமறிந்தவன், நல்ல சகவாசமுடையவன்.

புதனும், சனியும் இருவருமாகப் பார்த்தால் ஜாதகன் சௌக்கர்யமுடையவன், வித்வான்.

சுக்கிரனும், சனியும் இருவருமாகப் பார்த்தால் ஜாதகன் இராஜ சிரேஷ்டன், அதிக தனமுடையவன்.

(8) எல்லா சுபக்கிரகங்களும் 9-வது பாவத்தில் இருந்தால் ஜாதகனுக்குத் தனமும், பூமியும் நீடிழிகாலம் நிலைத்திருக்கும், ஜாதகன் பூர்ணாயுசுள்ளவன்.

(9) 9-வது பாவத்திலிருக்கிற சந்திரனைச் சனி, புதன், செவ்வாய் இவர்கள் பார்த்தால் ஜாதகன் அரசனுவான்.

(10) 9-வது பாவத்திலிருக்கிற கிரகம் உச்சமாய் இருந்து சுபக்கிரகத்தால் பார்க்கப்பட்டால் ஜாதகன் பூபதியாவான்.

9-ல் துவிகிரகயோக பலன்கள் 21.

(11) 9-வது பாவத்தில் சூரியனும், சந்திரனும் சேர்ந்திருந்தால் ஜாதகன் தனவானுவான், நேத்திர ரோகமுடையவன், அற்பாயுளுடையவன்.

(12) 9-வது பாவத்தில் சூரியனும், செவ்வாயும் சேர்ந்திருந்தால் ஜாதகன் துக்கமுடையவன், வாக்குவாதஞ் செய்வதில் ஆசையுடைய வன், அரசர்களுக்குப் பிரியன், நிபுணன்.

(13) 9-வது பாவத்தில் சூரியனும், புதனும் சேர்ந்திருந்தால் ஜாதகன் அநேக விரோதிகளுடையவன், துக்கமுடையவன், சதா சோகமுடையவன், நிபுணன்.

(14) 9-வது பாவத்தில் சூரியனும், குருவும் சேர்ந்திருந்தால் ஜாதகன் தன் பிதாருக்குப் பிரியமுள்ளவன், தனவான், தீர்க்காயு ளுடையவன், பிதாரும் தனவான்.

(15) 9-வது பாவத்தில் சூரியனும், சுக்கிரனும் சேர்ந்திருந்தால் ஜாதகன் சோகமுடையவன்.

(16) 9-வது பாவத்தில் சூரியனும், சனியும் சேர்ந்திருந்தால் ஜாதகனும் பிதாரும் வயிற்று நோயுள்ளவர்கள், ஜாதகன் அற்பாயு ளுடையவன்.

(17) 9-வது பாவத்தில் சந்திரனும், செவ்வாயும் சேர்ந்திருந்தால் ஜாதகன் மாதாவைக் கொல்பவன், விரணமான தேகத்தை யுடைய வன், செல்வத்தின்பேரில் அதிருப்தியும், விரக்தியு முடையவன்.

(18) 9-வது பாவத்தில் சந்திரனும், புதனும் சேர்ந்திருந்தால் ஜாதகன் வாக்குச சாதுர்யமுடையவன், அநேக சாஸ்திரங்கள் அறிந் தவன், அங்க ஹீனன், உத்தமமான ஜாதியிற் பிறந்தவன், பிரசித்தி யுடையவன்.

(19) 9-வது பாவத்தில் சந்திரனும், குருவும் சேர்ந்திருந்தால் ஜாதகன், திரமான மனதுடையவன், தனவான், கீர்த்திமான், சுக வான்.

(20) 9-வது பாவத்தில் சந்திரனும், சுக்கிரனும் சேர்ந்திருந்தால் ஜாதகன் வியாதியுடையவன், மாற்றுந்தாய்க்குப் பிரியன், ஜாதகனு டைய ஸ்திரீ விபசாரஞ் செய்வாள்.

(21) 9-வது பாவத்தில் சந்திரனும், சனியும் சேர்ந்திருந்தால் ஜாதகன் அதர்ம குணமுடையவன், தன் மாதா தன் ஜாதியிலிருந்து விலக்கப்பட்டவன்.

(22) 9-வது பாவத்தில் செவ்வாயும், புதனும் சேர்ந்திருந்தால் ஜாதகன் சாஸ்திர மறிந்தவன், போகவான், சுகவான்.

(23) 9-வது பாவத்தில் செவ்வாயும், குருவும் சேர்ந்திருந்தால் ஜாதகன் தனவான், கௌரவமுடையவன்.

(24) 9-வது பாவத்தில் செவ்வாயும், சுக்கிரனும் சேர்ந்திருந்தால் ஜாதகன் இரண்டு களத்திரமுடையவன், அன்னிய தேசத்தில் வாக்கு வாதஞ் செய்பவன், குரூரமுடையவன், ஸ்திரீ துவேஷமுடையவன்.

(25) 9-வது பாவத்தில் செவ்வாயும், சனியும் சேர்ந்திருந்தால் ஜாதகன் பாபி, பரஸ்திரீ லோலன், துராச்சாரமுடையவன்.

(26) 9-வது பாவத்தில் புதனும், குருவும் சேர்ந்திருந்தால் ஜாதகன் புத்திமான், தனவான், வித்வான், விந்தையாய்ப் பேசுபவன்.

(27) 9-வது பாவத்தில் புதனும், சுக்கிரனும் சேர்ந்திருந்தால் ஜாதகன் புத்திமான், சங்கீதப் பிரியன், பண்டிதன், மோகி, தைரிய வான்.

(28) 9-வது பாவத்தில் புதனும் சனியும் சேர்ந்திருந்தால் ஜாதகன் ரோகி, அதிக தனவான், அசத்தியவான்.

(29) 9-வது பாவத்தில் குருவும் சுக்கிரனும் சேர்ந்திருந்தால் ஜாதகன் பூர்ணபுருஷனுடையவன், அதிக தனவான், மனிதர்களுக்குள் சிரேஷ்டமானவன், அநேகவித சௌக்கிய முடையவன், மேன்மை யான வாக்குடையவன்.

(30) 9-வது பாவத்தில் குருவும் சனியும் சேர்ந்திருந்தால் ஜாதகன் ரோகி, ரத்தின தனமுடையவன்.

(31) 9-வது பாவத்தில் சுக்கிரனும், சனியும் சேர்ந்திருந்தால் ஜாதகன் இராஜாவுக்குச் சமானமானவன், ரோகி, அநேக புத்திரர்க ளுடையவன், இராஜப் பிரியன்.

9-ல் திரிகிரக யோக பலன்கள் 3.

(32) 9-வது பாவத்தில் சூரியனும், சந்திரனும், செவ்வாயும் சேர்ந்திருந்தால் ஜாதகன் அங்க ஹீனன், பிதுரு மாதுரு ஹீனன்.

(33) 9-வது பாவத்தில் சூரியனும், சந்திரனும், புதனும் சேர்ந் திருந்தால் ஜாதகன் ஹிம்சை செய்பவன், அதர்மவான், அநேக துக்க முடையவன்.

(34) 9-வது பாவத்தில் சூரியனும், சந்திரனும், குருவும் சேர்ந்திருந்தால் ஜாதகன் அதிக சுகமுடையவன், அநேக வாகனமுடையவன், உத்தமன், தனவான்.

(35) 9-வது பாவத்தில் சூரியனும், சந்திரனும், சுக்கிரனும் சேர்ந்திருந்தால் ஜாதகன் அரசர்களிடத்தில் பிரியமாய் இருப்பான். பெண்களுடைய கலகத்தில் பிரியத்துடன் தலையிட்டுக்கொள்வதால் தனவிரையஞ் செய்பவன், சுகமற்றவன், நீதி அறிந்தவன், பிரியத்துடனும் அன்புடனும் பேசுபவன்.

(36) 9-வது பாவத்தில் சூரியனும், சந்திரனும், சனியும் சேர்ந்திருந்தால் ஜாதகன் நல்லவர்களுக்கு விரோதி, ஈனத்தொழில் செய்பவன்.

(37) 9-வது பாவத்தில் சூரியனும், செவ்வாயும், புதனும் சேர்ந்திருந்தால் ஜாதகன் கோபி, விவாதப் பிரியன், விஷமுடையவன், யுத்தஞ் செய்வதில் ஆசையுடையவன், அந்நிய தேசத்தில் சஞ்சாரஞ் செய்பவன்.

(38) 9-வது பாவத்தில் சூரியனும், செவ்வாயும், குருவும் சேர்ந்திருந்தால் ஜாதகன் தெய்வங்களிடத்திலும் பிதாவிடத்திலும் பிரியமுள்ளவன், புத்திரன், மௌனி, தனம் இவைகளுடையவன் தேவப் பிராம்மண பக்தியுடையவன்.

(39) 9-வது பாவத்தில் சூரியனும், செவ்வாயும், சுக்கிரனும் சேர்ந்திருந்தால் ஜாதகன் விவாதப் பிரியன், கோபி, ஸ்திரீ லோலன், பெண்களைத் தூஷிப்பவன், கலகப்பிரியன்.

(40) 9-வது பாவத்தில் சூரியனும், செவ்வாயும், சனியும் சேர்ந்திருந்தால் ஜாதகன் தரித்திரன், தோழரில்லாதவன், பிதுரைக் கொல்பவன், ஜனத்துவேஷி, சௌரியமுடையவன்.

(41) 9-வது பாவத்தில் சூரியனும், புதனும், குருவும் சேர்ந்திருந்தால் ஜாதகன் இராஜப்பிரியன், அதிக தனவான் சகல பாக்கியவான்.

(42) 9-வது பாவத்தில் சூரியனும், புதனும், சுக்கிரனும் சேர்ந்திருந்தால் ஜாதகன் அரசனுக்குச் சமானமானவன், காந்தியுடையவன், சத்துருவை நாசஞ் செய்பவன்.

(43) 9-வது பாவத்தில் சூரியனும், புதனும், சனியும் சேர்ந் திருந்தால் ஜாதகன் பாபி, பரஸ்திரீ நாயகன்.

(44) 9-வது பாவத்தில் சூரியனும், குருவும், சுக்கிரனும் சேர்ந் திருந்தால் ஜாதகன் பரஸ்திரீ நாயகன், தனவான், பண்டிதன், அநேக விஷயங்களறிந்தவன்.

(45) 9–வது பாவத்தில் சூரியனும், குருவும், சனியும் சேர்ந் திருந்தால் ஜாதகன் அதிக ஸ்திரீலோலன், உத்தமமான குலத்தில் பிறந்தவன், இராஜன், தனவான்.

(46) 9–வது பாவத்தில் சூரியனும், சுக்கிரனும், சனியும் சேர்ந் திருந்தால் ஜாதகன் ஈனன், இராஜ தண்டனை யடைபவன், மூர்க்கன், தரித்திரன், களத்திரமில்லாதவன்.

(47) 9-வது பாவத்தில் சந்திரனும், செவ்வாயும், புதனும் சேர்ந் திருந்தால் ஜாதகன் பால்யத்தில் கஷ்டமடைந்து யௌவனத்தில் சுகத்தையும், தனத்தையும் அடைவான்.

(48) 9-வது பாவத்தில் சந்திரனும், செவ்வாயும், குருவும் சேர்ந் திருந்தால் ஜாதகன் தேவாராதனை செய்யப் பிரியமுள்ளவன், குரு பக்தி யுடையவன்.

(49) 9-வது பாவத்தில் சந்திரனும், செவ்வாயும், சுக்கிரனும் சேர்ந்திருந்தால் ஜாதகனுக்குக் களத்திர நாசமுண்டு, தற்செயலால் அங்கவீனம் உண்டாகும், ஸ்திரீலோலன், ஸ்திரீகளால் தனக்குப் பல வீனமுண்டாகும். ஸ்திரீகளின் புத்தியைக் கேலக்குந் தன்மை யுடை யவன்.

(50) 9-வது பாவத்தில் சந்திரனும், செவ்வாயும், சனியும் சேர்ந் திருந்தால் ஜாதகன் நசிஞ்சின மாதுரு வம்ச முடையவன், நீச்சன், பால்யத்தில் தாயால் விட்டுவிடப்பட்டவன், அல்லது பால்யத்தில் தாய் மரிப்பாள், அரசனுக்குச் சமானமாக ஆகுபவன்.

(51) 9-வது பாவத்தில் சந்திரனும், புதனும், குருவும் சேர்ந் திருந்தால் ஜாதகன் ஆசாரியனுவான், தனவான், தன் குலத்தையும் வம்சத்தையும் விருத்தி செய்பவன், சிரேஷ்டன், அநேக மித்திர ருடையவன்.

(52) 9-வது பாவத்தில் சந்திரனும், புதனும், சுக்கிரனும் சேர்ந் திருந்தால் ஜாதகன் மாற்றுந்தாயின் பிதாவின் அநுசரணையி லிருப்ப வன், தர்ம குணமுடையவன், மித்திராளுடையவன்.

(53) 9-வது பாவத்தில் சந்திரனும், புதனும், சனியும் சேர்ந்திருந் தால் ஜாதகன் பாபி, கலகம், விவாதம் இவைகளில் பிரியமுள்ளவன், குயுக்தியுடையவன், குரூரன்.

(54) 9-வது பாவத்தில் சந்திரனும், குருவும், சுக்கிரனும் சேர்ந் திருந்தால் ஜாதகன் அரசனுவான், மகிபதியாவான்.

(55) 9-வது பாவத்தில் சந்திரனும், குருவும், சனியும் சேர்ந் திருந்தால் ஜாதகன் நற்குணவான், நற்கர்மவான், கியாதியுடையவன், பிரியமாய்ப் பேசுபவன், சர்வ சாஸ்திரமு மறிந்தவன்.

(56) 9-வது பாவத்தில் சந்திரனும், சுக்கிரனும், சனியும் சேர்ந் திருந்தால் ஜாதகன் கிருஷி மூலமாய் தனந்தேடுபவன், பாக்கியமுடை யவன், இராஜ கார்யத்தையுஞ் செய்பவன்.

(57) 9-வது பாவத்தில் செவ்வாயும், புதனும், குருவும் சேர்ந் திருந்தால் ஜாதகன் ஒரு சிற்றரசன், தனவான், தேஜசுடையவன்.

(58) 8-வது பாவத்தில் செவ்வாயும், புதனும், சுக்கிரனும் சேர்ந் திருந்தால் ஜாதகன் சாஸ்திரமறிந்தவன், சபலன், பயங்காளி, அநேக தேசத்திற் கதிபதி, கியாதியுடையவன்.

(59) 9-வது பாவத்தில் செவ்வாயும், புதனும், சனியும் சேர்ந் திருந்தால் ஜாதகன் சபை குழப்பமுள்ளவன், எப்போதும் குற்றம் கண்டுபிடித்து வாக்குவாதஞ் செய்யுந் தன்மையுடையவன், கோபி, சாஸ்திரமறிந்தவன்.

(60) 9-வது பாவத்தில் செவ்வாயும், குருவும், சுக்கிரனும் சேர்ந் திருந்தால் ஜாதகன் அதிகப் பிரசித்தியுடையவன், அதனால் அபிமான முடையவன், படித்தவர்களிடம் ஆசையுள்ளவன், அதிக தர்மஞ் செய்பவன்.

(61) 9-வது பாவத்தில் செவ்வாயும், குருவும், சனியும் சேர்ந் திருந்தால் ஜாதகன் நோயில்லாதவன், நல்ல தனவான், நற்குண முடையவன், தயை யுடையவன், பயமற்றவன்.

(62) 9-வது பாவத்தில் செவ்வாயும், சுக்கிரனும், சனியும் சேர்ந்திருந்தால் ஜாதகன் அதிக பொக்கிஷமுடையவன், யானை, குதிரைகளுடையவன், இந்நிரிபங்களை ஜெயித்தவன், சூரன்.

(63) 9-வது பாவத்தில் புதனும், குருவும், சுக்கிரனும் சேர்ந்திருந்தால் ஜாதகன் வித்தை, தர்மம் இவைகளில் கீர்த்தியுடையவன், உத்தமமான குணமுடையவன்.

(64) 9-வது பாவத்தில் புதனும், குருவும், சனியும் சேர்ந்திருந்தால் ஜாதகன் வித்வான், வாக்கு சாதுர்யவான்.

(65) 9-வது பாவத்தில் புதனும், சுக்கிரனும், சனியும் சேர்ந்திருந்தால் ஜாதகன் மேதாவி, புகழுடையவன், இனிமையாய்ப் பேசுபவன், சுகவான்.

(66) 9-வது பாவத்தில் குருவும், சுக்கிரனும், சனியும் சேர்ந்திருந்தால் ஜாதகன் பிரபல்யமான ஐஸ்வரியவான்.

(67) 9-வது பாவத்தில் நான்கு அல்லது ஐந்து அல்லது ஆறு கிரகங்கள் கூட்டமாகவிருந்து அக்கூட்டத்தில் புதனுகிலும், குருவாகிலும் இருந்தால் ஜாதகனுக்கு இராஜாங்க அதிகாரமுண்டு, ஐஸ்வரியமும் சகல பாக்கியங்களு முண்டு. அக்கூட்டத்தில் புதனுகிலும் அல்லது குருவாகிலும் இல்லாமல் இருந்தால் ஜாதகன் நோயாளியாகவும், பாக்கிய மில்லாதவனுகவும், பந்துக்களால் கைவிடப்பட்டவனுகவும், இராஜ தண்டனை அடைபவனுகவும், சகல கஷ்டங்களும் அனுபவிப்பவனுகவும் இருப்பான்.

(68) 9-வது பாவாதிபதி 8-வது பாவத்திலிருந்து நீச்சக் கிரகம் அல்லது சத்துரு கிரகத்தால் பார்க்கப்பட்டாலும் அல்லது நீச்சமாகவும் அல்லது குரூர சஷ்டியாம்சத்திலாகிலும் இருந்தால் ஜாதகன் பாக்கியவீனனுக இருப்பான்.

(69) 9-வது பாவாதிபதி சுபருடன் சம்மந்தப்பட்டு சுபரால் பார்க்கப்பட்டு, 9-வது பாவத்தில் சுபரிருந்தால் ஜாதகன் நல்ல கீர்த்திமான், தனவான், சகல பாக்கியவானுவான்.

(70) 9-வது பாவாதிபதி சிம்மாசனம்சத்திலிருந்து லக்கினாதிபதி பத்தாவது பாவாதிபதி இவர்களால் பார்க்கப்பட்டால் ஜாதகன் மகா தானதர்மஞ் செய்பவன்.

(71) 9–வது பாவத்தில் குரு இருந்து, குரு தன் நவாம்சையி லிருந்தால் அல்லது சுபரால் பார்க்கப்பட்டால் ஜாதகன் குரு முதலிய பெரியோர்களிடத்தில் அதிக பக்தியுடையவனு யிருப்பான்.

(72) 9-வது பாவத்திலிருக்கிற சுபக்கிரகம் குருவினுடைய வர்க் கத்திலிருந்து, 9-வது பாவாதிபதியும் குருவினுடைய வர்க்கத்தில் இருந்தால் ஜாதகன் குரு முதலிய பெரியோர்களிடத்தில் பக்தியுடை யவன், சுகவான்.

(73) 9-வது பாவாதிபதி அம்சத்தில் புதன் அல்லது குரு, அல் லது சுக்கிரனுடைய வீட்டிலிருந்து இராசியில் சுபக்கிரகத்தால் பார்க் கப்பட்டாலும் அல்லது சுபக்கிரக சம்மந்தப்பட்டாலும் ஜாதகன் தர்ம காரியங்களைச் செய்பவன்.

(74) 9–வது பாவத்தில் ஒரு பாபக்கிரகம் இருந்தால் ஜாதகன் பாபி.

(75) 9-வது பாவாதிபதி பாபியுடன் சேர்ந்தாலும் அல்லது பாப சஷ்டியாம்சத்தி லிருந்தாலும் ஜாதகன் தர்மஹீனவான், தூர் குணவான்.

(76) 9–வது பாவாதிபதி திரிகோணத்திலாகிலும், கேந்திரத்தி லாகிலும் வலிவுடனிருந்து, லக்கினத்தை லக்கினாதிபதி பார்த்தால் ஜாதகன் அதிக பாக்கியமுடையவன், போகத்தை மிதமாக அனுப விப்பவன்.

(77) 10-வது (பத்தாவது) பாவாதிபதி குருவினுடைய நவாம் சம், திரிகோணம் அல்லது திரிம்சாம்சம் அடைந்திருந்தால் ஜாதகன் அதிக பாக்கியவந்தன், போகத்தை மிதமாக அனுபவிப்பவன்.

(78) 9-வது பாவத்தில் இருக்கிற கிரகம் தன் உச்ச சுவகேந்த் திரத்திலிருந்தால் ஜாதகனுக்கு அதிக தனத்தையும், கனகத்தையுங் கொடுக்கின்றது.

(79) 9-வது பாவத்திலிருக்கின்ற கிரகம் சுபரால் பார்க்கப்பட் டால் ஜாதகன் சத்துருவை வெல்லுபவன், திவ்வியமான தேகமுடை யவன், நல்ல கீர்த்தியை யுடையவன்.

(80) 9-வது பாவாதிபதியும், 9–வது பாவத்தின் காரகனும் கெட்ட ஸ்தானத்திலிருக்கப் பிறந்த குழவியினுடைய முகத்தை தன்

னுடைய தகப்பன் பார்க்கமாட்டான். ஆனால் இந்த இரண்டு கிரகங்களும் கேந்திரத் திரிகோணங்களிலிருக்கப் பிறந்த குழவியினுடைய முகத்தைத் தன் தகப்பன் பார்ப்பான்.

(81) 9–வது பாவாதிபதி சுபனாகி பலவந்தனாகி, சர ராசியின் முதற்கூறிலிருந்து குரு, சுக்கிரன் இவர்களால் பார்க்கப்பட்டாலும் சம்மந்தப்பட்டாலும் ஜாதகன் ஜெபஞ் செய்பவன், தியானஞ் செய்பவன், சமாதி நிஷ்டையிலிருப்பவன்.

(82) 9–வது பாவாதிபதி அல்லது 10-வது (பத்தாவது) பாவாதிபதி தேவலோகாம்சத்திலாகிலும் அல்லது இதர வைசேஷிகாம்சத்திலாகிலும் இருந்து ஒரு சுப கிரகம் பாரா(வதாம்சத்திலிருந்தால் ஜாதகன் பிரம்ம நிஷ்டையிலிருப்பவன்.

(83) 9-வது பாவாதிபதி குருவுடன் சம்மந்தப்பட்டு பாராவதாம்சத்திலிருந்து, லக்கினாதிபதியைக் குரு பார்த்தால் ஜாதகன் மஹாதானதர்மஞ் செய்பவனாவான்.

(84) 5–வது பாவத்தில் அல்லது 10-வது பாவத்தில் சூரியன் இருந்தால் ஜாதகனுடைய பிதா நாசமடைவான்.

(85) சூரியனிருக்கும் ராசி, நவாம்ச ராசி இவ்விரண்டு ராசிகளில் எந்த ராசி வலிவா யிருக்கின்றதோ அந்த ராசிக்குத் திரிகோண ராசியில் கோட்சாரத்தில் சூரியன் சஞ்சாரஞ் செய்யும்போது ஜாதகனுடைய பிதா மரணமடைவர்.

(86) சூரியனிருக்கும் நவாம்சை ராசியாதிபதி இருக்கும் துவாதசாம்ச ராசியில் சந்திரன் கோட்சாரத்தில் சஞ்சாரஞ் செய்யும்போது ஜாதகனுடைய பிதா மரணமடைவர்.

(87) குளிகனுடைய ஸ்புடத்திலிருந்து சூரியனுடைய ஸ்புடத்தைக் கழிக்க வருகின்ற ஸ்புடத்திற்குரிய ராசி, அம்ச ராசி இவைகளைத் தெரிந்துகொள்ளவும். இப்படிக் கணித்துவந்த இராசியிலும் அதற்குத் திரிகோண ராசியிலும் சனி கோட்சார காலத்தில் சஞ்சாரஞ் செய்யும்போது ஜாதகனுடைய தகப்பனுக்கு ரோகமுண்டாகும். இங்கு மேலே கணித்துவந்த அம்சராசியில் குரு கோட்சாரத்தில் சஞ்சாரஞ் செய்யும்போது ஜாதகனுடைய தகப்பன் மரணமடைவார். இது ஒரு வழி.

(88) யமகண்டனுடைய ஸ்புடத்தையும் சூரியனுடைய ஸ்புடத்தையும் ஒன்றுடன் சேர்த்துக் கூட்ட வருகின்ற ஸ்புடத்திற்குரிய ராசி அட்சராசி இவைகளைத் தெரிந்துகொள்ளவும். இப்படிக் கணித்து வந்த இராசியிலும் அதற்குத் திரிகோண ராசியிலும் குரு கோட்சாரத்தில் சஞ்சாரஞ் செய்யும்போது ஜாதகனுடைய தகப்பனுக்கு ரோக முண்டாகும். இங்கு மேலே கணித்து வந்த அட்சராசியில் குரு கோட்சாரத்தில் சஞ்சாரஞ் செய்யும்போது ஜாதகனுடைய தகப்பன் மாணமடைவர். இது ஒரு வழி.

(89) சூரியன் சர ராசியில் கேந்திர பாவத்திலிருந்தால் ஜாதகன் தன் பிதாவின் தேகசுகத்தைத் தானே தகனஞ் செய்யமாட்டான்.

(90) 9-வது பாவாதிபதி பூமிக்குக் கீழே இருந்தால் ஜாதகன் தன் தகப்பனுடைய முகத்தைத் தன் தகப்பனுடைய பரணகாலத்தில் தரிசனஞ் செய்யமாட்டான்.

(91) 5-வது பாவாதிபதி சுபக்கிரகமாகி, குரு அல்லது அந்த 5-வது பாவாதிபதி சுபக்கிரக சம்பந்தம் பெற்றிருந்தால் ஜாதகனுடைய தகப்பனுக்குச் சௌக்கியமுண்டு.

(92) 5-வது பாவாதிபதியும், குருவும் பாப அம்சத்திலாகிலும் நீச்ச அம்சத்திலாகிலும் இருந்து, சனி, அல்லது ராகு, அல்லது குளிகனுடன் சம்பந்தப்பட்டிருந்தால் ஜாதகனுடைய தகப்பனுக்குத் துக்கமுண்டு, சௌக்கியம் கிடையாது.

(93) 5-வது பாவாதிபதி சுபக்கிரகமாயினும், நீசமாயிருந்தாலும் சத்துருவீட்டிலிருந்தாலும், அஸ்தங்கத மடைந்திருந்தாலும், அல்லது பாப சஷ்டியாம்சத்திலிருந்தாலும் ஜாதகனுடைய தகப்பன் துக்கமுடையவனுவான், சுகமில்லாதவன்.

(94) லக்கினத்திலிருந்து 9-வது அல்லது 11-வது பாவத்தில் செவ்வாய், சனி, ராகு இவர்கள் இருந்தால் ஜாதகனுடைய பிதாவுக்கு மரணமுண்டாகும்.

(95) ஜென்ம லக்கினம், சிம்ம துவாதசாம்சம் அல்லது மீனத் துவாதசாம்சமாகி சூரியன் துஸ்தானங்களாகிய 6, 8, 12-வது பாவங்களிலிருந்தால் ஜாதகனுடைய பிதா ஜாதகன் ஜெனிப்பதற்கு முன்னமே மரணமடைவான்.

(106) பத்தாவது பாவம்.

(1) 10-வது பாவாதிபதி பலவீனனுயிருந்தால் ஜாதகன் சபலன், துராசாரமுடையவன்.

(2) சூரியன், புதன், குரு, சனி இவர்கள் பலவீனமாயிருந்தால் ஜாதகன் துர்கர்மஞ் செய்பவன்.

(3) 10-வது பாவத்தில் சூரியன் அல்லது இராகு இருந்தால் ஜாதகன் கங்கா ஸ்நானஞ் செய்பவன்.

(4) 10-வது பாவம் மீனமாய் இருந்து அதில் செவ்வாயும், புதனும் இருந்தால் ஜாதகன் முக்திபை அடைவான்.

(5) 10-வது பாவாதிபதி சுக்கிரனுடன் சம்பந்தப்பட்டு கேந்திரத்திலிருந்தாலும் அல்லது உச்ச ஸ்தானத்தில் இருந்தாலும் ஜாதகன் கங்கை முதலிய புண்ணிய தீர்த்த ஸ்நானஞ் செயபவன்.

(6) 12-வது (பன்னிரண்டாவது) பாவத்தில் புதன் இருந்தாலும் அல்லது பன்னிரண்டாவது பாவாதிபதி உச்ச ஸ்வகேஷத்திரத்திலிருந்தால் ஜாதகன் கங்கை முதலிய புண்ணிய தீர்த்த ஸ்நானஞ் செய்வான்.

(7) 10-வது பாவத்தில் வளர்பிறை சந்திரன் பலவானுயிருந்தால் ஜாதகன் கங்கை முதலிய புண்ணிய தீர்த்த ஸ்நானஞ் செய்வான்.

(8) 10-வது பாவத்தில் தேய்பிறை சந்திரன் அல்லது பாபியாயுள்ள சந்திரன் பலவீனனுயிருந்தால் ஜாதகன் துர் கர்மஞ் செய்பவன், சூதாடுபவன்.

ஜீவனம்:—

(9) லக்கினத்திற்கு 10-ல் அல்லது சந்திரனுக்கு 10 ல் சூரியனிருந்தால் தகப்பனுலும், சந்திரனிருந்தால் தாயினுலும், செவ்வாயிருந்தால் சத்துருவாலும், புதனிருந்தால் சினேகிதனுலும், குருவிருந்தால் சகோதரனுலும், சுக்கிரனிருந்தால் கலத்திரத்தினுலும், சனியிருந்தால் தன் சேவகர்களாலும், பொருள் சம்பாதிப்பன், (a) லக்கினம், சூரியன், சந்திரன் இவர்களுக்கு 10-ஆம் வீட்டிற்குடையவர் யிருக்கும் நவாம்சை ராசியாதிபதியிற்குச் சொல்லிய ஜீவனமே ஜாதகனுடைய தொழில் என்பதாம். (b)

(a) அந்தந்த கிரகத்திற்குச் சொல்லிய பலன்கள் அந்தந்த கிரகத்தின் தசை, அந்தர் தசை இவைகளில் நடக்கும் என்பதாம். லக்கினத்திற்கும் அல்லது சந்திரனுக்கும் 10-ல் எத்தனை கிரக மிருக்கின்றதோ அத்தனை விதத்தில் மேற்சொல்லியபடி தனம் வந்து சேரும் என்றறியவும்.

(b) உதாரணமாக லக்கினம் மிதுனமாக விருக்க அதற்கு 10-ஆம் வீடு மீனம். மீனத்திற்குரிய குரு ரிஷப நவாம்சையில் இருந்தால் ரிஷபத்திற்கு அதிபதி சுக்கிரன். ஆகையால் விலையுயர்ந்த நவரத்தினங்கள், வெள்ளி, முதலிய உலோகங்கள், பசு, எருமை, இவைகளால் பொருள் தேடுவான்.

மேற்சொல்லிய நவாம்ச ராசியாதிபதி சூரியனுடனால், பொன் வியாபாரம், வாசனத் திரவியங்கள், கப்பலத்தால் செய்யப்பட்ட வஸ்திராதிகள், மருந்து வகையராக்கள், வைத்தியம் ஆகிய இவைகளால் தனம் தேடுவான். (a)

மேற்சொல்லிய நவாம்ச ராசியாதிபதி சந்திரனுடனால், கிருஷியிலும், ஜலத்திலுண்டாகும் வஸ்துக்களாலும், பெண்கள் மூலியமாயும், தனம் தேடுவான். (b) நவாம்ச ராசியாதிபதி செவ்வாயுடனால் உலோக வகையாலும், காவல வஸ்துக்களாலும், தெருப்பு உபயோகப்படுத்தும்படியான வேலையாலும், ஆயுதங்களாலும், தைரியச் செய்கைகளாலும் தனம் தேடுவான். (c)

நவாம்ச ராசியாதிபதி புதனுடனால் குமஸ்தாவாகவும், கணக்குப் பிள்ளையாகவு மிருப்பதாலும், பலவித கைத்தொழில் வேலையாலும் தனம் தேடுவான். (d)

(a) பொன் வேலை, ஜலம், தான்னியம், புல், முத்து இவைகளின் மூலமாயும், இருதாரத்தாருக்கும் மத்தியிலிருந்து வேலையை பூர்த்தி செய்துவைக்குறபடியான உத்தியோகத்தாலும் தனம் தேடுவான்.

(b) ஜலத்திலுண்டாகின்ற முத்து, பலகரை, சங்கு, பவழம், உப்பு, பச்சப், மீன் எண்ணெய், மீன்களின் எலும்பு இவைகளாலும் ஜலத்திலுண்டாகும் இதர பலவித வஸ்துக்களாலும், பலவிதமான மண் வகையராக்களினாலும், விவாதங்கள நடத்துவதாலும், செல்வவந்திகள் பணத்தைச் செலவழித்து வாங்கக்கூடிய விலையுயர்ந்த ஆடை-கலன் விறபனை செய்வதாலும தனம் தேடுவான்.

(c) சண்டை செய்வதாலும், அக்கினி ஸ்தப்பம் என்று சொல்லப்பட்ட நெருப்புகளை உபயோகப்படுத்தி அதனால் காயப்படாமலிருக்கும்படியாய் தந்திர வேலைகளை வேடிக்கையாகச் செய்து காட்டுவதாலும், திருடனை விரும்புவதாலும், சண்டை செய்யும் இரு கட்சிக்காரர்களில் ஒரு கட்சிக்காரருடன் சேர்ந்துகொள்ளுவதாலும, தனம் தேடுவான்.

(d) கவிகள் கட்டுவதாலும, கவிப் பிரசங்கஞ் செய்வதாலும், வியாக்கியானம் முதலிவைகள் எழுதுவதாலும், சிற்பசாஸ்திரம், சித்திரங்கள் எழுதுதல் இவைகளாலும் வேத பாராயணஞ் செய்வதாலும், ஜோதிடத்தாலும் தனம் தேடுவான்.

நவாம்ச ராசியாதிபதி குருவானால் பிராம்மணர், தேவர், கல்விமான்கள் இவர்கள் மூலியமாயும் தான தருமாதி காரியங்களாலும் தனம் தேடுவான். (a)

நவாம்ச ராசியாதிபதி சுக்கிரனானால் நவரத்தினங்களாலும், வெள்ளி முதலிய உலோக வகையறுக்களாலும், பசு, எருமைகளாலும் தனம் தேடுவான். (b)

நவாம்ச ராசியாதிபதி சனியானால் கஷ்டமான வேலையாலும் துன்பத்தையும், ஹிம்சையையும் விளைவிக்கக்கூடிய தொழிலகளாலும், மூட்டைகளைச் சுமப்பதாலும் தன் அந்தஸ்திற்குத் தாழ்ந்த காரியங்களைச் செய்வதாலும் தனம் தேடுவான். (c)

இவ்விதமாக 10–ஆம் வீட்டிற் கதிபனிருக்கும் நவாம்ச ராசியாதிபனைக் கொண்டு மேற்சொல்லியபடி கிரகங்களுக்குரிய ஜீவன மூலியத்தால் அந்தந்த கிரகங்களின் தசை, அந்தர் தசை காலங்களில் தனம் தேடுவான்.

(a) அதிக வட்டிக்குப் பணம் கடன் கொடுப்பதாலும், தெய்வீக சம்மந்தம், சன்மார்க்க சம்மந்தம் இவைகளைப் போதிப்பதாலும், பிராம்மணர்களிடத்திலும், கோயில்களிலும் உத்தியோகத்திலிருப்பதாலும் தனம் தேடுவான்.

(d) பொன், கெம்பு முதலியவைகளை எடுக்கும் சுரங்கங்களில் வேலை செய்வதாலும், யானை, குதிரை, ஆடு, மாடுகளாலும், உப்பு, தயிர், வெல்லம் முதலிய ரச வர்க்கங்களாலும், சமையல் செய்து

போஜனம் போடுவதாலும், போகப் பெண்களை வைத்துக்கொண்டு ஆசை காட்டி மயக்குவதாலும் தனம் தேடுவான்.

(c) இழிவான தொழில்களைச் செய்வதாலும், மரவேலை, கைத் தொழிலாலும், குற்றவாளிகளுக்கு விதிக்கப்பட்ட தண்டனைகளைச் செய்தலாலும், ஜீவ ஜந்துக்களை இம்சை படுப்படி கொல்லுவதாலும், பிடிப்பதாலும் தனம் தேடுவான்.

மேலே சொல்லிய யோகத்தைக் கொடுக்கக் கூடிய கிரகம் நட்பு ராசியிலிருந்தால் மித்துருக்கள் மூலமாயும், பகை ராசியிலிருந்தால் சத் துருக்கள் மூலியமாயும், சுவகேஷத்திரத்திலிருந்தால் தன்னிடத்தி லிருந்தபடி வேலை செய்வதாலும் தனம் தேடுவான். மேற்சொன்ன யோகத்தைக் கொடுக்கவேண்டிய கிரகம் சூரியனுகவிருந்து உச்ச ராசியிலிருந்தால் தன்னுடைய சாமர்த்தியத்தினாலேயே தனம் தேடு வான். லக்கினம் அல்லது 12, அல்லது 11 இந்த வீடுகளில் சுபக் கிரகங்கள் வலிவுடன் இருந்தால் பல வழியிலும் தனம் தேடுவான் என்பதாம்.

குறிப்பு:—இந்த பாவத்தில் சொல்லிய பலன்களெல்லாம் அந்தந்த கிரகங் களின் தசை, அந்தர் தசை காலங்களில் நடக்கும் என்றறிய வேண்டியது

(10) லக்கினத்திற்கு நான்கு கேந்திரங்களிலும் பாபக்கிரகங்கள் இருந்தால் ஜாதகன் நீச்ச விரதாச்சாரமுடையவன். சொத்தில்லாத வன், மூர்க்கன், பரஸ்திரீகளுடையவன், பிறருடைய சொத்தைக் கிர கிப்பவன், சூரத்தன்மையால் எப்போதாகிலும் இராஜ சன்மானம் பெறுபவன்.

(11) லக்கினத்திற்கு நான்கு கேந்திரங்களிலும் சுபக்கிரகங்கள் இருந்தால் ஜாதகன் குலோத்தமன், இராஜ வம்சங்களை ஸ்தாபிப்ப வன், சர்வக்கியானமுடையவன், அதிக தனவந்தன், நற்குணங்க ளுடையவன், அரசனுவான் அல்லது அரசர்களிடத்தில் பிரியமா யிருப்பவன்.

(12) லக்கினத்திற்கு அல்லது சந்திரனுக்குப் 10-ல் (பத்தில்) சுபக்கிரகமிருந்தால் அல்லது 10–வது பாவத்தின் ஸ்புடத்திற்குரிய நவாம்சையில் சுபக்கிரக மிருந்தால் ஜாதகன் எப்போதும் புண்ணிய கர்மங்களையே செய்துகொண்டிருப்பான். இந்த விடங்களில் சுபக்

கிரகமில்லாமல் பாபக்கிரகம் இருந்தால் ஜாதகன் எப்போதும் பாப கர்மங்களையே செய் நடுகாண்டிருப்பான்.

சந்திரனுக்குப் பத்தாவது பாவத்தில் இருக்கின்ற கிரகம்:—

(13) சூரியலகில் ஜாதகன் சர்வ காரியங்களிலும் அநுகூலமடை பவன், பிரசித்தமான காரியங்களைச் செய்பவன், தனவான்.

(14) செவ்வாயாகில் ஜாதகன் பாப புத்தியுடையவன், குரூரன், கிராமத்தில் வசிப்பவன்.

(15) புதனாகில் ஜாதகன் வித்வான், நியாயிபுடையவன், இரா ஜப்பிரியன், தனவான்.

(16) குருவாகில் ஜாதகன் அரசனுக்குச் சமானமானவன், தன வான், தர்ம குணமுடையவன்.

(17) சுக்கிரனாகில் ஜாதகன் போகவான், சௌந்தர்பவான், தனவான்.

(18) சனியாகில் ஜாதகன் சோகமுடையவன், துக்க முடைய வன், தரித்திரன்.

சந்திரனுக்குப் பத்தாவது பாவத்தில் இருக்கின்ற கூட்டக்கிரகங்கள்:-

(19) சூரியனும், செவ்வாயுமானால் ஜாதகன் பரஸ்திரீலோலன். மதம் பிடித்தவன், ஜோதிஷ சாஸ்திரம், தர்க்க சாஸ்திரம் முதலியவை தெரிந்தவன்.

(20) சூரியனும், புதனுமானால் ஜாதகன் ஜோதிஷ சாஸ்திர மறிந்தவன், ஜல வஸ்துக்களில் பிரபலமானவன், தனம், ஸ்திரீ பூஷ ணம் இவைகளின்பேரில் அதிக பிரபலமானவன், வர்த்தகஞ் செய் பவன், வஸ்திராலங்காரப் பிரியன்.

(21) சூரியனும், குருவுமானால் ஜாதகன் எல்லாக் காரியங்களி லும் சித்தியடைபவன், இராஜப் பிரியன், பராக்கிரம முடையவன், நற்குணமுடையவன்.

(22) சூரியனும், சுக்கிரனுமானால் ஜாதகன் இராஜப் பிரிபன், ஸ்திரீ தனம் விருத்தியுடையவன்.

(23) சூரியனும் சனியுமானால் ஜாதகன் தரித்திரன், சோக முடையவன், விசைவாகப் பேசுபவன், சோகத்தனத்தால் தனந் தேடு பவன், கொலை செய்பவன், தண்டனை அடைபவன்.

(24) செவ்வாயும் புதனுமானால் ஜாதகன் சாஸ்திர வித்தையால் ஜீவிப்பவன், சௌந்தர்யமும், தீர்க்காயுசு முடையவன், நன்றி கெட்டவன், ஜ்யோதிர வித்தையறிந்தவன், சூரன்.

(25) செவ்வாயும் குருவுமானால் ஜாதகன் நீச்ச ஜனங்களுக் கதிபதியாவான், மித்துருக்களிடத்திலிருந்து தனத்தைச் சம்பாதிப்பவன், சேனாதிபதியாவான்.

(26) செவ்வாயும் சுக்கிரனுமானால் ஜாதகன் அந்திய தேசத்தில் சுவர்ணாதி முதலிய வியாபாரஞ் செய்பவன்.

(27) செவ்வாயும் சனியுமானால் ஜாதகன் புத்திரனில்லாதவன், தைர்யமாய்க் காரியங்களைச் செய்பவன், வியாதியுடையவன்.

(28) புதனும், குருவுமானால் புத்திரனில்லாதவன், குழப்பமாய்ப் பேசுபவன், கீர்த்திமான், இராஜப்பிரியன், தனவான், தர்மி.

(29) புதனும், சுக்கிரனுமானால் ஜாதகன் வித்தை, மனைவி, தனம் இவைகளுடையவன், சர்வ விஷயமும் அறிந்தவன், மந்திரி, ஸ்திரீ தனமுடையவன்.

(30) புதனும், சனியுமானால் ஜாதகன் புத்தகங்களைப் பார்த்து காபி (copy) செய்பவன், அனுச்சாரமான காரியங்களைச் செய்பவன், மண் பாண்டம் செய்பவன், உபாத்தியாயர்.

(31) குருவும், சுக்கிரனுமானால் ஜாதகன் பிராம்மணர்களை ரட்சிப்பவன், இராஜப்பிரியன் அல்லது அரசன், பண்டிதன்.

(32) குருவும் சனியுமானால் ஜாதகன் சர்வஜன உபகாரி, தன் காரியங்களில் பிடிவாதமுள்ளவன், நீச்சன் அதாவது அல்பன், நீலயான ஸ்தானமுடையவன்.

(33) சுக்கிரனும், சனியுமானால் ஜாதகன் பரிமளமுள்ள நீல நிறமுள்ள வாசனாதி தூள்களைச் செய்பவன், வைதியன், வியாபாரி.

(34) 10-வது பாவாதிபதி சுபனாகிலும் அல்லது சுபரால் பார்க்கப்பட்டாலும் அல்லது சம்மந்தப்பட்டாலும் அல்லது சுபருடைய நவாம்சையிலிருந்தாலும் ஜாதகன் அதிகாரமுடைய ஸ்தானத்திலிருப்பவன்.

(35) 10-வது பாவாதிபதி சனியுடன் சேர்ந்து, 8-வது பாவாதிபதியால் பார்க்கப்பட்டு பாப நவாம்சையிலாகிலும் அல்லது கேந்திரத்தி

லாகிலும் இருந்தால் ஜாதகன் கடுமையான ஸஜாதனுக்கு அடங்கி நடக்கவேண்டியவன்.

(36) சந்திரன் கடகத்திலிருந்து, குரு சுக்கிரன் இவர்களால் பார்க்கப்பட்டு பாவாவுராய்ச முதலிய வைதேசஷிகாம்சங்களில் இருந்தால் ஜாதகன் நல்ல கீர்த்தியுடையவன், தனவான்.

(37) 10-வது பாவாதிபதி சுபருடன் சேர்ந்தாலும், அல்லது சுபர் மத்தியிலிருந்தாலும் அல்லது சுபருடைய நவாம்சையிலிருந்தாலும் ஜாதகன் கீர்த்திமான், நல்ல அபிமானமுடையவன்.

(38) 10-வது பாவத்தில் பாபக்கிரகம் இருந்து அந்தப் பாவத்தைப் பாபக்கிரகம் பார்த்து, அந்த பாவாதிபதி பலஹீனமிருந்தால் ஜாதகனுக்கு அதிகாரம், கியாதி, அபிமானம், கர்கீர்த்தி, சுயமரியாதை முதலிய இவைகள் இல்லை, ஜாதகன் அபவாதிபாவன்.

(39) 10-வது பாவாதிபதியும் 10-வது பாவாதிபதி இருக்கின்ற நவாம்சாதிபதியும் சனியுடன் சம்மந்தப்பட்டு 6-வது பாவாதிபதியால் பார்க்கப்பட்டாலும், சம்மந்தப்பட்டாலும் ஜாதகனுக்கு அதிக பீனவிகனுண்டு.

(40) செவ்வாயும் நான்காவது பாவாதிபதியும் பலவந்தர்களாகி கேந்திரத்திலாகிலும், திரிகோணத்திலாகிலும், பதினோராவது பாவத்திலாகிலும் இருந்து பத்தாவது பாவாதிபதியை சந்திரனும், சுக்கிரனும் பார்த்தாலும், சேர்ந்தாலும் ஜாதகன் கிருஷி முதலியவைகளைச் செய்துகொண்டு அதிக பசுக்களை உடையவனுவன்.

(107) பதினோராவது பாவம்.

(1) 11-வது பாவத்திலிருக்கின்ற கிரகம் பூர்ண பலமாயிருந்தால் அது ஜாதகனுக்குத் தன வரவை உண்டாக்கும். அப்படிப்பட்ட கிரகம்.

சூரியனுகில் பிதுர் வர்க்கத்தார் மூலமாய்த் தன வரவுண்டு.

சந்திரனுகில் மாதா வர்க்கத்தார் மூலமாய்த் தன வரவுண்டு.

செவ்வாயானுல் தன் பிரயத்தனத்தினுலே தன வரவுண்டு.

புதனுகில் தன் பிரிய முள்ள ஸஜாதனுலும், சினேகிதனுலும் அல்லது அம்மாதனுலாகிலும் தன வரவுண்டு.

குருவாகில் யாகம், வேத சாஸ்திரவித்தை மூலமாயும், புத்திரர்கள் மூலமாயும் தன வரவுண்டு.

சுக்கிரனாகில் ஸ்திரீகளாலும், காவ்வியம், நாடகம், சங்கீதம், வித்தை இவைகளாலும் தன வரவுண்டு.

சனியாகில் அநேக ஆண் பெண் வேலையாட்களை வைத்துக் கொண்டு விவசாயம் செய்வதாலும், சாண்யத்தாலும் தன வரவுண்டு.

(2) 11-வது பாவத்திலிருக்கின்ற அல்லது 11-வது பாவத்தைப் பார்க்கின்ற கிரகத்தின் ஜாதி எந்த ஜாதியோ அந்த ஜாதியைச் சேர்ந்தவர்கள் மூலியமாய்த் தன வரவுண்டு.

(3) 11-வது பாவத்திலிருக்கின்ற கிரகங்கள் சுபக்கிரகங்களானால் நல்ல வழியினாலும், பாபக் கிரகங்களானால் பாப வழியினாலும், சுபரும் பாபருமானால் சுப அசுப வழியினாலும் ஜாதகன் தனம் தேடுவான்.

(4) 11-வது பாவத்திலிருக்கின்ற கிரகம் மிகவும் வலிவாகவிருந்து ஜனன லக்கினத்திற்குச் சுபக்கிரகபார்வை (அதாவது தாக்காயிக சுபபார்வை) ஜாதகன் சர்வ நல்ல குணங்களுமுடையவன், சர்வ போகங்களுடையவன், ஆடை, ஆபரணம், வாகனாதி, வித்தை, ஸ்திரீகள் முதலியவைகளும் சர்வ பாக்கியங்களு முடையவன்.

(5) 11-வது பாவாதிபதியும், 2-வது பாவாதிபதியும் லக்கினாதிபதிக்கு மித்துருக்களானால ஜாதகன் தன் தரவியத்தை நற்கார்யம், தெய்வங்கள், பிராம்மணர்கள் இவர்கள் விஷயமாகச் செலவு செய்பவன்.

(6) 11-வது பாவத்திலிருக்கின்ற கிரகம் பலவீனமாகிலும், கிரகயுத்தத்தில் தோல்வியடைந்திருந்தாலும், நீச்சத்திலிருந்தாலும் அல்லது சத்துரு விட்டிலிருந்தாலும் அல்லது கெட்ட ஸ்தானங்களிலிருந்தாலும், ஜாதகன் பிரதிதினமும் தன் ஜீவனத்திற்காக யாசகஞ் செய்வான்.

(7) 11-வது பாவாதிபதி:—

புதியனாகில் அல்லது சந்திரனாகில் ஜாதகன் அரசன் அல்லது அரசனுக்குச் சமானபானவன் இவர்களிடத்தில் தொழிலில் இருப்பதால் தனஞ் சேகரிப்பான்.

செவ்வாயாகில் ஜாதகன் பந்தி, சகோதரன் இவர்கள் மூலமாயுப், கிருஷி மூலமாயும தனஞ் சேகரிப்பான்.

புதனாகில் ஜாதகன் வித்தையாலும், பந்துக்களா, புத்திரர்களா இவர்களாலும் தனஞ் சேகரிப்பான்.

குருவாகில் ஜாதகன் மத சம்பந்தமான காரியங்களிலுச் செய்வதில் தனஞ் சேகரிப்பான்.

சுக்கிரனாகில் ஜாதகன் ஸ்திரீகள் மூலமாயுப், கவரத்தினங்கள், யானை, பசு முதலிய நாற்கால் ஜீவன் இவைகளாலும் தனஞ் சேகரிப்பான்.

சனியாகில் ஜாதகன் இழிவான காரியங்களா செய்வதால் தனஞ் சேகரிபபான்.

குறிப்பு:—இந்த கிரகங்கள் யோகாப் இருக்குமேயானாலுச் இப் பலன் சமபவிக்கும்.

(8) 11-வது பாவாதிபதி லக்கினத்திற்குக் கேந்திரத்திலாகிலும், திரிகோணத்திலாகிலும் இருந்தாலும் அல்லது 11-வது பாவத்தில் ஒரு பாபக்கிரகமிருந்தாலும் அல்லது 11-வது பாவாதிபதி உச்சப், அல்லது மித்துரு இராசி, அல்லது நவாம்சையில் இருந்தாலுமா ஜாதகன் தனவானாவான்.

(9) 11-வது பாவப், 11-வது பாவாதிபதி இவைகளுடன் சம்பந்தப்பட்டிருக்கும் கிரகத்தின் வலிவை அனுசரித்து தனந் தேடுதலைச் சொல்லவேண்டும. இக்கிரகங்களைக்கொண்டே யார் மூலமாய் தனஞ் சேரும் என்பதையுஞ் சொல்லவேண்டும. இககிரகங்களின் தசாபுக்தி காலங்களில் இவர்களுக்குரிய முகாந்தரத்தாலுப், திக்குகளிலுமிருந்தும், தனம் வந்து சேரும் என்று அறியவும்.

(108) பன்னிரண்டாவது பாவம்.

(1) 12-வது பாவத்திலிருக்கிற கிரகப் சராசிக்கு அதிபதியாலுமா, அல்லது 12-வது பாவப் சராசிபாலுமா, அல்லது 12-வது பாவத்திலிருக்கிற நவகர் மெட்டா பாகங்களாகிய 6, 8-வது பாவங்களின் அதிபதியாலுமா, அல்லது 12-வது பாவத்திலிருக்கிற்ற கிரகத்தைச் சனி பார்வதாலுமா ஜாதகன் நாஸ்திகமான தேசங்களிலும் காடுகளிலுச் சஞ்சாரஞ் செய்வான்.

(2) 12-வது பாவத்திலிருக்கிற கிரகம் சுபனுகி சுபக்கிரகத்தால் பார்க்கப்பட்டு, 12-வது பாவாதிபதி பலவீனனுகிலும், அல்லது நீச்சமாகவாகிலும் அல்லது சத்துரு ஸ்தானத்திலாகிலும் இருந்தால் ஜாதகன் தனத்தைச் செலவு செய்யமாட்டான்.

(3) 12–வது பாவத்திலிருக்கின்ற கிரகம் பலவீனனுக விருந்து 12-வது பாவாதிபதி அதிக பலவந்தனுக விருந்தால் ஜாதகன் தன் தனத்தை விரையஞ் செய்வான்.

(4) 12–வது பாவாதிபதி நல்ல வர்க்கத்திலிருந்தால் ஜாதகன் தன் தனத்தை நல்ல மார்க்கத்தில் செலவு செய்வான்.

(5) 12-வது பாவாதிபதி பலவீனமான கிரகத்துடன் சேர்ந்திருந்தாலும் அல்லது பலவீனமான கிரகத்தால் பார்க்கப்பட்டாலும் ஜாதகன் தன் தனத்தைக் கெட்டவழியில் செலவு செய்வான். இந்த பலவீனமான கிரகத்தின் தசா புத்தி காலங்களில் இந்த பலவீனமான கிரகத்திற்குரிய மனிதர்களால் ஜாதகன் தன் தனத்தை விரையஞ் செய்வான்.

(6) 12-வது பாவத்தில் ஒரு கெட்ட கிரகம் 6-வது அல்லது 8-வது பாவாதிபதியாகி வலிவுடன் இருந்தால் ஜாதகன் கிருஹ, தன ஸ்திரி முதலியவைகளை நாசமடையும்.

(7) 12–வது பாவம் இரட்டை இராசி அல்லது நாற்கால் இராசியாகி அதில் இரட்டை அல்லது நாற்கால் ஜந்துக்களைக் குறிக்கும் கிரகங்கள் இருந்தால் ஜாதகனுடைய வேலையாட்களும், பசு முதலிய கால்நடைகளும் நாசமடையும்.

குறிப்பு:—மேஷம், ரிஷபம், சிம்மம், தனுசின் பின் அரை, மகரத்தின் முன் அரை இவைகள் நாற்கால் இராசியாகும். மிதுனம், கன்னி, துலாம், தனுசின் முன் அரை, கும்பம் இவைகள் இரட்டை இராசியாகும்,

குருவும், சுக்கிரனும் இரட்டை பிராணியையும், செவ்வாயும், சனியும், நாற்கால் பிராணியையும் குறிக்குங் கிரகங்களாகும்.

(8) 12-வது பாவத்தில் எந்த கிரகம் இருக்கின்றதோ அந்த கிரகத்திற்குரிய ஜாதி பிரஜைகளால் ஜாதகனுடைய தனம் செலவாகும். அந்த பாவத்தில் பெண் கிரகம் இருந்தால் பெண்களாலும், ஆண் கிரகம் இருந்தால் சத்துருவாலும், மித்துரு கிரகம் இருந்தால் மித்துருவாலும் ஜாதகனுடைய தனம் செலவாகும்.

(9) 12-வது பாவத்தில் சுபக்கிரக மிருந்தால் ஜாதகன் தர்ம குணம், தயாள குணம் உடையவனாகவும், கிருஷியில் விருப்பமுடைய வனாகவும் இருப்பான்.

(10) 12-வது பாவத்தில் பாப கிரகம் இருந்தால் ஜாதகன் விவா தஞ் செய்பவனாகவும், அபான வாயு பரியுந் தேகமுடையவன், நேத் திர ரோகமுடையவனாகவும், சதா சஞ்சாரஞ் செய்பவனாகவும், சபல னாகவும் இருப்பான்.

(11) 12-வது பாவத்திலிருக்கின்ற கிரகம் தன் உச்சஸ்தானம், சுவகேஷத்திரம், அல்லது மித்துரு கேஷத்திரத்திலிருந்தால் ஜாதகன் பரோபகாரியா யிருப்பான்.

(12) 12-வது பாவத்தில் சூரியனாகிலும் அல்லது தேய்பிறை சந்திரனாகிலும் இருந்தால் ஜாதகனுடைய சொத்தை இராஜாங்கத்தார் பறிமுதல் செய்ய நேரிடும்.

(13) 12-வது பாவத்தில் செவ்வாய் இருந்து புதனுடன் சம்மந் தப்பட்டாலும் அல்லது புதனால் பார்க்கப்பட்டாலும், ஜாதகனுடைய தனம் பலவிதத்திலும் விரையமாகும்.

(14) 12-வது பாவத்தில் சந்திரன் (அதாவது வளர்பிறை சந்தி ரன்) அல்லது குரு அல்லது சுக்கிரன் இருந்தால் ஜாதகன் தனத்தைச் சேர்த்து அதைக் காப்பாற்றுவான்.

(15) 12-வது பாவத்தில் புதன் இருந்து சுக்கிரனுடன் சம்மந் தப்பட்டால் ஜாதகனுக்கு சையாசனாதி (அதாவது) படுக்கை மூலிய சயன சுகங்களுண்டு.

(16) 12-வது பாவாதிபதி தன் சுவ கேஷத்திரத்திலாகிலும் அல் லது உச்ச கேஷத்திரத்திலாகிலும் இருந்து சுபவர்க்கம் பெற்று சுபக் கிரகத்தால் பார்க்கப்பட்டால் ஜாதகனுக்கு உயர்ந்த கட்டில் படுக்கை வகையராக்கள் உண்டு.

(17) 12-வது பாவாதிபதி தன் பரம உச்சத்திலிருந்தாலும், 9-வது பாவாதிபதியால் பார்க்கப்பட்டாலும் ஜாதகன் விசித்திரமான சயனத்தின்பேரிலும், மணிகள், இரத்தினங்கள் இவைகளால் அலங் கரிக்கப்பட்ட அழகான சயனத்தின்பேரிலும் படுத்துச் சயன சுகத்தை அனுபவிப்பான்.

(18) எட்டாம் பாவத்திற்குத் திரிகோண பாவத்தில் சந்திரன் அல்லது சுக்கிரன் அல்லது சனி, கேதுவுடன் இருந்தால் ஜாதகன் அதிர்ஷ்டவீனன், சிரழிவான்.

(19) எட்டாம் பாவத்திற்குத் திரிகோண பாவத்தில் செவ்வாய், கேது நீங்கலாயுள்ள மற்றப் பாபக்கிரகங்களுடன் இருந்தால் ஜாதகனுடைய வீட்டில் ஆமை வருந்.

(20) எட்டாம் பாவத்திற்குத் திரிகோண பாவத்தில் செவ்வாய் புதனுடன் கூடினால் ஜாதகனை நாய் கடிக்கும்.

6-வது அத்தியாயம்.

நிரக சமுதாய யோகாதி பலாத்தியாயம்.

(109) நிரக யோகங்களின் பெயரும் அவைகளின் பலனும்

(1) மனேந்து யோகம்:—

சனி உச்சனுகிச் சூரியனும், செவ்வாயும் 4-ம் இடத்தில் இருந்து அல்லது சூரியன் சேஷ்தத்திலிருந்து, சூரியனுடன் சுக்கிரன் அல்லது குரு, அல்லது புதன் இருப்பது:—இராஜாக்களால் கொண்டாடப் பட்டவன், தனவான், பெருந்திருப்பான், தாதா, சொர்ணங்களுடையவன், அனேக தர்மங்களுடையவன், இராஜாக்களுடன் சாயங் காலத்தில் சஞ்சாரஞ் செய்வான், அனேகம் குழந்தைகள், வேசை யாட்கள் உள்ளவன், தீர்க்காயுசு உள்ளவன், விஷ்ணு ஆலயம் கட்டி-இருக்கவேண்டும் அதனல்தான் இந்த யோகம் சம்பவிக்கும். விஷ்ணு ஆலயம் கட்டியிராவிட்டால் விருத்தாப்பியத்தில் புத்திரன், பௌத் திரன் இவர்கள் மூலமாய் துக்கம் சம்பவிக்கும்.

(2) வைபவ யோகம்:—

5-க்குடையவனை வியாழன் பாபியினுடைய கேஷத்திரத்தில் இருந்து அந்தப் பாபிக்கு மித்திரனுய் அல்லது அந்த பாபி சம்மந்தம் இருந்து அந்த பாபி பத்தாக்குடையவனுகவாவது அல்லது லக்கினாதி பதியாகவாவது இல்லாமல் இருந்து, அந்த குருவைச் செவ்வாயும், சனியும் பார்த்தால் வைபவ யோகம்:—முன் ஜென்மத்தில் புண்ணிய தீர்த்த ஸ்நானங்கள் செய்து நிஷ்டனைச் சேவித்து இருந்தால் தனவா

னுயும், சுகியாயும், இராஜபூஜிதனுயும் ஆகிருன். பஞ்சள் வர்ணமுள்ள வன், சபல புத்தியுள்ளவன், வாக்கு சாமர்த்தியமுள்ளவன், குணவான், மிருதுவான வாக்குடையவன், பண்டிதன், அநேக விடங்களில் தாதாவாய் இருப்பன், மித்துருவும், சத்துருவும் சமமாய்ப் பாவிப்பான், பிள்ளையில்லை, ஒரு சமயம் பிள்ளை பிறந்தால் இறந்துவிடும், இவன் பதிவிரதைகளிடம் கலங்கத்தைச் சம்பாதித்துப் பிரம்ம சாபத்தை அடைந்தவன்.

(3) சௌம்மிய யோகம்:—

சந்திரன் 1-ல், அல்லது 6-ல் அல்லது 8-ல் இருந்து பாபிகளால் பார்க்கப்பட்டாலும் அல்லது சம்மந்தப்பட்டாலும், அப்போது குரு வும், புதனும் பாபி வீட்டில் இருந்து, சுபாள் கேந்திரத்திலோ, திரி கோணத்திலோ இருந்தால் இது சௌம்மிய யோகம்:—முன் ஜென் மத்தில் அப்மானுடைய ஸ்திரீயுடன் சம்மந்தப்பட்டதால் சுக்கில குஷ்டம் நேரிடும். இரவில் குருடன், தீர்க்க ரோகி, சுக்கில ஈனன், அல்ப தாதா, கோபி, புத்திரன், மனைவி, மித்திரன் இவர்களால் துக்க முண்டாகும்.

(4) யாதுதான்யா யோகம்:—

9-ல் பாபி இருந்து 6-லும், 10-லும் பாபிகளிருந்தாலும், அல்லது 8-லும் 11-லும் பாபிகள் இருந்தாலும், 5-ல் பாபிகள் இல்லாமல் இருந்தால் இது யாதுதான்ய யோகம்:—பிள்ளை இல்லை, பிள்ளை பிறந்தால் பிள்ளை ரோகமாய் இருக்கும், பிள்ளைக்கு இராஜ ரோகமாகிய க்ஷய ரோகம் வரும், ஜாதகன் துஷ்டன், துஷ்டசித்தத்தில் சம்பாத்தியம், கர்ம யில்லாதவன், குணமில்லாதவன், துஷ்டன், தான் பிறக்கும் காலத்தில் தாய்க்குக் கஷ்டம், தன் பெண்ணுக்கும் பிள்ளைக்கும் கஷ்டமுண்டு, கெற்பக் கலங்கல் (abortion) உண்டு, பிள்ளை பிறந்தாலும் ஜீவிக்காது, பாபியாய் இருப்பான், துஷ்ட காரியம் செய்பவன்.

(5) பீஷ்மக யோகம்:—

4-க்குடையவனே 1-க்கும் 8-க்கும் உடையவனே பாபியாகவோ அல்லது பாபியுடன் சேர்ந்தோ இருந்து சூரியன் 6-லோ, 12-லோ இருந்து குரு க்ஷேத்திரத்தில் பாபிகள் இருந்து, குரு கேந்திரத்

திலோ, திரிகோணத்திலோ, உச்சத்திலோ, ஆட்சியிலோ இருந்தால் பீஷ்ம யோகம்:—சுக சம்பத்து உண்டாகும், முன் ஜென்மத்தில் புண்ணிய தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்து ரிஷிகளைச் சேவித்து தேவார்த்தனைச் செய்து பிராமண பக்தி யுண்டாகி இந்த ஜென்மத்தில் சுகியாயும், தர்மிஷ்டனுயும், சற்கர்மம் செய்பவனுயும், அனேக பிள்ளைகளுடையவனுயும், அனேக ஸ்திரீ சம்போகமுடையவனுயும், புத்திமானுயும், பண்டிதனுயும், மனசுக்குத் தெம்புள்ளவனுயும், தாதாவாயும், தனவானுயும், இருப்பான். 30 வருஷத்திற்குமேல் அதிக சம்பத்து உடையவன், இராஜாவாகவோ, இராஜாவால் கொண்டாடப்பட்டவனுகவோ இருப்பான். குபேரனுக்குச் சமமாய் இருப்பான். 40-க்கு மேல் பீடைவரும், ரத்தவாத ரோகத்தினுலே பீடையனுபவித்து ராஜரோகமாகிய காசம், சூலியம் வரும், ஒரு சூலணம் சௌக்கியம், ஒரு சூலணம் கஷ்டம், உடம்பு இளைத்துவிடும்.

(6) ஜீமூத யோகம்:—

12 லோ 8 லோ அல்லது 12—லும், 8-லும் குரூர கிரகம் இருந்து லக்கினுதிபதி 12-ல் இருந்து 10—ல் சுப கிரகங்கள் இருந்து 2-ல் குரூர கிரகம் இருந்தால் இது ஜீமூத யோகம் என்று பெயர்:—தாதா, போகி, இராஜமான்யன், குணுதிகன், பரோபகாரி, தர்மாத்மா, கீர்த்திமான், தனவான், 16-வது வயதிலும், 20-வது வயதிலும் தன் சக்தியாலே சௌக்கியம் வரும், யானை, குதிரை, பணம் இவைகளுடன் கூடின இராஜாவாகவோ மந்திரியாகவோ இருப்பான், அல்பதன முடைய பிள்ளை பிறப்பான், ஜாதகனுக்கு 26—வது வயதிலோ 40-வது வயதிலோ, வயிற்றிலோ, காலிலோ, கையிலோ தீர்கமான வேதனை உண்டாகும்.

(7) விஜய யோகம்:—

5—க்குடையவன் 6-லும், 6, 8, 12-ல் இதர கிரகங்கள் இருந்து 5—க்குடையவன் குரூரர்களுடன் சேர்ந்தோ அல்லது குரூரர்களால் பார்க்கப்பட்டால் இது விஜய யோகம்:—ஜாதகனுக்குப் பிள்ளை பிறப்பதில்லை, பிறந்தாலும் உயிருடன் இருப்பதில்லை, இரண்டு பெண்ணை மூன்று பெண்ணை பிறக்கும், முதலில் புத்திரியும், இரண்டாவது பிள்ளையும், மூன்ருவது பெண்ணும் பிறக்கும். இதறக் குழந்தைகள் கெற்பத்திலேயே கெட்டுவிடும்.

(8) ஆநந்த யோகம்:—

10-க்குடையவர் பாபிகளுடனே அல்லது பாபிகள் கேந்திரத்திலோ இருந்து, இதர கிரகங்கள் 3-லோ, 8-லோ, 6-லோ இருந்தால் இது ஆநந்த யோகம்:—புத்திமான், நீண்ட கண்களுடையவன், அதிக பணமுடையவன், வெளுத்தவன், சபலன், பேசுந் தன்மையுடையவன், தாதா, ஆலோசனை செய்பவன், வஞ்சகன், காரணமின்றி சீக்கிரமாய் கோபம்வந்து உடனே சாந்தமாகக்கூடியவன், 65-வயதுக்கு மேல் செளக்கியமுடையவன், இராஜாக்களால் கொண்டாடக் கூடியவன், யுத்தத்தில் ஜெயமுடையவன், தனமுடையவன், கீர்த்தியுடையவன், அனேக வேலைக்காரருடையவன், 18-வது வயதிலோ 20-வது வயதிலோ பெரிய கீர்த்தியும் தனமும் உடையவன், தினந்தோறும் செளக்கியமும் விருத்தியும் அடைபவன், இராஜரோகம் உண்டு, சந்தானத்தாலே துக்கமுண்டு.

(9) பிங்கள யோகம்:—

சுபக் கிரகங்கள் 1—லோ, 2—லோ, 10—லோ இருந்து பாபக் கிரகங்கள 3-லோ. நீசசத்திலோ, உச்சத்திலோ 2-லோ, 1-லோ இருந்தால் இது பிங்கள யோகம்:—தனம், தான்யம் கிடைக்கும், ஆனால் அதற்குச் சீக்கிரம் விருத்தியும், கோபமும் உண்டாகும், பால்யகதில் துக்கமுண்டாகும், அதிக பித்தமுண்டாகும், அவனுக்குப் பிளீஹையினாலும், மூலவியாலும் துக்கமே தவிற சுகம் கிடையாது.

(10) விபல யோகம்:—

3-க்குடையவன் சத்துரு கேந்திரத்திலோ, அல்லது கெட்டவனுடைய ஸ்தானத்திலோ, குருவனுடைய ஸ்தானத்திலோ இருந்து குரு தன் சத்துரு கேந்திரத்தில் இருந்தால் இது விபல யோகம்:—இதற்குப் பலன் நிச்சயமாக புத்திரநாசம்.

(11) மஹோததி யோகம்:—

லக்கினத்தில் சுக்கிரனும், நீச்சத்திலோ 2—லோ சூரியன், குரு, புதன், சனி, சுக்கிரனும் இருந்து 6-லோ, 12—லோ பாபக்கிரகங்கள் இருந்து திரிகோணத்தில் சுபகிரகங்களு இருந்தால் இது மஹோததி யோகம்:—இதற்குப பலன சக்கிரவர்த்தியாக இருபபான.

(12) பிசாச யோகம்:—

சூரியனுடைய சேஷத்திரத்தில் குருவும், குருவினுடைய வீட்டில் சூரியனும், புதனும் இருந்து 5-ல் ராகுவும், சந்திரனும் இருந்து இவ் விருவரும் (i.e. ராகு, சந்) குருவால் பார்க்கப்படாமல் இருந்தால் இது பிசாச யோகம்:—இதற்குப் பலன் சந்தானம் கிடையாது i.e. பிறப்ப தில்லை:

(13) தாமினி யோகம்:—

4-க்குடையவன் சத்துரு சேஷத்திரத்திலோ, 12-லோ, 4-லோ, 8-லோ, 6-லோ இருந்து 4-க்குடையவன் குருவருடன் சேர்ந்திருந்து சுபாள சேஷத்திரத்திலோ, திரிகோணத்திலோ இருந்தால் இது தாமினி யோகம்:—இதற்குப் பலன்:—பணமில்லை, இல்லாவிட்டால் ரோகியா யிருப்பான், சுகம் அனுபவிக்கக்கூடிய யோக்கியதை இருந் தும் சுகம் அனுபவிக்கமாட்டான், பிள்ளை விஷயமான சிந்தை இருக் கும் i.e. பிள்ளை யில்லாததால் சிந்தை.

(14) சக்கிரதாமினி யோகம்:—

புதன் வீட்டில் குரு இருந்தோ அல்லது குருவினுடைய வீட் டில் சுக்கிரனை இருந்து அந்த விடத்தில் நான்கு கிரகம் இருந்தால் இதற்குச் சக்கிரதாமினி யோகம் என்று பெயர்:—இதற்குப் பலன்:— நல்ல சாதுர்யம் வாய்ந்தவனும் இருப்பான், காமி, வக்கிரகண்ணு (squint eyed), நன்றாய்ப் பேசுவான். தீர்க்க ஜீவி, கொஞ்சம கொடை யாளி, மஹா சுகி.

(15) வார்பவ யோகம்:—

4, 5, 11, 12 இவைகளில் இரண்டு கிரகம் இருந்தால் வார்பவ யோகம்:—இராஜாக்களால் கொண்டாடப்பட்டவன், பணக்காரன், வாக்கு சாலன், பண்டிதன், நல்ல புத்திமான்.

(16) ஸ்ரீமுக யோகம்:—

சுக்கிரன் குரு சேஷத்திரத்தில் இருந்து, சுக்கிரனுடைய வீட்டில் சனி இருந்து கடகத்தில் குரு, சூரியன், புதன் இவர்கள் இருந்தால் இது ஸ்ரீமுக யோகம்:—யௌவன காலத்தில் சுகம், 20-வது வயதில் இராஜாக்களால் கொண்டாடப்பட்டவனும், பிறர் ஆச்சரியப்படக் கூடிய தன்மையுடையவனும், பசு, ஆடு, குதிரை, பணம் இவைகள உடையவனும், பெரிய யோகமுடையவனும் இருப்பான்.

(17) குரூர யோகம்:—

4-லோ, 5-லோ இராகு இருந்து 5—க்குடையவன் குரூரனுடன் சேர்ந்து, குரூரனுடைய வீட்டிலோ திரிகோணத்திலோ புதன் இருந்தால் இது குரூர யோகம்:—அதிக கோபமுடையவன், பெருத்த சரீரமுடையவன், மானம், லஜ்ஜை, பணம் இவைகளுடையவன், சதா ஸ்நானஞ் செய்வதில் ஆசையுடையவன் (தீர்த்தத்தில் ஆசையுடையவன்)

(18) கஜ யோகம்:—

லக்கினத்தில் குருவோ, அல்லது சுக்கிரன் உச்சத்திலோ லக்கினத்திலோ இருந்து, கேந்திர திரிகோணங்களில் சுபக்கிரகங்களோ அல்லது 6, 12-ல் பாபக்கிரகங்களோ இருந்தால் இது கஜ யோகம்:—ஜாதகனுக்கு பிள்ளை பிறக்கும், ஜாதகன் மஹா பலிஷ்டனும், இராஜாக்களாலே கொண்டாடத் தகுந்தவனும் ஆவான். அந்தப் பிள்ளை அதிக மானமுடையவனும், கோபமுடையவனும், தீர்க்காயுசுடையவனும், அனேகம் பிள்ளைகளுடையவனும் இருப்பான்.

(19) அற்புதசாகர யோகம்:—

நான்கு கேந்திரத்திலும் சுபாள் இருந்து 6, 11-ல் பாபிகள் இருந்தால் இது அற்புத சாகர யோகம்:—செளக்கிய முடையவன், விஷ்ணுக்குச் சமானமானவனும் இருப்பான் (i.e. பணமுடையவனும் இருப்பான்).

(20) அற்தோத்புத யோகம்:—

லக்கினத்தில் குரூர கிரகம் சந்திரனுடனிருந்து 4-ல் சுபகிரகங்களோ அசுப கிரகங்களோ இருந்தால் இது அற்தோத்புத யோகம்:—இராஜாக்களால் கொண்டாடப்பட்டவன், சுகாணகாலம் செளக்கியப், சுகாணகாலம் சிந்தை, சொல்ப தனம் உண்டு, பெருந்தன்மை, இராஜாக்களாலே கொண்டாடுந்தன்மை, மானம் இவைகள் எப்போதும் இருக்கும்.

(21) நிபாத யோகம்:—

லக்கினத்தில் சனியும், 8-ல் ராகுவும், 6-ல் குஜனும் (அல்லது 1, 6, 8-ல் சனி, ராகு, அங்காரகன் இருந்தால்) அது நிபாத யோகம்:—எப்போதும் பாதேச சஞ்சாரியாய் இருப்பான், லோபியாய் இருப்

பான், நஷ்ட மனைதையுடையவன், பணமில்லாதவன், புத்திர விஷய பான சிந்தையுடையவன்.

(22) விலாச யோகம்:—

லக்கினாதிபதி 4-ல் இருந்து புதனுடைய வீட்டிலோ அல்லது சுபர்களுடைய வீட்டிலோ, சூரியனே, செவ்வாயோ இருந்தால் இது விலாச யோகம்:— உல்லாசமுடையவனாகவும், டம்பம் உடையவனாக வும், தாதாவாகவும், நல்ல போகியாயும், நல்ல குணமுடையவனாயும் இருப்பான்.

(23) சக்கிர யோகம்:—

சூரியன் மேஷத்திலோ 11-லோ இருந்து குரு கடகத்திலோ, 2-லோ இருந்து, 10-ல் சுக்கிரனும் சுபக்கிரகங்களும் இருந்தால் சக்கிர யோகம்; —நல்ல சக்கிரமுடையவன் (i.e. சக்கிரவர்த்தி).

(24) மகிஷ யோகம்:—

6, 4, 8, 12-ல் இராகு, அங்காரகன், சூரியன், சனி இவர்கள் இருந்து, லக்கினத்தில் சந்திரன் இருந்தால் தாயாருக்கு மூன்று ரிது (i.e. 6 மாதம்) கஷ்டம், ஜாதகனுக்குப் புத்திர நாசம் உண்டாகும். 9-ல் குரு இருந்தால் சுகமுண்டாகும்.

(25) தேவேந்திர யோகம்:—

நான்கு கேந்திரத்திலும் உச்ச கிரகங்கள் இருந்து லக்கினத்தில் குரு, சூரியன், அங்காரகன், சனி, சந்திரன் இவர்கள் இருந்து, திரி கோணத்தில் நீச்சக் கிரகமோ பாபக்கிரகமோ இருந்தால் இது தேவேந்திர யோகம்:—இது எல்லா யோகத்தைக்காட்டிலும் முக்கிய யோகம். இதற்குப் பலன் விபரமாகச் சொல்லவில்லை. அதாவது எல்லா நன்மையும் உண்டு.

(26) இராஜ யோகம்:—

சுபர்கள், பாபர்கள 2-லும், லக்கினத்திலும் இருந்து குரு நீச்சஸ் ஸ்தானத்திலோ சத்துரு ஸ்தானத்திலோ இருந்தால் பிதூர் கஷ்டம், மகா சௌக்கிபம், கடைசியில் துயாகிறன்.

4 கிரகங்கள் லக்கினத்தில் இருந்து, 2-ல் சுக்கிரன் இருந்து 9-லோ 6-லோ சனி இருந்தால் இராஜ யோகம்:—இதற்குப் பலன் மஹா சுகி.

(27) சூல யோகம்:—

1, 8, 12-ல் குரூர கிரகங்களும் சந்திரனும் இருந்தாலும் அல்லது எல்லா கிரகங்களும் மூன்று ஸ்தானத்தில் இருந்தாலும் இது சூல யோகம்:—ரோகி, தனமில்லாதவன், சந்தான விஷயத்தில் சிந்தை உண்டு.

(28) பாஸ்கராஸ்த யோகம்:—

9-ல் சந்திரனும், 4—ல் அல்லது 11-ல் சுக்கிரனும், 3—ல் அல்லது 11-ல் குருவும், 5-ல் நான்கு குரூர கிரகங்கள் இருந்தால் இது பாஸ்கராஸ்த யோகம்:—மஹா சுகம் 40 வயது முதல் 60 வயது வரையிலும் மஹா சுகி, இராஜாக்களால் கொண்டாடப்பட்டவன், குபேரனுக்குச் சமானமானவன். 60 வயதுக்குமேல் கவலையும், பயமும், பணச்சேதமும், துக்கமும் உண்டாவதுடன் பிள்ளை, ஸ்திரீ, மித்ரர்களால் துக்கமுண்டாகும். இவனுக்குப் பிள்ளை பிறக்காது, பிறந்தாலும் நிற்காது.

(29) வேறுவிதமான பாஸ்கராஸ்த யோகம்:—

1—லும், 4-லும் சௌமிய கிரகங்கள் இருந்து, 8-ல் சுபனும் 9-ல் அசுபனும் இருந்தால் இது பாஸ்கராஸ்த யோகம்:—சுகமுண்டு, சுக்ல காலத்தில் விருத்தியும் கிருஷ்ண காலத்தில் க்ஷயமும் உண்டு.

(30) சந்திராஸ்த யோகம்:—

1, 4, 7, 9 இதில் ராகு, சந்திரன், கேது, சனி இருந்து குரூர கிரகங்கள் 2-லும் சௌமிய கிரகங்கள் 1-லும் இருந்தால் இது சந்திராஸ்த யோகம்:—இவன் அல்பாயுசுள்ளவன், ஒருக்கால் இவன் ஜீவித்திருந்தால் குபேரனுக்குச் சமானமாய் இருப்பான். இவனுக்குச் சௌக்கியமில்லை, பிள்ளையுமில்லை, தீர்க்க ரோகியாய் இருப்பான்.

(31) தாருண யோகம்:—

கர்மாதிபதியோ (அதாவது 9-க்குடையவனை) 2-க்குடையவனை குரூரனை, குரூரனுடன் சேர்ந்தோ இருந்தாலும் அல்லது அங்காரகனால் சந்திரன் பார்க்கப்பட்டாலும் இது தாருண யோகம்:—பிள்ளை பிறக்கும் ஆனால் ஜீவிக்காது, சில சமயம் கன்னிகைகள்பிறந்து சிலதுபோய் சாகாமல் ஒன்றோ இரண்டோ நிற்கும்.

(32) சந்திரராஜ யோகம்:—

4-ல் சந்திரனும், 4-ம் இடத்திற் குடையவன் சந்திரன் வீட்டில் இருந்தால் இது சந்திரராஜ யோகம்:—ஜாதகன் மந்திரி, சுகி, தனவான்.

(33) சதுஸ்சாகர யோகம்:—

நான்கு கேந்திரத்திலும் சௌமிய கிரகங்கள் இருந்து, குரு உச்சனைப் இருந்தால் சதுஸ்சாகர யோகம்:—ஜாதகன் மஹாராஜன், பெரிய பணக்காரன், அவனுக்குப் பிள்ளைபாலும் ஸியாதியாலும் துக்கம் உண்டு.

(34) சாகர யோகம்:—

2-ல் 3-க்குடையவனும், 1-ல் கர்மாதிபதியும் (10-ம் வீட்டதிபதியும்) இருந்து குரூர கிரகங்கள் 2-லும், சௌமியக் கிரகங்கள் 3-லும் இருந்து எல்லா கிரகங்களால் சந்திரன் பார்க்கப்பட்டால் சாகர யோகம்:—பைத்தியக்காரப் பிள்ளை பிறக்கும். ஜாதகன் ஜாதியை விட்டு வேறு ஜாதி போய்விடுவான், அதனால் பந்துக்கள் அவனை ஜாதியிலிருந்து விலக்கிவிடுவார்கள்.

(35) பிராதுருஹ யோகம்:—

9-ல் குரூரன் இருந்து பிராதுரு ஸ்தானத்தில் (i.e. 3-ல்) ஒரு குரூரன் சனி செவ்வாயுடன் சம்மந்தப்பட்டு இருந்தால் இது பிராதுருஹ யோகம்:—இவனுக்குப் பிராதா இருக்கமாட்டான்.

(36) திருசு யோகம்:—

அங்காரகன் வீட்டில் இராகுவும், சூரியன் வீட்டில் சனியும், சனி வீட்டில் சூரியனும் இருந்தால் இது திருசுயோகம்:—காயார், தகப்பனர், இவர்களுக்கும் தனக்கும், தன் வம்சத்தில் எல்லோருக்கும் நாசம் உண்டாகும்.

(37) சத்தர யோகம்:—

10, 1, 4 இதில் குரூரன் இருந்து, சுபக்கிரகங்கள் 5-லும், 1-லும் இருந்து 8-க்குடையவன் பிராதுரு ஸ்தானத்தில் (3-ல்) இருந்தால் இது சத்தர யோகம்:—ஜாதகன் சுகி, நல்ல கர்மம் செய்பவன், தர்மிஷ்டன், அனேக பிள்ளையுடையவன், அனேக ஸ்திரீகளை அனுபவிப்

பவன், புத்திமான், கெட்டிக்காரன், தன் குலத்தில் சிறந்தவன், யானை குதிரையுடையவன், சொந்த சித்தன், கொடையாளி, பணக்காரன், குலசீலன், 16-வயதுக்குமேல் தன் பலத்தால் சௌக்கிய மடைபவன், 30 வயதுக்கு மேலே பஹுர சௌக்கிய முடையவன், இராஜாவாகவோ இராஜாவால் கொண்டாடத் தகுந்தவனுப் இருந்த குபேரனுக்குச் சமானமா யிருப்பான். 40 வயதுக்கு மேலே பீடை வரும், வாத பீடையுர், இராஜரோகமும் வரும், காச சுவாச ரோகங் கள் அடிக்கடி வரும், உடர்பு தளர்ந்து போய்விடும்.

(38) குரூர யோகம்:—

புத்திர ஸ்தானத்தில் குரூரன் இருந்து, குரூரர்களால் பார்க்கப் பட்டு குரூர ஸ்தானத்தில் சந்திரனிருந்தால் குரூர யோகம்:—இவ னுக்குத் தீர்க்கரோகம் உண்டு, அதிசாரம் உண்டு, சந்ததி இல்லை, கோபம் உடையவன், பயமுடையவன்.

(39) வஜ்ஜிர யோகம் :—

புத்திரஸ்தானதிபதி (அதாவது 5-க்குடையவன்) 6-லோ, 8 லோ இருந்து சத்துரு ஸ்தானதியுடன் கூடினலுஞ் சரி அல்லது புத்திர ஸ்தானதி குரூரனுடைய வீட்டில் இருந்து சத்துரு ஸ்தானதியுடன் கூடினலுஞ் சரி, அப்போது புத்திர ஸ்தானத்தைச் சூரியன் பார்த்தால் இது வஜ்ஜிர யோகம்:—ஜாதகனுக்கு புத்திர சிந்தையுண்டு, பிறக்கிற பிள்ளை சாகும், ஒரு சமயம் பிள்ளை ஜீவித்திருந்தால் அந்தப் பிள்ளை 6 வயதில், 8-வயதில் சாகும். இரண்டு பெண் இருக்கும், அவ னுடைய மனைவியும் பிள்ளை பிறக்க வேணும் என்ற ஆசையுடைய வளாய் இருப்பாள்.

(40) ஜகத்பதி யோகம்:—

1-ல் சந்திரன், ராகு, சூரியன், சனி, புதன் இவர்கள் கூடியிருந் தால் ஜகத்பதி யோகம்:—இவன் தேவராஜாவாகவோ, அசுர ராஜா வாகவோ இருப்பான். இவன் காமி, யுத்தத்தில் விருப்பமுடைய வன், புத்திர பௌத்திராதிகளுடையவன், பெரிய ஐஸ்வரியமுடைய வன், மஹுர பாக்கியசாலி, இவனுடைய வேலைக்காரனுடைய வீட்டில் கூட வேலைக்காரர்கள் இருப்பார்கள். விவேகமுடையவனுய் இரு ப்பான், சக்கிரவர்த்தியாய் இருப்பான், ஒருவருக்கொருவருள் விரோ தத்தை உண்டுபண்ணக் கூடியவன்.

(41) விஜய யோகம்:—

புத்திர ஸ்தானாதிபதி நல்லவர் வீட்டில் இருந்தாலோ அல்லது புதன் குரு கிரகத்துடன் சேர்ந்திருந்தாலோ, அப்போது குரு கேந்திரத்தில் குரு இருந்தால் இது விஜய யோகம்:—பலன் புத்திரலாபம்.

(42) கலாப யோகம்:—

5-க்குடையவன் 4-ல் இருந்து, 4-க்குடையவன் 6-ல் இருந்து, சூரியன், சனி, அங்காரகன் இவர்கள் 6, 5, 11, 12-லோ அல்லது குரு கேந்திரத்திலோ இருந்தால் கலாபயோகம்:—பிள்ளை சாகும், இரண்டு பெண் உயிருடன் இருக்கும்.

(43) மானச யோகம்:—

(10-க்குடைவன் 12-ல் இருந்து, சந்திரனுடன் கூடினலோ அல்லது சந்திரனல் பார்க்கப்பட்டாலோ) அல்லது (திரிகோணத்தில் நான்கு கிரகங்கள் இருந்து அந்த திரிகோணாதிபதியால் பார்க்கப் பட்டாலும்) இது மானச யோகம்:—சதா ஓயாம்படியான விளையாட்டில் கேளிக்கையானவன், (அதாவது சஞ்சல கேளி) பேர்பாதி இராஜ சன்மானமுடையவன், பணமுடையவன், கீர்த்தியுடையவன், மத்திய காலத்தில் சுக துக்கம் உண்டு, விருத்தகாலத்தில் சௌக்கியமுண்டு, இராஜாக்களாலே கொண்டாடப்பட்டவன், இவனுக்கு ரோகத்தாலே பயம், வாத பீடையுண்டு.

(44) அனுபவ யோகம்:—

மூன்று ஸ்தானத்தில் சௌமியர்களும், மூன்று ஸ்தானத்தில் பாபிகளும் இருந்து, 2-லும், 3 லோ, அல்லது 6-12 லோ சுபக்கிரகங்கள் இருந்தால் அனுபவ யோகம்:—மஹா கிலேசமுடையவன், ரோக முடையவன், தர்பலமாயும், சபலமாயும் உள்ள புத்தியுடையவன், பித்தவாதம் அதிகம், சிலேஷ்மம் கொஞ்சமுடையவன், 9, 10, 12-வது வயதில் வேலைக்காரராலும் பந்துக்களாலும் பயமுண்டு, 18-வயதுக்கு மேல் தன்னலே சௌக்கியமுண்டு. 26-வயதுக்கு மேலே மஹா சௌக்கியமுண்டு.

(45) சுப யோகம்:—

லக்கினாதிபதி, சுபக்கிரகங்கள், புதன், சனி இவர்களுடன் சம்மந்தப்பட்டு கேந்திர திரிகோணத்தில் இருந்து, குருவைச் சூரியன்

பார்த்தாலும், அல்லது சனியைச் சூரியன் பார்த்தாலும் இது சுப யோகம்:—இவனுடைய தகப்பனுக்குக் கஷ்டமுண்டாகும். இவன் இராஜாவுக்குச் சமானமாகவோ, கிராமாதிபதியாகவோ, தேசாதிபதியாகவோ, இராஜாவாகவோ சக்கிரவர்த்தியாகவோ ஆவான்.

வேறு விதமான சுப யோகம்:—

லக்கினாதிபதி சுபர்களுடனும் புதனுடனும் சேர்ந்து ஆட்சி, உச்சம், கேந்திரத்தில் இருந்தாலும் சரி அல்லது சுபக்கிரங்கள் ஆட்சியிலோ 9-லோ, 2-லோ இருந்தாலும் சரி இது சுப யோகம்:—இராஜாக்களாலே கொண்டாடத்தகுந்தவன், பணக்காரன், அதிக சுகி, இராஜ மந்திரி ஆவான்.

(46) வைதித யோகம்:—

5-க்குடையவன் 6-லோ, 2-லோ, 4-லோ, 8-லோ, 5-லோ இருந்தாலும் அலலது 5—க்குடையவன் குரூரனுய் இருந்து 5—ல் சுபனால் பார்க்கப்பட்டாலும், லக்கினத்திற்கு 5-ல் இராகுவும் சூரியனும் அல்லது சனியும் இருந்தால் இது வைதித யோகம்:—பிள்ளை இல்லை, பிறந்தாலும் ஜீவிக்காது: பிரபலமான பெண் பிறக்கும்.

(47) அற்புத யோகம்: —

9—ல் சௌமிய கிரகங்களோ, அல்லது உச்சஸ்தானத்தில் அங்காரகன் இருந்து அப ஜெயஸ்தானத்தில் குரூரர்கள் இருந்தால் இது அற்புத யோகம்:—பணக்காரன், சுகி, மானி, நீண்ட கண்களுடையவன், கீர்த்தியுடையவன், அநேக காரியங்கள் செய்பவன், 8—வது வயதில் தாய் தகப்பனுக்கு நாசமுண்டாகும்.

(48) சூன்ய யோகம்:—

லக்கினாதிபதியும், சனியும் கன்னியா ராசியிலிருந்தாலும் அல்லது 8 ல் அங்காரகனும், புதன், ராகு இவர்கள் துஸ்திக்கியத்திலிருந்தால் சூன்ய யோகம்:—சூன்ய கதி (i.e. நடை கொஞ்சம் சூன்யம்), சூன்ய புத்தி, எப்போதும் அசலானுக்கு வேலைக்காரனுயிருப்பான். இவனுக்கு 26, 30, 44 வயதில் பணம் விரையமாகும்.

(49) நந்த யோகம்:—

சந்திரன் வீட்டில் சனி, சனி வீட்டில் சந்திரன் குரூரருடன் கூடியிருந்து கேந்திர திரிகோணங்களில் சௌமியர்களிருந்தால் இது

கந்த யோகம்.—26 வயதுக்குமேல் செளக்கியமுண்டு, 50 வயதுக்கு மேல் மஹா செளக்கிய முண்டாகும். தனமுண்டாகும், இராஜாக்களால் கொண்டாட்டமும் சன்மானமும் உண்டாகும்.

இன்னொருவிதமான கந்த யோகம்.—

மூன்று அல்லது ஏழு வீடுகளில் ஒவ்வொரு கிரகம் இருந்தால் கந்த யோகம்:—தீர்க்காயுளாவனும் இராஜ வல்லபனும் இருப்பான்.

(50) ஜீவ யோகம்:—

(5-ஆம் 2-ஆம செளமிய கிரகங்கள், 6-ல் பாபக்கிரகங்களிருந்தாலும்) அல்லது (கேந்திரத்தில் செளமிய கிரகங்களிருந்து சப்தமத்தில் பாபக்கிரகங்களிருந்தாலும) அப்போது ஜீவ யோகம்:—ஜாதகன் சுகி, வெகு புத்திரன் இராஜாக்களால் கொண்டாடப்பட்டவன், பணக்காரன், குபேரன்.

(51) ரஜ்ஜுபங்க யோகம்:—

லக்கினத்தில் சுக்கிரன் குருவுடனிருந்து, தர்மாதிபதி சந்திரன் உச்ச ஸ்தானத்திலாவது லாப ஸ்தானத்திலாவது இருப்பது ரஜ்ஜுபங்க யோகம்:—பத்து வருஷம் சுகநாக்கும் இரண்டுமிருக்கும். அதற்கு மேல் நான்கு வருஷம் ராஜபோகனுகவும் மஹா சுகியாகவும் இருப்பான். 32-வது வருஷம் வரைக்கும் தனம், தான்யம், புத்திரன் இவைகளுடையவன். விருத்த காலத்தில் மஹா சுகியாய் இருப்பான்.

(52) கார்முக யோகபலம்:—

1-ல் குரு, 2-ல் சுக்கிரனிருந்து, புதன் சந்திரனுல் பார்க்கப்பட்டாலும் சுவ சேஷத்திரத்திலாவது மித்ர சேஷத்திரத்திலாவது 4-லாவது இருந்தால் கார்முக யோகம்:—ஜாதகன் சுகி.

இன்னொருவித கார்முக யோகம்:—

சனி விட்டில் அங்காரகனும், அங்காரகன் விட்டில் சனியும் ராசுவுமிருந்து 2-லாவது, 4-லாவது குரு கிரகமிருந்தால் கார்முக யோகம்:—சுகமே கிடையாது. ஆதியில் போகியா யிருப்பான். கடைசி காலத்தில் தரித்திரத்தை அனுபவிப்பான், சந்தான சிந்தை உண்டு, தீர்க்க ரோகி.

(53) உன்னத யோகபலம்:—

லக்கினுதிபதி சத்துரு சேஷத்திரத்திலிருந்து 1, 6, 8, 12, 5

இதை அங்காரகன் பார்த்தும், சௌமிய கிரகங்கள் கேந்திர திரிகோணத்திலுமிருந்தால் உன்னத யோகம்:—சுகியாயிருப்பான், தனவான், புத்திரனான், இராஜயோகியாவான்.

வேறு கிரந்தத்தில் உன்னத யோகம்:—

கேந்திர திரிகோணத்தில் சுபாள் இருந்தாலும், உச்சத்திலாவது சுபவர்க்கத்திலாவது இவர்களிருக்குப்பட்சத்தில் உன்னத யோகம்:—நித்தியம் தனலக்ஷ்மி சம்பத்து அனுபவிப்பான்.

(54) ஊர்த்துவ யோகம்:—

லக்கினத்திலும், சுப க்ஷேத்திரத்திலும் சுபர்கள் இருந்து, 10லும், 4லும் பாபிகளுமிருந்து, மித்திர க்ஷேத்திரத்தில் குருவும் இருந்தால் ஊர்த்துவ யோகம்:—சுகி, புத்திமான், சபையில் சாமர்த்தியமாய் சொல்லுபவன், குணவான், தர்மிஷ்டன், ஜெகப்பிரதிஷ்டன், இராஜ பூஜிதன், மெத்தை வீடு, கிணர், குளம், தோப்பு இவைகளை செய்வான், சந்தான சிந்தையுண்டு. 18—வயதுக்குமேல் தன்னுடைய பிரயத்தினத்தினால் சௌக்கியமுண்டு. 22 வயதுக்குமேலே வெகு சௌக்கியமும் தனமுமுண்டு, 32-வது அல்லது 36-வயதுக்கு மேலே சமமான பலன். அறுபது வயது வரையிலும் சௌக்கியமுண்டு. 60-க்கு மேல் 62-க்குள் பறைவாய் வைத்திருந்த பொருளை விஷயமாய் மனச்சிந்தையுண்டு. 62 வயது முடிவில் தனம் வந்து சேரும். ஆயுள் பரியந்தம் தானஞ் செய்வான், சந்தானம் உண்டு, குதிரையுண்டு.

(55) கிருத்ய யோகம்:—

5, 7-க்குடையவர் பாபியாகவோ அல்லது பாபனால் பார்க்கப்பட்டோ இருந்து, கேந்திரத்திலும், இரண்டிலும் சௌமியர்கள் இருந்தாலும் அல்லது குரு க்ஷேத்திரத்தில் குரு இருந்தாலும் ஆகிருத்யா யோகம்:—வெகு சம்பத்து கிடைக்கும், இராஜமான்யன், தனம் தான்யம் உண்டு, வேலையாட்களுடையவன், சந்தான சிந்தை உண்டு. பிள்ளை பிறந்தாலும் இறக்கும், பிள்ளைபைப் பணம் கொடுத்து வாங்குவான்.

(56) விகத யோகம்:—

10—ல் 10—க்குடையவனும், 6, 7, 5, 8, 9 இதில் பாபிகளுமிருந்தால் விகத யோகம்.—32 வயது வரைகதம் தனமும் சௌக்கியமும்

கிடையாது. அதற்குமேல் கஷ்டப்பட்டு கொஞ்சம் சௌக்கியம் வரும். 40 வயதுக்குமேல் யானை, குதிரை, தனம் இவைகளுடைய வன், 60 வயதுக்குமேல் மஹாராஜாவாகவும், மஹாசுகியாயும் ஆகு வான், அன்னியதேச சித்தாசர்கள் தன் வாசலில் வந்து காத்திருப் பார்கள், அடங்கியிருப்பார்கள், சரீரத்தில் மஹா ரோகமும், சோக மும் உண்டு.

(57) காவ்ய யோகம்:—

பாபக்கிரகங்கள் 11, 3, 1 இவைகளிலும் 5–வது வீட்டுக் குடையவனிருக்கும் வீட்டிற்கு 6-வது வீட்டிலும், சத்துரு வீட்டி லும் இருந்தால் காவ்ய யோகம்:—பிள்ளையில்லாததால் சுகமில்லை. பிராதா இல்லாததாலும் துக்கமுண்டு. 22 வயதுக்குமேல் சுகம், புத் திரவிஷயமான சிந்தையும் ரோகமுமுண்டு.

(58) கற்புர யோகம்:—

10-க்குடையவனும், 4-க்குடையவனும் குரூர கிரகங்களுடன் கூடி 6-லோ, 8-லோ இருந்தாலும் அல்லது குருவும், சனியும் 2-ல் இருந்தால் கற்புர யோகம்:—தன தான்யங்களுக்குக் கஷ்டம் உண்டு. சில சமயங்களில் சுவல்ப லாபம் உண்டு. 20-க்கு மேல் நல்ல சுகம் உண்டு. 22 வயதுக்குமேல் தன் பலத்தாலே நல்ல சௌக்கியமுண்டு. 28-வது வயதில் சுகமும், சௌக்கியமும் வந்து சேரும், கர்ணனுக்குச் சமானமான கொடையாளி, எந்த இடத்திலும் தடங்கலில்லாத பிர வேசமுண்டு. தன்னிஷ்டப்படி அனுபவிப்பவன், நல்ல போகத்தை அனுபவிப்பவன், பிதாவுக்கு ஒரு காலத்திலும் இடஞ்சலே செய்ய மாட்டான். அவன் லாபத்திற்குச் சில சமயத்தில் விக்கினமுண்டு. ஆனால் சுகம் மாத்திரம் எப்போதும் உண்டு.

(59) சக்கர யோகம்:—

12-லாவது, 8-லாவது குரூரக் கிரகமிருந்தாலும், 8-வது வீட்டுக் குடையவன் 12-லிருந்தாலும், 10-வது வீட்டில் சுபர்களும், 2-ல் குரூரர்களு மிருந்தாலும் சக்கர யோகம்:—இது மிகவும் சுகத்தைத் தரக்கூடிய போகம். தாதா, போகாதிகள் அனுபவிக்கிறவன், அரசர் களால் வெகுமதிக்கப்பட்டவன், குணங்களில் உயர்ந்தவன், பரோப காரி, தர்ம சிந்தையுடையவன், புகழுடையவன், அநேக சந்ததியுடை யவன், 15-வது வயது முதல் 16–வது வயது வரையில் தன் பலத்

தால் செளக்கியம், யானை, குதிரை, தனம் இவைகளுடையவனாய் அரசனுகவோ அல்லது மந்திரியாகவோ யிருந்து சுகமுடையவனுக யிருப்பான். பிறகு ஒரு கோத்திரப் புருஷனை வயிற்றிலடித்து அதனால் அவனுக்கு சிந்தையுண்டாகும், எப்போதும் சுவல்ப தனத்தாலேயே செளக்கியமுண்டு. 26-வது வயதிலாவது அல்லது 42-வது வயதிலாவது நீண்ட வேதனை வயிற்றிலோ, கையிலோ, காலிலோ உண்டாகும்.

(60) மோதித யோகபலம்:—

குருவுனுடைய விட்டில் சூரியனுவது, குஜன் வீட்டில் குருவாவது, கேந்திரத்திலாவது, இரண்டிலாவது, ஐந்திலாவது, லக்கினத்திலாவது சுபர்களும், அசுபர்களு மிருந்தால் யானை, குதிரைகளுடன் கூடின சுகத்தைத தரும் மோதித யோகமாகும்:—அரசனால் மதிக்கக் கூடிய பணக்காரன், அநேக வேலையாட்களுடையவன், அரண்மனையில் வேலைக்காரன்.

(61) சாதாரண யோகம்:—

சனியினுடைய விட்டில் சந்திரனும் மற்றக் கிரகங்களுமிருந்தாலும், 6-ல் செவ்வாயும், 8-ல் சுக்கிரனும் அல்லது 8-ல் சனியுமிருந்து 10-வதுவீட்டை சுபரும் அசுபரும் பார்த்தாலும் சாதாரணயோகம்:—தன தான்யங்களால் பிரகாசிப்பான். கொஞ்சகாலம் விருத்தியும் கொஞ்சகாலம் நாசமும் நேரிடும். கண்ணில் நோயாவது வரும் அல்லது ஜாதகன் நொண்டியாகவாவது, குஷ்டரோக முடையவனுகவாவது இருப்பான். 22, 26 வயதில் கண்ணில் வேதனை, அதிலிருந்து கண பார்வை குறைந்துகொண்டேவரும்.

(62) விஜய யோகம்:—

5-வது வீட்டிற்குடையவர் சுக்கிரனுடைய ராசியில் பாபக்கிரகத்துடன் கூடியிருந்து, குரு செவ்வாயால் பார்க்கப்பட்டு குரு க்ஷேத்திரத்திலிருந்தால் எல்லா அழிவையுந் தரக்கூடிய விஜய்யோகமாகும்:—ஜாதகனுக்குச் சந்ததி கிடையாது. வெளுத்த சரீரமுடையவன், முகம் வசிகரமில்லாதவன், அதிக சந்தோஷமுடையவன், மதம் பிடித்தவன், தன் இஷ்டப்படி செல்லத்தக்கவன், ஈனத்தொழில் செய்பவன், சந்ததி ஒருசமயம் உண்டானாலும் ஜீவித்திராது, கடைசியில் தெய்வானுகூலத்தால் ஒரு குழந்தை இரண்டு குழந்தை நிலைக்கும்.

(63) ஸ்திரீவச்ச யோகம்:—

4-வது விட்டுக்காரனுவது, 8-வது வீட்டுக்காரனுவது, லக்கினாதி பதியாவது, குருரர்களாயிருந்தாலும், குருரருடன் சேர்ந்திருந்தாலும், 4, 6, 8, 12ல் குரூரக்கிரகங்களிருந்தாலும் அல்லது 4, 6, 8, 12 பாபக்கிரக ராசியாய் இருந்தாலும், குரூரக்கிரங்கள் சத்துரு சேஷத்திரத்திலிருந்தாலும், அவர்களுடன் குரு இருந்தாலும் இது ஸ்திரீ வச்ச யோகம் ஆகும்:—சுக முடையவன், நற்கர்மத்தைச் செய்பவன், தீர்க்காயுளுடையவன், வெகு புத்திரருடையவன், வெகு ஸ்திரீகளுடன் கூடினவன், புத்தியுடையவன், சமர்த்தன், குலத்திற்குப் பிரதானமானவன், யாசிக்கிலையுடையவன், சஞ்சலமில்லாத மனமுடையவன், கொடையாளி, தனவான், காமசமுடையவன். 30-வயதுக்கு மேல் சுகம், அரசரால் விருப்பத்தக்கவனும் குபேரனுக்குச் சமானமான தனமுடையவனும் இருப்பான். 40-வயதுக்குமேல் சுவாச காசம் முதலிய ரோகங்கள் அடிக்கடி வந்துகொண்டு நீண்ட காலம் இருக்கும்.

(64) ராக்ஷச யோகம்:—

லக்கினத்தில் இராகுவாவது; 4, 8, 12ல் சனியாவது, 6, 8, 12ல் குருவாவது; 9, 5ல் பாபக்கிரகங்களாவது இருந்தால் இந்த கிரகங்களுக்கு ஏற்ற ராக்ஷச யோகம் என்று பெயர்:—அற்பாயுசு, புண்ணிய வசத்தால் ஜீவித்திருப்பான்.

(65) உற்பவ யோகம்:—

3-ல் இராகுவும், 6-ல் சனியும், 12-ல் குருவும், திரிகோணத்தில் பாபக்கிரகங்களும் இருந்தால் உற்பவ யோகமாகும்:—பிள்ளையற்றவன், நோயுடன் கூடியவன், கஷ்டப்பட்டு பணம் சம்பாதித்து அதனால் சுகமுண்டு.

(66) பீஷண யோகம்:—

லக்கினத்தில், 9-ல், 2-ல், 10-ல், 7-ல் அல்லது 5-ல் குரூரகிரகங்களும், 2-ல் அல்லது லக்கினத்தில் நீச்ச கிரகமிருந்தால் பீஷணயோகமாகும். தன தான்யமுடையவன், கொஞ்சகாலம் விருத்தியுடையவன், கொஞ்சகாலம் க்ஷயமுடையவன்.

(67) சௌர யோகம்:—

9-ல் சனி, 5-ல் குரூரக்கிரகம் அல்லது சந்திரன், மற்றவர்கள்

9, 11-ல் சூரியனுடனும் இருந்தால் சௌபாயோகமாகும்:—புத்திரதாச முடையவன்.

(68) நஹுஷ யோகம்:—

லக்கினத்தில் குரூர கிரகமும், உச்சத்தில் அல்லது திரிகோணத்தில் குருவும், சனி அல்லது புதன் லக்கினத்திலும், 11.ல் குரூரக்கிரகமிருந்தால் நஹுஷ யோகமாகும்:—மந்திரி அல்லது அரசனுவான். பண்டிதன், சுகமுடையவன்.

(69) கேந்திர யோகம்:—

5-ல் பாபர்களும், 5-வது வீட்டுக்காரன் பாபர்களுடன் கூடியும், பாபக்கிரகங்கள் 12, 2-லும் கேந்திரங்களிலுமிருந்தால் இது கேந்திர யோகபாகும்:—பணமுள்ளவன், அரசரால் பூஜிக்கப்பட்டவன், தர்ம சிந்தனையுடையவன், சுகமுடையவன், போக முடையவன், அதிக பித்த சரீரமுடையவன், அநேக இடங்களில் தானஞ் செய்பவன், திரியுஞ் சுபாவமுடையவன், ஜென்மாந்தர பாவத்தால் சந்ததியற்றவனுயிருப்பான்.

(70) குல யோகம்:—

10-வது வீட்டிற்குடையவனும், 4-வது வீட்டிற்குடையவனும் 1, 6, 8, 12-லுமிருந்து, 1-லும் 8-லும் பாபர்களுமிருந்து, சுபர்களும் பாபர்களும் 7 லிருந்தால் இது குலயோகமாகும்:—முதலிலும் மத்தியத்திலுஞ் சௌக்கியம், கடைசியில் தனமுண்டு, இல்லாவிடில் சகோதர ஹீனனும் மந்த புத்தியுடையவனுமிருப்பான்.

(71) மாதங்க யோகம்:—

ஐந்தாம் வீட்டுடையோன் சத்துரு வீட்டிலிருந்தாலும், சத்துருவுடன் கூடினும், பார்க்கப்பட்டிருப்பினும் 1, 9, 11-ல் சுபர்கள் குரூரர்களுடனிருந்து ஐந்தாம்வீட்டை நோக்கினும் மாதங்க யோகம்:—பலன்:—இவன் முன் ஜன்மத்தில் பரமசிவனை பக்தி செய்திருந்த படியால் இந்த ஜன்மத்தில் இவன் பிதா அதிக வியாபகனுயிருப்பான். ஜாதகன் பிதுரு சௌக்யமுடையவன், பந்துமித்ர்களுடன் கூடியவன், புகழுடையவன், அதிக சந்ததி உடையவன். 16-வது வயதில் தன் பலத்தால் விசேஷ சுகமடைவான். யானை, குதிரை, தனங்களுடன் கூடிய அரசனுக்கு நிகராகவாவது மந்திரியாகவாவதிருப்பான், இப்போதும் ருத்ரசேவை செய்தால் அவர் அனுக்ரகத்தால்

மேற்சொன்ன பலனடைவான். முன்னுல் நிந்திக்கப்பட்ட தவம் செய்தபடியால் பலனற்றவனுக இருப்பான், புத்ர நாசத்தால் அதிக சிந்தை நேரும்.

(72) டங்கஜ யோகம்:—

சுக்கிரன் வீட்டில் குஜனும் 1, 6, 8, 12-ல் சனியும், 5, 9-ல் அஷ்டமாதிபனுவது, சந்திரது இருந்தால் பங்கஜ யோகம்:—பலன்:—வெளுத்தவன், சபலமாய் பேசுபவன், அழகிய சரீரமுடையவன், மெதுவான கண்களுடையவன், அல்ப மபிருடையவன், இனிமை யானவன், வாசாலகன், கண்ணங்களழகியவன், தனவான், சுகி, போக முடையவன், அரசன், கொண்டாடத்தக்கவன், தனத்திற்கு அதி பதி, யானை, குதிரை, பொருளுடையவன், தன் பணியாளரைக் காப் பவன், கொஞ்சம் பீடையுண்டாகும், ஆகையால் இடையில் ஜபம் தானம் செய்யவும், 1, 2, 5, 6, 8, 11-ல் வருஷத்திற் கொருதாமாவது மாசத்திற் கொருதாமாவது கஷ்டமுண்டாகும்.

(73) பாவக யோகம்:—

2, 9, 12-ல் குருசர்களும் லக்னுதிபன் குருருடன் கூடியிருந்தா லும், கர்ப்ப காலத்தில் பிதாவுக்கு மரணம், பந்த (கட்டுப்படுதல்) முண்டாகும். இது பாவக யோகம்:—பலன்:—அதிக கஷ்டந்தரும், சாந்திசெய்யத் தீரும்.

(74) சிவ யோகம்:—

குருர சேஷத்திரத்தில் சுபரும், சுபர் வீட்டில் பாபிகளும், சத்துரு வீட்டில் சில கிரகங்களுமிருந்தால் சிவயோகம்:—பலன்:—பூர்வஜன்ம மகிமையால் சுகமுடையவன், தன தான்யத்துடன் கூடியவன், தினந் தோறும் மகாராஜாவுக்கு பணி செய்வான், தீர்க்க நோயுடையவனு வது புத்திரனற்றவனுகவாவதிருப்பான். சாந்தி செய்யத் தீரும்.

(75) தூம்ர யோகம்:—

சனி வீட்டில் ராகு இருக்கவும், 5-ல் சுபரிருக்க, சூரியனும் செவ்வாயும், சுதஸ்தானத்தை (5-வது வீட்டை) நோக்கில் தூம்ரயோ கம்:—பலன்:—முன் ஜென்மத்தில் பாலஹத்தி செய்ததால் இச்ஜென் மத்தில் அந்த பாபத்தால் நோயாளியாகவும், புத்திரனற்றவனுமிருப் பான், சாந்திசெய்யத்தீரும்.

(76) கிரம யோகம்:—

ஜென்ம காலத்தில் சனி 3, 10-லும் குஜன் 12-லும் இருந்தால் கிரம யோகம்—பலன்:—ஜாதகனுடைய மனைவிக்குக் கர்ப்பமுண்டாகாது, உண்டாகில் உடனே குழவி மறிக்கும், சாந்தி செய்யவும்.

(77) சதுர யோகம்:—

குஜன் வீட்டில் சுக்கிரனும், சுக்கிரன் வீட்டில் குஜனும், 6, 8ல் குருவாகிலும், லக்கினாதிபன் சத்துரு வீட்டிலாகிலும் இருந்தால் சதுர் யோகம்—பலன்:—தனமுடையவன், அரசரால் வெகுமதிக்கப்பட்டவன், சுகமுடையவன், போக மனுபவிப்பவன், காமமுடையவன், அனேக இடங்களில் தானம் செய்பவன், சந்ததி விஷயத்தில் சிந்தை கேரிடும், அப்போது ரோகமுண்டாகும். 38-வயது சென்றதும் தீர்க்க ரோகமுண்டாகும். 40-ல் கஷ்டம், சிந்தை, செலவு நேரிடும். முன் பாபத்தால் மஹா ரோகமுதிக்கும், சாந்தி செய்யத்தீரும்.

(78) வர்த்தமான யோகம்:—

கர்மாதிபன் பாபியுடன் கூடி சுக்கிரன் வீட்டில் சுக்கிரனுடன் இருந்து மற்ற பாபிகளும் சுபரும் லக்கினத்திலிருந்தால் வர்த்தமான யோகம்—பலன்:—முன் ஜென்மத்தில் 1000 பசுக்கள் தானம்செய்து ப்ராமண போஜனம், பொன் தன தான்யதானம் செய்தபடியால் இச் ஜென்மத்தில் அரசனுகவாவது, அரச மந்திரியாகவாவது இருந்து தன தான்யங்களுடன் கூடியவனுய் அரசரால் வெகுமதிக்கப்பட்டவனுய் ஆவான். நீச்ச குலத்தில் பிறந்தாலும், அரசனுவான். 10–16-வது வயதில் அரசனுல் மதிக்கத்தக்கவன், அரசாங்கத்தில் பணிசெய்து முதுமை காலத்தில் சீக்கிரம் சௌக்யத்தை அடைவான், பச்சாத்தாப மகிமையால் சரீரத்தில் கஷ்டமுண்டாகிறது, 21 அல்லது 30-வது வயதில் ரோகமுண்டாகும், சுகமும் கஷ்டமும் மாறி மாறிவரும். பிறகு சந்ததிக்காக அதிக சிந்தை உண்டாகும், சந்ததி உண்டாகாது, உண்டாயினும் மரிக்கும் சாந்தி செய்யவும்.

(79) வீர யோகம்:—

சனி வீட்டில் குருவும், குரு வீட்டில் செவ்வாயும், பஞ்சமாதிபன் சுபன்விட்டிலிருந்து அது 3, 6, 8-ஆய் இருந்தாலும், பஞ்சமாதிபன் குருவீட்டிலிருந்து குஜனுல் பார்க்கப்படினும் வீரயோகம்:—பலன்:—முன் ஜென்மத்தில் விதவையிடம் கர்ப்ப முண்டுபண்ணி

பாபம் செய்தபடியால் சந்ததியற்றவனுகிறன், சந்ததி உண்டாகாது, அவனுக்குப் பெரிய ரோகம் வரும், வெளுத்து மெலிந்தவன், அதி வாசாலகன், புகழ், சம்பத்து, குணமிருந்தபோதிலும், அடிக்கடி பித்தம் அதிகமுள்ளவனும், தீரனுமாவான், பிரியமான சொல்லுடைய வனும், அல்ப தாதாவும ஆவான், புட்டத்தில் அல்ப மரு உடையவன், சாந்தி செய்யவும்.

(80) பிரமாத யோகம்:—

பஞ்சமாதிபன் 9-லும், 9-ம் அதிபதி 5-லும், குஜனல் பார்க்கப் பட்டிருந்தாலும், 6, 8 அதிபர் 4-லும், 12-ம் அதிபர் 9-லுமிருந்தாலும், பிரமாத யோகம்—பலன்:—ஆசார ரனன், மூன் ஜன்மத்தில் தீர்த்த யாத்திரை ஸ்நானம் அடிக்கடி செய்ததால் இந்த ஜன்மத்தில் அதன பலனுய் நல்ல அழகன், குணமுடையவன், பேசுபவன், தனவான், அரசரால் வெகுமதிக்கத்தக்கவன், சாந்தன், மானி, சுலபமாய்கொடுப் பவன், பிதா சொல்கியமுடையவன், வாயில் இனிமையாய்ப் பேசு பவன், மனதில் காலகூட விஷத்திற்குச் சமமானவன், சந்ததி உண் டாகாது, உண்டாகில் நோயால் வருந்தும், சாந்திசெய்யத் தீரும்.

(81) ஹம்ஸ யோகம்:—

9, 4-ல் புதனும் (விசேஷமாக புதன் விடாகில் உத்தமம்) 3, 6, 11-ல் குரூரர்களுமிருந்தால் ஹம்ஸ யோகம்—பலன்:—இந்திரனுக்கு சமமான அரசனுவான்.

(82) டர்ட யோகம்:—

4, 10-ல் குரூரர்களாவது 1, 6, 8-லாவது லக்கினத்திலாவது லக்கினுதிபன் பாபியாகவாவதிருந்தால் பர்பர யோகம்—பலன்:—முதல் வயதிலாவது, முதல் மாதத்திலாவது, தாயிடமிருந்தாவது தகப்பனிடமிருந்தாவது சிந்தை, தன செலவு, அதிக கஷ்டம், சாந்தி செய்யத் தீரும்.

(83) கோள யோகம்:—

பஞ்சமாதிபன் பாபியால் பார்க்கப்பட்டு 1, 6, 12-லிருந்தாலும், பஞ்சம ஸ்தானம் பாபியால் பார்க்கப்பட்டாலும், கோள யோகம்—பலன்:—பிராமண ஹிம்சை, பெரியோர் நிந்தை, இச் ஜென்மத்தில் சந்ததி உண்டாகாது, சந்ததி யிருந்தால் சந்ததிக்குத் தீர்க்க ரோகம் பிடிக்கும்.

(84) துவஜ யோகம்:—

பஞ்சமாதிபன் 9-லாவது 12-லாவதிருந்து பாபிகள் குஜனல் பார்க்கப்பட்டாலும், பஞ்சமாதிபன் ஐந்தைப் பார்த்தாலும், சுபர்கள் கேந்திரகோணங்களிலிருந்தாலும் துவஜ யோகம்—பலன்: —பாக்கிய வான், அதிக சுகமுடையவன், ரிஷி ஸேவையடைந்து மகிமையால் அரசனுக்குச் சமானனுவான், மறுபடியும் பூனையைக் குட்டியுடன் கொன்றான், அந்தப் பாவத்தால் நோயாளி பாவது, புத்திரனற்றவ னுகவாவது ஆவான். சாந்திசெய்யத் தீரும்.

(85) மணி யோகம்:—

லாபாதிபனுவது, பஞ்சமாதிபனுவது 1, 4, 10-லிருந்தாலும், லக் கினம் சுபக் கிரகங்களுடன் கூடியிருந்தாலும் மணி யோகம்—பலன்:— குணவான், தர்ம புத்தி, தியாகம் செய்பவன், போகமுடையவன், தேவர்களைப் பூசிப்பவன், சுகந்திரத்தால் சௌக்கியமடைவான், இது 40-வயது வரையில் நிச்சயம், விநோதப் பிரியன். நல்ல கவி, வாசால கன், தனதான்யம் நிறம்பியவன், முதுமையில் அதிக சுகமனுபவிப் பான்.

(86) குடேர யோகம்: —

லாபாதிபனுவது, பஞ்சாதிபதியாவது 1, 4, 9-லிருந்தாலும்' மற்ற பாபர் 2, 9-ல் யிருந்தாலும் குபேரயோகம்—பலன்:—முன் ஜன்மத்தில் நல்ல பாத்திரதானம் செய்தவன், பஞ்சகவ்யத்தை ஆகார மாகப் புசித்தவன், புண்ய தீர்த்தத்தில் மரித்தவன், அதனுல் இச்சன் மத்தில் சுகமுடையவனும், நல்ல கார்யம் செய்பவனும், யாகை, குதிரை, தனமுடையவனும், எல்லா லக்ஷணங்களும் நிறம்பியவனும், எல்லா குணங்களையும் அறிந்த சமர்த்தனுமாக இருப்பான். பிறகு முடிவில் கொஞ்சம் கஷ்டம் வரும், பலனழியும், சாந்தி செய்யத் தீரும்.

(87) சிம்ம யோகம்:—

சனி சத்துருவீட்டில் 1, 5-லிருந்து சிம்மத்திலிருக்கப்பட்ட சூரி யனல் காணப்பட்டாலும், 6, 8, 11, 12-ல் குரு கிரகங்களிருந்து மற் றிடங்களில் சுபர்களிருந்தால் சிம்ம யோகம்—பலன்:—தனவான், மானி, அதிக கோபி, ரோகி, சந்ததி துக்கமுடையவன், சந்ததியுண் டானலும் காலத்தில் அழியும், சாந்தி செய்யத் தீரும்.

(88) கேதார யோகம்:—

லக்கினாதிபன் பாபியுடன் கூடியிருந்தாலும் 3, 6, 8, 12-ல் பாபிகளிருந்தாலும் ஐந்தில் பாபிகளிருந்தாலும் 3 சுபர்கள் 2-லும், 12-லுமிருந்தாலும் கேதார யோகம்.—பலன்: —முன் ஜன்மத்தில் புண்ணியத்தீர்த்த ஸ்நானமும் அதிதிகளிடம் பக்தியும் செய்திருத்தலால், இச்சன்மத்தில் வெளுத்தவனும், சபலமாக பேசுபவனும், புத்திமானும், தனவானும், குலத்திற்கு முக்கியனும், தாதாவும், போகங்களனுபவிப்பவனும், அதிகமாய் கொடுப்பவனும் ஆவான். சரீரத்தில் காயம் எற்படும். 20 முதல் 25 வயது வரையில் அதிக சௌக்கியம் ராஜ்யப்பிராப்தி அதற்குமேல் 2 வருஷம் அதிக சௌக்யம், 30-வயதுக்கும் இன்னும் அதிக சௌக்கியம், 40-க்குமேல் இவனுக்கு ராஜ்யமிருந்தால் சத்ருக்களால் அழிவு, சந்ததி உண்டாகாது, உண்டானாலும் மரிக்கும், சாந்தி செய்யவும். பக்கருலையாவது ராஜருணமாவது வரும், கண்டமாலையும்வரும். சாந்தி செய்யவும்.

(89) காரக யோகம்:—

கர்மாதியின் பாபியுடன் கூடி மித்ர க்ஷேத்ரத்திலிருந்தாலும் திரிகோணங்களிடையில் குருவாவது குஜ, சுக்கிரர்களாவது இருந்தாலும் காரக யோகம்—பலன்:—அல்பாயுசு உடையவன், பிழைத்திருக்கில் அரசனுக்குச் சமமான சுக மனுபவிப்பான், வெளுத்தவன் சபலமாய் பேசுபவன், தூரப்பார்வையுடையவன், பலவான், பிதா, மாதா, பந்துக்களுக்கு நாயகன், ஜன்மாந்தர பாவத்தால் சகோதர சிந்தையுடையவன், முன் ஜன்மத்தில் சகோதரி புத்ரனை வதைத்தவன், சாந்தி செய்யவும்.

(90) காந்தர்வ யோகம்:—

எட்டிலாவது 12-லாவது பாபிகளும், 8-ம் அதிபன் 12-லும், மற்ற பாபிகள் 10-லும் 2-லும் இருந்தால் மகா சௌக்கியமுள்ள காந்தர்வ யோகம்:—முன் ஜென்மத்தில் கங்கைக்கரையில் அடிக்கடி ருத்ரனைப் பூசித்ததால் இங்கு தபஸ்பலருக்கு சந்தோஷம் அனேக சந்ததி, 16-வது 20-வது வயதில் தன் பலத்தால் சுகம், அரசனுகவாவது அரசர்கள் மந்திரியாகவாவது ஆவான். முன் ஜென்மத்தில் தபசியை நிந்தித்தபடியால் இப்போது சுகத்தினிடையில் புத்ர சிந்தையும், அல்பதனத்துடனிருத்தலும் இடையென்று நேரிடும். 26-லும்

40-லும் நீர்க்க வேதனையுண்டாகும். வயிற்றில், கை கால்களில் அனேக காலம் இருக்கும். சாந்தி செய்பத் தீரும்.

(91) பிரங்கரீடி யோகம்:—

2-ல் பாபரும், மற்ற சுபர் புதன், குரு, சுக்கிரனிவர்களுஞ், சூஜ னும் கேந்திரங்களிலும், 3, 5-ல் சனியுமிருந்தால் பிரங்கரீடி யோகம்— பலன்:—ஜாதகன் அழகன், சடலன், நன்றாய்ப் பேசுகிறவன், மிருது வான சரீரமுடையவன், சுகமுடையவன், பொருளாழிவால் பெரிய சிந்தையை அடைவான். சாந்தி செய்யத் தீரும்.

(92) பத்ம யோகம்:—

சூரியன் வீட்டில் குருவும், குரு வீட்டில் சுக்கிரனும், சுக்கிரன் வீட்டில் சனியுமாவது, கேந்திரத்திலாவது, கணத்திலாவது, 4-லாவது தன் வீட்டிலாவது, சுக்ரனுவது, சூரியனுவது, குருவாவதிருந்தாலும் பத்ம யோகம்—பலன்:—மகாபுருஷன், 7-வயதில் முக்தி, முன் ஜென்ம மகிமையால் திடீரென்று துக்கம் நேரிடும். சாந்தி செய்யத் தீரும்.

(93) பிரம்ம யோகம்:—

1-லும், 4-லும், சுபர்களும் 6, 9-ல் பாபிகளும் தன் வீட்டில் 3, 4, 10-மதிபர் உச்சத்திலுமிருந்தால் பிரம்ம யோகம்—பலன்:—சுக முடையவன், தகப்பனைவிட அதிகமானவன், பிறந்ததிலிருந்து தகப்ப னுக்குத் தினம் தினம் சுகம் அதிகம் உண்டாகும். முன் ஜன்மத்தில் ரிஷியை நிந்தித்ததால் துக்கமனுபவிப்பான். சாந்தி செய்யவும்.

(94) சமரேசுவர யோகம்:—

7-ம் வீட்டுடையோன் சத்துரு வீட்டில் பாபிபால் பார்க்கப்பட் டிருந்தாலும், 7-ல் பாபிகளிருந்தாலும், சமரேசுவர யோகம்—பலன்:— அரசனுவான், யானை, குதிரை, தேருடன் கூடியிருப்பான், அடிக்கடி புத்திரன், மனைவி இவர்களை விரோதிப்பவனுவான், பெண் சந்ததியுண் டாகும், பணமுடையவளாயினும் மனைவி, பர்த்துரு துக்கமனுபவிப் பாள், சந்ததியுண்டாகாது, உண்டாயினும் நசிக்கும். சாந்தி செய்ய வும்.

(95) வஜ்ர யோகம்:—

1, 3, 12-ல் சுபரும் மற்றப் பாபர் திரிகோணங்களிலும் பாபி வீட்டில் குருவுமிருந்தால் வஜ்ர யோகம்—பலன்:—எங்கும் ஜெய

மூடையவன், பணியாளர் முதலியோரைப் போஷிப்பவன், குலத் திற்கு நடுநாயகம் போன்றவன், சகல சம்பத்துமுடையவன், 10-வய திற்குமேல் தன் பலத்தால் சுகம், 22-வது வயதில் சந்தோஷக்குறைவு, 30-க்குமேல் தன செலவும், பந்தனமும், அடிக்கடி அதிக கஷ்டமும், சிந்தையும் தோன்றும், 32-க்குமேல் கொஞ்சம் தனவிருத்தி, 30-க்கு மேல் சுகாரம்பம், 40-க்குமேல் அதிக சுகம், அடிக்கடி சந்தான சிந்தை உண்டாகும், மகா தானம் செய்யத் தீரும்.

(96) சுக்கிர யோகம்:—

10–ல் பாபிகளும், 5–ல் சுபர்களும், 5–ம் அதிபன் பாபியுடன் கூடினும், 5 ல் குஜனும், சூரியனும், சுபர்களால் பார்க்கப்பட்டிருப்பி னும், சுக்கிர யோகம்—பலன்:—சுகமுடையவன், தனவான். ஆதியில் சாதாரண சுகம், நடுவிலும், கடையிலும் அதிக சுகம், சந்ததி விஷயத் தில் அதிக சிந்தையாவது, ராஜ பிளவையாவது உண்டாகும். முன் ஜென்மத்தில் பிராமணனுக்கு அபசாரம் செய்ததால் இது உண்டா யிற்று. சாந்தி செய்யத் தீரும்.

(97) லோஹித யோகம்:—

1, 4-ல் தனுசுபனும், சுபரும், பாபரும் கூடியிருந்தாலும், 10-ல் ஆவது, 7-லாவது பாபி யிருக்கினும், லோஹித யோகம்—பலன்:— முன் ஜன்மத்தில் சூத்திரனிடமிருந்தும், பிராமணனிடமிருந்தும், சபல ஞைத் திருடியபடியால் இந்த இந்த யோகத்தில் பிறந்தான். ஸ்தான ப்ரஷ்டன், அடிக்கடி கடனுடையவன், 32-வயது வரையில் அதிக கஷ் டம், தூக்கமுடையவன், 36-வயதிற்குமேல் ராஜயோகம் வந்தும் தனமற்றவனும், அயலார் அன்னத்தை புசிப்பவனுமாவான். சாந்தி செய்யத் தீரும்.

(98) நள யோகம்:—

பாபி வீட்டில் சந்திரனும், புதன் வீட்டில் குஜனும் சூரியனு மாவது இருந்து லக்னாதிபன் பாபியாயிருந்து சத்துரு வீட்டிலிருந்து கேந்திரத்தில் சுபரிருந்தால் நள யோகம்:—கீர்த்தி யுடையவன், தர் மாத்மா, அரசன், அனுபவிப்பவன், கைகளிலாவது வயிற்றிலாவது மூட்டியிலாவது எல்லாமே மச்சையிருக்கும், முதுகிலாவது, குஹ்யத்தி லாவதிருக்கும், முன் ஜென்மத்தில் கங்கையில் ருத்ர சாபத்தால் இது உண்டாயிற்று, இச்சென்மத்தில் சுகமாவது, தனமாவது இராது. சாந்தி செய்யத் தீரும்.

(99) விசுவாகந்த யோகம்:—

3–ல் ராகுவாவது 3, 6, 8-ல் சனியாவது 12–ல் குருவாவது பாபிகள் 5, 10-லாவது இருந்து, 5, 10-ம் வீடு பாபிவீடாகவாக இருந்து, கேந்திரத்தில் பாபிகளாவது இருந்தால் விசுவாகந்த யோகம்:—சந்தானசிந்தை, சரீரத்தில் நோய் உண்டாகும், சாந்தி செய்யவும்.

(100) மஹாகந்த யோகம்:—

5, 9-லாவது, 1, 4, 7, 10, 11-லாவது உச்ச கிரகமிருந்தாலும், 5-ல் பாபிகளும் சுபர்கள, 5, 9-லுமிருந்தாலும், இல்லாவிடில் 5, 9ல் இவ்விதமிருந்தாலும் மஹாகந்த யோகம்:—அதிக மானமுடையவன், தனம் நிறம்பியவன், சுகமுடையவன், எங்கும் ஜெயமுடையவன், புத்திர பௌத்திர சம்பத்துடையவன்.

(101) கோள யோகம்:—

2, 3, ஸ்தானங்களில் சுபர்களும் 2, 3, ஸ்தானங்களில் பாபிகளும் இருந்தால் கோள யோகம்:—மூன் ஜென்மத்தில் சிசு ஹத்தி செய்தான். அதனால் இச்ஜன்மத்தில் தனமற்றவனும், சுகமற்றவனுமாயிருப்பான் சுபர் கேந்திர திரிகோணங்களி லிருந்தால், தனவான், சுகி, சகோதர, புத்திர, சிந்தை அல்லது நோய் உண்டாகும், சாந்தி செய்யத்தீரும்.

(102) பாச யோகம்:—

4-ல் பாபிகளும் சுபர் 6, 8, 12-லும் இருந்தால் அதிக துக்கமும் சிகைஷ பந்தனமும் தரவல்ல பாச யோகம்:—மூன் ஜென்மத்தில் பிரம்மஹத்தி செய்தபடியால் இச்ஜன்மத்தில், நோயாளியாவது, தனமற்றவனவது, சந்ததி யற்றவனகவாவது ஆவான். சாந்தி செய்யத் தீரும்.

(103) பிரஜாபதி யோகம்:—

5, 1-ல் சுபரும், பாபரும், கர்மாதிபன் பாபியுடன் கூடியும், குஜன் வீட்டில் குருவுமிருந்தால் பிரஜாபதி யோகம்—பலன்:—சுகி, தனவானும், அரசரால் வெகு மதிக்கத்தக்கவனுமாவான், சகோதரனிடமிருந்தும், பந்துவிடமிருந்தும் கொஞ்சம் கஷ்டமாவது, நோயாவது உண்டாகும். கொஞ்சம் தானம் செய்யத் தீரும்.

(104) விநாசஹானி யோகம்:—

5, 9-ல் 8-ம் அதிபன் பாபியாகவாவது, பாபியுடனாவதிருந்தாலும் பாபவீட்டிலாவ திருந்தாலும், விநாசஹானி யோகம்—பலன்:—முன் ஜென்மத்தில் தவசியை நிந்தித்தல் பெண் ஹத்தி முதலியன செய்ததால் இச் ஜன்மத்தில் அல்பாயுளுடையவனும், தீர்க்க ரோகியாயுமிருப்பான், சந்ததியுண்டாகாது. சாந்தி செய்யத் தீரும்.

(105) கோடாகூடி யோகம்:—

10, 11-ல் பாபிகளும், 9-ல் சுபரும், பாபியும், 10-ல் 10-ஆம் மாதியும், 2-லும், கேந்திரத்திலும் அதாவது 1, 4, 7, 10-ல் 4-ம் அதிபனும் மித்திரன் வீட்டிலிருந்தால் கேடாகூடி யோகம்—பலன்:—முன் ஜென்மத்தில் சிவபக்தி செய்தவன், இச் ஜன்மத்தில் கங்கையில் பிராணனை விடுவான், தனவான், ராஜமான்யன், பாபி, சத்ருக்களை அழிப்பான், குணவான், அரசனுகவாவது, மந்திரியாகவாவது இரும்பான், போக முடையவன், தாதா, சமர்த்தன், தகப்பனைவிட அதிகமாக இருப்பான், 18, 20-வது வயதில் தன்பலத்தால் சுகம், 24-ல் வேறு இடத்தில் சுகம், பிறகு சத்துருபயம், பிராதரு நாசம், மனைசிந்தை உண்டாகும். சாந்தி செய்யத் தீரும்.

(106) மாலா யோகம்:—

1, 4, 7, 10, 12, 3, 11-ல் சுபரும், 8—ம் அதிபன் பாபியுடன் கூடியாவது இருந்து குரு, சூரியனுவது, புதன், சுக்கிரனுவது அவ்விதமிருந்தாலும் மாலா யோகம்—பலன்:—ஜாதகன் சுகி, போகி, குணிகன், அதிக சந்ததியுடையவன், அழகன், எப்போதும் ஆசாரசீலன், எப்போதும் குழந்தை சிந்தையுடன் கூடியவன், பெண் ஜாதகமாய் இருந்தால் ஜாதகி தர்பலமுள்ளவள், ரோகமுடையவள், புத்திர சிந்தையுடையவள். சாந்தி செய்யத் தீரும்.

(107) பிரமோத யோகம்:—

5, 9—ல் 1, 4, 10—ம் அதிபனும், 10—ம் அதிபன் 1, 9—லும் 2-லாவது, 3-லாவது பாபரும் இருந்தால் பிரமோத யோகம்—பலன்:—முன் ஜென்மத்தில் கங்கைக் கரையில் எப்போதும் ஸ்நானம் செய்தான், ஒரு சமயம் அழகிய குதிரை ஒன்றை பார்த்து பிடித்துக் கொண்டு குரு க்ஷேத்திரம் சென்று ஆங்கு சிவாலயத்தில் நொண்டியான முனிவரைப் பார்த்து உபசரித்தான், இச் ஜன்மத்தில் அரசரால்

வெகுமதிக்கப்பட்டவனும், தன தான்யங்களுடன் கூடியவனும், குலத்திற்கு முக்கியமானவனும், தகப்பனைக்காட்டிலும் அதிகமான வனுபாவான், 22-வயதிற்குமேல் தன் பலத்தால் சுகம், 36-வயதுக்கு மேல் யானைகட்டி வாழ்வான், 55-வது வயதில் அரசனுக்கு நிகராவான், புத்திர பௌத்ரருடன் எல்லா கார்யத்திலும் சமர்த்தன், ஒரு சமயம் புத்திரன், தனம் முதலியவற்றால் துக்கமுண்டாகும். சாந்தி செய்யத் தீரும்.

7-வது அத்தியாயம்.

மேஷாதி துவாதச ராசி லக்கினாதி கிரக யோகப் பலாத்தியாயம்.

(110) நாடி அம்சங்கள்.

நாடிக் கிரந்தங்களில் உபயோகப்படுத்தப்பட்டுள்ள "நாடி அம்சங்கள்" என்பவைகளை அறிவோம். பகலும் இரவுங்கொண்ட ஒரு தினத்தில் அறுபது நாழிகைகள் இருக்கின்றன என்பது நமக்குத் தெரிந்த விஷயம். இந்த 60 நாழிகையில் இராசி மண்டலம் ஒருதரம் பூராகவும் சுழண்டு வருகின்றது. இந்த இராசி மண்டலத்தில் 12 இராசிகள் இருப்பதால் இந்த 12 இராசிகளும் 60 நாழிகையில் ஒரு தரம் பூராகவும் சுற்றிவருகிறது என்று ஏற்படும். ஆகையால் 60 நாழிகை 12-ஆல் வகுக்க வருகின்ற 5-நாழிகையே ஒரு இராசிக்குரிய சமமான (average) நாழிகை ஆகும். ஒரு நாழிகையில் 60 விநாடி இருப்பதால் 5-நாழிகையில் 300 விநாடிகள் இருக்கின்றன. ஆகையால் ஒரு ராசிக்கு 300 விநாடிகள் இருக்கின்றன என்று ஏற்படுகின்றது. நாடிக் கிரந்தங்களில் இரண்டு விநாடிக்கு ஒரு "நாடி அம்சம்" ஆக 300 விநாடிகளுக்கும், 150 நாடி அம்சங்கள் என்று ஏற்படுத்தி இருக்கின்றார்கள். இந்த 150 நாடி அம்சங்களுக்கும் 150 வெவ்வேறுவிதமான பெயர்களும் கொடுத்திருக்கின்றார்கள். மேலும் ஒரு நாடி அம்சத்தைச் சில நாடிக் கிரந்தங்களில் இரண்டு சம பாகமாகப் பங்கிட்டு முன் பாகம் (அதாவது பூர்வபாகம்) என்றும், பின் பாகம் (அதாவது உத்திரபாகம்) என்றும் பெயரிட்டிருக்கின்றார்கள். இன்னம் சில நாடிக் கிரந்தங்களில் ஒரு நாடி அம்சத்தை நான்கு சமபாகங்களாகப் பங்கிட்டு முறையே விப்பிரகாலம், க்ஷத்தி

ரியகாலம், வைசியகாலம், சூத்திரகாலம் என்று பெயரிட்டிருக்கின்றார்கள். ஒரு இராசியில் 30-பாகை அதாவது 1,800-கலைகள் இருப்பதாலும், ஒரு ராசிக்கு மொத்தம் 150 நாடி அம்சங்கள் இருப்பதாலும் ஒவ்வொரு நாடி அம்சத்திற்கும் 1,800-யை 150-ஆல் வகுக்க வருகின்ற 12-கலை ஆகும். இந்த 12-கலையைப் பூர்வபாகம், உத்திரபாகம் என்று இரண்டு சமபாகமாகப்பங்கிட ஒவ்வொரு பாகத்திற்கும் 6-கலை ஆகும். மறுபடியும் இந்த 12-கலையை விப்பிரகாலம், க்ஷத்திரியகாலம் வைசியகாலம், சூத்திரகாலம் என்று நான்கு சமபாகமாகப்பங்கிட ஒவ்வொரு காலத்திற்கும் 3-கலை ஆகும். ஆகையால் சில நாடிக் கிரந்தங்கள் ரீதியாய் ஒவ்வொரு இராசிக்கும் 300-நாடி அம்சங்களும், இன்னம் சில நாடிக் கிரந்தங்கள் ரீதியாய் 600 நாடி அம்சங்களும் ஏற்படுகின்றன. ஆகையால் 12 இராசிகளுக்கும் சில நாடிகள் ரீதியாய் $300 \times 12 = 3,600$ நாடி அம்சங்களும், இன்னம் சிலநாடிகள் ரீதியாய் $600 \times 12 = 7,200$ நாடி அம்சங்களும் ஏற்படுகின்றன லக்கினத்தை (அதாவது இராசியை) மாத்திரம் கவனிக்கும்போது 3,600 அல்லது 7,200 சமபாகமாக ஒரு லக்கினம் பங்கிடப்பட்டிருக்கின்றது என்று விளங்கும். நவக்கிரகங்கள் இருக்கும் ராசிகளையும் இவ்விதமாகவே பங்கிட ஜாதகங்கள் சாதாரண கணக்கில் அளவிட முடியாத ஜாதகங்கள்ஏற்படக்கூடும்.கணித மார்க்கத்திற்கு ஒரு ராசிக்குரிய இராசிமான நாழிகையை 150 சமபாகமாகப் பங்கிட்டு நாடி அம்சத்தின் பெயரை நிர்ணயஞ் செய்வதைவிட ஒரு ராசிக்குரிய 30 பாகையை ஸ்புடரீதியாய் 150 சமபாகமாகப் பங்கிட்டு நாடி அம்சத்தின் பெயரை நிர்ணயஞ் செய்வது துல்லியமாகும்.

நாடி அம்சங்களின் பெயரையும் அவைகளுக்குரிய ஸ்புடங்களையும் கீழேகொடுத்துள்ள வாக்கியத்தில் (Table) கொடுத்திருக்கின்றது. அவைகள் 150-ம் ஒன்றன் பின் ஒன்றாக வரிசைக்கிரமமாக வரவேண்டும். அவைகளின் ஆரம்பமும் முடிவும் சராசி, ஸ்திராசி, உபயராசி, என்பவைகளுக்குத் தகுந்தபடி சம்பவிக்கும்; அதாவது சராசிக்கு 1-வது அதாவது "வசுதா" என்ற நாடி அம்சம் முதல் 150-வது அதாவது "பரமேஸ்வரி" என்ற நாடி அம்சம் வரையிலும் 1, 2, 3, 4, ...148, 149, 150 என்று வரிசைக்கிரமமாக நேராக எண்ண வேண்டும். ஸ்திராசிக்கு 150-வது அதாவது "பரமேஸ்வரி" என்ற நாடி அம்சம் முதல் தலை கீழாக வரிசையாக 150, 149, 148.....3, 2, 1

ஒன்று 1-வது அதாவது "வசுதா" என்ற நாடி அம்சம் வரையிலும் எண்ண வேண்டும். உபய ராசிக்கு 76-வது அதாவது "மஹாமாரீ" (அதாவது மஹாமாயா அல்லது மஹாதூதி) என்ற நாடி அம்சம் முதல் வரிசையாக நேராக 76, 77, 78,.....149, 150, 1, 2, 3, ...74, 75 என்ற "திரைலோக்கிய மோஹனகரி என்ற நாடி அம்சம் வரையிலும் எண்ணவேண்டும். ஒரு லக்கின ராசியை 150 சமபாகமாகப் பங்கிட எத்தனையாவது பாகத்தில் லக்கின ஸ்புடம் இருக்கிறதோ அத்தனை நாடி அம்சங்கள் ஆரம்பம் முதல் எண்ணிப் பார்க்க வருகின்ற நாடி அம்சமே ஜாதகனுடைய ஜென்ம லக்கின நாடி அம்சம் ஆகும்.

ஒவ்வொரு லக்கின ராசியை நூற்றைம்பது சமபாகமாகப்பங்கிட ஒவ்வொரு பாகத்திற்கும் உரிய ஆரம்ப ஸ்புடமும் முடிவு ஸ்புடமும் கீழ்கண்ட கட்டத்தில் கொடுக்கப் பட்டிருக்கின்றன:—சௌகரியத்தின் பொருட்டு இந்தப்பாக நெம்பருக்கு நாடி தருவ எண் என்று சொல்லுவோம்.

(111) லக்கின ராசியின் 150 பாகங்களின் ஸ்புடம்—கட்டம் நெ. 1.

பாகத்தின் நெம்பர் அல்லது நாடி தருவ எண்.	பாகத்தின் ஸ்புடம்.				பாகத்தின் நெம்பர் அல்லது நாடி தருவ எண்.	பாகத்தின் ஸ்புடம்.			
	முதற்கொண்டு		வரையிலும்.			முதற்கொண்டு		வரையிலும்.	
(1)	(2) பாகை.	(3) கலை.	(4) பாகை.	(5) கலை.	(1)	(2) பாகை.	(3) கலை.	(4) பாகை.	(5) கலை.
1	0	00	0	12	11	2	00	2	12
2	0	12	0	24	12	2	12	2	24
3	0	24	0	36	13	2	24	2	36
4	0	36	0	48	14	2	36	2	48
5	0	48	1	00	15	2	48	3	00
6	1	00	1	12	16	3	00	3	12
7	1	12	1	24	17	3	12	3	24
8	1	24	1	36	18	3	24	3	36
9	1	36	1	48	19	3	36	3	48
10	1	48	2	00	20	3	48	4	00

கட்டம் நெ. 1—தொடர்ச்சி.

பாகத்தின் நெம்பர் ஆதாவது நாடி தூரு எண்.	பாகத்தின் ஸ்புடம்.				பாகத்தின் நெம்பர் ஆதாவது நாடி தூரு எண்.	பாகத்தின் ஸ்புடம்.			
	முதற்கொண்டு		வரையிலும்.			முதற்கொண்டு		வரையிலும்.	
(1)	(2) பாகை.	(3) கலை.	(4) பாகை.	(5) கலை.	(1)	(2) பாகை.	(3) கலை.	(4) பாகை.	(5) கலை.
21	4	00	4	12	49	9	36	9	48
22	4	12	4	24	50	9	48	10	00
23	4	24	4	36	51	10	00	10	12
24	4	36	4	48	52	10	12	10	24
25	4	48	5	00	53	10	24	10	36
26	5	00	5	12	54	10	36	10	48
27	5	12	5	24	55	10	48	11	00
28	5	24	5	36	56	11	00	11	12
29	5	36	5	48	57	11	12	11	24
30	5	48	6	00	58	11	24	11	36
31	6	00	6	12	59	11	36	11	48
32	6	12	6	24	60	11	48	12	00
33	6	24	6	36	61	12	00	12	12
34	6	36	6	48	62	12	12	12	24
35	6	48	7	00	63	12	24	12	36
36	7	00	7	12	64	12	36	12	48
37	7	12	7	24	65	12	48	13	00
38	7	24	7	36	66	13	00	13	12
39	7	36	7	48	67	13	12	13	24
40	7	48	8	00	68	13	24	13	36
41	8	00	8	12	69	13	36	13	48
42	8	12	8	24	70	13	48	14	00
43	8	24	8	36	71	14	00	14	12
44	8	36	8	48	72	14	12	14	24
45	8	48	9	00	73	14	24	14	36
46	9	00	9	12	74	14	36	14	48
47	9	12	9	24	75	14	48	15	00
48	9	24	9	36	76	15	00	15	12

கட்டம் கூ. 1—தொடர்ச்சி.

பாகத்தின் தெம்பர் ஆதாவது நாழி தூரு எண்.	பாகத்தின் ஸ்டம்.				பாகத்தின் தெம்பர் ஆதாவது நாழி தூரு எண்.	பாகத்தின் ஸ்புடம்.			
	முதற்கொண்டு		வரையிலும்.			முதற்கொண்டு		வரையிலும்.	
(1)	(2) பாகை.	(3) கலை.	(4) பாகை.	(5) கலை.	(1)	(2) பாகை.	(3) கலை.	(4) பாகை.	(5) கலை.
77	15	12	15	24	106	21	00	21	12
78	15	24	15	36	107	21	12	21	24
79	15	36	15	48	108	21	24	21	36
80	15	48	16	00	109	21	36	21	48
81	16	00	16	12	110	21	48	22	00
82	16	12	16	24	111	22	00	22	12
83	16	24	16	36	112	22	12	22	24
84	16	36	16	48	113	22	24	22	36
85	16	48	17	00	114	22	36	22	48
86	17	00	17	12	115	22	48	23	00
87	17	12	17	24	116	23	00	23	12
88	17	24	17	36	117	23	12	23	24
89	17	36	17	48	118	23	24	23	36
90	17	48	18	00	119	23	36	23	48
91	18	00	18	12	120	23	48	24	00
92	18	12	18	24	121	24	00	24	12
93	18	24	18	36	122	24	12	24	24
94	18	36	18	48	123	24	24	24	36
95	18	48	19	00	124	24	36	24	48
96	19	00	19	12	125	24	48	25	00
97	19	12	19	24	126	25	00	25	12
98	19	24	19	36	127	25	12	25	24
99	19	36	19	48	128	25	24	25	36
100	19	48	20	00	129	25	36	25	48
101	20	00	20	12	130	25	48	26	00
102	20	12	20	24	131	26	00	26	12
103	20	24	20	36	132	26	12	26	24
104	20	36	20	48	133	26	24	26	36
105	20	48	21	00	134	26	36	26	48

கட்டம் நெ. 1—தொடர்ச்சி.

பாகத்தின் நெம்பர் ஆதாயத் நாடி எண்.	பாகத்தின் ஸ்புடம்.				பாகத்தின் நெம்பர் ஆதாயத் நாடி எண்.	பாகத்தின் ஸ்புடம்.			
	முதற்கொண்டு		வரையிலும்.			முதற்கொண்டு		வரையிலும்.	
(1)	(2)	(3)	(4)	(5)	(1)	(2)	(3)	(4)	(5)
	பாகை.	கலை.	பாகை.	கலை.		பாகை.	கலை.	பாகை.	கலை.
135	26	48	27	00	143	28	24	28	36
136	27	00	27	12	144	28	36	28	48
137	27	12	27	24	145	28	48	29	00
138	27	24	27	36	146	29	00	29	12
139	27	36	27	48	147	29	12	29	24
140	27	48	28	00	148	29	24	29	36
141	28	00	28	12	149	29	36	29	48
142	28	12	28	24	150	29	48	30	00

(112) 150-நாடி அம்சங்களின் பெயர் கட்டம் நெ. 2.

சராசரியின் நாடி நெம்பர் எண்.	ஸ்திர ராசியின் நாடி நெம்பர் எண்.	உபய ராசியின் நாடி நெம்பர் எண்.	நாடி அம்சத்தின் பெயர்.	சராசரியின் நாடி நெம்பர் எண்.	ஸ்திர ராசியின் நாடி நெம்பர் எண்.	உபய ராசியின் நாடி நெம்பர் எண்.	நாடி அம்சத்தின் பெயர்.
(1)	(2)	(3)	(4)	(1)	(2)	(3)	(4)
1	150	76	வசுதா	9	142	84	சுரா
2	149	77	வைஷ்ணவி	10	141	85	மாயா
3	148	78	பிராம்ஹி	11	140	86	மனோஹரா
4	147	79	காலகூடா	12	139	87	மாத்வி
5	146	80	சாங்கரி	13	138	88	மஞ்சுஸ்வரா
6	145	81	சுதாகரி	14	137	89	கோரா
7	144	82	சபா	15	136	90	குப்பினி
8	143	83	சௌம்யா	16	135	91	குடிலா

கட்டம் நெ. 2—தொடர்ச்சி.

சராசரியின் நாடி திரவ எண்	ஸ்திர ராசியின் திரவ எண்	உபய ராசியின் திரவ எண்	நாடி அம்சத்தின் பெயர்.	சராசரியின் நாடி திரவ எண்	ஸ்திர ராசியின் நாடி திரவ எண்	உபய ராசியின் நாடி திரவ எண்	நாடி அம்சத்தின் பெயர்.
(1)	(2)	(3)	(4)	(1)	(2)	(3)	(4)
17	134	92	பிரபா	44	107	119	ஸ்நிக்தா
18	133	93	பரா	45	106	120	சோதரா
19	132	94	பயஸ்வினி	46	105	121	சுரசுந்தரி
20	131	95	மரலா	47	104	122	அமிர்தப்பிலா வினி
21	130	96	ஜகதீ	48	103	123	காளா
22	129	97	ஜர்ஜரா	49	102	124	காமதுக்
23	128	98	துருவா	50	101	125	கரவீரணி
24	127	99	மூசலா	51	100	126	கற்வரா
25	126	100	முத்கரா	52	99	127	குந்தினி
26	125	101	பாசா	53	98	128	ரௌத்ரா
27	124	102	சம்பகா	54	97	129	விஷா
28	123	103	தாமகா	55	96	130	விஷநாசினி
29	122	104	மஹீ	56	95	131	நிர்மதா
30	121	105	கலுசா	57	94	132	சீதளா
31	120	106	கமலா	58	93	133	நிம்ன
32	119	107	காந்தா	59	92	134	பிரீதா
33	118	108	காலா	60	91	135	பிரயவர்தினி
34	117	109	கரிகரா	61	90	136	மானக்நா
35	116	110	கூஷ்மா	62	89	137	துர்பகா
36	115	111	துர்துரா	63	88	138	சித்ரா
37	114	112	துர்பகா	64	87	139	சித்ரிணீ
38	113	113	விஸ்வா	65	86	140	சிரஞ்சீவினி
39	112	114	விசீர்ண	66	85	141	விரூபா
40	111	115	விகடா	67	84	142	கதஹரா
41	110	116	ஆவிலா	68	83	143	நாளா
42	109	117	வித்ருமா	69	82	144	நளினி
43	108	118	சுகதா	70	81	145	நிர்மலா

கட்டம் நெ. 2—தொடர்ச்சி.

சராகியின் நாடி-திருவ எண்	ஸ்திர ராகியின் நாடி-திருவ எண்	உபய ராகியின் நாடி-திருவ எண்	நாடி-அம்சத்தின் பெயர்.	சராகியின் நாடி-திருவ எண்	ஸ்திர ராகியின் நாடி-திருவ எண்	உபய ராகியின் நாடி-திருவ எண்	நாடி-அம்சத்தின் பெயர்.
(1)	(2)	(3)	(4)	(1)	(2)	(3)	(4)
71	80	146	நதி	97	54	22	நவநீதா
72	79	147	சுதாஅம்ருதாம்சு களகா	98	53	23	நிசாசரி
				99	52	24	நிஷிருத்தி
73	78	148	சபலா	100	51	25	நிகதா
74	77	149	சாங்குரா	101	50	26	சாரா
75	76	150	திரைலோக்யா மோஹநாகரி	102	49	27	சங்கீத
				103	48	28	சாமதா
76	75	1	மஹாமாரீ	104	47	29	விஸ்வம்பரா
77	74	2	சுசிதளா	105	46	30	குமாரி
78	73	3	சுகதா	106	45	31	கோகிலா
79	72	4	சுப்பிரபா	107	44	32	குஞ்சராக்ருதி
80	71	5	சோபா	108	43	33	ஐந்திரா
81	70	6	சோபனை	109	42	34	சுவாஹா
82	69	7	சிவதா	110	41	35	ஸ்வரா
83	68	8	சிவா	111	40	36	வன்ஹி
84	67	9	பலா	112	39	37	பிரீதா
85	66	10	ஜ்வாலா	113	38	38	ரக்ஷாஜலா
86	65	11	கதா	114	37	39	ப்லவா
87	64	12	காதா	115	36	40	வாருணி
88	63	13	தூதனை	116	35	41	மதிரா
89	62	14	சுமநோஹரா	117	34	42	மைத்ரி
90	61	15	சோமவல்லி	118	33	43	ஹரிணி
91	60	16	சோமளதா	119	32	44	ஹரிண்
92	59	17	மங்களா	120	31	45	மருத்
93	58	18	முத்கிரிகா	121	30	46	தனஞ்ஜயா
94	57	19	சுதா	122	29	47	தனகிரி
95	56	20	மோக்ஷாபவர்க்கா	123	28	48	தனதா
96	55	21	வலயா	124	27	49	மிருச்சயா

கட்டம் நெ. 2—தொடர்ச்சி.

சராசரியின் நாடி திரவ எண்	ஸ்திர ராசியின் நாடி திரவ எண்	உபய ராசியின் நாடி திரவ எண்	நாடி அம்சத்தின் பெயர்.	சராசரியின் நாடி திரவ எண்	ஸ்திர ராசியின் நாடி திரவ எண்	உபய ராசியின் நாடி திரவ எண்	நாடி அம்சத்தின் பெயர்.
(1)	(2)	(3)	(4)	(1)	(2)	(3)	(4)
125	26	50	அம்புஜா	138	13	63	குந்தளா
126	25	51	ஈசானி	139	12	64	கோகிலா
127	24	52	தூளினி	140	11	65	பாபா
128	23	53	சௌத்ரி	141	10	66	காமினீ
129	22	54	சிவா	142	9	67	கலசோபத்பவா
130	21	55	சிவகரி	143	8	68	வீரபிரசூ
131	20	56	களா	144	7	69	சங்கரா
132	19	57	குந்தா	145	6	70	சதயக்ஞா
133	18	58	முகுந்தா	146	5	71	சதாவரி
134	17	59	பரதா	147	4	72	பிரஹ்மி
135	16	60	பலிதா	148	3	73	பாடலினீ
136	15	61	கந்தளி	149	2	74	பங்கஜா
137	14	62	ஸ்மரா	150	1	75	பரமேஸ்வரி

குறிப்பு:—சில கிரந்தங்களில் சில அம்சங்களின் பெயர்களை மாறுபாடகவும் அல்லது விந்தியாசமாகவும் கொடுக்கப் பட்டிருக்கின்றன. அவைகள் அடியிற்கண்டபடி ஆகும்.

(17) பிரபா-க்கு-அபலா.
(22) ஜர்ஜரா-க்கு-ஜார்கரி. ஆஹிலா-க்கு-ஹிலா.
(39) விசிர்ணை-க்கு-விசியர்லா.
(40) விகடா-க்கு-ஹிகலா, விவ்யாலா.
(42) விக்ருமா-க்கு-பீமா, விப்ரமா.
(43) சுகதா-க்கு-சுகப்பிரதா.
(50) கர்வீரணி-க்கு-கரவர்ஷலோ
(51) கஹ்வரா-க்கு-கவ்யா.
(52) குந்தினி-க்கு-குண்டினி, குட்டினி.
(53) சௌத்ரா-க்கு-காந்தா.
(54) விஷா-க்கு-விஷாக்யா.
(58) நிம்ன-க்கு-நிக்ன.
(61) மானக்நா-க்கு-மானக்யாஹ்வி-மானக்நி.

(63) சித்ரா–க்கு–சித்தா.
(64) சித்ரிணீ–க்கு–விசித்ரா.
(66) விரூபா–க்கு–பூபா.
(67) கதஹரா–க்கு–கத்ஹரா.
(69) நளினி–க்கு–காளினி.
(72) சுதாஅம்ருதாம்சுகலகா–க்கு–அம்ருதாம்சகா.
(73) சபலா–க்கு–கௌசிலா.
(74) சாங்குரா–க்கு–கலுஷாகுரா.
(76) மஹாமாரீ–க்கு–மஹாமாயா, மஹாதூதி.
(78) சுகதா–க்கு–சுபகா.
(79) சுப்பிரபா–க்கு–சுப்பிரதா.
(85) ஜ்வாலா–க்கு–ஜ்வலா.
(87) காதா–க்கு–காடா.
(88) தூதனை–க்கு–சூகனை.
(94) சுதா–க்கு–சுத்ரா.
(95) மோக்ஷா பவர்க்கா – க்கு–மோஷா பவர்க்கா
(96) வலயா–க்கு–லதா, விஸ்வலயா.
(100) நிகதா–க்கு–நீகதா, நிர்கதா
(102) சங்கீத–க்கு–சமகா, சாமகா.
(103) சாமதா–க்கு–சமதா.
(110) ஸ்வரா–க்கு–சுவாதா, சுதா
(113) ரக்ஷஜலா–க்கு – ரக்ஷாசில பிரபா.
(116) மதிரா–க்கு–மஜா.
(118) ஹாரிணி–க்கு – ஹரிணி ஹாரூணி.
(124) மிருச்சயா–க்கு–கச்சபா.
(127) தூளினி–க்கு–சூலினி.
(134) பரதா–க்கு–வரதா.
(136) கந்தளி–க்கு–கதளி.
(138) குந்தளா–க்கு–கந்தளா.
(147) பிரஹ்வி–க்கு–ஸ்ருக்வி.

(113) லக்கின ஸ்புடத்திற்குரிய நாடி, அம்சம் அறியும் வழி.

லக்கினஸ்புடத்திற்குரிய இராசி எந்த ராசி என்று முதல் முதல் அறியவும். பிறகு அந்த இராசி சர ராசியா, ஸ்திர ராசியா, உபய ராசியா என்று பார்க்கவும். பிறகு இலக்கின ராசியில் செல்லான பாகை கலையை அறியவும். இந்த செல்லான பாகை கலைக்கு "லக்கின ராசியின் 150 பாகங்களின் ஸ்புடம் கட்டம் நெ. 1" என் பதைப் பார்த்து அதனுதவியால் அந்தக் கட்டத்தில் 1-வது கலத் தின்கீழ் கொடுத்துள்ள நாடி துருவ எண்ணை அறியவேண்டும். பிறகு லக்கின ராசி சர ராசியானால் 2-வது கட்டத்தில் 1-வது கலத்தில் உள்ள நாம் கணித்துவந்த நாடி துருவ எண்ணிற்கு நேராய் உள்ள நாடி அம்சமே லக்கின நாடி அம்சமாகும். லக்கின ராசி ஸ்திர ராசி யானால் 2-வது கட்டத்தில் 2-வது கலத்தில் உள்ள நாம் கணித்து வந்த நாடி துருவ எண்ணிற்கு நேராய் உள்ள நாடி அம்சமே லக்கின நாடி அம்சமாகும்; லக்கின ராசி உபய ராசியானால் 2-வது கட்டத் தில் 3-வது கலத்தில் உள்ள நாம் கணித்துவந்த நாடி துருவ எண்

னிற்கு நோய் உள்ள நாடி அம்சமே லக்கின நாடி அம்சமாகும். இந்த நாடி அம்சத்தை அறியும் வழியைக் கீழ்கண்ட உதாரணங்களால் விளக்கிக் காட்டுவோம்:—

உதாரணம் நெ. 1:—லக்கின ஸ்புடம் பாகை 184-49 கலையானல் இதற்குரிய நாடி அம்சம் என்ன என்பதைக் கணிப்போம். லக்கின ஸ்புடம் பாகை 184-49 கலை ஆனதால் லக்கினம் துலா ராசியாகும். துலா ராசி ஆரம்ப ஸ்புடமாகிய பாகை 180-0 கலையை லக்கின ஸ்புடமாகிய பாகை 184-49 கலையில் இருந்து கழிக்கவருகின்ற பாகை 4-49 கலையே துலாலக்கினத்தில் செல்லான பாகை, கலை ஆகும். இந்த 4-பாகை 49-கலை என்பதற்கு 1-வது கட்டம் பிரகாரம் 25-வது நாடி துருவ எண் வரும். எனென்றால் 4-பாகை 49-கலை என்பது 25-வது நாடி துருவ எண்ணிற்குரிய ஆரம்ப ஸ்புடமாகிய 4-பாகை 48-கலைக்கும் முடிவு ஸ்புடமாகிய 5-பாகை 0-கலைக்கும் இடையில் இருக்கிறது. இவ்விதமாக இந்த நாடி துருவ எண்ணைக் கணிக்கவும். இங்கு வந்த நாடி துருவ எண் 25 ஆகும. லக்கினம் துலா ராசி, இந்தத் துலா ராசி சர ராசி ஆகும். ஆகையால் லக்கினம் சர ராசி ஆகின்றது. 2-வது கட்டத்தில் சர ராசிக்குரிய 1-வது கலத்தில் மேலே கணித்து வந்த நாடி துருவ எண் ஆகிய 25-க்கு எதிரில் 4-வது கலத்தில "முத்காரா" என்று கொடுத்திருக்கிறது. ஆகையால் "முத்காரா" என்ற நாடி அம்சமே லக்கின ஸ்புடத்திற்குரிய நாடி அம்சம் ஆகும். அதாவது லக்கினம் "முத்காராம்சத்தில்" இருக்கிறது என்று சொல்லப்படும். ஆகையால் லக்கினம் "துலா லக்கினம முத்காராம்சம்" என்று சொல்லப்படும்.

உதாரணம் நெ. 2:—லக்கினம் பாகை 230-27 கலையானல் இதற்குரிய நாடி அம்சம் என்பதைக் கணிப்போம். லக்கின ஸ்புடம பாகை 230-27 கலை ஆனதால் லக்கினம் விருச்சிக ராசியாகும். விருச்சிக ராசி ஆரம்ப ஸ்புடமாகிய பாகை 210-0 கலையை லக்கின ஸ்புடமாகிய பாகை 230-27 கலையில் இருந்து கழிக்க வருகின்ற பாகை 20-27 கலையே விருச்சிக லக்கினத்தில் செல்லான பாகை, கலை ஆகும். இந்த 20 பாகை 27 கலை என்பதற்கு 1-வது கட்டம் பிரகாரம் 103-வது நாடி துருவ எண் வரும். லக்கினம் விருச்சிக ராசி, இந்த விருச்சிக ராசி ஸ்திர ராசியாகும. ஆகையால் லகனம் ஸ்திர ராசியாகினறது. 2-வது கட்டதில ஸ்திர ராசிக்குரிய 2-வது கலத்தில்

மேலே கணித்து வந்த நாடி திருவ எண் ஆகிய 103-க்கு எதிரில் 4-வது கலத்தில் "காளா" என்று கொடுத்திருக்கிறது. ஆகையால் லக்கினம் "விருச்சிக லக்கினம் காளா அம்சம்" என்று சொல்லப் படும்.

உதாரணம் நெ. 3:—லக்கினம் பாகை 167-2 கலையானால் இதற் குரிய நாடி அம்சம் என்பதைக் கணிப்போம். லக்கின ஸ்புடம் பாகை 167-2 கலை ஆனதால் லக்கினம் கன்னியா ராசியாகும். கன் னியா ராசி ஆரம்ப ஸ்புடமாகிய பாகை 150-0 கலையை லக்கின ஸ்புடமாகிய பாகை 167-2 கலையிலிருந்து கழிக்க வருகின்ற பாகை 17-2 கலையே கன்னியா லக்கினத்தில் செல்லான பாகை கலை ஆகும். இந்த 17 பாகை 2 கலை என்பதற்கு 1-வது கட்டம் பிரகாரம் 86-வது நாடி திருவ எண் வரும். லக்கினம் கன்னியா ராசி. இந்தக்கன்னி யாராசி உபய ராசியாகும். ஆகையால் லக்கினம் உபயராசி ஆகின்றது. 2-வது கட்டத்தில் உபய ராசிக்குரிய 3-வது கலத்தில் மேலே கணித்து வந்த நாடி திருவ எண் ஆகிய 86-க்கு எதிரில் 4-வது கலத்தில் "மனோஹரா" என்று கொடுத்திருக்கின்றது. ஆகையால் லக்கினம் "கன்னியா லக்கினம் மனோஹராம்சம்" என்று சொல்லப்படும்.

(114) கிரகங்களின் நாடி அம்சம் அறியும் விதம்.

மேலே கொடுத்துள்ள விதி பிரகாரமும் மூன்று உதாரணங்கள் பிரகாரமும் சர, ஸ்திர, உபய லக்கினங்களுக்கு நாடி அம்சம் அறிய வேண்டும். ஒரு கிரகம் இருக்கும் நாடி அம்சம் அறியவேண்டுமானால் அதாவது ஒரு கிரகத்தின் ஸ்புடத்திற்குரிய நாடி அம்சத்தை அறிய வேண்டுமானால் லக்கினம் என்ற பதத்திற்குப்பதிலாக கிரகம் என்ற பதத்தை மேலே கொடுத்துள்ள வழியிலும் உதாரணங்களிலும் உப யோகித்து இராசிகளுக்குக் கணிதஞ் செய்ததுபோலவே கணிதஞ் செய்தால் கிரகத்தின் நாடி அம்சம் வரும்.

உதாரணம் நெ. 4:—உதாரணமாக குருவினுடைய ஸ்புடம் பாகை 28-17 கலையானால் குரு இருக்கின்ற நாடி அம்சத்தைக் கணிப் போம். குருவினுடைய ஸ்புடம் பாகை 28-17 ஆனதால் குரு இருக் கும் ராசி மேஷ ராசியாகும். மேஷராசி ஆரம்ப ஸ்புடமாகிய பாகை 0-0 கலையை குருவினுடைய ஸ்புடமாகிய பாகை 28-17 கலையில் இருந்து கழிக்க வருகின்ற பாகை 28-17 கலையே மேஷத்தில் செல் லான பாகை, கலை ஆகும். இந்த 28 பாகை 17 கலை என்பதற்கு

1-வது கட்டம் பிரகாரம் 142-வது நாடி துருவ எண் வரும். குரு இருக்கும் ராசி மேஷ ராசி. இந்த மேஷ ராசி சர ராசியாகும். ஆகையால் குரு இருக்கின்ற ராசி சர ராசி ஆகின்றது. 2-வது கட்டத்தில் சர ராசிக்குரிய 1-வது கலத்தில் மேலே கணித்து வந்த நாடி துருவ எண் ஆகிய 142-க்கு எதிரில் 4-வது கலத்தில் "கலசோபத்பவா" என்று கொடுத்திருக்கிறது. ஆகையால் குரு மேஷ ராசியில் "கலசோபத்பவா" என்ற நாடி அம்சத்தில் இருக்கிறார் என்று சொல்லப்படும். இவ்விதமாக மற்ற கிரகங்களும் அந்த கிரகங்கள் இருக்கும் ஸ்புடத்தையும், அவைகள் இருக்கும் ராசியின் சரம், ஸ்திரம், உபயம், என்ற லக்ஷணத்தையும் அனுசரித்து 1-வது, 2-வது கட்டங்களின் உதவியால் நாடி அம்சம் அறியவேண்டியது.

(115) நாடி அம்சங்களின் உபயோகம்.

நாடிக் கிரந்தங்களில் லக்கினம், கிரகங்கள் இவைகள் இருக்கும் நாடி அம்சங்களைக்கொண்டு பலாபலன்கள் தூல்லிபமாகக் சொல்லி இருக்கின்றார்கள். நாடி அம்சங்களின் உதவியால் பெரும்பாலும் ஜாதகன் பிறந்த இடத்தின் நகரச்சிறப்பு, ஜாதகனுடைய குலத்தின் ஜாதி, ஜாதகன் இத்தனையாவது பிறவி, ஜாதகனுடைய சகோதர சகோதரியின் சங்கியை முதலிய தூல்லிபமான அம்சங்கள் நாடிக்கிரந்தங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன. பின்னல் கொடுக்கப்பட்டுள்ள நாடிக் கிரந்தங்களில் உபயோகப்படுத்தப்பட்ட விதிகளில் நாடி அம்சமும் சரிபட்டுவந்தால் ஸ்தூல பலன்களும் (broad details) அதிக விபரமான (minute details) பலன்களும் அதில் சொல்லியபடி தூல்லிபமாய் இருக்கும். அப்படி நாடி அம்சம் சரிபடாவிட்டால் நாடி அம்சத்தில் ஏற்படும் வித்தியாசத்திற்குத் தகுந்தபடி பலாபலன்கள் மாறுதலடையும். ஆயினும் கிரக யோகங்கள் சரியாக அமையப்பட்டு நாடி அம்சங்கள் மாத்திரம் வித்தியாசப்பட்டால் ஸ்தூல பலாபலன்கள் (i.e., broad details) கூடியமட்டும் சரியாய் இருக்கும் என்ற காரணத்தைக்கொண்டே நாடிக் கிரந்தங்களில் உபயோகப்படுத்தப்பட்ட விதிகள் பின்னல் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

துவாதச லக்கின ஜாதகப் பலன்கள்.

(116) மேஷ லக்கினம்.

(1) 1-வது பாவம் மேஷமாகில்:—ஜாதகன், அதிக கோப முடையவன், சிவந்தமேனியுடையவன், சிலேஷ்மம் அதிகரித்தவன்,

மந்தமான புத்தியுடையவன், நிலையான தொழிலுள்ளவன், பெண்களை அண்டுபவன்.

2-வது பாவம் ரிஷபமாகில்:—ஜாதகன் எப்பொழுதும் பயிர் தொழிலில் பிரியமுள்ளவன், பசுமாடு, எருமாடு, பொன், வெள்ளி இவைகளுடன் இருப்பவன்.

3-வது பாவம் மிதுனமாகில்:—ஜாதகன் யானை குதிரைகளுடன் கூடியவன், ஸ்திரீகளுக்கு அதிகப் பிரீதி செய்பவன், நல்ல மனவியுடையவன், குலத்தவர்களில் உயர்ந்தவன்.

4-வது பாவம் கடகமாகில்:—ஜாதகன் நல்ல நடவடிக்கையுடையவன். அழகன், ஸ்திரிகளால் புத்தியால் விரும்பத்தக்கவன், விநயத்துடன் கூடியவன்.

5-வது பாவம் சிம்மமாகில்:—ஜாதகனுடைய புத்திரர்கள் மாமிசம் புசிப்பவர்கள், அதிக பசியுடையவர்கள், வெளிதேசத்திற்குப் பணத்திற்காகச் செல்பவர்கள், குரூர புத்தியுடையவர்.

6-வது பாவம் கன்னியாகில்:—ஜாதகன் தன் வீட்டில் நீடித்திருக்கமாட்டான், வைசியர்களிடத்தில் பிரீதியுள்ளவன், பிராமணர்களுடைய விரோதமுண்டாகும்.

7-வது பாவம் துலாமாகில்:—ஜாதகனுடைய மனவி ரூபயௌவனத்துடன் கூடியவள், உதாரகுண முடையவள், பலவித நன்மையை உடையவன்.

8-வது பாவம் விருச்சிகமாகில்:—ஜாதகனுக்குத் தேள் விஷத்தால் மரணம் உண்டு, முகத்திலுண்டாகும் ரோகத்தினல் தன்னிடத்திலேயே மரணம் சம்பவிக்கும்.

9-வது பாவம் தனுசாகில்:—ஜாதகன் வேதத்தில் சொல்லிய தர்மத்தைப் பின்பற்றுவான், தனம், வஸ்திரம் இவைகளைக் கொடுத்துப் பிராமணர்களைத் தன் இஷ்டம்போல் பூசிப்பான்.

10-வது பாவம் மகரமாகில்:—ஜாதகன் தயையற்றவன், தினந்தோறும் பந்துக்களுடன் பாபகர்மம் செய்வதில் பற்றுள்ளவன், தர்மம் ஆச்சாரம் இவைகளில்லாதவன்.

11-வது பாவம் கும்பமாகில்:—ஜாதகனுக்கு அழகிய சரீரமுண்டு, பரந்தகண்களுடையவன்; தனவான், தான்ய முடையவன். சிலேஷ்மம் அதிகமாயுள்ளவன்.

12-வது பாவம் மீனமாகில்:—ஜாதகன் சஞ்சலன், அளவாய்ப் பேசுபவன், அரசாங்கத்தில் தனம் சம்பாதிப்பவன், அதிக இனிமையாய்ப்பேசுபவன்.

குறிப்பு:— தந்தந்தப் பாவாதிபதிகள் பூர்ண பலத்துடன் இருந்தால் மாத்திரம் இந்தப் பலன்கள் பலிக்கும்.

(2) மேஷ லக்கின ஜாதகனுக்குச் சூரியனும் குருவும் சுப பலனைத்தருவர். புதன், சுக்கிரன், சனி இவர்கள் அசுப பலனைத்தருவர். புதன், சுக்கிரன், சனி இவர்கள் மாரகஞ் செய்வதற்கு அதிகாரமுடையவர்கள். குருவும் சனியும் சம்மந்தமானால் யோகமில்லை.

(3) 4-வது பாவாதியாகிய சந்திரனும் 5-வது பாவாதிபதியாகிய சூரியனும் சம்மந்தப்பட்டால் ஜாதனுக்கு இராஜயோகமுண்டு. இதற்குச்சந்திர சூரியயோகம் என்று சொல்லப்படும்.

(4) 9-வது 12-வது பாவாதிபதியாகிய குரு 10-வது பாவத்தில் இருந்தால் குரு மாரகனுவான்.

(5) 2-வது, 7-வது பாவாதிபதியாகிய சுக்கிரன் ஜாதகனுக்கு நாசகாரகன் என்று பெயர், நாசத்தை உண்டுபண்ணுவார். ஆனால் 12-வது பாவத்திலிருந்தால் சுப பலனைத்தருவார். அம்மை, கத்தி முதலிய ஆயுதங்களால் குத்தின காயம் இவைகளால் ஜாதகனுக்கு ஆபத்து நேரிடும்.

(6) 6-வது பாவாதிபதியாகிய புதனோடு செவ்வாய் கூடினால் செவ்வாய் தசையில் செவ்வாய் புத்தியில் மரணமோ, தலை அறுதலோ உண்டாகும்.

(7) செவ்வாய் சுக்கிரனுடன் கூடியிருந்தால் செவ்வாய் ஜாதகனுக்கு யோகத்தைக் கொடுப்பார்.

(8) செவ்வாய், குரு அல்லது சுக்கிரனுடன்கூடி 2-வது பாவத்தில் இருந்தால் செவ்வாய் நிச்சயமாக யோகத்தைத் தருவார்.

(9) செவ்வாய், குரு, சுக்கிரன் இவர்களுடன்கூடி 3-வது பாவத்தில் இருந்தால் செவ்வாய் யோகத்தைக் கொடுக்கமாட்டார்.

(10) செவ்வாய் குருவுடன்கூடி 4-வது பாவத்திலிருந்தால் செவ்வாய் யோகத்தைத் தருவார்.

(11) செவ்வாய் 5—வது பாவத்திலிருந்தால் செவ்வாய் தசையில் ஜாதகனுக்கு யோகமுண்டு.

(12) செவ்வாயும், புதனும் 6–வது பாவத்தில் இருந்தால் இவர்களுடைய தசாகாலத்தில் ஜாதகனுக்கு விரணம், அம்மை முதலான வைகள் நேரிடும்.

(13) செவ்வாயும் சுக்கிரனும்கூடி 7-வது பாவத்தில் இருந்தால் ஜாதகன் சுயார்ஜிதமாய்க் கொஞ்சம் தனம் சம்பாதிப்பான்.

(14) செவ்வாய் 8–வது பாவத்தில் இருந்தால் செவ்வாய் யோகத்தைக் கொடுக்கமாட்டார். செவ்வாய், சூரியன், சுக்கிரன் இவர்களுடன் சேர்ந்து 8-வது பாவத்திலிருந்தால் செவ்வாய் கொஞ்சம் யோகம் கொடுப்பார்.

(15) 9–வது பாவத்தில் சூரியனும், செவ்வாயும், குருவும், சுக்கிரனும் இருந்து 7-வது பாவத்தில் சனி இருந்தால் ஜாதகனுக்கு அதிக யோகமுண்டு.

(16) 1-வது பாவத்தில் சூரியனும், சுக்கிரனும் இருந்து குருவால் பார்க்கப்படாவிட்டால் இந்த சுக்கிரன் ஜாதகனுக்கு யோகத்தைக் கொடுப்பான்.

(17) குருவால் பார்க்கப்பட்ட சுக்கிரன் ஜாதகனுக்கு யோகத்தைக் கொடுக்கமாட்டார்.

(18) குருவால் பார்க்கப்பட்ட சூரியன் ஜாதகனுக்கு யோகத்தைக் கொடுப்பார்.

(19) குரு 11-வது பாவத்திலிருந்தால் குரு தசையில் ஜாதகனுக்கு அவயோகம் அதாவது கெட்ட யோகமுண்டு.

(20) சூரியன், புதன், சுக்கிரன் இவர்கள் 11-வது பாவத்தில் இருந்தால் ஜாதகனுக்கு அவர்கள் தசாகாலங்களில் அதிக யோகமுண்டு.

(21) சந்திரன் கடகத்திலும், செவ்வாய் மேஷத்திலும் இருந்தால் ஜாதகனுக்கு இராஜயோகமுண்டு.

(22) சூரியன், குரு, சுக்கிரன் இவர்கள் 6-வது பாவத்திலிருந்தால் அந்தந்த தசையில் ஜாதகனுக்குக் கங்கா ஸ்நானம் உண்டு.

குறிப்பு:—மேலே சொல்லிய கிரக யோகங்களுக்கு எல்லாம் லக்கினம் மேஷம் லக்கினம் என்று கியாபகம் வைத்துக்கொண்டு மேஷ லக்கின ஜாதகத்திற்குப் பலன் சொல்லவேண்டுமே ஒழிய ஷை யோக பலன்களோ மற்ற லக்கினங்களுக்குச் சொல்லக்கூடாது.

(23) மேஷ லக்கினத்திற்கு 7-வது பாவாதிபதி சுக்கிரனுகில் ஜாதகனுடைய மனைவியின் யோனி அழகாயிருக்கும். இந்த சுக்கிரன் சனி, சந்திரன், புதன் இவர்களிடையில் இருந்தால் யோனி நீண்டு நெறுங்கி இருக்கும்.

(24) மேஷ லக்கின ஜாதகனுக்கு லக்கின பாவத்தில் சூரியன் இருந்து சனி பத்தாவது பாவத்திலிருந்து ஒன்பதாவது பாவத்தில் குருவும், சந்திரனும் இருந்தால் ஜாதகன் 14-வது வயது முதல் 29-வது வயது வரையிலும், தனவானுயும், தேசாதிபதியாயும் இருப்பான்.

(25) மேஷ லக்கின ஜாதகருக்கு லக்கின பாவத்தில் இராகு இருந்தால் உத்தம பலனைத்தரும்.

(26) மேஷ லக்கினத்திற் பிறந்தவனுக்குப் பெரும்பாலும் ஆயுதத்தாலும், அக்கினியாலும் கெண்டம் நேரிடும்.

(27) மேஷ லக்கினத்திற் பிறந்தவனுக்கு 4-வது பாவத்தில் சுக்கிரனும், புதனும் இருந்து 10-வது பாவத்தில் குரு இருக்கச் சந்திரனுக்கு 7-ல் சனி இருக்க மாதாவைப்பெற்ற பாட்டி இறந்துவிடுவாள், சந்திரன் அப்போது உச்சமாய் இருந்தால் ஜாதகனுடைய தாய்க்கு அரிட்டமில்லை.

(28) மேஷ லக்கினத்திற் பிறந்தவனுக்கு 4-வது பாவம் கடகமாகி அதில் சந்திரன் இருக்க ஜாதகனுடைய மாதருக்குப் பூர்ண வயதாண்டு, இந்தச் சந்திரனுக்கு இரண்டுபுறமும் பாபக் கிரகங்கள் இருக்க ஜாதகனுடைய அன்னைக்கு அரிட்டம் நேரிடும்.

(29) மேஷ லக்கினத்திற் பிறந்தவனுக்கு 7-வது பாவாதிபதி சுக்கிரனுகி பாபருடன் கூடி பாபரால் பார்க்கப்பட்டிருக்க, சத்துரு அம்சை அல்லது பாபருடைய அம்சை இவைகளில் சுக்கிரன் இருக்க ஜாதகனுடைய மனைவி அன்னிய புருஷர்களை அண்டி அவர்களிடஞ் சோரஞ் செய்வாள்.

(30) மேஷ லக்கினத்திற் பிறந்தவனுக்கு 9-வது பாவாதிபதி குருவாகி 9-வது பாவத்தில் குரு இருக்க ஜாதகன் பலர்களிடத்தில் உபதேசமும், வித்தையும் பெறுவன், 9-வது பாவாதிபதி எந்த நவாம்சத்தில் அந்த நவாம்சத்தில் உபதேசம் பெறுவன்.

(31) மேஷ லக்கின ஜாதகத்திற்கு 6-வது, 8-வது பாவத்தில்

பாபர்கள் இருக்க ஜாதகனுக்கு விஷத்தாலும், பாஷாணத்தாலும் மரணம் உண்டு.

(32) மேஷ லக்கின ஜாதகத்திற்கு மேஷத்தில் செவ்வாயும், சந்திரன் கடகத்திலும், தனுசில் குருவுமிருந்தால் ஜாதகன் அரசனுவான்.

(33) மேஷ லக்கின ஜாதகத்திற்கு ரிஷபத்தில் புதனும், குரு கடகத்திலும், மகரத்தில் செவ்வாயும் இருந்தால் ஜாதகன் அரசனுவான்.

(34) மேஷ லக்கினத்திற் பிறந்தவனுக்குப் பாபர்கள் லக்கினத்தைப்பார்க்க அந்தப் பாபர் மேஷத்தின் மூன்றுந் திரேக்காணத்திலிருந்தால் ஜாதகனுக்கு விஷபயம், சிறை, தீ, அக்கினிபயம், திருடர் பயம் இவைகள் உண்டாகும்.

(35) மேஷ லக்கினத்திற் பிறந்தவனுக்கு ரிஷபத்தில் சந்திரன் இருந்து இச்சந்திரன் குருவால் பார்க்கப்பட்டால் ஜாதகன் பிரபுக்குச் சமானமானவன்.

(36) மேஷ லக்கினத்திற் பிறந்தவனுக்குச் சிம்மத்தில் சூரியனிருந்து சூரியன் சுபரால் பார்க்கப்பட்டால் ஜாதகன் அரசனுவான்.

(37) மேஷ லக்கினத்திற் பிறந்த ஜாதகனுக்குச் சனி விருச்சிகத்தில் வக்கிரமாய் இருந்தால் ஜாதகனுக்கு இரண்டாவது வயதில் அரிட்டம் நேரிடும்.

(38) மேஷ லக்கினத்திற் பிறந்த ஜாதகனுக்கு 7-வது பாவத்தில் நேய் பிறை சந்திரனும் குருவும் இருந்து லக்கினத்தைப் பார்த்தால் ஜாதகனுக்கு 6, 7, 8, 9-வது வயதுகளில் அரிட்டம் நேரிடும்.

(39) மேஷ லக்கினத்திற் பிறந்த ஜாதகனுக்கு லக்கினத்தில் குரு இருந்து 6-வது பாவத்தைப் பாவர் பார்க்கில் ஜாதகனுடைய ஆண் குறியில் விரணம் உண்டாகும்.

(40) மேஷ லக்கினத்திற் பிறந்த ஜாதகனுக்குச் சூரியனைச் சனியும் செவ்வாயும் பார்த்தால் ஜாதகனுடைய கண்ணில் பூவிழும்.

(41) மேஷ லக்கினத்திற் பிறந்த ஜாதகனுக்கு 2-வது பாவாதிபதி இராகுவுடன் கூடி இலக்கினத்தில் இருந்து இவர்களைப் 10-வது பாவாதிபதி பார்த்தால் ஜாதகன் சாபபவித்தையால் ஜீவிப்பான்.

(117) நாடிக்கிரந்தங்களில் உபயோகப்படுத்தப்பட்ட விதிகள்.

மேஷ லக்கின ஜாதகம்.

(1) ஜென்ம லக்கினம் மேஷம் (சாங்கரி அம்சம்) ஆகி லக்கினாதிபன் விருச்சிகாம்சத்திலிருந்து அம்ச சக்கிரத்தில் குருவுடன் கூடி இருந்தால் ஜாதகன் கருத்தும் கொஞ்சம் வடுவும் உள்ள தேகமுடையவன், சமமான சரீர பாகமுடையவன், குணங்களை அறிபவன், வித்தையுடையவன், சொரி, தினவுள்ள அங்கமுடையவன்; விபரீத பீடை உடையவன்.

(2) ஜென்ம லக்கினம் மேஷம் (சியாமாம்சம்) ஆகி லக்கினாதிபன் 9-வது பாவத்தில் இருந்து சந்திரன் குருவுடன் கூடி இருக்க ஜாதகன் ரூபமுடையவன், கியாபக சக்தியுடையவன், வாசாலகன், தெளிவுள்ள முகம் கண்களுடையவன், அதிர்ஷ்டமுடையவன், தர்மாத்மா வெளுத்த காந்தியுடையவன், மெலிந்த தேகம், சூட்டுத்தேகம், புத்திமான், விஷ்ணு பக்தர் குலத்துதித்தோன், விஷ்ணு, சங்கர பக்தியுடையவன், தேவர், பிராமணரிடம் பக்தியுடையவன், தாய் பாட்டன் இறந்த பிறகு அவன் பத்னியால் (தாய்பாட்டியால்) தத்து எடுத்துக் கொள்ளப்பட்டவன், அதாவது இவன் தாய்பாட்டிக்குத் தத்து புத்திரனுவான். இவன் தகப்பனார் தீர்க்காயுள், இவன் தாய் சீக்கிரம் மறிப்பாள், ஸ்சுவீகாரத் தாய் தீர்க்காயுள், ஸ்வீகாரத்தாய்க்கு மூன்று பெண்கள், அவர்களுள் மூத்தவள் காலஞ்சென்ற இவன் தாய், புதன் திசை சனி புக்தியில் ஸ்சுவீகாரத் தாய் மரணம், சிலமதஸ்தர் ஸ்சுவீகாரத் தாய் கேது திசையில் சந்திர புக்தியில் மரணம் என்பர்.

(3) ஜென்ம லக்கினம் மேஷம் (சாங்கரியாம்சம்) ஆகி லக்கினாதிபன் 11-வது பாவாதிபதியுடன் கூடில் ஜாதகன் அழகன், அறிவாளி, வாசாலகன், தெளிந்த முகமும் கண்களுமுடையவன், சிவந்தபேனியான், உயரத்தில் நடுத்தரமான தேகமும், பருமனில் கொஞ்சம் தடித்த தேகமும் உடையவன்.

(4) ஜென்ம லக்கினம் மேஷம் (காலாம்சம்) ஆகி லக்கினாதிபன் சுய சேஷ்த்திரத்திலிருந்து 4-வது பாவத்தில் குரு உச்ச ராசியில் இருக்கில் ஜாதகன் அழகன், அறிவாளி, வாசாலகன், பரந்தமுகமும் விழிகளுடையவன், அதிர்ஷ்டமுடையவன், தர்மாத்துமா, சிவந்த அழகிய ரூபமுடையவன், சாத்வீக குணமுடையவன், ராஜயோக முடையவன், சிவபக்த குலத்திலுதித்தவன், விஷ்ணுபக்தர் சேர்க்கை

உடையவன் அல்லது அந்தண ஸ்திரீ சங்கமமுடையவன், தாமரை போல் பரந்த கண்களுடையவன், சங்கீத ரச மறிந்தவன், படித்தவன், வாசனை திரவியம், புஷ்பம், வஸ்திரங்கள், ஸ்நானம், ஆசார முடையவன், மான முடையவன், விஷ்ணு சங்கரபக்தி யுடையவன், நீச்ச பிரபு மூலம் பாக்கிய வரவு உண்டு, உத்தியோக ஜீவனம்.

(5) ஜென்ம லக்கினம் மேஷம் (சாங்கரியம்) ஆகி 2-வது பாவாதிபதி சுக்கிரன் தனுசில் துலாம்சத்தில் இருந்து இரண்டாகிபனல் பார்க்கப்பட்டால் ஜாதகன் கொஞ்சம் தழுதழுத்த சொல்லுடையவன், தேவி பூஜை செய்பவன், உஷ்ணவாயு சரீரமுடையவன், புட்டத்தில் வாயு பீடை யுடையவன், பருத்த விரைகளுடையவன், தேவர் பிராமணரிடம் பக்தியுடையவன், தந்தவாயு, காது சூல சிலசமயங்களில் உள்ளவன்.

(6) ஜென்ம லக்கினம் மேஷம் (சியாம்சம்) ஆகில் 2-வது பாவாதிபதி சுக்கிரன் 12-வது பாவத்தில் உச்சனுயிருந்து 2-வது பாவத்தில் இராகு இருந்தால் ஜாதகன் மூன்று எழுத்துக்களில் சமர்த்தன், பல பாஷைகளறிந்தவன், சில காலம் தந்தவாயு வால் பீடை யுடையவன், பலமற்ற பற்களுடையவன், சங்கீதத்தில் விருப்பமுள்ளவன், வாசனை திரவியம், புஷ்பம், வஸ்திரம் இவைகளில் பிரியன், சிக்கிரபோக முடையவன், மெதுவாய்ப் புசிப்பவன், காம முடையவன், சத்துருக்களை அழிப்பவன், பிரதாபமுடையவன்.

(7) ஜென்ம லக்கினம் மேஷம் (சாங்கரியாம்சம்) ஆகி 2-வது பாவாதிபனகிய சுக்கிரனுடன் குருவும் சந்திரனும் கூடி ஆக மூவரும் 10-வது பாவத்தில் இருந்தால் ஜாதகன் காவிய நாடகசார மறிந்தவன், வேதம், சாஸ்திரம், புராணம் அறிந்தவன், சமஸ்கிருதம் பிரியமாய்ச் சொல்லுபவன், பிரபுக்கள் நேசமுண்டு, தனம் சம்பாதிப்பவன், அயலார் இங்கிதமறிந்தவன், மேதாவி, வித்தை தடையுடையவர்.

(8) ஜென்ம லக்கினம் மேஷம் (காலாம்சம்) ஆகி 2-வது பாவாதிபதியாகிய சுக்கிரன் சந்திரனுடன் கூடி 9-வது பாவத்தில் இருந்தால் வாசாலகன், சாதுர்யமான யுக்தியுடையவன், பரோபகாரம் செய்வதில் பற்றுடையவன், தாதா. எல்லா ஜனங்களும் விரும்பத்தக்கவன்.

(9 2-வது பாவத்தைச் சனி பார்த்தால் வைரூரி, சுரகெண்டம் உடையவன், தந்தவாயு பீடை, பல்லில் ரத்தம் பெருகும், இரண்டு எழுத்துகளறிந்தவன், எழுத்து வித்தையில் சமர்த்தன், கெம்பீரமாயும்

இனிமையாயும் பேசுபவன், பிரபு லக்ஷணமுடையவன், சூட்டுதேகம், மெலிந்த அழகிய மேனி, பித்தச்சூடு அதிகம், பித்ததேகம், காம முடையவன், பலஜாதி பெண்களை அனுபவிப்பவன், மார்நோயுடைய வன், ஆயிரத்திற்கு அதிகமான தனமுடையவன்.

(10) ஜென்ம லக்கினம் மேஷம் (சாங்கரியாம்சம்) ஆகி புதன் துலா நவாம்சத்தில் விருச்சிகத்தில் இருந்தால் ஜாதகனுக்கு மூத்த சகோதரன் ஒருவன் உண்டு. இளைய சகோதரி ஒருவள் இரண்டு புத் திரருடன் கூடியவளாய்க் கொஞ்சகாலம் சுமங்கலியாயிருந்து பின்னல் விதவையாவாள். மாற்றாந் தாயின் புத்திரன் ஒரு இளைய சகோதரன் ஜாதகனுக்கு உண்டு.

(11) ஜென்ம லக்கினம் மேஷம் (சியாமாம்சம்) ஆகி 3-வது பாவாதிபதியாகிய புதன் ரிஷபாம்சத்தில் இருந்து இராசியில் 10-வது பாவத்தில் சூரியன், சனி இவர்கள் இருவருடனும்கூடி மூவருமாக இருந்தால் ஜாதகனுக்கு ஒரு மூத்த சகோதரன் வாலிபத்தில் மரிப் பான், ஒரு மூத்த சகோதரன் இருப்பான், இளைய சகோதரர்கள் நால் வர், சகோதரி ஒருத்தி உண்டு.

(12) ஜென்ம லக்கினம் மேஷம் (சாங்கர்யாம்சம்) ஆகி 3-வது பாவாதிபதி புதன் மீனத்தில் சூரியன், இராகு இவர்கள் இருவருடன் கூடி மூவருமாக இருக்கில் ஜாதகனுக்கு மூத்த சகோதரம் இரண்டு உண்டு, அவர்களில் ஒருவன் இறப்பான். இளைய சகோதரம் இல்லா தவன், ஒரு சகோதரி சுமங்கலியாய் அதிக புத்திரருடன் கூடியவள், அவள் காலாந்தரத்தில் நற்புத்திரருடையவள்.

(13) ஜென்ம லக்கினம் மேஷம் (காலாம்சம்) ஆகி 3-வது பாவாதி பதியாகிய புதன் விருச்சிகத்திலிருந்து குருவால் பார்க்கப்பட்டிருந் தால் ஜாதகன் மூத்த சகோதரனுடனும், இளைய சகோதரனுடனும் கூடியிருப்பான், இரண்டு அல்லது மூன்று சகோதரிகளுண்டு, மூத்த சகோதரன் புத்திரனுடையவனுய் வாலிபத்தசையில் மரிப்பான், மூத்த சகோதரி விதவையாகிக் கஷ்டப்படுவாள்.

(13) ஜென்ம லக்கினம் மேஷம் (சாங்கரியம்சம்) ஆகி 4-வது பாவாதிபதியாகிய சந்திரன் கன்னியாம்சத்திலிருந்து இராசியில் 4-வது பாவத்தில் இருந்தால் ஜாதகனுடைய தாய் குணவதி, புண்ணி யம் செய்தவள், சனி திசையில் மரிப்பாள், சனி திசையில் குரு புத்தி

யில் 9-வது பிரசவத்தில் தாய் மரணமாவாள், ஒரு அம்மான் உண்டு, அந்த அம்மான் பின்னல் மரிப்பான்.

(15) ஜென்ம லக்கினம் மேஷம் (சியாம்சம்) ஆகி 4-வது பாவாதி பதியாகிய சந்திரன் கடகாம்சத்திலிருந்து இராசியில் குருவுடன்கூடி 8-வது பாவத்திலிருந்தால், சுக்கிரன் 12-வது பாவத்திலிருந்தால் ஜாதகன் பிதுரார்ஜிதமற்றவன், தான் வீடு சம்பாதிப்பான், மூன்று சுவல்ப வாகனமுடையவன், பின்னல் அனேக வாகனங்களுடனும், பாக்கியங்களு முடையவன், கொஞ்சம் பூமி பொருளுடன்கூடி உத்தியோக ஜீவனஞ் செய்பவன், நீச்ச அரசனை அடைபவன், ஆயிரத்திற்கு அதிக மான தனமுடையவன், தாய் சுகமில்லாதவன், எப்போதும் வருந்தும் மனமுடையவன், அதிக செலவுள்ளவன், அதிக மானமுடையவன், ஜபம் தியானத்துடன் கூடியவன்.

(16) ஜென்ம லக்கினம் மேஷம் (சாங்கர்யாம்சம்) ஆகி 4-வது பாவாதிபதி சந்திரன் பகரத்தில் காளாம்சத்தில் இருந்தால் தாய் வெகு புண்ணியமுடையவள், பதி பக்தியுடையவள், சந்திரதிசை முடிவில் மரிப்பாள்.

(17) ஜென்ம லக்கினம் மேஷம் (சாங்கர்யாம்சம்) ஆகி 4-வது பாவாதிபதி சந்திரன் 10-வது பாவத்தில் குரு, சுக்கிரன் இவர்கள் இருவருடன்கூடி பூவருமாகவிருக்கில் ஜாதகனுக்கு மூன்று வாகன முண்டு, நவாகனமுமுண்டு, பூமி, பொருள் லாபமுடையவன், சுவல்ப வியாபார லாபமுண்டு.

(18) ஜென்ம லக்கினம் மேஷம் (காலாம்சம்) ஆகி 4-வது பாவாதிபதி சந்திரன் தனுசில் சுக்கிரனுடன் இருந்து 4-வது பாவம் செவ்வாயால் பார்க்கப்பட்டால் ஜாதகனுடைய தாய்க்குத் தீர்க்காயுளுண்டு, தாய் குணமுடையவள், புத்திரனுக்குப் பிரீதி செய்பவளாய் இருப்பாள், செவ்வாய் திசையில் சந்திரபுக்தியில வது, இராகுபுக்தியிலாவது தனுசில் கடைசி பாகத்தில் சனி கோட்சாரத்தில் சஞ்சாரஞ் செய்புங்காலம் தாய்க்குப் பீடையுண்டு.

(19) ஜென்ம லக்கினம் மேஷம் (சாங்கரியம்சம்) ஆகி 5-வது பாவத்தில் சனி இருந்தால் ஜாதகனுடைய மூத்த மகன் அழிவான். இரண்டு புத்திரன் அல்லது மூன்று புத்திரர் தீர்க்காயுளுடையவர், இரண்டு பெண் உண்டாகும். சாந்தி செய்ய மக்கள் சுகம். ஜாதகன்நற்

செய்கை, ஆச்சாரமுடையவர், பால் பாக்கியம், தனதான்யம் உடையவர்.

(20) ஜென்ம லக்கினம் மேஷம் (சியாமாம்சம்) ஆகி 5-வது பாவாதிபதி சூரியன் 10-வது பாவத்தில் இருந்து காரகனுகிய குரு விருச்சிகத்திலிருந்தால் ஜாதகனுக்கு மூன்றுபுத்திரர்கள் தீர்க்காயுளுள் ளவர், ஐந்து பெண்களுண்டாகும், அதிகமும் உண்டாகும், சாந்தியால் புத்திரசுகமுண்டு, இரண்டு மூன்று புத்திரர் மரிப்பர். ஆகையால் சாந்தி செய்யவேண்டியது.

(21) ஜென்ம லக்கினம் மேஷம் (சாங்கரியாம்சம்) ஆகி 5-வது பாவாதிபதி சூரியன் 12–வது பாவத்தில் இராகு, புதன் இவர்களிருவருடன்கூடி மூவருமாய் இருந்தால் ஜாதகன் புத்திரபாக்கியமுடையவனுய் இருந்தாலும், பிறந்தாலும் மறிக்கும். ஏகாதசியில் கோதானம் செய்து அரசப் பிரதிஷ்டை செய்தாலும், சிம்சுமார யந்திரதானத்தாலும், காலாந்திரத்தில் நற்புத்திரனுண்டு. சிலர் வேறு மனுவியிடம் புத்திரர் உண்டென்கின்றனர். சாந்தி தானத்தால் ஒரு புத்திரன் உண்டாவான், அதிக கஷ்டத்தின்பேரில் இரண்டு அல்லது மூன்று பெண்கள் உண்டாவர்.

(22) ஜென்ம லக்கினம் மேஷம் (காலாம்சம்) ஆகி 5-வது பாவாதிபதியாகிய சூரியன் புதனுடன்கூடி 8-வது பாவத்திலிருந்தாலும், புத்திரஸ்தானத்தில் அதாவது 5-வது பாவத்தில் சனி இருந்தாலும் தக்க புத்திரனுல் சந்ததி. ஏகாதசி கோதானத்தாலும், சந்தான கோபால மூர்த்தி தானத்தாலும் வெகு புண்ணியவசத்தால் காலாந்தரத்தில் புத்திரலாபம் வேறு மனுவியிடமாவது உண்டாகும்.

(23) ஜென்ம லக்கினம் மேஷம் (சாங்கரியாம்சம்) ஆகி 5-வது பாவாதிபதியாகிய சூரியன் மகராம்சத்திலிருந்து இராசியில் விருச்சிகத்திலிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் அறிவாளி, சாது, எப்போதும் தேவி பூஜை செய்பவன், மனு, பூமி, தனம் நிரம்பப்பெற்றவன், மறு மனுவியுடையவன், கேது திசை, புக புத்தியிலாவது, சுக்கிர திசை சுய புத்தியிலாவது ஜாதகனுடைய தகப்பன் மரணமாவான்.

(24) ஜென்ம லக்கினம் மேஷம் (சாங்கரியாம்சம்) ஆகி 7-வது பாவாதிபதி சுக்கிரன் சுய நவாம்சத்திலிருந்து, 7-வது பாவம் செவ்வாயால் பார்க்கப்பட்டால் ஜாதகனுக்கு 17-வது அல்லது 22-வது வய

தில் விவாகமுண்டு. மனைவி வாக்கு சாதுர்யமுள்ளவள். உயரமாயும் கறுத்தவளாயும் இருப்பாள். புத்திரன் புத்திரிகளுடன் நல்லவள், வீட்டு வேலை நிர்வாகஞ்செய்பவள்.

(25) ஜென்ம லக்கினம் மேஷம் (சாங்கரியாம்சம்) ஆகி 5-வது பாவத்தில் சனி இருந்து மேஷாம்சத்திலிருந்தால் ஜாதகன் துஷ்ட தேவதையிடத்தில் பக்தியுடையவன், ஒரு மனைவியுடையவன், மான முள்ளவன், சுசியானவன், பிறவிமுதல் சுகமுடையவன்.

(26) ஜென்ம லக்கினம் மேஷம் (சியாம்சம்) ஆகி 7-வது பாவாதிபதியும் காரகனுமாகிய சுக்கிரன் 2-வது பாவத்தில் இருந்து அம்சத்தில் துலாத்தில் கேதுவுடன்கூடி இருந்தால் ஜாதகனுக்குப் பதினெட்டாவது வயதில் விவாகம் இரண்டு மூன்றுதாம் பிரயத்தனஞ்செய்து பின்னல் விவாகமாகமுண்டு. தென்கிழக்குத் திசையில் விவாகம், சிவந்த மேனியுள்ள தாரம், மனைவி பெண்பிள்ளையுடன் கூடியவள், சிலர் மறுமனையாள் உண்டென்கின்றனர்.

(27) ஜென்ம லக்கினம் மேஷம் (சாங்கர்யாம்சம்) ஆகி 7-வது பாவாதிபதி 10-வது பாவத்திலிருந்து 2-வதுபாவத்தைக் குரு பார்த்தால் ஜாதகனுக்குத் தன் தேசத்தில் தார லாபமுண்டு, தன் ஊரில் விவாகமுண்டு, சிவந்த நிறமுள்ள மனைவி, மறு மனைவியுண்டு, சனி திசை சுக்கிர புத்தியில் இரு மனைவியுண்டு என்று சிலர் அபிப்பிராயம், ஆனல் நிச்சயமாய் ஒரு மனைவிதான் உண்டு.

(28) ஜென்ம லக்கினம் மேஷம் (காலாம்சம்) ஆகி 7-வது பாவாதிபதியாகிய சுக்கிரன் சந்திரனுடன்கூடி 7-வது பாவம் சனியால் பார்க்கப்பட்டால் தன் பட்டணத்திற்கு வடதிசையில் வனந்தரம் அல்லது காடு கோடியில் தார லாபமுண்டு. மனைவி கறுத்தநிறமுள்ளவள், எப்போதும் ரோக சரீரமுடையவள், புத்திரலாபமுடையவள், புண்ணியமுடையவள், பர்த்தாவிடம் பக்தியுடையவள், மறு மனைவியுண்டு என்று சிலர் சொல்லுகின்றனர்.

(29) 9-வது பாவாதிபதியாகிய குரு தன் உச்சஸ்தானத்திலிருந்தால் ஜாதகனுக்கு 32-வயதில் விவாகம் நேரிடும்.

(30) ஜென்ம லக்கினம் மேஷம் (சியாமாம்சம்) ஆகி 6-வது பாவாதிபதியாகிய புதன் 10-வது பாவத்திலிருந்து காரகனுகிய செவ்வாய் தனுசிலிருந்தால் ஜாதகன் பித்தரூடு சரீரமுடையவன் சொரி,

தினவு, வெள்ளைமேகப்பெருக்கு, நீர்வியாதி முதலியன கொஞ்சம் உண்டாகும். சிலகாலம் வயிற்றுசூலை, சிலகாலம் மூலநோய் தோன்றும்.

(31) ஜென்ம லக்கினம் மேஷம் (சாங்கர்யாம்சம்) ஆகி 6-வது பாவாதிபதியாகிய புதன் மீனத்தில் தன் நீச்சஸ்தானத்தில் சூரியனும் ராகுவுடனும்கூடி ஆக மூவருமாய் இருக்கில் ஜாதகனுக்கு எப்போதும் வாயு சரீரம், பித்தச்சூடு, அதிகமான தேகம், சில சமயம் அண்ட வாயு பீடை, சிலசமயம் மார்சூலை முதலிய நோய் உண்டாகும்.

(32) ஜென்ம லக்கினம் மேஷம் (சியாம்சம்) ஆகி 9-வது பாவாதிபதி குரு விருச்சிகத்திலிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் தீர்க்காயுள். கேதுதிசை, சூரியபுக்தி, சனி, ராகு, செவ்வாய் புக்திகளிலும் புதன்திசை முடிவிலும் தகப்பனுக்குப் பீடை உண்டு.

(33) ஜென்ம லக்கினம் மேஷம் (சாங்கர்யாம்சம்) ஆகி 9-வது பாவாதிபதி குரு 10-வது பாவத்தில் சுக்கிரன், சந்திரன் இவர்கள் இருவருடன்கூடி மூவருமாக விருக்கில் ஜாதகனுடைய பிதா பாக்கியவான், சாது, புத்திரி புத்திரருடன் கூடியவன், ராகுதிசை, சனிபுக்தியில் பிதா மாரகம். ஜாதகன் கொஞ்சம் உயர்ந்த தேகமுடையவன், மனதில் கபடமற்றவன், விஷ்ணு சங்காபக்தியுடையவன், சம்ஸ்கிருதம் பிரியமாய்ப் பேசுபவன், பிரபு லக்ஷணம் அமைந்தவன், தாஸ தாஸி ஜனங்களுள்ளவன், அறிவாளி, பந்துக்களைப் பாதுகாப்பவன், சத்துருக்களை அழிப்பவன், குணம் அறிபவன், பசு, தனம், தான்யம் நிறைந்தவன்.

(34) ஜென்ம லக்கினம் மேஷம் (கலாம்சம்) ஆகி சூரியன் புதனுடன் கூடி இருக்கில் ஜாதகனுடைய பிதா யோகவான், குணவான், இருபத்தொன்பதாவது வயதில் பிதா மரணம்.

(35) ஜென்ம லக்கினம் மேஷம் (சியாம்சம்) ஆகி 10-வது பாவாதிபதியாகிய சனி பத்தாவது பாவத்திலேயே இருந்தால் ஜாதகன் தாஸ தாஸி ஜனங்களுடன்கூடியவன், பூமி, தோட்டம், பொருள் நிறைந்தவன், அரசாங்க முத்திரைபெற்ற அதிகாரமுடையவன், பெலிந்த தேகமுடையவன், தயையுடையவன், பண்டிதன், மானமுடையவன், தேவர் பிராமணர் பக்தியுடையவன், நித்தம் அன்னதானத்தில் விருப்பமுள்ளவன், குடும்பி, அநேகரைப் போஷிப்பவன், எப்போதும் நோயுடைய அங்கமுடையவன், பரஸ்திரீ சேர்க்கை

யுடையவன், அல்ப வித்தையில் சமர்த்தன், மெதுவான சொல்லுடை யவன், புகழுடையவன், சிலகாலம் அபகீர்த்தியுண்டு, சத்துருக்கள் அதிகம் உண்டு.

(36) ஜென்ம லக்கினம் மேஷம் (மாலின்யாம்சம்) என்ற கெ. 20 மாலாம்சம்) ஆகி குரு 9-ல் கால கூடாம்சத்தில் இருக்கும்போது மாதங்க யோகத்தில் பிறந்த ஜாதகன் சிவந்த நிறமும் அழகிய உருவ மும் உடையவன், மாதங்க யோகம் என்பதைப்பற்றி 6-வது அத்தி யாயம் 71-வது அயிட்டத்தைப் பார்க்கவும்.

(37) ஜென்ம லக்கினம் மேஷம் (மாலின்யாம்சம்) ஆகி குரு சுவ கேஷத்திரத்தில் மீனாம்சத்திலிருந்து (அதாவது 12-ல் மீனாம்சத்தி லிருந்து) சுக்கிரனுடன் கூடியிருக்க ஜாதகன் மாதங்க யோகத்தில் பிறந்திருந்தால் ஜாதகன் மாதங்க யோகம் பிரசித்திபெற்றவன்.

(38) ஜென்ம லக்கினம் மேஷம் (மாலின்யாம்சம்) ஆகி சந்திரன் நீச்ச வீட்டில் (விருச்சிகத்தில்) மகராம்சத்திலிருந்து சந்திரத் திரிகோ ணத்தில் பாபியான சனி ராகுவுடன் கூடியிருக்கப் பிறந்தவன் மாலின்ய (தோஷமுள்ள , குலத்திற் பிறந்தவன்.

(39) ஜென்ம லக்கினம் மேஷம் (மாலின்யாம்சம்) ஆகி மாதங்க யோகத்தில் பிறந்தவன் தன் உடன் பிறந்தவனற்றவன், மாற்றாந் தாயிடம்பிறந்த சகோதரமுடையவன், மூன்றுதாரமுள்ளவன், இவன் பிதா, தாய் தீர்க்காயுள், சகோதரி கெட்ட நடவடிக்கை யுள்ளவள். இவன் தாய் பதிவிரதை, சுசியானவள், வீட்டுத்தொல்லையால் வருந்தி யவள், வெகுகாலம் சுமங்கலியாயிருப்பாள், சகோதர நாசத்தால் துக்கமடைந்தவள்.

(40) ஜென்ம லக்கினம் மேஷம் (மாலின்யாம்சம்) ஆகி மாதங்க யோகத்தில் மாதங்காம்சத்தில் (அதாவது கெ. 107, குஞ்சராக்ருதி அம்சத்தில்) குரு இருந்தால் ஜாதகனுக்கு ஒரு சகோதரி தீர்க்காயுளு டையவள், மற்ற சகோதரிகள் நாசமடைவார்கள். ஜாதகனுடைய சிற்றப்பனுவது அம்மானுவது, ஜாதகனுடைய கோத்திரத்தில் தாயாதி வர்க்கத்தில் மாதங்க யோகத்தில் பிறந்தவனுடைய பத்னியாவது அனுமரண (உடன்கட்டை) மடைவார். ஜாதகன் வயசத்தில் யோக மற்ற ஒருத்தி விதவையாவாள். ஜாதகன் விவாகத்திற்கு முன்னே வாலிபத்தில் இவன் பிதா மரணமாவான்.

(41) ஜென்ம லக்கினம் மேஷம் (மாலின்யாம்சம்) ஆகி 4-வது பாவாதிபதியாகிய சந்திரன் நீச்சத்தில் சத்துரு நவாம்சத்தில் இருந்து பாக்கியாதிபனுடன்கூடி காலகூடாம்ச நாடியிலிருந்து துர்பகாவஸ்தையிலிருந்தால் ஜாதகன் தன்னுடன் பிறந்த சகோதரமற்றவன், ஒரு சகோதரி தீர்க்காயுள், தாய் தீர்க்காயுள்.

(42) ஜென்ம லக்கினம் மேஷம் (மாலின்யாம்சம்) ஆகி சந்திரன் துர்பகாவஸ்தையில் இருந்தால் ஜாதகனுடைய சகோதரி ஒருத்தி கெட்ட செய்கையுடையவள், மாற்றுந்தாய்க்குப் பிறந்த சகோதரர் நாசம், ஜாதகனுடைய தகப்பன் மூன்று தாரமுடையவன், இது ஒரு மதம்; வேறு மதம் பிரகாரம் பிதா அதிக பாக்கியமுடையவன், பல தேசத்தில் சஞ்சாரஞ் செய்து கிரைய விக்கிரைய மூலமாய் ஜீவனஞ் செய்பவன், சிவந்த தான்யம், வஸ்திரம் முதலிய பலவித வியாபாரம் செய்பவன், தினந்தோறும் வட்டி ஜீவனஞ் செய்பவன், சகோதரருடையவன், சூரியாம்சத்திலாவது அதன் திரிகோணத்திலாவது 4-வது பாவாதிபன் திரிகோணத்திலாவது சனி ஸ்புட யோகத்தில் (அதாவது கோட்சாரத்தில்) வரும்போது பிதா மரணம். ஜென்ம திசையில் பிதா அரிஷ்டம், அல்லது 2-வது திசையில் சுய புக்தியில் பிதா நோயால் வருந்தி பரிப்பான்.

(43) ஜென்ம லக்கினம் மேஷம் (மாலின்யாம்சம்) ஆகி மாதங்க யோகத்தில் பிறந்தவனுக்கு ஜென்ம திசை சில சமயம சுகங்கொடுக்கும், 2-வது திசையில் விவாகம் நேரிடும். அதாவது 10-ம் பாவாதிபதியின் புக்தியில் 20-வயதுக்குமேல் 2-வருஷத்திற்குள் அல்லது 25-வது வயதுக்குமேல் விவாகம், வாலிபத்தில் விவாகம் தடையாகும்.

(44) ஜென்ம லக்கினம் மேஷம் (மாலின்யாம்சம்) ஆகி குரு காலகூடாம்சத்தில் இருக்கப் பிறந்த மாதங்கயோக ஜாதகனுக்குக் கன்னிகை விக்கிரையத்தால் தனவரவுண்டு, சகோதரியின் தனம் கொஞ்சம் வரும்.

(45) ஜென்ம லக்கினம் மேஷம் (மாலின்யாம்சம்) ஆகி சனி மீனத்தில் கடகாம்சத்தில் இருந்து துலாம்ச கிரகத்துடன்கூடி இருக்கில் ஜாதகன் தனவான், கொஞ்சம் தன் கையால் சம்பாதித்த பொருளுடையவன், வாலிபத்தில் பிதுரார்ஜிதமுடையவன், தன் கோத்திர தாயாதியின் தனவரவுண்டு, அல்லது சகோதரியால் தனவரவுண்டு, வர்த்தக ஜீவனம், கர்மாம்சாதிபன், தசாகாலத்தில் தோழர், வீடு,

மீன பாழாகும், சகோதரி துக்கமடைவாள். அதற்குமேல் தாய் அரிஷ்டம் நேரிடும். ஜாதகனுடைய தாய் மனை பிராந்தியுடையவள், நடுக்காட்டில் துஷ்ட ஜந்துவால் மிருகத்தால் மரிப்பாள்.

(46) ஜென்ம லக்கினம் மேஷம் (மதங்காம்சம்) ஆகி 11-ம் பாவத்தில் ராகு குரூர சஷ்டியாம்சத்திலிருந்தால் ஜாதகனுடைய தாய் வழிபாட்டிக்குத் தூர்மரணமுண்டு. ஜாதகனுடைய தகப்பன் வாலிபத்தில் ஸ்திரீகாரணமாய் அகால மரணமடைவான், தேசம்விட்டு தேசத்தில் ஜன்னிபாதை ஜ்வரத்தால் மரணமாவான்.

(47) ஜென்ம லக்கினம் மேஷம் (மாலினியாம்சம்) ஆகி 12-வது பாவத்தில் காளாம்சத்தில் சனி, ராகுவுடன்கூடி சுப பார்வை பெற்றால் ஜாதகன் சிலகாலம் ரோகா யோகமுடையவன், சிலகாலம் கேம துரும யோகமுடையவன்.

(48) ஜென்ம லக்கினம் மேஷம் (மாலினியாம்சம்) ஆகி 12-வது பாவத்தில் சனி 4-வது பாவத்தில், குரு 8-வது பாவத்தில் சந்திரன் இருந்தால் ஜாதகனுக்குச சிலகாலம் ரோகா யோகமும், சிலகாலம் கர்க்கரி யோகமும் உண்டு.

(49) ஜென்ம லக்கினம் மேஷம் மாலினியாம்சம்) ஆகி கேம துருமத்தில் சந்திரனிருக்கும் மாதங்கயோக ஜாதகனுக்குச் சந்திர திசையில் அதிக நஷ்டம் உண்டு, முன் பாதியில் அதிக வியாகூலம் உண்டு, வேறு தாரத்திடம் சுகமுண்டு, பொருள் வரவுண்டு, கேமத்துரும யோகமுள்ள சந்திர திசையில் குரு புக்தியில் மாதங்கயோக ஜாதகனுக்குத் தார அரிஷ்டமுண்டு, உடனே மறுவிவாகமுண்டு, பின்னல், புக்தி, அந்தரங்களில் சுகம் உண்டு குரு புக்தி முடிவிலிருந்து, சனி புக்தி முடியவும் சுபாதிகளுண்டு, எல்லா திசையிலும் சந்திரபுக்தி குஜ புக்திகளில் குரு அந்தரத்தில் மனோவியாக்கூலமுண்டு. 10-வது பாவாதியின் தசையில் பின்பாகத்தில் அதிக சுகமுண்டு, அநேக வியாபார சித்தியுண்டு, தினந்தோறும் செல்வப் பெருக்குண்டு, லாபாதிபன் அம்சத்தில் அல்லது அதன் திரிகோணத்தில் அல்லது ஆறும் பாவாதிபன் அம்சத்தில் அல்லது அதன் திரிகோணத்தில் ஸ்புடயோகத்தில் (கோட்சாரத்தில்) சனி வரும்போது சகோதரி நாசமுண்டு, 48-வயதுக்குமேல் 51-க்குள் சகோதரி நாசமுண்டு. கர்ம யோகத்தில் பிறந்த ஜாதகனுக்கு லக்கினாதிபன் தசை சுகம் தரும், வேறு மனைவியிடம் புத்திரப்பேறு உண்டு, முதுமையில் ஸ்திரீ சுகம் உண்டு. சுக்கிர

லக்கினாதிபன் குஜனுகில் குஜ தசையில் குரு புக்தியில் அதிக தக்கத் தரும் செய்கைகள் உண்டு, அவமிருத்யு பயமுண்டு, தனக்குச் சமான மான ஜன நாசமுண்டு, பெண் சந்ததி நாசமுண்டு, அப்படி இல்லா விடில் தசை முடிவில் தனநாசமுண்டு. மேஷ லக்கினத்தில் கடகாம் சத்தில் குஜ தசை அதிக சுகங்கொடுக்கும்.

(50) ஜென்ம லக்கினம் மேஷம் (மாலினியாம்சம்) ஆகி 12-ம் பாவத்தில் பாபர் இருந்தால் ஜாதகனுக்குத் தூர்க்கதியுண்டு, பின்னல் இழிகுலப் பிறப்பு, முதுமையில் புத்திர யோகமுண்டு.

(51) ஜென்ம லக்கினம் மேஷம் (சமாம்சம்) ஆகி குஜனுடைய திரிம்சாம்சமாகில் ஜாதகன் மலைப்பிரதேசத்தில் பட்டணத்தில் விஷ்ணு சன்னதியில் பிறந்தவன்.

(52) ஜென்ம லக்கினம் மேஷம் (சமாம்சம்) ஆகி மூன்றும் பாவாதிபனுகிய புதன் மேஷாம்சத்திலிருந்து குஜனல் பார்க்கப்பட்டால் ஜாதகன் பின் சகோதரமில்லாதவன், மூத்த சகோதரமுடையவன், இரண்டு சகோதரர், இரண்டு சகோதரி தீர்க்காயுள்- சகோதர சகோதரிகள் இரண்டு நாசமாகும், ஒரு சகோதரி நல்லவள், புத்திர புத்திரிகளுடன் கூடியவள். ஒரு சகோதரி வாலிபத்தில் விதவைத்தன்மையால் கிலேசமடைந்தவள்.

(53) ஜென்ம லக்கினம் மேஷம் (சமாம்சம்) ஆகி பிதா ஸ்தானாதிபனுகிய குரு கும்பாம்சத்திலிருந்து சூரியனல் பார்க்கப்பட்டு ராகுவுடன் கூடியாவது பார்க்கப்பட்டாவதிருந்தால் பிதா தன்னுடன் பிறந்த சகோதரன் இல்லாதவன், வாலிபத்தில் கொஞ்சம் சுகம் உண்டு, பௌவனத்தில் கடன்பீடையுண்டு, இடை- இடையில் கொஞ்சம் சுகமுண்டு, வாசாலகன், வெகு புத்திமான்.

(54) ஜென்ம லக்கினம் மேஷம் (சமாம்சம்) ஆகி மாதா ஸ்தானாதிபனுகிய சந்திரன் மித்துனும்சத்தில் இருந்து கேதுவுடன்கூடி குருவால் பார்க்கப்பட்டால் ஜாதகனுடைய தாய்க்குத் தீர்க்காயுளுண்டு. இவன் தாய் சகோதர சகோதரிகளுடன் கூடியவள், சுமங்கலி, இவன் தாய்க்கு இரண்டு சகோதரிகள் தீர்க்காயுள், ஒரு சகோதன் தீர்க்காயுள், மிச்சம் நாசம்.

(55) ஜென்ம லக்கினம் மேஷம் (சமாம்சம்) ஆகி மாதுலாதிபனுகிய புதன் தன் உச்சத்தில் மேஷ நவாம்சையில் இருந்து சனியால்

பார்க்கப்பட்டால் கோட்சாரத்தில் கன்னியில் சனி வரும்போது அம்மானுக்கு அரிஷ்டம் சந்தேகமில்லை.

(56) ஜென்ம லக்கினம் மேஷம் (சமாம்சம்) ஆகி சுகஸ்தானாதி பதியாகிய சந்திரன் மித்துனாம்சத்தில் இருந்து குருவால் பார்க்கப்பட்டால் ராகு தசையில் சுக்கிர புக்தியில் ஜாதகன் புது வீடு லாபமுடையவன், வியாபாரத்தால் தனலாபமுண்டு, வீட்டில் லக்ஷ்மி கடாக்ஷம் உண்டு, விசேஷ தன லாபமுண்டு; வரவுக்குச்சரியான செலவுண்டு. மூன்றும் பாவாதிபதியின் தசைகாலத்தில் கோட்சாரத்தில் ரிஷபத்தில் சனி வருங்காலம் சூரிய புக்தியில் மூத்த சகோதரன் நாசம் சந்தேகமில்லை.

(57) ஜென்ம லக்கினம் மேஷம் (சமாம்சம்) ஆகி குடும்பாதிபதியாகிய சுக்கிரன் துலாம்சத்திலிருந்து குருவால் பார்க்கப்பட்டிருந்தால் கோட்சாரத்தில் ரிஷபத்தில் குரு வருங்காலம் ஜாதகனுக்கு விவாகம் முதலிய சுபங்கள் நடக்கும். கோட்சாரத்தில் தனுசில் சனி வருங்காலம் தன் அம்மான் மகனுக்கு விவாகம் நடக்கும்.

(58) ஜென்ம லக்கினம் மேஷம் (சமாம்சம்) ஆகி லாபாதிபதியாகிய சனி இருக்கின்ற அம்சத்திற்குத் திரிகோண ராசியில் ஸ்புட யோகத்தில் (கோட்சாரத்தில்) சனி வரும்போதும், இந்தத்திரிகோண ராசிக்குச் சனி பார்வை இருக்கும்போது ஜாதகனுடைய தாய்க்கு அரிஷ்டமுண்டு.

(59) ஜென்ம லக்கினம் மேஷம் (சமாம்சம்) ஆகி (அதாவது ஜென்ம லக்கினம் சமமாகி) லக்கினம் தேவபாக ஷஷ்டி யம்சத்திலிருந்து தனுசில் சனி இருந்தால் ஜாதகனுக்கு நடுவயதில் சுகமுண்டு, 5-வது பாவ தசை காலத்தில் புதையல் கிடைக்கும், 45-வயதில் அல்லது 50-வயதில் சனி குபேராம்சத்தில் இருக்கும்போது புதையல் கிடைக்கும்.

(60) ஜென்ம லக்கினம் மேஷம் (சமாம்சம்) ஆகி சூரியன் 5-ம் பாவத்திலிருந்து குருவால் பார்க்கப்பட்டிருந்தால் 4-வது பாவாதிபதி திசையில் சுக்கிரபுக்தியில் ஜாதகனுக்குப் புத்திர லாபமுண்டு. பாக்கியாதிபதி திசைகாலத்தில் வேதக கிரக புக்திகளில் தேகத்தில் நோய் பீடை, முதலிய வாதரோகத்தால் ஜாதகன் வருந்துவான். 8-ம் பாவாதிபன் இருக்கும், அம்ச ராசிக்குத் திரிகோண ராசிகளில் ஸ்புட

யோகத்தில் (கோட்சாரத்தில்) சனி வரும்போது ஜாதகனுக்கு அப மிருத்யு பயமுண்டாகும்.

குறிப்பு:—வேதகன், போதகன், பாசகன் என்ற விபரம் ஆங்கில கிரந்தங்களில் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவைகளை அக்கிரகங்களிலிருந்து தெரிந்துகொள்ளவும்.

குறிப்பு:—மேஷ லக்கினத்தின் துடர்ச்சிப் பலனும் மீதி லக்கினங்களின் இதைப்போன்ற பலனும் மூன்றும் பாகத்தில் கொடுக்கப்படும்.

8-வது அத்தியாயம்.

(118) ஸாவதிபாவ பலன்.

சூரியன்	* 1-ம் பாவத்தி லிருந்தால் ஜாதகனுக்கு	}	15-வது வயதில் பீடையுண்டாகும்.
,,	2-ம்	,,	7-வது வயதில் திரவியநாச முண்டாகும்.
,,	3-ம்	,,	20-வது வயதில் திரவியலாப முண்டாகும்.
,,	4-ம்	,,	14-வது வயதில் கலகமுண்டாகும்.
,,	5-ம்	,,	9-வது வயதில் பிதாவுக்குமாரகமுண்டாகும்.
,,	6-ம்	,,	23-வது வயதில் எல்லா சம்பத்துண்டாகும்.
,,	7-ம்	,,	34-வது வயதில் ஸ்திரீ நாசமுண்டாகும்.
,,	8-ம்	,,	27-வது வயதில் ஸ்திரீ மரணம்.
,,	9-ம்	,,	10-வது வயதில் தீர்த்த யாத்திரை உண்டு.
,,	10-ம்	,,	19-வது வயதில் பிரிவு உண்டாகும்.
,,	11-ம்	,,	புத்திரலாபமுண்டாகும்.
,,	12-ம்	,,	38-வது வயதில் கெடுதியுண்டாகும், மான ஹானி நேரிடும்.
சந்திரன்	1-ம்	,,	27-வது வயதில் ரோகமுண்டாகும்.
,,	2-ம்	,,	27-வது வயதில் பீடையுண்டாகும்.
,,	3-ம்	,,	5-வது வயதில் பந்து லாபமுண்டாகும்.
,,	4-ம்	,,	22 வது வயதில் புத்திரலாபமுண்டாகும்.
,,	5-ம்	,,	6-வது வயதில் அக்கினி பீடையுண்டாகும்.

---

* 1-ம் பாவம் என்பது லக்கின பாவமாகும்.

சந்திரன்	6-ம் பாவத்திலிருந்தால் ஜாதகனுக்கு	57-வது வயதில் உயர்பதவி நாசமும், மரணமுமுண்டாகும்.
,,	7-ம் ,,	15-வது வயதில் தாய் நாசமுண்டாகும்.
,,	8-ம் ,,	6-வது நாளிலாவது, 6-வது வயதிலாவது மரணமுண்டாகும்.
,,	9-ம் ,,	20-வது வயதில் தீர்த்த யாத்திரை உண்டு.
,,	10-ம் ,,	43-வது வயதில் லாபமுண்டாகும்.
,,	11-ம் ,,	20-வது வயதில் அரசமதிப்பும், நாற்கால் ஜீவன் லாபமுமுண்டாகும்.
,,	12-ம் ,,	3-வது வயதில் பீடையும், ஹானியுமுண்டாகும்.
குஜன்	1-ம் ,,	5-வது வயதில் அரிஷ்டமுண்டாகும்.
,,	2-ம் ,,	12-வது வயதில் தனநாச முண்டாகும்.
,,	3-ம் ,,	13-வது வயதில் பந்து சௌக்கியமுண்டாகும்.
,,	4-ம் ,,	8-வது வயதில் பந்து ஆனி (நாசம்) உண்டு.
,,	5-ம் ,,	5-வது வயதில் பந்து நாசமுண்டாகும்.
,,	6-ம் ,,	24-வது வயதில் புத்திரலாப முண்டாகும்.
,,	7-ம் ,,	27-வது வயதில் தார நாசமுண்டாகும்.
,,	8-ம் ,,	23-வது வயதில் ஆபத்துண்டாகும்.
,,	9-ம் ,,	14-வது வயதில் பிதா நாசமுண்டாகும்.
,,	10-ம் ,,	27-வது வயதில் ஆயுத பயமுண்டாகும்.
,,	11-ம் ,,	45-வது வயதில் தன முண்டாகும், லாப முண்டாகும்.
,,	12-ம் ,,	25-வது வயதில் ஹானிபுண்டாகும்.
புதன்	1-ம் ,,	10-வது வயதில் சாந்தி-(சோபை)யுண்டாம்.
,,	2-ம் ,,	26-வது வயதில் தனநாச முண்டாகும்.
,,	3-ம் ,,	12-வது வயதில் பொருளழிவு உண்டாகும்.
,,	4-ம் ,,	22-வது வயதில் பொருளழிவு உண்டாகும்.
,,	5-ம் ,,	26-வது வயதில் புத்திரலாபமும், தாய்நாசமுமுண்டாகும்.
,,	6-ம் ,,	21-வது வயதில் சத்துருவால் மரணமுண்டு.
,,	7-ம் ,,	17-வது வயதில் ஸ்திரீலாப முண்டாகும்.

புதன்	8-ம் பாவத்திலிருந்தால் ஜாதகனுக்கு	14-வது வயதில் திரவியநாச முண்டாகும்.
,,	9-ம் ,,	19-வது வயதில் தாய்க்கு நாச முண்டாகும்.
,,	10-ம் ,,	19-வது வயதில் திரவிய லாப முண்டாகும்.
,,	11-ம் ,,	45-வது வயதில் தனலாபமுண்டாகும்.
,,	12-ம் ,,	45-வது வயதில் ஸ்திரீநாச முண்டாகும்.
குரு	1-ம் ,,	5-வது வயதில் பிரஜாவிருத்தி யுண்டாகும்.
,,	2-ம் ,,	39-வது வயதில் தனலாப முண்டாகும், 27-வது வயதில் அரசர் மதிப்புண்டாகும்.
,,	3-ம் ,,	20-வது வயதில் தோழர் சேர்க்கையுண்டு.
,,	4-ம் ,,	12-வது வயதில் பந்து லாபமும், தனலாபமு முண்டாகும்.
,,	5-ம் ,,	7-வது வயதில் அப்மானுக்கு அரிஷ்டமுண் டாகும்.
,,	6-ம் ,,	40-வது வயதில் சத்துருக்களிடமிருந்து பய முண்டாகும்.
,,	7-ம் ,,	27-வது வயதில் ஸ்திரீலாப முண்டாகும்.
,,	8-ம் ,,	31-வது வயதில் அதிக வியாதியுண்டாகும்.
,,	9-ம் ,,	15-வது வயதில் பிதாவுக்குலாபமுண்டாகும்
,,	10-ம் ,,	15-வது வயதில் லாபமுண்டாகும்.
,,	11-ம் ,,	15-வது வயதில் தனலாப முண்டாகும்.
,,	12-ம் ,,	25-வது வயதில் செலவுண்டாகும்.
சுக்கிரன்	1-ம் ,,	17-வது வயதில் அயலான்மனைவி சேர்க்கை உண்டாகும்.
,,	2-ம் ,,	6-வது வயதில் தனலாபமுண்டாகும்.
,,	3-ம் ,,	6-வது வயதில் தீர்த்தயாத்திரை யுண்டாகும்
,,	4-ம் ,,	6-வது வயதில் பந்து சுகமுண்டாகும்.
,,	5-ம் ,,	4-வது, 5-வது வயதில் லாபமுண்டாகும்.
,,	6-ம் ,,	41-வது வயதில் ஆயுதத்தால் மரண முண் டாகும்.
,,	7-ம் ,,	14-வது வயதில் ஸ்திரீலாப முண்டாகும்.
,,	8-ம் ,,	10-வது வயதில் பல பராக்கிரம விருத்தியுண் டாகும்.

சுக்கிரன் 9-ம் பாவத்திலிருந்தால் ஜாதகனுக்கு } 15-வது வயதில் செல்வப்பெருக்குண்டாகும்

,, 10-ம் ,, 15-வது வயதில் அதிக சௌக்கியமுண்டு.

,, 11-ம் ,, 15-வது வயதில் அதிக லாபமுண்டாகும்.

,, 12-ம் ,, 5-வது வயதில் தனலாப முண்டாகும்.

சனிக்கும், ராகுவுக்கும், கேதுவுக்கும், குஜன் மாதிரி பலனறியவும்:—

9-வது அத்தியாயம்.

தசாந்தர்தசாத்தியாயம் (தசா புக்தி பலன்கள்.)

(119) உடு தசா பலன்.

(1) உடுதசா பலன் என்பது நக்ஷத்திரத்தை அனுசரித்த தசா பலன். கிருத்திகை முதல் பரணிவரையிலுமுள்ள 27 நக்ஷத்திரங்களையும் வரிசையாக சூரியன், சந்திரன், செவ்வாய், இராகு, குரு, சனி, புதன், கேது, சுக்கிரன் இவர்களுக்குப் பங்கிட ஒவ்வொரு கிரகத்திற்கும் மூம் மூன்று நக்ஷத்திரங்கள் (42)-வது அபிட்டத்தில் கண்டபடி வரும். உதாரணமாகச் சூரியனுக்கு கிருத்திகை உத்திரம், உத்திராடம் இம் மூன்றும் வரும். ஆகையால் இம் மூன்று நக்ஷத்திரங்களுக்கும் அதிபதியாகிய கிரகம் சூரியனாகும். இம் மூன்று நக்ஷத்திரங்களில் ஏதாகில் ஒன்றில் சந்திரன் ஜெனன காலத்தில் நிற்குமாகில் அப்போது ஜெனன கால தசை இந்த நக்ஷத்திரங்களுக்கு அதிபதியாகிய சூரியனுடைய தசை என்று சொல்லப்படும். இவ்விதமாகவே மற்ற எல்லா நக்ஷத்திரங்களுக்கும் தசை அறியவேண்டும். சூரியன் சந்திரன் செவ்வாய் இராகு, குரு, சனி, புதன், கேது, சுக்கிரன் இவர்களுடைய தசையின் பூர்ண காலம் முறையே 6, 10, 7, 18, 16, 19, 17, 7, 20 வருஷங்களாகும். எல்லாக் கிரகங்களுடைய பூர்ண தசையின் மொத்தகாலம் 120 வருஷமாகும், மொத்தம் 120வருஷம் வருவதால் இவ்வித தசை கணிதத்திற்கு "விம்சோத்தரி" தசைகணிதம் என்று பெயருமுண்டு.

(2) ஒவ்வொரு கிரகமும் ஆரோகணகதியில் வலிவாய் இருக்கும் போதும், அஷ்டகவர்கத்தில் அதிக சுபபரலுடன் இருக்கும்போதும், 1-வது, 10-வது, 11-வது பாவத்தில் இருக்கும்போதும், உச்சத்திலும்

சுபவர்க்கங்களிலும் இருக்கும்போதும், அல்லது சட்பலத்தில் பூர்ண பலமுடையவராய் இருக்கும்போதும் சுப பலனைத்தரும். ஒரு கிரகத்தின் ஆரோகணகதி என்பது நீச்சத்தைவிட்டு உச்சத்திற்குப்போகுங் கதி, அதாவது அந்தக்கிரகத்தின் நீச்ச ராசி பாகையில் இருந்து உச்ச ராசி பாகை வரையிலுமுள்ள ராசிகள். மற்ற ராசிகள் அந்தக்கிரகத்தின் அவரோகணகதி ராசிகள்.

(3) ஒவ்வொரு கிரகமும் குளிகன் இருக்கின்ற ராசிக்கு அதிபதியாய் இருக்கும்போதும், குளிகன் இருக்கின்ற பாவத்திலிருக்கும் போதும், அஷ்டகவர்க்கத்தில் கொஞ்சம் சுப பலனுடன் இருக்கும் போதும், சத்துரு ராசி அல்லது நீச்சராசியிலிருக்கும் போதும், அல்லது அஸ்தமன மடைந்திருக்கும் போதும், பாவசந்தியில் இருக்கும் போதும் ராசி சந்தியில் இருக்கும்போதும், அசுப பலனைத்தரும்.

(4) சந்திரன், தசாநாதனுக்கு மித்துருவின் வீட்டிலிருக்கும் போதும் தசா நாதனுடைய உச்ச ராசியிலிருக்கும்போதும் அல்லது தசா நாதனுக்குத் திரிகோண ராசி, உபஜெப ராசி அல்லது 7-வது ராசியில் இருக்கும்போதும் சுப பலனைத்தரும்.

(5) ஒரு கிரகத்தின் இஷ்ட சட்பலம் தன் கஷ்ட சட்பலத்தைவிட அதிகமாய் இருந்தால் அந்தக் கிரகம் சுப பலனைத்தரும். இஷ்ட சட்பலம் கஷ்ட சட் பலத்தைவிட குறைந்திருந்தால் அந்தக் கிரகம் அசுப பலனைத்தரும். இஷ்ட சட்பலமும், கஷ்ட சட்பலமும் சமமாய் இருந்தால் அந்தக் கிரகம் மிஸ்ர பலனைத்தரும். அதாவது சுப பலனையும் அசுப பலனையும் கலப்பாகத்தரும்.

(6) ஒவ்வொரு கிரகத்தின் தன் நிலையால் உண்டாகும் பலாபலன்கள் அந்தந்த கிரகத்தின் தசா புக்தி காலங்களில் உண்டாகும்.

(7) தசா நாதன் தன் சுவக்ஷேத்திரத்திலும், உச்சத்திலும், தன் மித்துரு வீட்டிலும், அல்லது லக்கினத்திற்கு உப ஜெயத்திலும், அதாவது 3-வது, 6-வது, 11-வது பாவத்திலும் இருந்தாலும் அல்லது சுபக்கிரகம் அல்லது மித்துரு கிரகத்தால் பார்க்கப்பட்டாலும், நல்லப் பலனைத் தன் தசையிலும் தன் புக்தியிலும் கொடுப்பார்.

(8) தசா நாதனும் புக்தி நாதனும் ஒருவருக்கொருவர் மித்துருவாய் இருந்து சட்பலத்தில் பூர்ண பலமுடையவர்களானால் அவர்களுடைய தசா புக்தி காலங்களில் சுப பலன்களுண்டாகும். இவ்விரண்டு

கிரகங்களும் ஒருவருக்கொருவர் சதுரருக்களாகி சட் பலத்தில் தாழ்ந்த பலமுடையவர்களானால் அவர்களுடைய தசா புக்தி காலங் களில் அசுப பலன்கள் உண்டாகும்.

(9) ஒரு சுபக்கிரகம் ஒரு பாவத்தில் இருந்தால் அந்தக்கிரகத்தின் தசா புக்தி காலங்களில் அந்தப் பாவமும் அந்தப் பாவத்திற்குரிய பலன்களும் விருத்தியடையும்.

(10) ஒரு பாபக்கிரகம் ஒரு பாவத்தில் இருந்தால் அந்தக்கிரகத் தின் தசா புக்தி காலங்களில் அந்தப் பாவமும் அந்தப் பாவத்திற் குரிய பலன்களும் விருத்தியாகாமல் நாசமடையும்.

(11) சுபக்கிரகத்துடன் சம்மந்தப்பட்டிருக்கின்ற கிரகத்தின் தசா புக்திகளில் நல்ல பலனுண்டாகும்.

(12) பாபக்கிரகத்துடன் சம்மந்தப்பட்டிருக்கின்ற கிரகத்தின் தசா புக்தி காலங்களில் அசுப பலனுண்டாகும்.

(13) சுபக் கிரகமும் பாபக் கிரகமும்அல்லாமல் சுபக் கிரகமா யிருக்குங் கிரகத்துடன் சம்பந்தப்பட்டிருக்கின்ற கிரகத்தின் தசா புக்தி காலங்களில் மிஸ்ர பலன் அதாவது சுப பலனும் அசுப பலனும் கலந்துள்ள பலன்கள் நடக்கும்.

(14) சிரோதய ராசியில் இருக்கின்ற கிரகம் தன் பலனைத் தன் தசையின் ஆரம்பத்தில் கொடுக்கின்றது.

(15) பிருஷ்டோதய ராசியில் இருக்கின்ற கிரகம் தன் பலனைத் தன் தசையின் கடைசியில் கொடுக்கின்றது.

(16) சிரபிருஷ்டோதய ராசியில் இருக்கின்ற கிரகம் தன் பலனைத் தன் தசை முழுவதிலும் கொடுக்கின்றது.

(17) சம்பத்து (2-ம்) தாரை, க்ஷேமம (4-ம்) தாரை, ஜாதக (6-ம்) தாரை, மைத்திர (8-ம்) தாரை இவைகளில் இருக்குங் கிரகங்களின் தசா புக்தி காலங்களில் நல்ல பலன்கள் பெரும்பாலும் நடக்கும். அபிட்டம் (42)யை இங்கு பூராகவும் வாசிக்கவும்.

(18) ஜனன காலத்தில் நீச்சத்திலிருக்கின்ற கிரகமும் அதனு டன் சம்மந்தப்பட்ட கிரகமும் தன் தசையில் நல்ல பலனைக்கொடுப்ப தில்லை.

(19) நீச்சத்திலிருக்கின்ற கிரகம் இராகுவுடன் சம்மந்தப்பட்டி ருந்தால் கெடுதியை உண்டுபண்ணுகிறது.

(20) சுப பரல் இல்லாமல் இருக்கின்ற தசாநாதன் எந்த பாவாதிபதிக்கு விரோதியாய் இருக்கின்றாரோ அந்தப் பாவத்தின் பலாபலனைத் தன் தசை காலத்தில் கெடுத்துவிடுவார்.

(21) சர லக்கினத்திற்கு 11-வது பாவாதிபதியும் 11-வது பாவத்திலிருக்கின்ற கிரகமும், ஸ்திர லக்கினத்திற்கு 9-வது பாவாதிபதியும், 9-வது பாவத்திலிருக்கின்ற கிரகமும், உபய லக்கினத்திற்கு 7-வது பாவாதிபதியும் 7-வது பாவத்திலிருக்கின்ற கிரகமும் தன் தசா காலத்தில் சோகம், ரோகம்முதலிய கஷ்டங்களை உண்டுபண்ணும். இங்கு சொல்லப்பட்ட பாவங்களுக்கு (அதாவது பாதா ஸ்தானங்களுக்கு)க் கேந்திரத்திலுள்ள கிரக தசா புக்தி காலங்களில் துக்கமும் அன்னியதேச சஞ்சாரமும் நேரிடும். சரத்திற்கு 11-ம் பாவமும், ஸ்திரத்திற்கு 9-ம் பாவமும், உபயத்திற்கு 7-வது பாவமும் மாதா ஸ்தானம் என்று சொல்லப்படும்.

(22) இரண்டு கிரகங்கள் ஒருவருக்கொருவர் 6, 8-ல் இருந்தால் அவர்களுடைய தசா புக்தி காலங்களில் பயமும், தன் தேசத்தை விட்டுத்திரிதலும் முதலிய கஷ்டங்கள் சம்பவிக்கும். ஆனால் இந்த இரண்டு கிரகங்களும் சுபர்களாகிலும் அல்லது ஒருவருக்கொருவர் மித்துருவாகவாகிலும் இருந்தால் அவர்கள் தசா புக்தி காலங்களில் நல்ல பலனுங் கெட்ட பலனும் கலந்து நடக்கும்.

(23) (1) தீப்த அவஸ்தையிலுள்ள கிரகம் தன் தசையில் ஜாதகன் அரசனுவான், தனவானுவான், கீர்த்தி, வித்தை, சௌக்கியம் இவைகளை அந்த தசை கொடுக்கும்.

(2) ஸ்வஸ்த அவஸ்தையிலுள்ள கிரகம் தன் தசையில் ஆச்சாரம், தர்மம், வெகு சுகம், ஆரோக்கியம், தனம் இவைகளை உண்டு பண்ணும்.

(3) முருதித அவஸ்தையிலுள்ள கிரகம் தன் தசையில் இராஜப் பிரீதி, அதிக சுகம், சம்பத்து இவைகளை உண்டாக்கும்.

(4) சாந்த அவஸ்தையிலுள்ள கிரகம் தன் தசையில் நோயற்ற வாழ்வு. சௌக்கியம், சம்பத்து, இராஜப்பிரீதி, உச்சாகம் இவைகளை உண்டாக்கும்.

(5) ஸக்த அவஸ்தையிலிருக்குங் கிரகம் தன் தசையில் வித்தை, தனம், கபடு, சிக்தி, தர்மம் இவைகளை உண்டாக்கும்.

(6) பீடிதா அவஸ்தையிலுள்ள கிரகம் தன் தசையில் திருடர், சத்துரு, அரசர் இவர்களால் பீடை சேரிடும். இளைய சகோதரன் மரணமடைவான்.

(7) தீன அவஸ்தையிலுள்ள கிரகம் தன் தசையில் பீடையை உண்டாக்கும்.

(8) விகல அவஸ்தையிலிருக்குங் கிரகம் தன் தசையில் சோகத்தையும், மோகத்தையும் உண்டாக்கும்.

(9) கல அவஸ்தையிலுள்ள கிரகம் தன் தசையில் சித்தக் கிலேசத்தை உண்டாக்கும்.

(10) பீத அவஸ்தையிலுள்ள கிரகம் தன் தசையில் சத்துரு பயத்தை உண்டாக்கும்.

(1) தீப்த்த அவஸ்தை என்பது உச்ச ராசியில் அல்லது கிரி கோண ராசியிலிருப்பது.

(2) ஸ்வஸ்த அவஸ்தை என்பது சுவகேஷ்த்திரத்திலிருப்பது.

(3) முருதித அவஸ்தை என்பது மித்துரு ராசியிலிருப்பது.

(4) சாந்த அவஸ்தை என்பது சுபக்கிரக வர்க்கத்திலிருப்பது.

(5) ஸக்த்த அவஸ்தை என்பது கிரகம் நல்ல பிரகாசத்துடன் ஆகாசத்தில் ஜொலிப்பது.

(6) பீடிதா அவஸ்தை என்பது கிரகயுத்தத்தில் தோல்வி அடைவது.

(7) தீன அவஸ்தை என்பது சத்துருக் கிரகத்தின் அம்சையில் இருப்பது.

(8) விகல அவஸ்தை என்பது நீச்சத்திலிருப்பது.

(9) கல அவஸ்தை என்பது பாபக்கிரக வர்க்கத்தில் இருப்பது.

(10) பீத அவஸ்தை என்பது அஸ்தங்கதம் அடைந்திருப்பது.

(120) வேறு

(24) லக்கினத்திற்கு 5-வது, 9-வது பாவாதிபதிகள் (நைசர்க்கிக அதாவது இயற்கையில்) அசுபர்கள் அல்லது சுபர்கள் ஆனாலும் நல்ல பலனையே தங்கள் தசை புக்திகளில் தருவர்.

(25) லக்கினத்திற்கு 3-வது, 6-வது, 11-வது பாவாதிபதிகள் (நைசர்க்கிக அதாவது இயற்கையில்) சுபர்கள் அல்லது அசுபர்கள் ஆனலும் கெட்ட பலனையே தங்கள் தசை புக்திகளில் தருவர்.

(26) லக்கினத்திற்கு 1-வது, 4-வது, 7-வது, 10-வது பாவாதிபதிகள் (நைசர்க்கிக) சுபர்களானல் தங்கள் தசை புக்தியில் நல்ல பலனைக் கொடாமல் கெட்ட பலனையே கொடுப்பர்.

(27) லக்கினத்திற்கு 1-வது, 4-வது, 7-வது, 10-வது பாவாதிபதிகள் (நைசர்க்கிக) அசுபர்களானல் தங்கள் தசாபுக்தி காலங்களில் கெட்ட பலனைக் கொடாமல் நல்ல பலனையே கொடுப்பார். செவ்வாய் மாத்திரம் கேந்திராதிபதியாய் இருக்கும்போது 5-வது அல்லது 9-வது பாவாதிபதியாய்க் கூட இருக்கும்போது மாத்திரம் நல்ல பலனைக் கொடுப்பர். கேந்திராதிபதியாய் மாத்திரம் இருக்கும்போது நல்ல பலனைக் கொடாமல் கெட்ட பலனையே கொடுப்பர்.

(28) லக்கினத்திற்கு 8-வது பாவாதிபதி (நைசர்க்கிக) சுபர் அல்லது அசுபரானலும் தன் தசாபுக்தி காலங்களில் கெட்ட பலனையே தருவர். ஆனல் இந்த 8-வது பாவாதிபதி லக்கின பாவாதியாகக் கூட நேருங்காலத்தில் அசுப பலனைக் கொடாமல் தன் தசையில் சுப பலனைக் கொடுப்பர். சூரியனும், சந்திரனும் மாத்திரம் 8-வது பாவாதிபதியாய் இருக்கும்போது கெட்ட பலனைக் கொடாமல் நல்ல பலனையே கொடுப்பார்.

(29) லக்கினத்திற்கு 2-வது, 12-வது பாவாதிபதிகள் அல்லது இராகு, கேது இவர்கள் தாங்கள் சம்மந்தப்பட்டிருக்கின்ற கிரகத்தின் தற்கால சுபா அசுபத்தை அனுசரித்தும் தாங்கள் இருக்கின்ற பாவங்களின் தற்கால சுபா அசுபத்தை அனுசரித்தும் தங்களைப் பார்க்கின்ற கிரகத்தின் தற்கால சுபா அசுபத்தை அனுசரித்தும் பலனைத் தருகின்றனர். நைசர்க்கிக சுபர் அசுபர் என்பது கிரகங்கள் இயற்கையில் 1-வது அத்தியாயத்தில் 20-வது அயிட்டத்தில் சொல்லிய பிரகாரம் சுபர் அசுபராய் இருப்பது. தற்கால சுபர் அசுபர் என்பது கிரகங்கள் அந்தந்த லக்கினத்தையும், லகினத்தை அனுசரித்து ஏற்படும் பாவாதிபத்தியத்தையும் அனுசரித்து இங்கு 24-வது நெம்பர் முதல் 28-வது நெம்பர் வரையிலும் சொல்லிய பிரகாரம் நேரிடுவது. 2-வது, 12-வது பாவாதிபதிகள அல்லது இராகு, கேது இவர்களுடன் சம்மந்தப்பட்ட கிரகம், அலலது இவர்களை (அதாவது 2-வது, 12-வது

பாவாதிபதி அல்லது இராகு, கேது இவர்களைப் பார்த்த கிரகம் அல்லது இவர்கள் (அதாவது 2-வது, 12-வது பாவாதிபதி அல்லது இராகு, கேது இவர்கள்) இருக்கின்ற பாவத்தின் அதிபதிகள் தற்கால சுபர்களானால் சுப பலனையும், அசுபர்பளானால் அசுப பலனையும், சுபா அசுபாளால் சுபா அசுப பலனுகிய மிஸ்ரபலனையும் தங்கள் தசா புக்தி காலங்களில் கொடுப்பர்.

(30) அசுபமாகிய 3, 6, 11-வது பாவாதிபத்தியம் அல்லது அசுபமாய் நேரிடுகின்றன 8-வது பாவாதிபத்தியம் ஆகிய இவைகளில் ஏதாகிலும் ஒன்றும் இல்லாத திரிகோணாதிபதிகளும் கேந்திராதிபதிகளும் ஒருவருடன் மற்றொருவர் சேர்ந்தாலும், ஒருவரை மற்றொருவர் பார்த்தாலும் அல்லது ஒருவரை ஒருவர் பார்த்தாலும் இந்தக் கிரகங்கள் தங்கள் தசா புக்தி காலங்களில் விசேஷமான நல்ல பலனைக் கொடுப்பர்.

(31) தர்ம (9–வது பாவாதிபதி) கர்மாதிபதி (10–வது பாவாதிபதி) மாத்திரம் எந்த அசுப பாவாதிபத்தியம் இருந்தாலுங்கூட ஒரே பாவத்தில் சேர்ந்திருந்தாலும், ஒருவரை யொருவர் பார்த்தாலும் அவர்கள் தங்கள் தசா புக்தி காலங்களில் ராஜயோகத்தைக் கொடுப்பார்கள்.

(32) 9-வது பாவாதிபதி 10-வது பாவத்திலும், 10-வது பாவாதிபதி 9-வது பாவத்திலும் மாறி மாறி இருந்தாலும், அல்லது 9–வது பாவாதிபதி மாத்திரம் 10–வது பாவத்தில் இருந்தாலும், அல்லது 10-வது பாவாதிபதி மாத்திரம் 9–வது பாவத்திலிருந்தாலும் இவர்கள் தசா புக்தி காலங்களில் இராஜயோகமுண்டாகும்.

(33) 5-வது பாவாதிபதியுடன் 10-வது பாவாதிபதி சம்மந்தமானால் 10-வது பாவாதிபதி தன் தசா புக்தி காலங்களில் இராஜயோகப் பலனைத்தருவார்.

(34) அசுபமாகிய 3, 6, 11, 8-வது பாவாதிபதிகள் யோககாரக கிரகங்களுடன் சம்மந்தப்பட்டால் சுப பலனையுங் கூட கொடுப்பார்கள்.

(35) இராகு கேதுக்கள் கேந்திர பாவத்திலாகிலும் திரிகோண பாவத்திலாகிலும் இருந்து கேந்திர திரிகோண பாவாதிபதிகளில் யாராகிலும், ஒருவருடைய சம்மந்தம் இருந்தால் இராகு, கேதுக்கள் தங்கள் தசா புக்தி காலங்களில் இராஜயோகத்தைத் தருகின்றனர்.

(36) (9-வது 10-வது பாவாதிபதிகளுக்கு தங்களுக்குள் சம்மந்தம், பார்வை, வர்க்கு மாறியிருத்தல் இவைகள் இல்லாதபோது) 9-வது 10-வது பாவாதிபதிக்கு 3, 6, 11-வது பாவாதிபத்தியம் வரும் போது, 9-வது பாவாதிபதி அல்லது 10-வது பாவாதிபதி, 5-வது பாவாதிபதியுடன் சம்மந்தப்பட்டிருந்தால் இந்த 9-வது 10-வது பாவாதிபதிகள் தங்கள் தசா புக்தி காலங்களில் 5-வது பாவாதியுடன் சம்மந்தப்பட்டிருக்கும் காரணமாக இராஜயோகப் பலனைத் தருவ தில்லை.

(37) எந்தக்கிரகமும் தன் பாவத்திற்குத் தகுந்தபடி தன் தசை யில் தன் புக்தியில் பலனைக் கொடுப்பதில்லை. அதாவது ஒரு கிரகம் மேற் சொல்லிய காரணங்களால் தன் தசையில் சுப பலனைத்தரவேண் டியதானால் தன் புக்தியில் மாத்திரம் அந்தச் சுபபலனைக் கொடுப்ப தில்லை. இவ்விதமாகவே தன் தசையில் அசுப பலனைக் கொடுக்க வேண்டியதானால் தன் புக்தியில் மாத்திரம் தன் அசுப பலனைக் கொடுப்பதில்லை.

(38) சுப பலனைக் கொடுக்கவேண்டிய ஒரு தசா நாதன், தன் னுடன் சம்மந்தப்பட்டிருக்கின்ற அல்லது தன்னைப்பார்த்தக் கிரகங் களும் சுப பலனைக் கொடுக்க வேண்டியவர்களாய் இருந்தால் அவர்க ளுடைய புக்தியில் தன்னுடைய (அதாவது தசா நாதனுடைய) பூரா சுப பலனையும் தசா நாதன் கொடுத்துவிடுவார். அதாவது அசுப பலனைக் கொடுக்கவேண்டிய கிரகங்களின் புக்திகளில் சுப பலனைத் தாவேண்டிய தசா நாதன் தன் சுப பலனைக் கொடுக்கமாட்டார் என்று ஏற்படுகிறது.

(39) அசுப பலனைக் கொடுக்கவேண்டிய ஒரு தசா நாதன், தன்னுடன் சம்மந்தப்பட்டிருக்கின்ற அல்லது தன்னைப் பார்த்தக் கிரகங்களும் அசுப பலனைக் கொடுக்க வேண்டியவர்களாய் இருந்தால் அவர்களுடைய புக்தியில் தன்னுடைய (அதாவது தசா நாதனுடைய) பூரா அசுப பலனையும் தசா நாதன் கொடுத்துவிடுவார். அதாவது சுப பலனைக் கொடுக்கவேண்டிய கிரகங்களின் புக்திகளில் அசுப பலனைத் தாவேண்டிய தசா நாதன் தன் அசுப பலனைத் தரமாட்டார் என்று ஏற்படுகிறது.

(40) அசுப பாவாதிபத்தியமாகிய 3, 6, 11, 8-வது பாவாதி பத்தியம் இல்லாத திரிகோணாதிபதியின் தசையில் கேந்திராதிபதியின்

புக்தியில் தசாநாதனுக்கும் புக்தி நாதனுக்கும் கிரக சம்மந்தம் (அதாவது கிரக சேர்க்கை) இல்லாவிட்டாலும் கூட தசா நாதன் நல்ல பலனைக் கொடுப்பர்.

(41) அசுப பாவாதிபத்தியமாகிய 3, 6, 11, 8-வது பாவாதிபத்தியம் இல்லாத கேந்திராதிபதியின் தசையில் திரிகோணாதிபதியின் புக்தியில் தசா நாதனுக்கும் புக்தி நாதனுக்கும் கிரக சம்மந்தம் (அதாவது கிரக சேர்க்கை) இல்லாவிட்டாலும் கூட தசா நாதன் நல்ல பலனைக் கொடுப்பர்.

குறிப்பு:—இங்கு ~~கேந்திராதிபதி என்பது~~ (1, 4, 7, 10-க்குடையவர்) ~~திரிகோணாதிபதி என்பது~~ (5, 9-க்குடையவர்)தும்.

(42) தசா நாதன் தற்கால பாபியாய் இருந்து தன்னுடன் சம்மந்தம் இல்லாத தற்கால சுபருடைய புக்தியில், இந்த புக்தி நாதன் அசுப பலனைத்தருவார்.

(43) தசாநாதன் தற்கால பாபியாய் இருந்து தன்னுடன் சம்மந்தம்பெற்ற தற்கால அசுபருடைய புக்தியில், இந்தப் புக்திநாதன் சுப பலன் அசுப பலன் இரண்டையும் கலந்து தருவார்.

(44) தசாநாதன் தற்கால பாபியாயிருந்து தன்னுடன் சம்மந்தம் இல்லாத தற்கால ராஜயோககாரர்களான கிரகங்களின் புக்தியில் புக்தி நாதர்கள் அதிக பாப பலனைத் தருகின்றார்கள்.

(45) மாரகத் தரவேண்டிய கிரகமானது தன் தசையில் தன்னுடன் சம்மந்தம் இருக்கின்ற அல்லது சம்மந்தம் இல்லாத தற்காலச் சுபக்கிரகத்தின் புக்தியில் மரணத்தை உண்டாக்குவதில்லை.

(46) மாரகத் தரவேண்டிய கிரகமானது தன் தசையில் தன்னுடன் சம்மந்தம் இருக்கின்ற அல்லது சம்மந்தம் இல்லாத தற்காலப் பாபக்கிரகத்தின் புக்தியில மரணத்தைக் கொடுக்கும்.

(47) சூரிய தசையில் சூரியன் கொடுக்கவேண்டிய தன் பலனைச் சூரிய தசையில் சுக்கிர புக்தியில் சுக்கிரன் பெரும்பாலும் கொடுப்பார்.

(48) சுக்கிர தசையில் சுக்கிரன் கொடுக்கவேண்டிய தன் பலனைச் சுக்கிர தசையில் சூரிய புக்தியில் சூரியன் பெரும்பாலும் கொடுப்பார்.

(49) சனி தசையில் சனி கொடுக்கவேண்டிய தன் பலனைச் சனி தசையில் சுக்கிர புக்தியில் சுக்கிரன் பெரும்பாலும் கொடுப்பார்.

(50) சுக்கிர தசையில் சுக்கிரன் கொடுக்கவேண்டிய பலனைச் சுக்கிரதசையில் சனி புக்தியில் சனி பெரும்பாலும் கொடுப்பார்.

(121) வேறு.

(51) ஒவ்வொரு பாவத்திற்கும் அந்த பாவத்தின் 8-வது (அஷ்டம) பாவாதிபதி இருக்கின்ற நவாம்சை ராசிக்குடைய கிரகத்தின் தசாபுக்தி காலங்களில் அந்தப் பாவத்தின் ஆதிபத்தியத்திற்குரிய மனுஷ பிறவிக்கு (அதாவது லக்கினபாவமாகில் ஜாதகனுக்கும் 3-வது 11-வது பாவமாகில் சகோதர சகோதரிகளுக்கும், 4-வது பாவமாகில் மாதுருக்கும், 5-வது பாவமாகில் புத்திர புத்திரிகளுக்கும், 6-வது பாவமாகில் அம்மானுக்கும், 7-வது பாவமாகில் களத்திரத்திற்கும், 9-வது பாவமாகில் பிதுருக்கும்) கெண்டம் நேரிடும்.

(52) ஒவ்வொரு பாவத்திற்கும், அந்த பாவத்திற்கு 8-வது (அஷ்டம) பாவாதிபதி இருக்கின்ற நவாம்சை ராசிக்குத் திரிகோண ராசியில் சனி வரும்போது அந்தப் பாவத்தின் ஆதிபத்திற்குரிய மனுஷ பிறவிக்கு (அதாவது 51-வது நெம்பரில் பிராக்கெட்டிற்குள் சொல்லியபடி) கெண்டம் நேரிடும்.

(53) திசாதிபதி குறைந்த பலமுடைய கிரங்களுடன் கூடில், தன நாசம், இடம்பெயர்தல், அரசகோபத்தால் ஜீவனநாசம், மரணம், யானை நாசம் முதலிய கெட்ட பலனைத்தருவார்.

(54) திசாதிபன், பல மற்றிருந்தால், தன் தேகத்திற்கு ஆயாசம், பந்து ஜன அழிவால் துக்கம், தன நாசம், மனைதுக்கம், முதலிய பலனைத்தருவார்.

(55) திசாதிபன் அல்ப பலமுள்ள கிரகத்துடன் கூடில், எல்லா வித பாக்கியத்தையும் நாசம் செய்வார். சுபர் அசுபருடன் கூடில் கலப்பு பலனையும், சுபருடன் கூடில் சுப பலனையும் தருவார்.

(56) திசாநாதன், யோக கிரகத்தின் நவாம்சத்திலிருந்தால், வேறு யோகத்தையும் பாக்கியத்தையுங் கூட்டுவார், அரசன் தயவால், மக்கள், மனைவி, பந்துக்கள், தோழர் முதலியவர் தானேசேருவர்.

(57) திசாநாதன் சத்துரு கிரகத்தின் நவாம்சத்திலிருந்தால், அந்த தசா காலத்தில் குரூரக் கிரகங்களின் புத்திகளில், அரசர், திருடர் இவர்கள் பயமும், இடம் மாறுதலும் தன்னிஷ்ட ஜனங்களு

டன் விரோதமும், தனக்கு அரசாங்க காரியத்தால் விசாரமும், நேரிடும்.

(58) திசாநாதன், குறைந்த பலமுள்ளவனாய் 8-ம் பாவத்திலிருந்தால், அல்லது அந்த 8-ம் பாவாதிபனுடன் கூடியாவது பார்க்கப் பட்டாவதிருந்தால், தன் தொழிலிலிருந்து விலகியவனாய்த் தன நாச மடைவான், தன் உடன் பிறந்த சகோதரனுடைய விரோதம் பெறு வான்.

(59) திசாநாதன் சத்துரு ராசி நவாம்சத்திலிருக்கில் அந்த ஸ்தான கிரக புக்திகளிலும் சத்துரு கிரகங்களின் அந்தரங்களிலும், சத்துரு பயத்தால் துக்கமுறுவான்.

(60) 10-ம் பாவத்தில் குரு இருக்கில் அல்ப சந்தானம், தன் அரசனுக்குப் பிரியன் தர்மவான், சாஸ்திரார்த்த ஞான முடையவன், சாந்த சுபாவமுள்ளவன், நற்குண முடையவன், திரவியம், பெண்கள், நவரத்தினம், பொன், பூமி, பசுக்கள், தானிய லக்ஷ்மி, இவைகளுடை யவன், பெண்கள் கிரீடை, பலவித நாட்டியம், சங்கீதம்முதலிய வியா பாரங்களில் தேர்ச்சி பெற்றவன், தாயாதிகள் விரோதமுடையவன், நிலையான புத்தி யுடையவன், நற்குணமுள்ள அரசனால் வெகுமதிக்கப் பட்டவனும், நற்குணமுள்ளவனும், பண்டிதனுமிருப்பான்.

(61) 10-ம் பாவத்தில் குரு இருந்தால் வெகுமதிக்கத்தக்கவன், மித்திர நவாம்சத்திலிருந்தால் அரசனைத் தலைவனாக உடையவன்.

(62) குரு, புதன் சுக்கிரன் இவர்கள் நவாம்சத்திலிருக்கில் துக்க முடையவன் அரசாங்க விரோதமான செய்கை யுடையவன்.

(63) 10-ம் பாவத்திலிருக்கின்ற குரு, சனி நவாம்சத்திலிருந் தால், மந்த புத்தி யுடையவன், பொய் பேசுவதில் பிரியன், ஆசார மற்றவன், நீசாம்சமாகில் வெகுபாபமுடையவன், தன்னரசனுக்குச் சமமான சத்துரு உடையவன், அக்காலத்தில் திருடும் புத்தி யுடைய வன், குஜாம்சத்திலிருந்தால், ஜன துவேஷமுடையவன், உள்ளுக் குள் கலகம் முதலிய விசார முடையவன்.

(64) 10-ம் பாவத்தில் குரு இருந்து சந்திரன் பூர்ண பலமுள்ள வராக இருந்தால், நடு வயதில் அதிக பாக்யம், அரச புத்திரனுக்குத் தோழனும் சுகமுடையவனாயு மிருப்பான்.

(65) குரு மீனத்தில் துலா நவாம்சத்திலிருந்தால், தன்னாச புத்திரனுக்குப் பிரியனுயிருப்பான், தன் தாயின் சகோதரி புத்திரனிடம் சினேக முடையவனுயிருப்பான், சிற்றப்பனிடம் விரோதமுடையவனுயிருப்பான்.

(66) தசாநாதன் கோட்சாரத்தில் ஜாதகனுடைய ஜென்மநக்ஷத்திரத்திற்கு:—

1, 10, 19-வது நக்ஷத்திரத்திலிருந்தால், அரச கோபம், மான ஹானி, பலவித பொருள் சேதம், துக்கம்.

2, 11, 20-வது நக்ஷத்திரத்திலிருந்தால்:—தனசுகம், சுகபோகம், சங்கீதம், வஸ்திரம், குதிரை முதலிய பெருமை உண்டு.

3, 12, 21-வது நக்ஷத்திரத்திலிருந்தால்:—பசு, பூமி, பொருள், இவைகள் நாசம், சந்தாபம், தேகபீடை, பந்து விரோதம், கலகம், திடீரென்று நிந்தை சொற்கள் இவைகள் உண்டாகும்.

4, 13, 22-வது நக்ஷத்திரத்திலிருந்தால்:—நன்மை, பொருள் சுகம், சுகபோகம், தாய்வரவு, கௌரவம் இவைகள் உண்டு.

5, 14, 23-வது நக்ஷத்திரத்திலிருந்தால்:—அரச சோபத்தால் தன ஆனி, தொழிலின்மை, துக்கம் இவைகள் உண்டு.

6, 15, 24-வது நக்ஷத்திரத்திலிருந்தால்:—ஆரம்பிக்கும் காரிய சித்தி, சந்தானம், பொருள் விருத்தி, ஜெயம், பூமி, பொருள், மாலை, வஸ்திரம் இவை வரவு.

7, 16, 25-வது நக்ஷத்திரத்திலிருந்தால்:—பலவித துக்கம், பாப தோஷத்தால் தேக ஜாட்யம், கஷ்டம் இவைகள் உண்டு.

8, 17, 26-வது நக்ஷத்திரத்திலிருந்தால்:— தோழர் சேர்க்கை, அரசனிடமிருந்து கௌரவம், பூஷணம், வாகனமேறுதல், தேவகார்யங்களில் ஊக்கம், படுக்கை சுகம் இவைகள் உண்டு.

9, 18, 27-வது நக்ஷத்திரத்திலிருந்தால்:—அரசனுடைய அன்பு பெறல், நல்ல சகவாசம், வித்தையில் விருப்பம், அரசாங்கத்தில் அதிகாரம், புத்திரர் தோழர், பந்துக்கள் வரவு, சாமர்த்தியமாயிருக்குந் தன்மை, இவைகள் உண்டாகும்.

(67) ஜாதகனுக்கு அசுப நக்ஷத்திரத்தில் (அதாவது 42-வது அயிட்டத்தின் பின் பாகத்தில் சொல்லிய அசுப நட்சத்திரத்தில்) கோட்சாரத்தில் சனி வருங்காலத்தில் அதிக கிலேசமான காரியங்கள் உண்டாகும். அதுவும் குரூர மாசத்தில் உண்டாகும்.

ராகு இருக்கும் நக்ஷத்திரத்திற்குரிய ராசியாதிபதி கோட்சாரத்தில் குரூரக் கிரகங்கள், வேதைக் கிரகங்கள் இவைகளிடையில் இருக்குங் காலம் அரசராலும், தோழராலும், பயம் உண்டாகும். திருடர் பயமுண்டு, வீட்டில் பொருளழிவு நேரும். சூரியன் பலமும் இவ்விதமே என்றிருக்கிறது.

சனி, குஜன் இவர்கள் நிற்கும் ராசி நாதனுக்குரிய தசையிலும் அந்தரங்களிலும் கடன், திருடு, பயம், காயம் முதலியனவைகளால் அதிக உபத்திரவம் நேரிடும்.
தொல்லை

சுடக்கிரகங்கள் நிற்கும் ராசியாதிபதி நக்ஷத்திரதிசையில் எப்போதும் அசுப பலன் உண்டாகும்.

பாப கிரகங்கள் இருக்கும் ராசியாதிபதி நக்ஷத்திர திசையில் குரூரக் கிரகங்கள் புக்தி அந்தரங்களில் அபமிருத்யு பயம், பந்துஜன நாசம் உண்டாகும்.
உறவினர்

சனியுடனாவது அல்லது மாந்தியுடனாவது நிற்குங் கிரகங்களும், 8-ம் பாவாதிபன் நிற்கும் நவாம்சாதிபதிகளும் ஆகிய இவர்களுள் துர்பலமாயிருக்குங் கிரகத்தின் திசை மரணந் தரும். அதுவும் கஷ்டந்தரத்தக்க ராசியில் சனி சஞ்சரிக்கும்போது சந்தேகமின்றி நேரும்.

கோட்சார பலன்.

(68) ஜனன நக்ஷத்திர ராசிக்கு:—சூரியன்—3-ம் பாவம், 6-ம் பாவத்திலும்; சந்திரன்—1-ம் பாவம், 6-ம் பாவம், 7-ம் பாவம், 10-ம் பாவத்திலும்; புதன்—2-ம் பாவம், 4-ம் பாவம், 6-ம் பாவம், 8-ம் பாவத்திலும்; குரு—2-ம் பாவம், 5-ம் பாவம், 7-ம் பாவம், 9-ம் பாவத்திலும், எலலா கிரகங்களும் 11-ம் பாவத்திலும், கோட்சாரத்தில் அவர்களால் நிற்குங் காலம் சுப பலன் நேரும். எந்த கிரகமாவது கோட்சாரத்தில் 8-ம் பாவாதிபதியுடன் கூடியாவது பார்க்கப்படாவதிருந்தால் அப்பொழுது ஆபத்து நேரிடும்

சனி பலன்.

(2) சந்திர லக்கினத்திற்கு:—

1-ம்	பாவத்தில் நிற்குங்காலம்,		ஆபத்து, கலகம், வீண்வாதம்.
2-ம்	,,	,,	பொருள் அழிவு, சுத்துரு பீடை.
3-ம்	,,	,,	சம்பத்து, பலவித சுகம்.
4-ம்	,,	,,	கிருமி(புழு,பூச்சி) நோய், தோழர், புத்திரர் நாசம், பசு, பூமி, பயிர் அழிவு, மானமழிவு.
5-ம்	,,	,,	அதிக பயம், புத்தி மாறுட்டம்.
6-ம்	,,	,,	சத்துரு நாசம், பலவித சுகம்.
7-ம்	,,	,,	அதிக தைரியம் உண்டு. மனைவி, மக்கள், பணியாளர் நாசமுண்டு.
8-ம்	,,	,,	மரணம், பொருள் அழிவு, விசனம்.
9-ம்	,,	,,	தேகம் மெலிதல், பாபச்செய்கை, பாக்கிய நாசம், பீடை.
10-ம்	,,	,,	பீடை, பயம், கெட்ட பெயருண்டாதல்.
11-ம்	,,	,,	லாபம், அரசர் தயவு, அதிக சுகம்.
12-ம்	,,	,,	நஷ்டம், சரீரபீடை, அதிகதுக்கம், பணியாளரால் அவமானமுண்டு.

(3) சனி:—சந்திர லக்னத்திலிருந்து 9-ம் பாவத்தில் வரும் பொழுதும், அந்த பாவத்தைப் பார்க்கும்பொழுதும், 9-ம் பாவாதிபன் நவாம்சத்தில் வரும்பொழுதும், தாய் தகப்பன் நாசம்.

(4) சனி:—சூரியன் நிற்கும் திரேக்காண ராசியிலாவது, நவாம்ச ராசியிலாவது, துவாதசாம்ச ராசியிலாவது கோசாரத்தில்வருங் காலம், குரூர மாதத்தில் பிதுரு பீடை.

(5) சனி:—12-ம் பாவாதிபன் நிற்கும் நவாம்ச ராசியில் வருங் காலம் புத்திர நாசம்,

(6) சனி:—அந்தந்த பாவாதிபர் நிற்கும் ராசிகளுக்கு அஷ்டமாதிபன் (8-ம் பாவாதிபன்) நிற்கும் நவாம்ச ராசியில் பாபர்களிருக்கும் நக்ஷத்திரங்களில் வருங் காலம், அந்தந்த பாவாதிபர் தசை காலங்களில் அந்தந்த பாவங்களுக்கு நாசம் நேரிடும்.

(7) ராகு:—கோசாரத்தில், லக்கினத்திலிருந்தாவது, சந்திர லக்கினத்திலிருந்தாவது, 11-ம் பாவத்தில் நிற்குங் காலம் அதிக கிலேச காரியங்கள் நேரிடும். தன் ஜனத்திடம் துவேஷமில்லாமை நேரிடும்.

(8) சனி:—லக்கினாதிபன் நிற்கும் நவாம்சத்திலும், 11-ம் பாவாதிபன் நிற்கும் நவாம்சத்திலும், ஸ்புடயோகத்தில், கோட்சாரத்தில் வருங்காலம், அம்மானுக்கு கிலேசம் உண்டாகும், லக்கினாதிபதி தசையில் மாதா வர்க்கத்தில் மனஸ்தாபம், 10-ம் பாவாதிபன் தசை அந்தரத்திலாவது 12-ம் பாவாதிபனந்தரத்திலாவது, 10-ம் பாவாதிபன் தசையில் அம்மானுக்குச் சுகம். 11-ம் பாவாதிபன் தசையில், 4-ம் பாவாதிபன் புத்தி அந்தரங்களில் தாய்க்குப் பீடை, 11-ம் பாவாதிபன் நிற்கும் நவாம்சாதிபன் புத்தியில் ஸ்புடயோகத்தில் கோட்சாரத்தில் சனி வருங் காலம், தன் அம்மான் புத்திரர் முதலியவர்களுக்கு அரிஷ்டம்.

குருசார பலன்.

(69) கோசாரத்தில் குரு சந்திரராசியிலிருந்து 2, 5, 7, 9, 11-ம் பாவங்களிலிருக்குங் காலம், யானை, குதிரை, பொன், பொருள், பூமி, பல்லக்கு முதலிய லாபம் உண்டு. விவாகம், மங்கள காரியம், புத்திர லாபம், தேவார்ச்சனை, ராஜ போகம், அதிக சுகம் முதலியன தருவார்.

(70) 3, 6, 11-ம் பாவங்களில் பாப கிரகங்களும், கேந்திர திரி கோணங்களில் சுப கிரகங்களும், கோட்சாரத்தில் நிற்கில் அப்போது சுப பலன் தருவர். இதற்கு மாறுக நிற்கில் கெட்ட பலனைத்தருவர்.

க்ஷீண சந்திரன், சூரியன், குஜன், சனியும் இவர்களுடனாவது இவர்களுள் ஒருவருடனாவது கூடிய புதனும் பாபக்கிரகங்கள் ஆவார்.

பூர்ண சந்திரனும், குரு, சுக்கிரன், பாபருடன் கூடாத புதனும் சுபக்கிரகங்கள் ஆவர்.

குறிப்பு:—தசா பலத்தையும், கோட்சார பலத்தையும் சேர்த்தப் பலன் சொல்லவேண்டும்.

வேறு தசாபலன்.

(71) 6-ம் பாவத்திலும், 8-ம் பாவத்திலுமிருக்குங் குரூரக் கிரகங்களும், குரூரக் கிரகங்களின் வீட்டிலிருக்குங் கிரகங்களும், 2 காலுள்ள குரூரக் கிரகங்களும் தங்கள் தசையில் மரணத்தைத் தரும்.

(72) லக்கினாதிபன் தசையில் லக்கினாதிபனுக்குச் சத்துரு புக்தி வருங்காலத்தில் மரணம் நேரிடும். பலஹீனமான கிரக தசையில், அந்தர்தசாதிபன் பலவானாகில், தசாரிஷ்டத்திற்குச் சொல்லப்பட்ட கெட்ட பலனை அந்தர்தசாதிபன் செய்யமாட்டான்.

(73) சூரியனுடன் கூடியிருக்கும் கிரகம், சிரேஷ்டமானதாயிருந்தபோதிலும், அதிக கஷ்டந்தரும். அதனுடைய தசை, புக்தி முதலியவைகளின் முடிவில் அந்தக் கிரகம் மனிதருக்குத் தூக்கங்கள் ஆபத்து, மான ஆனி, வெளிதேசம் செல்லல் முதலிய பலனைத்தருவர்.

(74) லக்கினாதிபனுக்கு 8-ம் பாவத்திலிருக்கும் கிரகங்களின் தசையில் அதிக பீடைகள் உண்டு. தசை முடிவில் மனிதருக்குப் பிராண நாசம் நேரும்.

(75) நீசத்திலும், சத்துரு வீட்டிலும் இருக்கின்ற அல்லது வக்கிரமாயிருக்கின்ற கிரகங்களுடைய தசையில், ஜாதகன் கெட்ட காரியங்களில் விருப்பமுடையவனாகவும், வெளி தேசவாசம் செய்பவனாகவும், தன் பந்துவர்க்கங்களால் விடப்பட்டவனாயும், அண்ட இடமில்லாதவனாகவு மிருப்பான்.

(76) ஜனன லக்கினாதி சத்துரு கிரகதசை காலத்திலும், 6-ம் பாவாதிபன் தசை காலத்திலும் புத்தி மாறுட்டம், சத்துருபயம், ராஜ்யத்திலிருந்து நழுவுதல், துஷ்ட ஜனங்களுடன் கலகம், பலமற்றிருக்குந் தன்மை இவை நேரிடும்.

தசாநாதன் உச்சத்திலும், மூலத் திரிகோணத்திலும், சுவகேஷத்திரத்திலும், சுபர் அஷ்டகவர்க்கத்திலும் இருந்தாலும், சுபரால் பார்க்கப்பட்டாலும், தன் தசை அரிஷ்டத்தைப் போக்கி நன்மையைத் தருவதாயு மிருக்கும்.

(77) ஜனன லக்கினாதிபன் உச்சத்திலும், சுவ கேஷத்திரத்திலும், அல்லது திரிகோணத்திலும், தன் வர்க்கத்திலும், கேந்திரங்களிலுமிருந்தால், அவர் தன் தசாபுத்தி அந்தரங்களில் சுப பலனைத் தருவார்.

(78) 3, 6, 11-ம் பாவங்களிலிருக்கும் எல்லா சுப கிரகங்களாலும், வாலிபத்தில் சுகம், பொருள் முதலியன உண்டாகின்றன.

3, 6, 11-ம் பாவங்களிலிருக்கும் எல்லாப் பாப கிரகங்களாலும்,

வயதின் கடைசி பாகத்தில் மனைவி, பொருள், சுகம் முதலிய நல்ல பலன் உண்டாகின்றன.

(79) ஜனன காலத்தில் குரு, லக்கினத்திலும், தன் உச்ச சுவ க்ஷேத்திரத்திலும், 10, 8, 3-ம் பாவத்திலும் இருந்தால் ராஜ்யத்தை யும், தன் குலாபிமானத்தால் பலவித உயர்ந்த போகங்களையும் தருவார்.

(80) ஜாதகனுடைய தசாநாதன் ஆரோகத்திலிருந்தால் நல்ல பலனைத் தருவர். அவரோகத்திலிருந்தால் கெட்ட பலனைத் தருவர்.

(81) சந்திரன் திசாநாதனுக்கு கடகத்திலிருந்தால் அந்தத் தசை யில் ஜாதகனுக்கு ஸ்திரீ, புத்திரர், தோழர், தனம் இவைகள் கிடைக் கும்.

(82) சந்திரன் குஜன் வீட்டிலிருந்தால், சந்திர தசையில் ஜாத கனுக்கு மனைவி, பசுக்களை உபத்திரவம் செய்யும் செய்கையைத் தரு வர்.

(83) சந்திரன் புதன் வீட்டிலிருந்தால், ஜாதகனுக்குச சந்திர தசையில் நல்ல விஷயமான சாஸ்திரக் கேள்வி, தோழர் வரவு இவை கள் நேரும்.

(84) சந்திரன் குரு வீட்டிலிருந்தால், ஜாதகனுக்குச் சந்திர தசையில் அரசன தயவு, அதிக செல்வம் இவைகள் உண்டாகும்.

(85) சந்திரன் சுக்கிரன் வீட்டிலிருத்தால், ஜாதகனுக்குச் சந் திர தசையில் குருவீட்டிலிருக்கும் பலனே உண்டாகும். அதாவது அரசன் தயவு, அதிக செல்வம் இவைகள் உண்டாகும்.

(86) சந்திரன் சனி வீட்டிலிருந்தால், ஜாதகனுக்குச் சந்திர தசையில் ஏவல்பணி செய்பவனும், கானகத்திலும், கோட்டையிலும் வசிப்பவனும் இருப்பான். தேவர், பசுக்கள் இவைகளுக்கு இருப் பிடம் கட்டுவதில் பிரீதியை யுடையவனும் இருப்பான்.

(87) சந்திரன் தன் மித்திர க்ஷேத்திரம், உபஜெய ஸ்தானம், திரிகோணங்கள், 7-ம் பாவம், 10-ம் பாவம் இவைகளில் இருந்தால் சந்திரன் தசையில் நற்பலன் நடக்கும். சந்திரன் சூரியன்வீட்டிலிருக் கும் பலனைக் கொடுத்திருக்கவில்லை.

சூரிய தசை பலன்.

(88) சூரியதசையில் வெளிதேச வாசம் எப்போதாவது தொரு சமையத்தி லுண்டாகும், பூமி, நெருப்பு, அரசர், பிராமணர், ஆயு

தம், வைத்தியம் இவைகளால் அதிக தனவரவு, மந்திரப் பிரயோகத்தில் விருப்பமும், அரச நேசமும் தெய்வ வசத்தால் நேரும். பிரசித்தியுடைய செய்கைகளில் புத்தியும், அதிகப் பேச்சை மறைப்பதில் சிந்தையும் உண்டாகும், செலவு உண்டாகும், பற்கள். வயிறு, கண்கள் இவைகளில் நோய், மனைவி, மக்களையும்பொருட்டு சிந்தை, அல்லது அரசர் பயம், நெருப்பு, திருடர்களால் அடிபடுதல் முதலியவை நேரிடும், பந்துக்களால் பிரபலமான தோஷமுண்டாகும். இது பொதுப்பலன்.

(89) சூரியன் தன்னுச்சத்திலிருந்தால் அவர் தசையில் தனக்குரிய தர்மச் செய்கையில் விருப்பமுண்டு, தகப்பனால் சம்பாதிக்கப்பட்ட திரவியம், வீடு முதலிய லாபமுண்டு, மனைவி மக்களுக்குப் பல வித சுகம் உண்டு.

(90) சூரியன் உச்சத்திலிருந்து நழுவியிருந்தால் அவர் தசையில் வெகு அதிகமான அரிஷ்டம் உண்டு. திருடர், நெருப்பு, நோய், இவைகளால் பாதையுண்டு, தன்னைச் சார்ந்த ஜனங்களுடன் மனஸ்தாபம் முதலியன நேரிடும்.

(91) சூரியன் மேஷத்திலிருந்தால் அவர் தசையில் ஜாதகனுக்கு நாற்கால் ஜீவன் ஹானி உண்டு. மனைவி, மக்கள், பயிர், வாகனம் இவைகளுக்குப் பீடையும், கண்கள், முகம் இவைகளுக்கு நோயும் உண்டாகும்.

(92) சூரியன் ரிஷபத்திலிருந்தால் அவர் தசையில் ஜாதகனுக்கு மார்நோய் முதலியன உண்டாகும்.

(93) சூரியன் மிதுனத்திலிருந்தால் அவர் தசையில் ஜாதகன் நல்ல மந்திரங்கள், உயர்ந்த சாஸ்திரங்களறிந்தவனுய் இருப்பான். புராணங்களில் பிரீதியையும், பயிர்த்தொழிலில் தானியவிருத்தி முதலியன உண்டாகும்.

(94) சூரியன் கடகத்திலிருந்தால் அவர் தசையில் பிரசித்தியையும், அரசனை அடைதலையும், எப்போதும் அதிகமாக ஸ்திரீகளால் ஜெயிக்கப்பட்டிருக்குந் தன்மையையும், அதிக கோபத்தையும், தோழர்களிடத்தில் வருத்தத்தையும், குறைவில்லாத உபத்திரவங்களையும் ஜாதகனுக்கு உண்டாகும்.

(95) சூரியன் சிம்மத்திலிருந்தால் அவர் தசையில் கோட்டையி

லிருந்தும், காடுகளிலிருந்தும், பயிர்த்தொழிலிலிருந்தும், அனேகவித மான தனவிருத்தியையும், உயர்ந்த பிரசித்தியையும், அரசரால் கௌரவத்தையும், ஜாதகருக்கு சூரியன் உண்டாக்குவார்.

(96) சூரியன் கன்னியிலிருந்தால் அவர் தசை பெண் குழந்தைகள் ஜெனனமும், பெருந்தன்மையும், தேவர் பிராமணரைப் பூசிக்குந் தன்மையும், பசுமாடு அடைதலையும் சூரியன் உண்டாக்குவார்.

(97) சூரியன் துலாத்திலிருந்தால் அவர் தசையில் மனைவி, பூமி, மக்கள், பொருள் இவைகளுக்குப் பீடையும், திருடர், நெருப்பு இவையால் பயமும், வெளிதேசம் செல்லுதலும், பந்துக்களால் அதிக நீச்சனென்று கருதப்படுந் தன்மையும் உண்டாகும்.

(98) சூரியன் விருச்சிகத்திலிருந்தால் அவர் தசையில் அதிக தேஜஸ்ஸுடன் கூடியிருக்குந் தன்மையையும், விஷம், அக்னி, ஆயுதம் இவைகளால் பீடையையும், தாய் தகப்பன்மாரால் அடையப்பட்ட சித்த (மனது) சுத்தியையும், சூரியன் உண்டாக்குவார்.

(99) சூரியன் நீச்சத்திலிருந்து விடப்பட்டால் அவர் தசையில் சுகமான லாபமும், அயலாரை ஏமாற்றுதலும், மன காரணமாய்த் துக்கமடைதலும், அதிகமாக அல்பர்களுடன் சகவாசமும் சூரியன் உண்டுபண்ணுவார்.

(100) சூரியன் நீச்சாம்சராசியிலிருந்தால் அவர் தசையில் அவர் எக்காரியத்திலும் தடைபட்டிருக்குந் தன்மையும், தோஷத்தை உண்டு பண்ணுந் தன்மையையும் செய்வார்.

(101) சூரியன் 6–ம் பாவத்திலிருந்தால் அவர் தசையில் புண், காயம் முதலியவையால் உண்டான பீடையையும், அதிகமான பித்தத்தாலுண்டான வாதையையும் நேரிடும்.

(102) சூரியன் தனுசிலிருந்தால் அவர் தசையில் அவர் ஜாதகனுக்கு மக்கள், மனைவி, தனம் முதலிய சுகத்தையும், அரசாங்கத்திலிருந்தும், பிராமணரிடமிருந்தும், கௌரவத்தையும், சங்கீதம், சாஸ்திரம், ஆகமம் இவைகளின் உயர்ந்த சௌக்கியத்தையும் தருவார்.

(103) சூரியன் மகரத்திலிருந்தால் அவர் தசையில் அவர் ஜாதகனுக்கு மக்கள், மனைவி தனம் இவைகள் குறைந்திருக்குந் தன்மையையும், அதிக பீடையால் மிகவும் வருந்தும் தன்மையையும், அயலாருக்குக் கட்டுபட்டிருத்தலால் சிந்தையையும் உண்டுபண்ணுவார்.

(104) சூரியன் கும்பத்திலிருந்தால் அவர் தசையில் அவர் ஜாதகனுக்கு மார்நோய் பாதை, புகழ், தனம், மனைவி இவைகள் சிந்தை, அயலாரன்னம் முதலிய சுகமற்றிருத்தல், சத்துரு பாதை, அதிக தீனமாயிருக்குந்தன்மை இவைகளை உண்டாக்குவார்.

(105) சூரியன் மீனத்திலிருந்தால் அவர் தசையில் பெண்டு, தனசுகம், பிரசித்திபெறல், மக்கள் முதலியவருக்கு ஜ்வரம் முதலிய பீடை, வீணலைச்சல் முதலியன நேரும்.

(106) சூரியன் 8-ம் பாவத்தில் உச்சராயிருக்கில் அத்திசை கஷ்டத்தைக் கொடுப்பதாகும்.

(107) சூரியன் 6-ம் பாவத்தி லவ்விதமிருக்கில் புண், காயம் முதலிய பீடையையும், தாய்தகப்பன்மாருக்குக் கண்டத்தையும்தரும்.

சூரியதசை முதலில் பிரவேசத்தில் தாய்தகப்பன்மாருக்கு அதிக பாதையைத் தரும்.

சூரியதசை லக்கினத்திலிருந்து மேற் சொன்னவித மிருந்தால் கஷ்டந்தரும்.

சந்திர தசை பலன்.

(108) சந்திரன் ஆரோகத்திலிருந்தால் அத்திசை ஜாதகருக்கு எல்லாவித அர்த்தசித்தியையும் தருமென்று சொல்லப்பட்டிருக்கிறது.

(109) சந்திரன் அவரோகத்திலிருந்தால் அத்திசை எல்லா காரியங்களிலும் காலதாமதமும், புத்தி மந்தத்தையும் தரும்.

(110) சந்திரன் திசை ஆரம்பத்தில் ஜாதகனுக்கு அதிக பிரதிஷ்டை, உயர்ந்த மந்திரியா யிருக்குந்தன்மை, அரசன் தயவு, பிராமணர், தேவர் இவர்களைத் திருப்தி செய்விக்குந் தன்மை, நல்ல தோழர், வித்தை, பலவித தனவரவு, பலவித சாஸ்திரங்களில் தேர்ச்சி பெற்றிருக்குந் தன்மை, வாசனை, எள், பழம், புஷ்பம், விருக்ஷங்கள் இவைகள் முதலிய தொழில்லால் தன வரவு, புகழ், நல்ல நீதியுடனிருக்குந் தன்மை, அதிக வினயம், பரோபகாரம் செய்யும் புத்தி, பிரசித்தி, இங்கும் அங்கும் திரிதல், பிரியமாயிருக்குந் தன்மை, பெண் சந்தான முண்டாதல், மிருதுவாயிருக்குந் தன்மை, தொழில்களில் ஆதரவுடனிருக்குந்தன்மை, தாமஸம், நித்திரை இவையால் வியாகூலமாயிருக்குந் தன்மை, பொறுமை, பயிர் முதலிய தொழிலில் ஆசையுடனிருக்

குந் தண்மை, ஆசாரத்துடனிருத்தல், கபவாதம் அதிகமாயிருக்குந் தன்மை, சத்துவ குணத்துடனிருத்தல், தன் பந்துக்கள் இஷ்ட ஜனங்களுடன் விரோதம், பாவச்செய்கை, அதிகமாய் பிதற்றுதல், நற்காரியங்களில் மனது நிலையில்லாதிருத்தல் இவை உண்டாகும்.

(111) சந்திரன் மேஷத்திலிருந்தால் அவர் தசையில் அவர் ஜாதகனுக்கு மக்கள் மனைவியுடன் சந்தோஷமாயிருத்தல், வெளி தேசத்தில் தொழிலில் விருப்பம், பராக்கிரமம், தலைநோய், சகோதர பாதை முதலியன தருவார்.

(112) சந்திரன் உச்சனுயிருந்தால் அவர் தசையில் பரம்பரை யாய் கிடைத்த பொருளை அனுபவித்தல், பெண்டீர், அலங்காரம், அணி, மக்கள், பசு, குதிரை, யானை இவைகள் சுகம், சிறிய ஜயம் இவைகள் உண்டாகும்.

(113) சந்திரன் மூலத் திரிகோணத்திலிருந்தால் அவர் தசையில் அவர் ஜாதகனுக்கு வெளிதேசமடைதல், பயிர்த்தொழில், விக்கிரயம் இவைகளால் தனவரவு, கபவாத நோய், தன் பந்துஜனம், இஷ்ட ஜனத்துடன் விரோதம் இவைகளைத் தருவார்.

(114) சந்திரன் ரிஷபத்தின் முன் பாதியில் பாவருடன் கூடி யிருந்தால் அவர் தசையில் தாய்க்கு மரணம், பின் பாதியில் தகப்ப னுக்குச் சுகம், பாவருடன் கூடியாவது பார்க்கப்பட்டாவதிருந்தால் மரணத்துக்குச் சமமான நோய் இவை உண்டாகும்.

(115) சந்திரன் மிதுனத்திலிருந்தால் அவர் தசையில் தேவப் பிராமண பக்தி, தன தான்ய சௌக்கியம், வேறு இடத்திற்கு மாறு தல், சுகத்துடனும், அந்தஸ்துடனு மிருத்தல் இவை உண்டாகும்.

(116) சந்திரன் கடகத்திலிருந்தால் அவர் தசையில் பசு, திரவி யம், பயிர்த்தொழில் இவை விருத்தி, சாஸ்திரங்களில் தேர்ச்சி, சாஸ் திரங்களைக்குறித்து பேசுதல், வெளியிடல், மலை, காடுகளில் விருப்பம், மர்மஸ்தானத்தில் நோய் இவை உண்டாகும்.

(117) சந்திரன் சிம்மத்திலிருந்தால் அவர் தசையில் பொருளும் பிரசித்தியுமடைதல், உயர்ந்த புகழ், அங்க ஈனம் அல்லது குறைந்தி ருக்குந் தன்மை இவை உண்டாகும்.

(118) சந்திரன் கன்னியிலிருந்தால் அவர் தசையில் வெளி

தேசம் செல்லுதல், வியாபாரஞ் செய்தல், சாஸ்திரங்களில் தெளிந்த புத்திப்பெருக்கு, அல்பமான பொருள்கிடைத்தல் இவை உண்டாகும்.

(119) சந்திரன் துலாத்திலிருந்தால் அவர் தசையில் பேராசை, ஸ்திரீ (மனைவி) துக்கம், சிலருடன் மனஸ்தாபம், தனமில்லாமை, சந்தோஷமில்லாமை, நீச்சருடன் சேர்க்கை இவை உண்டாகும்.

(120) சந்திரன் நீச்சராயிருந்தால் அவர் தசையில் நோய்விருத்தி, தன் ஜனங்கள் பிரிவு, அல்ப கௌரவம், மனதில் அதிக சிந்தை இவை யுண்டாகும்.

(121) சந்திரன் நீச்சத்திலிருந்து விடுபட்டால் அவர் தசையில் கிரய விக்கிரயத்தால் பொருள் வரவு, மர்ம ஸ்தானத்தில் நோய், அல்ப தர்மம், தன் தோழர்களுடன் அல்ப நேசம் இவை யுண்டாகும்.

(122) சந்திரன் தனுசிலிருந்தால் அவர் தசையில் யானை, குதிரை கிடைத்தல், முன் சம்பாதித்த பொருளழிவு, நிச்சயமாய் வேறு தன வரவு, சுகம் முதலியன உண்டாகும்.

(123) சந்திரன் மகரத்திலிருந்தால் அவர் தசையில் புத்திர சுகம், தனவரவு, தினந்தோறும் போக்கு வரவு, நடையால் சரீர மெலிவு முதலியன உண்டாகும்.

(124) சந்திரன் கும்பத்திலிருந்தால் அவர் தசையில் பீடை, விசனம், தேகமெலிவு, கடன் வரவு முதலியன உண்டாகும். கும்பத்தில் வர்க்கோத்தமம் பெற்றிருந்தால், பலவான்களுடன் விரோதம், மக்கள், மனைவி, பொருள் இவை பிரிவு, பல், வாய் நோய் இவைகள் நேரிடும்.

(125) சந்திரன் மீனத்திலிருந்தால் அவர் தசையில் ஜலத்தி லுதிக்கும் பொருளால் தனம், மக்கள், மனைவிசுகம், சத்துருநாசம், அறிவு விருத்தி உண்டாகும். வர்க்கோத்தமத்திலிருந்தால் எருமாடு, யானை, குதிரை லாபம், புத்திரர் முதலிய சுகம், சத்துரு நாசம், அறிவு, புகழ் விருத்தி இவை உண்டாகும்.

(126) சந்திரன் ஜனன லக்கினத்திற்கு 12-ம் பாவத்திலிருந்தால் அத்தசையில் ஜாதகன் பாபிகளிடமிருந்து தனம் சம்பாதிப்பான்.

(127) சந்திரன் க்ஷீணமாயிருந்து 6-ம் பாவத்திலிருந்தால் அத்தசையில் ஜாதகன் மேற்சொன்ன பலனையே அனுபவிப்பான்.

(128) சந்திரன் நீசனுய் 8-ம் பாவத்திலிருந்தால் அத்திசையில் ஜாதகனுக்கு வியாதி தோன்றும், சைத்திய நோயால் மரணம், அல்லது ஜாதியைவிட்டு வழுவுதல் நேரிடும்.

கிரகங்கள் தன்னுச்சம் முதலிய வீடுகளிலிருந்து வக்கிர அஸ்த மனத்திலிருந்தாலும், அப்பேர்க்கொத்த கிரகங்களுடன் கூடினும், தன் தசாபுக்தி காலங்களில் மிச்ர (கலப்பு) பலனைத்தரும். புத்திமான் கள் தசைகளை இவ்விதம் யோசித்துச் சொல்லவும்.

(3) குஜன் தசை பலன்.

(129) குஜன் தசையில் ஜாதகனுக்கு சாஸ்திரத்தாலும், தோழி, செவிலித்தாய் ஜனத்தாலும், வைத்தியத்தாலும், நாற்கால் ஜந்துக்களாலும், பலவித தொழில்களால் தன வரவு உண்டு. பித்தம், ரத்த காசம், ஜ்வரம் முதலிய பீடை, அரச பயம், நியாயத்திலிருந்து வழுவுதல், மயக்கம், மூர்ச்சை முதலியன, தேக ஒய்வு இவைகள் தன்னிருப்பிடத்திலேயே நேரும்.

(130) குஜன் மூலத்திரிகோணத்திலிருந்தால் அத்தசையில் மக்கள், மனைவி சுகம், தன வரவு, தைரியத்தால் சண்டையில் புகழ் இவை உண்டாகும்.

(131) குஜன் மேஷத்திலிருந்தால் அத்தசையில் நல்மை, சந்தானம் இவை உண்டாகும். தைரியம், அக்னி பாதை, பலவித சத்துரு பாதை உண்டாகும்.

(132) குஜன் ரிஷபத்திலிருந்தால் அத்தசையில் சந்தோஷத்துடனிருத்தல், தேவ பிராமண பக்தி, அதிக வார்த்தை, பரோபகார சிந்தை இவை உண்டாகும்.

(133) குஜன் மிதுனத்திலிருந்தால் அத்தசையில் வெளிவாசம் செய்யும் சுபாவம், வாயு, பித்த ரோகம், அதிக செலவு, நல்லோர் விரோதம், சாஸ்திரமறிந்திருக்குந் தன்மை, தர்மமறிந்திருக்குந்தன்மை இவை உண்டாகும்.

(134) குஜன் கடகத்திலிருந்தால் அத்தசையில் தோட்டம், நெருப்பு சம்பந்த பொருள் இவைகளால் தனம் வரும். பணி செய்யுந்தன்மை, மக்கள் மனைவிகளுக்குத் தூர இருத்தல், வருந்துதல், பல மற்றிருத்தல் இவை உண்டாகும்.

(135) குஜன் நீசத்திலிருந்து விடுபட்டிருந்தால் அத்தசையில் பிரசித்தி, எல்லா குணங்களும் நிறைந்திருத்தல், நாற்கால் ஜந்துக்கள் நிறைந்திருத்தல், பலமுடைத்தாயிருத்தல், திடீரென்று குஹ்ய ரோகத்தால் வருந்துதல் இவை உண்டாகும்.

(136) குஜன் சிம்மத்திலிருந்தால் அவர் தசையில் அனேகருக்குத் தலைவராயிருத்தல், மக்கள் மனைவி பிரிவு, ஆயுதம், அக்கினி இவையால் பாதை ஆகிய இவைகள் உண்டாகும்.

(137) குஜன் கன்னியிலிருந்தால் அவர் தசையில் நல்ல ஆசாரத்துடனிருத்தல், யாகம் முதலிய தொழிலில் ஆதரவுடனிருத்தல், மக்கள், மனைவி, அதிக தனம், சுகம் முதலியன உண்டாகும்.

(138) குஜன் துலாத்திலிருந்தால் அவர் தசையில் பொருள், மனைவி இவை பிரிவு, நாற்கால் ஜீவனிராமை, பாவத்தால் புகழில்லாதிருத்தல், பலமற்ற தேகம் இவை நேரிடும்.

(139) குஜன் விருச்சிகத்திலிருந்தால் அவர் தசையில் பயிர்த்தொழில் விருத்தி, நற்செய்கைகளில் மனது, அனேகர் விரோதம், அதிகமாய் பேசுந்தன்மை இவைகள் நேரிடும்.

(140) குஜன் தனுசிலிருந்தால் அவர் தசையில் அவர் தேவப் பிராமண பக்தியையும், அரசரிடமிருந்து இஷ்ட பூர்த்தியும், பாவ தோஷத்தால் புகழில்லாதிருத்தலும் நேரிடும்.

(141) குஜன் மகரத்திலிருந்தால் அவர்தசையில் ராஜ்யம் கிடைத்தலையும், தன் குலத்தில் அபிமானத்தையும், யுத்தத்திலும் வாதத்திலும் ஜெயத்தையும், உயர்ந்த ரத்தினங்கள் கிடைத்தலையும், சௌக்கியத்தையும் உண்டாக்குவார்.

(142) குஜன் உச்சாம்சத்திலிருந்தால் அவர் தசையில் கஷ்டப் பிரயத்தினத்தால் தடங்குங் காரியங்கள் சித்தியுர், ஆயுதத்தாலும், உயரத்திலிருந்து விழுவதாலும், ஜலத்தாலும் பயம், சந்தோஷக்குறைவும், அதிக கஷ்டம் இவைகள் நேரிடும்.

(143) குஜன் கும்பத்திலிருந்தால் அவர் தசையில் அவர் ஆசாரக்குறைபையும், புத்திரன் முதலிய சிந்தையையும், அதிக செலவால் மனத்தாங்கலையும், துக்கத்தையும் தருவார்,

(144) குஜன் மீனத்திலிருந்தால் அவர் தசையில் அவர் புத்திரன்

முதலிய சிந்தையும், செலவும், வியாதியும், கடனும், விஷரோகமும், வெளிதேசவாசமும் உண்டுபண்ணுவார்.

(145) குஜன் வர்க்கோத்தமம் பெற்றிருந்தால் அவர் தசையில் அவர் யுத்தத்தில் ஜயமும், தேக பலமும், அதிக நற்குண நற்செய்கைகளும், பலவித பொருள்கள் லாபமும் தருவார்.

(146) குஜன் கேசாம்சத்திலிருந்தால் அவர் தசையில் வீணச்சலும், மனதுக்கு விசாரமும், பலன் தரும் சமையத்தில் காரியங்கள் கெடுதியும், நல்லோர்களிடம் பொல்லாப்பும், மானபழிதலும் உண்டாகும்.

(147) குஜன் மூலத் திரிகோணங்களிலும், உச்ச வீட்டிலுமிருந்தால் அவர் தசையில் அரசு கிடைத்தலும், சத்துருவை ஜெயித்தலும், உயர்ந்த அலங்காரங்களும், வாகனங்களும் உண்டு.

(4) புதன் தசை பலன்.

(148) புதன் தசையில் ஜாதகன் வித்தை, ஞானம், பிரபுத்தன்மை இவைகளுடன் கூடியவனும், பயிர்த்தொழில், யாகம் முதலிய செய்வதில் சமர்த்தனும் இருப்பான். உயர்ந்த செய்கையால் தன வரவுண்டு. சில்ப சாஸ்திரத்தில் அதிக சாமர்த்தியமும், தினந்தோரும் மேல்மேலும் விருத்தியும், நல்ல வாத்தியங்கள், சங்கீதங்கள் இவைகளில் விருப்பமும் உண்டு. புதுவீடு கட்டுதலும், ஹாஸ்யத்துடன் சந்தோஷமாய் காலங்கழித்தலும், வினயமும் உண்டாகும். ஆசாரியர், வித்துவான்கள், பெரியோர், இவர்களிடம் பிரியமுள்ளவனும், மக்கள் மனுஷி சுகமுடையவனுகவும், ஆழ்ந்த கபவாத பித்த நோயுடையவனும் ஜாதகன் இருப்பான். தனம் சிதறுதலும் உண்டு. இதில் புத்திமான், சாதகத்திற்குள்ள பலாபலத்தை நன்கு ஆராய்ந்து யோசித்து பலன் சொல்லவும்.

(149) புதன் மேஷத்திலிருந்தால் அவர் தசையில் ஜாதகன் ஓரிடத்திலும் நிலையில்லாதவனும், திரிதல், பொய்புரைத்தல், சூதாடல். அல்பர் நேசம் இவைகளுடன் கூடியவனும், கொடியனென்கிற பெயருடையவனும், தனமற்றவனும் இருப்பான்.

(150) புதன் ரிஷபத்திலிருந்தால் அவர் தசையில் ஜாதகன் செலவு செய்பவனும், தாய்க்கு அரிஷ்டம் உண்டுபண்ணுகிறவனும்,

மக்கள், மனைவி, தோழர் இவர்கள் சிந்தையுடையவனும், கழுத்து நோயுடையவனும், பயந்தவனும், வருந்துபவனும் இருப்பான்.

(151) புதன் மிதுனத்திலிருந்தால் அத்தசையில் ஜாதகன் அனேக சொற்கள் பேசுபவனும், அதிகம் பேசுபவனும், மக்கள், மனைவி, தாயாதிகள் இவர்கள் சுகமுடையவனும், தாய்சுகம் குறைந்தவனும் இருப்பான்.

(152) புதன் கடகத்திலிருந்தால் அத்தசையில் ஜாதகன் வெளி தேசவாசத்தால் அல்ப சுகமுடையவனும், விரோதமுடையவனும், தோழராலும், உயர்ந்த சாஸ்திரங்கள், காவியங்களாலும் சம்பாதிக்கப்பட்ட பொருளுடையவனும், பயிர்த்தொழிலுடன் கூடியவனும் இருப்பான்.

(153) புதன் சிம்மத்திலிருந்தால் அத்தசையில் தைரியமும், பெருந்தன்மை குறைதலும் உண்டு. ஜாதகனை பெண்டுகள், தோழர், மக்கள், மனைவி, புத்திரர் இவர்கள் சுகம் குறைந்தவனும், புத்தி குறைந்தவனும் இருப்பான்.

(154) புதன் உச்சத்திலிருந்தால் அத்தசையில் ஜாதகன் அதிக வைபவத்துடன் கூடியவனும், எழுதுந் தொழிலிலும், காவிய சாஸ்திரங்களிலும் ஆசையுடையவனும், சத்துருக்களை ஜெயித்தவனும், நல்ல நியாயத்துடன் இருப்பவனும் இருப்பான்.

(155) புதன் மூலத் திரிகோணங்களிலிருந்தால் அத்தசையில் ஜாதகன் பிரசித்தியடைந்த கர்ம குணத்துடன் கூடியவனும், வெளி தேசஞ் செல்லுவதில் ஆசையுடையவனும், பராக்கிரமத்தால் தனஞ் சம்பாதிப்பவனும் இருப்பான்.

(156) புதன் உச்சத்தில் அல்லது திரிகோணத்திலிருந்தால் அத் தசையில் ஜாதகன் பசு சௌக்கியமில்லாதவனய் இருப்பான். தன் பந்துக்கள் விரோதத்தையும், அவயவத்தில் ஓய்வையும், பாவத்தால் கெட்ட பெயரையும் அடைவான்.

(157) புதன் துலாத்திலிருந்தால் அத்தசையில் பார்வை குறைவும், வாக்குச் சாதுரியம் அல்பமாயிருக்குந் தன்மையும், சில்பம் முதலிய தொழிலில் அதிக சாமர்த்தியமும், வர்த்தகத்தால் தன வரவும், பசுமாடு பீடைபும் சேரிடும்.

(158) புதன் விருச்சிகத்திலிருந்தால் அத்தசையில் ஜாதகன் அல்ப சந்தோஷமுடையவனும், ஆசார கர்மத்தில் ஆசையுடையவனும், செலவுடன் கூடியவனும், பந்து ஜனங்களைப் பிரிந்தவனும் இருப்பான்.

(159) புதன் தனுசிலிருந்தால் அத்தசையில் ஜாதகன் அனேகருக்குத் தலைவனும், மந்திரியாகவும், இரண்டு பெயருடன் கூடியவனும், பயிர்த்தொழிலால் தனமுடையவனும் இருப்பான்.

(160) புதன் மகரத்திலிருந்தால் அத்தசையில் ஜாதகன் அதிக கடனுடையவனும், அதிகமாய் அலைபவனும், வஞ்சகனும், நல்லோர்களுடனும் அல்பர்களுடனும் நேசமுடையவனும், பிரசித்தியற்றவனும் இருப்பான்.

(161) புதன் கும்பத்திலிருந்தால் அத்தசையில் ஜாதகன் பராக்கிரமமில்லாதவனும், அதிக தரித்திரனும், தோழர் முதலியவர்களின் அவமானத்தால் வருந்திய மனமுடையவனும், வெளி தேசவாசத்தால் விசனமடைந்தவனும் இருப்பான்.

(162) புதன் மீசாம்சத்திலிருந்தால் அத்தசையில் ஜாதகன் அறிவற்றவனும், பலமில்லாதவனும், தபிக்கும் மனமுடையவனும், வேறு இடத்தில் வசிப்பவனும், பயிர்த்தொழில் செய்யுஞ் சுபாவமுடையவனும், அல்ப லாபமுடையவனும், மூடனும், பாவஞ் செய்பவனும் இருப்பான்.

(5) குரு தசை பலன்.

(163) குரு தசையில் ஜாதகன் அரசருள் முக்கியமானவனிடமிருந்து அடையப்பட்ட இஷ்ட பூர்த்தியுடையவனும், நல்லசெய்கை, தர்மம், ஆகமம், சாஸ்திரங்கள் இவை அறிந்தவனும், எப்போதும் வணக்கமுள்ளவனும், யாகம் முதலிய கர்மங்களில் ஆதரவுடனிருக்குந் தன்மையுடையவனும், தேவ பிராமண பக்தியுடையவனும், அதிக தனவானும், பிரபுவாயும், புத்திரன் முதலிய சந்தோஷமுடையவனும், பூமி, வஸ்திரம், புசிப்பு முதலிய சுகமுடையவனும், பலவானும், குலத்தை விருத்தி செய்பவனும், சென்றது, நிகழ்வது, வருவது, இந்த காலங்களை நன்கு ஆலோசிப்பவனும், சாதுக்கள் சேர்க்கையுடையவனும், நல்ல புத்திவாய்ந்தவனும், தைரியவானும் இருப்பான் எப்போதாவதொருசமயம் கழுத்தில் தீப்படல், நோய்

முதலிய பாதையும் நேரிடும். குரு இருக்கும் பாவ பலத்தை ஆலோசித்து பலன் சொல்லவும். கெட்ட பாவத்திலிருந்தால் இதற்கு விரோதமான கெட்ட பலன் நடக்கும்.

(164) குரு மேஷத்திலிருந்தால் அத்தசையில் ஜாதகன் அரசனிடமிருந்து பொருள் சம்பாதிப்பான். அனேகருக்குத் தலைவனும், மனைவி, மக்கள் முதலிய சுகமும் உடையவனும் இருப்பான்.

(165) குரு ரிஷபத்திலிருந்தால் அத்தசையில் ஜாதகன் அதிக துக்கமுடையவனும், வெளி தேசத்தில் வசிப்பவனும், அதிக சாகஸமுடையவனும், அல்ப தனமுடையவனும், மனை சிந்தை யுடையவனும் இருப்பான்.

(166) குரு மிதுனத்திலிருந்தால் அத்தசையில் ஜாதகன் இந்திரியங்களை ஜெயித்தவனும், உயர்ந்தவனும், தாயுடனும், கோத்திரத்தில் பிறந்தவர்களுடனும் விரோதித்துக்கொள்ளுகிறவனும், மனைவி யுடன் வாதத்தால் வருந்திய மனமுடையவனும் இருப்பான்.

(167) குரு உச்சத்திலிருந்தால் அத்தசையில் ஜாதகன் தன் வம்சத்திய பொருள் லாபமடைந்தவனும், இந்திரியங்களை அடக்கியவனென்கிற பிரசித்தியுடையவனும், உயர்ந்தவர்களுடன் நேசமடைந்தவனும், அதிக வைபவங்களுடையவனும் இருப்பான்.

(168) குரு உச்சத்திலிருந்து நழுவி இருந்தால் அத்தசையில் ஜாதகன் தாய் தகப்பனுக்குத் துக்கத்தைத் தருபவனும், முன் சம்பாதித்த பொருளழிவால் வருந்தியவனும், பலவித விசனங்களால் பீடிக்கப்பட்டவனும் இருப்பான்.

(169) குரு சிம்மத்திலிருந்தால் அத்தசையில் ஜாதகன் தனவானும், உதாரத்தன்மை யுடையவனும், அரசரிடமிருந்து கௌரவமடைந்தவனும், மக்கள், மனைவி, சகோதரர் இவர்களுடன் சந்தோஷமுடையவனும் இருப்பான்.

(170) குரு கன்னியிலிருந்தால் அத்தசையில் ஜாதகன் அரசரிடமிருந்து அடையப்பட்ட கௌரவ முடையவனும், மக்கள், மனைவி, சுகமுடையவனும், எப்போதாவதொருசமயம் சூத்திரர் முதலிய அல்பர்களால் ஏற்படும் சண்டையுடையவனும் இருப்பான்.

(171) குரு துலாத்திலிருந்தால் அத்தசையில் ஜாதகன் அறிவற்றவனும், அளவுடன்புசிப்பவனும், மக்கள், மனைவிகளாலுண்டான

விரோதத்தன்மை யுடையவனுயும், சந்தோஷம் குறைந்தவனுயும் இருப்பான்.

(172) குரு விருச்சிகத்திலிருந்தால் அத்தசையில் ஜாதகன் புத்திமானுகவும், சமர்த்தனுகவும், பண்டிதனுயும், புத்திர சந்தோஷமுடையவனுயும், வணக்கமுடையவனுயும், கடனுளியாகவும், நியமம் குறையாதவனுகவும் இருப்பான்.

(173) குரு தனுசில் மூலத்திரிகோணம்சத்திலிருந்தால் அத்தசையில் ஜாதகன் புத்திமானுயும், அரசனுயும் அல்லது அரசாங்கத்தில் முக்கியவானுயும், பித்தத்துடன் கூடியவனுயும், பெண்டு சொல் கேட்பவனுயும் இருப்பான்.

(174) குரு தனுசில் 20 பாகைக்குமேலிருந்தால் அத்தசையில் ஜாதகன் பயிர்த்தொழில், யாகஞ் செய்தல், நாற்கால் ஜீவன்கள் இந்த விஷயங்களில் மனமுடையவனுக விருப்பான்.

(175) குரு மகரத்தில் நீசாம்சத்திலிருந்தால் அத்தசையில் ஜாதகன் அயலார் காரியங்களைச் செய்பவனுயும், பணியாளனுயும், வயிற்றுவலியும், குஹ்ய ரோகமுடையவனுயும், தனமில்லாதவனுயும், பந்துக்களைப் பிரிந்தவனுயும் இருப்பான்.

(176) குரு நீசத்திலிருந்து விடுபட்டிருந்தால் அத்தசையில் ஜாதகன் பயிர்த்தொழிலாலும், வேடர் தொழிலாலும், தனவரவும் அல்லது மரங்களாலும், ஜனங்களை ஏமாற்றுவதாலும், கஷ்டத்தால் தனமடைதலும் உண்டு.

(177) குரு கும்பத்திலிருந்தால் அத்தசையில் ஜாதகன் சாஸ்திரங்கள் அறிந்திருக்குந் தன்மையையும், வித்தையின் அனுக்கிரகத்தையும், உயர்ந்த அறிவு பெற்றிருத்தலையும் உண்டாக்கும். ஜாதகன் எப்போதும் மனைவி, போகாதிகளில் பற்றுடையவனுயும் இருப்பான்.

(178) குரு மீனத்திலிருந்தால் அத்தசையில் ஜாதகன் அறிவாளியாயும், வெகு மதிப்புடையவனுயும், நல்ல மனைவியுடையவனுயும், செல்வவானுயும், அரசனை அடைந்து சுகம் பெறுபவனுயும் இருப்பான்.

(6) சுக்கிர தசை பலன்.

(179) சுக்கிர தசையில் ஜாதகன் பெண்டுகள், அலங்காரம், ரத்தினங்கள், வஸ்திரம், இவைகள் லாபமுடையவனுயும், பலவித கௌரவமுடையவனுயும், மன்மத சுகமனுபவிப்பவனுயும், சங்கீதத்திலும்,

நாட்டியத்திலும் அதிக விருப்பமுள்ளவனும், வித்தை பயிலுவதில் பிரீதியுடையவனும், நல்ல குணமுடையவனும், அதிக புத்தி வாய்ந்திருக்குந் தன்மையால் அன்னதானஞ் செய்பவனும், கிரைய, விக்கிரயங்களில் சமர்த்தனுகவும், பசு, வாகனம், உத்யானம் இவைகளிடமிருந்து சுகமுடையவனும், முன் சம்பாதித்த பொருளை அடைபவனும், குலத்தில் தோஷமில்லாதவனும், கபவாத ரோகத்தால் பலமில்லாதவனும், அல்பர்களிடம் பற்றுடையவனும், விரோத முடையவனும், தோழர் முதலிய சிந்தையுடையவனும், சத்துரு தாப முடையவனும், எப்போதாவதொருசமயம் கெட்டவர்கள் சகவாச முடையவனும் இருப்பான்.

(180) சுக்கிரன் மேஷத்திலிருந்தால் அத்தசையில் ஜாதகனுக்கு ஸ்திரீ சேர்க்கையும், தன வரவும், சௌக்கியமும் உண்டு. எப்போதும் திரிதலும், துக்கங்களுமுண்டு. சபல மனத்துடனிருப்பான். மனம் வெதும்பி இருப்பான்.

(181) சுக்கிரன் ரிஷபத்திலிருந்தால் அத்தசையில் ஜாதகனுக்கு பயிர்த்தொழிலும், உண்மையுடனிருக்குந் தன்மையும், சுகமாயிருத்தலும் உண்டு. சாஸ்திரங்களில் பக்தியும், உதாரத்தன்மையும், பெண் சந்தானமுமுண்டாகும்.

(182) சுக்கிரன் மிதுனத்திலிருந்தால் அத்தசையில் ஜாதகன் காவிய சாஸ்திரங்கள் அறிந்தவனும், அஹஸ்யம், ஆச்சரியப்படத்தக்க வஸ்துக்கள் இவைகளில் விருப்பமுடையவனும், வெளிதேசம் செல்வதில் ஆசையுடையவனும் இருப்பான்.

(183) சுக்கிரன் கடகத்திலிருந்தால் அத்தசையில் ஜாதகன் தன் தொழிலில் சமர்த்தனும், வேறு மனுஷியை யடைவதில் விருப்பமுடையவனும், பலவிதமான தொழில் செய்வதில் சமர்த்தனும் இருப்பான்.

(184) சுக்கிரன் சிம்மத்திலிருந்தால் அத்தசையில் ஜாதகன் பெண்டுகளிடமிருந்து அடையப்பட்ட தனமுடையவனும், அயலார் தனத்தால் ஜீவிப்பவனும், அல்பமான பசு முதலிய சுகமுடையவனும் இருப்பான்.

(185) சுக்கிரன் கன்னியிலிருந்தால் அத்தசையில் ஜாதகன் சுகத்தாழ்வுடையவனும், அல்ப தனமுடையவனும், இஷ்டங்கள் பூர்த்தி

யாகாதவனும், சஞ்சல மனமுடையவனும், நிலையில்லாத இருப்பிட முடையவனும் இருப்பான்.

(186) சுக்கிரன் துலாத்திலிருந்தால் அத்தசையில் ஜாதகன் பயிர்த்தொழில் செய்வான், விசேஷித்த கௌரவம், போஜனம், வாகனம் முதலியன அடைவான். தன்னினத்தாருடன் சுகமாயிருப்பான்.

(187) சுக்கிரன் விருச்சிகத்திலிருந்தால் அத்தசையில் ஜாதகனுக்கு வெளிவாசஞ் செய்தலையும், அயலார் காரியத்தைச் செய்தலையும், பராக்கிரமத்துடனிருத்தலையும், குறைந்து அல்பமான தனமுடைத்தாயிருக்குந்தன்மையையும், கலகத்தில் ஊக்கமடைந்திருக்குந்தன்மையையும் உண்டாக்கும்.

(188) சுக்கிரன் தனுசிலிருந்தால் அத்தசை ஜாதகனுக்கு அரசாங்கத்தில் பிரதிஷ்டையையும், (பிரசித்தியடைந்திருத்தலையும்) சாஸ்திரங்களறிந்திருக்கும் தன்மையையும், அதுவிஷயமான கிரந்தங்கள் செய்யும் சாமர்த்தியத்தையும், அதிக துக்க மனுபவித்தலையும், சத்துருக்கள் விருத்தியையும் உண்டாக்கும்.

(189) சுக்கிரன் மகரத்திலிருந்தால் அத்தசையில் ஜாதகனுக்கு சத்துரு நாசத்தையும், எப்போதாவதொருசமயம் சிலேஷ்ம ரோகத்தையும், குடும்ப சிந்தையுடனிருத்தலையும், எல்லாம் பொறுத்திருக்கும் தன்மையையும் உண்டாக்கும்.

(190) சுக்கிரன் கும்பத்திலிருந்தால் அத்தசை ஜாதகனுக்கு விசனத்தால் வருந்துதலையும், நோயுடனிருத்தலையும், நற்காரியங்கள் செய்யாதிருத்தலையும், பொய் பேசுதலில் ஊக்கமுடனிருத்தலையும் உண்டாக்கும்.

(191) சுக்கிரன் மீனத்திலிருந்தால் அத்தசை ஜாதகனுக்கு அரசனுக்கு முக்கியமானவனாயிருத்தலையும், அதிக தனமும் தெளிந்த மனமுமுடையவனாயிருத்தலையும், பயிர்த்தொழில், சுகபோகங்கள் இவைகளுடன் கூடியிருத்தலையும் உண்டாக்கும்.

(192) சுக்கிரன் லக்கினத்திலும், 10-ம் பாவத்திலும், உச்சத்திலுமிருக்கும் சுக்கிரனுடைய தசையில் ஜாதகன் பொன், பொருள், பூமி விருத்தியுடனும், உயர்ந்த யானை முதலியன உடையவனும், தன் வம்சத்திற்குப் பிரதானமானவனுகவுமாய் இருப்பான்.

சுக்கிர தசை பலன் முற்றிற்று.

(7) சனி தசை சாமானிய பலன்.

(193) சனி தசையில் ஜாதகனுக்கு பட்டணம் அல்லது கிராமங்களுக்கு அதிகாரியாக இருத்தலையும், புத்திமானையும், தானஞ் செய்யுங் குணமுடையவனை யிருத்தலையும், பலவித சாஸ்திரங்களில் சமர்த்தனை யிருத்தலையும், யானை, குதிரை, பொன், பொருள், வஸ்திரம் முதலியன நிறைந்திருத்தலையும், வணக்க முடையவனையிருத்தலையும், தேவர் பிராமணர்களைத் திருப்தி செய்விக்குந் தன்மையையும், பழமையான தொழிலைச் செய்து சுகமடையுந் தன்மையையும், தேவாலயங்களுக்கும், பிராமணருக்கும் இருப்பிடம் கட்டிக்கொடுக்கும் தன்மையையும், புகழுடனிருக்குந் தன்மையையும், தன் குலத்திற்குத் தீபம்போல் விளங்குந் தன்மையையும், மந்தமா யிருத்தலையும், நித்திரை, கபவாத பித்தத்துடனிருத்தலையும் உண்டாக்கும். ஜுரம், ஸ்திரீ சோகம், அம்மை முதலியன உண்டாகும்.

(194) சனி மேஷத்திலிருந்தால் அத்தசையில் ஜாதகனுக்கு விசேஷமாக துக்கத்தால் வருத்தத்தையும், உயரத்திலிருந்து விழுவதால் துக்கத்தையும், உஷ்ண சோகம் முதலியவைகளால் மெலிந்திருத்தலையும் செய்யும்.

(195) சனி ரிஷபத்திலிருந்தால் அத்தசை ஜாதகனுக்கு புத்திமானையிருத்தலையும், அரசாங்கத்தில் வெகுமதியுடன் விளங்குதலையும், யுத்தத்தில் ஜயத்துடன் புகழடைந்திருத்தலையும் செய்யும்.

(196) சனி மிதுனத்திலிருந்தால் அத்தசை ஜாதகனுக்கு அழகிய தேகமும், கம்பீரமான குணம் பெற்றிருத்தலையும், திருடரைச் சார்ந்தவர்களிடமிருந்தும், மனைவியைச் சார்ந்தவர்களிடமிருந்தும், தன வரவையும், சண்டையில் பரோபகாரஞ் செய்யுந் தன்மையையும் செய்யும்.

(197) சனி கடகத்திலிருந்தால் அத்தசை ஜாதகனுக்கு புத்திராலும், மனைவியாலும், தோழராலும், மனம் நிலையில்லாதிருத்தலையும், கண்களிலும் காதுகளிலும் உபத்திரவத்தையும், பலமில்லாத தேகத்துடனிருத்தலையும் செய்யும்.

(198) சனி சிம்மத்திலிருந்தால் அத்தசை ஜாதகனுக்கு பலவித பாதைகளடைதலையும், மக்கள், மனைவி கலகத்தையும், குதிரை, பசு, பணியாளர் இவர்கள் கிட்டாதிருத்தலையும் செய்யும்.

(199) சனி கன்னியிலிருந்தால் அத்தசை ஜாதகனுக்கு கிரமமாக தனலாபத்தையும், ஜலத்தாலும், மரத்தாலும், உயர்ந்த பிரதேசத்தாலும் பெரிய கெண்டத்தையும் செய்யும்.

(200) சனி துலாத்திலிருந்தால் அத்தசை ஜாதகனுக்கு உயர்ந்த ராஜலக்ஷ்மியை அடைதலையும், யானை, குதிரை, பொன், வஸ்திரம் இவை நிறைந்திருத்தலையும், அதிக தையையுடனிருக்குந் தன்மையையும் செய்யும்.

(201) சனி விருச்சிகத்திலிருந்தால் அத்தசை ஜாதகனுக்கு சாகஸமான செய்கை செய்தலையும், வீணை அலைச்சலையும், லோபியாயிருக்குந்தன்மையையும், பொய் பேசுதலையும், அல்பர்களிடம் ஆசையுடையவனையிருத்தலையும், தையயற்றிருக்குந்தன்மையையும் செய்யும்.

(202) சனி தனுசிலிருந்தால் அத்தசையில் ஜாதகனுக்கு அரசருக்கு மந்திரியாயிருத்தலையும், யுத்தத்தில் தீரனையிருக்குந் தன்மையையும், சதுரங்க சேனையுடன் கூடியிருத்தலையும், மக்கள், மனைவியுடன் சந்தோஷமாயிருத்தலையும் செய்யும்.

(203) சனி மகரத்திலிருந்தால் அத்தசையில் ஜாதகனுக்கு வெகு சுகங்களையும், அதிக பிரசித்தியையும், உயர்ந்த பதவியையும், பயிர்த் தொழில், புத்திரர், தனம் முதலியவைகளால் லாபத்தையும் உண்டாக்கும்.

(204) சனி கும்பத்திலிருந்தால் அத்தசைக்குப் பலன் இந்தக் கிரந்தத்தில் சொல்லவில்லை.

(205) சனி மீனத்திலிருந்தால் அத்தசையில் ஜாதகனுக்குப் பல விதமான பட்டணங்களிலிருந்தும், கிராமங்களிலிருந்தும், தன வரவு உண்டு. ஸ்திரீகளால் சுகமுடையவனையிருப்பான், சந்தோஷம் குறைந்திருக்கும்.

சனி தசை பலன் முற்றிற்று.

---

(8) இராகு தசை பலன்.

(206) இராகு மேஷம், ரிஷபம், கடகம் இந்த ராசிகளில் இருந்தால் அத்தசையில் ஜாதகனுக்கு தனலாபமுண்டு, காவியங்கள் ஜாதகன் செய்வான், இராஜ சபையில் ஜாதகன் பிரசங்கஞ் செய்வான்,

வெகுமானம் பெருவான். தாரம், புத்திரர், வேலையாட்கள் இவர்களைப் பெற்று சுகத்தை அனுபவிப்பான்.

(207) இராகு கன்னி, தனுசு, மீனம் இந்த ராசிகளில் இருந்தால் அந்தத் தசையில் ஜாதகன் புத்திரரைப் பெருவான், தேசாதிபதியாவான், அல்லது கிராமாதிபதியாவான், ஆனால் இவைகளை எல்லாம் அந்தத் தசையின் கடைசியில் இழந்துவிடுவான்.

(208) இராகு 1-வது பாவத்திலிருந்தால் அத்தசையில் ஜாதகனுக்குப் புத்திரநாசமுண்டு, விவேகச்சக்தி குறைவுண்டு, விஷம், அக்கினி, அஸ்திர சஸ்திரம், பந்துக்கள் இவைகளால் துன்பம்நேரிடும், கலகம் ஏற்பட்டு இராஜாங்க மூலமாக வியாஜ்ஜியம் ஏற்பட்டு அதில் அபஜெயமடைதலுண்டு, கடன் படுதல், ஸ்திரீ சேர்க்கையால் அவமானப் படுதல், தண்டனை அடைதல், அபராதம் கட்டுதல், இதர தேசம் போய் விடுதல், ஆகிய இவைகள் ஜாதகனுக்குச் சம்பவிக்கும்.

(209) இராகு 2-வது பாவத்திலிருந்தால் அத்தசையில் ஜாதகனுக்கு தனமும், ஜீவனோபாயங்களும் நாசமடையும், மனோவிகாரம் ஏற்படும், ஜாதகன் கெட்ட காரியங்களைச் செய்து கெட்ட பெயரெடுப்பான், தாரமிழந்து விடுவான், குடும்பத்தைக் கெடுத்து விடுவான்.

(210) இராகு 3-வது பாவத்திலிருந்தால் அத்தசையில் ஜாகதனுடைய தாரத்திற்கும், புத்திரர்களுக்கும், சகோதரர்களுக்கும் நல்ல பலன் நடக்கும். பூமியின் கிருஷியின் மூலமாக நல்லபலன் உண்டு.

(211) இராகு 4-வது பாவத்திலிருந்தால் அத்தசையில் ஜாதகனுடைய மாதருக்கும, மாதுருவர்க்கத்தாருக்கும், மாதுருக்குச் சமான மானவர்களுக்கும் மரணம் நேரிடும், பூமி, சுகம், இராஜ்பம் இவைகளுக்குப் பங்கம்நேரிடும், இராஜ தண்டனை நேரிடும், வாகனத்திலிருந்து விழுதல், உயரத்திலிருந்து விழுதல், மேல்மாடிப் படிகளிலிருந்து விழுதல் நேரிடும்.

(212) இராகு 5-வது பாவத்திலிருந்தால் அத்தசையில் புத்திரவிகல்பமுண்டாகும். பாபச்செய்கை செய்தல், அகால போஜனம், விவாதம், வழக்கு, கலகம், இராஜதண்டனை, புத்திர நாஸ்தி, பிதாபாட்டன் மார்களுக்குக் கர்மம் இவைகள் உண்டாகும்.

(213) இராகு 6-வது பாவத்திலிருந்தால் அத்தசையில் ஜாதகனுக்கு இராஜவிரோதம், சோரபயம், ரிணம், கடன், இவைகளால் உபத்தி

ரவம் நேரிடும். பயித்தியம், பேய், பிசாசு, சூன்யம் இவைகளாலும் ஜாதகனுக்குக் கஷ்டம் நேரிடும். ஜெயிலில் அடைபடுதல், அபராதம் கொடுத்தல், தேசாந்திரம் போதல் இவைகளும் நேரிடும்.

(214) இராகு 7-வது பாவத்திலிருந்தால் அத்தசையில் ஜாதகனுக்குத் தாரநாசம், புத்திரநாசம், பரதேசப்பிரயாணம், கிருஷி நாஸ்த்தி, கால்நடைவாகனங்கள் நஷ்டம், தனதான்யநாசம் இவைகள் உண்டாகும். தாரத்தை இழந்து அமங்கிலியை விவாகஞ்செய்து கொள்வான்.

(215) இராகு 8-வது பாவத்திலிருந்தால் அத்தசையில் ஜாதகனுக்கு மரணமாவது அல்லது மரணத்திற்குச் சமானமான கெண்டமாவது நேரிடும், புத்திரர், புத்திரி, தனம் இவைகளுக்கும் நாசமுண்டாகும், இராஜ தண்டனையாலும், விஷத்தினாலும், ஸ்திரீகளின் மருந்தினாலும், திருடராலும், அக்கினியாலும் கஷ்டம் நேரிடும், பங்காளிகளாலும் ஸ்திரிகளாலும் வியாஜ்ஜியம் சம்பவித்து அதனல் தேல்வி அடைந்து சஞ்சலப் படுதல். ஸ்தான நாசமுண்டாகும், வனவாசம் நேரிடும்.

(216) இராகு 9வது பாவத்திலிருந்தால் அத்தசையில் மாதா பிதா நாசமடைவார்கள். ஜாதகன் இதற தேசங்களுக்குச் சென்று தன்னைத் தேடுபவர்களுக்கு அகப்படாமல் சந்நியாசி வேடம் பூண்டு மறைந்து திரிவான். ஜாதகனுடைய குருவும், பந்துவும் நாசமாவார்கள். சமுத்திரங்களில் ஸ்நானஞ்செய்வது, சிவார்ச்சனை செய்வது, தேவதரிசனஞ் செய்வது நேரிடும்.

(217) இராகு 10-வது பாவத்தில் சுபர் வீட்டில் இருந்து சுபரால் பார்க்கப்பட்டு அல்லது சம்மந்தப்பட்டிருந்தால் அத்தசையில் ஜாதகன் புண்ணிய புராணம், கதாகாலட்சேபங்கள் இவைகளைக் கேட்பான் அல்லது சொல்லுவான், தர்மத்தையே செய்வான், தேவஸ்தான நந்தவன கைங்கரியங்களைச் செய்வான். தேவதை வசியங்களைச் செய்வான், புண்ணியத் தீர்த்தங்களுக்குச் செல்லுகிறவர்களுக்கு உதவியுச் செய்து சத்திரசாலைகளும் மடங்களையும் ஏற்படுத்துவான். இராஜாங்கத்தில் ராணுவகிட்சை அதிகாரியாகப் பட்டம் பெருவான். ஆனல் இராகு 10-வது பாவத்தில் அசுபர் வீட்டிலிருந்து அசுபரால் பார்க்கப்பட்டு அல்லது சம்மந்தப் பட்டிருந்தால் இங்கு சொல்லிய பலனுக்கு நேர் விரோதமான பலன்கள் நடக்கும். மேலும் ஜாதகன் பாஸ்திரீ கமனனாகவும், கெட்டகாரியங்கள் செய்பவனாகவும், எல்லோராலும் தூஷிக்கப் படுபவனாயிருப்பான். புத்திரர், தாரம் இவர்களுக்கு

அரிஷ்டமுண்டாகும். ஜாதகனுக்கு அக்கினியாலும், சோராலும் பாதையுண்டு, இராஜ தண்டனையுண்டு, சைன்னிய தளகர்த்தனுகவும் உத்தியோகத்தில் அமருவான்.

(218) இராகு 11-வது பாவத்தில் இருந்தால் அத்தசையில் ஜாதகன் இராஜாக்களால் வெகுமானம், சன்மானம் இவைகளை அடைவான். எல்லாவிதத்திலும் தன லாபமுண்டு. கிராமம் வாங்குவான். இதர கிராமங்களில் பூமிகளைப் பாகம்பாகமாகக் கிரையத்திற்கு வாங்குவான். நூதனமான வீடுகட்டுவான். கிரைய விக்கிரையங்களில் அதிக தனலாபமுண்டு. தனதான்ய விருத்தியுண்டு, வாகனம், அசுவம், பசு, சகடங்கள், பல்லக்குகள் இவைகளுண்டு. ஜெகத்குருவாகவும் இருப்பான்.

(219) இராகு 12-வது பாவத்தில் இருந்தால் அத்தசையில் ஜாதகன் தன் தேசத்தை விட்டு இதர தேசங்களுக்குச் சென்று காடு, மலை, வனந்திரம் முதலியவைகளில் திரிந்து கஷ்டப்படுவான். தனம், தாரம், புத்திரர், தானியம் இவைகள் நாசமடையும். இந்த இராகு சுபர் வீட்டிலிருந்து சுபரால் பார்க்கப்பட்டாலும் அல்லது சம்மந்தப்பட்டாலும் ஜாதகன் தன் வயோதிகத்திற்குத் தகுந்த மந்திரங்களை உபதேசித்தும் ஔஷதங்களை உண்டும் நரை திரை நீங்கி தபசுசெய்து கொண்டு தியான நிஷ்டையில் இருப்பான்.

(220) இராகு உச்சமாக இருந்தால் அத்தசையில் ஜாதகனுக்குச் சௌக்கியமும், இராஜ்ய பட்டாபிஷேகமும் உண்டு. ஸ்திரீ, புத்திரர், புத்திரி, தனம், வாகனம் இவைகளை உடையவனுக இருப்பான்.

(221) இராகு நீச்சமாயிருந்தால் அத்தசையில் ஜாதகனுக்குச் சத்துரு பாதை, இராஜ விரோதம், சோரர், அக்கினி, அம்மை, வைசூரி, அதிசார பேதி, பேய், பிசாசு, பயித்தியம் இவைகள் உண்டாகும். மறைவான தேசத்திற்கு ஓடிப் போகுதல், வனந்திரத்தில் திரிகுதல், திருடுதல் இவைகள் நேரிடும்.

(222) இராகு பாப சேஷத்திரத்திலிருந்தால் அத்தசையில் ஜாதகனுக்கு சரீரம் இளைத்து விடும். சகல பொருள்களும் நாசமாகும். இராஜ தண்டனை, கைவிலங்கு தரித்தல், அதிசார வியாதி, நீரிழிவு ரோகம், ரிணபாதை இவைகளால் ஜாதகன் வருந்துவான்.

(223) இராகு பாபருடைய பார்வை பெற்றிருந்தால் அத்தசையில் ஜாதகனுக்குத் தான் செய்யுங்காரியங்களுக்கு விக்கினமும், உத்தி

யோக பங்கமும், அக்கினி, இராஜன், சோரர் இவர்களால் உபத்திரவமும் நேரிடும். பாபச் செய்கையினால் ஜீவனஞ் செய்வான். வெளி தேசங்களுக்குப் போக்கு வரவு இயந்திரக் கருவியினால் முதலில் தன லாப முண்டாகி பிறகு அதனால் அதிக தன விரையம் நேரிட்டு துக்க மடைவான்.

(224) இராகு சுபருடைய பார்வை பெற்றிருந்தால் அத்தசையில் ஜாதகன் இராஜ சன்மானம், தனலாபம் அடைவான். புண்ணிய மான சத்கிரியைகளைச் செய்வான். பந்துக்களுக்கு மரண சம்பவமும் நேரிடும்.

(225) இராகு உச்சக் கிரகத்துடன் சம்மந்தப்பட்டால் அத்தசையில் ஜாதகனுக்கு இராஜ்ய லாபமுண்டு, ஸ்திரீ புத்திர லாபமுண்டு, தனவான் என்று பெயர் பெருவான். வஸ்திரம், பூஷணம், புஷ்பம், கந்தாதி பரிமளங்கள் இவைகள் உடையவனாகி ஜாதகன் தீர்க்க வயதுடன் வாழ்வான்.

(226) இராகு நீச்சக்கிரகத்துடன் சம்மந்தப்பட்டிருந்தால் ஜாதகனுக்கு அத்தசையில் நீச்சத் தொழிலினால் ஜீவனம் உண்டு. ஆகாரம், சௌக்கியம், சந்தோஷம் இவைகள் குறைவுபடும். தாரம், புத்திரர் இவர்களுக்குக் கெடுதியுண்டு.

(227) இராகு தன் தசையில் முதல் பாகத்தில் துக்கத்தையும் நடுப் பாகத்தில் சுகத்தையும் கீர்த்தியையும், மூன்றாவதாகிய கடைசி பாகத்தில் ஸ்தான நாசத்தையும், பிதுர், மாதுர், குரு இவர்களுக்கு மரணத்தையும் உண்டுபண்ணுவார். இப்பலன்களை இராகு நல்ல பலன்களையும் கெட்ட பலன்களையும் கலந்து கொடுக்கும் சந்தற்பம் அடைந்திருக்கும்போது மாத்திரம் இவ்விதமாகக் கொடுக்கும் என்று யூகித்தறியவும்.

இராகு தசை பலன் முற்றிற்று.

---

(9) கேது தசை பலன்.

(228) கேது 1-வது பாவத்திலிருந்தால் அத்தசையில் ஜாதகனுக்கு ஜ்வரம், அதிசார பேதி, அம்மை போட்டு நேத்திர விக்கினமாவது, விஷபாதை இவைகள் நேரிடும்.

(229) கேது 2-வது பாவத்திலிருந்து பாபர் சம்மந்தம் அல்லது பார்வை யடைந்தால் அத்தசையில் ஜாதகனுக்குத் தன நாசம், மனை துக்கம், அகால போஜனம், சிரோவியாதி, வித்தியாஹீனம், ஆடை, ஆபரணம், பாத்திரம், வீடு முதலியவைகளைக் கடன்காரன் கைப்பற்றிக் கொள்ளுதல் இவைகள் நேரும். ஆனல் கேது சுபர் சம்மந்தம் அல்லது பார்வை அடைந்தால் இந்தப் பலன்கள் நடக்காமல் நல்ல பலன்கள் நடக்கும்.

(230) கேது 3-வது பாவத்திலிருந்தால் அத்தசையில் ஜாதகனுக்கு மனசுக்குக் கிலேசமும், சகோதரர்களுடன கலகப்படுவது, சகோதரிகளுக்கு மாணமாவது அல்லது வாழ்க்கையில் தாழ்வாவது உண்டாதல் முதலியவை நடக்கும்.

(231) கேது 4-வது பாவத்திலிருந்தால் அத்தசையில் ஜாதகனுக்குச் சுகமில்லாமையும், களத்திர புத்திராதிகளுக்குப் பீடையும், கிஞ்சித்து சந்தோஷமும், கிருகம், க்ஷேத்திரம், கிருஷவாகனம் இவைகளால் லாபமும் உண்டாகும்.

(232) கேது 5-வது பாவத்திலிருந்து பாபர் சம்மந்தம் அல்லது பார்வை பெற்றால் அத்தசையில் ஜாதகனுடைய புத்திரர்களுக்கு மரணமும், புத்தி விகல்பம் ஏற்படுதலும், இராஜ கோபத்தினல் தனவிரையம் இவைகள் நேரிடும். ஆனல் கேது சுபர் சம்மந்தம் அல்லது பார்வை பெற்றால் அத்தசையில் நலல பலன்கள் நடக்கும்.

(233) கேது 6-வது பாவத்திலிருந்தால் அத்தசையில் ஜாதகனுக்கு அதிக ஆபத்துக்கள் விளையும். சத்துரு, விஷம் யாத்திரையில் சோர பயம், செய்தொழில் திடீரென்று விக்கினப்பட்டு நின்றுவிடுதல், கால் நடை நாசம், கிருஷியும், வியாபாரங்களும் கூடிவராமலிருத்தல் ஆகிய இப்பலன்கள் நடக்கும். இபபலன்கள் கேது இருக்கும் வீடு பாபர் வீடாகில் நடக்கும், சுபர் வீடாகில் இப்பலன்கள் கொங்சம் சாந்தமாக நடக்கும்.

(234) கேது 7-வது பாவத்திலிருந்தால் அத்தசையில் ஜாதகனுடைய தர்ரத்திற்கு அதிக பயங்கள் உண்டாகும். தாரம், புத்திரர், தனம், வாகனம் இவைகள் நாசமாகும். காமஹீனத்தினல் ஸ்திரீகளிடத்தில் வெறுப்புண்டாவது, ஸ்திரீகளால் நோயை அடைவது, தாரத்திற்குப் பிசாசு, சூன்யம், க்ஷயரோகம் இவைகள் உண்டாகி அதனல்

தாரம் மரணமாகி மருதாரம் அடைவது, அல்லது மரணமாகாமல் இருந்தால் தாரம் சோரபுருஷனுடன் ஓடிப்போய்விடுதல் முதலியவை நேரிடும். தாரம் திருடியாகவும், பாபியாகவும், கபடியாகவும், புத்திஹீனியாகவும் இருப்பாள். இப்பலன்கள் எல்லாம் கேது பாபருடைய சம்மந்தப்பட்டு அல்லது பார்வை பெற்று இருந்தால் தான் நடக்கும். சுபருடைய சம்மந்தம் பார்வை பெற்றிருந்தால் இந்த கெட்ட பலன்கள் நிவர்த்தியாகி நல்ல பலன்கள் உண்டாகும்.

(235) கேது 8-வது பாவத்திலிருந்தால் அத்தசையில் ஜாதகனுக்கு அதிகபயம், விரோதம், எடுத்தக் காரியங்களுக்குத் தடை, ஆபத்து ஸ்தானபேதம், தகப்பன் அல்லது பாட்டன் பாட்டி இவர்களுக்கு மரணம், ஜாதகனுக்குச் சுவாச காசம், பிசாசு பிடித்தல் முதலியவை நேரிடுதல், அதிக தன விரையம், சஷ்யரோக மடைந்து திடீரென்று மரணம், முதலியவை உண்டாகும்.

(236) கேது 9-வது பாவத்திலிருந்தால் அத்தசையில் ஜாதகனுடைய தாய், தந்தை, பாட்டன், பாட்டி இவர்களுக்கு ஆபத்தும் மரணமும், பிதுர் வழிகளுக்குச் சேதமும், தன் குருவுக்கும், தன் அம்மான் வர்க்கத்தாருக்கும் கெடுதலுண்டாதலும், புண்ணிய ஹீனமும் ஆகிய இப்பலன்கள் நடக்கும்.

(237) கேது 10-வது பாவத்திலிருந்தால் அத்தசையில் ஜாதகனுக்குத் துக்கமும், கௌரவம், செய் தொழில், உள்ள பொருள் இவைகளுக்குக் குறைவும், மான ஹானியும், அபகீர்த்தியும் உண்டாகும். இப்பலன்கள் கேது அசுபர் சம்மந்தம் பார்வை யடைந்திருக்கும்போது தான் நடக்கும், சுப சம்பந்தம் பார்வை அடைந்திருக்கும் போது நல்ல பலன்கள் நடக்கும், அதாவது புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நானஞ் செய்தல், வித்தியாக்கியான முண்டாகுதல், புண்ணியவான் என்று பெயரெடுத்தல், அதிக தனவானாகவும் இராஜ்யாதி காரியாகவும் ஜாதகன் இருப்பான், கங்கா ஸ்நானம் சித்திக்கும், இதர தேச சத்தின வஸ்துக்களால் லாபம் உண்டாகும்.

(238) கேது 11-வது பாவத்திலிருந்தால் அத்தசையில் ஜாதகனுக்கு அதிக லாபமும், அதிக சௌக்கியமும், சந்தோஷமும், சகோதர சகோதரிகளிக்கு விருத்தியுர், யாகக் கிரியாதிகள் நடத்தல், நடத்தி வைத்தல், இவைகளாலும், இராஜாக்களாலும் நல்ல வெகுமானம்

பெறுதலும், யானை, ஒட்டை, பல்லக்கு முதலிய வாகனங்களும், ரத்தின வியாபாரத்தினாலும், அசல் தேசாந்திர ஜலத்தின் மீது கப்பல் வியாபாரத்தினாலும் தனலாபமும், விசித்திரமான ஆடையாபரணம், இவைகள் அடைந்து களத்திரத்துடனும், தீர்க்காயுசுடனும். கீர்த்தியுடனும் வாழ்வான்.

(239) கேது 12-வது பாவத்திலிருந்தால் அத்தசையில் ஜாதகனுக்கு அதிகக் கஷ்டமும், ஸ்தான பேதமும், தேச சஞ்சாரமும், இராஜ பீடிதமும், நேத்திர ஹீனமும், மானஹானியும், துர்விசையமும் உண்டாகும். கேதுவுடன் பாபர்களும், மாரகாதிபதியாகிய கிரகங்களும் சம்மந்தப் பட்டாலும் அல்லது கேதுவைப் பார்த்தாலும் ஜாதகன் புண்ணிய லோகப் பதவியை அடைவான். கேது பாபர் சம்மந்தம் பார்வை பெற்றால் ஜாதகன் நரகத்தில் வீழ்வான்.

(240) கேது தசை நடக்கிற காலத்தில் பொதுவாய் ஜாதகனுக்குத் தாரபுத்திர நாசமும், இராஜ பீதியும், அதிகக் கஷ்டமும், வீர்ய நாசமும், வித்தியா ஹீனமும், தனதான்ய சம்பத்துக்கள் நஷ்டமும், சோரர், அக்கினி இவைகளால் பாதையும், வாகனத்தின் மேலிருந்து விழுதல், விஷ ஜந்துக்களாலும், ஆயுதங்களினாலும் அபாயம் உண்டாதல், இதர தேசம் சென்று ஜீவிப்பது, வியாதி பீடிப்பதால், துக்கத்தை அடைதல் முதலிய பலன்கள் நடக்கும். இராஜாங்க விரோதமும், தன் பொருளைத் திருடர் அபகரிப்பதும், தனம் சம்பாதித்திருந்த தொழில் மாறி உத்தியோக மில்லாதிருத்தலும், திடீரென்று வீடு நெருப்பினால் எரியப் படுவதும், ஜாதகனுக்கும் புத்திராளுக்கும் நெருப்பினால் கெண்டம் நேருவதும் முதலிய கஷ்டங்கள் நேரிடும்.

(241) கேது கேந்திரஸ்தானத்திலிருந்தால் ஜாதகன் நிஷ்பலனகாரியங்களையே செய்வான், இராஜ்ய நாசம், தாரநாசம், புத்திர நாசம், விஷப் பதார்த்தங்கள் ஸ்திரீகளால் இடப்படுதல், விஷம் தீண்டுதல், மேகம், குஷ்டம், அதிசாரம், பித்த பாண்டு, சூன்யத்தினால் பாதை இவைகள் நேரிடும்.

(242) கேது சுபக்கிரகத்துடன் கூடி அல்லது பார்வை பெற்று இருந்தால் அத்தசையில் ஜாதகனுக்கு அதிக சௌக்கியம், இராஜ்யாதிகாரம், தனம், தான்யம், வாகனங்கள், இராஜ வெகுமானம், அதிக வித்தியா பாண்டித்துவம், சபா பிரசங்கஞ் செய்தல் முதலியவை உண்டாகும்.

(243) கேது பாபக்கிரகங்களுடன் கூடி அல்லது பார்வை பெற்றிருந்தால் அத்தசையில் ஜாதகனுக்குப் பிதா துக்கமும், ஜ்வரமும, அதிசாரமும், மேகரோகமும், ரணமும், ருணமும், சத்துரு பீடிதமும், முதலிய கஷ்டங்கள் நேரிடும்.

(244) கேது தன்தசையில் முதல் பாகத்தில் துக்கத்தையும், நடு பாகத்தில் அதிகமான லாபத்தையும், மூன்றுவதாகிய கடைசி பாகத்தில் இராஜாக்களால் அவமானத்தையும் பயங்கரத்தையும் உண்டு பண்ணுவார். இப்பலன்களைக் கேது கெட்டப் பலன்களைக் கொடுக்கும் சந்தற்பம் அடைந்திருக்கும் போது மாத்திரம் இவ்விதமாகக் கொடுக்கும் என்று யூகித்தறியவும்.

கேது தசை பலன் முற்றிற்று.

குறிப்பு:—தெசா புக்திகளில் நடக்கும் பலன்களை இன்னம் விபரமாக அறியவேண்டுமானால் தெசாபுக்தி பலன்களுக்கு மாத்திரம் தனியாய் "கோ, ஸ்ரீனிவாச அய்யங்காரால் எழுதப்பட்டு C. G, ராஜன்" அவர்களால் பார்வையிடப்படடு இந்தக் கம்பெனி பாரால் அச்சிடப்பட்ட "தெசாபுத்தி சிந்தாமணி" என்ற புத்தகத்தையும் தெசாரிஷ்ட நிவாரணி" என்ற புத்தகத்தையும் வாசிக்கவும்.

இரண்டாம் பாகம் முற்றிற்று.

C. G. ராஜன் B. A. அவர்களால்,
செய்யப்பட்ட புத்தகங்கள்

ஜாதக கணிதம் (தமிழில்)
என்னும்
ஜோதிட கிரக சட்பலம் ஆயுள் கணிதம்
(இரண்டாம் பதிப்பு)

இதில் சப்தவர்க்கம், கிரக சட்பலம், கிரகங்களின் வலியின் சாரதம்மியம், பாவச்சக்கிர :, துவாதச பாவபலம், உச்சபலம், திக்குப்பலம், பட்சபலம், கிரக யுத்த பலம், ஹோராபலம், அயனபலம் கிரக திருஷ்டி பலம் முதலிய 24-வித பலங்கள், ஆயுள் இவைகளை வெகு சுலபமாகக் கணிக்க அனேக வாக்கியங்களும் (Tables) குளிகாதி ஐவர், தூமாதி ஐவர் ஸ்புட கணனமும், பிராணஸ்புடம், தேகஸ்புடம், மிருத்யு ஸ்புடமும் உதாரணங்களுடன் கொடுக்கப் பட்டிருக்கின்றன. கிரகங்களின் வலிவை அனுசரித்து பலாபலன்கள் அறிவதற்கும், ஆயுள்நிர்ணயத்தில் அரணம் செய்வதற்கும், "பிருஹத்ஜாதகம்" "ஸ்ரீபதி ஜாதக கர்மபத்ததி" "கேசவ ஜாதக கர்மபத்ததி," பல தீபிகை" இவைகளைச் சுலபமாயும், நன்றாயும் அறிவதற்கும் இப்புத்தகம் மிகவும் உபயோகமாகும். இதை யாவரும் பிறருடைய உதவியின்றி தாமே படித்துத் தெரிந்து கொள்ளலாம். இது கெவர்ன்மெண்ட்டு டெக்ஸ்ட்டு புக் கமிட்டியாரால் லைப்ரரி உபயோகத்திற்காக அங்கீகாரஞ் செய்யப்பட்டது. இது ஆனந்த போதினி சுத்த திருக்கணித பஞ்சாங்க கணிதராகிய **C. G. ராஜன், B. A.,** அவர்களால் தமிழில் வசன நடையில் எழுதப்பட்டது. அழகிய கிளாஸ் காகிதத்தில் அச்சிடப்பட்டது.

இதன் விலை ரூ 2—4—0 தபால் செலவு அணா 6.

ஜாதக தோஷநிவாரணி

இதில் தசாபுக்தி அந்தர காலங்களில் சம்பவிக்கும் வியதி, கஷ்டம் முதலிய கெட்ட பலன்களை நிவர்த்திக்கச் செய்ய வேண்டிய நவக்கிரக சாந்திகளின் விபரத்தை விஸ்தாரமாகச் சொல்லி இருக்கிறது. இது ஜோதிடர்களுக்கும், மற்றவர்களுக்கும் மிகவும் அவசியமானது இது சேக்கிழங்கனம் கோமடம். ஜோதிடர் ஸ்ரீனிவாச அய்யங்காரால், எழுதப்பட்டது.

தபால் செலவு பிரத்தியேகமானது. இன்விலை அணா 0—6—0

இப்புத்தகம் மாத்திரம் தனியாக தேவை உள்ளவர்கள் 0-7-6 ஸ்டாம்பு அனுப்பவும்.

கிடைக்குமிடம்:—சி. விஸ்வநாதம் & கோ,
பிரிண்டர்ஸ் பப்ளிஷர்ஸ் & புக் செல்லர்ஸ்,
நெம்பர். 7, கொங்கடேச மேஸ்திரித் தெருவு, சௌகார்பேட்டை போஸ்டு,
மதராஸ்.

ஜாதக சிரோன்மணி

என்னும் வராஹமிஹிரருடைய

பிருஹத்ஜாதகம்.

இது தமிழில் சுலபமான வசனநடையில் எழுதப்பட்டது. இதில் விசேஷ வியாக்கியானங்களும் கஷ்டமான விடங்களில் உதாரணங்களும், வாக்கியங்களும் கொடுக்கப் பட்டிருக்கின்றன. ஆயுர்தாய அத்தியாயமாகிய ஏழாவது அத்தியாயம் மிகவும் தெளிவாக உதாரணங்களுடன் சொல்லப் பட்டிருக்கின்றது. ஆயுளைச் சுலபமாகக் கிரகங்களின் வலிவை அனுசரித்து நிர்ணயிக்கும் விதி பிரத்தியேகமாகக் கொடுக்கப் பட்டிருக்கிறது. இராஜ யோகம், கிரக யோகம், நாபச யோகம், சங்கிய யோகம், முதலிய யோக அத்தியாயங்கள் தெளிவாகச் சொல்லப்பட் டிருக்கின்றன. இதில் இதர கிரந்தங்களிலிருந்து விஷயங்கள் எடுத்து தேவையானவிடத்தில் சேர்க்கப் பட்டிருக்கின்றன. இது கவர்மெண்ட்டு டெக்ஸ்ட்டு புக் கமிட்டியாரால் (Text Book Committee) லைப்ரரி (Library) உபயோகத்திற்காக அங்கீகாரஞ் செய்யப்பட்டது. இது ஆனந்த போதினி சுத்த திருக்கணித பஞ்சாங்க கணிதரும், ஜாதக கணிதம் என்ற புத்தகத்தின் ஆசிரியரும், நவக்கிரக ஸ்புட கணனமாகிய இராஜ ஜோதிட கணிதம் என்ற புத்தகத்தின் ஆசிரியருமாகிய, **C. G. ராஜன் B. A.,** (*Mathematics*, அவர்களால் எழுதப்பட்டது. கிளோஸ் காகிதத்தில் அச்சிடப்பட்டது. 318 பக்கம் உடையது. தபால் செலவு பிரத்தியேகமானது. **இதன் விலை ரூ. 2—0—0.**

தசாபுக்தி சிந்தாமணி

இப்புத்தகத்தில் பல அருமையான ஜோதிட கிரந்தங்களிலிருந்து சாராம்சத்தை எடுத்து ஒன்றுகச் சேர்த்து ஒழுங்காக அமைத்து எழுதியிருக்கின்றன. ஜாதக பலாபலன்களைச் சொல்ல வேண்டுமானால் அப்பலன்கள் நடைபெறும் காலம் முக்கியமானது. இக்காலத்தை தசா புக்தி, அந்திரம் என்ற கிரக பலன்கள் நடக்கும் காலத்தைக் குறிக்கின்ற ஜோதிடப் புத்தகங்களால் அறிய வேண்டுமே ஒழிய வேறே வழி ஒன்றும் கிடையாது. இப்படிப்பட்ட புஸ்தகங்களில் இப்புத்தகம் மிக அருமையான து. இப்புஸ்தகப் பலாபலனைச் சொல்லத் துணிகின்ற ஒவ்வொரு ஜோதிடரிடத்திலும் இருக்கவேண்டியது அவசியம். மற்ற புத்தகங்களைப்போல் ராமல்; இப்புத்தகத்தில் தசா புக்தி பலன்களைக் கிரகங்கள் இராசியிலும், பாதச்சக்கிரத்திலும் இருக்கும் நிலையையும், அவைகளுடன் சமந்தப்பட்ட கிரகங்களையும், அவைகளைப் பார்க்கும் கிரகங்களையும் அநுசரித்து விபரமாகவும், விஸ்தாரமாகவும் சொல்லி இருக்கின்றது. இது மிகவும் ஜோதிட அனுபோகமும், பயிற்சியுமுள்ள சேந்தமங்கலம், தோமடம், ஜோதிடர் ஸ்ரீனிவாச அய்யங்காரால் சில ஜோதிடர்களின் வேண்டுகோளுக் கிணங்க எழுதப்பட்டு. **C. G. ராஜன் B. A.** (*Mathematics*) அவர்களால் பார்வை யிடப்பட்டது. கிளோஸ் காகிதத்தில் அச்சிடப்பட்டது. 319 பக்கம் உடையது. தபால் செலவு பிரத்தியேகமானது. **இதன் விலை ரூ 1—8—0**

கிடைக்குமிடம்:—சி. விஸ்வநாதம் & கோ,

பிரிண்டர்ஸ் பப்ளிஷர்ஸ் & புக் செல்லர்ஸ்,

நெம்பர். 7, வெங்கடேச மேஸ்திரித் தெருவு, சௌகார்பேட்டை, பேஸ்டு,

மதராஸ்.